
தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

அருளுரைக் கையேடு

2026



என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன.
எனக்கும் அவற்றைத் தெரியும்.
அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. யோவான் 10: 27

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

அருளுரைக் கையேடு

2026

கருப்பொருள்

விளிம்புநிலையினருக்குத் தொண்டாற்றுதல்

(Serving the Least)

மத். 25: 40

வெளியீடு

தொடர்புத்துறை

கன்னியாகுமரிப் பேராயம்

ஆசியுரை

கன்னியாகுமரிப் பேராயத்தின் தொடர்புத்துறை 2026-ஆம் ஆண்டுக்கான அருளுரைக் கையேட்டை அருள்பணிக் குடும்பத்தினரின் பயன்பாட்டுக்கென்று தொகுத்து வழங்குவதை எண்ணி பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இறைவார்த்தையை அறிவித்தபோது அச்சுறுத்தப்பட்ட எதிர்ப்புச் சூழலில், "நான் பிழைப்புக்காக கடவுளின் வார்த்தையைக் கூறுபவன் அல்லன்; உண்மையை உரக்க கூறும்படி இஸ்ரயேல் வீட்டாரிடம் கடவுளால் அனுப்பப்பட்டேன்" என்றுரைத்த ஆமோஸ் இறையுரையாளரைப் போல, சார்புத் தன்மையில்லாமல் சுத்தமான மனச்சான்றுடன் இறைவார்த்தைகளை அறிவிக்கும் அருளுரையாளர்களுக்கு இந்நூல் அதிகப் பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலைத் தயாரித்து, தொகுத்து வழங்கும் தொடர்புத் துறையின் இயக்குநர் அருள்திரு. முனைவர் O. டென்சிங் அவர்களுக்கும், மிகச் சிறப்பாக வடிவமைத்திருக்கும் அருள்திரு. R. சாம் பிரின்ஸ் அவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்.

கடவுளின் வார்த்தையை அறிவிப்போர் அனைவருக்கும் தேவையான இறைநடத்துதலையும், இறைக்காட்சியையும் திருமறையைப் போதிப்பர்கான மொழியாற்றல் உள்ளிட்ட அனைத்து அருள்கொடைகளையும் இறைவன் தந்தருள்வாராக!

இறையாசி உங்களுடன் எப்போதும் நின்று நிலைப்பதாக!

இறைப்பணியில்,
பேரருள்திரு. அறிவர் **S. கிறிஸ்டோபர் விஜயன்,**
பேராயர்,
C.S.I. கன்னியாகுமரிப் பேராயம்.

தொடர்புத்துறை இயக்குநரிடமிருந்து . . .

வார்த்தையாயிருந்த கடவுள் தம் திருமகன் இயேசுவில் அருளும் உண்மையுமாய் இவ்வுலகில் வெளிப்பட்டார். காலங்கள்தோறும் கடவுளின் வார்த்தை நாம் வாழும் சூழலுக்கு ஏற்றாற்போல் நமக்குக் கிடைக்கிறது, நம்மை ஆற்றல்படுத்துகிறது.

மாறிவரும் இன்றைய உலகச் சூழலில் திருமறை நம் வாழ்வின் ஆன்மிக சமூக வழிகாட்டியாக நம்மோடு பயணிக்கிறது. அருளுரையாற்றும்போது அது சத்தமிட்டு வரையறையற்று ஓடும் காட்டாற்று வெள்ளம்போல் வராமல், வரையறுக்கப்பட்ட பயனுள்ள தெளிந்த நீரோடைபோல் வருவதற்கு இவ்அருளுரைகள் உங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையோடு 2026-ஆம் ஆண்டு அருளுரைக் கையேடு வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறோம். கடவுளுக்கே மாட்சிமை உரித்தாகுக.

இந்நூலின் ஆரம்பகட்ட பணிகளை இறைவேண்டலோடு தொடங்கி நல் ஆலோசனைகள் தந்த கன்னியாகுமரிப் பேராயத்தின் முன்னாள் பேராயர் அன்பிற்கும் மதிப்புக்குமுரிய **Rt. Rev. Dr. A.R. செல்லையா** அவர்களுக்கும், தொடர்ந்து, நல் ஆதரவு தந்த முன்னாள் Moderator's Commissary Rt. Rev. Dr. ராய்ஸ் மனோஜ் விக்டர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

பேராயத்தின் ஏழாவது பேராயராகத் தன் அருள்பணிகளைத் தொடங்கியிருக்கும் அன்பிற்கும் மதிப்புக்குமுரிய பேராயர் **Rt. Rev. Dr. S. கிறிஸ்டோபர் விஜயன்** அவர்களின் வழிகாட்டுதலுக்காகவும், அவர்கள் தரும் ஆதரவுக்காகவும் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இந்நூலைத் தொகுத்து, மிகக் குறுகிய நாட்களில் இப்பணியைச் சீராய் நிறைவேற்றிய அன்பிற்கினிய ஆயர் **Rev. இரா. சாம் பிரின்ஸ்** அவர்களுக்கு இதயங்கனிந்த நன்றிகளைக் கூறுகிறேன். அவர்களோடு உழைத்த, ஒவ்வொரு அருளுரைகளையும் தகுந்த ஆயத்தத்தோடும் ஜெபத்தோடும் எழுதித் தந்த சேகர ஆயர்கள், ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்களைப் பாராட்டுகிறேன். தொடர்புத்துறைப் பணிகளில் என்னோடு உழைக்கும் உதவி இயக்குநர் Mr. R. **ஆரோன் ராபின்** அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூல் வெளிவர உதவிய பேராய அச்சக மேலாளர் அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்** மற்றும் உழைத்த அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இறையருள் நம் அனைவரோடும் இருப்பதாக!

அருள்திரு. முனைவர் **O. டென்சிங்**

இயக்குநர், தொடர்புத்துறை

தொகுப்பாசிரியரிடமிருந்து...

அருளுரை என்பது மானிடர் பேசும் சொற்களல்ல; அது இயேசு கிறிஸ்துவின் குரலுக்குச் சான்றாக நிற்கும் சிறப்புக் கலையாகும். ஜான் ஸ்டாட் என்ற இறையியலாளர், Between Two Worlds: The Challenge of Preaching Today என்ற நூலில் "திருச்சபைக்கு அருளுரையாற்றுவதை விட முக்கியமானது எதுவும் இல்லை" (Nothing is more important for the Church than preaching) என்கிறார். இந்த அருளுரைகள் அனைத்தும் இவ்வுண்மையை உறுதியாக நிறைவேற்ற அழைக்கின்றன. மேலும், அருளுரைகள் இறைமக்களைச் சேவைக்கும், சான்று மற்றும் சீடத்துவ வாழ்வுக்கும் அழைக்கிறது என்பதையும் நினைவூட்டி, நற்செய்தி கேட்பதற்காக மட்டுமல்ல, அதை வாழ்வாக்குவதற்கான அழைப்பாகவும் இறைவார்த்தைகள் அமைகின்றன என்பதையும் விளக்குகின்றன. பல குரல்கள் கேட்கும் இக்காலத்தில், கடவுளைக் குறித்த தத்துவம், மக்களின் கதைகளைக் கேட்காமல் உருவாக முடியாது. மேய்ப்பரின் பணி, திருமறையை மட்டும் பேசுவது அல்ல; மக்களின் வேதனைகளையும், போராட்டங்களையும், நம்பிக்கையையும் கேட்டு, அவற்றின் நடுவில் இறையவரின் குரலை உணரச் செய்வதாகும்.

இந்திய விடுதலை இறையியலாளர் டாக்டர் எம். எம். தாமஸ், "திருச்சபை உலகத்திலிருந்து விலகி நிற்பதற்காக அல்ல; உலகின் மத்தியில் கடவுளுடைய மீட்புப் பணியைச் சாட்சியமாக வெளிப்படுத்துவதற்காகவே அழைக்கப்பட்டுள்ளது". அதனால், மேய்ப்பரின் அருளுரைகள் கடவுளுடைய குரலை மனித வாழ்வோடு இணைக்கும் பணியாகிறது.

இந்த ஆண்டு அருளுரைக் கையேடு இறைவேண்டலோடும், திருச்சபையின் மேய்ப்புப் பணிக்கான எதிர்நோக்குடனும் இறைப்பணியாளர்கள் கரங்களில் ஒப்படைக்கப்படுகிறது. இயேசு, யோவான் 10: 27-இல் கூறுவதுபோல, மேய்ப்பர் பேசுகிறார்; ஆடுகள் கேட்கின்றன; அவை பின்பற்றுகின்றன எனும் பற்றுறுதியோடு, தலைமை மேய்ப்பரான இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்கு மந்தையை வழிநடத்தும் உந்துதலை இந்நூல் தரட்டும். அருளுரைகள் அனைத்தும் திருமறையின் வெளிச்சத்தில் கிறிஸ்தவப் பற்றுறுதியைப் பாதுகாக்கும் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக, இறைமக்கள் கிறிஸ்துவின் குரலைத் தெளிவாகக் கேட்டு, அவரை நம்பிக்கையுடன் பின்பற்றுவார்களாக. மேலும் சோர்வுற்ற உள்ளங்களைப் ஆற்றல்படுத்தி, பற்றுறுதியில் உறுதிப்படுத்தி, அவர்களை "அமைதியான நீர்நிலைகளுக்கு நேராய்" வழிநடத்தட்டும்.

2026 - ஆவது ஆண்டிற்கான அருளுரைக் கையேட்டைத் தொகுக்கும் பெரும்பணியை என்னிடம் ஒப்படைத்த நம் முதன்மைப் பேராயரின் முன்னைப் பதிலாள் (Moderator's Commissary) பேரருள்திரு. முனைவர் ராய்ஸ் மனோஜ் குமார் விக்டர் அவர்களுக்கும், இந்த அருளுரைக் கையேடு சிறந்த அருளுரைகளைச் சுமந்து வெளிவர உற்சாகமூட்டிய நமது பேராயத்தின் ஏழாம் பேராயராகப் பணிப்பொறுப்பேற்றிருக்கின்ற பாசமிகு பேராயர் பேரருள்திரு. அறிவர் S. கிறிஸ்டோபர் விஜயன் அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். மேலும், இப்பணியில் நல்ஆலோசனைகளை வழங்கிய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. முனைவர் O. டென்சிங் அவர்களுக்கும், உதவி இயக்குநர் திருவாளர் R. ஆரோன் ராபின் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். அருளுரைக் கையேட்டின் ஆயத்தப் பணியிலும், தலைப்புகளை மொழிபெயர்த்து, உடனின்று உழைத்த அருள்திரு. B. சாம் ஜெபசிங் அவர்களுக்கும், அருளுரைகளை ஒழுங்குப்படுத்தி பதிப்புப்பணியில் முழுமையான பங்களிப்புத் தந்த திருவாளர் M.R. மில்ட்டன் மார்க் அவர்களுக்கும், பிழைதிருத்தப் பணியில் உழைத்த பேராசிரியர் முனைவர் ஏஞ்சல் ஹென்சிலின், அருள்திரு. R. ஹென்சிலின் நேசராஜ் மற்றும் திருவாளர்கள் முறையே, நிஸ்பர்ட் G.M. ஷாலோம், S.V. உதய் நிர்மல் சிங், S.V. தீபக், நியோல் P.G. சாம் ஆகியோருக்கும், இக்கையேட்டை நேர்த்தியாக அச்சிடும் பணியில் முனைப்புடன் செயல்பட்ட பேராய அச்சகங்களின் கண்காணிப்பாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களுக்கும், உடன் உழைத்த நாகர்கோவில் C.S.I. பேராய அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அருளுரைகளைச் சிறப்பான முறையில் எழுதிக் கொடுத்த பேராயர், ஆயர்கள், இறைப்பணியாளர்கள் மற்றும் இப்பணியில் என்னை ஊக்கப்படுத்தி உடனின்று உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உளம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அனைத்து மாண்பும், மாட்சியும் நல்லாயரான மூவொரு கடவுளுக்கே
உரித்தாகுக!

இறைப்பணியில்

அருள்திரு. இரா. சாம் பிரின்ஸ்
தொகுப்பாசிரியர், அருளுரைக் கையேடு - 2026

பொருளடக்கம்

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
1	01.01.2026	கிறிஸ்துவின் நுகத்தின்கீழ் விடுதலை	13
2		கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்	17
3		நாள்: 1 நமது அழைப்பு	18
4		நாள்: 2 அன்புடன் ஒருவரையொருவர் தாங்குதல்	23
5		நாள்: 3 சமாதானக் கட்டு	26
6		நாள்: 4 ஒரே நல்லெதிர்நோக்குக்கு அழைக்கப்பெற்றுள்ளீர்கள்	28
7		நாள்: 5 ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு	30
8		நாள்: 6 ஆண்டவரும் தந்தையுமானவர் ஒருவரே	32
9		நாள்: 7 திருமுழுக்கில் அருளப்படும் கடவுளின் கொடை	35
10		நாள்: 8 கிறிஸ்துவுக்குள் வளருதல்	38
11	04.01.2026	இறையன்பை எல்லோருக்கும் வெளிப்படுத்துதல்	41
12	06.01.2026	திருவெளிப்பாட்டிற்கு மறுமொழி அளித்தல்	45
	11.01.2026	இயேசுவின் திருமுழுக்கு: அடையாளத்தையும் அருள்பணியையும் உறுதி செய்தல்	47
13	18.01.2026	சங்கிலியை உடையுங்கள்: தீய நாட்டங்களுக்கு அடிமையாவதிலிருந்து விடுதலையைக் கண்டடைதல்	51
14	25.01.2026	பற்றுறுதியிலும் செயற்பாட்டிலும் ஒன்றிப்பு	55
15	26.01.2026	ஒற்றுமையும் & ஒருங்கிணைவும்	60
16	01.02.2026	ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு வழிநடத்துகின்றது	64
17	01.02.2026	இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறைநம்பிக்கையைப் பகிர்தல்	67
18	08.02.2026	வீழ்ச்சி: கடவுளின் நோக்கத்தினின்று விலகிச் செல்லுதல்	71

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
19	08.02.2026	மனதுருக்கம்: இணைந்து அன்புசெய்தலும் துன்புறுதலும்	77
20	15.02.2026	கிறிஸ்து அனைவரையும் மீட்கிறார்: இறையன்பு அனைவரையும் அரவணைக்கிறது	80
21	18.02.2026	தவக்காலம்: புதுப்பிப்பதற்கு ஓர் அழைப்பு	84
22	22.01.2026	பரிவோடிருக்க அழைப்பு	89
23	01.03.2026	ஒருவருக்கொருவர் சுமைகளைத் தாங்க அழைப்பு	92
24	08.03.2026	அனைவரையும் உள்ளடக்க அழைப்பு	95
25	08.03.2026	புத்தியுள்ள மகளிர்	99
26	15.03.2026	விடுதலையாளராய்த் திகழ அழைப்பு	103
27	22.03.2026	சிலுவை: அருளின் திருவெளிப்பாடு	105
28	29.03.2026	அமைதியின் அரசர் உள்ளே நுழையட்டும்	110
29	30.03.2026	கனியற்ற வாழ்வை எச்சரிக்கும் கிறிஸ்து	114
30	31.03.2026	அதிகாரமும், இயேசுவும்	117
31	01.04.2026	நறுமணம் வீசும் நற்செயல்	119
32	02.04.2026	நன்றித் திருவிருந்து: வாழ்வருளும் அன்பு	122
33	03.04.2026	சிலுவை: வாழ்வின் கொண்டாட்டம்	129
34	04.04.2026	நம்பிக்கையின்மையில் நல்லெதிர்நோக்கு	132
35	05.04.2026	உயிர்ப்பு: சாவின் மீது வெற்றி	136
36	12.04.2026	என்ஆண்டவரே, என் கடவுளே	139
37	19.04.2026	உணவருந்த வாருங்கள்: உயிர்த்த ஆண்டவரால் அழைக்கப்பெறுதல்	142
38	26.04.2026	உயிர்த்த ஆண்டவர்: உடன் பயணிப்பவர்	147
39	01.05.2026	தச்சரான யோசேப்பு	151
40	03.05.2026	உணர்வார்ந்த அன்பில் கிறிஸ்துவுடன் நடங்கள்	154
41	10.05.2026	உயிர்த்த கிறிஸ்து: என்றென்றும் உடனிருப்பதற்கான உறுதிப்பாடு	158

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
42	10.05.2026	இயன்ற வழிகளிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தல்	162
43	17.05.2026	தூய ஆவியார் : உள்ளுறையும் உடனிருத்தலின் உறுதிமொழி	166
44	24.05.2026	பெந்தக்கோஸ்து: இரைச்சல் மிகுந்த உலகில் கடவுளின் குரலைக் கேட்டல்	170
45	31.05.2026	மும்மை : அன்பின் இறைக்கூட்டுறவு	174
46	07.06.2026	இயேசு: முழுநிறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்	177
47	14.06.2026	படைப்பு பேசுகின்றது: இயற்கையில் கடவுளின் குரலுக்குக் கேட்டல்	181
48	21.06.2026	வழிபாடு: கடவுளின் திருமுன், கடவுளின் நோக்கத்துக்காக	184
49	28.06.2026	சீடத்துவம்: வந்து பாருங்கள், சென்று அறிவியுங்கள்	186
50	05.07.2026	இறைவழிபாடாகப் பணிவிடை: நம் பணிவிடைகளில் கடவுளுக்கு மதிப்பளித்தல்	189
51	12.07.2026	இறையியல் கல்வி: திருச்சபையை ஒரு கற்கும் சமூகமாக உருவாக்குவது	193
52	19.07.2026	அருள்பொழிவுத் திருப்பணி: மேன்மை பெறுவதற்கன்று பணிவிடைபுரிய அழைப்பு	198
53	26.07.2026	திருமணம்: ஒற்றுமை மற்றும் கூட்டுப்பங்காண்மையின் கொண்டாட்டம்	203
54	02.08.2026	அருள்பணி: மனதுருக்கம் செயல்வடிவில்	207
55	09.08.2026	கிறிஸ்துவில் அடையாளம் : திருமுழுக்கால் அடையாளமிடப்பெறுதல்	211
56	15.08.2026	மக்களாட்சி: நீதியில் வேரூன்றி, பற்றுறுதியால் வழிநடத்தப்பெறுதல்	214
57	16.08.2026	தூய நன்றித் திருவிருந்து : ஒப்புரவின் திருப்பந்தி	217
58	23.08.2026	கட்டிலிருந்து விடுதலைக்கு: கடவுள் ஒடுக்கப்படுவோருடன் நடக்கின்றார்	221

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
59	30.08.2026	அந்நியர் இனி இல்லை: புலம்பெயர்ந்தோரையும் அகதிகளையும் (ஏதிலாரையும்) வரவேற்றல்	226
60	06.09.2026	கல்வி: சிந்தைகளை வடிவமைத்தல், வாழ்வை மாற்றுதல்	228
61	13.09.2026	கடவுளை நம்பும் பெண்கள்: நம்பிக்கைக்குரியோரும் அஞ்சாமை உடையோரும்	234
62	20.09.2026	பன்மைத்துவம்: பற்றுறுதியும் நட்புறவும்	239
63	27.09.2026	குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை: சிறந்தது இனிமேல்தான் வர உள்ளது	243
64	27.09.2026	பணிவிடையில் ஒன்றாக்கப்பெற்றோம்	246
65	04.10.2026	உறுப்பினர் ஒவ்வொருவரும் திருப்பணிவிடையாளரே	249
66	11.10.2026	வலுவின்மையில் வல்லமை: நம் வாழ்வில் கடவுளின் அருள்	255
67	18.10.2026	உணர்வுகளுக்கு மேலாகப் பற்றுறுதி : வாழ்வு பொருளற்றதாகும்போது கடவுளை நம்பி நிற்றல்	259
68	25.10.2026	சீர்திருத்தம்: புதுப்பித்தலுக்கான ஓர் அழைப்பு	262
69	01.11.2026	ஒளியாகத் திகழ்க: மாறுபட்டிருக்கத் துணிக	268
70	08.11.2026	கிறிஸ்துவில் ஒன்றுபட்டு, உலகுக்குச் சான்றாதல்	273
71	15.11.2026	அவளுடைய குரல், அவளுடைய வருங்காலம்	277
72	22.11.2026	அமைதியான உடன்வாழ்வு: சகிப்புத்தன்மையற்ற உலகில் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்தல்	281
74	29.11.2026	எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு நல்லெதிர்நோக்குடன் இடர்பாடுகளைக் கடந்து நிற்றல்	284
75	06.12.2026	இறைவார்த்தையால் வழி நடத்தப்பெறுதல்: சரியான வழியைப் பகுத்தறிதல்	290

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
76	13.12.2026	எதிர்பாராதோரைத் தழுவிக்கொள்தல்	294
77	20.12.2026	நீதியின் ஆண்டவருக்காகக் காத்திருத்தல்	299
78	24.12.2026	நல்லெதிர்நோக்கின் கனவுகள் கடவுள் கனவுகளின் வாயிலாக வழிகாட்டுதல்களை வழங்குகிறார்	303
79	25.12.2026	கிறிஸ்துப் பிறப்பு : அனைத்து மக்களுக்குமான ஒளி	306
80	27.12.2026	குடும்பம்: உறவுகளின் கொண்டாட்டம்	313
81	31.12.2026	கடவுள் நம்பிக்கைக்குரியவர் என்பதை நினைத்துப் பார்த்தல்	318
		புதிய மாத நன்றியறிதல் இறைவழிபாட்டு அருளுரைகள்	
82	01.02.2026	பெராக்கா: ஆசிகளின் பள்ளத்தாக்கு	322
83	01.03.2026	நலமருளும் ஆண்டவர்	326
84	01.04.2026	துணையாளராய் இருக்கும் ஆண்டவர்	329
85	01.05.2026	ஆண்டவரே நம்மைத் தப்புவிக்கும் பாறை	333
86	01.06.2026	வெற்றிதரும் ஆண்டவர்	335
87	01.07.2026	மன்றாட்டைக் கேட்கும் ஆண்டவர்	338
88	01.08.2026	மீட்பருளும் ஆண்டவர்	341
89	01.09.2026	ஆண்டவரே நம் ஆயர்	344
90	01.010.2026	நீதியை நிலைநாட்டும் ஆண்டவர்	348
91	01.11.2026	ஆண்டவரே நம் ஒளி	351
92	01.12.2026	வாக்குரைக்கப்பட்ட மெசியா	353
93		**தவக்காலப் புதன் அருளுரைகள்**	355-374
94		**தவக்கால வெள்ளி அருளுரைகள்**	375-391
95		**இயேசு கிறிஸ்துவின் சிலுவைத் திருமொழிகள்**	392-411
96		**விழாக்கால அருளுரைகள்**	412-441
97		**சிறப்பு நாள்களுக்கான அருளுரைகள்**	442-461

LITURGICAL COLOURS
2026

December 24 Evening to January 5	White (Christmas Season)
January 6 to February 17	Green (Epiphany Season)
February 18 to April 4	Purple (Lenten Season)
April 5 to May 23	White (Easter Season)
May 24	Red (Pentecost Sunday)
May 25 to May 30	Green (Pentecost Season)
May 31	White (Trinity Sunday)
June 1 to November 28	Green (Pentecost Season)
November 29 to December 24 Morning	Purple (Advent Season)

கிறிஸ்துவின் நுகத்தின்கீழ் விடுதலை

Freedom Under the Yoke of Christ

1 அர. 19: 15 - 21 *கலா. 5: 1-6*

திபா. 116: 1-14 *மத். 11: 25-30*

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத். 11: 28)

அன்பிற்கினியவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் நிறைவான புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புத்தாண்டு (2026) அனைவருக்கும் அனைத்து நலன்களும் நிறைவாகக் கிடைக்கின்ற ஆண்டாக அமைந்திட இறைவேண்டல் செய்கிறேன். புத்தாண்டில் புனிதப் பயணத்தை தொடங்கும் நிலையில் நாம் கடவுளோடு இணைந்து பயணிக்கவும் இறையாட்சியின் தகவுகளை வாழ்வாக்கிக் கொள்ளவும் நம்மை கடவுள் அழைக்கின்றார்.

ஆண்டவர் இயேசு தமது திருப்பணியினை ஆரம்பித்த நாள்களில் பாலஸ்தீனப் பகுதி உரோமைக் காலனி ஆதிக்க ஆளுகையில் இருந்த நிலையில் யூத மறைநூல் அறிஞர்களும், சதுசேயர்களும், பரிசேயர்களும் சமயம், பாரம்பரியம் என்ற பெயரில் மக்கள் சகிக்கவும், சுமக்கவும் முடியாத சுமைகளை அவர்கள் மீது திணித்து வேதனைப்படுத்தினர். மக்களின் வாழ்வு உரோமை அடக்குமுறை ஆளுகை முறையினாலும் யூதக் கருத்தியல் சார்ந்தும் நிர்பந்தமான நிலைக்குத் தள்ளப்பட்டு, வாழ்வு வாடி வதங்கி நம்பிக்கையிழந்திருந்த போது இறைமைந்தர் இயேசு, வாழ்வின் நெருக்கடியினால் துயருற்று வாழ்ந்தவர்களையும் பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களையும் இளைப்பாறுதலைப் பெறும்படி அழைக்கின்றார். அதோடு நியாயப்பிரமாண நியதிகளைக் காரணமாகக் கொண்டு அன்றைய சமயத் தலைவர்கள் தங்களால் பின்பற்ற முடியாத கடுமையான சட்டதிட்டங்களை உருவாக்கி, மக்கள் அவைகளைப் பின்பற்றத் தவறியபோது கடுமையான தண்டனைகளைத் தந்த நிலையில் ஆண்டவர் இயேசு அன்பு, அரவணைப்பு, அங்கீகாரம் போன்ற இறையாட்சியின் மதிப்பீடுகளை முன்மொழிந்து என்னிடம்

வாருங்கள்; நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள், என்நுகம் அழுத்தாது, என் சுமை எளிதாயுள்ளது என்று போதித்தார் (மத் 11: 28-30).

ஆண்டவர் இயேசு தமது போதனையில் பாரம்பரிய மரபு சார்ந்த கட்டாய நெறிமுறைகளைத் தவிர்த்து ஒரு மாற்று முறை வாழ்வாக இறையாட்சியின் செய்தியினைக் குறிப்பிடுகிறார். இவ்இறையாட்சியின் செய்தி கிறிஸ்துவை வாழ்வாக்கிப் பிரதிபலிக்கின்ற ஒன்று. இச்சூழலில் புத்தாண்டின் திருப்பயணத்தினை கிறிஸ்துவுடனே தொடர திருமறை சார்ந்து சிந்திப்போம்.

1. கிறிஸ்துவிடம் வாருங்கள்:

யூதச் சமயத் திருச்சட்டம் சார்ந்த வாழ்வு மக்களை அடிமைத்தனத்துக்கு உட்படுத்தியது. ஆனால், ஆண்டவர் இயேசுவின் போதனையில் உலகியல் சார்ந்த போக்குகளும் மதிப்பீடுகளும் உடைக்கப்பட்டு மக்களின் வாழ்வு சார்ந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருச்சட்டம் சார்ந்த வாழ்வினால் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ முயலும்போது கிறிஸ்துவுடனான உறவினையும், அவரது அருளினையும் இழந்து விட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால், தூய ஆவியாரின் துணையிருக்கும்போது நம்பிக்கையின் வாயிலாக இறைவனுக்கு ஏற்புடையவராய் இருக்கிறோம் (கலா 5: 4,5). அத்தோடு தீமையும் துன்பமும் மேலோங்கி நின்ற வாழ்வியல் சூழலில், இறைவாக்கினர் எசாயா வெளிப்படுத்தும் புதிய வானம் புதிய பூமி கருத்தியல் வாழ்வாகும் போது தீமை வாழ முடியாது, துன்பம் நிலைத்திராது. தீமை நன்மையாகவும், துன்பம் இன்பமுமாக மாறி இறையாட்சி மண்ணில் மலர்ந்து அனைத்தும் புதுமை பெறும் (எசா.65: 17; 66: 22). ஆகவே, கிறிஸ்துவிடம் வந்து அவரது ஆற்றலைப் பெற்று புதுமைகள் பல புரிவோம்.

2. கிறிஸ்துவினுடையவர்களாக வாழுங்கள்:

கிறிஸ்தவ வாழ்வு என்பது சீடத்துவ வாழ்வு, சிலுவை சுமந்து அனுதினமும் கிறிஸ்துவைப் பின்பற்றும் வாழ்வு (மத். 16: 24). அத்துடன் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் வாழ்வு என்பது அன்பின் வழியாகச் செயலாற்றும் நம்பிக்கை கொண்ட வாழ்வு (கலா. 5: 6).

இத்தகைய வாழ்வு இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்புக்குச் சான்று பகர்ந்திடும் வாழ்வு, ஊனியல்பின் செயல்களைத் தவிர்த்து ஆவியின் கனியினை வெளிப்படுத்தும் உன்னதமான வாழ்வு. இத்தகைய வாழ்வில் திருச்சட்டதிற்கு இடமில்லை. தூய ஆவியின் துணையோடு கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் (கலா 5: 22-24) வாழ்வாக இது அமைகின்றது. ஒருவர் கிறிஸ்துவோடு வாழும்போது பழையவைகள் ஒழிந்து எல்லாம் புதிதாக்கப்படுகின்றன. இப்புதிய வாழ்வில் கடவுள் தம் மக்களிடையே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவரே அவர்களின் கடவுளாய் இருப்பார் (வெளி. 21:3). கடவுள் உடனிருந்து அவர்கள் தம் கண்ணீர் அனைத்தும் துடைத்து, தாகமாய் இருப்போரின் தாகத்தினை வாழ்வு அளிக்கும் நீரூற்றிலிருந்து தீர்ப்பார். எனவே, இப்புதிய ஆண்டில் கிறிஸ்துவின் அருளைப் பெற்று, அவரைப் பிரதிபதித்து அவருடையவர்களாக வாழ்வோம்.

3. கிறிஸ்துவின் நுகத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்:

திருச்சட்டத்தின்படி, யூத அடக்குமுறையின் நுகம் சுமையாக இருந்த நிலையில், கனிவும் மனத்தாழ்மையுமுள்ள கிறிஸ்துவின் நுகம் இலகுவாயிருப்பதினால் கிறிஸ்துவின் நுகத்தினை வாழ்வில் ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவினுடையவர்களாக வாழ்வது ஏற்புடையது. மேலும், கிறிஸ்துவின் நுகத்தை ஏற்பது என்பது கிறிஸ்து இயேசுவின் மனநிலையை வாழ்வில் எல்லா நிலையிலும் வெளிப்படுத்துதல் ஆகும். கிறிஸ்து தந்தையோடிருந்ததைப் பெருமையாகக் கொள்ளாமல், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனித உருவில் தோன்றி, சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து, தம்மையே தாழ்த்திக் கொண்டார் (பிலி. 2: 5-8). கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலிக்கின்றவர்கள் தங்களது ஊனியல்புகளை சிலுவையில் அறைந்து, ஆவியின் துணையோடு வாழ்ந்து, வீண்பெருமையினைத் தேடாமலும் ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமலும் வாழ வேண்டும்.

திருச்சபை ஓர் குடும்பம், இறைமக்கள் குடும்ப அங்கத்தினர்கள், அனைவரும் இணைந்து, இசைந்து ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவர் மகிழ்ச்சியை ஒருவர் பகிர்ந்து அன்பில் நிலைத்திருந்து வாழ்வதும் பணிசெய்வதும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் உன்னதமான

வாழ்வு. திருச்சபை தன்னைச் சுற்றிலும் விளிம்பு நிலையில் வாழ்கின்றவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களின் வாழ்வுக்காக உழைப்பது இன்றைய சூழலில் மிகவும் பொருத்தமானது. இத்தகைய திருப்பணியினை நிறைவேற்றிட, இப்புதிய ஆண்டில் நம்முடைய ஒளி மானிடர் முன்பு ஒளிர்ந்து, நம்முடைய நற்செயல்களைக் காண்கின்றவர்கள் நம்முடைய விண்ணகத் தந்தையைப் போற்றும் நிலையில் (மத். 5:16) அமைந்திட அவர் அருள்புரிவாராக, ஆமென்.

இறையாசி என்றும் நம்முடன் இருப்பதாக!

கிறிஸ்துவின் திருப்பணியில்

பேரருள்திரு. அறிவர் S. கிறிஸ்டோபர் விஜயன்

பேராயர், C.S.I. கன்னியாகுமரிப் பேராயம்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல்-2026

கருப்பொருள்

நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே (எபே. 4: 4).

ஒன்றிப்பு என்பது கடவுள் கிறிஸ்துவில் திருச்சபைக்கு வழங்கியிருக்கின்ற ஒரு மாபெரும் கட்டளையாகும். வேற்றுமைகள் நிறைந்த உலகில் திருச்சபை இணக்கமான ஒற்றுமைக்கு அடையாளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஒன்றிப்புக்கு கிறிஸ்துவின் அன்பே ஆதாரமாக உள்ளது.

திருமறை முழுவதிலும் ஒன்றித்து வாழ்வதற்கான அழைப்பும் அறைகூவலும் தரப்பட்டுள்ளன. ஆபிரகாமின் மேய்ப்பருக்கும் லோத்துவின் மேய்ப்பருக்கும் இடையே ஏற்பட்ட பூசலில் ஆபிரகாம் முன்னெடுத்த தீர்வும் (தொநூ. 13: 8,9), ஏசா மற்றும் யாக்கோபு நடுவே எழுந்த பிரிவினையில் யாக்கோபுவின் ஒப்புரவிற்கான முயற்சியும் (தொநூ. 33: 10, 11), தன்னைப் பகைத்த, விற்றுப்போட்ட சகோதரர்களைப் பஞ்சக் காலத்தில் ஏற்று அன்புசெய்த யோசேப்பின் நற்பண்பும் (தொநூ. 45), இதோ, சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று! எத்துணை இனியது! (திபா. 133: 1) என்கிற பாடலின் வரியும் ஒன்றிப்பு சார்ந்த கடவுளின் உள்ளார்ந்த நோக்கத்தை நிறைவேற்றிய பக்தர்களின் சான்றைப் பிரதிபலிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் ஒன்றிப்புக்கான முன்மாதிரியாக ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமக்கும் தம் தந்தைக்குமான உறவை முன்னிறுத்துகின்றார் (யோவா. 17). அவ்வாறே தம்மைப் பின்பற்றும், நம்பும் தம் அடியவர்களும் இருக்க வேண்டும் என்கிற தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறார். பவுலார் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமான உறவை உடல் மற்றும் அதன் உறுப்புகளின் உறவார்ந்த இணைப்போடு தொடர்புபடுத்தி விளக்குகின்றார் (1 கொரி. 12: 12). எபே. 4: 4-இல் அவர் கூறுவது போல, கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த உலகம் வேற்றுமைகளாலும் பன்முகத்தன்மைகளாலும் ஆனது. அத்தகைய உலகில் ஒன்றிப்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்து அன்பையும் சகோதரத்துவத்தையும் பரப்பி இறையரசை விரிவாக்கம் செய்ய இப்புதிய ஆண்டில் ஆண்டவர் நம்மை அழைக்கின்றார்.

அருள்திரு. B. சாம் ஜெபசிங்

நாள்: 1

நமது அழைப்பு

Our Calling

மீக்கா 6: 6-8 மாற்கு 3: 13-15

திபா. 133

" . . . நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்" (எபே. 4: 1)

கிறிஸ்தவ வாழ்வியலில் இறைஅழைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இதுவே அருட்பணியின் அடித்தளம். கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயர் "அழைக்கப்பட்ட மக்கள்" (ecclesia as the called out) *என்பதாகும். இஸ்ரவேல் மக்களினம் தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டம் என்று பெயர் பெற்றிருந்தபோதும், அவ்வப்போது அவர்களை வழி நடத்த அழைக்கப்பட்ட தலைவர்களை மையப்படுத்தியே வரலாறு அமைந்திருக்கிறது.*

*திருச்சபையின் கோட்பாட்டிலும் இறைஅழைப்பு அடிப்படையே. அருட்பணிக்கு அழைப்பு (*calling for mission*), மனந்திரும்ப அழைப்பு (*call for coversion/repentance*), தலைமைத்துவத்திற்கு அழைப்பு (*call for leadership*), இறுதி இறையழைப்பு (*eternal call*) போன்றவை திருச்சபையின் போதனையில் பெரும்பான்மையான இடத்தை பிடித்துக்கொள்ளும் நோக்கங்கள்.*

திருமறையில் kaleo (calling) *என்னும் கிரேக்கபதம் கடவுள் அருளியிருக்கும் இரட்சிப்பினைஅனுபவிப்பதை குறிக்கிறது* (an invitation to experience God's salvation). *இரட்சிப்பினை கொண்டாட வேண்டிய சபைகள் இன்று பெரும் சாவால்களை அரசின் சில தீர்மானங்களாலும், சபை நிர்வாக ஒழுங்கின்மையினாலும், விவிலிய இறையியல் கட்டமைப்பு இல்லாமையினாலும் பிரிவினைக்குட்பட்டு, பொய்யான ஆன்மீகத்தை பின்பற்றி, வன்முறைகளையும், வேறுபாடுகளையும் அதிகம் வளர்த்துக் கொண்டு வருகிறது. இதை எதிர்கொள்ள கடவுள் தரும் அழைப்பினை தியானிப்போம்.*

1. பொருள் சார்ந்த பற்றை மேற்கொள்ள கடவுள் தரும் அழைப்பு:

கி. பி 60-61-ல் அப்போஸ்தலர் பவுல் எபேசுவில் நற்செய்தி அறிவித்ததற்காக ரோமில் சிறை கைதியாய் இருக்கும்போது எபேசு திருச்சபைக்கு எழுதிய கடிதம் எபேசியர் நிருபம். எபேசு பட்டணத்திற்கு இரண்டு சிறப்புகள் உண்டு. இது ஒரு வர்த்தகப் பட்டணம், மட்டுமல்ல இது ஒரு பன்முக கலாச்சாரம் மிகுந்த பட்டணம். அண்டை நாட்டை சேர்ந்தவர்கள் அனேகர் எபேசுவில் குடியேறினர். அவர்களில் யூதர்களும் உண்டு.

இந்தியாவில் பன்மை கலாச்சார சூழலில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் தூண் மத சார்பின்மை (secularism). எபேசு பட்டணம் கடவுள் நம்பிக்கையை மையப்படுத்தியே தேசிய ஒற்றுமை கொண்டிருந்தது. "அர்திமஸ்"- Artimes (means Moon goddess defind as virgin huntress) என்னும் கிரேக்கபெண் கடவுளை "டியானா" - diana (means fallen from heaven & fertility) என்னும் ரோம பெயரில் மக்கள் வழிபட்டனர். எபேசுவின் பொருளாதாரம் இந்த கோவிலை நம்பியே இருந்தது.

எபேசுவில் வெள்ளி தட்டான்கள் டியானாளின் கோவிலை போல் வெள்ளியால் சிறய கோவில்களை செய்து விற்பனை செய்து வந்தனர். பவுலின் போதனைஅவர்களின் வர்த்தகத்தை பாதித்தது (அப். 19: 24-28, 34, 35). பவுலைகைதுசெய்துசிறையிலடைத்தனர். இந்த நிலையில் எபேசு திருச்சபையை அழைப்பிற்கேற்க வாழுங்கள் என அழைக்கிறார்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டபோது "ஏன் அரசின் பணத்தில் கோவில் கட்டுகிறீர்கள்? என்ற கேள்விக்கு பல அரசியல் தலைவர்கள் கொடுத்த பதில் இது செலவு அல்ல முதலீடு. ஆலயம், ஆன்மீகம் கடவுள் பேரில் கொள்ளும் பற்றுறுதியா இல்லை கடவுளை கொண்டு வியாபாரம் செய்யும் முதலீட்டு நிறுவனமா?

மதங்கள் தங்களை பின்பற்றுகிறவர்களை ஒன்றுபடுத்துவதற்கு பயன்படுத்தும் ஊடகங்கள் 1. மதஅடையாளங்கள் - கோபுரங்கள், வண்ணங்கள் (காவி, வெள்ளை, பச்சை), நம்பிக்கை சார்ந்த பொருட்கள். 2. கோஷங்கள் 3. மக்களை கூடி வரச்செய்யும் கூட்டங்கள் - திருவிழாக்கள், பண்டிகைகள். எபேசுவில் கடவுள் நம்பிக்கை இயற்கைக்கு மாறான கடவுளின் உருவம், சிறிய கோவில் சிலைகள் போன்றவைகளை மையப்படுத்தியே அமைந்திருந்தது. ஆளுபவர்களுக்கு திருச்சபை ஒரு வர்த்தக நிறுவனம், விசுவாசிகளுக்கு இது பற்றுறுதியை அறிக்கையிடும் இடம்.

பவுலின் போதனையின்படி மடமையை அகற்றவும், மூட நம்பிக்கைக்கும், வன்முறை அதிகாரத்திற்கும் அடிமைபட்டோரை மீட்பதும், தேசியம் என்னும் கருத்தியலிலிருந்து திருச்சபை பாதுகாக்கப்படவும் திருச்சபை ஒற்றுமையால் மட்டுமே சாத்தியம் எனவும் அழைப்பு கொடுக்கிறார்.

திருச்சபை பணம், பொருள், அதிகாரம் சார்ந்து வளர்ந்து வருகிறது. செல்வம் இல்லையேல் சபையும் இல்லை, அருட்பணியும் இல்லை, அருட்பணியாளர்களும் இல்லை என்னும போங்கு பெருகும் இந்நாட்களில் திருச்சபை பொருள் சார்ந்தது அல்ல, பணிவிடையில் பற்றுறுதி (faith in action) சார்ந்தது என்னும் அருட்பணிக்காய் உழைப்போம்.

2. உலகளாவிய திருச்சபை ஒற்றுமைக்கான அழைப்பு:

உலகளாவிய கிறிஸ்தவத்தில் "நம் திருச்சபை" என்னும் பார்வை திருச்சபை வட்டத்தில் அதிகம் பேசப்படா ஒன்று. மாறாக நம் கிராமத்தில் "நம் திருச்சபை" என்பதே பெருன்பான்மை திருச்சபைகளின் அறிக்கை. ஆகவே திருச்சபை வளர்ச்சி என்று நாம் சொல்லும் ஆலயம் கட்டுதல், அருட்பணியாளர்களை அனுப்புதல், அருட்தொண்டு ஆற்றல் ஆகியவை நம் கிராமத்தில் நம் திருச்சபையின் கவுரவம் என்றும், திருச்சபைக்குள் ஏற்படும் முரண்பாடுகள், பிரிவினைகள், பிரச்சனைகள் நம் திருச்சபையை அல்லது கிராமம் கடந்து பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை என்னும் குறுகிய மனோபாவம் திருச்சபைகளுக்குள் மேலோங்கி காணப்படும் சிந்தை.

பல திருச்சபைகள் விசுவாசிகள் வாழும் கிராமத்தின் அடையாளமாகவும் பார்க்கப்படுவதுண்டு. பவுல் இதற்கு மேலான கருத்தை இங்கு வலியுறுத்துகின்றாம். எபே. 4.1 ல் பவுல் பயன்படுத்தும் "பாத்திரவான் (worthy)" என்னும் பதம், ஒரு குறுகிய திருச்சபை என்னும் வட்டத்தில் சாட்சியாய் இருப்பதை குறிக்காமல் அனைத்து மக்களின் முன் ஒருவரின் தனிப்பட்ட ஒழுக்கத்தையும், அனேகர் பயன்பெறும் பொருட்டு தன்னை ஒப்புக்கொடுப்பதையும் குறிக்கிறது. இது மீட்பின் வழி அல்ல. மீட்கப்பட்டவரின் முழுமையான அர்ப்பணிப்பு. மீட்பு திருச்சபைக்கு கொடுக்கும் சில அடையாளங்கள் உண்டு - புனிதமான (Holy), அழைக்கப்பட்டவர்கள் (called-out), இறையாசிற்குரியவர்கள் (God's Kingdom). இதன் வெளிப்படையான மாதிரியே "பாத்திரவான்".

நற்செய்தி அறிவிப்பவரை ஏற்றுக்கொள்வதில் பாத்திரவான்களாகவும் (ரோமர் 16.1, 2), கிறிஸ்துவை குறித்த நற்செய்திக்கு பாத்திரவான்களாகவும் (பிலி. 1.27), நற்கிரியைகளுக்கு பாத்திரவான்களாகவும் (கொலோ. 1.10), இறையரசை நிலைபடுத்துவதற்கு பாத்திரவான்களாகவும் (1 தெசலோ. 2.12), நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கும் பணிக்கு ஆதரவாயிருப்பதில் பாத்திரவான்களாகவும் (3 யோவான் 1.6) இருக்கவேண்டும் எனவும் திருமறை நம்மை அழைக்கிறது.

திருச்சபை ஒற்றுமை தியாகத்தின் மூலம் வருவதே. தோய்ந்து போகும் கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள், அருட்பணியின் அழைப்பை மறந்து செயல்படும் பேராயங்கள், ஆன்மீகம் அறிவு குறைந்து உலக அறிவால் திருச்சபையை நிர்வகிக்க முயலும் திருச்சபைகள், தங்கள் திருச்சபைக்கு பிற சபையார் அனேகரை இழுக்க திருமறைக்கு புறம்பான போதனைகளையும், வசீகர வாக்குகதத்தங்களையும் கொடுத்து வஞ்சிக்கும் திருச்சபைகள் பவுல் போதிக்கும் "அழைப்பிற்கு பாத்திரவான்கள்" என்பதற்கு முரனான சாட்சியே.

அனைத்து திருச்சபை ஒற்றுமைக்கு தடைகளாக இருப்பது திருச்சபை கோட்பாடுகள் மற்றும் சடங்குகள்;, திருச்சபையின் நிதி மற்றும்

சொத்து நிர்வாகம் மற்றும் வரலாற்றில் நிகழ்ந்த தவறுகள். இவைகளினால் ஏற்படும் தவறுகள் இன்றும் நடந்தேறுகிறது.

100 சதவிகிதம் கிறிஸ்தவர்களை கொண்ட அர்மேனியா நாட்டில் கிறிஸ்தவ அரசுக்கும், கிறிஸ்தவ ஆலயத்திற்கும் இடையே மிகப் பெரிய போர் மார்ட்டின் லூத்தர் சீர்திருத்த திருச்சபையை தோற்றுவிப்பதற்கு முன் காணப்பட்டு போன்று காணப்படுகின்றது. கி.பி. *301* ல் கிறிஸ்தவத்தை தேசிய மதமாய் அறிவித்த நாடு அர்மேனியா. நாட்டின் அரசியல் சாசனத்தில் சிறப்பிடம் திருச்சபைக்கு உண்டு. திருச்சபையின் தாக்கம் நாட்டின் பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும், அரசியலிலும் காணப்படுவது உண்டு. இதன் பிரதமர் பாஷின்யன் திருச்சபை ஏற்றத்தாழ்வை "ஒரு நாட்டிற்குள் இருக்கும் மற்றொரு நாடு திருச்சபை" என்றும் -திருச்சபையை அரசிற்கு எதிராய் செயல்படுகிறது என்பதை குறித்து பேசியது திருச்சபையை கிளர்ச்சி அடைய செய்திருக்கிறது. இதற்கு எதிர்வினை ஆற்றிய பேராயர்கள், திருச்சபைத் தலைவர்கள் மீது அரசு பொய் வழக்குகள் பதிவு செய்து சிறையில் அடைத்திருக்கின்றனர். திருச்சபை விசுவாசிகளுக்கு எதிராக அரசு ராணுவ கட்டுபாடுகளை விதித்திருப்பதும், ஆலயத்தின் தூய்மையான பீடத்தை சுற்றி ராணுவம் காவல் செய்வது மற்றுமொரு அடிமை தனத்தை விவரிக்கும் நிகழ்வு. இவர்களின் பிரச்சனை யார் ஆலயத்தின் செல்வத்தையும், ஆன்மீக கோட்பாடுகளையும நிர்வாகிப்பது என்பதாகும்.

திருச்சபை பற்றுறுதி அறிக்கைகள் பொருளாதாரம் சாராது கிறிஸ்துவின் தியாகம், அன்பு சார்ந்து அமையட்டும். திருச்சபைகளை உள்அரங்க விளையாட்டு நிறுவனமாக்காமல் உலகளவில் அடையாளப்படும்படி அருட்பணியினை வளரதத் எபேசு திருச்சபைக்கு பவுல் கொடுத்த அழைப்பு இன்றும் பொருத்தமானது. இணைந்து செயல்படுவோம்.

கிறிஸ்தவ அழைப்பு இன்று வியாபாரமாகிவிட்டது - நற்செய்தி கூட்டத்திற்கு சுவரொட்டி விளம்பரம், காணிக்கை கொடு கடவுளை கொடுக்கிறேன் என்னும் போதனைகள் அழைப்பின் முக்கியதுவத்தை கெடுத்து விட்டது எனலாம். இத்தகைய சூழலில் கடவுளின் அழைப்பை இப்புதிய வருடத்தின் தீர்மானமாய் கொண்டு உழைக்க

3. நம்பிக்கையின் ஒற்றுமை - புதிய அடையாளமாகுதலின் அழைப்பு (Unity of Faith: A Call for New Identity)

எபேசு நாட்டினருக்கு பன்மை கலாச்சாரம் அடையாளமாய் காணப்படவில்லை, மாறாக அவர்களின் கடவுள் நம்பிக்கையே அடையாளமாய் காணப்பட்டது. அவர்கள் கிரேக்க கடவுளான "அர்திமஸ்" Artimes என்னும் கடவுளை "டியானா" (Diana) என்னும் பெயரில் வழிபட்டனர். அக்கடவுளுக்கு மிகப் பெரிய கோவிலையும் கி.மு. *550* ம் ஆண்டு கட்டி வழிபாடு செய்தனர். பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இக்கோவில் தெரிவு செய்யப்பட்டது (seven

wonders of ancient world). N.T. Wright என்னும் புதிய ஏற்பாட்டு இறையியலாளர் இவ்வாறு எழுதியுள்ளார் -இப்பட்டணம் மார்பிள் கற்களினால் கட்டப்பட்டது. அதோடு ஆயிரத்திற்கு அதிகமானோர் உட்காரும் விளையாட்டு மைதானமும், அடிப்படை மருத்துவ பயிற்சி மருத்துவமனையையும், ஒருபரந்த நூலகத்தையும் கட்டி பயன்படுத்தினார்கள்.

பவுல் எபேசு பட்டணத்தில் பிரசங்கம் செய்வதற்கு முன்பே அந்த நாடு ஒரு சிறந்த கட்டமைப்போடும், கல்வி அறிவோடும் இருந்தது. மக்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பிரமாண்டமான அர்திமஸ் கோவிலை நம்பியே இருந்தது. கடவுள் நம்பிக்கை பணமாக, பொருளாக, அதிகாரமாக மாறிவிட்டது. பவுலார் இயேசுவே மெய்யான கடவுள் என்று எபேசுவின் வீதிகளிலும், மக்கள் கூடும் சந்திகளிலும் பிரசங்கித்தபோது பெரும் முதலாளிகள் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு விடும் என எண்ணி அவரை சிறைபடுத்தினர். ஆகையால் பவுல் எழுதுகிறார் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் (வசனம் 1).

இத்தகைய சூழலை எதிர்கொள்ள பவுல் திருச்சபைக்கு தரும் போதனை ஒற்றுமைக்கான அழைப்பை அடையாளமாக்குங்கள். மக்களை ஒன்றுபடுத்தும் சக்திகளாக பின்வருபனவற்றை பட்டியலிடலாம். 1. மத அடையாளங்கள் - கோபுரங்கள், வண்ணங்கள், நம்பிக்கை சார்ந்த பொருட்கள். 2. கோஷங்கள் 3. மக்களை கூடி வரச்செய்யும் கூட்டங்கள் - திருவிழாக்கள், பண்டிகைகள். எபேசு பட்டணத்தவாரை ஒன்றுபடுத்திய அடையாளங்கள் இவைகளே. பவுலாரோ கிறிஸ்துவை கடவுள்; என்று அறிக்கையிடுவதே திருச்சபையை ஒன்றுபடுத்து என பவுல் அறிவுரை தருகின்றார்.

தன் கிறிஸ்தவ அடையாளத்தை அறிவித்ததற்காய் சிறை சென்றவர் அதே அடையாளத்தை திருச்சபை பின்பற்ற அறிவுறுத்துகின்றார்.

பள்ளிப்பருவம் முதல் இந்தியாவின் அடையாளம் பன்முகத்தன்மை என்றே போதிக்கப்பட்டது. சமீப நாட்களில் கற்றறிந்த சமூகம் (கல்வியாளர்கள் முதல் உச்சநீதி மன்ற நீதிபதிகள் வரை)

வேலைக்கு விண்ணப்பித்தவர் பணிநியமன அழைப்பிற்காய் காத்திருப்பர். உறவுகளின் தகவல்கள் அறிய அலைபேசி அழைப்பிற்காய் உறவுகள் காத்திருப்பர். உதவிக்கும் அழைப்பர். செய்திகளை ஊர் அறியச் செய்யவும் பிறரை அழைப்பர். மரண தருவாயில் துரத்தில் இருக்கும் மக்களை ஒரு முறையாவது வந்து பார் என முதியவரும் அழைப்பர். அழைப்பில்லையேல் மனிதவாழ்வு ஊனமே. ஏற்பதும் நிராகரிப்பதும் தனி மனித சுதந்திரம், ஆயினும் பொறுப்புள்ளோருக்கும்;, அன்புள்ளோருக்கும் அது ஒரு வரப்பிரசாதம். தாய் குழந்தையின் அழுகையை அழைப்பாய் ஏற்பாள்.

அருள்திரு. I. ஜாண் ரோஜின் ஜேக்கப்

நாள்: 2

அன்புடன் ஒருவரையொருவர் தாங்குதல்
Bearing with One Another in Love

செக். 7: 8-10 லூக். 10: 30-36

திபா. 25: 6-10

. . . ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர் மீது பரிவு கொண்டார் (லூக். 10: 33).

அன்பின் உண்மையான வடிவம் தேவையில் இருப்போருக்கு உதவுவதன்மூலம் முழு வடிவம் பெறுகிறது. பாதிக்கப்பட்டிருப்போருக்கு தனது அன்பையும், நேரத்தையும் உடனிருத்தலையும் தன்னுடையதையும் பொருளையும் கொடுத்து ஒருவரைத் தாங்க வேண்டுமென்றால் அன்பு இல்லாமல் செய்ய இயலாது. இன்று அன்புக்காய் ஏங்கும் உள்ளங்கள் ஏராளம். விப. 3: 7-இல் கடவுளின் அன்பு, இரக்கம், கருணை இவைகளை நாம் காணமுடியும். இஸ்ரயேல் மக்கள் அந்நிய நிலத்தில் அடிமைகளாக வாழ்ந்தபோது அவர்கள் . . . கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன் என்றார் கடவுள். தம் மக்கள் மீது கொண்டுள்ள அன்பை காணலாம்.

செக். 7: 8-10-ல் இறைவாக்கினர் வழியாக மக்களுக்கு சொல்லுகின்ற வார்த்தை நியாயத்தையும், உண்மையையும், இரக்கத்தையும், கருணையையும் காட்டுங்கள் என்கிறார். யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்து திரும்பி எருசலேம் மறுபடியும் கட்டி வருகின்ற காலத்தில் உன்மையான மனம்மாறுதல் அவர்களிடம் இல்லை. வெளிப்படையான மதச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.

ஆலய சடங்குகள் அல்ல, நீதியும் இரக்கமும் நிறைந்த வாழ்க்கை தேவை என்பதை கடவுள் உணர்த்தினார்.

எசேக். 34: 16-ல் . . . காணமாற்போனதை, துரத்துண்டதை எலும்பு முறிந்ததை காயம் கட்டி, நசல்கொண்டதை திடப்படுத்துவேன். என்று கடவுள் மேய்ப்பராக நின்று தம் மக்களை கூட்டிச் சேர்ப்பேன் என்கிறார். தம்முடைய அன்பின் வெளிப்பாட்டை இஸ்ரயேல் மக்களுக்கு எடுத்துரைக்கிறார்.

லூக். 10: 33-ல் . . . ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரியன் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர் மீது பரிவு கொண்டார் என்பதாகக் காண முடிகிறது.

எருசலேம் கடல் மட்டத்தில் இருந்து 2,600 அடி உயரத்தில் இருக்கின்ற இடம் (பட்டணம்). எரிகோ, கடல் மட்டத்திற்கு கீழ் 300 அடி தாழ்வான பகுதி. எருசலேமில் இருந்து எரிகோ 17 மைல் தூரம். இந்த எரிகோவுக்கு 2,600 அடி உயரத்தில் இருந்து தாழ்வான பகுதி நோக்கி பயணிக்க வேண்டும். இந்த ஆபத்தான பாதையில் தான் இம்மனிதன் பயணிக்கிறான். இங்கு திருடர்கள் பதுங்கி இருக்கின்ற குகைகள் உண்டு.

இங்கு திருடர்கள் இம்மனிதனை காயப்படுத்தி குற்றுயிராய் விட்டுப் போயினர். இவர்மீது அன்புடன் கரிசனை காட்டுகின்றார் சமாரியன். எனக்கு அடுத்திருப்பவர் யார் என்ற திருச்சட்ட அறிஞரின் கேள்விக்கு இரக்கம் காட்டுபவரே என்ற பதிலை நாம் காணமுடியும். இப்புதிய ஆண்டில் நாம் எவ்வாறு பயணிக்கவேண்டும் என்பதைத் திருமறை வாயிலாகத் தியானிப்போம்!

1. கரிசனை காட்டுதல்

. . . சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர் மீது பரிவு கொண்டார். லூக். 10: 33

அன்புடன் கூடிய பரிவு தன்னலம் நோக்காது பிறர்நலம் கருதும். இத்திருமறைப் பகுதியில் பரிவு கொண்ட சமாரியர் குற்றுயிரான மனிதருக்கு உதவினால் தன்னிலை என்னவாகும் என்று எண்ணவில்லை. அவர்மீது இரக்கமுறுகிறார்.

லூக். 10: 31 . . . ஆசாரியர் லேவியர் அவ்வழியே வந்தபோது விலகிச் சென்றாகக் காணலாம். ஒருவேளை தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிவிடை தடைபட்டுவிடக்கூடாது. எனவே விலகிச் சென்றனர். தங்களுக்கும் இவ்விடத்தில் ஆபத்து ஏற்பட்டுவிடலாம் என்ற அச்சமாகக் கூட இருக்கலாம்.

இவற்றையும் கடந்து ஒருவருக்கு உதவி செய்யவேண்டும் என்றால் அன்பின் வெளிப்பாடு.

அன்பு என்பது இரண்டு உடல்களில் வாழும் ஒற்றை ஆன்மா - என்றார் அரிஸ்டாட்டில். தன் உடலாக என்னுகிறார். அவர் படுகிற வேதனையை தனது வேதனையாகக் கருதுகிறார். பிறரின் துயரில் கரிசனை காட்டும் அன்பை காண்கிறோம்.

மாற். 2: 2-ல் முடக்குவாதமுற்றவரை சுமந்து வந்த நால்வரின் கரிசனையை காண்கிறோம். மாற். 2: 5-ல் கிறிஸ்து அவர்களின் நம்பிக்கையை கண்டு விடுவித்ததைக் காண்கிறோம். இன்று கரிசனையோடு பிறரது வேதனைகளில் பங்குபெற அழைக்கப்படுகிறோம். கடவுளின் அன்பு கரிசனையுடையது.

2. காயம் கட்டுதல்

. . . அவர் அவரை அணுகி காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றை கட்டி, தம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி . . . (லூக். 10: 34).

கரிசனையுடன் கூடிய அன்பு இருந்தால் காயம்கட்ட இயலும். இத்திருமறை பகுதியில் சமாரியர் காயமுற்ற மனிதருக்கு காயத்தை கட்டுவிக்கிறார். தம் சுய வாகனத்தில் ஏற்றி, சத்திரத்தில் சேர்க்கிறார். தனது நேரத்தை, தனது பணத்தை கொடுத்து காயமுற்றவருக்காக தம்முடனிருப்பை தருகிறார்.

லூக். 10: 35-ல் . . . இதற்குமேல் செலவானாலும்நான் திரும்பி வரும்போது தருவேன் என்கின்ற உறுதியையும் அளிக்கின்றார். நான் கொண்டு சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிட்டேன். என் பணி முடிந்தது என்று இல்லாமல், தன்னை அவகாசியாக (உத்தரவாதியாக) கூறி செல்கிறார்.

இந்த ஆண்டில் கடவுள் கரிசனையுடன் காயம்கட்டி நம்மை வழிநடத்த நம்முடன் உண்டு என்ற இறைஉணர்வோடு பயணிப்போம்.

இன்று நாமும் காயப்பட்ட மக்களோடு நின்று கரிசனையுடன் அவர்கள்தம் தேவையில் உடன்நின்று அன்பு செய்வோம்!

அன்பினால் ஒருவரையொருவர் தாங்குவோம்!

திரு. M. சாமுவேல்

நாள்: 3

சமாதானக் கட்டு

எசா. 11: 6-9 *யோவா. 14: 27-31*

திபா. 86: 8-13

அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள். (எபே. 4: 3)

கடவுளின் அடியவர்கள் ஒருவரோடொருவர் இணைந்து அமைதியுடன் வாழ வேண்டும் என்பது திருமறை நமக்கு தரும் அழைப்பு. இவ்வமைதி இல்லா உலகில் அமைதியை ஏற்படுத்தும் கருவிகளாய் நாம் இப்புதிய ஆண்டில் செயல்பட ஆர்வமுடையவர்களாய் காணப்படவேண்டும். ஏனென்றால் சமாதனம் அல்லது அமைதி என்கிற வார்த்தை நிறைவான வாழ்வு, குறையில்லா வாழ்வு போன்ற அர்த்தத்தை தருகின்றது. பவுலார் அன்பினாலும், மிகுந்த மனத்தாழ்மையினாலும் அமைதியின் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள நமக்கு அழைப்பு தருகின்றார்.

ஒரு சிறு கிராமத்தில் மருத்துவர் ஒருவர் தன்னால் இயன்ற மருத்துவ உதவியை குறைந்த பணத்தில் அம்மக்களுக்கு செய்து வந்தார். ஒருநாள் இரவில் அவர் தனது பணியை முடித்துவிட்டு இல்லத்திற்கு திரும்பி சென்றுகொண்டிருந்த வேளையில் திருடன் ஒருவர் அவரை காயப்படுத்தி அவரிடம் இருந்த பணத்தை திருடிச்செல்ல முயன்றார். மருத்துவர் அப்பணம் ஏழைகளுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு தயவுசெய்து தந்துவிடு என்று கூறியும் திருடன் செவிசாய்க்கவில்லை. மருத்துவரும் வருத்தத்தோடு தனது இல்லத்திற்கு நேராய் சென்றார். அவ்வேளையில் ஓர் அபயக்குரல், காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று மருத்துவரும் ஓடோடி சென்றார். அங்கு அத்திருடன் பாம்பினால் கடிபட்டு உதவிக்காக போராடி கொண்டிருந்தார். மருத்துவர் துரிதமாய் செயல்பட்டு முதலுதவி செய்து மேல் சிகிட்சைக்காக தனது மருத்துவமனை அழைத்து சென்று உதவினார். இதைக்கண்ட திருடன் மருத்துவரிடம், ஐயா, நான் உங்கள் வார்த்தையை மதியாமல் உங்கள் பணத்தை திருடி சென்றேன். ஆனாலும் நீங்கள் என்னிடம் எந்த எதிர்ப்பையும் கட்டாமல் எனக்கு உதவி செய்தீர்கள் என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் நான் திருடுவதை விட்டுவிடுகிறேன் என்றான். மருத்துவரும் அவரை மன்னித்து, தனது மருத்துவமனையிலேயே அத்திருடருக்கு பணி வழங்கினார். இம்மருத்துவரின் செயல் தவறான பாதையில் சென்ற ஓர் மனிதனை நல்வழிப்படுத்தி திருந்தி வாழ உதவியது. திருமறையிலும் பவுலார் மனத்தாழ்மையோடும் பொறுமையோடும் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி அமைதியின் ஒருமைப்பாட்டை காத்துக்கொள்ள அறிவுறுத்துகிறார் (எபே. 4: 2, 3).

1. அன்பினால் சமாதானக்கட்டை ஏற்படுத்திய யோசேப்பு *(தொநூ. 45: 1-15).*

பஞ்சத்தில் பிழைக்க உணவு வாங்க வந்த தனது சகோதர்களை கண்ட யோசேப்பு பொறாமைகொள்ளாமல் நீங்கள் என்னை விற்றுப்போட்டதால் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாகவும் இருக்கவேண்டாம் என்று தனது சகோதரர்களை கேட்டுக்கொண்டு அவர்களை கட்டியணைத்து முத்தமிட்டு தனது அன்பை வெளிப்படுத்துகிறார். தனக்கு தீங்கு செய்தவர்கள் என்று நினைக்காமல் யோசேப்பு கொண்டிருந்த அன்பினிமித்தம் நெடுநாளாய் தனது மகனை பாராது துக்கத்திலிருந்த யாக்கோபினுடைய வாழ்வில் கடைசிநாட்களில் அமைதியை கொண்டுவருகிறது. சமாதானம் என்பது நிறைவான வாழ்வு. குறையில்லா வாழ்வு. காயங்கள் நோய்கள் அற்ற வாழ்வு. இங்கு யோசேப்பு அன்பினால் தனது குடும்பத்தில் எற்படுத்திய அமைதியின் ஒருமைபாடு யாக்கோபிற்க்கு சமாதான வாழ்வை ஏற்படுத்துகிறது.

2. மனத்தாழ்மையினால் சமாதானக்கட்டை ஏற்படுத்திய யோசேப்பு *(ஆதி. 50: 18-21)*

யாக்கோபின் மரணத்திற்கு பின் யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் செய்த தவறை உணர்ந்து மன்னிப்பை கோரும் வேளை. யோசேப்பு அவர்களை நோக்கி நான் தேவனா? நீங்கள் எனக்கு தீங்குசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ வெகு ஜனங்களை காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார் என்று கூறுகின்றார். தான் பார்வோனுக்கு அடுத்த நிலையில் தேசத்தில் உயர்த்தப்பட்டிருந்தாலும் அதை பெருமையாக எண்ணாமல் தனது இனத்தாருக்கு உதவுவதற்கான ஒரு தருணமாய் கருதுகிறார். அவரது மனத்தாழ்மை அமைதியான சூழல் பஞ்சகாலத்தில் யாக்கோபின் குடும்பத்தில் சமாதானத்தை ஏற்படுத்தியது.

நமது வாழ்விலும் யோசேப்பை போல மனத்தாழ்மையோடும், பொறுமையோடும், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி அமைதியின் ஒருமைப்பாட்டை காத்துக்கொள்வோம். அமைதியின் அரசராய் இவ்வுலகில் வந்த இறைமகன் இயேசு நமக்கு வைத்து போன சமாதானத்தை (யோவா. 14: 27-31) நாமும் மற்றவர்களிடம் பகிர்ந்து யுத்தங்களாலும், பொருளாசையாலும், பொறாமையாலும் பிரிந்து அமைதியற்று இருக்கும் இவ்வுலகில் அமைதியை ஏற்படுத்தும் கருவிகளாய் திகழ்வோம்.

திரு. A. அனிஸ் ராஜன்

நாள்: 4

ஒரே நல்லெதிர்நோக்குக்கு அழைக்கப்பெற்றுள்ளீர்கள்

Called to One Hope

இச. 6: 4-9 யோவா. 17: 20-26

திபா. 24: 1-6

"நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்" (யோவா. 17: 22).

"ஒரே நம்பிக்கை" என்ற சொற்றொடரில் "நம்பிக்கை" வெறும் ஆசை அல்லது கனவு அல்ல. நிச்சயமான எதிர்கால உறுதி என்று விளக்கப்படுகிறது. எபேசியர் நான்காம் அதிகாரம், கிறிஸ்தவ வாழ்க்கையின் அழைப்பை வலியுறுத்தும் முக்கியமான பகுதி. முதல் மூன்று அதிகாரங்களில் கடவுள் கிறிஸ்துவில் செய்த மீட்பின் ஆழத்தை விளக்கிய பவுல், இங்கே "நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்" (4:1) என்று சபையை நேரடியாக வாழ்வியல் மாற்றத்துக்கு அழைக்கிறார். அந்த அழைப்பின் மையக்கருத்தே "ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்பதாகும். இந்த உண்மைகளின்படி வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். பவுல் அப்போஸ்தலர் ரோமில் சிறையில் இருந்தபோது இந்த நிருபத்தை எழுதினார். எபேசு சபை யூதர்களும் யூதரல்லாதவர்களும் கலந்த ஒரு சபை. அக்காலத்தில் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இடையே பெரிய பிரிவினை இருந்தது. ஆனால் கிறிஸ்துவில் அவர்கள் ஒன்றாக்கப்பட்டார்கள் (எபேசியர் 2: 13,14).

1. இறைஅழைப்பில் உருவான நம்பிக்கை: *(எபேசியர் 4: 4)*

கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற அழைப்பின் மகத்துவத்தை வலியுறுத்துகிறார் பவுல். இந்த அழைப்பு வெறும் அழைப்பு அல்ல. அது ஒரு நம்பிக்கையை உருவாக்கும் அழைப்பு. எபேசியர் 1:18-ல் "கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்றும்..." பவுல் ஜெபிக்கிறார். இந்த நம்பிக்கை நமது அழைப்பிலிருந்து பிறக்கிறது. இந்த அழைப்பு கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டானது. நாம் தகுதியுள்ளவர்களாக இருந்ததினால் அல்ல, கடவுளுடைய கிருபையினாலேயே நாம் அழைக்கப்பட்டோம். இந்த நம்பிக்கை உலகின் நம்பிக்கை போல் அல்ல. உலக நம்பிக்கை ஏமாற்றும். ஆனால் கிறிஸ்துவின் அழைப்பில் உண்டான நம்பிக்கை உறுதியானது, ஏனெனில் அது கடவுளுடைய வாக்குத் தத்தத்தில் நிலைத்திருக்கிறது. உலக நம்பிக்கைகளின் நிலையற்ற தன்மை, பணம், பதவி, உடல்நலம், உறவுகள் போன்றவை எல்லாம் ஒரு நாள் தோல்வியடையும் (யோபு 27:18; மத்.6:19-20). கிறிஸ்துவில் உள்ள நமது நம்பிக்கையின் அடித்தளம், இயேசுவின் உயிர்த்தெழுதல் (1பே.1: 3; ரோம. 5: 5), நிகழ்கால விடுதலை (ரோம. 6: 22), எதிர்கால மகிமை, கிறிஸ்துவோடு நித்திய ஜீவனும், புதிய உடலும் (1கொரி. 15: 42-44; கொலோ. 3: 4) போன்ற நம்பிக்கையில் நிலை நிறுத்துகிறது. கடவுளால் அழைக்கப்பட்டதினால் தான், கடவுளோடு இருப்போம் என்ற உறுதியான நம்பிக்கை நமக்குக் கிடைத்துள்ளது.

2. இறை ஒன்றிப்பில் தொடர்ந்திடும் நம்பிக்கை:

எபேசியர் 4:4-6ம் வசனத்தில், சபை ஏன் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதற்கான ஆன்மீக அடித்தளத்தை ஆழமாக விளக்குகிறார். எபேசியர் நூலின் முழு நோக்கம் கடவுள் கிறிஸ்துவில் அனைத்தையும் ஒன்றிணைக்கிறார் என்ற திட்டத்தை காட்டுவதே ஆகும். ஒரே நம்பிக்கை எல்லா கிறிஸ்தவர்களையும் ஒன்றாக்குகிறது. அதற்கான தத்துவ அடிப்படை 4: 4–6-ல் வரும் "ஏழு ஒரே" உண்மைகள் ஆகும். இவை ஆரம்பக்கால சபையில் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை கொள்கைகளைச் சொல்லும் குறுகிய நம்பிக்கை ஒப்புரவாகப் பயன்படுத்தப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த இறை ஒன்றிப்பு வெறும்கோட்பாடல்ல, இது நமது அன்றாட வாழ்வில் வெளிப்பட வேண்டிய உண்மை. இன்று சபைகளில் இனம், மொழி, , அரசியல் காரணங்களால் பிளவுகள் உண்டாகின்றன. ஆனால் இந்த ஏழு "ஒன்று"கள் நம்மை நினைவூட்டுகின்றன நாம் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டவர்கள், ஒரே ஆவியால் இணைக்கப்பட்டவர்கள், ஒரே கடவுளுடைய பிள்ளைகள். எனவே அடக்கத்தோடும் சாந்த குணத்தோடும், நீடிய பொறுமையோடும், அன்போடு ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு, தூய ஆவியரால் உண்டான சமாதானத்தின் கட்டை ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள்ளவேண்டும்.

நாம் அனைவரும் ஒரே திசையில் பயணம் செய்பவர்கள். நம்பிக்கையின் ஒன்றுபடுத்தும் சக்தி வரலாற்றிலும் தெளிவாகக் காணப்படுகிறது. அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது நடந்த ஸ்டோன்ஸ்ரிவர்போர் (1862) இதற்கு ஒரு தெளிவான உதாரணமாகும். யூனியன் மற்றும் கான்ஃபெடரேட் படைகள் ஒருவருக்கொருவர் எதிராகப் போராட தயாராக இருந்த இரவில், இரு தரப்பினரும் "Home Sweet Home" என்ற பாடலை இசைத்தனர். அந்தப் பாடல், ஆயிரக்கணக்கான வீரர்களின் உள்ளங்களில் ஒரே ஏக்கத்தை "வீட்டிற்குத் திரும்பவேண்டும்" என்ற ஆசையை எழுப்பியது. எதிரிகளாக நின்றவர்கள் கூட, அந்தப் பொதுவான நம்பிக்கையில் ஒரு கணம் ஒன்றிணைந்தனர்.

கிறிஸ்துவில் கிடைக்கும் நித்திய நம்பிக்கையை நெறியுடனும் அன்புடனும் அறிவிக்க திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது. "ஒரு உடலும் ஒரு ஆவியும், ஒரே நம்பிக்கையும்" என்ற உண்மைகளை நெஞ்சில் பதித்து, தாழ்மையோடும் அன்போடும் திருச்சபை ஒன்றாய் நடந்தால், இந்த உலகிற்கு கடவுள் நினைத்த கிறிஸ்துவின் மகிமையைத் தெளிவாக க்காட்டும் சாட்சி ஆகும் .உலகின் பிரிவினைகளுக்கு மத்தியில் நாம் இறை ஒன்றிப்பை வெளிப்படுத்தும் சாட்சிகளாக வாழ்வோம். இந்த ஒரே நம்பிக்கை நமக்கு துன்பங்களில் பலத்தையும், சோதனைகளில் உறுதியையும், மரணத்திற்குப் பின்னும் மகிமையையும் தருகிறது. ஆகவே, இந்த இறை ஒன்றிப்பில் தொடர்ந்து நிலைத்திருப்போம்; அது நம்மை என்றென்றும் கிறிஸ்துவோடு இணைத்து நடத்தும்.

திரு. J. சாமுவேல் நேசராஜ்

நாள் : 5

ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு

செக். 14: 6-9 மத். 28: 16-20

திபா. 100

" . . . தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத். 28: 19).

இன்றைய திருச்சபை மற்றும் சமூக சூழ்நிலைகளில் 'Oneness' அல்லது ஒற்றுமை என்பது, ஒரே சிந்தனை உடையோர், அடையாளம் உடையோர் மற்றும் அந்தஸ்து உடையோர் ஒருங்கிணைந்து வருவது அல்ல; மாறாக பல சூழலிருந்து, தங்கள் வேறுபாடுகளின் மத்தியில் ஒன்றிணைவது தான் உண்மையான ஒற்றுமை. ஆக, வேறுபாடுகளின் மத்தியில் ஒற்றுமையின் சாட்சியாக மாறுவதே திருச்சபையின் அடிப்படையாகும். அதை தான் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் 4-ஆம் அதிகாரத்தில் தெளிவுபடுத்துகிறார். இதில் பவுல் திருச்சபையின் அடிப்படையாக ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு, ஒரே தேவன் மற்றும் ஒரே தந்தை என்கிற ஏழு உண்மைகளைக் சுட்டிக்காட்டுகிறார். இன்று மிக முக்கியமாக திருச்சபையின் விசுவாச வாழ்வில் எத்தகைய ஒன்றிப்பு தேவை என்பதை எபே. 4: 5-ஐ அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம்.

1. உறுதியில் ஒன்றிணைவோம்:

கிறிஸ்தவ வாழ்வை ஒன்றிணைப்பது என்பது விசுவாசத்தில் உறுதியாயிருத்தல். சாதாரண நிலையில் இருக்கின்ற மனித வாழ்வில், விசுவாசம் என்பது ஒரு புதிய பார்வையை தருகிறது. கிறிஸ்தவ வாழ்வில் உறுதி என்பது கிறிஸ்து இயேசுவை மையப்படுத்தி இருத்தல் அவசியம். அநேக வேளையில் நம்முடைய உறுதியான விசுவாசம் என்பது கிறிஸ்துவை தாண்டி, நம்முடைய பாரம்பரியம், திருச்சபை கோட்பாடுகள், திருச்சபைப் பிரிவுகளை மையப்படுத்தி இருக்கிறது. ஆனால் கிறிஸ்து இத்தகைய கலாச்சார சிந்தனைக்கு அப்பாற்பட்டவர் என்பதை நாம் உணர வேண்டும். அவருடைய சிந்தை ஒரு அன்பின் உறுதிப்பாடு. அத்தகைய அன்பின் உறுதியை நம்மிலும் எதிர்பார்க்கிறார். பவுல் அதை எபே. 4: 2-ல் தெளிவாக உணர்த்தும் போது மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி எனக் கூறுகிறார். எபே. 4: 5-ல் குறிப்பிடுகிற ஒரே நம்பிக்கை என்பது ஒருமைத்தன்மையை சுட்டி நிற்பதல்ல, என்னுடைய அல்லது நான் சார்ந்தது மட்டும் உயர்ந்தது என்றல்ல, மாறாக நம்முடைய நம்பிக்கையின் உறுதியை அன்பினால் எல்லாரையும் ஏற்றுக்கொண்டு வாழ்வதாகும். இதுவே "ஒரே சரீரம்" என்கிற திருச்சபையின் அடிப்படை சிந்தனையை

நமக்கு உணர்த்துகிறது. இன்றைய திருச்சபைகளில் நம்பிக்கையின் வாழ்வு பல நேரங்களில் தனித் தன்மையும், ஒருமையும் மையப்படுத்தி. ஒற்றுமை என்கிற சாட்சியின் தன்மையை வெளிப்படுத்த தவறுகிறது. உறுதியில் ஒன்றிணைவோம் என்பது நம்பிக்கை வாழ்வில் அன்பை வெளிப்படுத்தி, ஒற்றுமையை கடைப்பிடித்து திருச்சபையை கட்டி எழுப்ப அழைக்கப்படுகிறோம்.

2. உறுதியில் ஒன்றிணைவோம்:

பவுல் மிக உறுதியாக சொல்வது, திருச்சபை உறவில் ஒன்றுபட வேண்டும். யூத கிறிஸ்தவர்கள், புற ஜாதி கிறிஸ்தவர்கள் என்கிற வேறுபாடு நிறைந்த சூழல்களில் பவுல் இத்தகைய உறவில் ஒன்றிணைப்பை வெளிப்படுத்துகிறார். எபே. 4: 5-ல் குறிப்பிடுகிற ஒரே திருமுழுக்கு, ஒரே ஆண்டவர் என்கிற சிந்தை உறவின் அடிப்படையை உணர்த்துகிறது. திருமுழுக்கு கிறிஸ்துவோடு ஏற்படுகிற உறவை மையப்படுத்துகிறது. இந்த உறவின் அன்பை நாம் பகிர்ந்து கொள்ளுகின்ற வேளையில் நாம் திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு ஏற்படுத்திக்கொண்ட உறவு முழுமையடைகிறது. அதே போன்று ஒரே ஆண்டவர் என்று சொல்லி நாம் அறிக்கை செய்கிற வேளையில், ஆண்டவர் உறவின் அடையாளமான கிறிஸ்து என்பதை அது வெளிப்படுத்துகிறது. எனவே, ஒரே திருமுழுக்கு, ஒரே ஆண்டவர் என்று பறைசாற்றுகிற திருச்சபை எல்லா மனிதர்களோடும், இயற்கையோடும், சமூகத்தோடும் உறவை பலப்படுத்த வேண்டும். ஆக, உறவில் ஒன்றிணைய தூய ஆவியார் நம்மை அழைக்கிறார்.

ஒரு புதிய ஆண்டில் வாழ்க்கை பயணத்தைத் தொடர்கிறோம். இந்த நிலையில் தனி மனித, திருச்சபை, மற்றும் சமூக வாழ்வில் ஒரு ஒன்றிணைப்பை ஏற்படுத்த முயற்சிப்போம். அதற்கு ஒரு ஆழமான ஒன்றிணைப்புத் தன்மை (Solidarity) தேவை. இது நம்மில் ஒரு ஆழமான ஒன்றிணைப்பை ஏற்படுத்த உதவுகிறது. எப்படியெனில் நம்மில் இருக்கின்ற பகைமை, கருத்து வேறுபாடுகள், அடையாள வேறுபாடுகள், மத்தியிலும் நம்மை ஒன்றிணைக்கிறது. இதை இயேசு கிறிஸ்துவும் தம் வாழ்வினூடாய் நமக்கு மாதிரியாய்க் காண்பித்தார். கிறிஸ்து சுட்டிக்காட்டிய அன்பையும், உறவையும் மையப்படுத்தி ஒன்றிணைப்பை உருவாக்குவோம். புதிய ஆண்டில், புதிய உறுதியோடு உறவுகளை, ஒன்றிணைக்க முயல்வோம்.

அருள்திரு. R. ஜெகன்

நாள்: 6

ஆண்டவரும் தந்தையுமானவர் ஒருவரே
One Lord and One Father

1 அர. 8: 56-60 மத். 5: 44-48

திபா. 148: 7-13

"எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே (எபே. 4: 6)

நம்முடைய விசுவாசத்தின் அடிப்படை என்னவென்றால், நமக்கு ஒரே ஒரு கடவுள் இருக்கிறார், அவர் நம் அனைவருக்கும் தந்தையாக இருக்கிறார். பவுல் அப்போஸ்தலன் எபேசியர் நிருபத்தை எழுதும்போது அவர் சிறையில் இருந்தார். அக்கால சபையில் யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையே பெரிய பிரிவினை இருந்தது சுவாச்சாரம், உணவு, பழக்கவழக்கங்கள் எல்லாம் வேறாக இருந்தன. அந்தச் சூழலில் தான் பவுல் ஒரு புரட்சிகரமான இறையியல் உண்மையை முன்வைக்கிறார் தமக்கு இருப்பது பல கடவுள்கள் அல்ல, ஒரே தந்தை எனவே நாம் அனைவரும் ஒரே குடும்பம். இன்று நம்முடைய திருச்சபைகளிலும் சாதி, அந்தஸ்து, இனம் போன்ற பிரிவினைகள் உள்ளன. இந்தச் சூழலில், இந்த வசனம் நமக்கு மூன்று முக்கிய இறையியல் பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறது.

1. அவர் எல்லாருக்கும் மேலே இருக்கிறவர் (The Theology of Transcendence - Above All)

இது கடவுளின் Transcendence *(எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலை) என்று அழைக்கப்படுகிறது. கடவுள் நாம் உண்டாக்கிய சிலையோ அல்லது தம் கற்பனையின் வடிவமோ அல்ல. அவர் படைப்புகளுக்குக் கட்டுப்படாதவர் 1 அர. 8: 27-ல் சாலொமோன் கேட்பது போல, தேவன் மெய்யாகவே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே என்று வியக்கிறார். சூரியனை எடுத்துக்கொள்ளுங்கள் அது பூமிக்கு மிகத் தொலைவில், எல்லாவற்றிற்கும் மேலே இருக்கிறது. அதை தம்மால் தொட முடியாது, ஆனால் அதன் ஒளி இல்லாமல் பூமியில் உயிர் வாழ முடியாது. அதைப்போலவே, கடவுள் உன்னதமாவைர், பரிசுத்தர் நம்முடைய சிறிய பிரச்சனைகள், அரசியல் அல்லது உலகக் காரியங்கள் அவரைக் கட்டுப்படுத்தாது, சில நேரங்களில் நாம் கடவுளை நம்முடைய பாக்கெட்டில் வைத்துக்கொள்வது போல, நம்முடைய சுயலாபத்திற்காக பயன்படுத்துகிறோம். ஆனால், அவர் எல்லாருக்கும் மேலானவர் என்பதை உணரும்போது, நமக்கு பயபக்தியும் ஆராதனை மணநிலையும் வரும். ஒரு குடும்பத்தில் தந்தை அல்லது தாய் எப்படி தலைமை தாங்குகிறாரோ,*

அப்படியே இந்த உலகம் முழுவதற்கும் அவர் ஒருவரே தலைவராக இருக்கிறார். அவருடைய அதிகாரத்திற்கு இணையானது எதுவுமில்லை.

2. எல்லார் வாயிலாகவும் செயல்படுகிறார், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவருமாயிருக்கிறார்: (The Theology of Immanence-Through All and in All)

இது கடவுளின் immanence (உள்ளுறைந்து இருக்கும் நிலை). உன்னதத்தில் இருக்கும் அதே கடவுள், நமக்குள்ளும் இருக்கிறார். அவர் ஒரு பார்வையாளர் மட்டுமல்ல, அவர் நமக்குள் இருந்து செயல்படுபவர். அது மட்டுமல்ல கடவுள் தம் படைப்புக்குள் நெருக்கமாக இருக்கிறார். ஒரு பெரிய வீட்டில் பல மின்விளக்குகள், மின்விசிறிகள், குளிர்சாதன பெட்டிகள் இருக்கலாம். அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலையைச் செய்யலாம். ஆனால் அவற்றுக்குள் ஓடுவது ஒரே மின்சாரம் தான். அதுபோலவே, சபையில் ஒருவர் பாடுகிறார், ஒருவர் பிரசங்கிக்கிறார், ஒருவர் ஊழியம் செய்கிறார். ஆனால் எல்லார் மூலமாகவும் செயல்படுவது ஒரே ஆவியார்.

இன்று அநேகர் நான் செய்வதுதான் பெரிய ஊழியம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இறையியல் என்ன சொல்கிறது? கடவுள் எல்லார் மூலமாகவும் செயல்படுகிறார். ஒரு ஏழை விதவையின் ஜெபத்திலும் அவர் இருக்கிறார், ஒரு பெரிய போதகரின் பிரசங்கத்திலும் அவர் இருக்கிறார். இதை உணர்ந்தால் சபையில் போட்டி இருக்காது. ஒரு தகப்பன் அல்லது தாய் தன் பிள்ளைகளுக்கு எவ்வளவு நெருக்கமாக இருப்பாரோ, அவ்வளவு நெருக்கமாக கடவுள் இருக்கிறார். அவர் நமக்குள் வாசம் பண்ணி, நம் மூலமாகத் தம்முடைய திட்டங்களை இந்த பூமியில் நிறைவேற்றுகிறார் நாம் தனியாக இல்லை, பரலோகத் தந்தை நமக்குள் இருக்கிறார்.

3. ஒரே கடவுளும் தந்தையுமானவர்: (The Theology of Adoption & Imago Dei)

இதுவே கிறிஸ்தவத்தின் அடிப்படை. நாம் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, நாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மத்தேயு 5:44-48-ல் இயேசு ஒரு சவாலை விடுகிறார். உங்கள் பிதா பூரணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரணராயிருங்கள். அந்த பூரணம் எதில் இருக்கிறது? எதிரிகளையும் நேசிப்பதில் இருக்கிறது. அன்பான தந்தையின் சாயலை நாம் எப்படி சபைகளில் ஒருங்கிணைப்பது? என்ற கேள்வி உள்ளது. இதற்கு பதில் சகோதரத்துவம் (Brotherhood based on Fatherhood). ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்குள் சண்டை வரலாம். சொத்து தகராறு வரலாம். ஆனால், அவர்கள் ஒரே தகப்பனின் பிள்ளைகள் என்ற உண்மையை மாற்ற முடியாது தகப்பனுக்காக அவர்கள் ஒன்றாக மேடையில் நிற்பார்கள். இன்று சபைகளில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நாம் ஒரே அப்பாவின் பிள்ளைகள். நம்முடைய பரலோகத்

தந்தைக்காக நாம் வேற்றுமைகளை மறந்து ஒன்றிணைய வேண்டும். எல்லாருக்கும் ஒரே தந்தை என்றால், நாம் அனைவரும் ஒரே குடும்பம் குடும்பத்தில் பிள்ளைகள் சண்டையிட்டுக் கொண்டால் அது தந்தைக்கு வருத்தம் அளிக்கும். சபையில் பிரிவினைகள் இருப்பது கடவுளின் இதயத்தை நோகடிக்கும். தம்மிடம் இருக்கும் வேற்றுமைகளை மறந்து, ஒரே தகப்பனின் பிள்ளைகளாக நாம் ஒன்றுபட்டு வாழ்வதே. நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்கான உண்மையான சாட்சி

இன்றைய தியானம் நமக்கு உணர்த்துவது இதுதான் கடவுள் பெரியவர் (Above All). எனவே அவரை பயத்தோடு ஆராதிப்போம். கடவுள் நமக்குள்ளே இருக்கிறார் (In All). எனவே பிறரைத் தாழ்வாகப் பார்க்க வேண்டாம்; அவர்களுக்குள்ளும் இருக்கிறார். கடவுள் நம் தந்தை (Father of All), எனவே நாம் அனைவரும் சகோதரர் சகோதரிகள். இறைவனின் மேன்மையை போற்றுவோம், இறைவனின் அண்மையை உணருவோம், இறைவனின் தன்மையாகிய அன்பையும் ஒற்றுமையையும் நம் வாழ்வில் வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. J. ஜான் லெனின்

நாள் : 7

திருமுழுக்கில் அருளப்படும் கடவுளின் கொடை
God's Gift Given in Baptism

எரே 1: 4-9 மத். 25: 14-18

திபா. 131

கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது (எபே. 4: 7)

புதிய ஆண்டின் நிறைவாக பரிசுகளை ஒவ்வொரு நாளும் தியானத்தின் வழியே நாம் பெற்று வருகிறோம். பரிசுகளை பெறுவது மனித மனம் விரும்புகிற விருப்பம். அந்த ஆன்மீக பரிசுகள் கிறிஸ்துவின் கிருபையால் தேவனுடைய ராஜ்யம் மண்ணிலே கட்டப்பட எல்லோருக்கும், அவனவனின் கிரியைகளுக்கு தக்கதாய் அருளப்படும் கடவுளின் ஈவு. அப்படியே ஒரே கடவுள், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு என ஆன்மீக ஈவுகள் அருட்கொடையாக அருளப்படுகின்றன. ஆனால், ஆன்மீக அருட்கொடைகளின் எதிர்பார்ப்பை நாம் பல நேரங்களில் நிறைவேற்ற மறந்துவிடுகிறோம். அதை ஞாபகப்படுத்த ஒரு எளிமையான கதையை விடுக்கிறேன்.

கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான "மாவேள் ஆய்" மன்னனை பற்றிய தகவல் இது. ஒருநாள் வறுமை, பசிபிணியால் வாடிய புலவன் ஒருவன் பொருள்வேண்டி ஆய் மன்னனிடம் வந்தானாம். மன்னனிடம், புள்ளினங்கள் ஈயும் நொறுங்கிய தானியங்கள் கிடைக்குமா? எனக் கேட்டான். அவன் நிலையையும் வறுமையையும் உணர்ந்த மன்னன் அவருக்கு ஒரு "கடா யானையை" (ஆண் யானை) பரிசளித்தான். ஆம்! ஆண் யானை அரச சொத்து, அதை பராமரிக்க அரசு மானியம் வழங்கும். இதனால் வறுமையிலிருந்து அக்குடும்பமே தழைக்கும்படி வழிசெய்தான் மன்னன். இறப்போருக்கு இப்படி எல்லாவற்றையும் ஈவதும் தவறு என மன்னனின் ஆலோசகன் சுட்டிக்காட்ட அவனுக்கு ஆய் மன்னன் அளித்த பதில் "இம்மைக்கு செய்தென்ன மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அல்லேன்" என்றானாம். அன்பர்களே, பரிசுகள் வழங்கப்படுவது மறுமைக்குரிய வாழ்வை எதிர்நோக்கி மட்டுமல்ல, இம்மைக்குரிய வாழ்வில் கடவுள் இராஜ்யம் கட்டப்பட. இந்த எதிர்பார்ப்போடுதான் கிறிஸ்துவின் ஈவு அவனவனுக்கு வரமாக, பரிசாக, தாலந்தாக அளிக்கப்படுகிறது. இந்த அருட்கொடைகளின் சாராம்சத்தை சுருக்கமாக திருமறையின் சான்றுகளோடு தியானிப்போம்.

1. தொடுதலும், திருமுழுக்கும்: *(எரேமியா 1: 9)*

கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயை தொட்டு... எரேமியா தீர்க்கனின் அழைப்பு தொடுதலுக்கு சான்றாக நமக்கு தரப்பட்டுள்ளது. திருமுழுக்குத் தொழுகையிலும் கூட தண்ணீரால் மனித உடலை தொட்டு தூய்மைப்படுத்துதல் ஒரு முக்கியமான செய்கையாக விளங்குகிறது. இந்த இறைத் தொடுதல்தான் எரேமியா தீர்க்கனுக்கு அருளப்பட்ட ஆன்மீக அருட்கொடை. இந்த சாதாரண தொடுதல் மிகப் பெரிய தூண்டுதலாக அமைந்து, பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், நாட்டவும், கட்டவும், ராஜ்யங்களை அசைக்கவும் எரேமியா தீர்க்கனை ஏற்படுத்தியது.

இதே நிகழ்வோடு தொடர்புடைய செய்தியை நான்கு நற்செய்தி நூல்களும் பதிவு செய்கின்றன. "இயேசுவானவர் திருமுழுக்கு பெற்று கரையேறுகையில் வானம் திறக்கப்பட்டு உண்டான கடவுளின் வார்த்தைகள்". ஆம், இந்த தூண்டுதலுக்கு பின்தான் கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் ஆரம்பம் என சுவிசேஷங்கள் நமக்கு விளக்குகின்றன. இந்த தொடுதல் கிறிஸ்தவர்களாகிய நம் எல்லோருடைய வாழ்விலும் அருளப்படும் ஆன்மீக அசாதாரண செயல்கள் செய்யவும், பிளவுகளை கடந்த ஒற்றுமையை நிலைநாட்டவும், கடவுளின் இராஜ்யத்தை இம்மையிலே நிலைநாட்டவும் என்பதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகம் வைத்துக்கொள்ளவே.

2. திருமுழுக்கு ஓர் எதிர்பார்பற்ற அன்பளிப்பு:

எதிர்பார்ப்பது கிடைத்தால் அதன் பெயர் "பதில்". ஆனால், நாம் எதிர்பாராவேளை நமக்கு கிடைப்பதுதான் அன்பளிப்பு. இதற்கு ஒரு சரியான சான்றுதான் மத்தேயு 25: 14-18 வரையிலடங்கிய திருமறைப்பகுதி. இந்த பகுதியில் சொல்லப்படும் உவமை கடவுளின் இராஜ்யம் ஓர் எதிர்பாராதவேளை வழங்கப்பட்ட தாலந்துகளை போன்றதாகும். அது எஜமானின் விருப்பம், பரிசு எல்லோருக்கும் உண்டு. இல்லை என்று சொல்ல யாருக்கும் இடமில்லை என்பதையே இந்த உவமை நேரடியாக சுட்டிக்காட்டுகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது போலவே ஆண்டவர் அருட்கொடைகளும் எல்லாருக்குமானது, எதிர்பார்ப்பற்றது. இன்றைய அரசியல் தலைவர்களின் பண்டிகை காலத்து பரிசுகளை நினைத்து பாருங்கள். இவை எதற்காக? எதையோ எதிர்பார்த்து தானே? ஆனால், மத்தேயு 5: 14-18 வரை கூறப்படும் கிறிஸ்துவின் உவமை எதிர்பார்ப்பின்றி தன் பணியாளர்களுக்கு தன் ஆஸ்திகளை வழங்கும் நல்ல எஜமானோடு ஒப்பிடப்படுகிறது. இந்த அன்பளிப்பை உண்மையோடு பெற்றுக்கொண்டால், தூய வாழ்வின் மீதான ஊக்கம், மகிழ்ச்சி மரியாதை

நேர்மையாய் வாழவேண்டும் எனும் மேலான எண்ணங்களை அது ஏற்படுத்தும். இன்றும் அன்பளிப்புகளை மட்டுமல்ல, அவமானங்களையும் பெருமையாகக் கருதும் மனிதர்கள் இருக்கத்தானே செய்கின்றனர்.

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார் அல்லார்முன் கோட்டி கொளல்" இதன் விளக்கம், அறிவற்றார் முன் அரிய பரிசுகளை தருவது சாக்கடையில் கொட்டிய அமிழ்தத்தை போன்றது. நாம் கிறிஸ்துவின் ஈவினால் பெற்ற திருமுழுக்கு என்னும் ஒப்பற்ற அருட்கொடையை எவ்வாறாக மதிக்கிறோம், எப்படி செயல்படுகிறோம்? புதிய ஆண்டில் புதிய தீர்மானங்களை எடுக்கும் நாம், இந்த ஆன்மீக அருட்கொடைகளை மனதில் கொண்டு ஒப்படைப்போடு செயல்படுவோம் என தீர்மானிப்போம். ஆமென்.

திரு. A. அஜித் ஞானசிங்

நாள்: 8

கிறிஸ்துவுக்குள் வளருதல்

Growing into Christ

நீமொ. 9: 10-12 யோவா. 17: 3-7

திபா. 119: 97-104

"உம் நியமங்களால் நான் நுண்ணறிவு பெறுகின்றேன் (திபா. 119: 104).

வாழ்க்கையிலே எல்லாவற்றிலும் வளர்ச்சி என்பது மிகவும் ஒரு முக்கியமான காரியம் ஆகும். அதுபோல நாமும் நமது ஆவிக்குரிய வாழ்க்கையிலே கிறிஸ்துவுக்குள்ளாக வளர்வது மிகவும் முக்கியமானது. கொடுக்கப்பட்டுள்ள வேத பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியிருக்கு எழுதிய நிருபம் 4 அதிகாரம் 13 ஆம் வசனத்திலே காணப்பட்ட வெவ்வேறான தாலந்துகள் மற்றும் அதற்குரிய பணிகளை பற்றி நாம் காண்கிறோம்.

1. ஒருமைப்பாட்டில் கிறிஸ்துவுக்குள் வளருதல்

நமது நாட்டைப் போல எபேசு திருச்சபையிலும் எபேசுவிலும் பலவிதமான சமயங்களும் கலாச்சாரங்களும் மொழிகளும் காணப்பட்டன. அவ்வகையான வேற்றுமையான ஒரு சூழ்நிலை அங்கே நிலவியது. நாம் வரலாற்றை திருப்பிப் பார்க்கும் பொழுது நாம் கண்டறிய முடிகிறது எபேசு ஒரு முக்கியமான ஒரு பட்டணமாக பல கலாச்சாரங்கள் சேர்ந்த ஒரு இடமாக அக்காலகட்டத்திலே காட்சியளித்தது. அவ்வகையான தன்மை எபேசு திருச்சபையிலும் அது காணப்பட்டது அதனால் அந்த திருச்சபை யூதர்கள் மற்றும் பல்வேறான புறஜாதிகளையும் அது கொண்டதாக இருந்தது. இவ்வகையான சூழ்நிலையிலே அப்போஸ்தலர் பவுல் இந்த கடிதத்தை அவர்களுக்கு எழுதுகிறார். அதுவும் குறிப்பாக நாம் காண்கின்ற இந்தப் பகுதியிலே அவர் ஒருமைப்பாட்டை மிகவும் அழுத்தி ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அவர் மக்களுக்கு காட்ட ஆசைப்படுகிறார்.

ஆகவே தான். இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் இருந்தே அவர் ஒருமைப்பாட்டை குறித்து மிகவும் தெளிவாக பேச தொடங்குவதை நாம் காண முடிகிறது. இந்த இடத்திலும் அவர் ஆலயத்திலே அவர்களுக்கு இருந்த வெவ்வேறான பணிகள் மற்றும் அதற்குரிய தாலந்துகளை பிரித்துப் பார்க்காமல் யாவையும் கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவின் திருச்சபைக்காக பயன்படுத்த பயன்படுத்த அதனால் கிறிஸ்துவுக்குள்ளாக அவர்கள் வளர அவர்களை ஏவுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் வேற்றுமை இல்லாத ஒரு ஒருமைப்பாட்டை இங்கு கூறவில்லை. ஆனால் வேற்றுமையிலும் ஒற்றுமை காணக்கூடிய ஒரு ஒரு முறைப் பாட்டை கொடுத்து அவர் இங்கு பேசுகிறார். சபையிலே வெவ்வேறு தாலந்துகளை உடையவர்களாக இருந்தாலும் அது வேற்றுமைக்கோ பிரிவினைக்கான ஒரு காரியம் அல்ல. வெவ்வேறான ஈவுகளை பெற்ற விசுவாசிகள் எல்லாரும் ஒன்று கூடி வந்து தங்கள் ஈவுகளினாலே சபையை கிறிஸ்துவுக்குள்ளாக இன்னும் வளர்க்க அவர்கள் அழைக்கப்பட்டனர்.

நாமும் நாம் தேவனாலே பெற்ற ஈவுகளை தேவனுக்காக பயன்படுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். பல வேளைகளில் நாம் தேவன் அளித்த ஈவை நமக்காக பயன்படுத்துகிறோம். ஆனால் தேவனுக்காக அவர் திருச்சபைக்காக தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக அத்தாலந்துகளை பயன்படுத்த நாம் அழைக்கப்பட்டு இருக்கிறோம். பல நேரங்களில் நமது தாலந்தை பற்றி நமக்கு தாழ்மையான ஒரு எண்ணம் இருக்கிறது. இன்னும் பல வேளைகளில் மற்றவர்கள் தாலந்தை குறித்து நமக்கு தாழ்மையான எண்ணங்கள் இருக்கிறது. அது போல் இல்லாமல் தேவனாலே வெவ்வேறான வேற்றுமையான ஈவுகளை தாலந்துகளை பெற்ற நாம் இங்கு எபேசியரில் காணுகிறது போல பிரிவினைக்கான ஒரு அடித்தளமாக அதை வைத்துக் கொள்ளாமல் வேற்றுமையில் ஒருமைப்பாட்டோடு நாம் கிறிஸ்துவுக்குள்ளாக சேர்ந்து வளர அழைக்கப்படுகிறோம்.

2. முழுமையாகக் கிறிஸ்துவுக்குள் வளருதல்

முழுமையாக நாம் கிறிஸ்துவுக்குள் வளரும்போது ஒருமைப்பாடு என்பது தானாக வருகின்ற ஒரு காரியமாக மாறிவிடும். ஏனென்றால் முழுமையாக கிறிஸ்துக்குள் நாம் வளர முயற்சி செய்யும்போது நாம் கிறிஸ்துவை போல மாற முயற்சி செய்கிறவர்களாக காணப்படுவோம்.

கிறிஸ்துவுக்குள்ளே வளர்கின்ற நான் கிறிஸ்துவை போல மாற முயற்சி செய்வது மிகவும் அவசியம் மற்றும் ஒரு கிறிஸ்தவனாக எல்லா இடத்திலும் எதிர்பார்க்கப்படுகிற ஒரு காரியமாக இருக்கிறது.

முழுமையாக கிறிஸ்துவுக்குள்ளாக நாம் வளர முயற்சி செய்யும்போது நம்முடைய குணங்கள் சிந்தனைகள் செயல்கள் யாவும் கிறிஸ்துவை போல மாற வேண்டும். சி. எஸ். லூயிஸ் தனது புத்தகத்தில் மோட்ச யாத்திரையை குறித்து அவர் பேசுகிறார். அதிலே பல்வேறு மக்கள் மோட்சத்தை நோக்கி பயணம் செய்கின்றனர் ஆனால் மோட்சத்தின் கதவுக்குள்ளாக செல்வதற்கு அவர்கள் பிடித்து வைத்து இருக்கின்ற அவர்கள் கெட்ட குணங்களை ஒவ்வொன்றாக விட வேண்டும். அவ்வாறாக அந்த கதையிலே ஒருவனிடம் பல்லி ஒன்று

அவன் தோள் மீது இருக்கிறது. அந்த மனிதரிடம் வந்த பல்லி நீ விட்டு விட்டால் மோட்சத்துக்குள்ளே போகலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த மனிதனோ பல்லியை தனது ஒரு பாகமாக பாவிக்கிற ஒரு நிலைமையில் அவன் இருக்கிறான். அவ்வாறாக இந்த கதையிலே கடைசியாக பல்லியை அவன் விட்டுக் கொடுக்கும் பொழுது அவனுக்குள்ளாக ஒரு மாற்றம் அங்கே காணப்படுகிறது. அவன் புதுப் பொலிவு பெறுகிறான். அந்த பல்லி கூட ஒரு குதிரையாக மாறுகிறது. அவ்வாறாக, இருவரும் மோட்சத்துக்குள்ளாக பிரவேசித்தார்கள் என்று அவர் கதையை முடிக்கிறார். இவ்வாறாக நாமும் பல வேளைகளில் பல கெட்ட குணங்களை இது என்னுடைய குணம் என்று நாம் பிடித்து வைத்திருக்கிறோம். அதனாலேஅவ்கையான குணங்களையும் கூட நாம் கிறிஸ்துவுக்குள்ளாக முழுமையாக வளரும் போது மாற்ற முயற்சி செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள்ளாக வளருவது என்பது ஒரு இரவில் நடக்கும் ஒரு காரியம் அல்ல. அது நம் வாழ்நாள் முழுவதாக இருக்கும் ஒரு பயணமாகும். எனவே நாம் இந்த பயணத்திலே தேவனுக்குள்ளாக வளர அதற்கான காரியங்களை குறித்து யோசிக்க, அதை நாம் வாழ்விலே பிரதிபலிக்க, அதை நாம் வாழ்க்கை முறையாக மாற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் தாமே இந்த அழைப்பிலே நம்மை பலப்படுத்தி உறுதிப்படுத்துவராக.

திரு. J. ஜேக்கப் ஜெயபால் தேவதாஸ்

இறையன்பை எல்லோருக்கும் வெளிப்படுத்துதல்

(Unveiling God's Love to All)

தொநூ. 12: 1-7 — உரோ. 8: 31-39
திபா. 136 — யோவா. 15: 9-17

ஆபிராம் அந்நாட்டில் நுழைந்து செக்கேமில் இருந்த மோரேயின் கருவாலி மரத்தை அடைந்தார். அப்பொழுது கானானியர் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர் (தொநூ. 12: 6).

ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவியின் தந்தை ஒரு உயிரியல் ஆசிரியர். பூச்சிகளையும் புழுக்களையும் ஆராய்ச்சி செய்ய தன்வீட்டில் ஓர் அறையை ஒதுக்கியிருந்தார். மகள் வரைந்திருந்த ஓவியத்தை வகுப்பாசிரியர் பாராட்டியிருந்தார். தன் அப்பாவிடம் காட்டச் சென்றாள். பலமுறை ஓவியத்தை மகள் தந்தையிடம் காட்டியும் அவளது தந்தை அந்த ஓவியத்தை வாங்கி பார்க்கவில்லை. அழுதவாறே அறையைவிட்டு வெளியே வந்த மகள் அம்மாவிடம் சென்று "நான் ஒரு புழுப்பூச்சியாகப் பிறந்திருக்கக்கூடாதா? அப்படிப் பிறந்திருந்தால் அப்பா என் ஓவியத்தை வாங்கிப் பார்த்து என்னைப் பாராட்டிருப்பார்" எனக் கூறினார்.

அன்புக்கு ஏங்காத இதயம் இல்லை. அன்பை எதிர்பார்க்காத எவரும் இல்லை. மனிதன் வெளிப்படுத்தும் அன்பு குறுகிய வழியில் செல்லும். அதே நேரத்தில் கடவுளின் அன்பு பரந்தபார்வையில் விரிந்த வழியில் செல்லும். ஏனெனில் அன்பின் மொத்த இருப்பிடமே இறைவன்தான். அவர் வெளிப்படுத்தும் அன்பையே இறையன்பு என்பர். காரணம் கடவுள் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா. 4: 8). அவர் வெளிப்படுத்தும் இறையன்பு அற்புதமானது மட்டுமல்ல ஆழமானது. அது புனிதமானது மட்டுமல்ல தூய்மையானது. அது ஒருபோதும் சூழ்நிலையைக் கண்டு மாறாது. நாம் தோல்வியடையும்போது அவரது அன்பு நம்மை உயர்த்தும். நாம் விழும்போது அது நம்மை தூக்கிவிடும். அது அனைவரையும் தன்பக்கம் ஈர்க்கும் (எரே. 31: 3). அவர் நம்மை எப்போதும் அன்பு செய்வதால் நாம் அவரது அன்பிற்குரிய இறைமக்களாக இருக்கிறோம் (கொலோ. 3: 12). மதிப்புமிக்கதும் நிபந்தனையற்றதுமான அவரது இறையன்பு நம்மில் வெளிப்படுகின்றது. கொடுக்கப்பட்ட மறைப்பாடங்கள் வழி கடவுள் அனைவருக்கும் இறையன்பை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார் என இவண் சிந்திப்போம்.

1. பரந்த இறையன்பு: *(தொநூ. 12: 5)*

கடவுள் வெளிப்படுத்தும் அன்பில் கவர்ச்சியிருக்காது. ஆனால் கரிசனை மற்றும் மனதுருக்கம் இருக்கும். கடவுளின் அன்பு ஒரு கிராமமே உலகம் என்ற எண்ணத்திலிருந்து உலகம் முழுவதும் ஒரு கிராமம் அல்லது ஒரு குடும்பம் என வெளிப்படுத்தும். எங்கும் பரவலாகப் பேசப்படும் "உலகளாவியக் கிராயம் (Global Village)" என்ற சிந்தனையை ஆபிரகாமின் காலத்தில் கடவுளால் அறிமுகம் செய்யப்பட்டது என எண்ணத் தோன்றுகிறது. ஆபிரகாம் "ஊர்" என்கிற கல்தேயரின் நாட்டைவிட்டு, கானான் நாட்டுக்குச் சென்றார். மானிடம் தாங்கள் பற்றிக்கொண்டிருக்கும் தங்கள் மொழி, நிறம், இனம், இடம், சமுதாயம் என்ற குறுகிய எல்லைக்குள் நின்றுவிடாமல் இவைகளுக்கும் அப்பால் உலகம் முழுவதும் இறைவனின் குடும்பம் என்னும் பரந்த நோக்குடன் சிந்திக்கவேணடும். கடவுள் வெளிப்படுத்தும் பரந்த இறையன்புக்கு ஆபிரகாம் கட்டுப்பட்டார். இதற்கு சிந்தனைமாற்றமும் செயல் மாற்றமும் வேண்டும். ஆபிரகாம் தன் சிந்தனை மாற்றத்தால் "ஊர்" என்கிற ஒரு கிராமத்திலிருந்து உலகம் என்னும் ஒரு குடும்ப உறவுக்குள் நுழைகிறார். ஆபிரகாம் கடவுளின் அன்புக்குக் கட்டுப்பட்டதால். கடவுள் ஆபிரகாமுக்கு தரிசனம் தந்தார் (தொநூ. 12: 7அ). கடவுள் தந்த தரிசனத்தோடு புறப்பட்ட ஆபிரகாம் பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவாகக் கூடாரம் அமைத்தான் (தொநூ. 12: 8). பெத்தேல் என்பதற்கு "கடவுளின் வீடு" என்றும் ஆயி என்பதற்கு அழிவின் குவியல் என்றும் பொருள். வாழ்வும் அழிவும் நம்முன் வைக்கப்படும்போது, கடவுளில் பெற்ற சிந்தனை மாற்றத்தால் அழிவின் செயல்களை வாழ்வியல் படிகளாக மாற்றி முன்னேற அழைக்கப்படுகிறோம்.

கடவுளின் பரந்த இறையன்பில் ஆட்கொள்ளப்படும் நாம் நம்மை சார்ந்தவற்றில் அக்கறைக் கொள்ளாமல் பிறர் சார்ந்தவற்றின் மீது அக்கரை கொள்ளும்படி (பிலி. 2: 4) செயல் மாற்றம் பெற்று நாம் சந்திக்கும் மக்களிடம் குறைந்தபட்சம் ஒரு புன்னகையைக் கொடுப்போம். அயலாருடன் உரையாடி உறவுகளைக் கட்டியெழுப்புவோம். கவலையிலிருப்போரிடம் ஆறுதலாகப் பேசுவோம். பிறர் நலம்பேணி நல்லுறவோடு வாழ்வோம். "தான், தனக்கு" எனும் சுயவட்டத்திலிருந்து வெளியே வந்து "நாம், நமக்கு" எனும் பொதுவட்டத்துக்குள் வருவோம்.

2. பதிலாக நிற்கும் இறையன்பு: *(உரோ. 8: 32)*

தீவிரவாதி ஒருவர் தென்மேற்கு பிரான்சில் உள்ள பல்பொருள் அங்காடிக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் இறந்தனர். பேச்சுவார்த்தைக்குப்பின் பிணையக்கைதியாரில் ஒரு பெண் மகளைத் தவிர மற்றவர்களை விடுதலைச் செய்தார். தீவிரவாதி பிடித்து வைத்திருந்த

பெண்மகளின் ஆபத்தை உணர்ந்த காவல்துறை அதிகாரி அர்னால்ட் பெல்ட்ரேம் அவளுக்குப் பதிலாக தன்னைப் பிணைக் கைதியாக்கி அந்தப் பெண் மகளை விடுவிக்கச் செய்தார். அதற்குப் பிறகு நடந்த சண்டையில் அர்னால்ட் பெல்ட்ரேம் இறந்துபோனார். அர்னால்ட் பெல்ட்ரேமின் இந்தச் துணிச்சலான செயலைக் கேள்விப்பட்ட அவரது சபைப்போதகர், தம் இப்படியே "கடவுளும் சொந்த மகனென்றும் பாராமல் நம் அனைவரின் மீட்புக்காக ஒப்புக்கொடுத்தார்" (உரோ. 8: 32). கடவுளின் அன்பில் நிலைத்திருப்பவர் தன் விடுதலைக்கு மட்டுமன்றி பிறரின் மீட்புக்காகவும் அர்ப்பார்.

உண்மையான அன்பு எப்போதும் தியாகச் செயலுக்கு வழிவகுக்கும் ஏமி கார்மைக்கேல் கூறுவார். தியாகம் ஒரு சாதாரண நட்பு அல்ல/ மாறாக இன்னொருவருக்காக தன் உடமை, உறவு, உரிமை, வாய்ப்பு, பணி, மேன்மை அனைத்தையும் இழக்க முன்வருவதாகும். யோனத்தான் தாவீதை தன் உயிரைபோல நேசித்ததால் (1 சாமு. 8: 7) தனது அரசமேன்மை, அரண்மனை வாழ்வு மற்றும் தனது உயிரையும் இழந்தார். இதனால் தாவீது அரசர் "என் சகோதரனாகிய யோனத்தானே நீ எனக்கு வெகு இன்பாக இருந்தாய்" (2 சாமு. 1: 2, 6) எனக் கூறினார்.

நீடித்த அன்பின் அடையாளமாகக் கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். மனுக்குலம் பாவத்தில் வீழ்ந்ததால் அனைத்து மக்களிடமும் தமது அன்பை வெளிப்படுத்தும் கடவுள் தம் ஒரே மகனை அனுப்பி (யோ. 3: 16) மீட்டெடுத்தார். கடவுளில் வெளிப்பட்ட அன்பினாலே கிறிஸ்து அத்தனை பேருக்காகவும் இறந்தார். பலரது மீட்புக்காக ஒருவரின் இறப்பு தியாகத்தின் உச்சத்தில் நிற்கின்றது. நம் அனைவரின் பதிலாக சிலுவைச்சாவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்த இயேசுவின் தியாகச் செயலை நாம் மெய்யாகவே உணருவோமாயின், நம்மை அவர் சார்பில் உலகில் அர்ப்பணிக்கத் தயங்கமாட்டோம். இதற்காக நாம் மற்றவர்களுக்கு சாகவேண்டும் என்று அர்த்தமல்ல, மாறாக விளிம்பு நிலையிலிருப்போரை மையத்தை நோக்கி கொண்டுவர, குரலற்ற மக்களின் குரலாக நிற்க (Voice for Voiceless) முகவரியற்றவர்களுக்கு முகவரியாக மாற (Address for Addresless) இடமற்றவர்களுக்கு இடமாக (Place for Placeless) இருக்க கடவுள் நம்மை அழைக்கிறார். இவை போன்ற செயல்கள் வழி நாம் அனைவரும் பதிலாக நின்று இறையன்பை வெளிப்படுத்துவோம்.

3. பாசமான இறையன்பு: *(யோவா. 15: 15)*

திருமண வாழ்வில் ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஒரு தம்பதியினரிடம் திருமண மகிழ்ச்சியில் இருக்கும் நீங்கள் ஏதாவதும் சொல்ல விரும்புகிறீர்களா? என்று இன்னொருவர் கேட்க, "என்னதான் கணவன் மனைவிக்கிடையே இருந்தாலும் அன்புறவுடன் இருந்தாலும்

ஒருவருக்கொருவர் எதையாவது மறைக்கலாம்; ஆனால் நல்ல நண்பர்களிடம்தான் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளமுடியும்" என்று சொன்னார்கள்.

இயேசு கிறிஸ்துவை ஆயராகவும் குருவாகவும் ரபியாகவும் யோவான் நற்செய்தியில் அறிமுகப்படுத்திய ஆசிரியர் யோவான் சீடர்களை இயேசு கிறிஸ்துவின் நண்பராகக் காட்டுகின்றார் (யோ. 15: 14-15). கிறிஸ்து தம்மை "எஜமான்" எனக் கூறியிருந்தால் அவரைப் பின்பற்றுவோரை "அடிமை" அல்லது "ஊழியர்" என்றே அழைப்பார். அதேநேரத்தில் சீடர்களை "இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். உங்களை நான் நண்பர்கள் என்றேன்" (யோ. 15: 15) என சீடர்களிடம் கூறினார். நண்பர் ஒருவருடைய உணர்ச்சிகளுக்கு ஏற்றவர்; எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்பவர்; தேவையான நேரத்தில் தோள் கொடுப்பவர்; கீழே விழும்போது மட்டும் தூக்கிப்பிடிப்பவரல்ல, மாறாக கீழே விழாமலிருக்க கரிசனையுடன் தாங்கிப்பிடித்து அறிவுரைகளைக்கூறி நட்பை பெருக்கிக் கொள்கிறவர்; தீங்கு நினையாதவர்; தேவைக்கு மட்டும் பழகாதவர் எனக்கூறிக் கொண்டே போகலாம். இத்தனைப் பண்புகளையுடைய ஒருவரே நமக்கு நண்பராக இருப்பேன் என்கிறார். அவர்தான் பாசத்தில் பரிவில் அன்பில் நம்மில் வெளிப்படுகிறார். அனைத்து மக்களோடும் தோழமையுணர்வுடன் பாசமாய்ப் பழகுகிறார். அனைத்து மக்களின் நலனிலும் வளர்ச்சியிலும் அக்கரைக் கொண்டு, அவர்களைப் புரிந்தவாறே அவர்களுடன் உரையாடுகிறார். நட்புறவை வளர்த்தெடுக்கிறார். தந்தையிடம் பெற்றுக்கொண்ட அனைத்தையும் மறைக்காமல் சீடர்களிடம் (நண்பர்களிடம்) கூறுகிறார் (யோ. 15: 15). கடவுளின் அன்பைப் பாசமாய் வெளிப்படுத்தும் கிறிஸ்து எப்போதும் நட்புறவை வைத்துக்கொள்ள ஆர்வமாயிருக்கிறார். நாம் அவரின் நண்பராக இருப்பதற்காக அவரின் கட்டளைகளெல்லாவற்றிற்கும் உடன்பட்டு செய்தலை (யோ. 15: 14) அவர் நம்மில் எதிர்பார்ப்பார்க்கிறார் (நீதி. 27: 6). நாம் தேர்ந்தெடுக்கும் நண்பன் யார்? மது குடிப்பதற்கும், புகைப் பிடிப்பதற்கும், படம் பார்ப்பதற்கும் அழைத்து செல்பவரா? அல்லது தவறு செய்யும்போது கடிந்துரைத்து தீயவழியிலிருந்து திருப்பி தூய வாழ்வுக்கு நேராக நடத்துபவரா? பாசமான நட்புறவைத் தெரிந்தெடுத்து பாதகம் அற்றவர்களாய் வாழ கடவுள் அருள்செய்வாராக!

அருள்திரு. அறிவர். S. வில்சன்

திருவெளிப்பாட்டிற்கு மறுமொழி அளித்தல்

Responding to Revelation

எசா. 45: 18-25 *திப. 19: 1-7/ திவெ. 21: 22-27*
திபா. 24 *மத். 2: 1-12*

"வீட்டிற்குள் அவர்கள்போய் குழந்தையை அதன்தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள். நெடுசாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். (மத். 2: 11)

இவ்வுலக மானிடர்களாகிய நமக்கு அருள்நாதர் ஏதாவது ஒரு வகையில் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆனால் அதை உணர்ந்து கொண்டு அதற்கு நாம் கொடுக்கும் மறுமொழி என்னை என்பதை சிந்தித்து பார்க்கவே இத்தலையங்கம் அழைப்பை தருகிறது. நமக்காக மானிடராய் வெளிபட்டு எல்லா அடிமைத்தனங்களையும் நீக்கி, நம்மை அழைத்து, பராமரித்து, பாதுகாக்கும் அன்பு கடவுளுக்கு நாம் கொடுக்கும் மறுமொழி என்ன? திருமறை எப்படிப்பட்ட மறுமொழிகளை நமக்கு விளக்குகிறது என திருமறை பகுதியை மையமாக கொண்டு சிந்திப்போம்.

1. அழைத்தவருக்கு நம்பிக்கையின் மறுமொழி அளித்தல்: *(எசா. 45: 18-25)*

இப்பகுதி நமக்கு சுட்டிகாட்டும் கருத்து என்னவெனில், தேவன் வானத்தையும் பூமியையும் அற்புதமாக உருவாக்கினார். அவர் உலகத்தை வெறுமையாகவோ, சோதனைக்கு ஏமாற்றமாகவோ உருவாக்கவில்லை. மக்களுக்கு வாழ்விடமாகவும், நன்மையுடன் வாழும் இடமாகவும் அமைத்தார். இங்கு தேவன் மனிதர்களை நேரடியாக அழைக்கிறார். அவருடைய அழைப்பு அன்பின் செயலாகும். அவ்வழி உண்மையும் நீதியையும் காட்டுகிறார். எல்லாரும் அவரை வணங்கி புகழ்வார்கள். நம்பிக்கையோடு அவரை தேடுவார்கள்.

அவர் ஒரே தேவன் வேறு யாருமில்லை. அவர் நமக்கு தேவதிட்டத்தை ஏற்படுத்தியுள்ளார். அத்தகைய சிறந்த வாழ்வு வாழவே அழைப்பை தருகிறார். நாம் தேவ அழைப்பை ஏற்று, நம்பிக்கையுள்ள மறுமொழி அளிக்கவேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பு. அதை நிறைவேற்ற ஆயத்தமாய் இருக்கிறோமா? சிந்தித்து பார்க்க அழைக்கிறார்.

2. அர்ப்பணிப்போடு கடவுளைத் தேடிசென்று மறுமொழி அளித்தல்: *(மத். 2: 1-12)*

இப்பகுதியில் கிழக்கில் இருந்த வந்த ஞானிகள் நீண்ட பயணத்திற்கு பிற்பாடு ராஜாவை கண்டு வணங்க அரண்மனைக்குள் வந்தனர். ராஜா அங்கு இல்லை என்றதும் மறுபடியும் தேடி வழிநடத்தும் நட்சத்திரம் கண்டு பின் சென்றும் இறைவனை வணங்கினர். கண்டவர்கள் தாங்கள் கொண்டு வந்த சிறந்த பொருட்களை காணிக்கைகளாக அர்ப்பணித்து, விழுந்து வணங்கினர்.

இறையவர் நமது மறுமொழியாக வாழ்வின் அர்ப்பணிப்பையும், உண்மையான அர்ப்பணிப்பையும் நம்மில் விரும்பிகிறார். அதற்கான வழியையும் காட்டுகிறார். நம்மில் அர்ப்பணிப்பு வாழ்வு உண்டா? ஆழமாக சிந்தித்து நம்மை அர்ப்பணித்து இறையவர் விரும்பும் மறுமொழியாய் வாழ்வோம்.

3. அடிமைத்தனம் நீங்கி ஒளியாய் மறுமொழி அளித்தல்: *(திவெ. 21: 22-27)*

நம் வாழ்வில் விளக்காய் ஒளிபவர் நம் இறைவனே. தொடக்கத்திலே முதன்முதலில் ஒளியை உருவாக்கி அதனை நல்லது என கண்டவர். தமது மக்களை இருள் எனும் அடிமைதனம் நீக்கி ஒளியாய் மீட்கவே விரும்புகிறார்.

இப்பகுதி யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாட்டில் இறைவன் ஒளியாய் விளங்குவதை, வெளிப்படுத்துவதை தெளிவாக காணலாம். புதிய விண்ணகம், புதிய மண்ணகம் பற்றிய யோவானின் திருகாட்சி உண்டானது. அதற்கு அந்த பக்தன் ஒளியாய் மறுமொழிந்த தன்மையும் சிறப்புக்குறியது. கிறிஸ்து இயேசுவின் ஒளி நம்மில் வெளிபட்டால் இருளாகிய தீமை நம்மை விட்டு அகலும். உணர்ந்து பாவ அடிமைதனமாம் இருளை நம்மில் இருந்து நீக்கி ஒளியாய் மாறி மறுமொழியருள்வோம்.

செல்வி. G. **இன்வியா மல்ஜி**

இயேசுவின் திருமுழுக்கு அடையாளத்தையும் அருள்பணியையும் உறுதி செய்தல்

Baptism of Jesus: Affirmation of Identity and Mission

விப. 3: 1-15 *கலா. 4: 1-7*

திபா. 98 *மத். 3: 11-17*

அப்பொழுது, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது (மத். 3: 17).

தென்னிந்தியத் திருச்சபை திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரண்டையும் அருள் அடையாளமாக ; அதாவது திருவருட் சாதனங்களாக ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்விரண்டும் ஒவ்வொரு பற்றுறுதியாளரும் தமது பற்றுறுதி வாழ்வில் உறுதியாய் நிலைத்திருக்க துணை செய்கிறது.

திருமுழுக்கை சாதாரணமான சடங்காக புரிந்து கொள்ளாமல் அதின் நோக்கத்தை புரிந்து செயல்வடிவம் தருவது முதன்மையானது. இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு நீருக்குள் செல்லும் நிகழ்வு அல்ல; நீதிக்குள் நுழையும் நிகழ்வு. இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு வானத்தையும் பூமியையும் இணைக்கும் காட்சி. மாட்டின் லுத்தர் கூறும்போது, திருமுழுக்கு என்பது பழைய மனிதனை மூழ்கடித்து புதிய மனிதனை எழுப்பும் இறைப்பணி என்பார். பிரான்சிஸ் அசிசி கூறும்போது, நீரில் இறங்கிய கிறிஸ்து மண்ணில் மனிதனுக்கு விண்ணக வாசலை திறந்தார் எனக் கூறுவார். யோர்தானில் முழுக்கு முனிவர் யோவானால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெற்ற திருமுழுக்கு நிகழ்வுமூலம் தம்முடைய அடையாளத்தையும், அருட்பணியையும் உறுதிபடுத்தினார் என்று துணிந்து சொல்லலாம்.

பழைய ஏற்பாட்டில் மோசேக்கு கடவுள் தீப்பொறியில் தோன்றிய போது அவர் கடவுளின் அழைப்பை பெற்றார். அதுபோல புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கின்போது தூய ஆவியாரால் அழைக்கப்பட்டும் அபிஷேகமடைந்தும் தமது திருப்பணியை தொடங்கினார். இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு என்ன அடையாளத்தை எத்தகைய அருட்பணியையும் உறுதி செய்கிறது? என்று தியானிக்கும் போது,

1. உடன்படிக்கை அடையாளம்: *(விப. 3: 1-15)*

ராஜா செல்வந்தரின் மகன்; பாபு ஏழையின் மகன் இருவரும் பள்ளி பவரும் முதல் நண்பர்கள். பள்ளிக் கல்வி முடித்து கல்லூரிக் கல்வியும் முடித்து இருவரும் பணிகளுக்குச் செல்ல ஆயத்தப்பட்டனர்.

ராஜாவின் விருப்பப்படி Software நிறுவனத்தில் வேலை கிடைத்தது. பாபுவின் விருப்பப்படி பாபுவுக்கு அரசு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக பணியமர்த்தப்பட்டார். இருவருடைய பணிக்களங்களுக்கிடையே சுமார் 1000 கி.மீ. இடைவெளி தூரம். இருவரும் தம் பணிகளுக்கு புறப்படும் முன்பு ஒரு விருந்துக்கு ஆயத்தம் செய்தனர். விருந்தில் இருவரும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதாவது நாம் எப்போதும் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதே. அந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக இருவரும் ஒருவருக்கொருவர் வாடிப் போகாத ஒரு அழகான பிளாஸ்டிக் மலர்கொத்தை பகிர்ந்து கொண்டனர். தாங்கள் பகிர்ந்து கொண்ட மலர் கொத்தை இருவரும் தங்கள் இல்லத்தின் முதல் அறையில் மேஜையில் வைத்திருந்தனர். நாட்கள் உருண்டோடின. இருவருக்கும் திருமணமானது, பிள்ளைகள் பிறந்தனர் குடும்பம் மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்தது. திடீரென்று பாபுவுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. மருத்துவமனையில் பாபு அனுமதிக்கப்பட்டார். மருத்துவர் பரிசோதித்து சொன்னானர் இரண்டு Kidney-களும் செயலிழந்துவிட்டது உடனே இரண்டு Kidney-யையும் அகற்றி வேறு Kidney களை பொருத்த வேண்டும் என்றார்.

பாபுவின் குடும்பம் நடுத்தர குடும்பம். Kidney மாற்று அறுவை சிகிட்சைக்கு 15 இலட்சம் என மருத்துவர் கூறினார். செய்வது அறியாது வேதனையின் உச்சத்தில் பத்திரிகையில் புகைப்படம் மற்றும் குடும்ப விபரம் ஆகியவைகளை குறித்து Kidney தேவை என்று அறிவிப்பு செய்தார்கள். மறுநாள் காலையில் 1000 கி.மீ. தொலைவில் உள்ள ராஜாவின் கண்களில் இந்த அறிவிப்புச் செயதிபட்டது. அடையாளம் கண்டுகொண்டு மறுநாள் விமானத்தில் அம்மருத்துவமனைக்கு விரைந்தார். பாபுவுக்குத் தெரியாமல் மருத்துவரை சந்தித்தார். தன்னுடைய Kidney-ல் ஒ;னறை எடுத்து பாபுவுக்கு பொருத்தும்படியும் மேலும் மாற்று அறுவை சிகிட்சைக்கான 15 இலட்சம் பணத்தையும் மருத்துவ மனையில் கட்டினார்.

அறுவை சிகிட்சை வெற்றியாக முடிந்தது. மருத்துவ மனையிலிருந்து இல்லம் திரும்பும் நாள் வந்தது. மருத்துவர் ராஜாவை அழைத்துக் கொண்டு பாபுவின் அறைக்குச் சென்று நடந்த நிகழ்வுகளை வரிசைப்படுத்தினார். பாபு - ராஜா ஆகிய இருவரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ராஜா நாங்கள் இருவரும் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமான மலர் கொத்தை தன் பையிலிருந்து எடுத்து மருத்துவரிடம் காண்பித்து அதன் பின்னணியை விளக்கினார். மருத்துவரின் கண்களிலும் கண்ணீர் பெருகியது. மருத்துவர் உடன்படிக்கையை காத்துக்கொண்ட ராஜாவை பாராட்டி செலவில் பகுதியை தானும் பகிர்ந்து கொள்வதாகக் கூறி 7½ லட்சம் பணத்தை திருப்பி வழங்கினார். மூவரும் மகிழ்ச்சியோடு தங்கள் இல்லம் புறப்பட்டுச் சென்றனர்.

இந்நிகழ்வு நமக்குக் கற்றுத்தருவது; உடன்படிக்கை என்பது

அடையாளம் வழியாக உறுதி செய்யப்படவேண்டும் என்பது. இன்றைய பழைய ஏற்பாட்டு திருமறைப்பகுதி. கடவுள் இஸ்ராயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்வேன்; என்ற உடன்படிக்கையை உறுதி செய்ய மோசேக்கு கொடுத்த அடையாளம் தான் வெந்து போகாத எரியும் முட்செடி காட்சியாகும். யாவே கடவுள் இஸ்ராயேலரின் விடுதலைக்காக செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக மோசேக்கு தரும் காட்சிதான் இந்த தீப்பொறிக் காட்சி. அது யாவே கடவுள் இஸ்ராயேல் மக்களின் விடுதலைக்காக மோசேயோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளிப்பாடு. அடையானம். கடவுளின் மீட்புத்திட்டத்தை மனுமக்களில் நிறைவேற்றுவதற்காக தம் திருமைந்தன் இயேசு கிறிஸ்துவோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடையாளம் தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு. இதைத்தான் ஆண்டவர் முழுக்கு முனிவர் யோவானோடு சொல்லும்போது, இப்பொழுது விட்டுவிடும் கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை *(மத். 3: 15).*

அன்பர்களே, ஆண்டவரின் திருமுழுக்கு மட்டுமல்ல அவர் வழியில் நாம் பெற்றுவரும் திருமுழுக்கு என்றும் சாக்கிரமந்து, நமக்கும் ஆண்டவருக்கும் இடையே செய்துகொண்ட உடன்படிக்கையில் அடையாளம். அந்த உறுதியில் நம் பற்றுறுதி பயணத்தை மேற்கொள்வோம்.

2. விடுதலையின் அருட்பணி : *(மத். 3: 11-17)*

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு உடன்படிக்கையின் அடையாளத்தை உறுதி செய்வதோடு மட்டுமல்ல, அது விடுதலையின் அருட்பணியை உறுதி செய்கிறது. புகழ்பெற்ற ஜெர்மன் இறையியலாளர் கர்னல் பார்த் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றபோது அங்குள்ள ஓர் இறையியல் கல்லூரியைப் பார்வையிட்டார். அங்கு இறையியல் கற்றுக் கொண்டிருந்த மாணவர்களில் ஒருவர் கார்லி பார்த் அவர்களே, ஒரு இறையியலாளராக நீங்கள் கற்றுக்கொண்ட இறையியல் குறித்து ஒற்றை வாக்கியத்தில் கூற முடியுமா? என்று கேட்டார். அதற்கு கார்ல் பார்த் நான் கற்றுக்கொண்ட மிக முக்கியமான செய்தி இதுதான். இயேசு கிறிஸ்து என்னை நேசிக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் திருமறை அப்படித்தான் சொல்லுகிறது. (Jesus loves me this I know, For the Bible tell me so) என்று பதிலளித்தார். இந்நிகழ்வு நமக்கு கற்பிக்கும் பாடம் கார்ல் பார்த் என்ற இறையியலாளர் தான் கற்றுக்கொண்ட இறையியலின் சுருக்கத்தை ஒற்றை வாக்கியத்தில் உறுதி செய்வதை போன்று திருமுழுக்கு உறுதி செய்யும் அருட்பணியை ஒற்றை வார்த்தையில் கூறவேண்டுமாயின் அதை விடுதலை என்ற வார்த்தைக்குள் சுருக்கி விடலாம்.

ஆண்டவர் இயசே கிறிஸ்துவின் திருமுழுக்கின் வழியாக நமக்கு உறுதிப்படுத்தும் சுருக்கம் என்ன வென்றால் விடுதலை. அதாவது ஆவி ஆத்துமா சரீர விடுதலை வழியாக அருட்பணியை உறுதி செய்கிறது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு. இதைத்தான் ஆண்டவர் திருமுழுக்குப் பெற்று தண்ணீரை விட்டு வெளியேறினபோது வானம் திறந்து ஆவியானவர் புறா வடிவில் இறங்கி சொன்ன வார்த்தை என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் (மத். 3: 17) என்ற வானத்திலிருந்து வந்த குரல் உறுதி செய்கிறது.

ஆம்! விடுதலையின் விளைச்சல் கடவுளின் மகனாக, மகளாக வாழ்ந்து அருட்பணியை உறுதிச்செய்வது அதாவது கடவுளின் பிள்ளைகளாகவும், உரிமைப்பேறு உடையவர்களாகவும் வாழ்ந்து காட்டும் உறுதி (கலா. 4: 4-7) என்பதை பவுலார் கலாத்தியருக்கு விளக்குவார்.

திருமுழுக்கு என்னும் சாக்ரமந்தை பெற்றுக்கொண்ட நாமும் விடுதலையின் அடையாளமாக உறுதி செய்வதின் வெளிப்பாடாய் கடவுளின் உரிமைப்பேற்றின் மக்களாய் விடுதலை வாழ்வை அடையாளப்படுத்தி உறுதி செய்வோம்.

ஜான் நியூட்டன் (1725-1807) இளமையில் அடிமை வியாபார கப்பலில் பணியாற்றியவர். ஆப்ரிக்கர்களை மனிதர்களாக அல்ல பொருளாக கருதினார். கடவுளின் குரலை ஏற்காதவர். மனம்போல வாழ்ந்தவர். ஒருநாள் கடல் பயணத்தின் போது கடும் புயல் ஏற்பட்டது. மரணத்தின் நெருக்கடியை சந்தித்தார். அப்போது அவர் ஆண்டவரிடம் ஆண்டவரே, நீர் என்னை காப்பாற்றினால் என் வாழ்க்கை உமக்கே சொந்தம் என்று வேண்டினார்.

அந்த புயலில் அவர் அதிசயமாக உயிர் பிழைத்தார். அதிலிருந்து அவர் வாழ்வு புதிய வாழ்வானது. அவர் சொன்னார், "I once was lost, but now am found; was blind, but now I see" நான் அடிமையாக இருந்தேன் ஆனால் கிருபையால் விடுதலைப் பெற்றேன் அவர் எழுதிய பிரபலமான பாடல்தான் "Amazing Grace" என்ற பாடல். பின்னர் ஆங்கிலிக்கன் போதகராக பணியாற்றினார்.

ஆம்! விடுதலை வாழ்வில்தான் அருட்பணி உறுதி செய்யப்படுகிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு வெளிப்படுத்தும் அடையாளம் உடன்படிக்கை. கடவுளுக்கும் நமக்குமிடையே ஏற்படுத்தப்படும் இந்த உடன்படிக்கையை உறுதி செய்வது என்பது கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நிறைவேற்றுவது. மட்டுமல்லாது ஆண்டவரின் திருமுழுக்கு உறுதிசெய்யும் அருட்பணி, கடவுளின் உரிமை பேற்றின் மக்களாய் விடுதலை வாழ்வை அடையாளப்படுத்தி உறுதி செய்வது.

இவைகளை உணர்ந்து நாமும் நம் திருமுழுக்கு என்னும் திருவருள்சாதனம் வழியாய் கடவுளோடு உடன்படிக்கை மேற்கொண்டு ஆண்டவருக்கு ஏற்புடையதை செய்வோம். மட்டுமல்லாது கடவுளின் உரிமை மக்களாய் வாழ்ந்து விடுதலை வாழ்வை அடையாளப்படுத்தி அருட்பணி செய்வோம். இறையாளுகையை நமதாக்குவோம். ஆமென்.

அருள்திரு. S.M. டேனியல் தேவதாசன்

18.01.2026

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும்
இரண்டாம் ஞாயிறு & தீய நாட்டங்களுக்கு
அடிமையாவதிலிருந்து விடுதலையைக் கண்டடையும் ஞாயிறு

சங்கிலியை உடையுங்கள்: தீய நாட்டங்களுக்கு அடிமையாவதிலிருந்து விடுதலையைக் கண்டடைதல்

Break the Chain: Finding Freedom from Addictions

தானி. 1 : 8-21 *கொலோ. 3: 1-11*
திபா. 1 *மாற்கு 5: 1-21*

"இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள்" (கொலோ. 3: 2).

எது ஒன்று மீண்டும் மீண்டும் வேண்டும் என்ற அடங்காத உணர்வை உருவாக்குகிறதோ, அதை போதை எனலாம்.

Alcoholism, Tobacco Addiction, Drug Addiction, Video Game Addiction, Mobile Addiction, Internet Addiction, Shopping Addiction, Gambling Addiction *எனப் பல நிலைகளில் தீய நாட்டங்கள் மனிதரில் காணப்படுகின்றன. இவற்றில்* Tea & Coffee Addiction, Food Addiction *போன்றவை எதிர் விளைவுகள் குறைவு என எண்ணினாலும் அளவுக்கதிகமாக ஒன்றில் கட்டுபாடுகளின்றி அடிமையாவதைப் போதை எனலாம். இப்பழக்கத்தில் கட்டாயம்* (Compulsion), *கட்டுப்பாடு* (Control) *ஏங்குதல்* (Craving), *விளைவுகள்* (Consequences) *என்ற தொடர் நிலைகள் அடங்கும். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி* "Addiction is a chronic (lifelong) condition that involves compulsive sealing and taking of a substate or performing of an activity despite negative or harmful consequences.

தீய நாட்டங்களுக்கு அடிமையாவது மிகக் கொடிய தளையாகும். அதை உடைப்பதே அவற்றிலிருந்து விடுதலை பெறுதலாகும். பழைய ஏற்பாட்டின் திருமறைப் பகுதியை மையமாகக் கொண்டு தீய நாட்டங்களுக்கு அடிமையாவதிலிருந்து விடுதலையைக் கண்டடைவது குறித்துச் சிந்திப்போம்.

1. கவர்ந்திழுக்கும் தளைகளை (சங்கிலியை) உடைத்தல் (Break the Chain of Temptation) : *(தானி. 1: 8)*

தீய நாட்டங்களை உருவாக்கும் பொருட்கள் எப்பொழுதும் கவர்ச்சியையும் மனித உணர்வுகளைத் தூண்டி அதன்பால் ஈர்க்கும்

தன்மையையும் கொண்டவை. தானி. 1: 8-இல் தானியேல் அரசனது சிறப்புணவினாலும் அவர் பருகிவந்த திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக்கொள்ளலாகாது என்று தம் உள்ளத்தில் உறுதிசெய்து கொண்டார் எனக் காண்கிறோம். அரச உணவு, திராட்சை இரசம் எப்போதும் அனைவரையும் கவரக்கூடியவை. ஒரு நாளாவது அதைச் சுவைத்திட வேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்தக்கூடியது. அதிலும் அடிமைகளாக வந்தவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் பாக்கியமாக அது அமைந்த பின்னும் அதினால் தீட்டுப்படலாகாதென்று அதின் சங்கிலியை உடைக்கின்ற தானியேலையும், நண்பர்களையும் நாம் காண்கின்றோம். இன்று இளையோர், சிறியோர் Mobile Phone, Games, போதை, மதுப்பழக்கம் போன்றவற்றை அனுபவித்திட, only one time எனக் கூறி அதின் கவர்ச்சியில் விழுந்திட அது பழக்கமாக, அடிமைத்தனமாகவே மாறிவிடுகிறது. கொலோ. 3: 2-இல் நீங்கள் பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் என்னும் அறிவுரை அடிமைத்தனத்தின் தளையை உடைத்திட நம்மை அழைக்கின்றது.

மாற்கு 5: 4-இல் கதரேனருடைய நாட்டில் கல்லறைகளிலிருந்து சங்கிலிகளினாலும் விலங்கினாலும் கட்டப்பட முடியாத அளவுக்கு தன்னைத்தானே காயப்படுத்திக் கொண்டிருந்த மனிதரைக் காண்கிறோம். அவரைத் தீமைக்கு உட்படுத்தி தன்னையே காயப்படுத்தி அழித்துக் கொண்டிருந்ததைவிட இன்று போதைப் பழக்கவழக்கங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒருமுறையேனும் அனுபவித்திட வேண்டுமென்று தூண்டுகின்ற கவர்ந்திழுக்கின்ற தீமைகள் சிலவேளை இம்மனிதனைப் போன்று தன்னையே சபித்தலும், குடும்பத்தை, பிறரைச் சிதைத்திடும் கொடுமையாக மாறலாம். எனவே, தானியேலும் அவர் நண்பரும் தளைகளை உடைத்ததைப் போல நாமும் செயல்படுவோம்.

2. தவறான நண்பர்களென்ற தளைகளை (சங்கிலியை) உடைத்தல் (Break the Chain of Wrong friends) : *(தானி. 1: 13)*

போதைப் பழக்கத்தை அறிமுகம் செய்திட ஒருவர் இல்லாவிடில் அப்பழக்கம் தானாக தொற்றிக்கொள்ள இயலாது. மது அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்கான குழுவாகச் செயல்படும் AA (Alcoholic Anonymous) The Golden Rule-ஆக 12 படிநிலைகளைக் கூறுகின்றது. இதில் நல்ல உறவுகள் அடிமைத்தளையிலிருந்து மீள வழிவகுக்கும் எனவும், பழைய நண்பர்கள் அல்லது போதையை அறிமுகம் செய்திடும் நண்பர்களிடம் பழகுவது மீண்டும் விழுந்திட வழிவகுக்கும் எனவும் கூறுகிறது. இன்று பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் தொழிற்கூடங்களில் இவற்றை ஒரு சங்கிலித் தொடராகவே காண இயலும். இவற்றை அறிமுகம் செய்யவும், முதல் முறை இலவசமாக கொடுத்துப் பழக்கவும், பின் அதிக விலைக்கு அதை வாங்க வைப்பது என மிகப் பெரிய சதித் திட்டங்களே செயல்படுகின்றன.

தானியேலும் நண்பர்களும், நேபுகாத்நேச்சாரின் அரசவையை அலங்கரிக்கப்போகும் வாலிபர்கள் குழுவிலேயே காணப்பட்டனர். எனினும் தங்களை அவ்வாலிபரிடமிருந்து பிரித்து அவர்களோடிணைந்து அரச உணவையும், திராட்சை இரசத்தையும் அருந்தாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொண்டனர்.

கொலோ, 3: 5-இல் பரத்தமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீயநாட்டம், பேராசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள் என்று பவுலடியார் அழைக்கின்றார். எனவே, தீமைக்கு நம்மை அழைக்கும் தீய நண்பர்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். ஸ்பானிஷ் (Spanish) மொழியின் ஒரு தத்துவம் உங்கள் நண்பர்களை எனக்குக் காட்டுங்கள். நீங்கள் யார் என்று நான் உங்களுக்கு சொல்கின்றேன் (Show me your friends and I will tell you who you are?) என்பதாகும். நீதிமொழிகள் 13: 20-இல் ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்குத் தோழனோ நாசமடைவான். சங்கீதம் 1: 1 - துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் எனத் தொடங்கும் வார்த்தைகள் நமக்கு எவ்வளவு எச்சரிப்பைத் தருகிறதென்று உணர்ந்து கொள்வோம். தீய நண்பர்களின் தளையை உடைத்து போதைப் பழக்கங்களிலிருந்து விடுதலை பெறுவோம்.

3. எதிர்மறை எண்ணங்களின் சங்கிலியை உடைப்போம் (Break the Chain of Negative Thoughts) : (தானி. 1: 17)

நன்மையைக் குறித்த நேர்மறை அறிவு, சங்கிலியை உடைத்து விடுதலையுடன் வாழ வழிவகுக்கும். இறைவன் கொடுத்த ஞானமும், அறிவும், சாமர்த்தியமும் நான்கு வாலிபர்களையும் தங்கள் வாழ்வில் நன்மையைக் குறித்த, எதிர்காலத்தைக் குறித்த நேர்மறை (postitive thoughts) எண்ணங்களை உருவாக்கி அவற்றின் மூலம் அரசருக்கே ஆலோசனை சொல்லும் அளவிற்கு உயர்வைப் பெற்றனர். ஆனால், அவர்களோடிருந்த பிரதானிகள் எதிர்மறை எண்ணத்தோடு, பொறாமை, எரிச்சல் எனத் தீமைக்கு உட்படுத்தி அழித்திடவும் முயற்சி செய்ததை நாம் காணலாம்.

தன்னைக் குறித்து, குடும்பத்தைக் குறித்து (மனைவி, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்) சபை, சமூகத்தைக் குறித்து எதிர்மறை எண்ணம் கொண்டு சந்தேகம், எரிச்சல், பொறாமை, பேராசை எனத் தீயச் சிந்தை போதை பழக்கத்தை உருவாக்கி தளைகளை ஏற்படுத்துகிறது. மனதில் துக்கமென்றாலும் போதை, மகிழ்ச்சியென்றாலும் போதை என்ற அடிமைத்தனத்திலிருந்து மீள இயலாமல் தவிக்கும் மனிதரும் உண்டு. நல் எண்ணங்கள் நல் உறவை உருவாக்கும்; நல் உறவுகள் மன அமைதியையும், உற்சாகத்தையும் தரும். கொலோ. 3: 8-இல்

இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள் என்கிறார் பவுலார்.

கொலோ. 3: 9, 10-இல் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள், பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு தன்னை படைத்தவரின் சாயலுக்கொப்பான பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் எனக் கற்பிக்கிறார். மாற்கு 1: 15-இல் லேகியான் தீமை சூழ்ந்திருந்த மனிதர் தன் தளைகளை விட்டுத் தெளிந்திருப்பதை மக்கள் கண்டனர். இயேசுவுடனான சந்திப்பு அவரைத் தெளிந்தவனாக மாற்றியிருந்தது.

இறைமகன் இயேசுவுடனான உறவு நம்மில் ஏற்படுத்தும் நேர்மறை எண்ணங்களை உணர்வோம், கல்வாரி நாதர் இயேசு நம் தளைகளை அகற்றி பெலன் அருள்வார் என நம்பி அவரையே அண்டிக் கொள்வோம். கவர்ந்திழுக்கும் தீமைக்குத் தூண்டும் சங்கிலியை உடைப்போம், தீய நண்பர்களுடனான சங்கிலியை உடைப்போம். எதிர்மறை எண்ணங்களால் ஏற்படும் தளைகளை உடைப்போம். போதைப் பழக்கங்களிலிருந்து விடுதலை பெறுவோம்.

அருள்திரு. முனைவர் J. டானியேல் ஜோசையா

பற்றுறுதியிலும் செயற்பாட்டிலும் ஒன்றிப்பு

Unity in Faith and Action

யோசு. 4: 1-11 *திப. 4: 32-37*
திபா. 67 *மாற். 6: 32-44*

நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் உயிருமாய் இருந்தனர். (திப. 4: 32)

ஒருமைப்பாட்டு ஞாயிறு என்பது கிறிஸ்தவத் திருச்சபைகளுக்கு இடையேயான ஒற்றுமையை முதன்மைப்படுத்துகின்ற சிறப்பு வழிபாட்டு நாளாகும். கொள்கைகள், இறையியல் கோட்பாடுகள், வழிபாட்டு முறைமைகள், ஆட்சி அமைப்புகள் மற்றும் கலாச்சார வேறுபாடுகள் காரணமாகக் கிறிஸ்தவத் திருச்சபை பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றது. கத்தோலிக்கத் திருச்சபை (Catholic Church) சீர்திருத்தத் திருச்சபை (Protestant Church) மற்றும் மரபு வழுவாத் திருச்சபை (Orthodox Church) ஆகியவை முதன்மையான பிரிவுகள் ஆகும். இந்த மூன்று முதன்மையான பிரிவுகளைத் தவிர உலகெங்கிலும் ஏறத்தாழ பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவப் பிரிவுகள் காணப்படுகின்றன. இத்தகைய திருச்சபைப் பிரிவுகளுக்கிடையே நிலவுகின்ற பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டு, இயேசு கிறிஸ்துவின் ஒரே திருவுடலாக இணைந்து செயல்படுவதே கிறிஸ்தவ ஒன்றிப்பு எனப்படுகின்றது.

பிரிந்து நிற்கும் கிறிஸ்தவத் திருச்சபைகள் தங்களுக்குள்ளே அதிக ஒற்றுமையை அடையவும், ஒன்று சேர்ந்து செயல்படவும் மேற்கொள்ளும் உலகளாவிய முயற்சிகளை கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் (Christian Ecumenical Movement) என்ற பெயரில் குறிப்பிடுகின்றோம். 1910-ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தின் எடின்பரோ நகரில் நடைபெற்ற அனைத்துலக நற்செய்தி அறிவிப்பு மாநாட்டிலிருந்து நவீன கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் தோன்றியதாகக் கருதப்படுகிறது. கடவுள் ஒருவரே, திருச்சபையும் ஒன்றே என்ற அடிப்படைக் கொள்கையிலிருந்துதான் இந்த ஒன்றிப்பு தொடங்குகிறது. ஒவ்வொரு திருச்சபையின் தனித்துவத்தையும் மதித்து, அதே நேரத்தில் கிறிஸ்தவப் பற்றுறுதியின் மையக் கருத்துகளில் ஒன்றிணைந்து, அதின் விளைவாக ஒற்றுமையை அடைவதே நிறைவான இலக்கு ஆகும்.

தம்மைப் பின்பற்றுவோருக்காக இயேசு கிறிஸ்து மன்றாடியபோது ஒன்றிப்பை முதன்மையாக்கினார். தாம் தந்தையுடன்

ஒன்றுபட்டிருந்ததைப் போன்று தம் அடியவரும் ஒன்றித்திருக்கவேண்டும் என்று ஏங்கினார். ஆண்டவரின் விருப்பத்தைத் தொடக்கக்கால திருச்சபையினர் இனிதே நிறைவேற்றினர். எனவேதான் அவர்கள்; இன்றைய திருச்சபைக்கு நல்ல மாதிரியாகத் திகழ்கின்றனர். தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள் தங்களிடையே நிலவிய பிரிவினைகளைத் தாண்டி, பற்றுறுதியினாலும், நற்செயல்களினாலும் எங்ஙனம் ஒன்றுபட்டு வாழ்ந்தனர் என்பதைத் தியானம் செய்யலாம்.

1. பற்றுறுதி ஒன்றிப்பின் வேர்

"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். ..." (திப. 4: 32)

ஒவ்வொரு மரமும் தனக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை தன் வேர் வழியாகப் பெறுவதைப் போன்று, திருச்சபை தனக்குத் தேவையான "ஒன்றிப்பு" என்னும் நல் ஊட்டத்தைப் பெற்றுக்கொள்ள "பற்றுறுதி" வேர் போன்று உதவுகிறது. தொடக்கக் காலத் திருச்சபை மக்கள் பல்வேறு பின்னணியங்களைச் சார்ந்திருந்தனர். மொழியாலும், இனத்தாலும், கலாச்சாரத்தாலும், பொருளாதாரத்தாலும் வேறுபட்டிருந்தனர். அவர்களுடைய வாழ்வு தூய ஆவியாரின் ஆட்கொள்ளுதலினாலும், திருத்தூதர்களின் ஆற்றல் வாய்ந்த அருளுரைகளினாலும் மாற்றுருவாக்கம் பெற்றது. கிறிஸ்தவ மதிப்பீடுகளின்படி வாழ்வதற்கு எல்லாவிதத்திலும் முயற்சி மேற்கொண்டனர். கிறிஸ்துவிடம் அவர்கள் வைத்திருந்த பற்றுறுதி அவர்களை இதயத்தால் இணையச் செய்தது. அத்துடன் அவர்களிடையே இருந்த எல்லா வேறுபாடுகளையும் புறந்தள்ளி, ஒருவரோடொருவர் உறவாடச் செய்தது. இதன் விளைவாக, இறைமக்கள் அனைவரும் ஒரே ஆன்மிகக் குடும்பமாய் இணைந்து வாழ்ந்து மகிழ்ந்தனர். எனவே தான், "நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்..." என நூலாசிரியர் லூக்கா நற்சான்று பகர்கின்றார். பற்றுறுதி நம் வாழ்விற்கு வேராக அமையும் போது, அனைவரையும் சகோதரராக மதித்து ஏற்றுக்கொள்கின்ற நல்லெண்ணம் உருவாகுகின்றது.

வாக்குத்தத்த நாட்டை உரிமையாக்கிக் கொள்ள ஆயத்தமாக இருந்த இறைமக்களை ஒருங்கிணைக்கவும், அவர்களைப் பற்றுறுதியில் ஒன்றிணைக்கவும் இறைவார்த்தையின்படி ஓர் அடையாளச் செயல்முறையைப் பின்பற்றினர். குலத்திற்கு ஒருவர் வீதம் 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் பிரதிநிதித்துவத் தெரிவு அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதற்கு ஓர் அடையாளமாகும். குருக்களின் பாதங்கள் நதியில் நின்ற இடத்திலிருந்து ஒவ்வொரு கல்லை எடுத்து அவர்கள் தங்குமிடத்தில் வைத்தனர். கடவுள் யோர்தான் நதியை அற்புதமாகப்

பிரித்ததை எதிர்காலத் தலைமுறையினர் அறியும் விதத்தில் ஓர் உறுதியான நினைவுச் சின்னத்தை உருவாக்குவதே முதன்மையான நோக்கமாகும். குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் கற்களைப் பற்றிக்கேட்கும் தருணத்தில் விடுதலையின் வரலாற்றைப் பகிரவும், பற்றுறுதியைப் பயிற்றுவிக்கவும் ஒரு வாய்ப்பை உருவாக்குகிறது. பன்னிருகற்கள் ஒற்றுமையைக் குறிப்பதுடன், ஒவ்வொரு குலமும் கடவுளின் பார்வையில் முதன்மையானது என்ற புரிதலையும் வழங்குகின்றது (யோசு. 4: 1-11). வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் ஆண்டவரை உறுதியாகப் பற்றிக் கொள்ளவேண்டும் என்பதையும், காலங்கள் கடந்தாலும், கடவுள் செய்த வல்ல செயல்களை நினைவுகூர்ந்து நன்றியுள்ள வாழ்வு வாழவேண்டும் என்பதையும், எத்தகையச் சூழலிலும் பற்றுறுதியிலிருந்து விலகிவிடக்கூடாது என்பதையும் அடையாளச் சின்னங்கள் நினைவூட்டுகின்றன.

கலிபோர்னியாவில் உள்ள முய்ர் காடுகளில் (Muir Forests); மிகவும் உயரமான செம்மரங்கள் (Redwood Trees) வளர்ந்து நிற்கின்றன. இந்த மரங்கள் 350 அடி உயரத்திற்கு மேலும் வளரும் திறன் பெற்றவை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்கின்ற விதத்தில் நீண்ட ஆயுள் உடையவை. இந்த மரங்களுக்கு ஆணி வேர் கிடையாது. அப்படியிருந்தும், பலத்த காற்று வீசினாலும், நிலநடுக்கம் போன்ற பேரிடர் நிகழ்ந்தாலும், இந்த மரங்கள் வீழ்ந்து போவதில்லை. இவைகளின் உறுதிக்கு அடிப்படையாக அமைவது, பக்கவாட்டு வேர்களின் தனித்தன்மையான செயல்பாடாகும். இந்த வகையான செம்மரங்களின் வேர்கள் பக்கவாட்டில் வளர்ந்துச் சென்று சுற்றியுள்ள மரங்களின் வேர்களுடன் முடிச்சு ஏற்படுத்திக்கொள்ளும். நாலாப் பக்கங்களிலும் நிற்கின்ற மரங்களின் வேர்களுடனும் முடிச்சு வழியாக நிலையான இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும். நிலநடுக்கத்தின் போதும், வேகமாக காற்று வீசும் போதும், அவை ஒன்றையொன்று பற்றிக் கொள்கின்றன. உறுதியுடன் தொடர்ந்து நிலைத்து நிற்கின்றன. கிறிஸ்தவப் பற்றுறுதி வாழ்வும் நம்மை ஆண்டவருடனும் பிறருடனும் ஒன்றிணையச் செய்கிறது. சவால்களை எதிர்கொள்ளவும், தடைகளைத் தாண்டவும் உத்வேகத்தை வழங்குகிறது.

2. நற்செயல் ஒன்றிப்பின் கனி

"... அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்" (திப. 4: 35)

மரம் தன் வேர் வழியாகப் பெற்றுக்கொள்கின்ற நல்ஊட்டத்தைப் பிறர் பயன்பாட்டிற்கென்று கனியாக வழங்குவதைப் போன்று, பற்றுறுதியில் வேர் கொண்டோர், நற்செயல்களைக் கனியாக

வழங்குகின்றனர். பற்றுறுதியால் ஒன்றிணைவோர் நற்செயல் செய்வதிலும் தங்களை ஒருவரோடொருவர் இணைத்துக் கொள்கின்றனர்.

தொடக்கக் காலத் திருச்சபையினர் பற்றுறுதியில் நிலைத்திருந்ததுடன் நில்லாமல் கிறிஸ்தவப் பற்றுறுதியைச் செயல் வடிவமாக்குவதிலும் ஆர்வம் காண்பித்தனர். தேவையில் உழல்வோருக்கு உதவும்படி நிலபுலன்களையும், வீடுகளையும் விற்க முன்வந்தனர். இறையன்பைப் பகிர்தல் வழியாக வெளிப்படுத்தினர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. உணவு உண்ணும்போதும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து உண்டனர் (திப. 2: 46). "தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை" என்று கூறும் விதத்தில் கருத்துடனும் கரிசனையுடனும் பகிர்ந்து வழங்கினர். அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றியதால் அவர்களுடையப் பகிர்தல் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்தது. நற்செயல் செய்வது மட்டுமல்ல, நற்பணியை நிறைவேற்ற பிறரையும் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்கு, யோசே மாதிரியாகக் குறிப்பிடப்படுகிறார். அவரை "ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்" என்று பொருள்படும் "பர்னபா" என்ற பெயரால் அழைத்து மகிழ்ந்தனர்.

பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்களுக்கு நற்செய்தி அறிவித்த ஆண்டவர் இயேசு அவர்கள் மீது பரிவு கொண்டு, உணவு வழங்க விரும்பினார். அவர்களிடம் இருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பெற்றுக்கொண்டு ஆசீர்வதித்து சீடர்களிடம் வழங்கினார். அவற்றை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதில் சீடர்கள் ஆர்வத்துடன் செயலாற்றினர். குறைவாக இருந்த உணவை இறைஆசியுடன் நிறைவாய் பகிர்ந்தபோது மனநிறைவான உணவு அனைவருக்கும் கிடைத்தது (மாற்கு 6: 32-44).

"உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்?" (1 யோவா. 3: 17) என்கிறார் திருத்தூதர் யோவான். "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்ற இறைவார்த்தை நம் உள்ளத்திலும் தொனிப்பதை உணரவேண்டும். கடவுளிடமிருந்துப் பெற்றுக்கொண்ட ஆசிகளை பகிர்ந்து வழங்குகின்ற பொறுப்பு நமக்கு உண்டு.

கல்கத்தாவில் ஒருமுறை பெரிய பஞ்சம் நேரிட்டது. அந்நேரம் தனது குழந்தைகளுடன் பசியால் வாடிக் கொண்டிருந்த ஒரு ஏழைப் பெண்ணிடம் அன்னைதெரசா ஐந்து கிலோ அரிசியைக் கொடுத்தார். அதை நன்றியுடன் பெற்றுக் கொண்ட அந்தப் பெண்மணி,அதில் பாதியை

எடுத்துக்கொண்டு அவசரமாக வெளியே போய்விட்டுத் திரும்பி வந்தார். சமைத்துச் சாப்பிடுவதை விட்டுவிட்டு எங்கே போய் வந்தாய்? என்று அவரிடம் அன்னைதெரசா கேட்டார். அதற்கு அந்தப் பெண்மணி, பக்கத்து வீட்டில் ஒரு பெண் இருக்கிறார். அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்றிலிருந்து பட்டினியாக உள்ளனர். என் பிள்ளைகளைப் போல் அவர் பிள்ளைகளும் அவரும் ஒரு நேரமாவது சாப்பிடட்டும் என்று எண்ணி, நீங்கள் எனக்குத் தந்ததில் பாதியைக் கொடுத்து விட்டு வந்தேன் என்றார். அடுத்திருப்போரின் தேவையை உணர்ந்த அந்தப் பெண்மணி அன்னை தெரசாவின் உதவியைப் பெற கரம் நீட்டியதுடன், அவருடன் இணைந்து நற்செயல் செய்யவும் கரம் கோத்தார். நாமும், கிறிஸ்தவப் பற்றுறுதியைச் செயல் வடிவமாக்கும் விதத்தில் நற்செயல் புரிய திருச்சபையாக ஒன்றிணைவோம்.

உலகத் திருச்சபை மன்றத்தின் சின்னத்தில் இடம் பெற்றுள்ள படகு போன்றது தான் நமது திருச்சபை. அதில் உள்ள சிலுவை பாய்மரமாகவும், திசைகாட்டியாகவும் அமைந்துள்ளது. உலகம் எனும் கடலில் திருச்சபை எனும் படகு, கிறிஸ்துவின் மீதுள்ள பற்றுறுதியுடன், கிறிஸ்துவின் அன்பைச் செயல்படுத்தும் எதிர்நோக்குடனும் பயணிக்கின்றது. வேற்றுமைகளின் மத்தியிலும், கிறிஸ்து காட்டும் வழியில், அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டு, முழு உலகிற்கும் அருட்பணியாற்றுவோம். இறைப்பெயரைப் போற்றுவோம்!

அருள்திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு

26.01.2026 இந்தியக் குடியரசு நாள்

ஒற்றுமையும் & ஒருங்கிணைவும்

Unity & Integrity

நெகே. 2: 11-18 *1 பேது. 2: 11-17*
திபா. 101 *மத். 5: 13-16*

"அவர்களும் வாரும் கட்டுவோம் என்றனர்; நற்பணி செய்யத் தங்களைத் தயார் செய்து கொண்டனர்." (நெகே. 2: 18)

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் *15* ஆம் தேதி இந்தியாவின் விடுதலை உலகிற்கு அறிவிக்கப்பட்ட பின் இந்திய தலைவர்கள் இணைந்து பல சமூக மற்றும் கலாச்சாரங்களை அடிப்படையாக கொண்ட மக்களை ஓர் கட்டமைப்பிற்குள்ளாக ஒருங்கிணைக்க எழுத்து வடிவில் சட்டங்களை இயற்றி உலகிற்கு தாங்கள் முழு குடியுரிமையுள்ள நாடு என்பதை *1950* ஜனவரி *26* ஆம் நாள் அறிவித்ததை நினைவுகூருகிறோம்.

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று கானானுக்குச் செல்லும் முன் ஆண்டவர் மோசே வழியாகச் சட்டங்களை வகுத்து இஸ்ரயேலர் தங்கள் விடுதலையின் நாட்டில் எப்படி இணைந்து வாழவேண்டும் என்கிற முறையை ஏற்படுத்துகிறார். இவ்விரு நிகழ்வுகளும் வரலாற்றில் மனிதன் எப்படி மற்றவர்களோடு இணைந்து வாழ வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்கும் அனுபவமாக உள்ளது. ஆகவே திருவார்த்தைகளின் அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ்வதைக் குறித்துத் தியானிப்போம்.

1. நாட்டின் வளர்ச்சியில் ஒற்றுமையும் ஒருங்கிணைவும்

(நெகே. 2: 11-18)

இந்திய நாடு என்பது வேற்றுமையில் ஒற்றுமை காணும் சமயச் சார்பற்ற நாடு. ஆனால் தற்காலச் சூழலில் நாட்டில் அமைதி சீர்குலைவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. குறிப்பாக மதத்தை அடிப்படையாகக் கொண்ட கலவரங்கள் அதிகரித்து வருகின்றன. திருச்சபைகளிலும் இந்தப் பிரிவினையின் தாக்கம் நாளுக்கு நாள் வலுப்பெறுகிற சூழல் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

"வேற்றுமையில் ஒற்றுமையை அடைவதற்கான நமது திறனே நமது நாகரிகத்தின் அழகு மற்றும் சாதனையாக இருக்கும்" என்கிறார் காந்தியடிகள்.

யூத வரலாற்றில் மன்னர் அர்த்தக்சஸ்தாவின் ஆட்சி காலத்தில் நெகேமியா சூசான் அரண்மனையில் பணி செய்யும் நாள்களில்

நெகேமியாவின் சகோதரர் அனானியும் யூதர்களும் நெகேமியாவைச் சந்தித்து சிறையிருப்பிலிருந்து நாடு திரும்பிய யூதர்கள் மற்றும் எருசலேமின் நிலையை விவரிக்கிறார்கள். அதன்பின் தன் நாட்டிற்கும் தன் மக்களுக்கும் உதவும் ஆவலில் நெகேமியாவும் அரசருக்கு தன் மக்களின் நிலையை விவரித்து நாட்டைச் சீரமைக்கும் உரிமையுடன் எருசலேம் நகருக்கு வருகிறார். இரவு நேரத்தில் நெகேமியா எருசலேமின் எல்லாப்பகுதிகளையும் பார்வையிட்டு இஸ்ரயேலருக்கு இணைந்து செயல்பட அழைப்பு கொடுக்கிறார். நெகே. 2:17 இல் "எவ்வித இழிநிலையில் நாம் இருக்கிறோம் என்பதையும், எருசலேம் பாழடைந்து கிடப்பதையும், அதன் வாயிற் கதவுகள் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதையும் நீங்களே பாருங்கள்! எனவே, இனியும் நமக்குச் சிறுமை வராதபடி, எருசலேமின் மதில்களைக் கட்டியெழுப்புவோம், வாருங்கள்" என்று தான் செய்யும் பணிக்காக மக்களை ஒருங்கிணைக்கிறார்.

இஸ்ரயேல் மக்களும் தாங்கள் வாழும் நாட்டின் வளர்ச்சிக்கான பணிக்கு வாய்ப்பு கிடைக்கிறபோது ஒன்றிணைந்து "வாரும் கட்டுவோம்" (நெகே. 2: 18) என்று நற்பணி செய்யத் தங்களைத் தயார் செய்து கொண்டனர். இந்நிகழ்வு நாட்டின் வளர்ச்சிக்காகவும் வளமைக்காகவும் ஒற்றுமையும் ஒருங்கிணைவுமுள்ள சமூகமாக மாற்றுருவாக்கம் பெற வேண்டும் என்கிற சிந்தனையை நம்மில் தூண்டுகிறது.

2. நல்லுறவில் ஒற்றுமையும் ஒருங்கிணைவும்: *(1 பேது 2:17)*

தற்காலச் சூழலில் உறவுகளிடையே பிணைப்பு குறைந்து கொண்டு செல்கிறது. உறவுகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் தவறுகளைப் பொறுத்துக்கொள்ளும் எண்ணங்களும் குறைவதால் குடும்ப அமைப்பு சிதைந்துள்ளதையும் காண முடிகிறது. Rick warren தனது "The Purpose Driven Life: What on Earth Am I Here For?" என்ற புத்தகத்தில் "தோழமை என்பது கருணையின் இடம், அங்கு தவறுகள் உள்ளே நுழைக்கப்படுவதில்லை. ஆனால் அகற்றப்படுகின்றன. நீதியை கருணை வெல்லும்போது தோழமை ஏற்படுகிறது" என்கிறார்.

தூய பவுலார் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் "கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (3: 28) என்கிறார். ஆனால் அண்மைக் காலச் செய்திகளை நாம் படிக்கின்றபோது சாதீய வேற்றுமையில் ஆணவக் கொலைகள் பல நடந்துள்ளன. மதத்தின் பெயரில் வன்முறைகள் நிகழ்கின்றன. நாம் அனைவரும் இறை உருவில் படைக்கப்பட்டிருக்க இறையன்பு அற்றவர்களாக வாழ்வது ஏனோ?

திருமறை நல்லுறவின் அடித்தளம் "அன்பு" என்பதை கற்றுக்கொடுக்கிறது. மத் 22: 37-இல் "உன்மீது அன்பு கூர்வதுபோல

உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக" என்று இயேசு கிறிஸ்து முதன்மையான கட்டளையாகக் கற்றுக்கொடுக்கிறார். இதனை தூய யோவான் குறிப்பிடுகிறபோது, நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம்; அதை நம்புகிறோம். கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர், கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார்" *(1 யோவா. 4: 16)* எனவும் கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர், தன் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை" *(1 யோவா. 4: 20, 21)* என்கிறார். தூய பேதுரு "எல்லாருக்கும் மதிப்பு கொடுங்கள்; சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்துங்கள்" எனக் கற்றுக்கொடுக்கிறார். திருமறை அன்பு நல்லுறவில் ஒன்றுபடச் செய்கிறது என்பதை கற்றுக்கொடுக்கிறது.

3.நற்சான்றில் ஒற்றுமையும் ஒருங்கிணைவும்: *(மத். 5: 16)*

மனிதனின் செயல்பாடுகள் தன்னலச் சிந்தையோடு காணப்படுகிறது. நான் செய்யும் செயல் என்னவென்று எனக்குத் தெரியும் நான் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று சுய சிந்தையில் மனிதன் மூழ்கி தனக்கான குறுகிய சூழலை உருவாக்கிக் கொள்கிறான். இதன் விளைவு தன் தேவைகளுக்காக மற்றவர்களின் இடையூறுகளை உணராமல் வாழுவதால் பலரின் இழிச்சொற்களுக்குக் காரணமாகிறோம் என்பதை உணர்வதில்லை. இத்தகைய பாங்குடைய மக்கள் இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் வாழ்ந்த சூழலை மத். *3: 7-12* வரையுள்ள திருமுழுக்கு யோவானின் கடிந்துரை நமக்கு விவரிக்கிறது. ஆகவே இயேசு கிறிஸ்து மலைப் பொழிவில் "உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" என்று மத் *5:16* -இல் கற்பிக்கிறார்.

தூய பேதுரு இதனை தமது நிருபத்தில் விவரிக்கின்ற போது "பிற இனத்தினர் நடுவில் நன்னடத்தை உடையவராய் இருங்கள். அவர்கள் உங்களைத் தீயவர்கள் என்று பழித்துரைப்பினும், உங்கள் நற்செயல்களைக் கண்டு, கடவுள் சந்திக்க வரும் நாளில் அவரைப் போற்றிப் புகழ்வார்கள்" *(1 பேது. 2: 12* என்று நம்மைச் சுற்றி வாழும் மனிதர்கள் நடுவில் நம் செயல்பாடுகள் மாதிரியாக அமைய வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய், ஒளியாய் இருக்கிறீர்கள்." என்று தான் தெரிந்தெடுக்கப்படுகிற நோக்கத்திற்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்கும் உப்பிற்கும், ஒளிக்கும் ஒப்பிட்டு நம்முடைய செயல்கள் வழியாய்ச் சான்று பகர்ந்து சமூகத்தில் ஒற்றிணைந்த மக்களாய் கனி கொடுக்க அழைக்கிறார்.

இந்தியக் குடியரசு நாளை மகிழ்வோடு கொண்டாடும் மக்களாகிய நாம் ஒற்றுமையும் ஒருங்கிணைவும் கொண்ட மக்களாக நாட்டின் வளர்ச்சியிலும், சமூக நல்லுறவிலும், நற்சான்றிலும் மாதிரியாய் விளங்க தூய ஆவியார் நம்மைத் தகுதிப்படுத்தி இறையரசுக்காக நம்மைப் பயன்படுத்துவாராக.

திரு. R. ஆரோன் ராபின்

ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு வழிநடத்துகின்றது

Sabbath Leads to the Fullness of Creation

தொநூ. 1: 31 - 2:3 *எபி. 4: 2-11*
திபா. 24 *மாற்கு 3: 1-6*

கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார். (தொநூ. 2: 3)

இறைவன் படைத்த இயற்கையின் அழகினை விவரிக்க தமிழ் அகராதியில் உள்ள சொற்கள் போதா. அனைத்தும் அத்துணை அழகு. பரந்து விரிந்த மலைத் தொடர்களும், பசுமைக் காடுகளும், வளைந்து நெளிந்து செல்லும் ஆறுகளும், அதனுள் துள்ளித் திரியும் மீன்களும், நீலக்கடலின் கண்கவர் காட்சியும், நீல வானத்தின் வரையறையற்ற அழகும் தன்னுள் அளவற்ற ஆச்சரியங்களைக் கொண்டுள்ளன. படைப்பின் முழுமையை கண்டு மகிழ்ந்து ஓய்ந்திருந்தார் கடவுள். அது அவருக்கு மனநிறைவினைத் தந்தது.

வழிப்போக்கர் ஒருவர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது சிறுவன் ஒருவன் அவரிடத்தில் வந்து, தனக்கு மிகவும் பசிக்கிறது என்றும், ஏதாவது இருந்தால் தரும்படியும் கேட்டுக் கொண்டான். அந்த வழிப்போக்கர் தன்னிடம் ஏழு பிஸ்கட் இருக்கின்றன என்றும், தனது பசியைப் போக்க அதில் ஒன்றை தான் எடுத்துக் கொள்வதாகக் கூறி மீதி ஆறையும் அவனிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் அந்த சிறுவன் வழிப்போக்கனைத் துரத்திச்சென்று அந்த ஒரு பிஸ்கட்டையும் பறித்துச் சென்றுவிட்டான். இதைச் சிந்திக்கும்போது என்ன தோன்றுகிறது? அந்தச் சிறுவன் நன்றி கெட்டவன் என்று தானே?

ஆண்டவர் ஆறு நாள்களை நமக்காகத் தந்திருக்க, ஓய்வுநாளையும் நாம் தட்டிப்பறிக்க எண்ணுகிறது எப்படி? ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு வழிநடத்த என்ன செய்ய வேண்டும்?

1. ஓய்வுநாளைத் தூயதெனக் கடைப்பிடிக்க வேண்டும்:

கடவுள் ஏழாம்நாளுக்கு ஆசிவழங்கி அதைப் புனிதப்படுத்தினார் (தொநூ. 3: 2).

ஓய்வுநாள் கடவுள் தமது பிள்ளைகளுடன் உறவாடுவதற்கென்று வேறுபிரித்த நாள். அதை பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி கட்டளையிட்டார். எப்படியெனில் நான்காவது சட்டமாக ஓய்வுநாளைத் தூயதாகக்

கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு என்று விப. 20: 8-இல் கூறுகிறார். ஆறு நாள்கள் பல இடங்களுக்கு செல்லுகிறோம். நமக்காக பிறருக்காக பணி செய்கிறோம். எனவே ஓய்வுநாளில் பரிசுத்த ஆலயத்தில், பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் ஒன்று கூட வேண்டும். ஒருவரை ஒருவர் பார்த்து மகிழவேண்டும். காரணம் ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், ஆண்டவரின் தூய நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணு, அப்படி எண்ணி செயல்படும் போது ஆண்டவர் பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்க செய்வார் (எசா. 58: 13, 14).

1924-ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிஸ் ஒலிம்பிக்கின்போது ஸ்காட்லாந்தை சேர்ந்த எரிக் லிடெல், 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தனது போட்டிக்கான நாள் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் என்பதை அறிந்தார். அவர் இடைவிடாமல் பயிற்சி பெற்றிருந்தாலும், அவரது நாடு உணர்வு ரீதியாகவும், நிதி ரீதியாகவும் அவரிடம் முதலீடு செய்திருந்தாலும், அன்று அவ் பந்தயத்தில் ஓட மறுத்துவிட்டார். இந்த ஒரு முறை மட்டும் ஓடுங்கள் என்று பலர் அவரிடம் கெஞ்சினார்கள். ஆனால் லிடெல் என்னால் முடியாது என்று சொல்லிவிட்டார். காரணம் ஓய்வுநாளை தூயதாய் ஆசரிக்க வேண்டும் என்ற எண்ணமே. ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு வழிநடத்திட நாமும் ஓய்வுநாளை தூயதாய் ஆசரிக்க வேண்டும்.

2. ஓய்ந்திருந்து இறைவார்த்தைகளைக் கேட்க வேண்டும்:

இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களென்றால் உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் (எபி. 4: 7).

இறைவார்த்தை வாழ்வின் மையம். அது நமக்கு நம்பிக்கை தருகிறது. வாழ்வின் நோக்கத்தை தெளிவுபடுத்துகிறது. வாழ்க்கை பயணத்தில் சரியான திசையைக் காட்டுகிறது. ஒரு சக்தி வாய்ந்த வழிகாட்டியாகவும் செயல்படுகிறது. மனமாற்றத்திற்கும், குணப்படுத்துதலுக்கும் நம்மை அழைக்கிறது. இறைவார்த்தையைக் கேட்பது மட்டுமல்லாமல், அதனைத் தியானித்து, நமக்குள்ளேயே சொல்லி, அதனை ஒரு பகுதியாக மாற்றி வாழ்வை அழகாய் அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிறுபருவம் முதலே இறைவார்த்தை மீது ஆர்வம் கொண்டவர். இயேசுநாதர் தனது பன்னிரண்டாம் வயதில் தனது பெற்றோரால் பஸ்கா பண்டிகையைக் கொண்டாட எருசலேம் ஆலயம் சென்றார். அங்கு போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டு கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார்.

நாமும் ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு வழிநடத்த இறைவார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டு அதின்படி வாழ்வோம்.

3. ஒருவருக்கொருவர் நன்மை செய்ய வேண்டும்:

பின்பு அவர்களிடம், ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா அழிப்பதா? எது முறை? அவர் கேட்டார் *(மாற்கு 3: 4)*

ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை என்கிறார் இயேசு கிறிஸ்து. இந்நாளில் நன்மை செய்வது சிறப்பானது. நன்மை என்பது பிறருக்கு உதவும் செயல்களைக் குறிக்கும். இயேசு நாதர் நன்மை செய்பவராகவே சுற்றித்திரிந்தார். நன்மை செய்தால் நிச்சயம் மேன்மை உண்டு.

ஓய்வுநாளில் இயேசு தொழுகைக்கூடம் சென்றார். அங்கே வலக்கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவிடம் குற்றம் காணும் நோக்குடன், ஓய்வுநாளில் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தனர். இயேசு அம்மனிதரிடம் எழுந்து நடுவே நில்லும் என்றார். அவரிடம் கையை நீட்டும் என்றார். அவரது கை நலமடைந்தது. ஓய்வுநாளில் நன்மை செய்து தமது அன்பை வெளிப்படுத்தினார்.

ஒரு தொழுகை கூடத்தில் அனைவரும் தொழுகைக்கு அமர்ந்திருந்தனர். அங்கு புதிதாக வந்து சேர்ந்த ஒரு பூனை தொழுகை நேரத்தில் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தது. அதை பார்த்த குரு அந்த பூனையைப் பிடித்து ஒரு தூணில் கட்டி வைக்கக் கூறினார். பின்னர் தொழுகை நடந்தது. இப்படியே எல்லா நாள்களும் பூனை கட்டப்பட தொழுகை ஆரம்பமானது. ஒரு மாதம் கழிந்தது. தொழுகையின் ஆரம்பத்தில் பூனையைக் காணவில்லை. மக்கள் அதை தேடிச் சென்று, பூனையைக் கண்டுபிடித்து, தூணில் கட்டி வைத்துவிட்டு தொழுகையை ஆரம்பித்தனர். பூனை இல்லாமல் தொழுகை இல்லை என்ற நிலை உருவானது. சில நாள்கள் கழித்து அந்த பூனை இறந்துவிட்டது. குரு அதே போன்று இன்னொரு பூனையை வாங்கி வரக் கட்டளையிட்டார். பெரும் முயற்சிக்கு பின் வாங்கி வந்து தூணில் கட்டி வைத்து தொழுகையைத் தொடங்கினார். குரு பூனையை மறந்துவிட்டு தொழுகையில் கவனம் செலுத்துங்கள் என்றார்.

இன்றும் ஓய்வுநாளின் முழுமையை அனுபவிக்க முடியாமல் ஏதோ ஒன்று நமது வாழ்வில் தடையாய் இருக்கலாம். அது எது எனக் கண்டறிந்து, அதை நம்மை விட்டு அகற்றுவோம். ஓய்வுநாள் படைப்பின் முழுமைக்கு நம்மை வழி நடத்தட்டும்.

அருள்திரு. S. சுஜின் பிரிட்டோ

இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறைநம்பிக்கையைப் பகிர்தல்

Sharing God's Hope in a Troubled World

நீத. 6: 11-24 *2 கொரி. 7: 5-16*
திபா. 25: 1-15 *லூக். 3: 7-18*

"மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்கிறேன்." (லூக். 3: 8)

கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்கம், கி.பி. 1881-ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் நாள் அருள்திரு. முனைவர். பிரான்சிஸ் எட்வர்ட் கிளார்க் என்பவரால் அமெரிக்க நாட்டிலுள்ள மேய்ன்ஸ் என்ற மாநிலத்தின் போர்ட்லான்ட் நகரில் அமைந்துள்ள வில்லிங்ஸ்டன் கான்கிரிகேஷனல் திருச்சபையில் "கிறிஸ்துவுக்காகவும் திருச்சபைக்காகவும்" (For Christ, For Church) நல் முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துதல் என்ற குறிக்கோளுடன் ஆரம்பமாயிற்று. வரலாற்றுச் சிறப்புமிக்க நமது C.S.I. கன்னியாகுமரிப் பேராய இளையோர் கரிசனைத் துறை, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி முதல் ஞாயிற்றுக்கிழமையைக் கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்க ஞாயிறாகக் கொண்டாடி குழந்தைகள், இளையோர் கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் உகந்தவர்களாக மாறுவதற்குத் திருப்பணிகளை நிறைவேற்றி வருகிறது.

நம் இந்தியத் திருநாட்டின், வெகுமதி வாய்ந்த சொத்து செல்வம் மற்றும் பொருள் சார்ந்தது அல்ல; மாறாக, இறை அருட்கொடையாம் இளைஞர்களைச் சார்ந்தே அமைகிறது. அவர்கள் கையில்தான் எதிர்கால வாழ்வு, வளமை, ஆளுமை, ஆற்றல் ஆகியன உள்ளன. அமைதி மற்றும் வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஒளி படைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம், களிப்படைந்த மொழி, கடுமை கொண்ட தோள், தெளிவு பெற்ற மதி என்ற பாரதியார் வார்த்தைகளை இளையோர் மெய்ப்பிக்க வேண்டும். இடையூறுகள், இடர்பாடுகள் நடுவில் இறை நம்பிக்கையின் தடங்கள், இறைப் பக்தி முதலியவை மனிதர்களின் மனதில் ஆழமாக நிலைபெறுமானால் அவர்கள் மனம் தூய்மை அடையும். இன்று இளைஞர்கள் சந்திக்கும் இடர்பாடுகள் ஏராளம். குறிப்பாக, வேலைவாய்ப்பின்மை, கல்வி வாய்ப்புகள் பெறுவதில் பிரச்சினைகள், பாலினச் சமத்துவமின்மை, மன அழுத்தம், போதைப் பொருட்கள்,

நவீன ஊடகங்களின் தாக்கம், பொழுதுபோக்கில் நாட்டம் போன்றவைகள் ஆகும். இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறை நம்பிக்கையைச் செயலாக்கம் மிக்கதாகப் பகிர்ந்து, இளைஞர்கள் இறை நம்பிக்கையில் வளர்வதற்குரியவற்றைச் சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

1. இடர்பாடுகள் நிறைந்த உலகில் விரக்தியின் வெளிப்பாடு :

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்" (லூக். 3: 10).

விரக்தி என்பது, ஒரு செயலில் அல்லது வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றம், இடர்பாடுகளினால் ஏற்படும் மனச் சோர்வு, நம்பிக்கையிழப்பு ஆகும். இளையோர் அதிகமாக விரக்தியடைந்து, வாழ்வை மாய்க்கும் விளிம்பு நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். முழுக்கு முனிவர் யோவானின் திருப்பணிக் காலத்தில், மேசியாவை எதிர்பார்த்து, காத்திருந்து விரக்தியடைந்து "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்டனர். இதேப் போன்று, *நீத. 6: 13*-இல் கிதியோன் அவரிடம், "என் தலைவரே! ஆண்டவரே, எம்மோடு இருக்கிறாரென்றால் ஏன்? இவையெல்லாம் எமக்கு நேரிடுகின்றன? ...இப்பொழுது ஏன்? ஆண்டவர் எம்மை இப்படிக் கைவிட்டுவிட்டார்?" *2* கொரி. *7: 5*-இல் இறைஅருட்பணியாளர் பவுல் குறிப்பிடும்போது, "எங்களிடம் மன அமைதியே இல்லை, வெளியே போராட்டம், உள்ளே அச்சம் இவ்வாறு எல்லா வகையிலும் துன்புற்றோம்" என்கிறார். இடையூறு நிறைந்த உலகில் நாம் பயணிக்கும்போது, நம்முடைய இறை நம்பிக்கையில் பலப்பட வேண்டும். திபா. *13: 1, 2*-இல் "எத்தனை நாள் ...வேதனையுற்று எனக்குள் போராடுவேன்", திபா. *25: 1-15*-இல் "என் கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்கின்றேன்; நான் வெட்கமுற விடாதேயும்" என்கிறார் திருப்பாடலாசிரியர். இடர்பாடுகள் நிறைந்த உலகில், விரக்தியின் வெளிப்பாடு நம்மை இறை நம்பிக்கையிலிருந்து விலகி சென்றுவிடச் செய்யும் என்பதைப் புரிந்து, நம்முடைய வேதனைகள், துன்பங்கள், மனச் சோர்வுகள் அனைத்தையும் கடவுளிடத்தில் ஒப்படைத்து இறைப் பற்றுறுதியில் ஆழமாக வேர்கொண்டு செயல்பட வேண்டும்.

2. இடர்பாடுகள் நிறைந்த உலகில் விசுவாச வழிகாட்டுதல்கள்:

லூக். *3: 11-14* வரையில், இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறை நம்பிக்கையைப் பகிர்வதற்குரிய விசுவாச வழிகாட்டுதல்களை, முழுக்கு முனிவர் யோவான் தெளிவுபடுத்தினார். இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும். உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள். நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்; யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள்; உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள். இளையோர், தங்கள் திருச்சபையில், குடும்பத்தில், வாழும் சமூகத்தில் இத்தகைய விசுவாச வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் இடர்பாடுகள் களையப்படும்.

இடர்பாடுகளுக்கு இடமில்லாமல், வன்முறை, கோபம், நீங்கி அமைதி ஏற்படும்.

கிதியோனும், நலம் நல்கும் ஆண்டவரின் விசுவாச வழிகாட்டுதல்களைப் பெற்று, (நீத. 6: 24-40) அமைதியும், வலிமையும் இஸ்ரயேல் மக்கள் பெற்றுக்கொள்ளச் செயல்பட்டார். உண்மையான மனம்மாறுதல், விசுவாச வழிகாட்டுதல்கள் அருட்பணியாளர் பவுலின் திருப்பணியில் வெளிப்பட்டன. 2 கொரி. 7: 12-இல் "ஆறுதல் அடைந்தோம்" என்கிறார். ஒருவருக்கொருவர் இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறைநம்பிக்கையைப் பகிர்வதற்கு, விசுவாச வழிகாட்டுதலில் மிக முக்கியச் செயலாக்கம், இறையாறுதலை ஒருவருக்கொருவர் கொடுப்பதும், பெற்றுக்கொள்வதும் ஆகும். 2 கொரி. 1: 3, 4-இல் "பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கு ஆறுதல் அளிக்க முடிகிறது." மத். 25: 35-45-இல் இயேசு கிறிஸ்துவும் விசுவாச வழிகாட்டுதல்களைத் தருகிறார்.

3. இடர்பாடுகள் நிறைந்த உலகில் விண்ணகத்தில் வாழும் எதிர்நோக்கு:

லூக். 3: 17-இல் "அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார், கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இளையோர்கள், எதற்கு வாழ்கிறோம்? ஏன் வாழ்கிறோம்? என்ற குறிக்கோளின்றி, உலகச் சிற்றின்பத்தில் வீழ்ந்து போகிறார்கள். முழுக்கு முனிவர் யோவானும், தன் இளமைப் பருவத்தில் வாழ்வது ஒருமுறை, இறையரசை, விண்ணகத்தில் வாழும் எதிர்நோக்கை உலகில் அறிவித்துச் சென்றுவிட வேண்டும் என்று "மனம் திரும்புங்கள்" என்ற பெரும் முழுக்கத்தை முன்னெடுத்தார். அதையே கிறிஸ்துவும் தம்முடைய திருப்பணியில் வெளிப்படுத்தினார் (மத். 4: 17). செல்வமன்று, அர்த்தமுள்ள இறை நம்பிக்கையை இளையோர்கள், விண்ணகத்தில் வாழும் எதிர்நோக்குடன் வாழ்வதற்கு கிறிஸ்து விரும்புகிறார். மத். 19: 16-22-இல் "செல்வரான இளைஞர் இயேசுவிடம் வந்து, போதகரே, நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "நிறைவுள்ளவராக விரும்பிய நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழையருக்குக் கொடும், அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார். இளைஞர் வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில், "அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது".

இந்தியாவில் கிறிஸ்துவை அறிவிப்பதற்கு முதல் நூற்றாண்டு முதல் இந்த நூற்றாண்டு வரையிலும் வருகை தந்த அருட்பணியாளர்கள் அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பட்ட கடினங்கள் ஏராளம், இடர்பாடுகள் நிறைந்த உலகில் இருளை மாற்றி ஒளி கொடுப்பதற்கு கலங்கரை விளக்காய் ஒளிர்ந்து, உப்பாய்ச் சுவை தந்து, மெழுகுவர்த்தியாய் உருகி

தங்கள் உயிரைக் கொடுத்து கிறிஸ்துவின் நற்செய்தியை விதைத்தார்கள். தரங்கம்பாடியில் இறை ஊழியத்துக்காக, இறை நம்பிக்கை பகிர்வதற்கு ஜூலை 9, 1706-இல் வருகை தந்த சீகன் பால்க் மற்றும் செராம்பூரில் வருகை தந்து இறை நம்பிக்கையை பகிர்ந்த, வில்லியம் கேரி, ஜோஸ்வா மார்ஸ்மென், வில்லியம் வார்டு (William Carey, Jozhua Marshman, William Ward - Serampore Trio) *ஆகியோர் 1806-இல் ஆரம்பித்த கல்வி, இறைப்பணி, இறையியல் கல்வியின் தூரக்காட்சி இன்றும் சான்று பகர்கிறது. இவர்கள் நற்செய்திப் பணியில் சந்தித்த விரக்திகள் ஏராளம். இப்பணியை விட்டுவிட்டு சொந்த நாடு திரும்பியிருக்கலாம். ஆனால், விசுவாச வாழ்வின் நெறிமுறைகளுக்காக, விண்ணக வாழ்வின் எதிர்நோக்குடன் தங்களை அர்ப்பணித்தார்கள். நாமும், இடர்பாடுகள் நிறைந்த உலகில் இறைநம்பிக்கையைப் பகிர்வோம், இறைநம்பிக்கையில் பிறரை நடத்துவோம். எதிர்காலத் தலைமுறையினர் தூய்மையாகச் செயல்பட உழைப்போம்.*

அருள்திரு. முனைவர் S. டேவிட் ஜோசப் ராஜ்

வீழ்ச்சி: கடவுளின் நோக்கத்தினின்று விலகிச் செல்லுதல்

Fall: Moving Away from God's Purpose

நீத. 2: 7-22 *1 திமொ. 4: 1-10*
திபா. 14 *லூக். 18: 18-27*

"எல்லோரும் நெறிபிறழ்ந்தனர்; ஒருமிக்கக் கெட்டுப் போயினர்; நல்லது செய்வார் யாரும் இல்லை; ஒருவர் கூட இல்லை" (திபா. 14: 3)

உளவியலில் outside-in approach, Inside-out Approach என்று இருவிதமான வாழ்வியல் அணுகுமுறைகள் இருப்பதாகச் சொல்லப்படுவதுண்டு. Outside in அணுகுமுறை என்பது நமக்கு வெளியே நடப்பவை நம்மில் பாதிப்பைக் கொண்டுவர அனுமதிப்பது. நம்மை யாராவது புகழ்ந்து பேசிவிட்டால் வானத்தில் பறப்பது போன்றும், வேறு யாராவது இகழ்ந்து பேசிவிட்டால் பாதாளத்தில் தள்ளப்படுவது போன்றும் உணருவதும் ஆகும். இந்த அணுகுமுறை கொண்ட மனிதர்களை "புறம் ஊன்றிய மனிதர்கள்" என்று சொல்லலாம். in-side-out அணுகுமுறை என்பது வெளியில் உள்ள எதுவும் நம்மை பாதிக்க நாம் அனுமதிக்காத அதே வேளையில், நம் வாழ்க்கையாலும் நல்மனப்பக்குவத்தாலும் சுற்றிலுள்ள சூழலிலும் மனிதர்களின் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வருவது, இது ஆன்மீக முதிர்ச்சியின் அடையாளமாக இருக்கிறது. மறை நெறிகளுக்கு முரணான புறச்சூழலினால் பாதிக்கப்படும் புற ஊன்றி (outside-in) இறைமக்கள், சூழ்நிலைக் கைதிகளாக வாழ்வது தவிர்க்க இயலாது. மட்டுமல்லாமல் வீழ்ச்சியையும் காண்பார்கள். ஆனால் தங்களுக்குள்ள இறைநோக்கத்தால் அகம் ஊன்றிய இறைமக்கள் எந்த புறசூழலும் தங்களது நோக்கத்தை குலைக்காத எழுச்சிக்கு நேராக அழைத்து செல்லும்.

உலகைப் படைத்த கடவுள் மனிதனுக்கு தம் உருவத்தைக் கொடுத்து, மீட்டெடுக்க தம் உயிரையும் கொடுத்தார். அந்த மனிதன் கடவுளுடைய நோக்கத்தை இருதயத்தில் பதித்து, அதன்படி வாழ்ந்து அவரது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பதிலாக, அதனை மீறி புறசூழலினாலும் தன் சுய ஆசையினாலும் வீழ்ச்சியை வருவித்தான். மனிதனின் வீழ்ச்சியால், மனிதன் மட்டுமே பாதிக்கப்படவில்லை. முழுப் படைப்பும் பாதிக்கப்பட்டுவிட்டன என தொடக்க நூல் விவரிக்கிறது. அதாவது, ஆதாம், ஏவாள் இருவரும் கடவுளின் சொற்களுக்கு மீறி நோக்கத்திலிருந்து விலகி நடந்ததால், இருவரும் ஏதேன்

தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டனர். மட்டுமல்ல, நிலம் சபிக்கப்படுகிறது. நிலம் அதன் விளைவாக முள்ளையும், முட்புதரையும் முளைப்பிக்கிறதாகவும், மனித உழைப்பு மிகக் கடினமான வேலையாக வியர்வையை வரவழைப்பதாக மாறுவதாகவும் காட்டுகிறது. கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் தங்கள் பற்றுறுதி பயணத்தில் புறசூழலினால் பாதிக்கப்பட்டு சூழ்நிலை கைதிகளாக மாறி, தடுமாறி இறை நோக்கத்திலிருந்து விலகி சென்றதையும், விளைவாக வீழ்ச்சியடைந்ததையும் விவிலியம் நமக்கு காட்டுகிறது. இஸ்ரயேல் மக்கள் நடுவில் ஒழுக்கப்பிறழ்வு இருந்தது. ஆகவே தான் திருப்பாடலாசிரியர் ஆண்டவர் விண்ணகத்தினின்று மானிடரை உற்று நோக்குகின்றார். மதி நுட்பமுள்ளோர், கடவுளை நாடுவோர் எவராவது உண்டோ எனப் பார்க்கின்றார். எல்லோரும் நெறி பிறழ்ந்தனர், ஒருமிக்கக் கெட்டுப்போயினர், நல்லது செய்வார் யாரும் இல்லை. ஒருவர்கூட இல்லை (திபா. 14: 2, 3) என்ற கடவுளுடைய குமுறலை குறிப்பிடுகிறார். இக்காலத்திலும் எல்லோரும் ஆண்டவரின் நெறியில் கவனம் செலுத்தாமலும் இறை நோக்கத்தை மீறுவதாலும் ஒருமிக்க கெட்டு போவதோடு வீழ்ச்சியையும் காண்கிறார்கள். இத்தகைய வீழ்ச்சிக்கு வித்திடும், உண்மைகளை இந்நாளுக்குரிய விவிலியப் பகுதிகள் வழியாக புரிந்து கொள்வது இறைப்பற்றாளருக்கு அவசியமானதாகும்.

1. அறியாமையால் வீழ்ச்சி:

அறியாமை (Ignorance) என்பது ஒருவகை அடிமைத்தனம் தான். அறிய வேண்டியவைகளை அறியாமலிருப்பதும் ஒருவகை தீமைதான். உலக மக்களின் அனேக துன்பங்களுகும் தடுமாற்றங்களுக்கும் காரணம் அறியாமை தான் எதை அறியாமை? உண்மையை அறியாமை, அந்த உண்மையின் வடிவமாகிய கடவுளை அறியாமை. கடவுளுடைய நோக்கங்களை குறித்த அறிவு இல்லாமையே. நீதி. 2: 7-22-ல் ஒரு புதிய சகாப்தம் தொடங்கி விட்டது. ஒரு புதிய தலைமுறையினர் உதித்துவிட்டனர். இஸ்ரயேல் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்கு தூண்டுகோலாக இருந்த யோசுவாவின் இறப்பும் அவரது தலைமுறையினரின் இறப்புமே இஸ்ரயேலில் தீயவை நுழைவதற்கு காரணங்களாக இருந்தது. அதாவது ஆண்டவரது நெறிமுறையை குறித்த அறியாமை அவர்களில் அதிகமாக வேரூன்றியதால் புதிய தலைமுறை மக்களுடைய தீச்செயல்களுக்கும் அவர்களின் வீழ்ச்சிக்கும் வித்திட்டது. "அவர்களுக்கு பின் வந்த தலைமுறையினர் ஆண்டவரையோ அவ் இஸ்ரயேல் மக்களுக்குச் செய்ததையோ அறிந்திருக்கவில்லை" (நீதி. 2: 10). "இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்து அவர்கள பாகால்களுக்கு ஊழியம் செய்தனர், தங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை

கைவிட்டனர்" (நீதி. 2: 11, 12). இதன் விளைவாக "அவர்கள் பெருந்துயரத்திற்கு உள்ளாயினர்" (2: 15), வீழ்ச்சியடைந்தனர் என அறிய முடிகிறது. புதிய தலைமுறையினர் வாழும் கடவுளின் நோக்கங்களை அறியாமல் சூழ்நிலை கைதிகளாக அகப்பட்டு பாகாலுக்கு ஊழியம் செய்து, தங்கள் அறியாமையினால் இறை நோக்கத்தின்றி விலகி சென்றனர். அறியாமையால், ". . . இம்மக்களின் மூதாதையர் கைக்கொள்ளுமாறு கட்டளையிட்ட என் உடன்படிக்கையை இவர்கள் மீறிவிட்டனர்" (நீத. 2: 20) கடவுளின் திட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டனர்.

எபேசு திருச்சபையிடம், பிற இனத்தவர் வாழ்வதுபோல இனி நீங்கள் வாழக்கூடாது. ". .. அவர்களது மனம் இருளடைந்திருக்கிறது அவர்களது பிடிவாத உள்ளத்தின் விளைவாய் ஏற்பட்ட அறியாமையின் காரணத்தால் அவர்கள் கடவுள் தரும் வாழ்வுக்கும் புறம்பானவர்களாக இருக்கிறார்கள்" (எபே. 4: 17, 18) என்று கூறிய தூய பவுல் கடவுளுடைய சாயலால் படைக்கப்பட்ட நாம் அறியாமையால் கடவுள் தரும் வாழ்வுக்கு புறம்பானவர்களாக மாறாதபடி கவனமாயிருக்க அறிவுரை வழங்குகிறார். இத்தகைய அறியாமையே கடவுளோடுள்ள உறவிலிருந்து விலக்கும் அதோடு அழிவுக்கும் அழைத்துச் செல்லும்.

திருநாவுக்கரசர் என்பவர்,

"உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்"

என அறியாமையால் வரும் அழிவை குறித்து பாடியிருக்கிறார். எப்படியெனில், குளிர்ந்த நீரில் வசித்து விரைத்துக் கிடக்கும் ஆமையை எடுத்து அதை உலையில் இடுவார்கள். உலை நீரின் வெப்பம் தொடக்கத்தில் வெதுவெதுப்பாய் மாறி ஆமைக்கு இதமான இன்பத்தைதத்தரும். அந்த இன்பத்தில் ஈடுபடும் ஆமை நின்றும், ஓடியும் கொதிலேனில் அறியாமையால் அங்குமிங்கும் ஆனந்தக்கூத்தாடும். உலை நீரில் வெப்பம் ஏற ஏற இன்பம் துன்பமாகும். பின்பு கொதிகலனே அந்த ஆமைக்கு கல்லறையாகும். அங்ஙனம் அறியாமை மெதுவாக வீழ்ச்சிக்கு அழைத்துச் செல்லும். இக்கால தலைமுறையினராகிய நாம் முன்னர் அறியாமையில் இருந்தபோது இச்சைகளுக்கிசைய நடந்தது போல இனி நடவாமல் இறைநோக்கத்தினை குறித்த தெளிந்த அறிவோடு வாழ்வோம்.

2. அருவருப்பான செயல்களால் வீழ்ச்சி:

"கடவுள் இல்லை என அறிவிலிகள் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றனர், அவர்கள் சீர்கெட்டு அருவருப்பான செயல்களில் ஈடுபடுகின்றனர். நல்லது செய்வார் எவருமே இல்லை" (திபா. 14: 1).

திருப்பாடலாசிரியர், இறைப்பற்றைச் செயலில் காட்டாத அறிவிலிகள் (Fools) கடவுள் இல்லை என்றுரைப்பதோடு தங்கள் வாழ்க்கையில் கடவுளை புறக்கணித்து கடவுளுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை கொடுக்காமல், கடவுளற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். அதாவது, சீர்கெட்டு அருவருப்பான செயல்களைச் (Disgusting acts) செய்து வந்தனர். நல்லது செய்வார் எவருமே இல்லை, என்று ஆதங்கப்படுகிறார். அவலத்தை கோடிட்டு காட்டுகிறார். கடவுளின் ஆளுகைக்குட்பட்டு வாழ வேண்டியவர்கள் நெறிதவறி, அருவருப்பான செயல்களை செய்து தீயவரின் ஆளுகைக்கு உட்பட்டு அருவருப்பானதை செய்து இறை நோக்கத்திலிருந்து விலகி வீழ்ச்சியடைகிறார்கள். நீத. 2: 17-ல் இஸ்ரயேல் தங்கள் நீதித்தலைவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை, ஏனெனில் அவர்கள் வேற்று தெய்வங்களைப் பின்பற்றித் தொழுது வேசித்தனம் செய்தனர்; தங்கள் மூதாதையர் ஆண்டவரின் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து நடந்த நெறியை விட்டு விரைவில் விலகினர். அப்படிப்பட்ட அருவருப்பான செயல்களே அவர்களையும் வீழ்ச்சிக்கு நேராக நடத்தியதாக, அறிகிறோம். மேலும், இவர்கள் தங்கள் மூதாதையரைவிட இழிவாக நடந்தனர். அவர்களுடைய தீய பழக்கங்களையும் முரட்டுத்தனமான நடத்தையும் விட்டகலவில்லை (நீதி. 2: 19) என்பது போலவே நவீன உலகின் மக்கள் முன் நாட்களைவிட மிக இழிவாக நடந்து தீயபழக்கவழக்கங்களாலும் சீர்கெட்டு அருவருப்பாக செயல்படுவது வேதனைக்குரியதாகும். அருவருப்பான செயல்கள் செய்ய ஆதவராய் இருப்போர் உலகில் உண்டு. ஆனால் கடவுள் இப்படிப்பட்டோருக்கு, நெருப்பும் கந்தகமும் எரியும் ஏரியையே உரிய பங்காக வழங்குகிறார் (திவெ. 21: 8). ஆண்டவர் வெறுக்கின்ற அருவருப்பானச் செயலை செய்யாதிருங்கள் என்று இறைவார்த்தையின் வழி திரும்ப திரும்ப உரைப்பவைகளை கேட்காமல், காதில் வாங்கி கொள்ளாமல் தீச்செயலை விட்டு திரும்பாமல் போனால் கடவுளின் சீற்றமும் சினமும் நம் வாழ்வை அழித்து விடும் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். உலகில் மிகவும் புகழ்பெற்ற கோல்ப் விளையாட்டு வீரராக விளங்கியவர் அமெரிக்காவின் டைகர் உட்ஸ் (Tiger Woods). விளையாட்டு வழியாக அதிகமான செல்வம் சம்பாதித்த வீரராக கருதப்பட்டவர். ஆனாலும் அவருடைய வாழ்க்கையிலும் பெரும் புயல் வீசியது. தன்னுடைய மனித பலவீனத்தால் அவர் குடும்ப வாழ்க்கைக்கு எதிராக பெரும் பாவம் செய்தார். ஒரு நல்ல தந்தையாய், ஒரு நல்ல கணவராய், ஒரு நல்ல மகனாய் அவர் நடந்து கொள்ளவில்லை. இச்செய்தி 27.11.2009 அன்று உலகிற்குத் தெரியவந்தது. மனைவி எலின் அவரைவிட்டுப் பிரிவதாக அறிவித்தார். எனவே அவர் அருவருப்பாக வாழ்ந்த தருணங்களுக்கு மன்னிப்பு கேட்டு கோல்ப் விளையாட்டிலிருந்து விலகுவதாக அறிவித்தார். அவரை ஒப்பந்தம் செய்த பெரிய பெரிய

வணிக நிறுவனங்களும் விளம்பர ஒப்பந்தங்களை ரத்து செய்தன. 45 நாட்களாக மனநல சிகிட்சை மேற்கொண்ட இவர், மனம்நொந்து 20.02.2010 அன்று புளோரிடாவில் செய்தியாளர்களை சந்தித்தபோது கண்ணீர்விட்டழுது, நான் தவறினேன், அறநெறிகளை மதிக்காமல் வாழ்ந்தேன், அருவருப்பானதை செய்தேன், நான் செய்தவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. இப்போது மாபெரும் வீழ்ச்சியை சந்தித்து நிற்கிறேன் என மனமுடைந்து கூறினாராம். இறைமக்களாகிய நாம், நம் தலைமுறையினர் வீழ்ச்சியை சந்திக்கும் முன் அருவருப்பான செயல்களை விட்டுவிட்டால் நலமாயிருக்கும்.

3. அஜாக்கிரதையால் வீழ்ச்சி:

எபேசுவில் நெறியற்றவர்களாகிய வேடமணிந்த மாற்று கொள்கைகளை கற்பித்த போதகர்கள் யூதர்களின் சட்ட திட்டவாதத்தையும் கிழக்கத்திய துறவற கொள்கைகளையும் இணைத்து போதித்தனர். யூதர்களின் புனைக்கதைகளிலும் மூதாதையரின் முடிவில்லாப் பட்டியல்களிலும் கவனம் செலுத்தினார்கள். இப்படிப்பட்ட பின்புலத்தில் இறுதி காலத்தில் நெறியற்றவர்கள் தங்கள் வேடத்தினால் இறைநோக்கத்திலிருந்து விலக செய்வர் என்பதை உணர்ந்த திருத்தூதுவர் பவுல் எபேசு சபையைக் கண்காணிக்க ஏற்படுத்திய தீமோத்தேயுவுக்கு தனது முதல் கடிதத்திலேயே, தூய ஆவியார் தெளிவாய்க் கூறுகிறபடி, இறுதி காலத்தில் சிலர் ஏமாற்றும் ஆவிகளுக்கும் பேய்களின் போதனைகளுக்கும் செவிசாய்த்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவர். பொய்யர்களின் வெளிவேடத்தால் கவரப்படுவர் (1 தீமோ. 4: 1, 2) எனவே உலக போக்கிலான புனைகதைகளையும் பாட்டிக்கதைகளையும் விட்டு விலகு (4: 7) என்றும், அஜாக்கிரதையாயிருந்து (carelessness) பொய்யர்களால் கவரப்பட்டு வீழ்ச்சியடையாமல், இறைபற்றில் நீ வளரபயிற்சி செய் என்றும் ஆலோசனை வழங்கின செல்வ செருக்குடைய தலைவர், அவர் விபசாரம், கொலை, களவு செய்யாத, பொய்ச் சான்று சொல்லாத, தாய் தந்தையை மதித்து நடந்தவர், ஆனாலும் ஆண்டவருடைய நெறிபடி வாழ அஜாக்திரதையோடு காணப்பட்டபடியால் "உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது" (லூக். 18: 22) என்று இயேசு சொன்னதை கேட்டு வருத்தமுற்றார் இப்படி அஜாக்கிரதையாய் இருந்தால் வீழ்ச்சிதான், அதாவது "இறையாட்சிக்கு உட்படுவது எவ்வளவு கடினம்" (18: 22) என்பதை அறிந்து கொண்டார்.

போலியே தன்னை உண்மையாக பிரகடனப்படுத்திக் கொள்வது இன்று நேற்று ஆரம்பித்த ஒன்று அல்ல, அது ஏதேன் தோட்டத்தில் தொடங்கிய ஒன்று. இந்நாட்களில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் மிக நுணுக்கமாக இறைமக்களை இறைநோக்கத்தினின்று விலக செய்து

வீழ்ச்சிக்கு நேராக நடத்துகிறார்கள். அஜாக்கிரதையாயிருந்தால் உயிரையும் உறவையும் உயர்வையும் உரிமையையும் உடமைகளையும் இழக்க நேரிடும். "ஆண்டவரது நெறிமுறையில் நடப்பதில் இஸ்ரயேலின் மூதாதையர் கவனமாக இருந்தது போல், இஸ்ரயேலரும் கவனமாக இருக்கின்றார்களா இல்லையா என இவர்களைக் கொண்டு நான் சோதிக்கின்றேன் (நீத. 2: 22) என்றுரைத்த கடவுள் இன்றும் இறைமக்கள் அவரது நெறிமுறையில் கவனமாக அல்லது ஜாக்கிரதையாக இருந்து இறைநோக்கத்தின்படி வாழ்கிறார்களா? என உற்று பார்க்கிறார் என்ற உணர்வுடன் வாழ்வோம்.

அதீத பகுத்தறிவு சிந்தனைகளும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் அதிகமான விஞ்ஞான வளர்ச்சியும் அளப்பெரிய பொருளாதார முன்னேற்றமும் நாளுக்கு நாள் பற்றுறுதிக்கெதிரான கடவுளுடைய நோக்கத்திற்கெதிரான ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டு வருகிறது. ஆகவே இறைமக்கள் நாம், இவைகளில் வீழ்ச்சிக்கு நேராக நடத்துபவை எவை என்பதை உணர்ந்து, அறியாமையிலிருந்து அறிவு தெளிவடைந்து, அருவருப்புகளை களைந்து, அஜாக்கிரதையாய் அல்லாமல் ஜாக்கிரதையாய் செயல்படுவது மிக நன்று.

அருள்திரு. G.S. ஆஸ்வின் ஜெய்சிங்

மனதுருக்கம்: இணைந்து அன்புசெய்தலும் துன்புறுதலும்

Compassion: Loving and Suffering Together

எசா. 42: 1-9 *யாக். 5: 13-18*
திபா. 103: 1-14 *மத். 9: 35-38*

திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார். (மத். 9: 36)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தமது அருட்பணியினை நிறைவேற்றியபோது, தமது முக்கிய அருட்பணிக்கடமையாகக் குணமாக்கும் திருப்பணியை மேற்கொண்டார். உலக மக்களைக்குறித்த மக்களின் பாடுகள், பாரங்கள், கவலைகள் பொருட்டு அவர்கள் மேல் பரிவு கொண்டவராய் இக்குணமாக்கும் திருப்பணியை நிறைவேற்றினர். பரிவு என்பது மனதுருக்கம், இரக்கம். சுருணை எனப்பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. பரிவு, இதனை இளகிய மனம் என்றும் நாம் கூறுகிறோம். பிறருடைய தேவைகளில் உதவாமல் கஷ்டங்களில் கண்டுகொள்ளாமல் இருப்போரை கல் நெஞ்சம் உடையவர்கள் என்று கூறுவதுண்டு. பிறர்மீது பரிவு, மனதுருக்கம் கொள்ளுவது என்பது இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தியின் அடிப்படை அம்சமாகும். இக்கட்டுகளிலும் தேவைகளிலும் இருந்தோரைக்கண்டு இயேசு கிறிஸ்து மனதுருகி குணமாக்கிய செய்திகளை நாம் நற்செய்தி நூற்களின் பல்வேறு பகுதிகளிலும் காணமுடியும். இயேசு கிறிஸ்துவின் திருப்பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றும்படி பணிக்கப்பட்டிருக்கும் நாமும் நமது வாழ்வில் இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட பரிவு, மனதுருக்கம் முதலியவற்றை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். இதனை இந்த நாளின் தலைப்பு சார்ந்து சிந்திப்போம்.

1. பரிதாபப்படுவதல்ல, பரிவுகொள்ளுதல்:

"அவர் கூக்குரலிடமாட்டார்; தம்குரலை உயர்த்தமாட்டார்; தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார்." *(எசா. 42: 2)*

பொதுவாக உடல்நலம் குன்றி கஷ்டப்படுவோரை நாம் கண்டால் ஐயோ! பாவம்! என்ற வார்த்தைகள் நம் வாயிலிருந்து தானாகவே வெளிவரும். அந்த குறிப்பிட்ட நபரின் மீது நாம் கொண்டுள்ள பரிதாபத்தின் வெளிப்பாடு அது. அவரின் கஷ்டத்தைக்கண்டு நாம் வருத்தப்படுவதை இது குறிக்கிறது. ஆனால் இந்த பரிதாபத்தினால் யாருக்கும் எந்த பயனும் இல்லை. ஒருவிதத்தில் கூறப்போனால் இது

ஒரு நாடக ரீதியான, இயந்திரத்தனமான செயல்பாடு இது உள்ளத்திலிருந்து வெளிப்படுவதாக கூறமுடியாது. மாறாக, உடல்ரீதியான வாய்ஜாலத்தின் வெளிப்பாடே ஆகும். இதற்குப்பதிலாக உடல்நலக்குறைவால் உடலும் உள்ளமும் சோர்ந்து போயிருப்போரிடம் நமது பரிவை மனதுருக்கத்தை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். நோயுற்றிருப்போரின் உணர்வுகளை வலியை உணர்ந்து பரிவுகொள்ள வேண்டும். உண்மையான பரிவு வாயின் வார்த்தைகளால் மட்டுமல்ல, வாழ்வின் செயல்களாலும் வெளிப்படும். நற்செய்திப் பகுதியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நோய்களாலும் பேய்களாலும் பாதிக்கப்பட்டவர்களாய் மக்கள் இருப்பதைக்கண்டு அவர்கள்மேல் மனதுருகி, பரிவுகொண்டு, அவர்களை குணமாக்கியதையும் அப்பணியை தொடர்ந்து நடத்த பணியாளர்களை அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதையும் காணமுடிகிறது.

2. அறிவுரை கூறுவதல்ல, அன்புசெய்தல்:

"நெரிந்த நாணலை முறியார். மங்கி எரியும் திரியை அணையார்" (எசா. 42: 3).

உலகிலேயே மிக எளிதான காரியம் பிறருக்கு ஆலோசனை கூறுவது" என்று சொல்லப்படுவதுண்டு. அதிலும், ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் நோயுற்றுவிட்டால் அவருக்குச் சொல்லப்படும் அறிவுரைகளுக்குப் பஞ்சமே இருக்காது. சுகவீனமாயிப்பவரைச் சந்திக்க வரும் அனைவருமே இதைச்செய்யாதே, அதைச்செய்யாதே, அதைச்செய்ததால்தான் இப்படி ஆகிவிட்டது. இதைச் செய்யாததால்தான் இப்படி ஆகிவிட்டது" என பல காரியங்களைக்கூறி அவர்களை குறைகூறியும், மேலும் குற்றம்சாட்டியும், நியாயந்தீர்த்தும், வெந்த புண்ணிலே வேலை பாய்ச்சுவதும் என ஏற்கனவே நொந்துபோயிருக்கும் அவர்களை நோகடித்துவிடுகிறோம். நோயுற்றிருப்பவர்கள் மீது நமக்கு மிகுந்த அக்கறை இருப்பது போல காட்டிக்கொள்வதற்கே அப்படிச்செய்கிறோம். ஆனால் அது உண்மையான அக்கறை அல்ல. நமது வார்த்தைகள் கஷ்டப்படுவோரை மேலும் கஷ்டப்படுத்துவதாக அல்லாமல், அவர்களது கஷ்டம் நீங்கவும், சுகம்பெறவும் அன்பின் வெளிப்படாகவேண்டும். ஆண்டவரைக் குறித்து திருமறை கூறும்போது அவர் நெரிந்த நாணலை முறியார்; மங்கி எரியும் திரியை அணையார் என குறிப்பிடுகிறது. அப்படிப்பட்ட வகையில் நமது அன்பை செயல்களாக காட்ட (மருத்துவமனைக்கு அழைத்துச் செலுத்தல், பொருளாதார உதவிகள் செய்தல் முதலியன) எதிர்பார்க்கப்படுகிறோம். அன்பு செய்யும் குணம் நம்மில் வெளிப்படும்போது பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அன்பின் தன்மைகளை நம் மூலம் உலகம் உணரும் என்பதில் ஐயமில்லை.

3. துக்கப்படுவதல்ல, இணைந்து துன்புறுதல்:

"ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன். உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன்: மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன் (எசா. 42: 6,7).

துக்கப்படுதல் என்பது ஒருவரது சுகவீனநிலையைக் கண்டு நாம் கவலை கொள்வதாகும். பிறர் நோயுற்று துன்பங்களை அனுபவிக்கும்போது அவர்களது துன்பத்தில் நாமும் பங்கு பெறுகிறோம் என்பதன் அடையாளமாக அழுதல், பேசாமலிருத்தல், கண்ணீர் வடித்தல் எனப்பல வகைகளில் நம் துக்கத்தை வெளிப்படுத்துகிறோம். யோபுவின் இழப்புகள் மற்றும் நோயின் பாதிப்புகளைக் குறித்துக்கேள்விப்பட்டு அவரை விசாரிக்க வந்த அவரது நண்பர்கள் இரவு பகல் ஏழு நாள்கள் எதுவும் பேச இயலாதவர்களாய் துக்கத்துடன் தரையில் அமர்ந்திருந்தனர் (யோபு 2). நோயினால் துன்பப்படும் நபருடன் இணைந்து நாமும் துன்பப்பட எதிர்பார்க்கப்படுகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன நல்ல சமாரியன் உவமையிலிருந்து (லூக்கா 10: 30-35) நாம் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். காயப்பட்டு, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மனிதனுக்கு உதவ முன்வந்த அந்தச் சமாரியன் காயப்பட்டு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த அந்த மனிதனோடு இணைந்து அவரது பாடுகளை இந்தச் சமாரியனும் ஏற்றுக்கொள்வதைக் காணமுடிகிறது. அதாவது நடக்க முடியாத அந்த மனிதனுக்கு தனது வாகனத்தை கொடுத்துவிட்டு (வ.34) தான் நடந்து துன்பப்படுகிறார். தன் பணத்தை, நேரத்தை செலவளித்தல் (வ.35). பாதுகாப்பான ஒரு இடத்திற்கு அம்மனிதனை அழைத்துச் செல்லுதல் (வ.34). இங்கு துன்பப்படும் அந்த மனிதனுக்காக இந்த சமாரியன் அழுது, கண்ணீர்விட்டு துக்கத்தை காட்டவில்லை. ஆனால் தனது பரிவை, மனதுருக்கத்தை வெளிப்படுத்தும் விதமாய் அவனது துன்பத்தில் தானும் பங்குபெற்று, அம்மனிதனின் துன்பத்துக்கு முடிவு கட்டுகிறான். இதனையே ஆண்டவர் நம்மிலும் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற குணமாக்கும் திருப்பணியை தொடர்ந்து நிறைவேற்றும்படி அழைக்கப்பட்டிருக்கும் நாம் பரிதாபப்படுவதாலல்ல பரிவுகொள்ளுதலாலும், அறிவுரை கூறுவதாலல்ல அன்பு செய்வதாலும், துக்கப்படுவதாலல்ல இணைந்து துன்பப்படுவதாலும் நம்மைக் குறித்த இறைத்திட்டத்தை நிறைவேற்ற ஆண்டவர் தாமே நமக்கு அருள் செய்வாராக. ஆமென்.

அருள்திரு. அறிவர் M. இம்மானுவேல் கின்சன் பெல்

கிறிஸ்து அனைவரையும் மீட்கிறார்: இறையன்பு அனைவரையும் அரவணைக்கிறது

Christ Redeems All : Divine Love Embraces Everyone

யோனா 4: 1-11 *1 திமொ. 2: 1-7*
திபா. 107: 1-20 *மாற்கு 2: 13-17*

"எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்" (1 திமொ. 2: 4).

மாணவன் ஒருவன் தன்னோடு பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சகமாணவர்களுடன் சண்டையிட்டு அவர்களைத் துன்புறுத்தி வந்தான். அனைவரும் அவனை, "கெட்ட பையன்" எனக் கூறி விலகினர். பாடசாலைக்கு வந்த புதிய ஆசிரியை ஒருவர் அவனை அழைத்து மெதுவாக, "நீ ஏன் இப்படி செய்கிறாய்?" என அவனிடம் கேட்டார். அவன் தலைகுனிந்து, பேசாமல் மௌனமாக நின்றான். சில நாட்களுக்குப் பின் அந்த ஆசிரியை, மாணவனின் தந்தை சிறையில் இருப்பதையும், தாய் நோயால் படுக்கையில் அவதிப்படுவதையும் அறிந்தார். எனவே, அவனைத் தண்டிக்காமல் அவனுக்கு உணவு கொடுத்து அன்பாய் அரவணைத்தார். நாட்கள் செல்லச் செல்ல அன்பைப் பெற்றுக்கொண்ட அந்த மாணவன் மனம் மாறத் தொடங்கினான். அவனது கோபம் குறைந்து பாசம் பெருகியது. அன்பாலும் பரிவாலும் மாற்றமுடியாதது எதுவும் இல்லை. மனிதர்கள் தண்டனை மூலம் மாற்ற முயலுகின்றனர். ஆனால், வானகத் தந்தையாகிய இறைவர் நம்மீது பரிவும் அன்பும் கொண்டு பெற்றவருக்குரிய பாசத்தோடு அனைவரையும் அரவணைத்து வழிநடத்தி வருகிறார். இன்று பாடமாகத் தரப்பட்டுள்ள மூன்று திருமறைப் பகுதிகள் வாயிலாக கடவுள் எங்ஙனம் இறைமக்களைத் தம் அன்பாலும் பரிவாலும் அரவணைத்து வழி நடத்துகிறார் என்பதைச் சிந்திப்போம்.

1. கடவுளின் அருளும் பரிவும் எல்லையற்றவை: *(யோனா 4: 1-11)*
(God's grace and mercy are limitless)

யோனா ஓர் இறைவாக்கினர். தன் வாழ்வில் ஏற்பட்ட நெருக்கடிக்குப்பின் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நினிவேக்குச் சென்று, இறைப் பக்தியற்ற மக்களை தீய வழிகளிலிருந்து மனம் திரும்பும்படி வலியுறுத்தினார். யோனாவின் செய்தியைக் கேட்டு அவர்கள் தங்கள் துன்மார்க்கமான வழியை விட்டுத் திரும்பினர். கடவுளும் தமது மனத்தை மாற்றிக்கொண்டு அவர்களைத் தண்டிக்காமல் மீட்டார். ஆனால், அவர்களுக்கு மீட்பு கிடைத்தபோது யோனா மகிழவில்லை. மாறாக,

நினிவே மக்கள் மீட்பைப் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்கள். அவர்கள் மீட்பைப் பெற வேண்டாம் என எண்ணினார். கடும் கோபம் கொண்டார் (யோனா 4: 1). இது அவருடைய குறுகிய மனத்தைக் காண்பிக்கிறது. ஆனால், கடவுள் நினிவே மக்கள் மனம் திரும்பினார்களென்று அறிந்து அவர்களுக்கு மீட்பை வழங்கினார். அவர்களுக்கு வரவேண்டிய தீங்கினை செய்யாதிருந்தார் (யோனா 3: 10). கடவுள் யோனாவைப் பார்த்து சொல்லும்போது ஆமணக்குச் செடியைக் குறித்து நீ இவ்வாறு சினம் கொள்வது முறையா? என்றார் (யோனா 4: 4). அந்தச் செடி ஓர் இரவில் முளைத்தெழுந்து மறு இரவில் முற்றும் அழிந்தது. நீ இதற்காக உழைக்கவுமில்லை. அதை வளர்க்கவுமில்லை. அதற்கு இவ்வளவு இரக்கம் காட்டுகிறாயே! எனக் கூறி தம்முடைய அன்பையும் பரிவையும் வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் மன்னிக்கிற தந்தை உவமையில் தம்பியின் துன்மார்க்கத்தை தந்தை எப்படி மன்னிக்க முடியும்? என்பது மூத்த மகனுக்குக் கடினமாயிருந்தது (லூக். 15: 11-32). ஆனால், தந்தை தம் இரக்கத்தால் தவறு செய்து மனந்திருந்தி வந்த இளைய மகனை நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொள்கிறார்.

கடவுளின் அருளும் பரிவும் நம் எல்லாரையும் எப்பொழுதும் வந்தடைகிறது. அது நம்முடைய மனதைக் காட்டிலும் ஆழமானது. அவருடைய எண்ணங்கள் மனிதனுடைய எண்ணங்களைக் காட்டிலும் மேலானவை. ஆயிரம் தலைமுறையளவும் தம்மை நேசித்து அவருடைய கட்டளைகளைக் காக்கிறவர்களுக்கு பரிவு காட்டுகிறார் (விப. 20: 6). யோனாவைச் சரியான திசைக்குத் திருப்ப புயலை அனுமதித்த கடவுள் தம்முடைய வழிக்குக் கொண்டுவர மீனை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். இன்று இறைவனின் தாராளமான மனப்பான்மை நம்மிடம் இல்லாததே நம் வாழ்வின் பல்வேறுபட்ட தீமைகளுக்குக் காரணமாக இருக்கிறது. அடுத்திருப்பவர் நலனில் அக்கறையில்லாததும் அடுத்திருப்பவரின் நலன் நாட வேண்டும் என்ற எண்ணம் இல்லாததும்தான் நாம் வாழும் உலகில் பல்வேறு பிரச்சனைகளுக்கு வித்திடுகின்றன. ஒரு பெரியவர் ஒரு குடும்பத் தலைவரிடம் "மனிதராகப் பிறப்பதற்கு நான்கு பேருக்கு நன்மை செய்ய வேண்டும்" என்றார். அந்தக் குடும்பத் தலைவர் நானும் நான்கு பேருக்கு நன்மை செய்கிறேன். அவர்கள் என் மனைவியும் மூன்று பிள்ளைகளும் என்றார். நமது அன்பும் அரவணைப்பும் நமது குடும்பம் என்னும் குறுகிய வட்டத்துக்குள் முடங்கி விடாமல் மற்றவர்களையும் அரவணைக்கும் உலகளாவிய அன்பாக இருக்க வேண்டும்.

2. கிறிஸ்துவின் மீட்பு அனைவருக்கும் உரியது: *(1 திமொ. 2: 1-7)* **(Christ's Salvation is for everyone)**

1 திமொ. 2:5-இல் கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே எனப் படிக்கிறோம். பிரச்சனையும்

குழப்பமும் கலகமும் இருக்கிற இடங்களில் சமாதானத்தைக் கொண்டு வருபவர்தான் இணைப்பாளர். பாவத்தினிமித்தம் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் பிரச்சனை உண்டாகி ஐக்கியமும் சமாதானமும் முறிந்து போனது. பாவத்தின் சம்பளம் மரணம். எல்லாரும் மரித்துப்போக வேண்டியவர்கள். எனவே, இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தையே மனிதரைப் பாவத்திலிருந்து மீட்கும் கிரயமாகச் செலுத்தினார். கடவுளின் அருளும் பரிவும் அவருடைய எல்லாச் செயல்களிலும் வெளிப்பட்டன. அனைவரின் மீட்புக்காக அவர் தம்மையே ஈடாகத் தந்தார் *(1 திமொ. 2: 6)* எனப் படிக்கிறோம். எல்லா மனுஷரும் மீட்கப்பட வேண்டுமென்பது கடவுளுடைய சித்தமாயிருக்கிறது. இதற்காகவே நான் அருளுரைஞராகவும், திருத்தூதராகவும், புறவினத்தாருக்கு பற்றுறுதியையும் உண்மையையும் எடுத்துரைக்கிற போதகராகவும் ஏற்படுத்தப்பெற்றுள்ளேன் என பவுலடியார் கூறுகிறார். யூத மார்க்கத்தார் மட்டுமல்ல புறவினத்தாரும் மீட்கப்பட வேண்டுமென கடவுள் விரும்புகிறார்.

கிறிஸ்துவின் மீட்பு அனைவருக்கும் உரியது என்பதை நம் வாழ்வில் உணரும்போது நாம் யாரையும் புறக்கணியாமல் எல்லாரிடத்திலும் அன்பும் பரிவும் காண்பிக்க வேண்டும். சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களையும் பாவிகளையும் துன்புறுவோரையும் அணுகி கிறிஸ்துவின் மீட்பின் செய்தியைப் பகிர்வோம்.

3. பாவிகளையும் உள்ளடக்கிய இயேசுவின் அன்பு: *(மாற்கு 2: 13-17)* (The love of Jesus includes sinners)

கடவுள் மனிதரைத் தம் சாயலாகப் படைத்தார் *(தொ.நூ. 1: 26)*. கடவுளின் அன்பு மற்ற படைப்புகளை விட மனிதருக்கு அதிகமாய்க் கொடுக்கப்பட்டது. காரணம் மனிதர் படைப்பின் சிகரமாய்ப் படைக்கப்பட்டனர். படைப்பின் சிகரமாகிய மனிதர் உடன்படிக்கையை மீறிய போதும் கடவுள் தம் அன்பிலிருந்து பின்வாங்கவில்லை. தம் மைந்தர் இயேசுவைப் பாவிகளுக்காய் உலகில் அனுப்பி சிலுவை வழி மீட்டெடுத்தார். புனித பேதுரு தன் முதல் திருமுகத்தில் சிலுவையில் தம் உடலின் மீது நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார் *(1 பேதுரு 2: 24)* என்கிறார். ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் அன்பு செலுத்தி அவர்களையும் சேர்த்து பந்தியமர்த்தார் *(மாற். : 16)*. வரி வசூலித்து வந்த சகேயு இயேசுவின் கனிவான பார்வையால் மனம்திருந்தி செயல்பட்டார் *(லூக். 19: 8)*. பாவியாக இருந்தும் தான் அன்பு கூரப்படுவதை உணர்ந்த சகேயு பிறரை அன்பு கூருபவராக மாறுகிறார்.

இறைவன் பாவிகளை அல்ல, பாவத்தையே வெறுக்கிறவராக இருக்கிறார் என்பதை நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. இறையன்பு என்ற கட்டளையைப் பற்றி பேசிய இயேசு உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்கிறார் *(லேவி. 19:*

18, மாற். 12: 31). யூதர்களின் பார்வையில் இக்கட்டளை தம் சொந்த இனத்தாரை மட்டுமே அன்பு செய்ய தூண்டியது (விப. 2: 1). அதாவது அடுத்திருப்பவர் என்பது ஒரு சக யூதரையே குறித்தது. ஆனால், இயேசுவோ அன்புக்கு எல்லை இல்லை எனத் தெளிவாகக் கற்பித்தார் (லூக். 10: 25). உண்மையான நிபந்தனையற்ற அன்பு என்பது தெரிந்தவர்களை, அறிமுகமானவர்களை அன்பு செய்வதல்ல. எந்த நிபந்தனையும் இல்லாமல், எதையும் எதிர்பார்க்காமல் அறிமுகமில்லாத புதியவர்களையும் அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில்தான் அடங்கியுள்ளது.

கிறிஸ்தவ நம்பிக்கையின் கரு மீட்பு. அது இயேசுகிறிஸ்துவினால் அனைவருக்கும் இலவசமாய் வழங்கப்படுகிறது. அடிமைத்தனத்திலிருப்போர் கடவுளிடம் அபயமிடும்போது மீட்பரை அனுப்பி விடுவிப்பார் (எசா. 19: 20) என்ற இறைவாக்கு இயேசுநாதரில் நிறைவேறியது. அந்த மீட்பு மனித நீதியினால் உண்டானது அல்ல. அது இறைவனின் மட்டில்லாத அருளின் ஈவு (எபே. 2: 8). மல்லிகை மலரை கசக்கிப்பிழியும் போது மல்லிகையின் மணம் மாறாததுபோல நற்குணம் படைத்த கடவுளின் குணமும் தியாகமும் ஒப்புயர்வற்ற மீட்பை அனைவரும் பெற்று களிகூர்ந்து மகிழ ஏதுவாயிற்று.

அருள்திரு. அறிவர் P. ராஜா ஜெய சிங்

தவக்காலம்: புதுப்பிப்பதற்கு ஓர் அழைப்பு

Lent: A Call to Renewal

எசே. 36: 24-36 *உரோ. 11: 33-12:2*
திபா. 51 *மத். 6: 5-18*

"சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன்: கடவுளுக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு" (உரோ. 12: 1).

தவக்காலம் என்றால் குளிர் காலத்தில் இலைகள் எல்லாம் உதிர்ந்து, இலையுதிர் காலத்தில் துளிர்விடுவது போன்றது. இக்காலத்தில் வறண்டுப்போன பழைய வாழ்வின் அனுபவங்கள் உதிர்ந்து வளமையான புதுமையான வாழ்வை உருவாக்கம் செய்ய வேண்டும்.

புதுப்பித்தல் என்பது இருக்கின்ற ஒன்றை புதுமையாக மாற்றுதல். பழைய பொன் ஆபரணத்தை புதுப்பித்தல். பழைய பாத்திரங்களைப் புதுப்பித்தல். போர்க்காலங்களில் போருக்குச் செல்லும் போர் வீரர்கள் ஓர் இடத்தில் அமர்ந்திருந்து, போருக்குச் சென்று பயன்படுத்திய பழுதாய்ப்போன ஆயுதங்களைப் புதுப்பித்து மறுபடியும் போருக்குச் செல்ல தங்கள் ஆயுதங்களைப் புதுப்பிப்பர். இதைப்போன்று கூர்மையிழந்த நமது பக்தி வாழ்வினைக் கூர்மையாக்கும் பட்டறை அனுபவம்தான் தவக்காலத்தின் அனுபவம்.

பூர்வ நாட்களில் பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்படும் நாளாக இது ஆசரிக்கப்பட்டது. பாவத்தை உணர்ந்து அறிக்கை செய்ய விரும்புவோர் காலணி இல்லாமல் வெறுங்காலுடன், முரட்டு சாக்குத்துணி ஆடை அணிந்து தலைகுனிந்து செயல்படுவது தங்கள் உள்ளான மனந்திரும்புதலைக் குறிக்கும். இத்தாழ்மை கோலத்தில் தங்கள் மீது சாம்பலைத் தூவிக் கொண்டு பேராயர் முன் வருவர். "ஆதாம் பாவம் செய்தபடியால் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டதுபோல, நீயும் திருச்சபையினின்று தள்ளப்படுகிறாய்" என்ற சாபத்தைக் கூறிக் கொண்டு பேராயரும் சாம்பலைத் தூவுவார். இவர்கள் உண்மையாகவே பாவ உணர்வு பெற்றுள்ளார்கள் என குருமார் சான்று கொடுக்க வேண்டும். அதன் பின்னர் பேராயர் ஏற்புக் கட்டளை கொடுக்க, அவர்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டு திவ்ய நற்கருணை கொடுக்கப்படும். பின்னர் காலம் செல்லச் செல்ல தேவ கோபாக்கினை கூறல் என்ற எச்சரிப்பு வாசகம் சாம்பற்புதன்கிழமை ஆராதனையில் வாசிக்கும் முறைமை உண்டாயிற்று.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் மிகுந்த துக்கம் ஏற்படும்போது இரட்டு உடுத்திக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்து கொள்ளும் மக்களை நாம் காண்கின்றோம். யூதர்களை அழிக்க சட்டம் பிறந்தபொழுது மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு அகாஸ்வேரு ராஜாவின் அரண்மனை வாசல் முகப்பு மட்டும் வந்தான் என்று காண்கின்றோம் (எஸ்தர் 4: 1, 2). அப்சலோமின் சகோதரியாகிய தாமார் மிகுந்த துக்கமடைந்திருக்கும் வேளையில் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப் போட்டுக் கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலைமேல் வைத்து சத்தமிட்டு அழுதுகொண்டு போனான் என்று காண்கிறோம் (II சாமு. 13: 19). யோபு தன் பிள்ளைகள் அனைவரின் மரணத்தையும் மற்றும் துயரமான செய்திகளையும் கேட்டபொழுது தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, சாம்பலில் உட்கார்ந்தான் (யோபு 1: 20; 2: 8) என்று காண்கின்றோம். தீர்க்கதரிசியாகிய யோனாவின் மூலம் எச்சரிப்பின் செய்தியைக் கேட்ட நினிவேயின் ராஜா தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான் (யோனா 3: 6) என்று காண்கின்றோம். இத்தகைய நிகழ்வுகள் அத்தனையும் சாம்பல் புதன்கிழமை என்பது புதுமையாகுதலின் வெளிப்பாடு என்பதை வெளிப்படுத்துகின்றது.

1. உருக்குலைந்ததை மீட்டுருவாக்கும் காலம்: (எசே. 36: 25)

பரிசுத்தம் என்பது பரமனுடைய வீட்டின் பரம இரகசியம். பரிசுத்த வாழ்வில் கேடு விளைவிக்கின்றபோது பரமனின் திட்டத்தில் கேடு விளைகிறது என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இஸ்ரவேல் சமூகத்தவர் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாய் போனபோது அங்கிருக்கும் பரிசுத்தமற்ற நிகழ்வுகளை எல்லாம் தங்களது வாழ்வின் அடித்தளம் ஆக்கிகொண்டார்கள். இதனைத் தான் எசேக்கியேல் தீர்க்கன் தன் உரையில் மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறார்.

இஸ்ரவேல் மலைகளும், சிகரங்களும், பர்வதங்களும், ஆறுகளும், பள்ளத்தாக்குகளும், ஓடைகளும், பட்டணங்களும் பாழாய் கிடந்தன. இங்கு இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தெய்வங்களுக்கு பலிபீடங்களையும், மேடைகளையும் கட்டி ஆராதனை செய்து, தூபம் காட்டி தங்கள் குமாரர்களையும், குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணினார்கள். உங்கள் குமாரர்களையும், குமாரத்திகளையும், பலியாக செலுத்தினார்கள். இந்த தேசத்தின் நடுவில் குற்றமற்ற இரத்தம் சிந்தப்பட்டது. அநேகரை சாகக் கொடுத்தார்கள். என் வேதத்திற்கும், கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாமல் போனார்கள். இஸ்ரவேல் மக்களுடைய உக்கிரகம் கடவுளுடைய நாசியில் ஏறிற்று. எனவே, இந்த ஜனத்தை பஞ்சத்திற்கும், பட்டயத்திற்கும்,

கொள்ளை நோய்க்கும், துஷட மிருகத்திற்கும் ஒப்புக்கொடுத்தார். பூமியில் உள்ள எல்லா தேசங்களிலும், எல்லா திசைகளிலும் வாரி இறைத்து தூற்றிப்போட்டார். இவர்கள் சென்று சேர்ந்த புற ஜாதி தேசத்தில் கடவுளுடைய பரிசுத்த நாமத்தை, பரிசுத்த குலச்சலாக்கினார்கள். இதைப் பார்த்த புற ஜாதிகள் பரியாசம் பண்ணி கடவுளுக்கு விரோதமாக பேசினார்கள். எனினும் கடவுளுடைய பரிசுத்த நாமம் பரிசுத்த குலைச்சல் ஆக்கப்படுவதற்கு கடவுள் இடம் கொடுப்பதில்லை என்பதை எசேக்கியா தீர்க்கன் வழியாய் வெளிப்படுத்துகிறார். எனவே, பரிசுத்த நாமத்தின் நிமித்தம் கடவுள் இரங்கி இஸ்ரவேல் ஜனங்களை மறுபடியும் இஸ்ரவேல் தேசத்தில் கூட்டி சேர்ப்பேன் என்று திருவுளம் பற்றுகிறார். இதற்காகவே இஸ்ரவேல் தேசத்தார் மீது ஜலம் தெளித்து நான் உங்களை தூய்மையாக்குவேன் என்று திருவுளம் பற்றுகிறார். அவர்களுடைய கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுப்பேன் என்கிறார். கர்த்தருடைய ஆவியை அவர்கள் உள்ளத்தில் வைத்து அவர்களோடு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்கிறார். அப்பொழுது கர்த்தருடைய வேதத்திற்கும், கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும், கீழ்ப்படிவார்கள், அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். மறுபடியுமாக இந்த தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலாகும். அவாந்திர வெளிகள் பயிர் நிலமாகும். தரிசு நிலங்கள் பயிரிடப்படும். புல்வெளிகளில் ஆடுகளுக்கு மேய்ச்சல் உண்டாகும். மிருக ஜீவன்கள் தாபரங்களில் சுகமாய் தங்கும். கோதுமையின் பலன் பன்மடங்காகும். விருட்சங்கள் எண்ணற்ற கனிகளைக் கொடுக்கும். பாழான இடிக்கப்பட்ட பட்டணங்கள் எடுத்துக் கட்டப்படும். பர்வதங்கள் திராட்சை ரசத்தைப் பொழியும். மலைகள் பாலாய் ஓடும். ஆறுகள் பிரகாயித்து ஓடும். அதைப்போன்று உருக்குலைந்த நம்முடைய வாழ்வை மீண்டும் தூய்மையாக்கி இறைவனுடைய சமூகத்தில் திரும்ப கொண்டுவருவதுதான் தவக்காலம்.

2. விண்ணரசின் விழுமியங்களைப் பின்பற்றும் காலம்: *(மத். 6: 18)*

விண்ணக வீட்டின் திறவுகோல்களாய் திருமறை மூன்று விழுமியங்களை எடுத்து இயம்புகிறது. *1)* தர்மம், *2)* இறைவேண்டல், *3)* நோன்பு *(உபவாசம்)*. இவைகள் ஆன்மிக வாழ்வின் வளர்ச்சியின் பயணத்தில் ஆன்மிக வாழ்வின் ஆசாரங்களாய் மாறிப்போயின. இத்தகைய விழுமியங்கள் ஆசாரங்களாய் அல்ல; மனித வாழ்வின் அனுபவங்களாக வேண்டும் என்று இயேசு கிறிஸ்து விரும்புகிறார். இதனைத்தான் இத்திருமறைப் பகுதி மத். *6: 5-18* தெளிவாய் விளக்கி நிற்கின்றது. இதற்கு உயிரூட்டம் கொடுப்பதற்கு உரிய காலம் தான் இத்தவக்காலம்.

அ) தர்மம்

தர்மம் செய்தால் புண்ணியம் கிடைக்கும். அது நீதியாக கருதப்படும் என்று யூதர்கள் தர்மம் செய்து வந்தார்கள். யூத மதப் போதகர் ஒருவர்

ஒரு மனிதன் தர்மம் செய்வானானால் அவன் பலி கொடுப்பதைப் பார்க்கிலும் மேன்மையான புண்ணியத்தை செய்கிறான் என்று கூறுகிறான். தர்மம் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும், வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே என்று கூறுகிறார். ஜெபிக்கும்பொழுது நீ மனுஷர் காணும்படியாக ஜெப ஆலயங்களிலும், சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ணாதே என்று மத். 6: 5-இல் கூறுகிறார். 17-ஆம் வசனத்தில், நீ உபவாசிக்கும் பொழுது அந்த உபவாசம் மனிதருக்குக் காணப்படாதபடி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணும்படி உபவாசி என்று கூறுகிறார். அதாவது, புகழ்ச்சியை விரும்பும் நோக்கம் உள்ளவனாக இராதே என்று கூறுகிறார். இது என்ன நோக்கம்? மனிதன் என்னைப் பாராட்ட வேண்டும், என்னைப் புகழ்ச்சியாக எடுத்துக்கூற வேண்டும் என்பது பிரதிபலனை எதிர்பார்த்து தானதர்மம் செய்ய விரும்புவதே மனித இயல்பு. இந்த நோக்கத்தோடு நாம் ஆசாரங்களில் ஈடுபடக்கூடாது.

அந்த நாட்களில் தர்மம் செய்யும்பொழுது ஒரு மனிதன் சாதாரணமாய் தன்னுடைய பெருமைக்காகவும், மற்றவர்கள் தன்னைப் புகழ்வதற்காகவும் தர்மம் செய்வது வழக்கம். அக்காலத்தில் தண்ணீர் தர்மம் செய்வது சாதாரணமான வழக்கமாக இருந்தது. ஒரு மனிதன் தண்ணீர் சுமக்கக்கூடிய ஒருவனைக் கண்டுபிடிப்பான். தண்ணீர் சுமக்கக் கூடியவன் உரத்த குரல் உள்ளவனாக இருக்க வேண்டும். அவனிடத்திலே போய் "நான் தண்ணீர் தர்மம் செய்ய விரும்புகிறேன். நீ எனக்குத் தண்ணீர் சுமந்து கொண்டு வருவாயா?" என்று கேட்டு அவனைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளுவான். தண்ணீர் சுமக்கிறவன் உரத்த சத்தமாய் "தாகம் உள்ளவர்கள் எல்லாரும் இங்கே வந்து தண்ணீரைப் பெற்றுக் கொள்ளலாம்" என்று கூறுவான். அப்படி அவன் கூப்பிடும்பொழுது, அநேகர் தண்ணீர் குடிக்கும்படியாக அவனை நோக்கி வருவார்கள். தண்ணீர் தர்மம் செய்கிற மனிதன் அவனுக்கு அருகிலே நின்று கொண்டு, "நீங்கள் எல்லாரும் என்னை ஆசீர்வதியுங்கள், நான்தான் இந்தத் தண்ணீரைக் கொடுத்தவன்" என்று உரத்த சத்தமாய்க் கூறுவான். இப்படித் தன்னுடைய தர்மத்தைத் தாரை ஊதுவித்து மற்றவர்களுக்கு அறிவிப்பது சாதாரண வழக்கம். ஆதலால் ஆண்டவர், "மற்றவர்கள் உன்னைப் பாராட்ட வேண்டும், ஆசீர்வதிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு தர்மம் செய்யாதே" என்று கூறுகிறார் (மத். 6: 2).

ஆ) இரைவேண்டல்

யூத மார்க்கத்தில் ஜெபம் செய்வது முக்கியமான கடமையாக கருதப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணியிலும் பிற்பகல் 3.00 மணியிலும் மாலை 6.00 மணியுமாக மூன்று முறை யூதர்கள் ஜெபிப்பார்கள். அப்படி செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்பது அவர்களது நம்பிக்கை. அவ்விதமாகவே ஜெபத்திலும் மனிதர் கேட்கும்படியாக செய்யப்படுகிற

ஜெபங்கள் உண்டு. அழகான வார்த்தைகளோடும் அடுக்குச் சொற்களோடும் மற்றவர்கள் கேட்க வேண்டும் என்பதற்காக, நீளமான ஜெபங்கள் செய்வதைக் குறித்து ஆண்டவர் பேசுகின்றார். மதத் தலைவர்கள் வெளியரங்கமான மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் நின்று கொண்டு தங்களுடைய கைகளை உயர்த்தி, தலைகளை வணங்கி உரத்த சத்தத்தோடு ஜெபிப்பார்கள். குறிப்பாக சந்தை வெளியிலும், வீதிகளிலும் இவ்விதமாக நின்று ஜெபிப்பார்கள். அதைப் பார்த்துவிட்டு, இவர்கள் எவ்வளவு பக்தியுள்ளவர்கள் என்று மற்றவர்கள் கூற வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். "கடவுளோடு அந்தரங்கத்திலே தனி ஜெபம் செய்யாதவர்கள் பகிரங்கத்திலே நீள ஜெபம் செய்கிறார்கள்" என்று ஒருவர் கூறினார். அது உண்மைதான். அநேக சமயம் அந்தரங்கத்தில் சரியான ஜெப வாழ்வு இல்லாவிட்டாலும் அழகாக நீண்ட நேரம் பகிரங்க ஜெபம் செய்துவிடுகிறோம். இருதயங்களைப் பார்க்கிற ஆண்டவர் நோக்கங்களை நன்றாகப் பகுத்து அறிகிறார்.

இ) நோன்பு

யூத மார்க்கத்தில் ஒரு யூதன் ஒரு ஆண்டுக்கு ஏறக்குறைய 5 அல்லது 6 முறை உபவாசிக்க வேண்டும் என்ற ஒரு ஆசாரம் இருந்தது. பரிசேயர் வாரத்திற்கு 2 முறை திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமையில் உபவாசித்து வந்தார்கள். மோசே சீனாய் மலையில் ஏறின நாள் திங்கட்கிழமை என்றும், அங்கிருந்து இறங்கி வந்தது வியாழக்கிழமை என்றும் நம்பி வாரத்தில் இந்த 2 நாட்களிலும் அவர்கள் உபவாசித்து வந்தார்கள். உபவாசம் செய்யும் யூதர்கள் தாங்கள் தெருக்களிலே செல்லும்போது மற்றவர்கள் தங்களுடைய உபவாசத்தைக் காண வேண்டுமென்பதற்காக தலை வாரிக்கொள்ளாமல், நல்ல ஆடை அணியாமல், தங்களுடைய முகம் வெளுத்ததாக காணும்படி சாம்பல் பூசிக்கொண்டு தெருக்களிலே காணப்படுவார்கள். இதை ஆண்டவர் கண்டித்து, "மனிதர் பார்க்கிறபடி நீ உன் ஆசாரங்களைச் செய்யாதே. அப்படிச் செய்வாயானால் உன் பலனை ஏற்கனவே அடைந்து விட்டாய்" என்று கூறுகிறார். நம் பக்தியில் எந்த அளவு மனித புகழ்ச்சிக்காக அநேக காரியங்களைச் செய்கிறோம்? ஆலயத்திற்குச் செல்லுவதிலும், கடவுளை ஆராதிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும், காணிக்கை கொடுப்பதிலும், ஜெபிப்பதிலும் எவ்வளவு தவறான நோக்கம் காணப்படுகிறது? இத்தகைய நிலைபாடுகளுக்கு புதிய உயிரூட்டத்தை கொடுப்பதற்காகதான் இத்தவக்காலத்தில் தர்மம் செய்தல், ஜெபித்தல், உபவாசித்தல் போன்றவைகளுக்கு உயிரூட்டம் கொடுக்கப்படுகின்றது.

எனவே, நாமும் இத்தவக்காலத்தில் இழந்துப்போன பரிசுத்தத்தை திரும்பப் பெற்று மறைந்து போகும் விண்ணரசின் விழுமியங்களுக்கு உயிர் கொடுத்து புதுப்படைப்பாய் உருமாற்றம் பெறுவோம்.

அருள்திருமதி. அறிவர் பெபின் தங்கராஜ்

பரிவோடிருக்க அழைப்பு

Call to be Compassionate

ரூத்து 2: 4-20 *எபே. 4: 25-32*
திபா. 145 *மாற்கு 1: 40-45*

இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்றார் (மாற்கு 1: 41).

தவக்காலம் நம்மை உடன்படிக்கையின் மக்களாக மாற்றுகிற மனமாற்றத்தின் காலம். உடல், ஆன்மா ஒடுக்கங்களைச் செய்து இறைவனுக்கு உகந்தவர்களாக்குகிற நற்பண்புகள் மிகவும் அவசியம். பரிசுத்த இறைவனின் பண்புநலனாகிய பரிவோடிருக்க இன்றைய திருமறைப் பாடங்கள் நமக்கு பகிரங்கமான அழைப்பு விடுத்துள்ளது. பரிவு அல்லது மனஉருக்கம் (Compassion) என்பது உண்மையான அன்பின் பிரதிபலிப்பு ஆகும். இறைவன் இரக்கமும், பரிவும் உள்ளவர் (விப. 34: 6). ஆக அன்பு, இரக்கம், பரிவு, பரிசுத்தம் என நற்பண்புகள் நிறைந்த இறைவனின் பண்புகளை வெளிப்படுத்தி பற்றுறுதி வாழ்வு வாழ இத்தவக்காலம் நமக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

1. ஏழைப் பெண்ணிற்கு போவாஸ் காட்டிய பரிவு:

உனக்குப் பரிவு காட்டியவருக்கு ஆண்டவர் ஆசி வழங்குவாராக! (ரூத்து 2: 19)

ரூத்து என்றால் நட்பு என்பது பொருள். நீதித்தலைவர்கள் ஆட்சியாளர்களாய் இருந்த காலத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. யூதாவிலுள்ள பெத்லகேம் ஊரைச் சார்ந்த எலிமலேக் தனது மனைவி நகோமி மற்றும் மகன்கள் மக்லோன், கிலியோன் ஆகியோருடன் மோவாப் நாட்டிற்கு பஞ்சம் பிழைக்க புலம் பெயர்ந்து சென்றார். மகன்கள் இருவரும் ஓர்பா, ரூத் என்போரை திருமணம் செய்தனர். ஒரு கட்டத்தில் எலிமலேக் மற்றும் இரண்டு மகன்களும் மரித்துப்போக, நகோமியும், ஓர்பா, ரூத்தும் தன்னந்தனியாய் விடப்பட்டனர். இக்கட்டான காலகட்டத்தில் ஓர்பா பிரிந்துபோக ரூத் தனது பெயரின் பொருளுக்கு ஏற்ப நட்பு கொண்டவராய் நகோமியை விட்டு பிரியாதிருந்தாள். ஏதுமற்ற ஏழைகளாய் இருவரும் பெத்லகேம் திரும்பி வந்தனர். அப்போது வாற்கோதுமை அறுவடைக்காலம். சிந்திய கதிர்களை சேகரிக்க சென்ற ரூத் தற்செயலாக போவாஸ் எனும் செல்வந்தரின் வயலுக்கு செல்ல நேரிட்டது. யாருடைய கண்களில் தயை கிடைக்குமோ? (2: 2) என்ற கேள்வியுடன் கதிர் பொறுக்கச் சென்றவருக்கு, என்னை ஏன் இவ்வாறு கருணைக்கண் கொண்டு

இவ்வளவு பரிவுடன் நடத்துகிறீர் (2: 10) என்று அறிக்கைவிடும் அளவில் இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவரின் இறக்கையின் அரவணைப்பைத் தேடி வந்த (2: 12) அயல் நாட்டுப் பெண்ணாகிய ரூத்து இறை அனுபவம் பெற்றுக்கொண்டார். இதனை விசாரித்து அறிந்து கொண்ட நகோமி உனக்குப் பரிவு காட்டியவருக்கு ஆண்டவர் ஆசி வழங்குவாராக (2: 19) என வாழ்த்துக் கூறினார். எளியவரிடம் பரிவு காட்டிய போவாஸ் இறைவனின் ஆசிபெற்று அதாவது இயேசுவின் வம்ச வரலாற்றில் (மத். 1: 5) இடம் பிடிக்குமளவிற்கான மதிப்புக்குரியவரானார்.

2. தொழுநோயாளிக்கு இயேசு காட்டிய பரிவு:

இயேசு அவர் மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி தொழுநோயாளியைத் தொட்டார் (மாற்கு 1: 41).

ஏழைக்கு பரிவு காட்டி இறைவனின் ஆசிபெற்ற போவாசின் தலைமுறையில் இறைமகனாகப் பிறந்த (மத். 1: 5) அருள்நாதர் இயேசு கிறிஸ்து மனுமக்கள் மீது பரிவு கொள்வதை இயல்பாகவே கொண்டு இறைப்பணி புரிந்தார். மத். 9: 36-ல் திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார் எனும் பதிவு உள்ளது. மத். 20: 34-ல் இயேசு பரிவு கொண்டு அவர்களுடைய விழிகளைத் தொட்டார்; உடனே பார்வையற்றோர் பார்வை பெற்றனர் எனவும் லூக்கா 7: 13-ல்நாயீன் ஊர் கைம்பெண் மீது இயேசு பரிவு கொண்டு அழாதீர் என தேற்றினார்; மரித்துப்போன அவர் மகன் உயிர்பெற்றான். திருப்பணியில் இயேசு கூறிய உவமைகளில் லூக். 10: 33. நல்ல சமாரியர் பாதிக்கப்பட்ட மனிதர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர் மீது பரிவு கொண்டார் என்பதையும் லூக்கா 15: 20-ல் காணாமற்போன மகன் தொலைவில் வந்து கொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு பரிவு கொண்டு, ஓடிப் போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார் எனும் உணர்வுப்பூர்வமான உறவு முறையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய தியானப் பகுதியில் இயேசு தொழுநோயாளர் மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு (லூக். 1: 41) குணமாக்கிய நிகழ்வு இடம் பெற்றுள்ளது. இயேசு வாழ்ந்த காலத்தில் தொழுநோய் பாவத்தின் விளைவு எனக் கருதி ஊருக்கு புறம்பே ஒதுக்கி வைத்து அவர்களைக் கண்டாலோ தொட்டாலோ தீட்டு என தீர்மானித்து புறக்கணிக்கப்பட்டு வந்தனர். ஆனால் இயேசு தொழுநோயாளியைக் கண்டு பரிவு கொண்டு, தொட்டு நலமடையச் செய்தார்.

ஆஸ்திரேலியாவில் பிறந்த கிராஹாம் ஸ்டெயின்ஸ் ஒடிசா மாநிலத்திற்கு 1965-ம் ஆண்டு குடும்பமாக வந்து கடவுளின் அன்பை தொழுநோயாளிகளுக்குக் காட்டி, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்து வந்தார். தானும், தனது துணைவியார் திருமதி. கிளாடிஸ், மகள் எஸ்தர், மகன்கள் 11 வயது பிலிப்பு, 7 வயது தீமோத்தி என குடும்பமாக இறைப்பணி புரிந்து வந்தனர். தீய குணம் நிறைந்த சமய அடிப்படை

வாதிகள் சிலரால் 1999-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் நாள் கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது மகன்கள் இருவரையும் தாங்கள் கிராமத்தில் இரவு இறைப்பணியை நிறைவு செய்துவிட்டு தமது வாகனத்தில் படுத்து அயர்ந்து தூங்கியபோது அநியாயமாக எரித்து கொடூரமாகக் கொல்லப்பட்டனர். தன் கணவர், மகன்கள் என மூன்று பேரை படுகொலை செய்தவர்களை கிளாடிஸ் அம்மையார் பரிவுகொண்டு மன்னித்து விட்டார். தம் கணவர் விட்டுச்சென்ற 20 தொழுநோயாளிகளையும் தானும் தன் மகள் எஸ்தரும் தொடர்ந்து கிறிஸ்துவின் பரிவுடன் பராமரித்தது பாராட்டுதற்குரியது.

உலகில் அன்பையும், பரிவையும் விட பெரிதாய் எதுவும் இல்லை. அவைகள் தான் மனித மாண்பை மீட்டெடுக்கிறது. அதுவே சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும், சமூக நீதியையும் நிலைநாட்டுகிறது. அத்தகைய பரிவு கொண்டு பற்றுறுதி வாழ்வு வாழ பரமன் அழைப்பு விடுத்துள்ளார். விசுவாசிப்போம், கீழ்ப்படிவோம், செயல்புரிவோம், இறைஆசியை உரிமையாக்குவோம்.

அருள்திரு. D. ஜான் ஜெபதாஸ்

ஒருவருக்கொருவர் சுமைகளைத் தாங்க அழைப்பு

Call to Shoulder Each Other's Burdens

2 சாமு. 9: 1-13 *கலா. 6: 1-10*
திபா. 41 *மாற்கு 2: 1-12*

"ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு, கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்" (கலா. 6: 2).

தத்துவப் பேராசிரியர் ஒருவர் கல்லூரி மாணவர்களுக்கு வகுப்பு எடுத்துக்கொண்டு இருந்தார். ஒரு காலியான பெரிய ஜாடியை எடுத்து மேஜை மீது வைத்தார். பிறகு, இரண்டு அங்குலம் அளவு கொண்ட கற்களை அதன் உள்ளே போட்டார். ஜாடி நிரம்பியதும் மாணவர்களிடம் அதைக்காட்டி "இந்த ஜாடி எப்படியுள்ளது?" என்று கேட்டார். "நிரப்பிவிட்டது" என்று மாணவர்கள் பதிலளித்தார்கள். பிறகு அவர் கூழாங்கற்கள் இருந்த ஒரு பெட்டியை எடுத்தார். அரை சென்டிமீட்டருக்கும் குறைவாக இருந்த கூழாங்கற்களை ஒவ்வொன்றாக எடுத்து ஜாடியில் போட்டார். ஏற்கனவே போடப்பட்டிருந்த கற்களின் இடுக்குகளில் அவை நிரம்பின. இனி ஒரு கூழாங்கல்லைக்கூடப் போடமுடியாத அளவு ஜாடி நிரம்பியது. இப்போதும் இந்த ஜாடி நிரம்பிவிட்டதா? என்று ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து கேட்டார். முழுவதுமாக நிரம்பிவிட்டது என்றனர் மாணவர்கள். மறுபடியும் ஆசிரியர் அந்த ஜாடியில் மணலை மெதுவாக போட ஆரம்பித்தார். அது எல்லா இடைவெளிகளிலும் சென்று ஜாடியின் அனைத்து இடுக்குகளிலும் மணல் நிறைந்தது. மாணவர்களிடம் "இப்போது ஜாடி எப்படியுள்ளது?" என்று கேட்டார். ஒருமித்த குரலில் மாணவர்கள் "சிறிதுகூட இடமில்லாமல் நிரம்பிவிட்டது" என்றனர்.

பேராசிரியர் பேச ஆரம்பித்தார். இந்த ஜாடி நம் வாழ்வை பிரதிபலிக்கிறது. நான் முதலில் போட்ட பெரிய கற்கள் நம் வாழ்வின் முக்கியமான கடவுளுக்கு முதலிடம் தருவது. குடும்பத்தை பேணுவது, ஆரோக்கியத்தை நாடுவதாகும். மற்ற எல்லாவற்றையும் இழந்தாலும் இவற்றை தக்க வைத்துக் கொண்டால் நம் வாழ்வு நிறைவுபெறும். அடுத்து நான் போட்ட கூழாங்கற்கள் நம் பணி, வீடு, கார் போன்ற உடமைகள் மற்றவையெல்லாம் நான் ஜாடிக்குள் கொட்டிய மணலைப் போன்றது. மிகவும் சாதாரணமானவை. நீங்கள் முதலில் ஜாடியை மணலால் நிரப்பிவிட்டால் பிறகு அதில் கூழாங்கற்களுக்கும், கற்களுக்கும் இடமிருக்காது என்றார்.

நம் வாழ்விலும் நாம் சுமக்க வேண்டிய பாரம் எது? சுமக்க தேவயற்ற பாரம் எது? என்ற தெளிவு நமக்கு வேண்டும். இன்று வீணான

கவலைகளாலும் வருங்காலத்தை குறித்த பயத்தாலும் நம் வாழ்வை நிரப்பிக் கொள்கிறோம். கவலையாலும் பயத்தாலும் இதயம் கனத்து பாரமாகிறது. இது தேவையில்லாத பாரம். நாம் விரும்பி சுமக்க வேண்டிய பாரம் பிறரின் சுமைகளே ஆகும். பவுலார் வழியாக ஆண்டவர் தரும் அழைப்பு ஒருவர் மற்றவரின் பாரத்தை தாங்குவதாகும். எவ்வாறு நாம் பிறரின் பாரத்தை தாங்க வேண்டும். அப்படி தாங்குவதன் வழியாக நாம் எதை வெளிப்படுத்துகிறோம் என்பதை தியானிப்போம்.

1. கடவுளின் கருணையைக் காட்டுதல்: *(2 சாமு. 9: 1-13)*

பிறர் சுமைகளைச் சுமப்பது என்பது சுமக்க முடியாத சுமையுடன் வாழ்வோரின் உடன் இருப்பது. இத்திருமறைப் பகுதியில் தாவீது சவுலின் வீட்டில் யார் தனக்கு பயன்படுவார்கள். யார் தன் சுமையை சுமப்பார்கள் என்று அல்ல, யாருக்கு தன்னால் உதவ முடியும் என்ற எண்ணம் கொள்கிறார். அவர் பயனுள்ள ஒருவரைத் தேடவில்லை, தன்னால் பயன்பெறுபவரைத் தேடுகிறார்.

மெபிபொசேத்து இரண்டு காலும் ஊனமுற்றவர். லோதாபாரில் வசிக்கிறவர். "லோதாபார்" (Lo-Debar) என்றால் "No word" or "No thing", "No Pasture" or "Nothing town". அவர் வசிக்கும் லோதாபார் வெறுமையான இடம். இயலாமையோடு வாழ்கிறார். உடல் ஊனம் சாபமாகக் கருதப்பட்ட நாட்களில் தாவீது மெபிபொசேத்தை ஏற்று கடவுளின் கருணையைக் காட்டுகிறார்.

கடவுளின் கருணை கீழ்நிலைக்கு செல்வதல்ல. கீழ் நிலையிலிருப்போரை தன் நிலைக்கு உயத்துவதாகும். தாவீது மெபிபொசேத்தை Nothing town-லிருந்து ராஜாவின் மேசைக்குக் கொண்டு வந்து அவரது சுதந்திரத்தை மீட்டெடுத்து ராஜாவின் மகன்களில் ஒருவராக நடத்துகிறார். மெபிபொசேத்தின் இழப்புகள், அவமானம், மற்றும் பாரங்களை தாவீது சுமந்து கடவுளின் கருணையைக் காட்டுகிறார்.

2. கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுதல்: *(கலா. 6: 1-10)*

ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள் *(கலா. 6: 2).*

பவுலார் கலாத்திய கிறிஸ்தவர்களிடையே இருந்த தீர்ப்பிடும் குணத்தை அறிந்து அதற்கு அறிவுரை கூறுகிறார். இவ்வுலகில் சிறந்த மனிதர்கள் கூட தவறிழைக்க முடியும். பலர் தங்களை பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து தங்களை நீதிமான்களாக எண்ணுகிறார்கள். பவுல் தவறுகிறவர்களை தண்டிக்காதீர்கள், திருத்துங்கள் என அழைப்பு தருகிறார். ஒரு சகோதரனோ, சகோதரியோ ஒரு குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டால் ஊனியல்பின் உள்ளுணர்வு வெளிப்படுத்துவது கண்டனம் செய்வது அல்லது கிசுகிசுப்பது. ஆவியால் உணர்த்தப்படுவோர் அவர்களை அந்த தவறிலிருந்து மீட்டு திருத்துவர். கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவது

அவரின் குணாதிசயத்தில் அடித்தளமாக கொண்ட ஒரு கட்டளை. அவர் நம் பாவங்களை சிலுவையில் தம்முடைய சரீரத்தில் சுமந்தார்.

ஆகவே, கிறிஸ்துவின் அன்புச் சட்டத்தை ஏற்று பிறர் துன்பத்தில் உடனிருக்க வேண்டும். பவுலார் கிறிஸ்தவ வாழ்க்கைகுரிய ஒழுங்குகளில் ஒன்றாக "மகிழ்வாரோடு மகிழுங்கள், அழுவாரோடு அழுங்கள்" (உரோ. 12: 15) என்பதை முக்கியப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவது என்பது, ஆவியில் நடப்பதும் தங்களின் சுமையை சுமப்பதும் மற்றவர்களின் பாரத்தை சுமக்க உடனிருந்து உதவுவதுமாகும்.

3. கடவுளின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்துதல்: *(மாற்கு 2: 1-12)*

பிறர் சுமையை சுமத்தல் என்பது நம்பிக்கையின் செயல்பாடு (faith in action) மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடு (faith in expression) ஆகும். இங்கு முடக்குவாதமுற்றவர் உதவியற்றவராக இருக்கிறார். அவர் தான் நலம் பெறவேண்டும் என்றே எண்ணியிருப்பார். ஆனால் அவரால் அங்குலம் கூட நகர முடியாது. இச்சூழ்நிலையில் நான்கு நண்பர்களின் நம்பிக்கையின் செயல்பாடு நம்பிக்கையின் வெளிப்பாடாகியது. முடக்குவாமுற்றவருக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே இருந்த தடைகளை இந்த நான்கு நண்பர்களின் நம்பிக்கை உடைத்தெறிகிறது. நிரம்பியிருக்கும் இல்லம், அடைக்கப்பட்ட கதவு, வழியில் உள்ள கூட்டம், வீட்டின் மேல் உள்ள கூரை என எதுவும் இவர்கள் கடவுளின் மீது கொண்ட நம்பிக்கையால் பிறர் சுமைகளைச் சுமப்பதைத் தடுக்க முடியவில்லை.

இன்று நாம் நம் நம்பிக்கையை வெளிப்படுத்த பல வழிகளை தெரிவு செய்கிறோம். ஆனால் இந்த நான்கு நண்பர்களைப் போலவே திருச்சபையாக நாமும் தங்களைத் தாங்களே சுமக்க முடியாதவர்களைச் சுமக்க, அவர்களுக்காக இறைவேண்டல் செய்ய, சோர்வு, நோய்மையின் தனிமையின் நேரங்களில் அவர்களோடு உடனிருந்து நம்பிக்கையை வெளிப்படுத்த நான்கு நண்பர்களும் நமக்கு அறைகூவல் தருகிறார்கள்.

பேதுரு கூறுகிறார், சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார் . . . *(1 பேது. 2: 24)*. Cross is the sign of Vicarious suffering - சிலுவை மற்றவர்களுக்கு பதிலாகவும், மற்றவர்களின் நலனுக்காகவும் துன்பமேற்பதின் அடையாளம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிறர் பொருட்டு துன்பமேற்றதுபோல நாமும் ஒருவர் மற்றவரின் சுமையைத் தாங்கி நம் நம்பிக்கையை வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. A. **கால்வின் தேவநேசன்**

08.03.2026

தவக்கால மூன்றாம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு

அனைவரையும் உள்ளடக்க அழைப்பு

Call to be Inclusive

எசா. 56: 1-8 *திவெ. 7: 9-17*
திபா. 86 *மத். 15: 21-28*

"இதன்பின் யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான மக்களைக் கண்டேன். அவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும், மக்களினத்தையும், மொழியையும் சார்ந்தவர்கள் (திவெ. 7: 9).

ஒரு கிராமத்தில் மும்மதத்தவர்களான மக்கள் பலர் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களும் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்திருந்தன. ஒருநாள் அக்கிராமத்தின் இளைஞர்கள் அனைவரும் இணைந்து இளைஞர் நற்பணி மன்ற விழா நடத்தத் தீர்மானித்து அமைச்சர் ஒருவரை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தனர். அமைச்சர் வந்தவேளையில் இளைஞர்கள் அனைவரும் மதம் சார்ந்து அவரை வரவேற்க முயலவே அங்கே ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. ஒரு வழியாக அமைச்சர் மேடை ஏறினார். அவ்வேளையில் புலி வருதே என்றொரு சத்தம் கேட்கவே, ஒருவர் கூட இல்லாமல் அனைவரும் அங்கிருந்து ஓடி மறைந்து அங்குள்ள வழிபாட்டுத் தலங்களுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர். அமைச்சர் மட்டும் மேடையில் தனிமையில் மூச்சிரைக்க நின்று கொண்டிருந்தார். ஆனால் புலியை மட்டும் காணவே இல்லை. அவர் தன் மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, இளைஞர்களே, எல்லாரும் மேடைக்கு வாருங்கள், புலி போய்விட்டது என்று அழைத்தார். அமைச்சரின் அழைப்பைக் கேட்டு பல இடங்களல் பதுங்கியிருந்த இளைஞர்கள் அனைவரும் ஒவ்வொருவராக வெளியே வரத் தொடங்கினர். அப்போது அந்த அமைச்சர் இந்துச் சமயக் கோவிலிலிருந்து வெளியே வரும் இளைஞர்களைப் பார்த்து இளைஞர்களே, நீங்கள் எல்லாரும் இந்துக்களா? எனக் கேட்டார். அவ்விதமாக பள்ளி வாசலிருந்து வெளியே வரும் இளைஞர்களைப்பார்த்து இளைஞர்களே நீங்கள் எல்லாரும் இஸ்லாமியர்களா? எனக் கேட்டார். அவ்வாறே கிறிஸ்தவத் தேவாலயத்திலிருந்து வரும் இளைஞர்களைப் பார்த்து இளைஞர்களே, நீங்கள் எல்லாரும் கிறிஸ்தவர்களா? எனக் கேட்டு, உயிர் பயம் என்றால் எல்லாருக்கும் பயம் தானே. பதுங்குவது எந்த வழிபாட்டிடம் என்பதில் வேறுபாடில்லை தானே, என்னை வரவேற்பதில் உங்களுக்குள் ஏன் இத்தனை வேறுபாடுகள்? ஒன்றாயிருந்து வாழ்வை இனிமையாய் மாற்றுங்கள் என்று அறிவுரை வழங்கி அமைச்சர் புறப்பட்டுச் சென்றார்.

மானிட வாழ்க்கையின் மேன்மை என்பது ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு கூடி வாழ்வதினால் அமைந்திருக்கிறது. அமெரிக்க எழுத்தாளரான ஏர்ணஸ்ட் ஹெமிங்வே என்பவர் குறிப்பிடும்போது, ஒரு மனிதன் நம்புவதற்குத் தக்கவரா என்று சோதித்தறிய ஒரேயொரு மார்க்கம் தானுண்டு. அது அந்த மனிதனை நம்புவதே என்று குறிப்பிடுகிறார்.

திருச்சபை உலகச் சமூகத்திற்கான முன் மாதிரி அமைப்பு. அது மட்டுமல்ல, திருச்சபை விதவிதமான, குணம், வரம், திறன் என்ற எண்ணற்ற வேற்றுமைகள் கொண்டோரின் கூட்டுறவு. அதன் சிறந்த சான்று இயேசுவின் சீடர் கூட்டம் தான். இயேசு அவர்களை முழு மனதுடன் உள்ளடக்கியே தம் திருப்பணியை நிறைவேற்றினார். இந்த ஓர் அர்த்தமிகு வாழ்வுக்காக நம்மையும் அழைக்கிறார் என்பதை திருமறை வழி அறிவோம்.

1. அனைவரையும் உள்ளடக்கிய சமூக வாழ்வு:

உலகிற்கு முன் மாதிரியாய் வாழ அழைக்கப்பட்ட இறைமக்கள் சமூகம் கடவுளையும் சக மனிதரையும் மதிக்கத் தவறியபோது அவர்களுக்குப் பங்காகக் கிடைத்ததோ புறக்கணிக்கப்பட்ட வாழ்வு. அதாவது தங்கள் தாய் மண்ணாகிய இஸ்ரயேலிலிருந்து பாபிலோன் என்னும் வேற்று நாட்டிற்கு அப்புறப்படுத்தப்பட்டனர். ஆண்டவர் அவர்களை மீண்டும் விடுவிக்க விரும்புகிறார் என்பது இந்த நாளின் முதலாம் திருமறைப்பாடத்தின் கருத்து.

பாபிலோனிய அடிமை வாழ்வில் வாழ்ந்து கொண்டிருப்போருக்கு விடுதலை கிடைக்கும் என எசாயாவின் வழி ஆண்டவர் வாக்களிக்கின்றார். அந்த வாழ்வை அனுபவிக்க தகுதியாக எங்கும் நீதியை நிலைநாட்டவும் நேர்மையைக் கடைப்பிடிக்கவும் சக மனிதரை மதிக்கவும் அறிவுரை கூறுகின்றார். மனிதன் சக மனிதனை வெறுப்பதும் *(யாக். 1: 20)* பேதங்களை வளர்ப்பதும் *(யாக். 2: 1-4)* அநீதிதான். அடுத்திருப்போருக்கு அநீதி செய்பவர் கடவுள் தரும் விடுதலை வாழ்வில் பங்குபெற இயலாது *(லூக். 18: 9-14)*. ஆண்டவரின் விருப்பமோ அவருடைய நீதியையும் நியாயத்தையும் அனைவரும் நிறைவேற்றி வாழவேண்டும் என்பதாகும் *(எசா. 56: 1)*.

யூதரும் சரி, யூதரல்லாதவரும் சரி அண்ணகர்கள் என்னும் நிலையில் வாழ்வோரும் இறைவனுடைய நீதிக்கு உட்பட்டு வாழ்ந்தால் ஆண்டவர் அவர்களுக்கு மேன்மையான இடத்தை வழங்குவார் *(எசா. 56: 5)*. அவருடைய எண்ணங்களின்படி வாழ்வோர் அவருடைய ஆலயத்திலும் இப்பூவுலகிலும் அவர்கள் கனப்படுத்தப்படுவார்கள் *(எசா. 6: 5,6)*.

ஆண்டவரையும் அவர் படைப்பான சக மனிதரையும் படைப்புகளையும் உள்ளடக்கி வாழும் சமூகமே திருச்சபை. கடவுளின் ஆலயத்தில் அனைத்து இனைத்தைச் சார்ந்தோரும் இணைந்து அவரை வழிபடுவர் (எசா. 56: 6, 7). அவருடைய ஆலயத்தில் அனைவரும் அனைத்து நிலையிலும் பராமரிக்கப்படுவர் (திப. 6: 1-5).

நாம் அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக வாழ வேண்டுமென்பது ஆண்டவரின் எதிர்பார்ப்பு (தொநூ. 6: 19-22). நோவா அதைச் செய்ததால் ஆண்டவர் அவர்பேரில் மகிழ்ந்தார் (தொநூ. 8; 1, எபி. 11: 7). நோவா போன்று அவர் எண்ணங்களின்படி வாழ்வோருக்கு அவரிடத்தில் பங்கு உண்டு (மத். 25: 34).

2. அனைவரையும் உள்ளடக்கிய நலவாழ்வு:

எஜமானனின் மேசையிலிருந்து விழும் அப்பத்துண்டுகளால் தங்களைத் தாங்களே போஷித்து வாழ்க்கையை நடத்துகின்ற லட்சக்கணக்கான மக்கள் இந்தப் பூவுலகத்தில் எங்குமுண்டு. ஆனால், அவலம் என்னவென்றால் சாதி, இனம், மொழி இவைகளைச் சொல்லி வாழும் சமயங்கள் கடவுளின் மீட்பின் திட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளவில்லை. நற்செய்திப் பாடம் சொல்லும் கானானியப் பெண் இப்படிப்பட்ட ஒரு சமூகத்தின் பிரதிநிதியாகும். இயேசு கிறிஸ்துவின் காலகட்டத்தில் நிலைநின்ற சமய சிந்தனைகளின்படி இந்தப் பெண்மணி கடவுளின் நன்மைகளைப் பெற சற்றும் தகுதியுடையவரல்லர். அதே வேளையில், இந்தப் பெண்மணியின் விசுவாசத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்கின்ற இயேசு யூதச் சமயத்தைத் தீவிர பக்தியுடனும் தீவிரவாத புத்தியுடனும் அனுசரிப்பவர்கள் மத்தியிலும் தம் சீடர்களின் மத்தியிலும் சவால் விட்டுக்கொண்டு, "அம்மா உமது நம்பிக்கை பெரிது" (15: 28) என்று பாராட்டிக்கொண்டு அவரை ஆண்டவரின் மீட்பின் திட்டத்தில் உள்ளடக்குகின்றார்.

கானானியப் பெண்ணின் விசுவாசத்தை மாத்திரமல்ல கப்பர்நகூமின் புறவினத்தாராகிய நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தையும் பாராட்டினார் (மத். 8: 10). அது மட்டுமல்ல, கிழக்கினின்றும் மேற்கினின்றும் அனேகர் வந்து விண்ணரசில் அமர்வர் (மத். 8: 11) என்ற இயேசுவின் வார்த்தைகளும் யூதரல்லாத புறவினத்து மக்களிடமுள்ள ஆண்டவருடைய அருளின் பன்முகத் தன்மையையும் யாவரையும் உள்ளடக்கும் மீட்பின் திட்டத்தையும் வெளிப்படுத்துகின்றன.

தம்மிடம் விசுவாசத்துடன் வந்த புறவினத்துப் பிரதிநிதிகளை அங்கீகரித்து அவர்களுடைய விசுவாசம் விலையேறப் பெற்றது என்று அறிக்கையிடும் இயேசு தாம் அனைவரையும் உள்ளடக்கி அன்பு செலுத்துபவர் என்று தம் நற்செய்திப் பணியின் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

3. அனைவரையும் உள்ளடக்கும் நம்பிக்கை வாழ்வு:

இயேசுவின் பிறப்பு அனைவருக்குமானது (லூக். 2: 11). அவரை விசுவாசிக்கிற அனைவருக்கும் நிலைவாழ்வு வாக்களிக்கப்பட்டுள்ளது (யோவா. 3: 16). இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசித்தவர்கள் யூதர் மாத்திரமல்ல புற வினத்தாரும் அடங்குவர். பத்துத் தொழுநோயாளர் உவமையில் நோய் குணமடைந்து நன்றி சொல்ல வந்தவர் (லூக். 17: 11-19) நன்மை செய்வதில் முன் மாதிரியான சமாரியர் (லூக். 10: 25-37). இறைவேண்டல் செய்வதிலும் தானதர்மம் செய்வதிலும் முன்மாதிரியான புற வினத்தார் (திப. 10: 1-8) தன் மகளுக்காக இயேசுவிடம் வந்த தொழுகைக்கூடத் தலைவர் (லூக். 8: 41-56) ஆலயம் வந்து தாழ்மையுடன் மன்றாடிய ஆயக்காரர் (லூக். 18: 9-14) ஆதிக்கத்தைத் தாண்டி வந்து இயேசுவின் ஆடையைத் தொட்ட பெரும்பாடுள்ள பெண் (லூக். 8: 41-48) போன்றோரின் விசுவாசம் இயேசுவை ஆச்சரியப்படுத்தியது.

ஆண்டவரின் திருச்சபை அனைவரையும் உள்ளடக்கிய திருச்சபை. ஆண்டவரில் விசுவாசம் கொள்வோரின் தியாக வாழ்வு கனப்படுத்தப்படும். ஏனெனில், திருச்சபை இறையரசின் முன் சுவையாக அமைந்துள்ளது. திருவெளிப்பாட்டு நூலில் குறிப்பிடப்பட்டுள்ள யோவான் கண்ட இரண்டாவது காட்சியில் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்பவர்கள் எல்லா நாட்டையும் மொழியையும் குலத்தையும் சார்ந்தவர்கள். அவர்கள் எண்ணக்கூடாத அளவிற்கு பெரிய தொகையாய்க் காணப்பட்டார்கள் (திவெ. 7: 9). அவர்கள் பூமியிலே கிறிஸ்துவுக்காக வாழ்ந்து பாடுகளைச் சகித்தவர்கள் (வ. 14). அவர்களுடைய விசுவாசம் பாராட்டப்பட்டது (வ. 15). அவர்களின் வேதனையின் வெளிப்பாடாகிய கண்ணீர் துடைக்கப்பட்டது (வ. 17). நித்தியத்திலும் ஆண்டவரோடு வாழும் பேற்றைப் பெற்றார்கள் (வ. 15).

எனவே, கடவுளின் படைப்பில் எல்லோரையும் போல நாமும் இந்த உலகை ஆளுகை செய்யும் ஆண்டவரின் பரந்த நோக்கைப் புரிந்துகொண்டு நம்மிடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் அனைவரையும் உள்ளடக்கி இறைமக்களாக வாழ்ந்து நிலைவாழ்விலும் பங்குபெறுவோம்.

அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தோமஸ்

புத்தியுள்ள மகளிர்

யோசுவா 2: 1-15 *திப. 16: 12-15*
திபா. 118: 22-26 *மத். 15: 21-18*

"இயேசு மறுமொழியாக, அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாரே உமக்கு நிகழட்டும் என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது." (மத். 15: 28)

பொதுவாக பெண்கள் அனைவருமே கடவுள் மீது மிகுந்த பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். பற்றுறுதி என்பது கடவுள் மீது வைக்கும் அசையாத நம்பிக்கை. பக்தி என்பது இறை நம்பிக்கையினால் வெளிப்படும் ஒரு அன்பு கலந்த, கண்ணியம் கலந்த, மரியாதை. பக்தியும் இறைநம்பிக்கையும் இணைந்து செல்கிறது எனலாம். இறைபக்தியுள்ள புத்தி இறைவனுக்காக அசாதாரண செயல்களை செய்ய நம்மைத் தூண்டுகிறது. திருமறையில் பல பெண்கள் தங்கள் இறைபக்தியினால் தங்களால் செய்ய இயலாத அசாதாரண சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். அந்த அசாதாரண வெளிப்பாடு பலருடைய வாழ்வில் நன்மையைக் கொண்டு வந்துள்ளது. வாழ்வு வழங்கியுள்ளது. இன்றைய திருமறைப் பகுதிகளிலும் சில புற இனப்பெண்கள் தாங்களது பற்றுறுதியினால் பற்றுறுதியுள்ள இறைமக்களோடு இணைந்து இறைஇல்லத்தை கட்டியெழுப்பி இன்றும் சான்றாளர்களாய் இருந்துள்ளனர். அவர்கள் வாழ்விலிருந்து நாம் பெறும் தகவுகளை நாம் சிந்திப்போம்.

1. பற்றுறுதியின் வாய்க்கால்களாக மகளிர்: *(யோசுவா 2: 1-14)*

பற்றுறுதியின் வாய்க்கால்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இராகாப் என்ற பெண். இவர் புற இனத்து பெண்ணாக இருந்தாலும் இஸ்ரவேலின் ஆண்டவர் மீதும் அவர் தம் மக்கள் இஸ்ரவேலர் மீதும் நம்பிக்கையும், மரியாதையும் வைத்திருந்தார். இஸ்ரவேலின் கடவுள் மீதும் அவர் தம் சொந்த மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியின் மேலும் நம்பிக்கையுள்ளவராக இருந்தார். இவருக்கு இருந்த நம்பிக்கையையும், இஸ்ரவேல் மக்களுக்கு இருந்த பற்றுறுதியையும் ஒப்பிட்டுப்பார்த்தால் கடவுளின் மக்கள் என்று சொல்லப்படும் இஸ்ராயேலருக்கு அசையக்கூடிய திடனற்ற ஒன்றாகவே இருந்தது எனலாம். எனவே தான் நாட்டை வேவு பார்க்க வந்த மக்களிடம், இந்நாட்டை ஆண்டவர் உங்களுக்கு அளிப்பார் என்று நான் அறிவேன்; ஏனெனில் உங்களைப் பற்றிய அச்சம் எங்களிடையே எழுந்துள்ளது என்பதை கூறுகிறார். இந்த நம்பிக்கையால் தான் வேவு பார்க்க வந்த மக்களை எரிகோவின் அரசர் கையில் ஒப்படைக்காமல் மிகக் கண்ணியத்தோடு பாதுகாத்தாள். தனக்கு ஆபத்து வரக்கூடும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தாலும் பலம் குறைந்தவர்கள்

பக்கமாக நின்று அவர்களைப் பாதுகாக்கும் நற்செயல் புரிந்தார். இச்செயலின் பிரதிபலனாகத் தான் எரிகோ நகரம் அழிந்துபோது அவரும் அவருடைய குடும்பத்தாரும் மீட்கப்பட்டனர். மேலும் இயேசு கிறிஸ்துவின் வம்சாவளியில் இராகாப்பும் இடம் பெறுகிறார். நம்பிக்கை என்பது கேட்டு வருவதில்லை. மாறாக செயல்கள்மூலம் வெளிப்படும் ஓர் ஆக்கப்பூர்வமான உள்உணர்வு பற்றுறுதியின் வாய்க்கால்களாக செயல்பட்ட இராகாப் போன்று செயல்படும்போது, இறைஇல்லமாக அருளப்பட்ட நமது குடும்பம், திருச்சபை, சமூகம் இவற்றை கட்டுவிக்கலாம் அதேபோல் அழிவிலிருந்தும் பாதுகாக்கலாம்.

2. பணிவுள்ள பண்பாளர்களாக மகளிர்: *(திப. 16: 13-15)*

பணிவுள்ள நற்பண்புகள் இறை இல்லத்தைக்கட்டும் பலம் வாய்ந்த கற்கள். நற்பண்புகள் என்பவை அன்பு, இரக்கம், கருணை, பணிவு, பகிர்தல் போன்றவை அனைத்தும் உள்ளடங்கும். எனினும் பணிவு என்பது மிகச் சிறந்த பண்பு. பணிவு என்ற பண்பின் மறுவடிவங்கள் தான் தாழ்மை, பொறுமை, இன்னும்சற்று பரந்து சிந்தித்தால் விருந்தோம்பல், பிறர் மீது கரிசனை, சுயநலம் தவிர்த்தலும் பொதுநலம் நாடுதலும் போன்ற பண்புகள். பணிவு என்ற பண்பே பிறரை ஏற்றுக்கொள்ள உதவியாக இருக்கிறது. இறையரசின் பங்காளிகள் என்பதை அடையாளம் காட்டும் ஒரு சிறந்த பண்பே பணிவு. திருத்தூதர் பணிகளின் நூல் 16-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள லீதியா இந்த நற்பண்பை பெற்றவர் என்றால் மிகையாகாது. இப்பெண்ணும் ஒரு புறவினப் பெண்ணே. அவர் அரசர்கள் அணியும் ஆடையான இரத்தாம்பரம் தயாரிக்க கூடியவர். மற்றும் அவர் ஒரு வியாபாரி. உயர்ந்த குல மக்களோடு நல்லுறவு பெற்றிருந்தார். எனினும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை தனது சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்ட பின் இப்பண்பாகிய பணிவு அதிகமாக வரைந்தது. எனவே தான் பவுலையும் அவரைச் சார்ந்தவர்களுக்கம் தன் இல்லத்தை நல்கி பராமரித்தார். மேலும் இவரது இந்த நற்பண்பினால் இல்லத்தை ஆண்டவரின் இல்லமாக ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பதற்குரிய ஓர் இடமாக, ஆலயமாகக் கொடுத்தார். அவரே முன்னின்று இத்திருச்சபையையும் நடத்தி வந்துள்ளார் என வரலாறு கூறுகிறது. இன்று பணிவு என்ற பண்பு முதிர்ந்த இறைப்பற்றாளர்களிடம் கூட குறைந்து கொண்டே செல்கிறது. காரணம் தங்கள் வாழ்வில் பெற்றுள்ள உயர்வை இறைவனால் கொடுக்கப்பட்டது என்பதை உணர்ந்து நன்றியோடு வாழ மறந்து விடுகிறார்கள். இறைவன் கொடுத்துள்ள உயர்வினை இறையில்லம் கட்டியெழுப்பும் பணிக்கு பயன்படுத்தாமல் சுயநலத்தோடும், வீண் பெருமையோடும் பலவித தவறான பார்வையில் பயன்படுத்துகிறார்கள். இறைவன் தந்த திறமைகள் நற்குணங்களினால் இறை இல்லத்தை கட்டியெழுப்புவோம்.

3. பக்தியின் சிகரங்களாக மகளிர்:

பக்தி என்பது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் இறைநம்பிக்கை, தாழ்மை, மரியாதை, போன்ற அனைத்தும் சேர்ந்த ஒரு வெளிப்பாடு. திருமறை பெண்களில் பலர் சிறந்த பக்திக்கு அடையாளமாக விளங்குகின்றனர். அவர்களில் ஒருவர் தான் இயேசுநாதர் வாழ்ந்த காலத்தில் தீரு சீதோன் பகுதியில் வாழ்ந்த கானானிய பெண். இவரும் ஒரு புற இனத்தவள் எனினும் இயேசுவின் மீது இவருக்கு இருந்த நம்பிக்கை சிறந்தது. பக்தி அளப்பரியது அவளுடைய பக்தி இயேசு நாதர் மீது அவள் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுறுதியாக வெளிப்பட்டது. இஸ்ராயேலருக்காக மாத்திரமே இவ்வுலகத்திற்கு பிதாவினால் அனுப்பப்பட்டாள் என்பதை புரிந்து கொண்டவர்,இந்த புற இனப் பெண்ணுடைய உண்மையான பக்தியினால், தம்மீது கொண்ட உயரிய பற்றுறுதியினர் தன்னுடைய புரிந்து கொள்ளுதலையே மீள்பார்வை செய்து, தனது பணி உலகளாவியது என்பதை உணர்ந்து கொண்டார். இஸ்ரயேல் மக்களிடையே காணப்பட்ட பக்தியை, நம்பிக்கையை விட இப்பெண்ணிடம் காணப்பட்ட நம்பிக்கையை மிகப் பெரிதானதாகக் கண்டார். இப்பெண்ணைப் போல் இறையில்லத்தை பக்தியினால் கட்டலாம்.

பெண்கள் ஞாயிறாகிய இந்த நாளில் நாம் மனதில் கொண்டுள்ள தகவுகளைத் திரும்பிப்பார்ப்போம். கடவுளின் இல்லமாகிய திருச்சபை பரந்து விரிந்தது. அதனை கட்டியெழுப்பும் பணி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வீண் பெருமை, சுயநலம் போன்ற பண்புகள் நம்மை இறையில்லத்தை இடித்துப் போடுகிறவர்களாயிறாமல் பற்றுறுதியின் வாய்க்கால்களாய், பணிவுள்ள பண்பாளர்களாய், பக்தியின் சிகரங்களாக இறை இலலத்தை கட்டியெழுப்புவோம்.

திருமதி. ஹெர்லின் சஜிதா நெல்சன்

விடுதலையாளராய்த் திகழ அழைப்பு

Call to be Liberative

எசா. 1: 12-17 *எபே. 6: 5-9*
திபா. 9 *லூக். 13: 10-17*

. . . "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" (லூக். 13: 12).

உரிமை நிலை அல்லது விடுதலை வாழ்வு என்ற வார்த்தைக்கு கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலையாளர் மூலம் விடுதலை பெறுதல் என்று பொருள் கொள்ளலாம். விடுதலை என்பது இஸ்ரயேல் மக்களின் கடவுள் நம்பிக்கை சார்ந்த அடிப்படையான இறையியல் கருத்தாகும். எகிப்தியரின் அடிமைத்தளைகளிலிருந்து விடுதலையாளர் மூலம் விடுதலை பெற்ற அனுபவமே காலந்தோறும் மறக்க முடியாத இஸ்ரயேலரின் இறை அனுபவமாகும். இஸ்ரயேல் மக்கள் மட்டுமல்ல; மனுக்குலம் மீண்டும் மீண்டும் பல்வேறு காலகட்டங்களில் அடிமைப்படும் பொழுதெல்லாம் விடுதலையாளர்கள் மூலம் விடுதலை அனுபவத்தையே உணர்ந்தனர். கடவுள் இஸ்ரயேல் மக்களை மீட்பதற்காக விடுதலையாளராய் இருக்க மோசேயை அழைக்கிறார். விடுதலைப் பயணம் 3: 11-இல், மோசே கடவுளிடம், பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து போவதற்கும் நான் யார்? எனக் கேட்கிறார். இது முதல் மறுப்பு. இரண்டாம் மறுப்பு 3: 13-15, மூன்றாம் மறுப்பு 4: 1-9, நான்காம் மறுப்பு 4: 10-17. கடவுள் விடுதலையாளராய் இருக்க அழைப்பு விடுக்கும்போது மறுக்காமல் எப்போதெல்லாம் விடுதலையாளராய் இருக்க வாய்ப்பு கிடைக்குதோ அப்போதெல்லாம் விடுதலையாளராய் இருக்க நம்மை அர்ப்பணித்தல் அவசியம். இன்றைய திருமறைப் பாடங்களின் வழியாக விடுதலையாளராய் எப்படி வாழவேண்டும் என்பதைத் தியானிப்போம்.

1. நற்பண்புகளோடு வாழ்தல்: *(எசா. 1: 12-17)*

சனகெரிப் யூதா மீது படையெடுத்த போதாவது அல்லது சீரியாவும், எப்பிராயீமும் கூட்டு சேர்ந்து ஆகாஸ் மன்னன் காலத்தில் எருசலேமை தாக்கிய போதாவது இப்பகுதியை எசாயா இறைவாக்கினர் உரைத்திருக்கலாம் என விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர். கி.மு. 701 அல்லது கி.மு. 734 காலத்தில் எழுதப்பட்டது எனவும் கருதுகின்றனர். இது யூதாவை மட்டுமல்ல; எருசலேமைப் பற்றியும் இஸ்ரயேலை பற்றியும் கூறுகின்றது. எசா. 1: 16, 17-இல் உங்களை கழுவி தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள்; தீமை

செய்தலை விட்டொழியுங்கள்; நன்மை செய்ய கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள் போன்ற நற்பண்புகளோடு வாழ்ந்து விடுதலையாளராய் இருக்க அழைக்கப்படுகிறோம். மாறாக, திரளான பலியை கொண்டல்ல; ஒழுக்கத்துடனும், கீழ்ப்படிதலுடனும் படைக்கப்படும் பலியே கடவுளுக்கு விருப்பம் (எசா. 1: 11-15). நாமும் நற்பண்புகளோடு வாழ்ந்து விடுதலையாளராய் இருக்க அழைப்பிற்கு அர்ப்பணிப்போம்.

2. கடவுளின் திருவுளத்தை (விருப்பம்) நிறைவேற்றுதல்: (எபே. 6: 5-9)

பொதுவாக திருத்தூதர்கள் அன்றைய சூழ்நிலையில் அடிமைகளுக்கு இவ்விதமான அறிவுரைகளைக் கொடுத்தனர். எபே. 6: 8-இல் மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலை செய்வதாகக் காட்டிக்கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள். மனிதருக்காக அன்றி கடவுளுக்காகவே செய்வதுபோல் நல்மனத்தோடு வேலை செய்யுங்கள். அடிமையாயினும் உரிமைக் குடிமகனாயினும், நன்மை செய்யும் ஒவ்வொருவரும் ஆண்டவரிடமிருந்து நன்மையே பெறுவர். கடவுளின் திருவுளம் எது? என்பதை திருமறையில் தேடுவோம். நம் அன்றாட வேலையில் உண்மையாய் உழைப்பது கடவுளின் திருவுளம் (எபே. 6: 6). நாம் பாவமற்றவர்களாக, தூய்மையுள்ளவர்களாக வாழவேண்டும் என்பதே கடவுளின் திருவுளம் (1 தெச. 4: 3). தீமை செய்து துன்புறுவதை விட, நன்மை செய்து துன்புறுவதே கடவுளின் திருவுளம் (1 பேது. 3: 17). வறுமையோடு வாழும் மக்களுக்கு கொடுப்பது கடவுளின் திருவுளம் (2 கொரி. 8: 5). சிறியோரில் ஒருவர் கூட நெறி தவறி போகக்கூடாது என்பதே விண்ணகத் தந்தையின் திருவுளம் (மத். 18: 14). இதை உணர்ந்து வாழ்வியல் சான்றுடன் வாழ வேண்டும். அதுவே கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பதாகும். அந்நிலையில் நாம் கடவுளின் திருவுளப்படி விவிலிய ஒளியில் பயணிப்போம்.

3. குணமாக்கும் பணி செய்தல்: (லூக். 13: 10-17)

இயேசு ஓய்வுநாளில் தொழுகைக்கூடத்திற்கு சென்றபோது பதினெட்டு ஆண்டுகளாக உடல் நலம் குன்றிய பெண் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார். இங்கே இயேசு விடுதலையாளராக பணி செய்கிறார். லூக். 13: 12-இல் இயேசு அவரை கண்டு அருகே கூப்பிட்டு அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர் என்று கூறி தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே, அவர் நிமிர்ந்து கடவுளை போற்றிப் புகழ்ந்தார். அன்று நல்லுள்ளம் கொண்ட நற்செய்தியாளர்கள் இம்மண்ணிற்கு வந்து கல்வி,

மருத்துவம், நற்செய்தி போன்றவைகளை தந்து விடுதலையாளராய் பணி செய்தார்கள்.

ஜோகன்னா மீட், மார்த்தா மால்ட் ஆகிய பெண் மிஷனெறிகள் தங்கள் கல்வி நிறுவனங்களில் சில அடிமை சிறுமிகளை அழைத்து வந்து அவர்களுக்கு எழுத, வாசிக்க கற்றுக்கொடுத்ததோடு தையல் வேலைக்கான பயிற்சியையும் அளித்தனர். அவர்கள் செய்யும் தையல் வேலைக்கு பணம் கொடுத்து, அப்பணத்தை சேமித்து வைத்து, பின்னர் தங்களுக்குரிய மொத்த ரூபாயினை நிலவுடமையாளர்களுக்கு கொடுத்து அடிமைகளை விடுவித்தனர். இவ்விதம் விடுதலைக்கான முழுத் தொகையை கொடுத்தாலும் அடிமைகளின் உரிமையாளர்கள் அவர்களுக்கு கொடுக்க உடன்படவில்லை. ஒருமுறை 16 வயது மதிக்கத்தக்க சிறுமி மார்த்தா மால்ட் அம்மையாரிடம் உரிமையாளரின் கொடுமையை தாங்க முடியாமல் ஓடி வந்தார். மால்ட் அம்மையார் அச்சிறுமியை குறித்த விவரங்களை கேட்டறிந்தார். அப்போது, அடிமைச் சிறுமி என்பதை உணர்ந்து தன் பள்ளியில் படிக்க சேர்த்தார்கள். பத்து நாள்கள் கழித்து கோபாவேசத்தோடு ஒரு மனிதன் மால்ட் அம்மையாரிடம் வந்து அச்சிறுமியை விட்டுவிட வேண்டினான். அதற்கு மறுத்த மால்ட் அம்மையார் அச்சிறுமிக்கான விலையை அவனிடம் நீட்டினார். அவன் அதற்கு இணங்காமல் அச்சிறுமியை அழைத்துச் சென்றான். இக்காட்சியை கண்ட அச்சிறுமியுடன் பயிலும் பிற மாணவிகள் அம்மனிதனிடம் போய் அவளை விட்டுவிட கண்ணீருடன் அழுது கெஞ்சினர். இவ்வாறு நல்லுள்ளம் கொண்ட அருள்தொண்டர்களும் விடுதலையாளர்களாய் இருக்க அழைப்பு பெற்று இறைப்பணியை மிகவும் சிறப்பாக செய்தனர்.

நாமும் நற்பண்புகளோடு வாழ்ந்து கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி உள்ளத்தையும் உடலையும் குணமாக்கி விடுதலையாளராய் இருக்க அழைப்பு பெற்று பணி செய்வோம்.

அருள்திரு. T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்

22.03.2026 உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு,
தவக்கால ஐந்தாம் ஞாயிறு & பாடுகளின் ஞாயிறு

சிலுவை: அருளின் திருவெளிப்பாடு

Cross: Manifestation of Grace

மீக்கா 7: 15-20 *1 பேது. 2: 17-24*

திபா. 31 *மாற்கு 10: 46-52*

"ஏனெனில், அவர் பேரன்புகூர்வதில் விருப்பமுடையவர்" (மாற்கு 11: 10)

Cross *என்ற ஆங்கில வார்த்தை பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதில் வியப்பானது என்னவென்றால் இந்தச் சொல்லின் இரண்டு விதப் பயன்பாடுகளுமே கடவுளின் மீட்பைத் தொடர்புபடுத்துவதாக அமைந்துள்ளன. பழைய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றில்* Cross *என்கிற சொல் வினைச்சொல்லாக மீட்போடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இஸ்ரயேலர் செங்கடலைக் கடந்தனர் -* crossed *(விப. 14: 22), யோர்தானைக் கடந்தனர் (யோசு. 3: 14 - 17), பாலைநிலத்தைக் கடந்தனர். கடல், ஆறு, மலைகள், பள்ளத்தாக்குகள் போன்ற அனைத்தையும் கடந்தனர். புதிய ஏற்பாட்டில்* Cross *என்ற வார்த்தை பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் சிலுவையையும் சிலுவையால் மக்கள் பெற்ற மீட்பையும் குறிக்கின்றது.*

மனிதத்தின் உச்சமும் இறைமையின் உச்சமும் ஒருசேர மேடை ஏறிய இடம் சிலுவை. மனிதத்தின் உச்சம் உடைந்துபோகும் தன்மை, நிராகரிக்கப்பட்ட நிலை, வேதனை, கண்ணீர் ஆகியவை. இறைமையின் உச்சம் மன்னிப்பு, மீட்பு, பிறரன்பு, பிறர்நலம் முதலியவை. இரண்டு தன்மைகளும் ஒருசேர சிலுவையில் நிகழ்ந்தன. சிலுவையின் நெடுமரம் இறைமையின் அடையாளமென்றால், அதன் குறுக்கு மரம் மனிதத்தின் அடையாளம். இரண்டையும் பக்குவமான முறையில் தம்மில் ஒருங்கிணைத்தவர் இயேசு கிறிஸ்து. சுய வழிபாட்டாலும் பயத்தாலும் வெறுப்பாலும் மனிதர் தம் வாழ்வின் ஊற்றை நஞ்சாக்கி விடுகின்றனர். அதைத் தூய்மையாக்கக்கூடிய ஆற்றல் சிலுவைக்கு உண்டு (The power of Cross alone is capable of purifying the deep springs poisoned by self-worship, dread and hate) *என்று தாமஸ் மெர்ட்டன் குறிப்பிடுகின்றார். சிலுவை அருளின் வெளிப்பாடு என்பதைத் திருமறையின் வெளிச்சத்தில் தியானிப்போம்.*

1. சிலுவை மன்னிக்கும் அருளின் வெளிப்பாடு: *மீக்கா 7: 18*

யோதாம் (742-735 BCE*), ஆகாஸ் (735-715* BCE*) மற்றும் எசேக்கியா (715-686* BCE*)* ஆகிய அரசர்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரயேல் மற்றும் யூதா மக்களுக்கு இறைவாக்கினராகச் செயல்பட்டவர் மீக்கா. இக்காலக்கட்டத்தில் தென்னாடு யூதாவில் சமய மற்றும் பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டது. நில உடமையாளர்கள் சாதாரண விவசாயிகளை அடக்கி ஆண்டனர். சமயத் தலைவர்கள் சேவை செய்தலை விட்டுவிட்டு வியாபார நோக்கில் சடங்குகளைச் செய்தனர். பொதுநலன் கருதாமல் சுயநலம் நாடினர். எனவே அநியாயம், அடக்குமுறை மற்றும் முறைகேடுகள் அதிகரித்தன. பாவம் பெருகியது. இதனால் தென்னாடு இஸ்ரயேல் அசீரியாவுக்கும் வடநாடு யூதா பின்னர் பாபிலோனுக்கும் எகிப்துக்கும் நாடுகடத்தப்பட்டனர். இந்தச் சூழலில் அரசியல் மற்றும் சமய முறைகேடுகளையும் அநீதியையும் மீக்கா கண்டித்தார். அதேவேளையில், நீதி மீட்பு, இரக்கம் போன்ற கடவுளின் அருளால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளையும் அவர் எடுத்துரைத்தார். மீக்கா இறைவாக்கினர் நூலின் மிக முக்கியமான பகுதியாக மீக்கா 7: 18 முதல் 20 வரை உள்ள வசனங்களை இறையியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பகுதியில், கடவுளின் இரக்கம், மன்னிப்பு மற்றும் நம்பிக்கைக்குரிய தன்மை ஆகியவை மீக்காவின் நாள்களில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமல்ல இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் அனைத்துப் படைப்புகளுக்குமானது என்பதை உறுதிப்படுத்துகின்றது. குறிப்பாக, 18-ஆம் வசனத்தில் எஞ்சியிருப்போரின் குற்றத்தைப் பொறுத்து..., உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கிறேன் போன்ற தீர்க்கரின் வார்த்தைகள் கடவுளின் மன்னிக்கும் அருளின் வெளிப்பாடாக உள்ளது. கேரல் J. டெம்ப்சே என்பவர் இப்பகுதியை விளக்கும்போது, நீதித்தீர்ப்பு, அழிவு மற்றும் அழித்தொழிப்பு போன்றவை கடவுளின் கடைசி வார்த்தைகள் அல்ல; கடவுளின் கடைசி வார்த்தை மற்றும் பணிவிடை, தம் மக்களை மன்னிப்பது, இரக்கம் காட்டுவது மற்றும் தம் மக்களையும் படைப்புகளையும் மன்னித்து ஏற்றுக்கொள்வதாகும்* (Judgement, destruction and annihilation are never the final words of God; the final words and work of God are always forgiveness, compassion as God works continually to restore and transform both the human condition and all of creation) *என்கிறார்.*

மக்களின் குற்றங்கள் மற்றும் தீச்செயல்களைக் குறித்து எசாயா தீர்க்கர் கண்டித்து உரைக்கிறார். மேலும், எசாயா இறைவாக்கினர் மனிதரின் குற்றங்கள், தீச்செயல்கள், பாவங்கள் இவற்றிற்காக பாடுபடும் அடியவரையும் அவர் முன்னறிவிக்கிறார். முன்னறிவிக்கப்பட்ட கடவுளின்

மகன் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற இறைஆட்டுக்குட்டியாக சிலுவையை மனுக்குலத்தின் பாவங்களை மன்னிக்கும் கருவியாகப் பயன்படுத்தினார். எனவே, சிலுவை கடவுளின் மன்னிக்கும் அருளின் வெளிப்பாடாக உள்ளது.

2. சிலுவை மீட்கும் அருளின் வெளிப்பாடு: *1பேது. 2: 17-24*

இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் முதன்மையானவராகக் காணப்பட்ட பேதுருவின் முதல் திருமுகம் நீரோவின் கால உபத்திரவத்தின் பின்னணியில் எழுதப்பட்டது. இந்த நீரோவின் உபத்திரவத்தின்போதுதான் பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்தச் சாட்சியானார். மீட்பைக் குறித்து பேதுரு எழுதுகின்றார் *(1 பேது. 2: 24)*. சிலுவை என்ற பதம் மூலமொழியாகிய கிரேக்க மொழியில், 'stauros' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் ஓர் அர்த்தம் மரம் என்பதாகும். திருமறையில் மரம் மீட்போடு தொடர்புடையதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாபத்தின் மரம் என்று பழைய ஏற்பாட்டுப் பின்னணியிலும் கிறிஸ்துவின் சிலுவை என்று புதிய ஏற்பாட்டிலும் மரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது மீட்பின் தொடர்பை மேலும் அதிகரிக்கின்றது. மரம் வீழ்ச்சிக்கும் மீட்புக்கும் இடையே உள்ள இறையியல் தொடர்புகளை வெளிப்படுத்துவதை நாம் காண முடிகிறது. பாவங்களை அவரே சுமந்தார் என்பது இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செயலைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டில், குருக்கள் பலிப்பொருட்களைச் சுமந்து பலிபீடத்திற்குச் செல்லும் அந்தக் காட்சி கிறிஸ்து இயேசுவோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் போக்கு ஆடு என்று ஒரு வெள்ளாட்டு கிடாயின் மேல் ஆரோன் இஸ்ரயேலரின் பாவங்களைச் சுமத்தி அதைப் பாலை நிலத்தில் விட்டுவிடும் பழக்கம் இருந்தது. இது மக்களின் பாவத்தை ஒரு ஆட்டின் மீது சுமத்துகின்ற அனுபவம். பேதுரு மக்களின் பாவத்தை மீட்கும் ஆட்டுக்குட்டியாகிய இயேசு சிலுவை சுமந்த செயலைக் குறிக்கின்றார். சிலுவையில் இயேசுவுக்கு ஏற்பட்ட காயங்களால் குணமடைந்துள்ளீர்கள் என்று பேதுரு குறிப்பிடுவது கிருஸ்துவின் மீட்கும் அருளைப் பிரதிபலிக்கின்றது. இது உடல் ரீதியான விடுதலை மட்டும் இல்லை, சமூக மற்றும் சமய விடுதலையை மாத்திரமல்ல ஆன்மிக விடுதலையையும் குறிப்பாக பாவத்திலிருந்து பெரும் விடுதலையையும் குறிக்கின்றது. எனவே சிலுவை ஒரு மீட்கும் அருளின் வெளிப்பாடாக இருப்பதால் திருச்சபைக்கு ஒரு மாதிரியை, ஒரு சான்றை பேதுரு சிலுவையின் வழியாகக் காண்பிக்கின்றார்.

3. சிலுவை மீள்நிலைப்படுத்தும் அருளின் வெளிப்பாடு: *மாற்கு 10: 46-52*

மாற்கு பத்தாம் அதிகாரத்தில் ஆண்டவர் இயேசு தமது சாவை மூன்றாம் முறையாக முன்னறிவிப்பதை மாற்கு பதிவு செய்கிறார். அதைத்தொடர்ந்து செபதேயுவின் மக்களோடுள்ள உரையாடலில், தாம் பலரது மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கு வந்தேன் என்கிறார் இயேசு கிறிஸ்து. இதற்குப் பின்னர் தாம் பார்வையற்ற பர்திமேயு ஆண்டவரால் பார்வை பெறும் நிகழ்வை மாற்கு பதிவு செய்கின்றார். எனவே, இப்பகுதி இயேசு கிறிஸ்துவின் பாடு மரணம் குறித்த தகவல்களைக் கொண்டுள்ளது. இதற்கிடையில், பயணத்தில் இயேசு பர்திமேயுவைப் பார்வை பெறச் செய்கின்றார். இப்பகுதியில், "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று பர்திமேயு உரக்க கத்தும் அக்காட்சி கடவுளின் மக்கள் பல நிலைகளில் வாழ்வுக்காக ஏங்கும் ஒரு ஏக்க குரலாக வெளிப்படுகின்றது. கடவுள் ஆயிரம் தலைமுறைக்கும் இரக்கம் செய்கின்றவர் என்று பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு இருளில் வாழும் ஒரு தனி மனிதர், தான் ஒளிபெற வேண்டும் என்றும் வெளிச்சம் காண வேண்டும் என்றும் கூக்குரலிடுகின்றார். இயேசு கிறிஸ்து தமது இரக்கத்தால் அவனைப் பார்வை பெறச்செய்து மேன்மைப்படுத்துகின்றார். கடவுள் இஸ்ரயேலரின் கூக்குரலைக் கேட்டார். கூக்குரல் பல சூழல்களில் எழுகிறது. பர்திமேயு உடல்ரீதியான இருளிலிருந்து விடுதலையடையக் கூக்குரலிட்டார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது சிலுவை மரணத்தின்வழி இவ்வுலகின் மக்கள் தாங்கள் இழந்த வாழ்வை, கடவுளின் மன்னிப்பை, இரக்கத்தைப் பெற தந்தையிடம் பரிந்து பேசினார். அதிலும் பாவத்தால் இவ்வுலகில் இருளின் பிடியிலிருந்த மக்கள் விடுதலையடைய வேண்டுமென்று சிலுவையைச் சகித்தார். இதன் வாயிலாக மீள்நிலைப்படுத்தும் அவரது அருளை வெளிப்படுத்தினார். சிலுவை அருளின் வெளிப்பாடு என்பதை இறைமக்கள் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்துவதே இன்றைய திருச்சபையின் முதன்மைப் பணியாக இருக்கின்றது. டீட்ரிச் போன்ஹாஃபர், "சீடத்துவத்தின் மதிப்பு" (Cost of Discipleship) என்கிற தனது புத்தகத்தில் "விலையேறப்பெற்ற அருள்" (Costly Grace) மற்றும் "மலிவான அருள்" (Cheap Grace) என்று இருவகையான அருளைக் குறித்து விளக்குகின்றார். மலிவான அருள் என்பது சிலுவை இல்லாமல், சீடத்துவம், இல்லாமல், இயேசு இல்லாமல் கிடைப்பது (Cheap grace is grace without discipleship, grace without the cross, grace without Jesus Christ) *என்று குறிப்பிடுகின்றார். விலையுயர்ந்த*

அருள் என்பது இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற அழைக்கிறது. ஒருவனுக்கு உண்மையான வாழ்வை அருளுவதால் அது விலையுயர்ந்த அருள். கடவுள் தம் மகனின் உயிரைக் கொடுத்ததால் அது விலையுயர்ந்த அருள். விலையுயர்ந்த அருள் என்பது கடவுள் மானிடரானது (Costly grace calls us to follow Jesus Christ... gives a man the only true life... it is costly because it cost God the life of His Son. Costly grace is the incarnation of God) என்று குறிப்பிடுகின்றார்.

எனவே விலையுயர்ந்த கடவுளின் அருள் ஆண்டவர் இயேசுவிலும் அவரது சிலுவையிலும் வெளிப்பட்டது. சிலுவை மன்னிக்கும் அருளின் வெளிப்பாடாக, மீட்கும் அருளின் வெளிப்பாடாக, மீள்நிலைப்படுத்தும் அருளின் வெளிப்பாடாக இருக்கின்றது என்பதைக் கற்றுக்கொண்ட இறைமக்களாகிய நாம், இத்தவக் காலத்தில் விலையேறப்பெற்ற கடவுளின் அருளை சிலுவை வழியாய்ப் பெற்றிட கடவுள் அருள் செய்வாராக!

அருள்திரு. Y. சுஜின் ராஜ்

அமைதியின் அரசர் உள்ளே நுழையட்டும்

Let the King of Peace Enter

2 அர. 7: 3-10 *பிலி. 4: 4-13*
திபா. 24 *மாற்கு 11: 1-11*

“. . . வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!” (மாற்கு 11: 10)

அரசர்களுக்கு இரண்டு பெயர் கொடுக்கப்படுவதுண்டு - படைகளின் அரசர், அமைதியின் அரசர். எதிரிகளைச் சந்திக்கப் போகும்போது படைகளின் அரசராகப் போக வேண்டும்; தன் நாட்டு மக்களைச் சந்திக்க வரும்போது படைகளைப் பாசறைக்கு அனுப்பிவிட்டு அமைதியின் அரசராக கோவேறு கழுதையில் அமைதியாக வரவேண்டும். தாவீதுக்கு முன்பும், தாவீதுக்குப் பின்பும் பல அரசர்கள் இந்த ஒழுங்கைப் பின்பற்றவில்லை. அவர்கள் தங்கள் மக்களைச் சந்திக்கும்போதும் படைகளின் அரசராகவே படைகளோடு நாட்டிற்குள் வர விரும்பினார்கள். ஆனால், தாவீது தான் போரிட்ட எந்தப் போர்களிலும் தோல்வியே அடையாதவர்; வெற்றியோடு தன் நகரத்திற்குள் நுழையும்போது குதிரையிலும் ரதத்திலும் வரவே மாட்டார்; கோவேறு கழுதையில்கூட வரமாட்டார்; அமைதியின் அரசராக வெறும் கால்களால் நடந்து வருவார். மக்கள், தாவீதை “அமைதியின் அரசராகவே” கொண்டாடினார்கள். வரவிருக்கும் எல்லா அரசும் தாவீதின் அரசாகவே இருக்க வேண்டினார்கள்.

தாவீதின் மகனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அமைதியின் அரசராகவே இருந்தார். கால்நடையாகவே எந்த ஊருக்குள்ளும் செல்வார். அவர் ஓரிடத்திற்கு வரப்போகிறார் என்பது முன்னமே தெரிந்துவிட்டால் அவரைப் பார்க்க மக்கள் படையே கூடி, அவரை “மக்கள் படைகளின் அரசர்” என்றாக்கிவிடுவார்கள். ஆகவே, தாம் போகுமிடத்தை முன்கூட்டியே சீடருக்கு தெரிவிக்காமல் அந்நேரம்தான் தெரிவித்து நடந்து செல்வார். தாம் போகுமிடங்களிலே தம்மைக் கொண்டாட கூட்டம் எதிர்கொள்ள வேண்டும்; வரவேற்க வேண்டுமென்று விரும்பாமல், எதிர்பாராதோர், சுகவீனர், பெலவீனர், அதீத மன அழுத்தம் உள்ளோர் போன்றோரைத் தாம் சந்தித்து அவர்களது உடல்நலக் கேட்டையும் மனநலக் கேட்டையும் சமமாக நீக்கி அவர்களுக்கு அமைதியை பரிசாகக் கொடுக்கும் அமைதியின் அரசர் அவராவார். குருத்தோலை ஞாயிற்றில் அமைதியின் அரசராகிய அவரை எப்படி வரவேற்பது? என்பதைத் தியானிப்போம்.

1. நகர வாசலில் வரவேற்போம்: *(2 அர. 7: 18)*

...நாளை இந்நேரம் சமாரிய நகர வாயிலில் இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு வெள்ளிக்காசுக்கும், ஒரு மரக்கால் கோதுமை மாவு ஒரு வெள்ளிக்காசுக்கும் விற்கப்படும்.

நகர வாயில் அல்லது ஒலிமுக வாசல் என்பது நகரத்திற்கான நுழைவு வாசல். இது ஒலிகளும் மனித முகங்களும் நிறைந்ததாக இருக்கும். ஆகவே, பழைய கால தமிழிலே இந்த இரண்டையும் இணைத்து "ஒலிமுக வாசல்" என்று பெயரிட்டிருந்தார்கள். நகரத்திற்கு முகவாசல், புறவாசல் என்று இரு வாசல்கள் இருந்தன. முகவாசல் பெரியது. குடும்பத்தார் அனைவரும் கூடி வந்து நிற்கிற வீட்டின் நுழைவாசல்போல நாட்டவர்கள் கூடி வந்து நிற்கிற நுழைவாசலாக நகர வாசல் இருந்தது. முதலாவதாக, இஸ்ரயேல் நாட்டிலே நகர வாசலை அல்லது ஒலிமுக வாசலை முதலாவது கட்டியவர் தாவீது அரசர். பொதுவாக, அரசர்கள் இப்படிப்பட்ட ஒலிமுக வாசலை மிகப் பிரம்மாண்டமாகவும், கலைநயமிக்கதாகவும், தங்களது ஏதாவது ஒரு வெற்றியை நினைப்பூட்டுவதாகவும் தங்கள் நிரந்தர மதிப்புக்கானதாகவும் கட்டுவார்கள். அதன் வடிவம், சித்திரம், சிந்தனை என எல்லாமே அரசனை மையப்படுத்தியே இருக்கும்.

நகர வாசல் ஒரு புனிதமான இடமாகக் கருதப்படும். அதனருகே யார் கலகத் தன்மையோடு வந்தாலும் அது அரசத் துரோகமாகவே கருதப்படும். ஆனால், தாவீது கட்டின நகர வாசல் மக்களை மையப்படுத்தியதாக இருந்தது. மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கூடி வந்த பொது இடமாகவும், ஒருவரையொருவர் சந்திக்கின்ற இடமாகவும் இருந்தது. தாவீதுக்குப் பின் இஸ்ரயேல் அரசர்களும் நகர வாசலை மக்களை மையப்படுத்தும் இடமாகவே வைத்துக் கொண்டார்கள்.

இஸ்ரயேல் அரசன் யோராம் காலத்தில் நகர வாசல் சீரியர்கள் விட்டு விட்டுப் போன தானியங்களை பஞ்சகாலத்தில் சிறப்பு ஏற்பாட்டின் படி மலிவு விலையில் விற்கும் இடமாக இருந்தது. அந்த விற்பனை நேரம் நகர வாசலை மிகவும் மோசமான இடமாக மாற்றி இருந்தது. மக்கள் சுயக்கட்டுப்பாடில்லாமல் நடந்து அதினால் பிரதானி ஒருவன் மிதிபட்டே மரித்துப்போனார். இது நடந்து 880 ஆண்டுகளுக்குப் பின் எருசலேம் நகர வாசலுக்கருகில் வந்து பார்த்தபோது அங்கே கோவில் வளாகத்திற்குள்ளே விற்பனை நடப்பதைப் பார்த்து அவரது உள்ளம் உடைந்து போய் விட்டது. மக்களின் உள்ளம் இறை நம்பிக்கையைக் குறித்துச் சிந்திக்கவே இல்லை. வியாபாரம், விற்பனை குறித்த பேச்சுகள் அதிகரித்துவிட்டன. கடவுளின் பெயரால் பெருங்குற்றங்கள் வியாபாரமாக நடைபெறுவதைப் பார்த்து அவர் மிகவும் அழுதார். வியாபாரமாக ஆன்மிகம் மாறிப்போனால், அது அவரை வேதனைப்படுத்தும் என்பதை நகர வாசல் நினைவுபடுத்துகிறது. நகர வாசலில் வியாபாரிகளாக அல்ல; விசுவாசிகளாக அவரை வரவேற்போம்.

2. ஆலய வாசலில் வரவேற்போம்:

"முன்னேயும் பின்னேயும் சென்றவர்கள் ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக!" (மாற். 11: 9)

எருசலேம் திருக்கோவில் நோக்கி அவருக்கு முன்னேயும் பின்னேயும் நடந்தவர்கள் சிறந்த வார்த்தைகளால் அவரைப் போற்றுகிறார்கள். இதை நாம் நம்முடைய திருவிருந்துத் தொழுகையிலே போற்றுதலாகக் கூறுகிறோம். "கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும் வருகிறவருமானவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். உன்னதத்தில் ஓசன்னா." மன வேதனைகளில் இருக்கும் பலர் கூறுகிற வார்த்தை - கடந்து போனாலும் கனமாக இருக்கிறது மனது; கலைந்து போனாலும் கனவாக இருக்கிறது நினைவு என்பார்கள்.

கோவிலுக்கு மனப்பாரத்தோடு வரும் ஒவ்வொருவரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை வந்தவரும் வருகிறவருமானவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்கிற போற்றுதலோடு வரவேண்டும் என முன் நடப்பாரும் பின் நடப்பாரும் கற்றுத் தருகிறார்கள். இதுதான் எந்நாளும் அவருக்காக நாம் கொடுக்கிற வரவேற்புரையாக இருக்கிறது. உலக மக்கள் எல்லாருடைய வாழ்விலும் ஆசீர்வாதம் செய்பவராக அவரே இருப்பவர் என்பதையே இந்த வரவேற்பு வாசகம் கூறுகிறது. அவரைப் பிடிக்காத தலைமைக் குரு, பரிசேயர், சதுசேயர் எள்ளல் கலந்த தொனியில் வேண்டுமென்றே அவரையும் அவரது செயல்களையும் அவமதித்துச் சொன்னாலும் அவர் போற்றுதற்குரியவர்தாம் என்பது இன்றளவும் மனிதர் அவரை போற்றுவதில் வெளிப்படுகிறது.

ஆலயம் வந்த அவரை வரவேற்க யாருமில்லை. அவரை ஆலயத்திற்குள் வரவிடாமல் தடுக்க ஏதாவது வழி இருக்கிறதா? என தலைமைக் குருவும், பரிசேயரும் பார்க்கிறார்கள். அமைதியின் அரசரை அமைதியை குலைத்தவராகவே எதிர்கொண்டார்கள். நாடுகளிலே ஒரு காலத்திலே அமைதி குலைந்தபோது Passport, Visa போன்ற நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு போவதற்கு தன் நாடு, "நீ போகலாம்" எனக் கூறுவது கடவுச் சீட்டு; போகும் நாடு "நீ வரலாம்" என அனுமதியளிப்பது விசா.

ஒரு நாட்டு அரசரின் தூதர்கள் இன்னொரு நாட்டிற்கு போகும்போது நன்னடத்தைக் கடிதம் கொடுத்து அரசர் அனுப்புவார். இக்கடிதத்தில் அரச முத்திரை இடப்பட்டிருக்கும். ரோமாபுரி அரசர் அகஸ்டஸ் சீசர் கொடுத்த Passport-இல் இருந்த வாசகம் "இதைக் கொண்டு வருகிற பயணிக்கு பூமியிலோ, கடலிலோ, யாராவது துன்பம் தர முடிவு செய்தால், அப்படி செய்யும் முன் சீசரை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனக்குப் பலம் இருக்கிறதா என்பதை யோசிப்பாராக". சீடர்களை அதட்டும்; எந்த அதிகாரத்தினால் இவைகளை செய்கிறீர் என்று அவரை தடுத்தவர்கள் Passport, Visa இருக்கிறதா? எனக் கேட்டதை போலவே, அவரோடு இணைந்து மீட்பின் பணியைச் செய்வோம் என்னும் முடிவுக்கு வரவில்லை.

ஒன்றின் உண்மையை அக்கணமே பார்ப்பது, நம்மை புரிய வைத்து அமைதியைத் தரும். அமைதியின் அரசர் விரும்பின அந்த அமைதியை அவர்கள் விரும்பவில்லை. அமைதியின்மை காரணமாக உணர்ச்சிவசப்பட்டு அவருக்கு அவர்கள் சொன்ன பதில்கள், செயல்கள் இன்றும் நடக்கின்றன. இவை அமைதியின் அரசர் ஆலயத்திற்குள் அமைதியாக வரமுடியாதபடி தடுக்கின்றன. ஆலயத்திற்குள் அமைதியின் அரசரை வரவேற்க இவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

3. நம்பிக்கையின் குரலால் வரவேற்போம்:

"வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப் பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!" என்று ஆர்ப்பரித்தார்கள். *(மாற். 11: 10)*

குருத்தோலைப் பிடித்துக் கொண்டு எழுப்பப்பட்ட பேரொலியான "ஓசன்னா" ஆபத்துக் காலத்தில் காப்பாற்ற வேண்டும் என்று எழுப்பப்படுகிற அபாய ஒலியாகும். நாம் தற்போது அனுதினமும் கேட்கிற ஆம்புலன்ஸ் ஊர்தியில் இருந்து எழுப்பப்படுகிற அபாய ஒலி போன்றதுதான். ஆம்புலன்சிலிருந்து நான்கு வகையாக அபாய ஒலி எழுப்பப்படுகிறது. முதல்வகை ஒலி - உடல்நலம் குன்றியவரை அழைத்துச் செல்லுகிறது என்பதாகும். இரண்டாவது வகை ஒலி - அடிபட்ட ஒருவரை அழைத்துச் செல்லுகிறோம் என்பதாகும். மூன்றாவது வகை ஒலி - அடிப்பட்டு அபாயகரமான நிலையில் உள்ளவரை அழைத்துச் செல்லுகிறோம் என்பதாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமும் எழுப்பப்பட்ட இந்த அபாயக்குரல் உன்னதத்தில் இருந்து உதவி வரும் என்னும் நம்பிக்கையோடு எழுப்பப்பட்ட நம்பிக்கையின் குரலாக இருந்தது. கடவுளை நோக்கி எழுப்பப்படும் அபாயக்குரல் அங்கலாய்ப்போடல்ல; நம்பிக்கையோடு எழுப்பப்பட வேண்டும் என்னும் பாடம் இதன் வழியாக கற்றுத் தரப்படுகிறது.

ஓசன்னா ஒலி - ஆண்டவர் இயேசுவோடு நடக்கிறவர்கள் கவலை கண்ணீர் இல்லாதவர்கள் அல்லர்; ஆனால், அவை மாறும் என்னும் நம்பிக்கையுடையவர்கள் என்பதையே விளக்கியது. வாழ்க்கையில் அமைதியற்றுப் போகாமல் நம்பிக்கையோடு இருக்க இந்த ஒலி அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால், தலைமைக்குரு பரிசேயர் இதை ஆலயத்தில் எழுப்பக்கூடாத ஒலியாகக் கூறி, ஆண்டவரிடம் இதை எழுப்பக்கூடாது எனத் தம் சீடர்களை அதட்டும்படி கூறினார். ஆனால், உன்னதத்தை நோக்கி எழுப்பப்படும் ஒலியை ஆண்டவர் குழந்தைகள், பாலகர் ஒலியாக ஏற்றுக்கொள்ளுவதாக மறுமொழி கூறினார். ஏனென்றால், கவலைகளை அடக்கிக்கொண்டு தொழுகையில் ஈடுபடும்போது தொழுகையின் பகுதிகளில் சிலவற்றை விட்டுவிடுகிறார்கள். தொழுகையிலும் வெறுப்பு அலுப்பு தோன்றிவிடுகிறது. ஆகவே, ஓசன்னா ஒலியை அனுமதித்ததன் மூலம் தொழுகையில் நம்பிக்கையே பெருகியது.

அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்

கனியற்ற வாழ்வை எச்சரிக்கும் கிறிஸ்து

மத். 21: 18 - 22

வழியோரத்தில் ஓர் அத்தி மரத்தை அவர் கண்டு அதன் அருகில் சென்றார். அதில் இலைகளைத் தவிர வேறு எதையும் அவர் காணாமல், "இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப் பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்தி மரம் பட்டுப் போயிற்று. (மத். 21: 19).

தூய வார நிகழ்வு ஒரு மிகப் பெரிய பேரணியிலிருந்து தொடங்குகிறது. இது பெத்தானியாவில் ஆரம்பமாகி எருசலேமில் நிறைவுறுகிறது. இந்தப் பேரணி மட்டுமல்ல; அதற்குப் பின்வரும் நிகழ்வுகளும் பெத்தானியாவில் ஆரம்பமாகி எருசலேமில் நிறைவடைகிறதாகவே அமைகிறது. திங்கள் காலை (தூய வாரம்) முதல் கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்படுவது வரை இதில் ஒரு தொடர்பு காணப்படுகிறது.

திருக்கோவிலை தூய்மையாக்கும் நிகழ்வே ஒரு பெரிய எச்சரிப்பை அன்றைய சமய தலைவர்களுக்கு ஏற்படுத்தியது. அதோடு இயேசு நிறுத்திவிடாமல் இன்றைய நிகழ்வின் வழி இன்னொரு கடுமையான எச்சரிப்பையும் கொடுக்கிறார். அதுதான் பட்டுப்போன அத்தி மரம். இந்த செய்தியை நற்செய்தியாளர்களில் இருவர் விவரமாக கூறுகின்றனர் (மத்தேயு, மாற்கு). அத்தி மரம் பட்டுப்போன நிகழ்வின் வழி ஆண்டவர் இயேசு நமக்கு உணர்த்தும் உண்மையை இரண்டு குறிப்புகளில் சிந்திப்போம்.

1. பகட்டு வாழ்வின் அடையாளம்: *(மத். 21: 19)*

இயேசுநாதர் வழியருகே கண்ட அத்தி மரம் பகட்டு வாழ்வின் அடையாளமாகவே இருந்தது. "வேடம் ஒருநாள் கலைந்திடும்". இது ஆன்றோர் மொழி. இதற்கு ஏற்ப இந்த அத்தி மரத்தின் பகட்டிற்கு முடிவு வந்தது. அத்தி மரத்தைப் பொறுத்தவரை இஸ்ரயேல் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்று. இது ஆண்டிற்கு இருமுறை கனி தரும் என்றும், மும்முறை கனி தரும் என்றும் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மற்றொரு முக்கியச் செய்தி என்னவென்றால், இந்த மரத்தில் துளிர்விட்டு இலைகள் வளர்ந்துவிட்டால் கண்டிப்பாக அடிமரத்தில் காய்/கனி இருக்கும். இது மரத்திற்கு ஆண்டவர் தந்த வாழ்வு நெறி. இங்கு இயேசு கண்ட அத்தி இலைகளால் நிறைந்து தன்னிடம் கனி இருப்பது போன்று காட்சியளித்தது. அது இவ்வளவு செழுமையாக வழியோரம் நின்றதால் இதனிடம் கனி நாடி வந்து எத்தனை பேர் ஏமாற்றமடைந்தனரோ தெரியவில்லை. இந்த அத்தி மரம் பலரை

தன் பக்கம் இழுத்து ஏமாற்றியிருக்கலாம். இயேசுவை ஏமாற்றிவிடலாம் என்றால் அது முடியாது. அதற்கு தகுந்த பலன் உண்டு என்பதை இந்த நிகழ்வின் வழி இயேசு நமக்கு உணர்த்துகிறார்.

இது மரத்தை எச்சரித்த ஒரு நிகழ்வு என்று நாம் மேலோட்டமாக சிந்தித்துவிட்டுச் செல்லக்கூடாது. அன்றை ரபிமார்கள், பரிசேயர்கள், சமயத் தலைவர்கள் என்ற போர்வையில் ஏழை எளிய, சாமானிய மக்களின் மீது சமயச் சடங்குகள், ஒழுங்குகள், நியாயப்பிரமாணம் என்று திணித்துவிட்டு அதில் எல்லாவற்றையும் தாங்கள் கைக்கொள்ளாமல் முழுவதும் அதற்கு உட்பட்டவர்போல வெளிவேடம் இட்டவர்களுக்கான எச்சரிப்பு.

இன்றைய திருச்சபையும் இந்த அத்தி மரத்தின் பகட்டு வாழ்வை அடையாளமாகக் கொண்டுள்ளது. உத்தம விசுவாசிகள், கடவுளோடு உடன் இருப்பவர். தனது பெருங்கொடைகளால் கர்த்தரையே செல்வராக்குபவர் என்ற மனப்போங்கில் இருப்பவர்களை கொண்டாடும் திருச்சபையும், திருச்சபைத் தலைவர்களும் இந்த அத்தி மரத்தைப் போன்றவர்களே. இந்த அத்தி மரத்திற்கு நேர்ந்த நிலையே திருச்சபைக்கு ஏற்படும்.

2. நியாயத்தீர்ப்பின் அடையாளம்: *(மத். 21: 19)*

இயேசு கிறிஸ்துவினால் சபிக்கப்பட்டுப் பட்டுப்போன அத்தி மரம் கிறிஸ்து இயேசுவின் அப்பழுக்கற்ற நியாயத்தீர்ப்பின் அடையாளமாக இருக்கிறது. ஆண்டவர் அந்த அத்தி மரத்தை வழியருகே வளர அனுமதித்தார். எந்த மனித பராமரிப்பும் பாதுகாப்பும் இன்றி ஆண்டவரே அதை பராமரித்து வளரச் செய்தார். எதற்காக? கனி கொடுப்பதற்காக. அது கனி கொடாதிருந்ததால் அது கர்த்தரின் நீதி தீர்ப்புக்கு உட்பட்டது. ஒருவேளை நம்மில் சிலருக்கு ஒரு கேள்வி எழும்பலாம். எல்லாவற்றையும் படைத்த அவர் அந்த கனியற்ற அத்திமரத்தை சபித்ததற்கு மாறாக அதில் கனி உண்டாகச் செய்திருக்கலாமே என்று. ஆம், கண்டிப்பாகச் செய்திருக்கலாம். லூக். 13: 7-இல் ஒரு நிகழ்வை இயேசு சுட்டிக்காட்டுகிறார். அதில் திராட்சை தோட்டம் ஒன்றில் ஒரு அத்தி மரம் பலன் கொடாதிருந்தது. அதை வெட்டிப் போடலாம் என்று திராட்சைத் தோட்ட உரிமையாளர் சொல்ல பணியாளர் அதற்காக வேண்ட, ஓர் ஆண்டு வாய்ப்பு தரப்படுகிறது. அப்படி கனி தராவிட்டால் அதற்குரிய பலன் வழங்கப்படும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது.

மத். 3: 10-இல் நியாயத்தீர்ப்பு நாளிலே நல்ல கனிகொடா மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று சொல்லப்பட்டுள்ளதுபோல, இந்த அத்தி மரத்திற்கான நியாயத்தீர்ப்பு நாள் இதுவே. நற்செய்தியாளர் யோவான் தமது நூலில் (15: 2) (தம்மில்) இயேசுவில் கனிகொடாத கொடி அறுத்துப் போடப்படும் என்றும் கனி கொடுக்கும் கொடியானது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதைச்

சுத்தம் பண்ணுவார் என்று கூறியுள்ளார்.

நமக்கான நீதி தீர்ப்பு எப்போது ஏற்படும் என்று எவருக்கும் தெரியாது. எந்த நேரத்திலும் ஏற்படலாம். கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு அவரது இல்லத்திலிருந்தே ஆரம்பமாகும் என 1 பேது. 4: 17 கூறுகிறது. அப்படியாயின், நாமே அவரது இல்லம், ஆக எப்போது வேண்டுமானாலும் அந்த நீதித் தீர்ப்பு ஏற்படலாம். அதற்கு நாம் ஆயத்தம் உடையவர்களாக காணப்பட வேண்டும். குறிப்பாக, நாம் தோற்றத்தில் கிறிஸ்தவர்களாக காட்சியளித்து நம்முடன் வாழும் சமூகத்தை ஏமாற்றிவிடலாம். கிறிஸ்துவை ஒருபோதும் ஏமாற்ற முடியாது. எப்போதும் கனியுள்ள வாழ்வு வாழ வேண்டும். நமது கல்வியறிவு, பொருளாதார வளமை, ஆடம்பரம் இவைகளால் செழிப்புடன் வாழ்வதுபோல மட்டும் காணப்படாமல், நமது இயல்புகளால் ஆண்டவர் விரும்பும் கனியுள்ள வாழ்வு வாழவேண்டும்.

இன்றைய திருச்சபைக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஒரு வாய்ப்பாக இந்த ஆண்டின் தவக்கால நாள்கள் தரப்பட்டுள்ளன. மரங்களின் (மத். 3: 10, லூக். 3: 9) வேர் அருகில் வைக்கப்பட்டுள்ள கோடரி கர்த்தருடைய கரத்தில் எடுத்து நீதி தீர்ப்பு செய்யுமுன் கனியுள்ள வாழ்வுக்கு நேராக ஆயத்தமாவோம். கர்த்தரின் கரம் நம்மை நடத்துவதாக.

அருள்திரு. **P. ஜேக்கப் பீற்றர்**

அதிகாரமும், இயேசுவும்

மத்தேயு 21 : 23 - 27

"எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்?" (மத். 21 : 23)

தூய வாரத்தின் தூய செவ்வாய்க்கிழமையை கேள்வியின் நாள் என நினைவு கூர்வது வழக்கம். யூத சமயத்தில் சனகரிம் சங்கம் அதிக அதிகாரம் கொண்ட இயக்கமாய் அறியப்பட்டது. இதில் மறைநூல் அறிஞர்கள், பரிசேயர், சதுசேயர் என பலர் அடங்குவர். இந்த இயக்கத்தில் இருப்பவர்கள் இயேசுவின் அதிகாரத்தை பொறுக்க இயலாமல் கேள்வி எழுப்பினர். இந்தக் கேள்வி சந்தேகத்தை சரி செய்யவோ, நல்ல நோக்கத்தோடோ எழுப்பப்பட்ட கேள்வி இல்லை. இயேசுவை சதி வலையில் சிக்க வைக்கும்படியாக கேட்கப்பட்ட கேள்வியாக அமைந்தது. இதை அறிந்து கொண்ட இயேசு எப்படிப்பட்ட அதிகாரத்தால் செயல்படுகிறார் என்பதை அறிந்து கொள்வோம்.

1. இறையில்லத்தில் அதிகாரம் உடையவர்:

இறையில்லத்தில் அதிகாரம் தலைமை குருவுக்கு என்ற நிலை யூதர்கள் மத்தியில் நிலவியது. எனவே இறையில்லத்தின் அதிகாரம் எங்கள் கையில் மட்டுமே இருக்கிறது என ஆணவத்தோடு செயல்பட்டார்கள். இயேசு இறை இல்லம் வியாபாரக்கூடமாக, கள்ளர் குகையாக இருப்பதைக் கண்டு வருந்தினார். எனவே இறையில்லத்தை சீர்படுத்தும் பொருட்டு என் வீடு, இறைவேண்டலின் வீடு, எல்லா மக்களுக்கும் உரிய வீடு என தம் அதிகாரத்தை வெளிப்படுத்தினார். இறையில்லத்தில் யூதர்கள் தாங்கள் விரும்பியவர்கள் மட்டுமே வர வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றி மாற்றுத் திறனாளிகள், ஏழைகள் அனைவரும் வருவதை உறுதி செய்தார். இன்றும் இயேசுவே திருச்சபையின் தலைவர் என வார்த்தையால் கூறுகின்றோம். ஆனால் தலைமைக் குருக்களை போல பதவி, அதிகார வெறி போன்ற எண்ணங்கள் மாற்றப்பட்டு இயேசுவே இறையில்லத்தில் அதிகாரம் கொண்டவர் என புரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

2. இறைவார்த்தையைக் கற்றுக் கொடுக்கும் அதிகாரம் உடையவர்:

இயேசு எருசலேம் தேவாலயத்தில் இறைவார்த்தைகளை போதித்த போது ஒரு கேள்வி எழுந்தது. இவர் எந்த அதிகாரத்தினால் இவைகளை செய்கிறார் என்ற கேள்வி அது. ஏனெனில் ரபிகளிடம் பயிற்சி பெற்றவர் மட்டுமே போதிக்க வேண்டும் என்ற சூழல் இருந்தது. மாற்கு *1: 22* கூறுகிறது, இயேசு மறைநூல் அறிஞர்களை போல் அல்லாமல் அதிகாரத்தோடு போதித்தார். இயேசுவின் போதனை அதிகார வர்க்கத்துக்கு எதிராக அமைந்தது. உண்மையை உரக்க சொல்கின்ற வகையில் மக்கள் மனங்களில் பதிய செய்தார். இதை தலைமை

குருக்களால் பொறுக்க இயலவில்லை. இன்றைய சூழலிலும் மனிதரை மனநிறைவு அடையச்செய்கின்ற போதனை அதிகம் விரும்பப்படுகிறது. கண்டித்துரைக்கும் போதனைகள் வெறுக்கப்படுகிற சூழலில் வைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இயேசுவைப்போல உண்மையை நீதியாய் போதிக்கின்ற அதிகாரம் உடையவர்களாய் செயல்பட இப்பகுதி கற்றுத் தருகிறது.

3. இறைஅதிகாரம் உடையவர்:

இயேசுவினிடத்தில் இந்த அதிகாரத்தை கொடுத்தது யார் என கேள்வி எழுப்பினர். மத். 9: 6,7 ஆகிய மறைவாக்குகளை பார்க்கும்போது, மண்ணுலகிலே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் தனக்கு உண்டு என்றும், அதைக் கேட்ட மக்கள் இறைவனை மகிமைப்படுத்தியதையும் காண இயலும். இயேசு சீடர்களை அனுப்பும் போதும் அசுத்த ஆவிகளை துரத்தும் அதிகாரம் கொடுத்து அனுப்பினார். மத். 28: 18-இல் மண்ணுலகில் அனைத்து அதிகாரமும் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார். இவ்வாறு இயேசு இறைவன் தனக்கு வழங்கி இருக்கும் அதிகாரங்களை திருமறையில் வெளிப்படுத்தி இருக்கிறதை காண முடிகிறது. எனவே உலகத்தின் இருளின் அதிகாரத்தை விரும்பி தேடும் மனிதர்களை பின்பற்றுவதை விட்டு அனைத்து அதிகாரமும் உடைய இயேசுவை பின்பற்றுவது நம் வாழ்வை வளப்படுத்தும்.

இயேசுவினுடைய இந்த பதில்கள் நம்மையும் தெளிவுபடுத்தி இருக்கிறது. இறையில்லம், இறைவார்த்தையைப் போதிப்பது, இறைவன் கொடுத்திருக்கும் அதிகாரம் இவை இயேசுவை அன்றி வேறொருவருக்கும் கொடுக்கப்படவில்லை என உணர்வோம். அதிகார வர்க்கம் எதிர்த்தாலும் இறை இயேசுவின் வழிநின்று துணிச்சலோடு செயல்படுவோம். மனித அதிகாரங்களோடு இணைந்து நம் செல்வாக்கை உயர்த்துவதை விட்டு இறைவனோடு இணைந்து அவரின் அடிச்சுவடுகளை நமதாக்குவோம்

திரு. R. பிரீத்திவ்

நறுமணம் வீசும் நற்செயல்

மத். 26: 6-13

"ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே" (மத். 26: 10)

ஜாண் கென்னடி அமெரிக்க ஜனாதிபதி ஆகும்முன், ஒரு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணி செய்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் வருவாயை ஒரு அநாதை விடுதிக்கு கொடுத்து உதவி வந்தார். நாள் முழுவதும் வாசனை திரவியங்களுடன் இருந்ததினால் அவர் வீடு திரும்பும் போது வழியெல்லாம் அவரில் இருந்து வாசனை வீசிக்கொண்டே இருக்கும். வீட்டிற்குள் இருப்பவர் கூட, கென்னடி தெருவில் போகிறார் என்பதை அறிந்து கொள்வர்.

நறுமணம் எல்லாரும் விரும்புகின்ற ஒன்று. மனிதன் நறுமணம் வீச வேண்டும் என்பதற்காக வாசனை திரவியம் பயன்படுத்துவது உண்டு. கடவுளும் நறுமணத்தை விரும்புகிறார். தொநூ. 8: 20-21, மற்றும் லேவி. 8: 21-ஐ பார்க்கும் போது கடவுள் நறுமணத்தை நுகர்ந்தார் என்று திருமறை கூறுகிறது. மத்தேயு 26: 6-13 வரையுள்ள பகுதியில் பெண் ஒருவர் ஆண்டவருக்கு நறுமணம் வீசும் நற்செயலை செய்கிறார்.

பஸ்கா பண்டிகை காலம், யூதர்கள் எருசலேமில் குழுமியிருந்த நேரம். யூத வழக்கத்தின்படி பஸ்கா கொண்டாட வரும் மக்கள் எருசலேமை சுற்றியுள்ள கிராமங்களில் இரவில் தங்குவதும், உறவுகளோடு இணைந்து விருந்து உண்ணுவதும் வழக்கம். இதே போன்ற ஒரு நிகழ்வில் தான் பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் இயேசு உணவருந்தி கொண்டிருந்தபோது பெண் ஒருவர் விலையுயர்ந்த தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் வந்து அதை உடைத்து ஆண்டவர் தலையில் ஊற்றி அருட்பொழிவு செய்த நிகழ்வு நடைபெற்றது. ஆண்டவர் அப்பெண்ணை குறித்து சொல்லும் போது "என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்" என்கிறார். ஏன்?

1. உயர்வானதைக் கொடுத்தார்: *(மத். 26: 7)*

பெண் ஒருவர் விலையேறபெற்றதை, உயர்வானதை ஆண்டவருக்கு மனமகிழ்ச்சியுடன் கொடுத்து ஆண்டவர் மீதுள்ள தனது அன்பை வெளிப்படுத்தினார். இதனுடைய விலை மதிப்பினை இயேசுவின் சீடருடைய வார்த்தையின் வழி நாம் அறிய முடிகிறது. "இவர் ஏன் இதை வீணாக்கினார். முந்நூறு பணத்திற்கு விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே" என்கிறார். 300 பணத்துக்கு அதிகமாக விற்க கூடிய

விலையேறபெற்ற பரிமள தைலம் கொண்டு வந்தார் என்று மாற் 14:5-ல் கூறப்பட்டுள்ளது. 300 பணம் அன்றைய தினம் ஒரு வலிமையான போர்குதிரையை வாங்குவதற்கு போதுமானது. ஒரு இராத்தல் கொண்டு வந்தார் என்று யோவா. 12: 3-ல் கூறப்பட்டுள்ளது. ஒரு இராத்தல் என்பது - 60 சேக்கல் - 60 சேக்கல் என்பது 1.135 கிலோ கிராம் அளவைக் கொண்டது. சாதாரனமாக ஒரு மனிதன் ஒரு வருடம் வேலை செய்தால் எவ்வளவு பணம் கிடைக்குமோ, அவ்வளவு விலையேறப்பெற்றது இந்த பரிமள தைலம். இவ்வளவு மதிப்பு மிக்க, உயர்வான பொருளை கடவுளுக்காக கொடுத்தார்.

2. உள்ளத்தை உடைத்தார்: *(லூக். 7: 38)*

லூக்கா ஒரு பாவியான பெண் என்கிறார். ஆனால் யோவான் குறிப்பிடும்போது மரியா *(யோவா. 12: 3)* என்கிறார். அப்படியானால் மரியா என்கிற பாவியான பெண் என புரிந்து கொள்ள முடிகிறது. என்ன பாவம் செய்தார் என குறிப்பிடப்படவில்லை.

இவர் இயேசுவின் பாதங்களின் அருகில் பின்னாக நின்று அழுது கொண்டிருக்கிறார். அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தலைமயிரினால் துடைத்து, பாதங்களை முத்தம் செய்கின்றார். இச்செயல்கள் அவர் தன் பாவத்தை உணர்ந்து, தன் உள்ளத்தை உடைத்து, ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்பதை வெளிப்படுத்துகிறது. இப்படி உள்ளம் உடைந்து மன்னிப்பு கேட்கும் அவரை பார்த்து ஆண்டவர் கூறுகிறார், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" *(லூக்.7: 38).*

கடவுள் ஒருபோதும் உடைந்து போன உள்ளத்தைப் புறக்கணிப்பவர் அல்ல "கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே: கடவுளே! நொறுங்கிய, குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை *(திபா. 51: 17).*

மரியாளை போல் உள்ளத்தை உடைத்து, வருந்தி கடவுளிடம் மன்னிப்பு கேட்கும் போது, அவர் எவரையும் அவமதிப்பதில்லை.

3. உன்னதரை உயர்த்தினார் *(மத். 26: 7)*

பழைய ஏற்பாட்டில் அரசர்கள் நியமிக்கப்படும் போது தைலத்தை கொண்டு அருள்பொழிவு செய்வது வழக்கம் *(1 சாமு. 10:1).* இங்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தலையின் மீது தைலம் ஊற்றுவது, அவரை அரசராக காண்பிக்கும் முயற்சியாகும். இன்னொரு நிலையில் மரியாளின் செயல் எலியா மெசியாவுக்கு செய்ய வேண்டிய செயல் என்பது குறிப்பிடத்தக்கது. கழுதையின் மீது ஏறி எருசலேமுக்குள் மெசியா நுழையும் வேளையில், எலியா மெசியாவை சந்தித்து அவருக்கு எண்ணெயால் அருட்பொழிவு செய்து அவரை மெசியா என அறிவிப்பார் என்பது யூதர்களின் நம்பிக்கை. அதற்கு பதிலாக இங்கே இந்த பெண்

ஆண்டவரை அவருடைய இறப்புக்கு தயார் செய்யும் வகையில் இந்த செயலை செய்ததாக புரிந்து கொள்ளப்படுகிறது. இறப்பின் வழியாக மீட்பு வழங்கும் மெசியா அருட்பொழிவு செய்யப்படுகிறார். இந்த பெண் உன்னதராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய நற்செயல் வழி உயர்த்துகிறார்.

இப்படி செயல்பட்ட இந்த பெண்மணியை குறித்து தான் ஆண்டவர் கூறுகிறார் "உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்த நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம், இப்பெண் செய்ததும் எடுத்துக் கூறப்படும், இவரும் நினைவு கூரப்படுவார்" *(மத் 26: 13)*. இவரில் வெளிப்பட்ட நறுமணம் வீசும் நற்செயல்களே, இவர் நினைவு கூரப்படுவதற்கு காரணமாக அமைகிறது. நாமும் ஆண்டவருக்கு உயர்வானதை கொடுப்போம், உள்ளத்தை உடைப்போம், உன்னதரை உயர்த்துவோம்.

திரு. W. சாம் ஸ்டாலின்

நன்றித் திருவிருந்து: வாழ்வருளும் அன்பு

Eucharist: Life-Giving Love

விப. 16: 4-12 *1 கொரி. 11: 23-29*
திபா. 139 *யோவா. 13: 1-17 & 34-35*

"ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" (யோவா. 13: 34).

நான்கு நற்செய்தியாளர்களும் ஆண்டவர் இயேசுவின் கடைசி பஸ்கா நிகழ்வை வெவ்வேறு பார்வையில் இருந்து தருகின்றனர். நான்கு நற்செய்தியாளர்களுமே இந்த நிகழ்வை எழுதி இருந்தாலும், லூக்கா மற்றும் யோவான் நற்செய்தி நூல்கள், மற்ற இரண்டு நற்செய்திகளை விட இன்னும் கொஞ்சம் அதிகமாக இதை குறித்து எழுதி இருக்கின்றன. மத்தேயு நூல் இயேசுவின் ஒரேயொரு அதுவும் கடைசி பஸ்காவை மட்டும் நான்கு இடங்களில் குறிப்பிடுகிறார், (மத். 26: 2, 17, 18,19). மாற்குவும் கடைசி பஸ்காவை மட்டுமே குறிப்பிடுகிறார் (மாற். 14: 1, 2 (two places) 14, 16). ஆனால் லூக்கா நற்செய்தியாளர் இரண்டு பஸ்கா நிகழ்வுகளை பதிவு செய்கிறார் தனது முதல் பஸ்கா நிகழ்வை லூக்கா 2:41 இல் தருகிறார். இந்தப் பகுதியில் எவ்வாறு ஒவ்வொரு இஸ்ரயேலரும் பஸ்காவை கொண்டாடுவதற்காக எருசலேம் போகிறார்கள் என்பதையும் இயேசுவின் பெற்றோரும் இதை கடைபிடித்தனர் என்பதையும் தருகிறார். இரண்டாவது நிகழ்வாக லூக்கா 22 இல், மத்தேயு மற்றும் மாற்கு தருவது போல கடவுளின் கடைசி பஸ்காவை தருகிறார். ஆனால் யோவான் நற்செய்தியாளரோ 3 பஸ்கா நிகழ்வுகளை தருகிறார். முதல் பஸ்காவை யோவான் 2: 13, 23 இல், இயேசு பஸ்கா விழாவை கொண்டாடுவதற்காக எருசலேமில் இருக்கிறார் என்பதை சொல்லுகிறார். இரண்டாவது பஸ்காவை யோவான் 6:4 இல் இயேசு பஸ்காவின் முந்தைய நாளில் 5000 பேருக்கும் அதிகமானோர்க்கு உணவளித்தார் என்பதை சொல்லுகிறார். மூன்றாவதை யோவான் 11: 55 ல் மறைநூல் அறிஞர்கள், மற்றும் ஆசாரியர்கள் இயேசுவை கொலை செய்யும் படலத்தில் யூதர்களின் பஸ்கா அருகில் இருந்தது, என்று எழுதுகிறார். இந்த மூன்றாம் பஸ்காவை மற்ற நற்செய்தியாளர்கள் தருவது போல இயேசுவினுடைய கடைசி பஸ்கா நிகழ்வாக யோவான் நற்செய்தியாளர் எழுதியிருக்கிறார்.

யோவான் 12: 1-ல் தெளிவாக இயேசுவின் கடைசி பஸ்காவை குறித்து சொல்லப்படுகிறது. அதாவது "பஸ்காவின் ஆறு நாட்களுக்கு முன்பு" என்று அந்த குறிப்பு வருகிறது. அதைத் தொடர்ந்து இந்த இறுதி இராவுணவும், காலடிகளை கழுவுதலும் நடைபெறுகிறது (13: 1). பொதுவாக *யூதத்தில், விருந்தினர்கள் ஒரு வீட்டிற்கு வந்த உடனேயே*

வேலைக்காரர்கள் அல்லது அடிமைகளைக் கொண்டு காலடிகளை கழுவுவது வழக்கம், வேலைக்காரர்கள் அல்லது அடிமைகளைக் கொண்டிராதவர்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் அந்த விருந்தினர்களே காலடிகளை கழுவுவர். இங்கு இயேசு இராவிருந்துக்காக தெரிந்தெடுத்த வீடு ஓர் எளிமையான வீடு. ஆகவே அங்கு எந்தவொரு வேலைக்காரரோ அல்லது அடிமையோ இல்லை. ஆகவே இயேசுவே ஓர் அடிமை அல்லது வேலைக்காரர் செய்யவேண்டிய பணியை தானே செய்கிறார். உண்மையில் இந்தப் பணியை செய்ய வேண்டியவர்கள் இயேசுவின் சீடர்கள்தான். ஆனால் அவர்களுக்குள் யார் பெரியவர் என்ற போட்டி மனப்பான்மை இருந்தபடியால் யாரும் கால்களை கழுவும் பணியைச் செய்ய முன்வரவில்லை. இங்கு ஆண்டவர் இயேசு செய்யும் செயல் விசித்திரமானது. ஏனென்றால், சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாதியில் எழும்பி, தனது ஆடைகளையெல்லாம் களைந்து போட்டு, அடிமைகள் போல் இடுப்பில் ஒரு துண்டை மட்டும் கட்டிக் கொண்டு *(13: 4)*, குவளையில் தண்ணீர் எடுத்து ஒவ்வொரு சீடர்களின் காலடிகளை கழுவி துண்டால் துடைக்கிறார் *(வ. 5)*. இயேசு சீடர்களின் காலடிகளை கழுவின பின்பு "ஒருவருக்கொருவர் காலடிகளைக் கழுவுங்கள்" என்று சீடர்களிடம் சொல்லிவிட்டு, இறுதியில் "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் எனும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என சொல்லி முடிக்கிறார் *(வ. 14, 15, மற்றும் 34)*. இந்த நிகழ்வைத் தொடர்ந்து இயேசு உடனடியாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்படுகிற நிகழ்வு சொல்லப்படுகிறது *(யோவா. 18: 28, 39, 19: 14)*.

இதில் நமக்கு தர்க்க ரீதியான சில கேள்விகள் வருகின்றன. இயேசுவை தொடர்புபடுத்தி எழுதப்பட்ட இந்த மூன்று பாஸ்காக்களில் ஏன் இறுதி பாஸ்காவில் மட்டும் சீடர்களின் காலடிகளை கழுவினார்?. "ஒருவருக்கொருவர் காலடிகளைக் கழுவுங்கள்" என்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கட்டளையிட்டது வாழ்வருளும் அன்பாகுமா? வெறுமனே காலடிகளைக் கழுவுவது ஒருவருக்கு வாழ்வை தந்துவிடுமா? இயேசு எதை மனதில் வைத்து இதை சொல்லி இருக்க வேண்டும்? அல்லது உண்மையில் இயேசு என்ன கற்பிக்க விரும்பினார்? அவர் ஒரு தேவாலய மத வழிபாட்டு சடங்கை நிறுவ விரும்பினாரா? அதாவது இராவிருந்தைப் போல, ஒரு வழக்கமான தேவாலய வழிபாட்டு சடங்காக எல்லா இராவிருந்து தினத்தன்றும் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைத்தாரா? அல்லது தனிப்பட்ட ஒருவரின் பணிவான சேவைக்கு ஒரு முன்மாதிரியை வைத்தாரா? இந்த கேள்விகளை மனதில் வைத்து இத்திருமறை பகுதியை வாசித்தால் குறைந்தபட்சம் இரண்டு சிந்தனைகளை நாம் பெற முடியும்.

1. காலடிகளைக் கழுவுவதும் வாழ்வருளும் அன்பே:

இந்த காலடிகளைக் கழுவுதலின் மூலம் "தீவிரமான அன்பின் இயல்பை" இயேசு விளக்குகிறார். பொதுவாகவே இயேசுவின் காலத்தில் எருசலேம் நகர் சாலைகள், மிகுந்த தூசு படர்ந்த சாலைகளாக இருந்தன. அதுமட்டுமின்றி, அந்த காலத்தில் சாலை போக்குவரத்திற்கு மக்கள் அதிகமாக பயன்படுத்தினது கழுதைகளும் குதிரைகளும் தான். எனவே அவற்றின் சாணம் சாலைகளில் அங்குமிங்குமாக கிடக்கும். இன்னும் சொல்லப்போனால், எருசலேமில் நடைபெற்ற பாஸ்கா விழாவுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் விலங்குகளின் மீது பயணம் செய்து வந்ததன் காரணமாக வழி முழுவதும் கழுதை மற்றும் குதிரை சாணம் நிரம்பி கிடப்பது வழக்கம். அந்த வழியாக பயணம் செய்யும் மனிதர்கள் எவ்வளவு தான் பார்த்து நடந்தாலும், தங்கள் கால்களில் அந்த அழுக்குகள் ஒட்டுவது தவிர்க்கவே முடியாது. இவ்வாறு அழுக்காகி போன, நாறிக் கொண்டிருக்கும் கால்களை கழுவுவதற்கென்றே யூதர்கள் அடிமைகளை வைத்திருந்தனர். இது விருந்தோம்பல் மற்றும் தனிப்பட்ட சுகாதாரத்தின் ஓர் அடையாளமாக பார்க்கப்பட்டது. விருந்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களை வரவேற்கவும் கால்களைக் கழுவுதல் நிகழ்த்தப்பட்டது. ஆக, இது ஒரு மனிதரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான சேவையாகும். இது வழிபாட்டுச் செயலாகச் செய்யப்படும் ஒரு சடங்கு அல்ல. அதாவது எல்லா வழிபாடுகளிலும் கால்களை கழுவுதல் நடைபெற வேண்டும் என இதற்கு அர்த்தம் கொடுப்பது அபத்தமான ஒன்று. மக்களுக்கு உணவு அல்லது இரவைக் கழிக்க இடம் தேவைப்படுவது போல ஒரு தேவை இருந்தது, இந்த தேவைதான் கால்களை கழுவி விடுவது. இது விருந்தோம்பலில் இருக்கும் முக்கியக் கூறாகப் பார்க்கப்பட்டது. அதாவது விருந்தோம்பல் என்பது அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய எதையும் வழங்குவதை குறிக்கிறது. அதேவேளையில், ஒரு நபர் அதை இன்னொரு நபருக்கு செய்தபோது, அது ஒரு கீழ்த்தரமான பணியாகவும் கருதப்பட்டது. ஆயினும் கால்கள் சுத்தமாக இருப்பவர்களின் கால்களைக் கழுவ வேண்டிய நோக்கமும் இல்லை, எந்த அவசியமுமில்லை என்பதையும் இங்கு விளங்கிக் கொள்ள வேண்டும் (வ. 10). தேவையைப் பூர்த்தி செய்வதே நோக்கம் என்பதால், தேவைப்படுபவர்களுக்கு இரண்டு கால்களும் கழுவப்பட்டன.

இந்த சிந்தனையை நம் வாழ்வில் எங்ஙனம் பொருத்திப் பார்ப்பது. அடுத்தவரின் கால்களை கழுவிவிடுவதா வாழ்வருளும் அன்பு? தேவையோடிருக்கும் மக்களுக்கு இரக்கம் செய்வதே உண்மையில் வாழ்வருளும் அன்பு. இதை இயேசு நாதரின் ஒட்டுமொத்த வாழ்விலிருந்தே நாம் புரிந்துகொள்ள முடியும். உவமைகளிலேயே ஆகச்சிறந்த உவமையாக நான் நினைப்பது மத். 25- ஆம் அதிகாரம் 31 முதல் 46 வசனங்கள் வரை வரும் உவமை தான். இந்த உலகில்

நியாயத்தீர்ப்பு எதன் அடிப்படையில் இருக்கும் என்பதை இயேசுவே தம் வாயால் சொன்னதாக மத்தேயு தருகிறார். இதனடிப்படையில் நியாயத்தீர்ப்பு இருக்க வேண்டும் என்பதே நமது விருப்பமும். இந்த உவமையின் மூல விதி 40 மற்றும் 45 வசனங்களில் செல்லப்பட்டிருக்கிறது. "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்"(வ.40), என்றும் "மிகச்சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை" என்றும் இயேசு சொன்னதின் பொருள் யாதெனில்: பசியோடு, தாகத்தோடு, அன்னியனாக, ஆடையில்லதவனாக, நோயாளியாக, கைதியாக என்று இந்த உலகில் தேவையில் இருந்த மக்களுக்கு உதவி செய்வது என்பது தான் இயேசுவின் வாழ்வருளும் அன்பாகும். இன்னும் சொல்லப்போனால், லூக்கா-திருத்தூதர் பணிகள் நூலின் ஒட்டுமொத்த கொள்கைத் திரட்டை அதன் ஆசிரியர், லூக்கா 4: 18, 19 - ல் "...ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கம் அவர் என்னை அனுப்பியுள்ளார், - என இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளை வழங்குகின்றார். இதுதான் இயேசுவின் வாழ்வருளும் அன்பாக நாம் எடுத்து கொள்ள வேண்டும். இதல்லாமல் நாமும் அடுத்தவருடைய "கால்களை கழுவ வேண்டும்" என பொருள் கொள்ளக்கூடாது. தேவையிலிருப்போரின் தேவைகளை நிறைவேற்றுவதே வாழ்வருளும் செயலாக இருக்கும்.

2. பாதங்களைத் துடைப்பதும் வாழ்வருளும் அன்பே:

நரம்பியல் துறையில், அனுபவ ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின்படி, தொடுதல் எனும் செயல் மக்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும், பச்சாதாப இணைப்புகளை உருவாக்கும் வலுவான, தலைகீழ் மாற்றத்தை தருவிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இங்கு இயேசு "பாதங்களை துடைப்பதும்" ஒரு தலைகீழ் அனுபவத்தை தருவதாகவே அமைகின்றது. இருப்பினும் இந்த திருமறைப் பகுதியில், இயேசு சீடர்களின் கால்களை எவ்வாறு தொட்டார் என்பதை பற்றிய எந்த விவரணையும் சொல்லப்படவேயில்லை; அது வெறுமனே, "அவர் சீடர்களின் கால்களைக் கழுவத் தொடங்கினார்" (வ. 5) என்று மட்டுமே தரப்பட்டிருக்கிறது. யோவான் 13-ஆம் அதிகாரத்தின் கிரேக்க மூலத்தில், 5-ம் வசனத்தில் மூன்று வினைச்சொற்களை யோவான் நற்செய்தியாளர் பயன்படுத்தியுள்ளார்: ballo, nipto மற்றும் ekmasso. அதாவது, இயேசு குவளையில் தண்ணீரை ஊற்றி (ballo=throw), சீடர்களின் கால்களை கழுவி (nipto= wash), தன் இடுப்பில் கட்டியிருந்த ,துண்டால் துடைக்க (ekmasso=wipe) தொடங்கினார் என்று வருகிறது.

இங்கு தண்ணீரை குவளையில் ஊற்றினதை (throw) தவிர்த்து, மற்ற இரண்டு செயல்களையும் அதாவது கழுவுதல் மற்றும் துடைத்தல் (wash and wipe) ஆகிய இரண்டு செயல்களையும் இயேசு தம் வெறும் கைகளால் சீடர்களின் பாதங்களை தொட்டுதான் செய்திருக்க வேண்டும் என்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த தொடுதல் உணர்த்துவது என்ன?

யோவான் நற்செய்தி நூலில் ஏற்கனவே இரண்டு முறை தொடுதல் பற்றிய நிகழ்வுகள் சொல்லப்பட்டிக்கின்றன. இரண்டு நிகழ்வுகளிலும், இயேசுவின் தொடுதல், பார்வையாளர்களுக்கும் அவர் தொடுபவர்களுக்கும் இடையே இருந்த கலாச்சார தொடுதல் விதிகளை உடைக்கிறது: 1). யோவான்:9 - இல், பிறவிப் பார்வையற்றவர் இயேசுவால் பார்வை பெறும் நிகழ்வு , 2). யோவான்: 12 - ல் மரியாள் இயேசுவின் பாதங்களில் விலையுயர்ந்த வாசனைத் திரவியத்தை.ஊற்றி, தலை முடியால் துடைத்த நிகழ்வு. இந்த இரண்டு நிகழ்வுகளும் யூத கலாச்சார விதிகளில் அதிர்வலைகளை எவ்வாறு தொடுதல் வாழ்வருளும் அன்பை சுட்டிக் காட்டுகின்றன என்பதையும் காணமுடியும். யோவான் 9- ஆம் அதிகாரத்தில், இயேசு, பிறவியிலேயே பார்வை இழந்த ஒருவருக்கு சேறுண்டாக்கி, தம் கையால் அவன் கண்களில் தொட்டு, பூசி பார்வையை கொடுப்பதை சொல்லுகிறது. இந்த பார்வை பெறுதல் அவனுடைய மொத்த வாழ்வையும் தலைகீழாக மாற்றுகின்றது. சமூகத்தோடு தான் முழுவதுமாக ஈடுபடவும், கீழ்நிலை மனிதனாக அல்லது "பாவி" (9: 2) என்று கருதப்பட்டவர் இப்போது இயேசுவால் மதிப்புள்ளவருமாகிறார். இன்னும் சொல்லப்போனால், அண்டைவீட்டார், அவரைத் தெரிந்தவர்கள், நண்பர்கள் (9: 8), பரிசேயர் (9: 15), அவன் பெற்றோர் (9: 21) போன்றோரால் இழிவாக, மதிப்பில்லாமல் பார்க்கப்பட்ட பார்வை பெற்ற மனிதரோடு இயேசு தம்மை இணைத்துக் கொண்டு அவருக்கான மதிப்பை கொடுப்பதை, பச்சாத்தாப இணைப்புகளை உருவாக்கும் வலுவான, தலைகீழ் மாற்றத்தையும் இங்கு விளங்கிக்கொள்ள முடிகிறது. மரியாளின் செயலில் இயேசுவை மரியாள் தொடுகிறார் (12: 3). மரியாளின் இந்த செயல் தலைகீழ் செய்தியை நமக்குத் தருகிறது. உச்சபட்ச ஆணாதிக்கம் நிறைந்த யூத சமூகத்தில், ஒரு ஆண் நபருக்கு அருகில் வந்து, அவரைத் தொட்டு, தலைமுடியால் கால்களை துடைப்பதை மிகத் தவறாக யூதம் பார்த்தது. ஆனால் இயேசு அதை அனுமதித்து மிகவும் சமூகத்தில் தாழ்வாகப் பார்க்கப்பட்டவரோடு தன்னை இணைத்து மரியாளுக்கு மதிப்பைத் தருவதை, பச்சாத்தாப இணைப்புகளை உருவாக்கும், தலைகீழ் மாற்றத்தை, இந்த தொடுதலிலும் பார்க்க முடிகிறது.

இயேசுவின் செயலை பேதுரு தவறாகப் புரிந்துகொண்டு, கால் கழுவுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் (13:8). "நீங்கள் ஒருபோதும் என் கால்களைக் கழுவ கூடாது!" எனும் அவரது ஆட்சேபனை இந்த கால்

கழுவுதலை "சமூக ரீதியாக பொருத்தமானது" என்று சிந்திக்க இயலாமையை பிரதிபலிக்கிறது. பண்டைய மத்திய தரைக்கடல் கலாச்சாரம், சமூக நிலை (social status) மற்றும் தரவரிசை (ranking) போன்றவற்றின் மூலம் தனிப்பட்ட தொடர்புகளை நிர்ணயம் செய்திருந்தது. இயேசுவின் காலத்திலும் அதற்கு முன்பும், மத்திய தரைக்கடல் கலாச்சாரத்தில், உயர்ந்த அந்தஸ்துள்ள வேறு எந்த நபரும் தானாக முன்வந்து சீடர்களின், அல்லது தன்னை விட குறைவானவர்களின் கால்களை கழுவுவதாகவோ, துடைத்ததாகவோ எந்த குறிப்பும் இல்லை. எனவே இயேசுவின் செயலில் ஒரு சமூக முறைகேடு உள்ளதாக பேதுரு காண்கிறார். ஏனெனில், சீடர்களின் ஆண்டவரான இயேசு, மிகக் குறைந்த பதவியில் உள்ள ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கீழான பணியை ஏற்றுக்கொள்கிறார்; சில அமைப்புகளில் யூத ஊழியர்களின் பதவிக்கு கீழே உள்ளவர்களின் பணியாக கால் கழுவுதல் கருதப்பட்டது. இயேசு இத்தகைய தாழ்மையான, அவமானகரமான தோற்றத்தையும், பணியையும் செய்கிறாரே என்று பேதுரு மனச்சோர்வடைந்திருந்ததின் விளைவாக இந்த வார்த்தைகளை சொல்லியிருக்கவேண்டும். இது இயேசு அன்றைய சமூக விதிகளை தனது தொடுதல் எனும் செயல் மூலம் தலைகீழாக மாற்றினார் என்பதைக் குறிக்கிறது.

கோவிட்-19 ஐ அவ்வளவு எளிதில் நாம் மறந்திருக்க மாட்டோம். கோவிட்-19 நமது உலகளாவிய சமூகத்தின் பேசப்படாத தொடு விதிகளை மறுவரையறை செய்தது எனலாம். கிட்டத்தட்ட ஒரே இரவில், தொடுதல் தொடர்பான விதிகளில் ஒரு தலைகீழ் மாற்றத்தை இந்த முழு உலகமும் கண்டது. கருணையை, அன்பை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வழிகள் என்று ஒரு காலத்தில் கருதப்பட்ட கைகுலுக்கல்கள் மற்றும் அரவணைப்புகள் திடீரென்று ஆபத்தானவை என்று பிரகடனம் செய்யப்பட்டன. ஒரு காலத்தில் முரட்டுத்தனமாக, ஆணவமாக கருதப்பட்ட ஒன்று (அண்டை வீட்டாரிடையே அல்லது சொந்தங்களிடையே இடைவெளியை கடைப்பிடிப்பது) -விரைவில் கருணையாக, அன்பின் வெளிப்பாடாக பார்க்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், அருகில் இருப்பதே ஆபத்தானது எனும் நிலை வந்தது. அதேசமயம் சமூக தூரம் நம் சொந்தங்களை பராமரிப்பதற்கான சிறந்த வழியாக போதிக்கப்பட்டது. இத்திருமறைப்பகுதியிலும் ஒரு காலத்தில் "சரியானது" என்று கருதப்பட்ட விதிகளை இயேசு மீறுகிறார். இயேசுவின் தொடுதல் அவர்களின் தனிப்பட்ட இடம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகிய இரண்டையும் உடைக்கிறது. அவரது இந்த தொடுதல் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகிறது. அவர் நேசித்ததைப் போலவே ஒருவருக்கொருவர் நேசிக்கவும் சீடர்களுக்கு இது ஒரு அற்புதமான அழைப்பாகவும், கட்டளையாகவும் செயல்படுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (13: 12-17, 34-35).

ஆகவே, இயேசுவின் தொடுதல் என்பதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது? நாம் வாழும் குடும்பத்தில், சமூகத்தில், நம் சபைகளில் தாழ்நிலையில் உள்ளோருடன் நம்மை இணைத்துக் கொள்வதும், அவர்களின் மதிப்பை உறுதிசெய்வதும் கால்களை துடைப்பதற்கு சமம். இயேசு தம் வாழ்நாளில் இதுதான் அவரது பேச்சும் செயலுமாக இருந்தது எனலாம். இயேசுவை பற்றி "உங்கள் போதகர் வரிதண்பவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?" (மத்.9:11) என்ற பரிசேயர்களின் ஒற்றை கேள்வியே போதும் இயேசுவின் பணிவாழ்வு எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி அறிய. ஆகவே தொடுதல் என்பது குரலற்றவர்களின் குரலாக, நாதியற்றவர்களின் நம்பிக்கையாக இருப்பதேயல்லாமல் வேறில்லை. இந்த தொடுதல் நிலையை அடைய சில மரபுகள் தடையாயிருப்பின் அவைகள் மீறப்பட வேண்டும்.

யோவான் 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்களுக்கு "இயேசுவின் கடைசி விருப்பங்கள்" என பெயர் வழங்குவது பொருத்தமாக இருக்கும். இயேசுவின் கடைசி விருப்பங்களில் முதல் விருப்பம்தான் சீடர்களின் கால்களை கழுவி, தொட்டுதுடைப்பதாகும் (லூக். 22: 15). அதனால்தான் என்னவோ உணவின் இடையிலேயே எழுந்து சீடர்களின் கால்களை கழுவின செயல் செய்ததாக கருத இயலும். இதை ஒரு அடையாளச் செயலாகவே பார்க்க வேண்டும் (யோவா. 13: 15). இந்த அடையாளத்தின் அர்த்தத்தை லூக்கா மிக அருமையாக தருகிறார். இதே இயேசுவின் இறுதி பஸ்காவில் லூக்கா "உங்களில் பெரியவர் சிறியவராகவும், ஆட்சி புரிபவர் தொண்டு புரிபவராகவும் மாறவேண்டும்" (லூக். 22:26) என்று சொல்கிறார். ஆக ஒரு தலைவர் என்பவர் மக்களின் "கால்களை கழுவ வேண்டும்" என்று அர்த்தம் கொள்ளாமல் "தேவையிலிருப்போரின் தேவையை நிறைவேற்றுவதாகவும், அதைப்போலவே "கால்களை துடைக்க வேண்டும்" என அர்த்தம் கொள்ளாமல் "விளிம்பு நிலை மக்களோடு தன்னை இணைத்துக் கொள்வதிலும், மதிப்பிழந்தோரை மதிப்பாக வாழ வைக்கின்ற தலைகீழ் மாற்றத்தை உருவாக்குவதிலுமே" அடையாளம் காண முடியும். இதை இயேசு தம் வாழ்வில் நிறைவேற்றினதால் நாம் நன்றாய் இருக்கிறோம். ஆகவே, இதை நன்றித் திருவிருந்தாகக் கடைப்பிடிப்போம்.

அருள்திரு. L. லோபின் லினேஷ்

சிலுவை: வாழ்வின் கொண்டாட்டம்

Cross: The Celebration of Life

விப. 12: 1-17 *1 கொரி. 1: 18-25*
திபா. 22/88 *மாற்கு 15: 21-41/யோவா. 12: 22-33*

"சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1 கொரி. 1: 18).

சிறுவன் ஒருவன் ஓடி வந்து தனது தாயிடம் அம்மா நான் துறவறம் மேற்கொள்ள போகிறேன் என்று கூற, தாய் மகனிடம் அடுப்பறையில் இருக்கும் கத்தியை எடுத்து வரச் சொல்கிறார். மகன் கத்தியை எடுத்து கொண்டு வந்து தனது தாயிடம் கொடுக்க, மகனே இன்னும் கொஞ்சம் நாள் பொறுத்துகொள் என்றார்கள். சில நாள்கள் தாண்டி மீண்டும் தனது தாயாரிடம், அதே ஆசையை வெளிப்படுத்த, முன்பு நடந்ததை போன்று மீண்டும் நிகழ்வு நடந்தது. எப்போதெல்லாம் சிறுவன் தனது ஆசையை வெளியிட்டாரோ அப்போதெல்லாம் அதே நிகழ்வு நடந்தது. ஒருநாள் கத்தியை வாங்கி கொண்ட தாய் "இனி துறவறம் போகலாம்" என்று மகனிடம் சொன்னார். மகன் தாயிடம் தாயின் செயலுக்காக விளக்கம் கேட்கிறார். அப்போது தாய் முன்பெல்லாம் கத்தியைக் கொடுக்கும்போது பாதுகாப்பான பகுதியை உன் கையில் பிடித்துக்கொண்டு, கூர்மையான பகுதியை என்னிடம் கொடுப்பாய், ஆனால், இப்போதோ கூர்மையான பகுதியை பிடித்துக்கொண்டு பாதுகாப்பான பகுதியை என்னிடம் கொடுத்தாய். எனவே, நீ துறவறம் மேற்கொள்ளலாம் என்றார். இச்சிறுவன் யார் தெரியுமா? நரேந்திரன் என்ற விவேகானந்தர். சீடத்துவம் என்பது வேதனைகளைத் தனக்குள்ளே ஏந்திக்கொள்வது ஆகும். இவ்விதம் சிலுவை என்பது வாழ்வின் கொண்டாட்டத்திற்குரிய ஊடகம் எனப் புரிந்து கொள்ளலாம்.

சிலுவை என்ற பதத்தைக் குறிக்கும் கிரேக்க வார்த்தை 'Stauros' என்பதாகும். இலத்தீன் வார்த்தை 'Crux' என்பதாகும். ஆங்கிலத்தில் "Cross' என்று அழைத்தனர். இதன் பொருள் தாண்டுதல் என்பதாகும். ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு தாண்டிச் செல்வதைக் குறிப்பதாகும். இதனை கொலோ. 2: 13, 14, 15 தெளிவாக விளக்குகிறது.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை தொடக்கத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது (தொ.நூ. 3: 15). இச்சிலுவை அகிலத்தவர் அத்தனை பேரையும் ஒருங்கிணைக்கும் ஊடகமாகும். இதனை இன்றைய நற்செய்திப் பகுதியாகிய யோவான் 12-ஆவது அதிகாரத்தின் வழியாய் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இயேசுநாதரைப் பார்க்க ஆசை கொண்ட கிரேக்கர்கள் இயேசு கிறிஸ்துவின் சீடர்களிடம் வினவியபோது,

இயேசு கிறிஸ்து தான் மகிமைப்படும்படியான வேளை வந்தது என்று உரக்கச் சொல்கிறார். அப்போதுதான் தன்னுடைய சிலுவை மரணத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறார். சிலுவை எப்படி மாட்சிமையின் ஊடகமாகியது என்பதனைக் காணலாம்.

1. மாட்சிமைக்கு மாதிரியாகும் சிலுவை: *(யோவா. 12: 24)*

இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை என்பது உயர்த்தப்படுதலில் அமைந்திருக்கிறது. உயர்த்துதல் என்பது கிறிஸ்து சிலுவையில் தொங்கவிடப்பட்டதைக் குறிக்கிறது. தம்முடைய வாழ்வை கோதுமை மணிக்கு ஒப்புமை செய்கிறார். கோதுமை மணி நிலத்தில் விதைக்கப்படும்போது அதனுடைய சுய அடையாளம் முற்றிலும் அழிந்து விடுகிறது. கோதுமை மணியின் சுயம் அழிக்கப்படும்போதுதான் அநேக கோதுமை மணிகள் உருவாகின்றன. இதைப்போன்று இயேசு கிறிஸ்து மரிப்பதினால் அநேகர் மீட்கப்படுவார்கள் என்பதனைத் தெளிவாக விளக்கிச் சொல்கிறார். எபி. 2: 10-இன் படி அநேகர் மகிமையில் சேர்க்கும்படி உபத்திரவங்களிலே பரிபூரணப்பட வந்தேன் என்கிறார். மேலும், மாற்கு 10: 45-இன் படி மண்ணுலக வருகையின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். தம்முடைய மரணமே மகிமைப்படுதலின் மாதிரி என்பதனை மிகவும் தெளிவாக விளக்குகிறார். மாற்கு 12: 35-45-இல் யாக்கோபும், யோவானும் சுயநலம் மிக்கவர்களாய் இருக்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து சுயநலம் சார்ந்து நிற்பவர்களை அங்கீகரித்து கொள்வதில் தயக்கம் அடைகிறார். உங்களது சுயத்தை அழித்து பிறரை குறித்த கனிவு, இரக்கம் தேவை. பணிவிடைகாரனைபோல மாறுங்கள் என்று குறிப்பிடுவதை காணலாம். அனுதினம் நமது சுயத்தை கொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும் (மத். 16: 24). ஜாண் விக்ளிப் என்ற இறைப்பணியாளரை திருமறையை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ததற்காய்க் கொலை செய்தார்கள். 14 ஆண்டுகளுக்கு பின்பு கிரகரி போப், இலத்தீன் மொழியிலிருந்த திருமறையை அசுத்தம் நிறைந்த உதடுகளுக்குக் கொடுத்தார் என்பதற்காகக் கோபம் கொண்டு அவரது கல்லறையை தோண்டி, அவரது உடலை எடுத்து செக்கில் வைத்து அரைத்து அதனை தண்ணீரில் கலந்துவிடுகிறார். ஜாண் விக்ளிப்பின் தன்னல மறுப்பால் இன்று திருமறை அநேகருடைய கையில் கிடைக்கப்பெற்றது. எனவேதான், இயேசு கிறிஸ்து தாம் சிலுவையில் உயர்த்தப்பட்டு நல்ல மாதிரியை நமக்குக் காண்பித்திருக்கிறார். சிலுவை மாட்சியடைவதற்கான மாதிரியைக் காண்பிக்கும் ஊடகம். எனவே, சிலுவையை நாம் கொண்டாடுவோம்.

2. மாட்சிமையின் கட்டளையாகும் சிலுவை: *(யோவா. 12: 25)*

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மாட்சிக்குரியவற்றைப் பெற்றுக்கொள்ள பல கட்டளைகள் உண்டு. நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு மிக முக்கியமான கட்டளை தன் ஜீவனை இழக்கக் கொடுத்தல் ஆகும். இயேசு கிறிஸ்து சிலுவையில் தம்மை இழக்கக் கொடுத்தல் நிகழ்வுதான்

சிலுவையை சிங்காசனமாக ஏற்றுக்கொள்வது. இதற்கு முக்கியமான காரணம் தம்மை வெறுமையாக்குதல் ஆகும். இயேசு கிறிஸ்து எப்படி தம்மை வெறுமையாக்கினார் என்பதனை பிலிப்பியர் 2: 7-இன் வழியாக கற்றுக்கொள்ளலாம். மகிமையடைவதற்கு இன்னொரு கட்டளை உலகிற்கு ஏற்ற வாழ்வு வாழாமல் இருப்பதுதான் (மத். 6: 19). பூமிக்குரியவைகளை கிறிஸ்துவுக்காக வெறுமையாக்கினார். மாட்சிமை என்பது இலவசமாகத் தரப்படுகிறது. இயேசு கிறிஸ்து இறைத் திட்டத்தை நிறைவேற்ற தம்மையே வெறுமையாக்கினார். இதற்கு அடையாளமாகத்தான் இயேசு கிறிஸ்து சிலுவையை ஏற்றுக்கொள்கிறார். இயேசு கிறிஸ்து மகிமையை சுதந்தரிப்பதற்கான மகத்துவமான வழி, மகிமையை ஏற்பதற்கு சிலுவையைத் தாங்கி கொள்வதாகும்.

3. மாட்சிமைக்கு நேராய் ஊக்கப்படுத்தும் சிலுவை: *(யோவா. 12: 26)*

சிலுவையை சிறப்பாய் ஏற்றுக்கொள்கிறவர்கள் கிறிஸ்துவுடனே கூட இருப்பார்கள் என்றும், பிதாவானவர் அவர்களைக் கனப்படுத்துவார் என்றும் குறிப்பிடுகிறார். உடனிருத்தல் என்பது உன்னதமான ஆசீர்வாதம் ஆகும். உடனிருக்கும் ஆண்டவர் உண்மைகளை உணர செய்து கனப்படுத்துகிறார். உதாரணமாக லூக். 23: 47-இல் சிலுவைக்கு அருகில் இருந்த நூற்றுக்கு அதிபதியை குறித்து கற்றுக்கொள்கிறோம். சிலுவைக்கு அருகில் இருந்தபடியினால் சிலுவையின் மூலம் வெளிப்படும் மகிமையான அனுபவங்களைப் பார்க்கிறார். எனவேதான், இயேசுவைக் குறித்து நீதிபரர் என்று சாட்சி கூறுகிறார்.

தூய பவுலார் சிலுவையை குறித்து தெளிவாகக் கற்றுக்கொண்டபடியினால்தான் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்னையும் குறித்து மேன்மை பாராட்டமாட்டேன் என்கிறார். ஆகவே, சிலுவை என்பது வாழ்வுக்கு உந்துதல் தருகின்ற மிகப் பெரிய கருவியாகும்.

சிலுவையை நாம் மாதிரியாகவும், மகத்துவமான கட்டளையாகவும், ஊக்கப்படுத்தும் கருவியாகவும் ஏற்றுக்கொண்டு மாட்சிமைக்குரியவர்களாக வாழ்வோமாக.

அருள்திரு. அறிவர் P.G. ஜெயின் குமார்

நம்பிக்கையின்மையில் நல்லெதிர்நோக்கு

Hope in Despair

எசா. 53: 4-12 *1 பேது. 4: 12-19*
திபா. 130 *மத். 27: 62-66*

"மாறாக, நீங்கள் கிறிஸ்தவராய் இருப்பதால் துன்புற்றால், அதற்காக வெட்கப்படலாகாது. அந்தப் பெயரின் பொருட்டுக் கடவுளைப் போற்றிப் புகழுங்கள்" (1 பேது. 4: 16).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எப்போதும் மலர்கள் மலரும் மென்மையான பாதையாக இருப்பதில்லை. பலநேரங்களில் அது சுமை மிகுந்த பயணமாகவும், மனதை சோர்வுக்குள்ளாக்கும் நெடுந்தூர பயணமாகவும் காணப்படுகிறது. நீண்டகால துன்பங்கள், முடிவில்லாத வேதனைகள், கசப்பான அனுபவங்கள் நம் நம்பிக்கையினை அசைத்து, "கடவுள் உண்மையில் என்னை நேசிக்கிறாரா?" என்ற சந்தேகத்தை நம் உள்ளத்தில் விதைக்க முடியும். வானம் மேகமூட்டத்தால் இருளடைந்திருக்கும் போது சூரியனை காண்பது எளிதல்ல, அதேபோல், நம் வாழ்வில் துன்பங்கள் வருகிற போது மகிழ்ச்சியினை இழந்தவர்களாய், நம்பிக்கையின்மையினிமித்தம் இருளின் பள்ளத்தாக்கில் நடக்கிறோம். ஆனால் அந்த இருளில் தான் உண்மையான நல்லெதிர் நோக்குபிறக்கிறது. துன்பங்களின் நடுவில்தான் கடவுளின் நோக்கமும், அவருடைய மறைவான கிரியைகளும் வெளிப்படுகின்றன. நம்பிக்கையின்மையில் நல்லெதிர் நோக்கு என்பது சாதகமான சூழ்நிலைகளைப் பார்த்து உருவாகும் வாழ்கை அல்ல. முட்களுக்கிடையே மலரும் மலரைப்போல வேதனையின் நடுவிலும் கிறிஸ்துவின் வாசனையை பரப்பும் வாழ்க்கை. துன்பம் நம் வாழ்வின் முடிவல்ல, அது தேவன் நம்மை சுத்திகரித்து, பலப்படுத்தும் தெய்வீக செயல்பாடு.

1948ல் ருமேனியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் போது, Richard Wurmbrand *தனது கிறிஸ்தவ நம்பிக்கைக்காக கைது செய்யப்பட்டார். 14 ஆண்டுகள் சிறையில் துன்புறுத்தப்பட்ட அவர், அவமானங்கள், வறுமை, உடல் மற்றும் மனவலிகளைக் கடந்து செல்ல வேண்டிய நிலையை எதிர்கொண்டார். பல வேதனைகள், துன்பங்கள் அவரை சோதித்தன. இதை குறித்து அவர் தனது* Tortured For Christ *என்கிற நூலில் பகிர்ந்துள்ளார். அவருடைய சிறை காலத்தில், பிற கைதிகளிடத்தில் கிறிஸ்துவின் அன்பை பிரதிபலித்தார். இதனால் பலர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். சிறையிலிருந்து விடுப்பட்ட பிறகு, அவர் கிறிஸ்தவர்களுக்கு உதவ* The Voice of the Martyrs *என்கின்ற அமைப்பை தொடங்கினார், இவ்வியக்கம் உலகிற்கு சொல்லும் ஆழமான உண்மை என்னவென்றால் துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்கள்*

தோல்வியடைந்தவர்கள் அல்ல அவர்கள் உயிருள்ள சாட்சிகள், அவர்களின் வேதனை மற்றவர்களின் வாழ்வை உயிர்ப்பிக்கும் விதையாக மாறுகிறது. ஆகவே துன்பங்கள் நம்மை அழிக்க அல்ல, நம்மை தேவனில் நிலைநிறுத்தி, மற்றவர்களுக்கு நல்லெதிர் நோக்கை பரப்பும் வழி என்பதனை இந்நிகழ்வு தெளிவாக எடுத்துரைக்கிறது.

கி.பி. 64 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின்போது, ரோம் நகரில் ஒரு மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. அந்த தீயால் நகரத்தின் பெரும்பகுதி எரிந்து நாசமாயிற்று. அக்காலத்தில் ரோமப் பேரரசராக நீரோ (Nero) ஆட்சி செய்து வந்தார். தீயால் தங்கள் வீடுகளையும், சொத்துகளையும், உறவுகளையும் இழந்த மக்கள், இந்த பேரழிவுக்கு நீரோ தான் காரணம் என்று குற்றம்சாட்டத் தொடங்கினர். மக்கள் கோபம் அதிகரித்ததால், அந்த பழி தன் மேல் விழாமல் இருக்க நீரோ வேறு ஒருவர் மேல் பழியைச் சுமத்த விரும்பினார். அதற்காக அவர் ஒரு சிறிய மதக் குழுவை தேர்ந்தெடுத்தார் அதுவே கிறிஸ்தவர்கள். அக்காலத்தில் கிறிஸ்தவம் அரசு அங்கீகாரம் பெற்ற மதமாக இல்லை. அது யூத மதத்திலிருந்து பிரிந்த ஒரு "தவறான போதனை கொண்ட பிரிவாக" (heresy) கருதப்பட்டது. இதனால் கிறிஸ்தவர்கள் பொதுமக்களிடமும் ஆட்சியாளர்களிடமும் சந்தேகத்திற்கும் விரோதத்திற்கும் உள்ளானார்கள். நீரோ, இந்த பெருந் தீ விபத்துக்கான முழு பொறுப்பையும் கிறிஸ்தவர்கள் மேல் சுமத்தினார். அதனைத் தொடர்ந்து ரோமில் கிறிஸ்தவர்கள் கொடூரமான உபத்திரவங்களையும் சித்திரவதைகளையும் அனுபவித்தனர். பலர் கொல்லப்பட்டனர், பாடுகள்அனுபவித்தனர், தீயில் எரிக்கப்பட்டனர், வன விலங்குகளுக்கு இரையாக விட்டுக் கொடுக்கப்பட்டனர்.

முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இதைப் போல் பல துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து வந்தனர் இப்படிப்பட்ட சூழலில் திருத்தூதுவர் பேதுரு தனது முதலாம் திருமுகத்தில், கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட துன்பமும் உபத்திரவமும் இயல்பானதே, துன்பங்களால் நம்பிக்கை இழந்த மக்களுக்கு நல்லெதிர் நோக்கோடு கிறிஸ்துவுக்குள் வாழுங்கள் என்று அறிவுறுத்துகிறார். இதனை 1 பேதுரு 4:12, 19-ஐ மையப்படுத்தி தியானிப்போம்.

1. அழிப்பதற்கன்று, அலங்கரிப்பதற்கே:

கிறிஸ்துவுக்காக நம் வாழ்வில் வரும் துன்பம் நம்மை அழிப்பதற்காக அல்ல அலங்கரிப்பதற்கே வருகிறது. இதனை தான் அமெரிக்க நாட்டின் மிக பிரபலமான கிறிஸ்தவ எழுத்தாளர் "Suffering can refine us rather than destroy us because God himself walks with us in the fire" என்கிறார். துன்பம் வந்தால் பலர் நினைப்பது, வாழ்க்கையின் அழகு இப்போது கலைந்து போய்விட்டது. ஆனால் தேவவசனம் நமக்குச் சொல்வது அப்படி நினைப்பது தவறு. பேதுரு திருத்தூதுவர் சோதனைகளின் நடுவில்இருக்கும் விசுவாசிகளுக்கு எழுதுகிறபோது, "துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும் போது ஏதோ

நேர்ந்து விட்டதென வியக்காதீர்கள்" (1 பேதுரு. 4 : 12) என்கிறார். காரணம் அந்தத் தீ உங்களை அழிக்க வரவில்லை; அது உங்களை அலங்கரிக்க வருகிறது, மேலும் பிரகாசமாக்கவே வருகிறது.

பொன்னுக்கு அழகு கிடைக்க வேண்டுமென்றால் அது தீயினை சகிக்க வேண்டும். அந்தச் சூடு பொன்னின் வடிவத்தை மாற்றினாலும் அதன் மதிப்பை குறைக்காது, மாறாக அதன் அழகை உயர்த்துகிறது. அதுபோல கிறிஸ்துவுக்காக வரும் துன்பம் நம் வாழ்க்கையின் மதிப்பை குறைக்க அல்ல, அதை மேன்மையாக்கவே வருகிறது. உலகத்தின் பார்வையில் அவமானம் எனத் தோன்றுவது, தேவனுடைய பார்வையில் மகிமையின் அலங்காரம் ஆகிறது.

கிறிஸ்துவினிமித்தம் நமக்கு வரும் இகழ்ச்சியும், வலியும், தேவன் நம்மை மறந்து விட்டாரென்ற அடையாளம் அல்ல. அதற்கு மாறாக, அவர் நம்மை அலங்காரமாக வடிவமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கான அறிகுறி. கடவுள் துன்பம் வந்தால் ஓடிவிடச் சொல்லவில்லை. துன்பத்தின் நடுவில் கூட நல்லெதிர் நோக்கோடு நிலைத்திருங்கள் அவர் உங்களை அலங்கரிப்பார் என்கிறார். கிறிஸ்துவுக்காக துன்பப்படும் ஒருவன் தோல்வியடைந்தவன் அல்ல, அவன் தேவனுடைய மகிமையால் அலங்கரிக்கப்பட்டவன்.

2. உடைப்பதற்கன்று உருவாக்குவதற்கே:

கிறிஸ்துவுக்காக நம் வாழ்வில் வரும் துன்பம் நம்மை உடைப்பதற்கல்ல உருவாக்குவதற்கே வருகிறது. ஒருமுறை சிற்பமும் படிக்கட்டும் பேசிக் கொண்டது, படிக்கட்டு சிற்பத்தை பார்த்து நானும் கல் தான் நீயும் கல் தான், அனால் என்னை மக்கள் மிதித்துச் செல்கிறார்கள், உன்னை மக்கள் போற்றி, மாலைகள் அணிந்து மரியாதை செலுத்துகிறார்கள் என்றது. அப்போது சிற்பம் சொன்னது சிற்பி உன்னையும் சிற்பமாக்க தான் முயன்றான். ஆனால், நீ அவனது உளியின் அடிகளால் வலி தாங்காமல் உடைந்து விட்டாய் நானோ அந்த வலிகளையும், அந்த துன்பகளையும் தாங்கி கொண்டேன் சிற்பமாக உருவாக்கபட்டிருக்கிறேன் என்றது. ஒரு சிற்பி கல்லை உளியால் அடிக்காதபோது அது ஒரு கல்லாகவே இருக்கும், அடிகள் வந்தால் தான்அது சிற்பமாக மாறும் அதே போல கிறிஸ்துவுக்காக பாடனுபவிக்கும் கிறிஸ்தவன் சிற்பமாக உருவாக்கப்படுக்கிறான். மத்தேயு நற்செய்தி 16:18ம் வசனத்தில் "நான் உனக்குக் கூறுகிறேன்; உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா." என்று பேதுருவை திருச்சபையின் அஸ்திபாரமாக காண்கிறார்.

"ஏனெனில், தீர்ப்புக்கான காலம் கடவுளின் வீட்டாரிடத்தில் தொடங்கிவிட்டது" 1 பேதுரு 4:17ம் வசனத்தில் சொல்கிறார். கடவுளின் வீடு என்பது உயிருள்ள கற்கள் கூட்டமாகிய திருச்சபை. அந்த வீட்டின்

ஒரு கல்லாக இருப்பதே பேதுரு. இயேசுவை மறுதலித்து அழுத கண்ணீர், பயத்தில் நடுங்கிய நிமிடங்கள், மனச்சோர்வின் இரவுகள் இவை எல்லாம் தோற்கடிக்க அல்ல, அவனை அஸ்திபாரக் கல்லாக்க. கிறிஸ்துவுக்காகத் துன்புறுகிறவன் குற்றவாளி அல்ல, அவன் மகிமைக்குரியவன். அவனுடைய வேதனை அவனுடைய அடையாளமாய், அவனுடைய மரியாதையாய் மாறுகிறது.

இறுதியாக, இந்தக் காலத் துன்பம் தேவனுடைய இறுதிக் காலத் தீர்ப்பின் முன்னோட்டம். அது யார் உண்மையில் கிறிஸ்துவுக்கானவர் என்பதை வெளிப்படுத்துகிறது. சோதனை வரும்போது நிலைத்திருப்பவனே வாழ்வின் கிரீடம் பெறுவான். இங்கே தான் "நேர்மையாளரே மீட்கப்படுவது அரிதென்றால், இறைப்பற்றில்லாதோரும், பாவிகளும் தண்டனை பெறுவது திண்ணமன்றோ!" (1 பேதுரு 4: 18) என்ற வசனத்தின் கருத்து தெளிவாகிறது.

ஆகவே, கிறிஸ்துவுக்காக நாம் அனுபவிக்கிற துன்பங்கள் நம்மை அழிப்பதற்கும் உடைப்பதற்கும் அல்ல மாறாக நம்மை அலங்கரிப்பதற்கும் உருவாக்குவதற்குமே. கிறிஸ்துவே அதற்கு முன்னுதாரமாக நமக்காக துன்பங்களை சகித்தார் கல்லறையின் அனுபவம் நம்பிக்கையின்மையை அழித்த போதிலும் அவைகளை தகர்த்து புதிய அத்தியாயத்தை காட்டினார். அந்த நல்லெதிர் நோக்கோடு நாமும் அவரின் அடிச்சுவட்டினை பின்பற்றி பயணிப்போம்.

திரு. V. வினோஜின்

உயிர்ப்பு: சாவின் மீது வெற்றி

Resurrection: Victory over Death

எசே. 37: 1-14 *2 கொரி. 5: 1-10/உரோ.6: 1-11*
திபா. 49 *மாற்கு 16: 1-11*

" . . . அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்; அவர் இங்கே இல்லை; இதோ, அவரை வைத்த இடம்" (மாற்கு 16: 6).

மனிதனின் மிக பெரிய எதிரி மரணம்; ஏனெனில் மனிதரைப் படைத்த கடவுள் மனிதருக்குக் கொடுத்த கட்டளை, . . . நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே" (தொநூ. 2: 17) என்பதாகும். கடவுளின் இந்தக் கட்டளையை மதியாமல் தீயோனின் ஆலோசனையை ஏற்று, தமக்கு நலமாய்த் தோன்றியதைச் செய்து கடவுளின் கட்டளையை மீறி தாமே மரணத்தை தம்மீது ஏற்றுக்கொண்டனர். (தொநூ. 3: 1-19). எனவேதான் பவுலடியார் உரோ. 7: 24-இல் அந்தோ இரங்கத்தக்க . . . விடுவிப்பவர் யார்? எனக்கேள்வி எழுப்புகின்றார். தொடர்ந்து அவர் கூறும்போது ஏனெனில் கிறிஸ்து இயேசுவோடே விடுவித்துவிட்டார் என்று கூறுகின்றார் (உரோ. 8: 2). எனவே இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்ப்பு வாயிலாக நாம் பெறும் நம்பிக்கை நாம் சாவின்மீது வெற்றி கொண்டு கிறிஸ்துவின் வழியாய் நிலை வாழ்விற்குரியோர் ஆகின்றோம் என்பதாகும். இந்த உயிர்த்தெழுதலின் நம்பிக்கை நமது வாழ்வில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதைச் சிந்திப்போம்.

1. கிறிஸ்துவின் உயிர்ப்பின் நற்செய்தி நம்பிக்கையிழந்த மக்களுக்குப் புது நம்பிக்கையைத் தருகிறது: *(மாற்கு 16: 6)*

இயேசுவின் மரணம் அவரை பின்பற்றின மக்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி. அவர்கள் சற்றும் எதிர்பாராத நிகழ்வு நடந்து விட்டது. தங்கள் நம்பிக்கை முற்றிலும் தகர்ந்து போனது என நினைத்தனர். எம்மாவு சீடர்களின் வார்த்தை இதை உணர்த்துகின்றது (லூக். 24: 19-21). இயேசுவின் உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு வந்த பெண்களும் கல்லறையின் வாசலில் இருக்கின்ற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்கிற கேள்வியோடு வந்தனர். ஆனால், இயேசு உயிர்த்தெழுந்தார் என்கின்ற செய்தி சாவின் நிலையிலிருந்த அந்த இயக்கம் மறுபடியும் புத்துயிர் பெற்றது, புது நம்பிக்கை பெற்றது. எனவே தான் பேதுரு பெந்தக்கோஸ்து நாளில் துணிவுடன் சாட்சி கொடுத்தார் (திப. 2: 23, 32). அதேபோன்று இயேசுவின் பெயரை உச்சரிக்கக்கூடாது என்று சனகரீம் சங்கம் கட்டளையிட்டபோது பேதுரு நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் குறித்துப் பேசாமலிருக்கக்கூடாது

என்றார் (திப. 4: 18-20; 5: 28-32). இயேசுவின் உயிர்த்தெழுதல் தந்த புது நம்பிக்கை இன்று திருச்சபையாகப் புதுப்பரிமாணம் பெற்று இன்றும் வாழுகின்ற கடவுளின் சாட்சிகளாய்த் திகழ்கின்றது. அந்த நம்பிக்கையில் இணைத்துக் கொண்ட நாமும் உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்வோம்.

2. கிறிஸ்து சாவின்மீது பெற்ற வெற்றி கிறிஸ்துவில் வாழுகின்றவர்களாக நம்மை மாற்றுகிறது: *(உரோ. 6: 11)*

இந்த உலகில் மனிதர் பாவத்தினால் சாவின் பிடியில் சிக்கியுள்ளனர். அத்தகைய மனிதரைச் சாவின் பிடியினின்று மீட்பதற்காகவே இயேசு கிறிஸ்து சிலுவையை ஏற்றார். அந்த இயேசு கிறிஸ்து மரித்தவராய் அழிந்து போகாமல் உயிர்த்தெழுந்த என்றும் வாழ்கிறவராகக் காணப்படுவதால் திருமுழுக்கின் மூலம் அவருடன் இணைக்கப்பட்ட நாமும் அவரது உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படுகிறோம். இங்கு கடவுளின் எதிர்பார்ப்பு இனிப்புதிய வாழ்வு உள்ளவர்களாய் இந்த உலகில் வாழவேண்டும். அந்தப் புதுவாழ்வு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுளுக்கென்று வாழ்வதின் வாயிலாக வெளிப்படுகிறது. பவுலடியார் தாம் பெற்ற இந்த அனுபவத்தைப் பற்றிக் கூறும்போது, கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்.இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று கூறியுள்ளார் (கலா. 2: 20). இத்தகைய மாற்றம் நமது வாழ்வில் நிலைவாழ்வை பற்றிய நம்பிக்கையை உறுதி செய்கிறது. இதை பவுலடியார் உரோ. 8: 2-லும் திருப்பாடலாசிரியர் தாவீது திபா. 23: 6-லும் கூறுவதன்படி உறுதி செய்யப்படுகிறது.

3. உலர்ந்த எலும்புகளைப் படைத்திரளாய் மாற்றும் கடவுளின் ஆற்றல்: *(எசே. 37: 10)*

பெரும் பள்ளத்தாக்கு உலர்ந்த எலும்புகள் இறைவாக்கினரிடம் இறைவாக்குரைக்கக் கூறினபோது அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து உருப்பெற்றன. மறுபடியும் இறைவாக்குரைத்தபோது அவர்கள் உயிரடைத்து மாபெரும் படைத்திரள்போல நின்றனர். இங்கு இறைவாக்கினர் இஸ்ரயேல் மக்களின் நிலையைக் கூறுகிறார். எதிர்களால் தோற்கடிக்கப்பட்டு கைதிகளாய் வேறு நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு எதிர்காலம் குறித்து எவ்வித நம்பிக்கையும் இல்லாமல் உலர்ந்த எலும்புகளைப் போல இஸ்ரயேல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் கடவுளின் ஆற்றல் அவர்களை மாபெரும் படைத்திரளாய் மாற்றும் வல்லமை உடையது என்பதை உணர்த்துகின்றர். இன்றும் வாழ்வில் உலர்ந்த எலும்புகளைப் போல் வாழ்பவர் பலர். உயிர்த்த இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் புதிய வாழ்வைக் கொடுக்கின்றவராகவும், அவர்களைச் செயல்திறன் மிக்க ஒரு படையணியைப் போல மாற்ற

வல்லவர் என்பதையும் கடவுள் இதன் மூலம் தெரிவிக்கின்றார். *2 நாளா. 33: 10-13* வரையுள்ள வசனங்களில் மனாசேயின் வாழ்வில் அவன் உலர்ந்த எலும்பைப் போன்று சிறைக்கைதியாய் இருந்தவர். கடவுளிடம் திரும்பினபோது அவரது வாழ்வு மறுபடியும் துளிர்த்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்பிக்கை இழந்த மக்களுக்கு புது நம்பிக்கை தந்து அவர்கள் தங்கள் தோல்விகளிலிருந்து மீண்டு மறுபடியும் அதிக ஆற்றலோடு செயல்படச் செய்கிறது. உயிர்த்த கிறிஸ்துவின் ஆற்றல் இந்த உலகில் கடவுளின் மக்களால், கிறிஸ்துவுக்குள் வாழ நம்மை ஆற்றல்படுத்துகிறது. இந்த உலகில் உலர்ந்த எலும்புகளைப் போலப் பயனற்றவர்களாய்க் காணப்படுகிற தனி மனிதரை சமூகங்களை ஆற்றல்மிக்க படைத்திரள்போல மாற்றி அவர்களைச் செயலாக்கம் மிக்கவர்களாக மாற்றுகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, நம் முன்னோராவர். அறியாமை, மூட நம்பிக்கைகள், ஒடுக்குதல்கள், பாவப் பழக்கவழக்கங்கள் என வாழ்ந்து கொண்டிருந்த அவர்களை உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி மாற்றியமமைத்து உலகில் சிறநதவர்களாக உருவாக்கி இருக்கிறது. எனவே, உயிர்த்த கிறிஸ்துவின் ஆற்றலைப் பெற்று இந்த உலகில் சாவுக்குரிய அத்தனை தீமைகளையும் வென்று கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்வோம்.

அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்

என் ஆண்டவரே, என் கடவுளே

My Lord and My God

எசா. 45: 21-25 *பிலி. 2: 5-11*
திபா. 35: 18-28 *யோவா. 20: 24-29*

தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார் (யோவா. 20: 28).

உயிர்த்த இயேசுவை நான் காண வேண்டும். உடன் சீடர்கள் கண்ட இயேசுவை நான் காண வேண்டும். உயிர்த்த இயேசுவை நான் தொடவேண்டும். உடன் சீடரின் ஆன்மிக அனுபவம் எனக்கும் வேண்டும். என்ற தோமாவின் விசுவாச அறிக்கையே "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்பதாகும்.

1. நீரே என் ஆண்டவர்:

ஆண்டவர் (கடவுள்) என்பது எபிரேயத்தில் Yahweh *எனவும், கிரேக்கத்தில்* Kyrios *எனவும், ஆங்கிலத்தில்* Lord *எனவும், பழைய மொழியாக்கத்தில் கர்த்தர் எனவும், புதிய மொழியாக்கத்தில் ஆண்டவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

இஸ்ரயேல் மக்களின் கடவுளைக் குறிக்க யாவே அல்லது யெகோவா என்ற பதத்தை எழுதினர். கடவுள் தூயவர், அவர் பெயரை உச்சரிக்கக் கூடாது என்பதற்காக "அடோனாய்" (Adonai) *என்றனர். இந்த* Adonai *ஆங்கிலத்தில்* Lord *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் ஆண்டவர் என்கிறோம்.*

2. நீரே என் கடவுள்:

கடவுள் என்பது எபிரேயத்தில் ஏலோகீம் (Elohim) *எனவும், ஆங்கிலத்தில்* God *எனவும், பழைய மொழியாக்கத்தில் தேவன் எனவும், புதிய மொழியாக்கத்தில் கடவுள் எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

இஸ்ரயேலர் கடவுளுக்கு ஏலோகீம், யெகோவா என்ற இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினர். தோமா இந்த இரண்டு வார்த்தைகளை இணைத்து அறிக்கையிட்டார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பதாகவே இப்படிப்பட்ட அறிக்கையினைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக லூக். 9: 20-இல் பேதுரு, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்றார். மத். 26: 22-இல் சீடர்கள், "ஆண்டவரே!" என்றார்கள். யோவா. 11: 27-இல் மார்த்தாள் "ஆண்டவரே! நீரே மெசியா" என்றார்.

உயிர்த்தெழுந்த நேரடிக் காட்சி தோமாவைப் புதிய இறை நம்பிக்கைக்கு உறுதிப்படுத்தியது. தோமாவின் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்ற அறிக்கையின் உள்ளான ஆன்மிகப் பொருள் என்ன? என்பதை யோவா. 20: 24-29 வரையுள்ள திருவசனங்களின் வழி தியானிப்போம்.

3. உறவின் அங்கீகாரம்:

"என் ஆண்டவரே, என் கடவுளே" என்ற தோமாவின் பதில் உறவின் அங்கீகாரமாக வெளிப்படுகின்றது. உதாரணமாக, என் தந்தை, என் தாய், என் மகன், என் சபை... என்பதுபோல நெருங்கிய உறவின் வெளிப்பாடே தோமாவின் பதில். தனிமையில் தவறவிட்ட சந்திப்பை சீடரோடு இணைந்த உறவில் தோமா பெற்றார். இழப்புகளில் தனிமையைவிட இணைந்திருக்கும் உறவின் அனுபவமே சிறந்தது. தோமா இந்த அனுபவத்தை எதிர்பார்த்து, விரும்பி பெற்றுக்கொள்கின்றார். எனவே, பிறருக்குக் கிடைக்காத அனுபவம் தோமாவுக்குக் கிடைத்தது. உயிர்த்த ஆண்டவர் யோவா. 20: 17-இல் மரியாவைத் தொடாதே என்கிறார். ஆனால், 20: 27-இன் படி தோமாவை கையை நீட்டி என் விலாவில் போடு என்கிறார். எனவே, இயேசு தோமாவுடன், தோமா இயேசுவுடன் என நெருங்கிய உறவின் அடைாளமாகின்றது இயேசுவின் உயிர்ப்பு.

4. உன்னதமான அனுபவம்:

தோமாவைப் போன்று வேறு எந்தச் சீடரும் எந்த நிகழ்வுகளிலும் எனக்கும் இப்படிப்பட்ட அனுபவம் வேண்டும் என்று விரும்பியதில்லை. இந்த நிகழ்வு எப்படி உன்னதமான அனுபவமாகின்றது? யோவா. 20: 19-இல் பூட்டிய வீட்டிற்குள் வந்தது, 20: 20-இல் உடலை வெளிப்படுத்தியது. 20: 22-இல் தூய ஆவியை கொடுத்தது. 20: 23-இல் பாவங்களை மன்னிப்பதற்கு அதிகாரம் கொடுத்தது. இத்தனை அனுபவங்களையும் தோமா தவறவிட்டிருந்தார். இப்போது தோமாவுடன் இயேசு நேரடியாகப் பேசி (20: 27) நம்பிக்கை கொள்ளக் கூறுகின்றார். தோமாவிற்கு பிற சீடர்களுக்குக் கிடைக்காத உன்னத அனுபவமாக இயேசு தோமாவுடன் பேசுவதற்கும், தோமா இயேசுவுடன் பேசுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. கிறிஸ்தவ நம்பிக்கையில் இயேசு நம்முடன் பேசுவதும், நாம் அவருடன் பேசுவதும் தன்னிகரற்ற உன்னதமான அனுபவமாகும்.

5. உயிர்ப்புக்கு அத்தாட்சி:

இயேசு உயிர்த்தெழுவார் என்ற செய்தி இயேசுவின் போதனைகளில் வெளிப்பட்டிருந்ததால் பலர் அறிந்திருந்தனர், எதிர்பார்த்திருந்தனர். இயேசுவின் போதனைகளான யோவா. 11: 25 - நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். மாற். 9: 31 - மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார். மத். 26: 32 - உயிர்த்தெழுந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்.

மேற்கண்ட வசனங்களின்படி சீடர்கள் உருவாக்கப்பட்டிருந்தார்கள். அதே சூழலில் தலைமைக் குரு, பரிசேயர், பிலாத்துவிற்கும் கூட இயேசு உயிர்த்தெழுவார் என்ற செய்தி தெரிந்தது (மத். 27: 63). எனவே, கல்லறைக்கு காவல் வைத்து மறைக்க முயன்றனர்.

தோமா உயிர்த்தெழுதலை முழுமையாக நம்பினார். எனவே, ஆவியாக அல்ல; உடலுடன் உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் காண விரும்பினார். தோமாவைச் சந்தேக தோமா என்ற சரித்திர விளக்கத்தை மாற்றி, சந்திக்க விரும்பிய தோமா எனப் புரிவது சிறப்பு. தோமாவின் சவாலை அறிந்த இயேசு தம்மை வெளிப்படுத்தினதால் தொடாமலேயே பார்த்தது போதும் என முழுமையாக உயிர்த்தெழுதலை நம்பி அத்தாட்சியாக மாறுகின்றார். உடலுடன் உயிர்த்த ஆண்டவரைக் கண்டது மட்டுமல்ல, தனது இறைப் பணியில் 19 பேரை உயிரோடு எழுப்பினார் என்று வரலாறு கூறுகின்றது.

6. உறுதியான அறிக்கை:

தோமா உயிர்த்த இயேசுவின் காயத்தைக் காண வேண்டும், தொட வேண்டும் என்று சொன்னவர். ஆனால், இயேசு உயிர்த்த காட்சி கொடுத்து, என் கைகளைப் பார், ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்று சொன்ன வார்த்தை தோமாவின் இறை நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. உரோமைப் பேரரசரை ஆண்டவர் என்று வணங்கிய சூழலில்/ இயேசுவை என் ஆண்டவர் என் கடவுள் என்று சொன்ன தோமாவின் அறிக்கை உறுதியானது. தொடக்க காலத் திருச்சபையில் திருமுழுக்கின்போது இயேசுவே ஆண்டவர் என அறிக்கை செய்தனர். யோவா. 11: 16-இல் இலாசரை எழுப்பப் போகின்றேன் என்று இயேசு சொன்னபோது, தோமா இயேசுவோடு மரிக்கும்படி போவோம் என்றார். மரணத்தை முடிவாகக் கண்ட தோமா இயேசுவின் உயிர்த்தெழுந்த காட்சி உயிர்த்தெழுதல் உண்டு என்பதில் தோமாவை உறுதிப்படுத்தியது. பயந்திருந்த, அவிசுவாசமாயிருந்த தோமாவை உயிர்த்தெழுதல் பற்றி உறுதியாக அறிக்கை செய்யும்படி மாற்றியது.

தோமாவின் சீடர் தாமஸ் ரம்பனால் எழுதப்பட்ட ரம்பன்பாட்டு (Ramban Pattu 1600CE) என்ற எழுத்தில் தோமாவை மைலாப்பூரில் காளிக் கோவிலில் வணங்கச் சொன்னபோது ஒரு சோத்துக்காக என் நம்பிக்கையை விற்பேனோ? திணிப்பீர்கள் என்றால் உங்கள் காளி இதிலிருந்து ஓடுவதையும், ஆலயம் எரிவதையும் காண்பீர்கள் என்றார். திணித்ததால் பூசாரி பைத்தியம் பிடித்தவனானான். ஆலயம் எரிந்தது. இதைப் பார்த்த மற்ற பூசாரியால் ஈட்டியால் குத்தப்பட்டு ஒரு கல்லின் மீது சாய்ந்து ஜெபித்தார். தோமா ஈட்டியை எடுத்து சிகிட்சைக்காக அழைத்தபோது மறுத்து, என் மிகப் பெரிய மகிழ்ச்சியின் நாள் வந்தது என்றார். கி.பி. 52-இல் இந்தியா வந்த தோமா கி.பி. 72, July 3-இல் மரித்தார் என்று நம்பப்படுகிறது.

அருள்திரு. அறிவர். I. ரெஞ்சித் வேதகுமார்

உணவருந்த வாருங்கள்: உயிர்த்த ஆண்டவரால் அழைக்கப்பெறுதல்

Come and Dine: Invitation by the Risen Lord

1 அர. 19: 1-8 *திப. 27: 27-36*
திபா. 23 *யோவா. 21: 1-14*

இயேசு அவர்களிடம், "உணவருந்த வாருங்கள்" என்றார் (யோவா. 21: 12).

யோவான் 21-ஆம் அதிகாரத்தின் வழியாக நாம் அறிந்துகொள்ளும் உயிர்த்த ஆண்டவரின் திருக்காட்சியில் இருமுறை சீடர்கள் இருந்த இடத்தில் அவர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். முதல் முறையாக உயிர்த்த அதே நாள் மாலையில் அவர்களை சந்தித்தபோது தூயாவியாரின் ஆற்றலை வழங்கி, நற்செய்திப்பணிக்கு தயார்படுத்தினார். அப்பொழுது திதிம் என்னும் தோமா அவர்களுடன் இல்லை. எட்டு நாட்களுக்குப்பின் நடந்த இரண்டாவது சந்திப்பின்போது தோமாவும் மற்ற சீடர்களுடன் இருந்தார். இம்முறை உயிர்த்த ஆண்டவர் தோமாவின் மன ஐயத்தைப் போக்கி தெளிவுபடுத்தினார். பதிலுரையாக தோமா, நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்ற உணர்வுப்பூர்வமான மிகப்பெரும் அறிக்கையை வெளிப்படுத்தினார். இந்நிலையில், சீமோன், பேதுரு, தோமா உட்பட ஏழு சீடர்கள் திபேரியக்கடலில் மீன் பிடிக்க இரவு நேரத்தில் செல்கின்றனர். இரவு முழுக்க உழைத்த அவர்களது உழைப்பின் பலன் வெறுமையாயிருந்ததால் சோர்புற்றிருந்த வேளையில் உயிர்த்த ஆண்டவர், உணவருந்த வாருங்கள் என பாசத்துடன் அழைக்கிறார். இந்த அழைப்பினில் நிறைந்திருக்கும் ஆன்மீக உண்மைகளை நம் வாழ்வுக்கு பயன்தரும் நிலையில் இறைவாக்குகளின் வழியே உணர்ந்திட ஆயத்தப்படுவோம்.

1. தேவையுணர்ந்து உதவிட அழைக்கிறார்:

இயேசு அவர்களிடம், பிள்ளைகளே மீன் ஒன்றும் படவில்லையா? என்று கேட்டார் (வ. 5)

இருள் முழுமையாக விலகாத அதிகாலை நேரம், இயேசு சீடர்களைத் தேடி திபேரியக் கடற்கரைக்கு வருகிறார். விலகி விலகி ஓடினாலும் அக்கறையுடன் தேடித் தேடி அணுகி நம் அருகில் வருபவரல்லவா அவர்! எத்துணை பாசம் மிகுந்த அழைப்பு, கனிவு நிறைந்த விசாரிப்பு. இருமுறை உங்களைத் தேடிவந்து சந்தித்ததை மறந்து ஓடிவிட்டீர்களே என கோபம் கொள்ளாமல் அன்பும், அக்கறையும் கலந்து பிள்ளைகளே! என அழைக்கிறார். இயேசு தம் முதல் சீடராய் சீமோனை

அழைத்த நிகழ்வில் கெனசரேத்துக் கடலில் (திபேரியக் கடல், கலிலேயக்கடல், கெனசரேத்துக் கடல் என்ற பெயர்கள் ஒரே கடலைக் குறிப்பன) அவரது படகை பயன்படுத்தி மக்கள் கூட்டத்துக்கு போதித்தபின் வலைகளைப் போடுங்கள் என்றபோது, ஐயா இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன் என்று பதிலுரைத்தார் சீமோன். தொழில்முறை மீனவரான (Professional Fisherman) சீமோனுக்கு இயேசுவின் ஆலோசனை உள்ளத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில், அந்தக்கடல் அவர்களுக்கு மிகப் பரிச்சயமானது. மீன் படுவதிற்குரிய இடமும் நேரமும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். "ஆயினும்" என்ற சீமோனின் வார்த்தை இங்கு கவனிக்கத் தகுந்தது. இயேசுவின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்தார் சீமோன்; அந்த பகல் நேரம் பெருந்திரள் மீன்கள் அகப்பட்டன. ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப்போய் விடும் என்றார் சீமோன். அழைத்து செல்ல வந்த ஆண்டவர், "அஞ்சாதே, இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" என்றவுடன் சீமோனும், செபதேயுவின் மகன்களும் இயேசுவைப் பின் தொடர்ந்தனர் (லூக். 5: 3-11).

மனிதர்களைப் பிடிக்க அழைப்பு பெற்றவர்கள் அழைப்பை மறந்து, அழைத்தவரை மறுதலித்து, யூதருக்குப் பயந்து மறைந்து வாழ்ந்தபோது தேடிச்சென்ற இயேசு இங்கும் தேடி வந்திருக்கிறார். தங்கள் தொழில் உத்திகளையும், திறமையையும் நம்பி மீன் பிடிக்க வந்தவர்கள் உரிய பலனின்றி இருந்தபோது பலன் கொடுக்க ஆவல் கொள்கிறார் ஆண்டவர். இல்லை (மீன் ஒன்றும்படவில்லை) என்ற அவர்களது பதிலைத் தொடர்கிறது இயேசுவின் ஆலோசனை, படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன் கிடைக்கும். ஏற்கனவே, வலப்பக்கம் இடப்பக்கம் என மாறி மாறி எல்லா பக்கமும் வலை வீசியிருப்பார்கள். ஆனால் விளைவு என்னவோ சூன்யமாயிருந்தது. இப்பொழுதும் இயேசுவின் ஆலோசனையை அங்கீகரித்தனர், மீன்கள் மிகுதியாய் அகப்பட்டன.

இயேசுவின் நேர்மறை அணுகுமுறை (Positive Approach) சீடர்கள் அவரை அடையாளம் காண துணையாய் அமைந்தது. அன்புச் சீடர் பேதுருவிடம் கூறுகிறார் ; அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம் (வ. 7). இன்று, எதிர்மறை அணுகுமுறையாலும் (Negative Approach) சுயநல அகங்கார உணர்வினாலும் (Egoism) ஒருவருக்கொருவர் (கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள், சகோதர-சகோதரிகள் பணியமர்த்துபவர்-பணியாளர்) உதவி என்பது கேள்விக்குறியாகியுள்ளது. பணிவிடைக்கு மாதிரி இயேசு. அவர் போல் செயல்பட நமக்கு முன்மாதிரி காட்டியுள்ளார் (யோவான். 13: 15). நமக்குத் தேவை ஏற்படும் பொழுது ஆண்டவரை அதற்கு மாறாக, எப்பொழுதும் நம்முடனிருந்து உதவி செய்கிறார். திருப்பாடகர் தாவீது, ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை என அக்களிப்புடன் பாடுகிறார் (திபா. 23: 1). நல் ஆயர் எப்பொழுதும் தம் ஆடுகள் பேரில் கவனம் கொள்பவர்; தேவையறிந்து உதவி செய்பவர்.

2. பசியறிந்து உணவிக்க அழைக்கிறார்:

பிறரது குறைவையும் பசியையும் புரிந்துகொள்பவரே சிறந்த தலைவராவார். இயேசு தம்மிடம் வந்த மக்களை பசியுடன் அனுப்பலாகாது, உணவு கொடுக்க வேண்டுமென தம் சீடர்களிடம் கூறினார் (மாற்கு 8: 2, 3). இயேசு அவர்களிடம் உணவருந்த வாருங்கள் என்றார் (யோவான் 21: 12). உணவின் அருமை பசியோடிருப்பவர்களுக்குத் தான்புரியும். இவ்விடத்திலும் இயேசு இரவு முழுவதும் உழைத்துக் களைத்து வெறுமையாயிருந்த தம் சீடர்களுக்கு மிகுதியான மீன்களைக் கொடுத்து வியப்புறச் செய்கிறார். மேலும், பசியினால் சோர்ந்திருந்த அவர்களுக்கு உணவை தயாராக்கி வைத்து அவர்களுடன் நெருங்கி சென்று உணவை தானே பரிமாறி பசியாற்றுகிறார் (வ. 13). கடையனாக, பணிவிடைக்காரனாக இருங்கள் என போதித்தவர் இங்கும் மிகச் சிறந்த பாடமாகிறார்.

இணைந்து உணவருந்துதல் அனுபவங்களைப் பகிரவும், அன்பையும் உறவையும் வலுப்படுத்தவும் நல்ல வாய்ப்பாக அமைகிறது. ஆகவே தான் குடும்பஆலோசகர்கள் (Family Counsellors)*பரபரப்பான பணி சூழலிலும் தினமும் ஒருவேளையாயினும் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்திருந்து உணவு சாப்பிடுங்கள் என அறிவுறுத்துகின்றனர். ஒரு சமையல் எரிவாயு விநியோக நிறுவனத்தின் அடையாள வாக்கியம் 'Cook Food, Serve Love' என்பதாகும். இங்கு உணவு அன்பு பரிமாற்றத்தின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. இயேசு தமக்கும் தம் சீடர்களுக்கு இடையேயிருந்த அன்பை உணவு பகிரும் இந்த நிகழ்வின் வழியாக பன்மடங்கு பெருக்கமடைய செய்கிறார்.*

தூய பவுலாரும், சில கைதிகளும் யூலிபு என்ற நூற்றுவர் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு கப்பலில் அழைத்துச் செல்லப்படுகின்றனர். பயணத்தினிடையே பவுல் கூறிய பயண ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாத நூற்றுவர் தலைவர் அக்கப்பலின் பயணத்தை தொடரச் செய்கிறார். கடும்புயலும் மழையுமாகயிருந்த ஆபத்தான சூழலில் பயத்திலிருந்த பயணிகள் அனைவரும் பதினான்கு நாட்கள் உணவேதும் உண்ணவில்லை. பவுல் அனைவரையும் தைரியப்படுத்தி விட்டு, அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி கூறி அதைப்பிட்டு உண்ணத் தொடங்கினார். உடனே அனைவரும் மன உறுதியடைந்து உணவருந்தினர். (திப. 27: 1-28). பவுலின் இந்த செயல் கப்பலிலிருந்த அனைவருக்கும் புது நம்பிக்கையை ஏற்படுத்தியது.

"உண்டி கொடுத்தோர், உயர் கொடுத்தோரே" என்பது பழமொழி. உணவு வழங்குதல் உயிர் கொடுப்பதற்கு சமமானது. எனவே தான், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல்வேறு முயற்சிகள் (நவீன தொழில்நுட்ப பயன்பாடு, தரமான விதை தேர்வு, சிறந்த உரமேலாண்மை, விவசாயக் கருத்தரங்குகள், பயிற்சிகள்) மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், போதிய அளவில் தரமான சேமிப்புக்கிட்டங்கி வசதிகள் இல்லாத

காரணத்தால் பெருமளவு உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் வீணாவது வருத்தமளிக்கும் செய்தியாக உள்ளது. நம் இல்லங்களின் அன்றாட உணவு பயன்பாட்டிலும், விருந்து நிகழ்ச்சிகளிலும் உணவு வீணாகாமல் கவனமாயிருப்பது நம் அனைவரது கடமையாகும். யோவான் ஆறாம் அதிகாரத்தில் காணும், இயேசு உணவளிக்கும் நிழ்வில், ஒன்றும் வீணாகாதபடி எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள் என்று தம் சீடர்களிடம் கூறினார் (யோவான் 6: 12). இயேசுவின் இந்த ஆலோசனையை நம் வாழ்வில் கடைபிடிக்கவேண்டும்.

3. பாசத்துடன் பணிசெய்ய அழைக்கிறார்:

சீமோன் பேதுரு தம்முடனிருந்த ஏனைய சீடர்களிடம், "நான் மீன் பிடிக்கப் போகிறேன்" என்றார் (வ. 3). பேதுருவின் தொனியில், விருப்பமுள்ளவர்கள் என்னுடன் இணைந்து கொள்ளலாம் என்ற அழைப்பு மறைந்திருப்பது போல் எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், தனியாக மீன் பிடித்தல் என்பது எளிய வேலையன்று. படகை செலுத்தவும் வலைகளை வீசவும் உதவியாளர்கள் தேவை. எனவே, மானுடரைப் பிடிக்கும் பணிக்காக முதலில் அழைக்கப்பட்டவரும் (லூக்கா 5: 10, 11) பணிவிடைக்கார தலைவரோடு (Servant Lord) நெருக்கமாயிருந்தவருமான பேதுரு (உரிமையுடன் ஆண்டவரை கடிந்து கொள்தல் மத். 16:22, நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று தெளிவாக சான்றுரைத்தல் மத். 16: 16, 17) பின்மாற்றமடைந்து பழைய தொழிலுக்கு செல்ல ஆர்வம் காட்டினார். இந்த பேதுரு, இறையரசுப்பணிக்கு ஏனைய சீடர்களை ஒருங்கிணைக்கவும், உற்சாகப்படுத்தவும் வேண்டிய பொறுப்பாண்மைக்குரியவர் (Responsible person) எனக்கூறின் மிகையன்று.

மறுதலித்த, மனந்தனர்ந்திருந்த, பின்வாங்கிப் போன பேதுருவை இந்த உணவு நேர சந்திப்பின் வழியாக இயேசு மறுபடியும் இறைப்பணிக்கு தயார்படுத்துவதை காண்கிறோம். என்னைப் பின்பற்ற விரும்புவோர் தன்னலம் விடுத்து சிலுவையுடன் வரவேண்டும் (மத். 16: 24) என முன்பு கற்றுக்கொடுத்ததை பேதுரு நினைவுகூர வேண்டுமென்றும் கடைபிடிக்க வேண்டுமென்றும் இங்கு வலியுறுத்துகின்றார். ஆகவே தான் பேதுருவிடம் இயேசு மூன்று முறை என்னிடம் அன்பு செலுத்துகிறாயா? (யோவான் 21: 15-19) என கேட்கிறார். பேதுரு இயேசுவிடமுள்ள அன்பை உறுதி செய்தபோது தமது ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் பேணி வளர்க்கும் பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைக்கிறார். இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் (மத். 16: 18) என்ற இயேசுவின் வாக்குறுதி நிறைவேறும் தருணம் இங்கு கனிகின்றது.

தனி மனிதராக தீமையின் ஆதிக்கத்திற்கு எதிராக (ஆகாபு, ஈசபேலின் தொந்தரவுகள்) நின்று, ஆண்டவருக்காக அருஞ்செயல்களை நிறைவேற்றிய இறைவாக்கினர் எலியா, உயிரை எடுத்துக்கொள்ளும் என ஆண்டவரிடம் மன்றாடினார் (1 அர. 19: 4). மனச்சோர்புடன் படுத்துறங்கிய

அவரை வானதூதர் எழுப்பி அவரது தலைமாட்டில் தயாராக வைக்கப்பட்டிருந்த உணவை உண்ணச் செய்கிறார் (வ. 5, 6). அவ்வுணவை உண்டு மீண்டும் உறங்கிய எலியாவை இரண்டாம் முறை எழுப்பி உணவுண்டு, தண்ணீர் பருக கூறினார் வான்தூதர். இம்முறை பலமடைந்த எலியா நாற்பது நாட்கள் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைகிறார் (வ. 7, 8). இதற்குப்பின் மிகப்பெரும் செயல்களை ஆண்டவருடைய வழிகாட்டுதலின்படி செய்து நிறைவேற்றினார் எலியா (வ. 9-21). இறை சந்திப்பு இறைப்பணிக்கான பக்குவத்தையும், பலத்தையும் தருகிறது.

சீரியாவின் பெண்கள் பள்ளியொன்றில் நடந்த சம்பவம் குறிப்பிட்ட ஒரு வகுப்பின் ஆசிரியை பாடவேளையின் இறுதியில் மாணவிகளை உற்சாகப்படுத்தும் விதமாக சிறிய தேர்வொன்றை நடத்தினார். அதில் வெற்றி பெறுபவருக்கு ஒரு ஜோடி புதிய காலணிகள் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தார் ஆசிரியை. அனைவரும் உற்சாகமாக பதில் எழுதினர். ஆசிரியை ஆச்சரியப்பட்டார், அனைவரும் சரியான பதிலை எழுதியிருந்தனர். பரிசு யாருக்கு? என்ற கேள்வி எழுந்தது. ஆசிரியை கூறினார், துண்டுச்சீட்டில் அவரவர் பெயரை எழுதி சுருட்டி ஒரு பெட்டிக்குள் போடுங்கள்; அவற்றிலிருந்து ஒரு சீட்டை எடுத்து அதிலுள்ள பெயருக்குரியவருக்கு பரிசு வழங்கப்படும். ஒரு சீட்டு எடுக்கப்பட்டது, அதில் வஃபா என்ற பெயர் பளிச்சிட்டது. அனைத்து மாணவிகளும் கரவொலி எழுப்பினர். பரிசு வஃபாவுக்கு வழங்கப்பட்டது. ஏழை மாணவியான அவள் கிழிந்த காலணி அணிந்திருப்பாள். பெட்டியிலிருந்த பெயர் சீட்டுகளை வீட்டில் ஆசிரியை பிரித்துப் பார்த்தபோது அனைத்து சீட்டுகளிலும் வஃபா என்ற பெயரே எழுதப்பட்டிருந்தது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம் என்ற உண்மையை உணர்ந்துள்ள நாம் உயிர்த்தெழுதலின் செய்திக்கு சான்றுகளாக வாழ்வோம். உயிர்த்த இயேசுவை இருமுறை சந்தித்த பின்பும் பழைய வாழ்வுக்குத் திரும்பிய சீடர்களை மூன்றாம் முறை சந்தித்து உதவி செய்து உணவளித்து அவரது பணிக்கு அவர்களை பலப்படுத்தினார். உயிர்த்த ஆண்டவரின் மக்களாக உதவி செய்வோம், உறவைப் பேணுவோம், இறையரசுப் பணியில் இணைவோம்.

அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ்

உயிர்த்த ஆண்டவர்: உடன் பயணிப்பவர்

Risen Lord: The Co-traveller

விப. 33: 12-16 *திப. 18: 1-11*
திபா. 121 *லூக். 24: 13-33*

இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். (லூக். 24: 15)

தென்பசிபிக் தீவில் தொழுநோய் பரவியபோது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை, மெலாக்காய் தீவில் தனிமைப்படுத்தினர். அவர்களுக்கு உதவி செய்யவும் அவர்களை காப்பாற்றவும் ஒருவரும் முன்வரவில்லை. காரணம் அத்தீவுக்கு சென்றவர்கள் ஒருவரும் தங்கள் நாட்டிற்குத் திரும்பிவரக்கூடாது என்பது அரசின் கட்டளை. ஆயினும் இந்த மக்களுக்கு துணையாய் அவர்களோடு உடன் பயணித்து துயர் துடைக்கும் படியாக புறப்பட்டவர் தான் டாமியின் என்ற இளைஞர். அவர் அங்கு வியாதியின் கொடுமையினால் நம்பிக்கையில்லாமல் வாழ்ந்த மக்களுக்கு நம்பிக்கை கொடுத்தார். அவர்களுக்கு வீடுகள், மருத்துவமனைகள் கட்டினார். இப்படியாக துன்பத்தில் அவர்களோடு உடன் பயணித்து அவர்களுக்கு உறுதுணையாயிருந்து அவர்களை வாழ்வித்தார்.

மனித வாழ்க்கைப் பயணத்தில் வருகின்ற கவலை, பயம், தனிமை உணர்வு, நோய் துன்பங்கள் இவற்றால் மடிந்து போகாமல் இருக்க உயிர்த்த ஆண்டவர் உடன் பயணிப்பவராய் இருக்கிறார். நம்முடைய வாழ்க்கைப் பயணம் வெற்றிகரமாக அமைவது, நம்மை பயணத்தில் நடத்துபவராகிய நம் ஆண்டவரையும் அவருடன் நாம் சேர்ந்து பயணிப்பதையும் பொறுத்ததாகும். இன்றைய நற்செய்திப் பாடமான லூக் 24: 13-33 பகுதியில், இயேசு உயிர்த்த அன்றையத்தினம் அதைக் குறித்த கலக்கத்தோடு பேசிக்கொண்டு சீடர்கள் இரண்டு பேர் எருசலேமிலிருந்து எம்மாவு என்னும் கிராமத்திற்கு நடைபயணம் மேற்கொண்டனர். அந்த பயணம் பாதுகாப்பு தேடி நடந்த பயணமாய், நம்பிக்கையற்ற மனநிலையோடும், துக்கமுகத்தோடும் சென்ற பயணமாயிருந்தது. அப்படிப்பட்ட பயணத்தில் உயிர்த்த ஆண்டவர் உடன் பயணித்தார். அவர் எப்படியாக பயணித்தார் என்பதை இன்றைய திருமறைப் பாடங்களின் வழியாக சிந்திப்போம்.

1. உயிர்த்த ஆண்டவர் உடன் பயணியாகப் பயணிப்பவர்: *(லூக். 24: 15)*

இப்படி அவர்கள் உரையாடிக்கொண்டும் வினவிக்கொண்டும்

சென்ற போது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார்.

வாழ்க்கைப் பயணத்தில் ஆண்டவர் தம்முடையவர்களோடு உடன் பயணிக்கிறார். அவர்களுக்கு வரும் துன்ப துயரங்களில் உடன் இருந்து அவர்களை நடத்துகிறார். எம்மாவு ஊருக்கு பயணித்த இரு சீடர்களுடன் இயேசு உடன் பயணியாய் பயணித்தார். காரணம் அவர்கள் இயேசுவை மேசியாவாக, தங்களை மீட்டு இரட்சிப்பவராக எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தலைமை குருக்களும் ஆட்சியாளர்களும் அவரை சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டார்கள். அதனால் கவலை, பயம், நம்பிக்கையின்மை ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டு தனிமை உணர்வோடு எருசலேமைவிட்டு பயணிக்கின்றனர். இந்த சூழ்நிலையில் இயேசு நெருங்கிவந்து அவர்களோடு நடந்து சென்றார் (லூக் 24: 15). ஆனால், இயேசுவை யார் என்று அறிந்து உணராதபடி அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. நம் வாழ்க்கையிலும் அநேக நேரங்களில் உயிர்த்த ஆண்டவர் உடன் பயணியாய் நம்முடன் பயணிப்பதை உணராமல் தடுமாறுகிறோம்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலர்கள் கானான் நோக்கி பயணித்தபோது கடவுள் அவர்களோடு நெருப்புதூண் மற்றும் மேகத்தூண் வடிவில் இரவும் பகலும் உடன் சென்றதை வி.ப. 13: 21-இல் படிக்கிறோம். வி.ப. 33: 12-16 பகுதியில் மோசே ஆண்டவரிடம் உமது பிரசன்னம் கூட வரவில்லையெனில் எங்களை இங்கிருந்து போக செய்யாதீர் என்று மன்றாடின போது ஆண்டவர் மோசேயிடம் எனது பிரசன்னம் உன்னோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். இப்படியாய் உடன் பயணியாய் இருந்து பாதுகாக்கும் ஆண்டவராயிருந்தார். மேலும் தாவீது தி.பா. 121: 8-இல் நம்மை பாதுகாக்கும் ஆண்டவர் நாம் போகும் போதும் உள்ளே வரும் போதும் இப்போதும் எப்போதும் நம்மைக் காத்தருள்வார் என்கிறார். எனவே, உயிர்த்த ஆண்டவர் நம் வாழ்க்கை பயணத்தில் உடன் பயணியாய் பயணிக்கின்றார் என்ற நம்பிக்கையில் முன்னேறி செல்வோம்.

சில ஆண்டுகளுக்கு முன் நிலநடுக்கத்தால் ஒரு கட்டிடம் இடிந்தபோது அந்த இடிபாடுகளுக்கிடையே சிக்கிக்கொண்ட மனிதனை பதினொரு நாட்களுக்குப் பின் உயிரோடு மீட்டனர். அவருக்கு மருத்துவ உதவி கொடுத்து காப்பாற்றிய பின் அவரிடம் எப்படியாக இத்தனை நாட்கள் தனிமையில் இடர்பாடுகளுக்கிடையில் இருந்தீர்கள் என்று கேட்ட போது, அவர் சொன்னார் என்னோடு இருந்த தேவ பிரசன்னம், என்னை தனிமை உணர்வு, பயம், பலவீனம், பசி அனைத்தையும் மறக்கச்செய்து உயிரோடு பாதுகாத்தது. ஆம், உயிர்த்த ஆண்டவர் உடன் பயணியாய் பயணித்து நம்மை பாதுக்காக்கிறார்.

2. உயிர்த்த ஆண்டவர் உரையாடிப் பயணிப்பவர்: *(லூக். 24: 17)*

அவர் அவர்களை நோக்கி, "வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு

ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள்.

வாழ்க்கை பயணத்தில் உடன் பயணியாய் பயணிக்கும் ஆண்டவர் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிறார். அதையே பேதுரு 5: 7-இல் உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். இயேசுவும் எம்மாவு சீடர்களுடன் உரையாடிக்கொண்டே பயணித்தார். அவர்களுடைய உரையாடலில் காணப்பட்ட நம்பிக்கையின்மையை கடிந்து கொள்ளுகிறார். அவர்கள் உயிர்த்த ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளுமாறு இறைவார்த்தைகளை விளக்குகிறார் (லூக் 24: 25-27). உயிர்த்த ஆண்டவர் யார் என்று அறியாமலே அவருடைய உயிருள்ள வார்த்தைகளை கேட்க கேட்க பயணம் போவதே சீடர்களுக்குத் தெரியவில்லை. அவர்களது தகர்ந்து போயிருந்த நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது. குளிர்ந்து போயிருந்த இருதயம் கொளுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அவரை தங்களோடு தங்கியிருக்க கேட்டுக்கொண்டனர். இன்றும் இறைவார்த்தை மட்டுமே துன்பத்திலும் கடவுள் மீது நம்பிக்கை கொள்ள நமக்கு உதவி செய்கிறது. இதையே தாவீது திபா. 119: 92-இல் உமது திருச்சட்டம் எனக்கு இன்பம் தருவதாய் இல்லாதிருந்தால் என் துன்பத்தில் நான் மடிந்துபோயிருப்பேன் என்கிறார்.

திப. 18: 1-11 பகுதியில், கொரிந்து நகரில் பவுலடியார் ஒவ்வொரு ஓய்வுநாளும் தொழுகை கூடத்தில் யூதரிடமும் கிரேக்கரிடமும் இயேசு மேசியா என்றும், உயிர்த்த ஆண்டவர் என்றும் சான்று பகர்ந்தார். அவர்கள் அதனை எதிர்த்து பழித்துரைத்தபோது, பவுல் தனது மேலுடையிலிருந்த தூசியை உதறிவிட்டு பிற இனத்தவரிடம் செல்கிறேன் என்று கூறினார். ஆனால், அன்று இரவு ஆண்டவர் பவுலுக்கு காட்சியில் தோன்றி உரையாடினார். பவுலே அஞ்சாதே; பேசிக்கொண்டேயிரு நிறுத்தாதே. ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன். எவரும் உனக்கு தீங்கிழைக்கப்போவதில்லை. இந்நகரத்தில் எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றார்கள் எனக்கூறி பெலப்படுத்தினார். பவுல் ஒன்றரை ஆண்டுகள் அங்கு தங்கியிருந்து இறைவார்த்தையை அவர்களுக்கு கற்பித்தார். ஆம், உயிர்த்த ஆண்டவர் நம்மோடு உரையாடி பயணிப்பவர்.

கொல்கத்தா சேரிகளில் பராமரிப்பின்றிக் கிடந்த தாயிடம் அன்னை தெரசா உணவோடு சென்று அவரோடு உரையாடினார்கள். அப்போது அந்த தாய் அன்னை தெரசாவிடம் நான் மனித சத்தம் கேட்டு பல நாட்கள் ஆயின, இன்று என்னுடன் நீங்கள் உரையாடுவதே பசி அனைத்தையும் மாற்றி விட்டது என்றார். இதுபோலவே ஆண்டவருடைய வார்த்தையாம் திருமறை மூலம் நம்மோடு உரையாடுவதும் நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. நிலை வாழ்வுக்கும் நம்மை வழிநடத்துகிறது.

3. உயிர்த்த ஆண்டவர் உணவளித்துப் பயணிப்பவர்: *(லூக். 24: 30)*

அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.

உயிர்த்த ஆண்டவர் எம்மாவு கிராமத்திற்கு சென்ற சீடர்களுடன் உரையாடி பயணித்தபோது, மாலை நேரமானதால் அவர்கள் இயேசுவை தங்களோடு தங்குமாறு கட்டாயப்படுத்தி இணங்க வைத்தார்கள். சீடர்கள் இயேசுவை அந்நியராக நினைத்தே அழைத்தனர். ஆனால் இயேசு அவர்களோடு கூட உணவு அருந்தி கூட்டுறவை பெலப்படுத்தினார். இயேசுவின் மரணத்திற்கு முன்பு ஆசரித்த கடைசி பாஸ்கா திருவிருந்தின்போது சீடர்களிடம் இறையாட்சியில் இது நிறைவேறும் வரை இதை உண்ணமாட்டேன் என்றவர் இப்போது மீண்டும் பந்தியிருப்பது இறையரசின் கூட்டுறவை வெளிப்படுத்துகிறது *(லூக். 22: 16).*

யோவா 6: 48-இல் இயேசு வாழ்வுதரும் உணவு நானே என்றவர், எம்மாவு ஊருக்கு சென்ற சீடர்களுக்கும் உணவு அளிக்கிறார். இயேசு பந்தியில் அமர்ந்து அப்பத்தை பிட்டு கொடுத்தபோது, இந்த உணவு வழியாக அவர்களின் மறைக்கப்பட்ட கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் உயிர்த்த இயேசுவை அறிந்து கொண்டார்கள். உடனே உயிர்த்த ஆண்டவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார் *(லூக். 24: 31)*, அந்நேரமே அந்த சீடர்கள் இருவரும் புறப்பட்டு எருசலேமுக்கு திரும்பி இருந்தவர்களுக்கு ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை அறிவித்தார்கள். இப்படியாக அவர்கள் நற்செய்தியின் ஊடகமானார்கள்.

போதகர் பிரான்சிஸ் எட்வர்ட் கிளார்க் நடத்திய திருச்சபையின் ஆராதனைகளில் திருச்சபையாரோடு இளைஞர்கள் கலந்துகொள்ளாமல் அலட்சியப்படுத்தினார்கள். அவர்களை ஒன்றிணைப்பதற்கு பல செய்திகள் வழியாக அறிவுறுத்தியும், எந்த பயனும் இல்லை. இறுதியாக ஒரு ஞாயிறு தொழுகையின் முடிவில் இளைஞர்களுடன் இணைந்து தேனீர் அருந்த வேண்டுமென்று விரும்புகிறேன் என்றார். அன்று அனைத்து இளைஞர்களும் போதகருடன் விருந்து உண்டு ஒரு கூட்டுறவுக்குள் வந்தனர். இதுவே கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் அமைய காரணமாயிற்று. ஆம், உயிர்த்த ஆண்டவருடன் உணவருந்தி உறவாடுவோம்.

நமது அன்றாட வாழ்வில் உயிர்த்த ஆண்டவர் உடன் பயணியாய் பயணிக்கின்றார். அவர் நம்மோடு உரையாடி, உணவருந்தி பயணிக்கின்றார். அவருக்கு நம்மை அர்ப்பணித்து வாழ்வோம்.

அருள்திரு. M.P. விஜயகுமார்

தச்சரான யோசேப்பு

Joseph the Carpenter

தொநூ. 1: 26-2: 3 *2 தெச. 3: 6-15*
திபா. 15 *யோவா. 5: 1-10*

"ஓய்வு நாளாகிய இன்று படுக்கையை எடுத்துச் செய்வது சட்டத்திற்கு எதிரான செயல்" (யோவா. 5: 10).

தொழிலாளர் தினம் மே தினம் என்றும் அழைக்கப்படுகின்றது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று உழைத்து உண்ணுகிறவர்களே உண்மையில் வாழ்கிறார்கள் என்று திருவள்ளுவர், உழைப்பாளர்களின் மேன்மையைக் குறிப்பிடுகின்றார். தொழிலாளர் உழைப்பாளர்களின் உரிமைகளுக்காகக் கொண்டாடப்படும் நாளாகும். தொழில் புரட்சியின் (Industrial Revolution) *காலத்தில் குறைந்த சம்பளத்தில் அதிக நேரம் தொழிலாளிகள் வேலை பார்த்தனர். "8 மணிநேரம் வேலை, 8 மணிநேரம் ஓய்வு, 8 மணிநேரம் பொழுதுபோக்கு" என்ற நோக்கத்தோடு, பல தொழிலாளர் சங்கங்கள் தொழிலாளிகளின் உரிமைக்காக ஆரம்பிக்கப்பட்டன. 1886-ஆம் ஆண்டு மே 1 அன்று சிகாகோமில் தொடங்கிய போராட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டு பலரும் உயிரிழந்தனர். தொடர்ந்து, 1889-ஆம் ஆண்டு* Second International *என்ற சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு, மே மாத முதலாம் நாளை சர்வதேசத் தொழிலாளர் நாள் என்று அறிவித்தது.*

உழைப்பு உலகை வடிவமைக்கின்றது
உழைப்பு உலகை மாற்றுருவாக்கம் செய்கின்றது
உழைப்பு உயர்வை அளிக்கின்றது

உழைக்கும் மக்களான தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்குமான இடையேயான இடைவெளி காலம் காலமாக நீடித்து வருகின்றது. உழைப்பவர்கள் கடினமாக, விவேகமாக உழைக்கின்றபோது உயர முடியும். நீ.மொ. 14: 23-இல் "கடும் உழைப்பு எப்போதும் பலன் தரும்" என்று உழைப்பை முக்கியப்படுத்துவதைக் காணலாம். உழைப்பில் உத்தமமாய் நடந்து நீதியை நடைமுறைப்படுத்தி மனசாட்சியின்படி சத்தியமாய் வாழ்கின்றாவர்கள் கடவுளுடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவர் என்று திருப்பாடலாசிரியர் (தி.பா. 15: 1) சொல்லுகின்றார். யோவா. 15: 1-17-இல் இயேசு ஓய்வுநாளில், 38 ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்த மனிதரை பெதஸ்தா குளத்தின் அருகில்

குணப்படுத்திய நிகழ்வு வருகின்றது. யூதர்கள் அந்த நாள் ஓய்வுநாள் என்பதினால், அந்நாளில் குணமாக்கியவர் யார்? என்று விசாரித்தனர். ஓய்வுநாளில் இயேசு இதைச் செய்ததால் யூதர்கள் அவரைத் துன்புறுத்தினார்கள் (யோவா. 5: 16). இயேசு அவர்களிடம் யோவா. 5: 17-இல் தனது தந்தை பற்றிக் குறிப்பிடுகின்றார். பரம தந்தையாகிய கடவுள் ஒரு படைப்பாளர், பணிவிடையாளர், உழைப்பாளர் என்று வெளிப்படுத்துகிறார். கடவுளை, உழைப்பாளராகத் திருமறை காட்டுகிறது.

1. தந்தையாம் கடவுளின் உழைப்பு:

தொநூ. 1: 26; 2: 3 வரை கடவுள் மனிதரைப் படைத்த நிகழ்வைக் காணலாம். கடவுள் மனிதனைப் படைப்பதற்கு முன்பே சகல உலகத்தையும் உயிரினங்களையும் படைத்ததை பார்க்க முடியும். இது கடவுளின் உழைப்பில் இருக்கக்கூடிய திட்டமிடுதலை காட்டுகின்றது. மேலும், ஒவ்வொரு நாளும் படைத்த பிற்பாடு அவற்றை ஆராய்ந்து நல்லது என்று காண்கின்றார். இது கடவுளின் உழைப்பில் இருக்கக்கூடிய ஒழுங்கைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆறாம் நாளில் மனிதரைப் படைத்தப் பிற்பாடு, கடவுள் ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார் என்பதை தொ.நூ. 2: 2-இல் பார்க்கலாம். இது கடவுள் உழைப்பில் ஓய்வுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. உழைப்பில் ஒழுங்கு எவ்வளவு முக்கியமோ அதுபோல ஓய்வும் மிக முக்கியம். நம்முடைய வாழ்விலும் உழைப்பு மிக முக்கியம். சரியான திட்டமிடுதல், ஒழுங்கு மற்றும் ஓய்வு போன்ற காரணிகளோடு மாதிரி காட்ட அழைக்கப்படுகின்றோம்.

2. தச்சரான யோசேப்பின் உழைப்பு:

யோசேப்பை தச்சர் என்று குறிப்பிட டெக்டோன் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு கட்டிடக்காரன் அல்லது கைவினைஞன் என்று பொருள். ஆரிகன் என்ற திருச்சபைத் தந்தை இயேசுநாதரின் ஊழியத்திற்கு முன்பே யோசேப்பு இறந்திருக்கலாம் என்று சொல்லுகின்றார். மத்தேயு 13: 55-இல், யோசேப்பு என்று குறிப்பிடாமல் தச்சன் என்று குறிப்பிட்டது, யோசேப்பின் ஒழுங்கான தொழிலைக் காட்டுகின்றது. இவர் வாழ்ந்த காலகட்டத்தில் ஒழுங்காக தொழில் செய்ததால், மக்கள் மத்தியில் இன்றும் அவர் தச்சராக நினைவில் வாழ்கின்றார்.

2 தெச. 3: 6-15-இல், தூய பவுலடியார் உழைப்பை ஒழுங்கு என்று ஆலோசனைத் தருகின்றார். தெசலோனிக்கேயர் திருச்சபையில் சில மக்களின் நிலைமை; வேலை செய்யாமல், தங்களுக்கு தேவையில்லாத காரியங்களில் செயல்பட்டு, உழைப்பை வீணாக்கினார்கள்

(2 தெச. 3: 11). உழைப்பு நல்ல நோக்கத்தை தரும். மனக்குழப்பத்தையே தரும். எனவே, பவுலடியார், உழைப்பை ஒழுங்கு என்று சுட்டிக்காட்டுகின்றார்.

இயேசுநாதர் "நானும் செயலாற்றுகிறேன்" என்று குறிப்பிடுகின்றார். மாற்கு நற்செய்தியாளர் இயேசுவை "தச்சன்" *(மாற். 6: 3)* என்று குறிப்பிடுகின்றார். தச்சு வேலையில் முக்கியப் பகுதி, வெவ்வேறு மரக்கட்டைகளை ஒன்றிணைப்பது. அப்படிப்பட்ட மரவேலைகளில் ஒன்றுதான் சிலுவை. இரண்டு வெவ்வேறு மரக்கட்டைகளால் ஒன்றிணைக்கப்பட்ட சிலுவையில் மீட்பருளிய இயேசு இன்றும் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்.

பரம தந்தையாம் கடவுள் கற்றுத்தரும் உழைப்பின் மகத்துவத்தை நாமும் வாழ்வின் அனுபவமாக்குவோம். உழைப்பால் உயர்ந்து உன்னதரை உயர்த்துவோம்.

திரு. J.V. ஹேமில்ட்டன்

உணர்வார்ந்த அன்பில் கிறிஸ்துவுடன் நடங்கள்

Walk with Christ in Passionate Love

எரே. 31: 1-6 *எபே. 3: 14-19*
திபா. 63 *யோவா. 21: 15-19*

"ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" (யோவா. 21: 15).

காலை ஆறு மணி இருக்கும், அம்மா மகளிடம் "நீ இந்த வருடம் பள்ளி ஆண்டிறுதி நிகழ்வில் இயேசுவைப்போல் உடையணிந்து நடிக்கவேண்டும்" என்று உணர்வுக்கம் கொடுக்கிறார்கள். பள்ளி ஆசிரியை உடைகள் வாங்க 2500 ரூபாய் என்று சொல்லி அனுப்புகிறார். அம்மாவிடம் 2500 ரூபாய் பெற்றுக்கொண்டு அம்மா நான் இந்த வருசம் நடிக்கவில்லை.இந்த பணத்தை கல்வி கட்டணம் செலுத்தமுடியாமல் தினமும் வகுப்புக்கு வெளியில் துரத்தப்படும் என் உடன் மாணவனுக்கு கொடுக்கிறேன், அம்மா. அவளது துயரம் என்னை உடைக்கிறது என்றாள். அம்மா மகிழ்ந்து அதிர்ந்து போனார்கள். உன்னை இயேசுவைப் போல் நடிக்கச் சொன்னேன். ஆனால் நீ இயேசுவாக வாழ்ந்து விட்டாயே இதுதான் கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலித்து கிறிஸ்துவோடு பயணிக்கும் வாழ்வியல் ஆகும்.

"கிறிஸ்துவுடன் நடப்பவரின் கரிசனைப் பணி" குறித்து இன்றைய திருமறைப்பாடங்கள்நமக்கு கற்றுத் தருகின்றன. இயேசுவின் திருப்பணி அனுபவத்தில் இந்த உக்கிராணத்துவத்தை நாம் உள்வாங்கிக் கொள்ளவேண்டும்.

இயேசு தாம் முன்னறிவித்தப்படியே தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாக உயிர்தெழுந்தார். மறுதலித்து, பின் மாற்றகாரனாய் பரிணமித்த பேதுருவின் மனங்கசந்து அழுத மனமாற்றம் மீண்டும் கிறிஸ்துவுடன் இணைந்து பயணிக்க ஏதுவாயிற்று. மறுதலித்தவரை மறுபடியும் தன்னோடு சேர்த்துக்கொள்ளும் கிறிஸ்துவின் அன்பு, நிகரற்றது, நிரந்தரமானது, நித்தியமானது. கிறிஸ்துவின் அன்பு மனித புரிதல்களுக்கு மேலானது. காட்டிக் கொடுப்பவனை "சிநேகிதனே" என்றார். மறுதலித்து மனமாற்றம் பெற்ற சீமோன் பேதுருவில் புதிய அத்தியாயத்தை துவங்குவது தான் கிறிஸ்துவின் கரிசனைப் பணி என்ற புரிதலை நமக்கு தருகிறது. என் ஆட்டுக்குட்டிகளின், ஆடுகளின் மேய்ப்பனாடு என்ற அறைகூவல் தான் கிறிஸ்துவின் கரிசனைப்பணி.

இயேசுவின் வாழ்வியல் ஒரு சரித்திர சுவடு. சறுக்கல்களும், சவால்களும் மானிடத்தை வழி மாற தூண்டும் போது நானே வழி என்று இயேசுவோடு நடக்கவும், இயேசுவின் கரிசனைகளை நம்மில் பிரதிபலிக்கச் செய்வதுதான் "கிறிஸ்துவுடன் நடக்கும் கரிசனை அன்பு". கருத்தோட்டம் நிறைந்த சிந்தனைகள் இந்த திருமறை பகுதியிலிருந்து (யோவா. 21: 15-18) சிந்திக்கலாம்.

1. குற்றம் சாட்டுதல் அல்ல குணப்படுத்துதலே:

" . . . நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" (யோவா. 21: 15).

தண்ணீரில் நிலையற்று அலசடிப்பட்டு தன் வாழ்வாதாரத்தை தேடிக் கொண்டிருந்த பேதுருவை அழைத்து, நிலையான நிலத்தில் நிலைநிறுத்தி நிலைவாழ்வின் அனுபவத்தை கொடுத்தவர் அருள்நாதர் இயேசு. அழைப்பை ஏற்று அருள்நாதரோடு பயணித்து அருள் நிறைந்த அனுபவங்களை பிரதிபலித்தவர் பேதுரு. கற்பனை பயம், விசுவாச தடுமாற்றம் ஏற்பட்டு மறுதலித்து பின் மாற்றம் அடைந்தவர் இந்த பேதுரு. இத்தகைய இந்த சூழலில் இயேசு பேதுருவை குற்றம்சாட்ட முற்படாமல், நறுங்குண்ட மனதை குணமாக்கும் பணியைச் செய்கிறார்.

வேகமாக பயணிக்கும் இன்றைய சமூக வாழ்க்கை சூழலில் பேதங்களும், பிணக்கங்களும் பெருகிக் கொண்டிருப்பதற்கு காரணம் குற்றம் சாட்டுதலே. குறையில்லா மனிதர்கள் எவரும் இல்லை என்ற மன உணர்வுகளோடு, குற்றம் சாட்டுவதில் எந்த பயனும் இல்லை என்ற உணர்வு நம்மில் பிரகாசிக்க வேண்டும்.

குற்றம் சாட்டப்படவேண்டிய பேதுருவுக்கு மறுவாய்ப்பு கொடுத்து மறுவாழ்வு கொடுக்கிறார். "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் . . ." என்ற அறிக்கையின் அங்கீகாரம் தான் குணப்படுத்தலின் அடையாளமாக அர்த்தப்படுத்தப்படுகிறது.

* இயேசு குற்றசாட்டுகளை தவிர்த்து குணப்படுத்தும் சூழல்கள் யோவா. 8: 1-11; நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை. நீ போ இனி பாவம் செய்யாதே.

* யோவா. 9: 1-12 இவன் குருடனாக பிறந்தது. இவன் செய்த பாவமுமில்லை இவன் பெற்றோர் செய்த பாவமுமில்லை. இறைநாமம் மகிமைப்படும்படி இப்படி பிறந்தான்.

மிஷனரி பயணங்களில் இறைத்தொண்டர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டது. மதம் மாற்றுகிறார்கள் மக்களின் மரபுகளை

மாற்றுகிறார் என்ற குற்றங்கள் சுமத்தப்பட்டபோதும் சுமை தாங்கிகளாய் "சமூகத்தை குணமாக்கும்" (Social healing) பணியை சீரிய முறையில் முன்னெடுத்தனர். இதுதான் "கிறிஸ்துவுடன் நடக்கும் கரிசனைப்பணி" என்பதாகும். குற்றம்சாட்டுவது அல்ல குணப்படுத்துவது.

2. புறம்தள்ளுவது அல்ல புத்தாக்கம் செய்வதே (கிறிஸ்துவுடன் நடப்பவரின் கரிசனைப்பணி):

". . . என் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்" (யோவா. 21: 15)

புறம் தள்ளி மறுதலித்தவர் பேதுரு. நான் இவனை அறியேன் என்று சபிக்கவும், சத்தியமும் செய்தவர். ஓரே நாவிலிருந்து இரண்டு விதமான அறிக்கைகள். ஒன்று, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. மற்றொன்று, மறுதலித்தது மட்டுமன்றி, மீன் பிடிக்கபோகிறேன் . . . என்பது, இதுவே திசை அல்ல. அருள்நாதர் அழைக்கும் திசையில் செல்வதுவேயாகும். இதுவே ஆன்மீக முதிர்ச்சியின் அடிப்படை அம்சம் ஆகும்.

கிறிஸ்துவுடன் கரிசனையுடன் நடப்பது . ..

* குற்றம் சாட்டுவது அல்ல, குணப்படுத்துதலே . . . (It is not about blaming, but about healing).

* புறம் தள்ளுவது அல்ல, புத்தாக்கம் செய்வதே. (It is not about Casting away, but in creation anew).

*சுய சித்தம் அல்ல, இறை சித்தம் செய்வதே (It is not my will, but God's will be done).

3. சுயசித்தமல்ல இறைச்சித்தம் செய்வதே:

நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக் கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் . . . உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது . . . *(யோவா. 21: 18).*

இயேசு பேதுருவிடம் கூறிய அர்த்தமுள்ள ஆன்மீக உண்மையும், ஆன்மீகத்தை கட்டமைக்கும் தீர்க்க தரிசனமுமான இந்த வார்த்தை ஆழமான அறிவுறுத்தல்களை தருகிறது. கிறிஸ்தவ சீடத்துவத்தின் உண்மையான விலையை உணர்த்துகிறது. பேதுருவின் எதிர்கால வாழ்க்கை முறை மற்றும் சந்திக்க வேண்டிய தியாக வாழ்வியலையும் கற்று தருகிறது.

பேதுருவை குற்றப்படுத்தாமல் குணப்படுத்துதலின் அடையாளமாக அன்பு கூருதலை அறிவுறுத்துகிறார். ஆன்மீக அறிவுறுத்தல்களை

கற்றுக்கொடுக்கும் பணிகளை வலியுறுத்தி மேய்ப்பு பணிக்காக அழைக்கிறார். சுயசித்தம் இறையரசை கட்டமைப்பு செய்ய பயணிக்க ஊக்கப்படுத்தும் என்ற உண்மைகளை சிந்திக்கச் செய்கிறது.

கிறிஸ்துவுடன் கரிசனையோடு நடப்பது என்பது நாம் விரும்பியதை செய்வது அல்ல. இயேசுநாதர் விரும்புவதை செய்வதேயாகும். நாம் செய்ய விரும்பும் உணர்வூக்கம் தந்து செறிவூட்டிய இந்த பேதுருவின் போதனை, உடனிருந்தவர்களையம் இயேசுவை புறந்தள்ள தூண்டியது. ஆனால் இயேசுவின் அன்பு, புறம்தள்ளியவர்களையும் புத்தாக்கம் செய்து அருட்பணியாளராக்கியது இயேசுவின் மாதிரியாகும்.

எந்த பாவியாயினும் தள்ளமாட்டாதவர் கிறிஸ்து இயேசு. 99 ஆடுகளை ஒருங்கிணைத்து பாதுகாப்பாய் விட்டுவிட்டு, ஒரு ஆடு தனிமைபடுத்தப்பட்டதை கண்டு பரிதபித்து பாதுகாக்க விரைந்து சென்று கரிசனையை போதித்தவர் அருள்நாதர் இயேசு. புறக்கணிக்கப்பட்டிருந்த சமூகத்தை நற்செய்தியால் மிஷனரிகள் புத்தாக்கம் செய்து புனரமைத்தனர். இருளில் இருந்த, உரிமைகளை இழந்து கொண்டிருந்த மாபெரும் மக்கள் கூட்டமைப்பு புத்தாக்கம் பெற்று மறுரூபமாக்கப்பட்டனர். இறைசாயலை அணிந்து இறைவன் தங்கும் ஆலயமாயினர்.

* கிறிஸ்தவர்களை துன்பப்படுத்திய சவுல்- புறந்தள்ளப்படவில்லை - புத்தாக்கம் செய்யப்படுகிறார் (திப. 9)

* ஒநேசிமு - பவுல - பிலமோன்; இந்த சம்பவத்தில் புறந்தள்ளப்பட வேண்டிய ஒநேசிமு-புத்தாக்கம் பெறுகிறார்.

விசுவாச வாழ்வின் துவக்க நிலையில் இருப்போரை, ஆட்டுக்குட்டிகள் என்ற சொல்லாடல் நமக்கு ஒரு ஆன்மீகப் புரிதலை தருகிறது. விசுவாச வீரியமில்லாத இனம் விசுவாச கூட்டத்திற்கு மேய்ப்பனாகும் போதிக்கும் பணியை முன்னெடுக்க அருள்நாதர் அறைகூவல் தருகிறார்.

அருள்திரு. முனைவர் R. பிரின்ஸ் வேதமாணிக்கம்

உயிர்த்த கிறிஸ்து: என்றென்றும் உடனிருப்பதற்கான உறுதிப்பாடு

Risen Christ: Assurance of Everlasting Presence

எசா. 41: 8-13 *எபி. 13: 1-8*
திபா. 110 *மத். 28: 16-20*

" . . . இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத். 28: 20).

நான்கு நற்செய்தி நூற்களும் நமக்குத் தரும் நம்பிக்கையின் நற்செய்தி என்னவென்றால் இயேசு உயிர்த்துவிட்டார் என்கின்ற நல்ல செய்தியாகும். நான்கு நற்செய்தியாளர்களும் இயேசுவின் உயிர்ப்பைக் குறித்து தங்களுக்கே உரித்தான மொழிநடையிலும் விசுவாசத்திலும் வெளிப்படுத்துகிறார்கள்.

அத்தோடு அவர்கள் தருகின்ற நம்பிக்கைின் வாசகம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் உடனிருப்பு. ஏதோ அவர் இறந்துவிடடார் என்று அல்லாமல் அவர் நம்முடன் வாழும் கடவுள் என்பதை எடுத்தியம்புகின்றனர்.

உடனிருத்தல் என்பது உடன் இருப்பது, உடனேயே இருப்பது அல்லது பக்கத்தில் இருப்பது என்பதைக் குறிக்கும். இது ஒருவருடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நெருக்கமாக இருப்பதைக் குறிக்கலாம். அருகில் இருப்பது மருத்துவமனை போன்ற இடங்களில் ஆபத்து ஏற்பட்டால் கவனிக்க ஒருவர் உடன் இருப்பது அவசியம். அது அன்பின் வெளிப்பாடு. ஒருவரைவிட்டு விலகி இருந்தாலும் அவர்கள் உடனிருக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தலாம்.

நமக்குத் தரப்பட்டுள்ள நான்கு திருமறைப் பாடங்களிலும் உயிர்த்த கிறிஸ்துவின் உடனிருத்தலை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ளமுடியும்.

1. மெல்கிசேதேக்கின் முறையின்படி உடனிருக்கும் உயிர்த்த கிறிஸ்து:

மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்; அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார் *(திபா. 110: 4; எபி. 5: 6; 6: 20; 7: 17-21).*

திபா. 110 திருப்பாடல்களில் உள்ள ஒரு மாட்சிமை பொருந்திய உயர்ந்த திருப்பாடலாகக் கருதப்படுகிறது. இது சிறையிருப்புக்கு முந்தைய அரசு மாட்சிப் பாடல் ஆகும். இந்தத் திருப்பாடல் மெசியா திருப்பாக்களின் முத்து என்று அழைக்கப்படுகிறது. இப்பாடல் தாவீதால் எழுதப்பட்டது என்றும், சில அறிஞர்கள், தாவீதைப்பற்றி அரசவை புலவர்

ஒருவரால் அல்லது இறைவாக்கினர் நாத்தான் என்பவரால் எழுதப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இந்தத் திருப்பாடல் தாவீதைப் பற்றியோ அல்லது அவர் மரபில் வந்த வேறொரு அரசரைப் பற்றியோ பாடப்பட்டிருந்தாலும் மறுபக்கம் என்ற முறையில் இது இயேசு கிறிஸ்துவுக்கு முழுக்கப் பொருந்தி அமைகிறது. எதிர்காலத்தில் வரவிருக்கும் மெசியாவில் நிறைவேறும் என்பதனை எண்ணிப் பாடப்பட்டிருகலாம் (மத். 22: 41-45; மாற்கு 12: 35; லூக். 20: 41, 42).

திபா. 110: 4-இல் மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றைக்கும் குரு (தொநூ. 14: 18-20) இங்கு ஆரோன் வழிமுறையில் வந்தத் திருப்பணி கால வரையறைக்கு உட்பட்டது. ஆனால் மெல்கிசெதேக் வழியாக வந்த திருப்பணியோ என்றென்றுமுள்ளது. ஆரோன் வழி மரபு குருத்துவத் திருப்பணி யூத இனத்தாருக்கு மட்டுமே உரியது. அதே வேளையில் மெல்கிசெதேக் வழி வந்த திருப்பணியோ புறவினத்தாருக்கு, ஏன் அனைவருக்கும் உரியத் திருப்பணி. மெல்கிசெதேக் என்ற பெயர் நீதியின் அரசர், நேர்மையுள்ள அரசர் என்று பொருள்படும். இயேசு கிறிஸ்துவும் மெல்கிசெதேக்கின் முறைப்படி உடனிருந்து நீதியையும் நேர்மையையும் நிறைவேற்றுவார்.

2. துணை தந்து உடனிருக்கும் உயிர்த்த கிறிஸ்து:

ஏனெனில் நானே உன் கடவுளாகிய ஆண்டவர், உம் வாக்கையைப் பற்றிப்பிடித்து, அஞ்சாதே உனக்குத் துணையாய் இருப்பேன் என்று உன்னிடம் சொல்பவரும் நானே (எசா. 41: 13).

இரண்டாம் எசாயா ஆறுதலின் தீர்க்கர் எனப்படுகின்றார். சிறையிருப்பின் மக்களுக்கு கூறப்படுகின்ற ஆறுதல் மொழிகளை எசாயா 40-50 வரை உள்ள அதிகாரங்களல் காணலாம். இங்கு அழிவைக் காட்டிலும் ஆறுதலையும் நீதியைக் காட்டிலும் அருளையும் வலியுறுத்துகின்றார்.

ஆண்டவர் உங்களுக்குத் துணை நிற்கிறார். ஆகையால், பயப்படாதிருங்கள். உயிர்த்த கிறிஸ்து பயப்படாதே என்று கூறுவது ஒருபுறம் கட்டளையாகவும் மறுபுறம் வாக்குறுதியாகவும் காணப்படுகிறது. கவலைகளும் பாரங்களும் ஆட்கொள்ளும்போது, அதுவோ நம்மை பயம் கொள்ளும்படி செய்கிறது.

எதிர்காலத்தைக் குறித்த பயங்கள் அநேகரைக் கலங்கச் செய்கிறது. இஸ்ரயேல் மக்களும் சிறையிருப்புக் காலத்தில் மிகுந்த கலக்கத்தோடும் வேதனையோடும் இருந்தார்கள். ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி நான் உனக்குத துணை நிற்கிறேன்.

இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரித்து உயிர்தெழுந்த பின்னர் மாட்சியுடன் தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். இது போலத்தான் நமது வாழ்விலும், கோதுமை விதையானது மண்ணிலே

விழுந்து மடிந்தால் தான் பலன்தரும். சந்தனக்கட்டையை அரைத்து பொடியாக்கி தண்ணீரில் கலக்கும்போது மணம் வீசுகிறது. தங்கத்தைப் புடமிடும்போது நல்ல ஆபரணங்களை உருவாக்க முடியும். அது போலத்தான் நமது வாழ்வில் துன்பமின்றி இன்பம் இல்லை. பாடுகள் இன்றி மாட்சிமை இல்லை. எனவே உயிர்த்த கிறிஸ்து துன்ப வேளையிலும் துணை தந்து நம்மை மாட்சிப்படுத்துவார்.

3. வாக்கு மாறாமல் உடனிருக்கும் உயிர்த்த கிறிஸ்து:

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி. 13: 8).

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் என்கின்ற திருவசனம் அவருடைய நிலைத்தன்மையைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் குணம், பண்பு, அன்பு மற்றும் அவருடைய வார்த்தைகள் எப்போதும் மாறாதவை என்பதைக் காட்டுகிறது. இந்த வசனம் அவரைப் பின்பற்றுகிற எல்லா மக்களின் வாழ்விலும் ஒரு பெரிய ஆறுதலையும் அமைதியையும் தருகிறது.

நவீன உலகில் பல வாக்குறுதிகளை நம்பிக்கையோடு தருகின்றவர்களும் வாக்கு மாறுகின்றனர். அப்படி மாறும்போது மானிட வாழ்வில் பல வருத்தங்களும் வேதனைகளும் வருகிறது. ஆனால் நம்மைப் படைத்த ஆண்டவர். நமக்காகத் தன் உயிரைத் தந்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்றென்றும் வாக்கு மாறாதவர். எனவே எத்தகைய சூழல்களிலும் நாம் கவலைப்பட வேண்டாம்.

இயேசு கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நமக்கு உற்ற துணையாயிருக்கிறார். ஏனெனில் அவரே முதலும் முடிவும் (திவெ. 1: 17) அவரே, நம் நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவரும் அவர் மீது நம் கண்களைப் பதிய வைப்போம் (எபி. 12: 2).

4. நம்முடன் வாழும் உடனிருக்கும் உயிர்த்த கிறிஸ்து:

இதோ, உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்று கூறினார் (மத். 28: 20).

இயேசு கிறிஸ்து மூன்றரை ஆண்டுகள் இரவும் பகலும் கடினமாக உழைத்து இறையரசுக்குப் பணி ஆற்றினார். உவமைகள், புதுமைகள், போதனைகள், துன்பங்கள் வாயிலாக மக்களுக்கு இறைப்பணியாற்றினார். மேலும் தனக்குப்பின் தம் சீடர்களும் தம்மைப் பின்பற்றுகிறவர்களும் இம்மாபெரும் பணியை செய்ய வேண்டும் என்பதே அவருடைய விருப்பம்.

எனவே, இயேசு சொன்னது, உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மாற்கு 16: 15).

அது மட்டுமல்லாமல் உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்றும் கூறினார் (மத். 28: 20).

நிறைவாக, கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு தொடர் ஓட்டம். இந்தத் தொடர் ஓட்டத்தில் ஒருவர் ஓடி முடிந்தபின் மற்றொருவர் அவரிடமிருந்து கொடிக்குச்சியை வாங்கிக் கொண்டு ஓடவேண்டும். இந்த தொடர் ஓட்டத்தில் ஒருவர் சரியாக ஓடாவிட்டாலும் ஒட்டு மொத்த வெற்றிக்கனியைப் பெற்றுக் கொள்ள முடியாது. அதுபோல இந்த உலகத்தின் வாழ்க்கைப் பயணத்தில் நாம் ஓடிக்கொண்டிருக்கும்போது உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் உடனிருப்பு மிக அவசியமாகும். இயேசு கிறிஸ்துவின் பணி-வாழ்வு-பாடு-மரணம் முடிந்த பின் அவரது பணியைத் தொடர்ந்து செய்ய இன்று நாமும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். நாம் இந்தப் பணியைச் சரியாகச் செய்ய இயேசு கிறிஸ்துவின் உடனிருத்தலை எப்போதும் உணர்ந்து செயல்பட அழைக்கப்படுகின்றோம்.

அருள்திரு. அறிவர் K. பிறின்ஸ்குமார்

இயன்ற வழிகளிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தல்

Proclaim the Good News: By Every Means Possible

எசா. 52: 7-15 *1 கொரி. 9: 19-23*
திபா. 96 *மாற்கு 16: 14-20*

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16: 15).

தொடர்பு என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தகவல்களைக் கடத்துவதாகும் (George A Miller - Communication means information is passed from one place to another).

அரிஸ்டாட்டில் கருத்துப்படி, ஒரு பேச்சாளர் ஒரு பார்வையாளருக்கு ஒரு செய்தியை அனுப்புகிறார். மேலும் பெறப்பட்ட செய்தியால் பார்வையாளர் தாக்கம் பெறுகிறார் (According to Aristotle a Speaker sends a message to an audience and the audience is affected by the message received).

நற்செய்தி என்பது இறைத்திட்டத்தை மிகவும் தெளிவுடனும், உறுதியுடனும் வெளிப்படுத்தும் உன்னத ஊன்றுகோல். இறைவர் தமது விருப்பத்தைத் தம் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவின் வழியாக இவ்வுலகில் நிறைவேற்றினார். இயேசுவின் நற்செய்திப் பணி பெரும் மாற்றங்களை அன்றைய இயேசுவின் காலச்சமூகத்தில் ஏற்படுத்தியது. உயிர்த்த கிறிஸ்துவால் நற்செய்தி பறைசாற்ற அனுப்பப்பட்ட சீடர்கள் கிறிஸ்துவின் ஆற்றல்மிகு செயல்களையும் அனுபவங்களையும் இவ்வுலகில் பறைசாற்ற முற்பட்டனர்.

இயேசுவின் நற்செய்திப் பணி யோர்தான் நதிக்கரையில் தொடங்கியது (மத். 3: 15) கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை என்னும் திருவார்த்தையுடன் சிறப்புற நற்செய்தியைப் பறைசாற்றி லூக். 4: 18, 19-ஆம் திருமொழியில் ஆண்டவரின் ஆவியாரின் பேராற்றலுடன் ஏழைகள், சிறைப்பட்டோர், பார்வையற்றோர், ஒடுக்கப்பட்டோர் போன்ற எல்லாத் தரப்பினரும் சிறப்புற வாழ்ந்திட தம் மகனையே தந்து (யோவா. 3: 16) அவர் துன்புற்று (லூக். 24: 26). இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து (லூக். 24: 26) தமது வல்லமையால் இவ்வுலகில் நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள் என்று அனுப்பினார்.

அருட்பணி கடவுளின் இதயத்தில் இருந்து தொடங்கி அது மனிதனின் இதயத்தில் முடிகிறது. (Ralph Winter - Mission begins from the heart of God and ends in the heart of man). இங்கே நற்செய்தி என்பது இறைவரின் இதயத்தை மானிட இதயத்துடன் இணைக்கும் உறவின், ஒன்றிப்பின் தொடர்புப் பாலம் ஆகிறது.

உயிர்த்த கிறிஸ்து அளித்த பெருங்கட்டளை என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று அல்ல அது கீழ்ப்படிய வேண்டிய ஒரு கட்டளை. இது தொடர்பின் உறவு சார்ந்த உன்னதக் கட்டளையே. (Hudson Taylor - The great Commission is not an option to be considered; it is a command to be obeyed). இறைவருக்கும் படைப்பு அனைத்திற்கும் புதிய உறவை ஏற்படுத்துகிறது. உயிர்த்த கிறிஸ்து தம் சீடர்களை உணர்வுடன் உற்சாகமூட்டி அனுப்புகிறார். நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்றார் (மத். 28: 16-20, லூக். 24: 36-49, யோவா. 20: 19-23, திப. 1: 6-8).

போதிப்பது என்பது இறைஉண்மையின் தொடர்பு. அது மானிடர் வழி வெளிப்படுத்தப்படுகிறது. (Philip Brooks - Preaching is considered the communication of divine truth through the medium of human beings).

இயன்ற வழிகளில் நற்செய்தினால் பறைசாற்றுதல் குறித்துக் காண்போம்.

1. அனுப்புகிறார்: (மாற்கு 16: 15)

கடவுளுக்கு ஒரே ஒரு மகன் மட்டுமே இருந்தார். அவரை அவர் அருட்பணியாளராக்கினார். (David Livingstone - God had only one Son and He made Him a missionary).

முடங்கிப்போய் இருந்தவர்கள் உயிர்ப்பின் செய்தியால் உணர்வு பெற்றனர். ஆனால், முழுமையாய் நம்பவில்லை (மாற்கு 16: 11). கிறிஸ்து மறுபடியும் தாம் சீடர்களை சந்தித்து உயிருடன் எழுப்பப்பட்ட தம்மை கண்டவர்கள் சொன்னதையும் நம்பாமல் அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால் அவர் அவர்களுடைய நம்பிக்கையின்மையை கண்டித்தார் (மாற். 16; 14). இங்கே கிறிஸ்து கற்பிக்கிறார், உயிர்ப்பின் செய்தி என்பது தனி நபருக்கோ அல்லது குறிப்பிட்ட குழுவினருக்கோ உரியது அன்று. இது உலகிற்கு உரியது. தமது உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் ஆழப்படுத்தி பயம் அகற்றி துணிவைத்தந்து அனுப்புகிறார். உலகெங்கும் சென்று (Go into all the world) என்ற வார்த்தை கூறுவது என்னவெனில், இது கிறிஸ்துவின் உலகளாவிய அருட்பணியின் தாகம். பூமியில் உங்களுக்கு ஒரே ஒரு வேலை இருக்கிறது. அது ஆத்துமாக்களை மீட்பது (You have one business on Earth to save souls) என்கிறார் ஜாண் வெஸ்லி.

கிறிஸ்து உலகெங்கும் சென்று என்று நற்செய்தியைப் பறைசாற்றக் கூறுவதன் உண்மைப் பொருள் என்னவெனில், நற்செய்தி என்பது குறிப்பிட்ட குழுவினருக்கோ நாட்டினருக்கோ மொழியினருக்கோ, சமூகத்தை சாரந்தவருக்கோ அல்ல, உலகம் அனைத்திற்கும் உரியது நற்செய்தி என்பதைக் குறிப்பிடுகின்றார். நாமும் உலகிற்கு நற்செய்தி அறிவிக்க கடமைப்பட்டுள்ளோம். தினமும் அதற்காக ஆயத்தப்படுவோம்.

2. அறிவுறுத்துகிறார்: *(மாற்கு 16: 15)*

படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்ப்பார். கடவுளுக்காக பெரிய காரியங்களை முயற்சி செய் (Expect Great things from God; attempt great things for God) என்கிறார் வில்லியம் கேரி.

நற்செய்தி அனைவருக்கும் உரியது என்று கூறிய கிறிஸ்து. இது மானிடருக்கு மட்டும் உரியது அல்ல, கடவுளின் அனைத்துப் படைப்புகளுக்கும் உரியது என்று கூறுகிறார்.

கிறிஸ்துவின் நற்செய்தி படைப்புகள்- மானிடர்-படைப்பாளர் இடையே ஒரு நல்ல தொடர்பையும் உறவையும் ஏற்படுத்தி ஒன்றிக்கச் செய்கிறது.

'Keryxate' என்ற கிரேக்கச் சொல்லுக்கு அறிவித்தல் என்று பொருள். (to Proclaim or announce of publicity).

நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் படைப்பு அனைத்தும் விடுதலைக்காக காத்திருக்கிறது. படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது (உதோ. 8: 22) என்று பவுலார் கூறுகிறார்.

இங்கே படைப்பு என்பது மானிடர் மட்டுமல்ல ஏனைய அனைத்துப் படைப்புகளையும் குறிக்கிறது (உரோ. 8: 20). இவை மனிதரின் வாழ்வுடன் நெருங்கிய தொடர்பு உடையன. மனிதர் உயர்வடையும்போது அவை உயர்வடைந்து அவர்கள் வாழ்கின்ற போது, படைப்புகளும் வாழ்கின்றன என்று யூத மக்கள் நம்பினர். இது தொநூ. 1: 26-28; 3: 17-19 போன்ற விவிலியப் பகுதிகளின் அடிப்படையில் எழுந்த நம்பிக்கையாகும். பேறுகால வேதனை என்பது மேசியா காலத்தில் தீமைக்கு எதிராக முழு வெற்றியை அடைய உலகம் எதிர்கொள்ளும் துன்பங்களாகும்.

இன்று திருச்சபையின் பணி படைப்புகள் அனைத்துடனும் இணைந்து பயணிப்பது அவற்றை பண்படுத்திப் பாதுகாப்பது என்பது முக்கியமானதுவே. நற்செய்தி என்பது உலகத்தில் இருந்து தப்புவது அல்ல மாறாக உலகை மாற்றிட முயல்வது (The Gospel is not an escape from the World but transformation of it) என்கிறார் பேராயர் லெஸ்லி நியூபிகின். படைப்பு அனைத்திற்கும் நற்செய்தி கிடைக்கும் போது இவ்வுலகம் கடவுளின் உலகம் என்பது உண்மையென விளங்கும். இன்றைய திருச்சபை இதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

3. அதிகாரப்படுத்துகிறார்: *(மாற்கு 16: 16)*

நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெறுவோர் மீட்பு பெறுவர்.

நமது பணி சமயம் மாறுபவர்களை உருவாக்குவது அல்ல; சீடர்களை உருவாக்குவது (our task is not to make converts, but to make disciples) *என்கிறார் டீட்ரிச் போனஹோஃபர். சீடர் என்பவர் பின்தொடர்பவர், கிறிஸ்து என்னும் குருவிடம் அதிகாரம் பெற்று மீட்புப் பணிவிடையை முழுவீச்சுடன் நிறைவேற்றுவது நல்ல சீடருக்கு சான்று ஆகின்றது. மீட்பு கிறிஸ்துவிடம் அவரது அருளால் பெறுவதாகும் (எபே. 2: 8).*

மீட்பு என்பது அனைவருக்கும் உரியது. அவரவர் கொள்ளும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் அது செயல்வடிவம் பெறுகின்றது. நம்பிக்கை கிறிஸ்துவைப் பின் தொடருபவரின் வாழ்வுக்கு மிகவும் அடிப்படையாக உள்ளது.

அருளுரை என்பது நற்செய்தி அறிவிப்பு ஆகும். அறிவிக்கப்பட்ட செய்தி மீட்பின் நற்செய்தியாகும். (Preaching is the herealding; the message proclaimed is the glad tidings of salvation).

நாம் அறிவிக்கின்ற நற்செய்தியால் ஏற்படும் தொடர்பு மாற்றத்தை புரிந்து கொண்டு மீட்பின் அனுபவம் பெற்றிடவும் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி நற்செய்தியை மிகவும் துணிவுடன் நாம் வாழும் பல்சமயச் சூழலில் உறவின் உறுதியாய் அறிவிக்கவும், அறிவுறுத்தவும் துணிவுடன் புறப்படுவோம்.

அருள்திரு. S.S. ஆல்பின் டேவிட்ராஜ்

தூய ஆவியார்:
உள்ளுறையும் உடனிருத்தலின் உறுதிமொழி

Holy Spirit: Promise of the Indwelling Presence

எசா. 59: 14-21 *எபி. 10: 8-18*
திபா. 143 *யோவா. 14: 15-21*

"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்." (யோவா. 14: 16).

விமானத்தில் பயணம் செய்யும்போது அதன் நிபந்தனைகளை விமானம் புறப்படும்முன் விமானப் பணிப்பெண்கள் கூறுவர். பலமுறை பயணித்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அது பெரும் ஆபத்தாக முடியும். அதைப்போல நாம் ஆண்டவருக்குள்ளாகப் பயணிக்கும்போது இறைவன் நமக்குத் தந்த உறுதிமொழிகள் அனைத்தையும் அனுதினமும் நம் நினைவிற் கொண்டு தூய ஆவியாருடைய துணையோடு கருத்தாய் கைக்கொண்டு வாழ வேண்டும்.

வாக்குறுதி என்பது குடும்பங்கள் இணைகிறபோது ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதாகும். இருநபர்கள் இணைந்து சாதனைகள்புரிய ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது. இரு நாடுகள் இணைந்து முன்னேற்றமான பணிகள் நிறைவேற்ற ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது. திருமறையிலும் இறைவர் தம் மக்களோடும் மனிதர்கள் மனிதர்களோடும் செய்து கொண்ட வாக்குறுதிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து இயேசுவில் மீட்கப்படுகிறவர்கள் தொடர்ந்து தூய வாழ்வில் நிலைத்திருக்க எப்பொழுதும் நம்மோடு நிறைவாயிருக்கிற உண்மையை வெளிப்படுத்தும் துணையாளரைத் தருவேன் என்ற உறுதிமொழி சிறப்பானது.

1. தூய ஆவியார் நம்மோடிருப்பவர்:

உங்களோடு என்றும் இருக்கும்படி . . . (யோவா. 14: 16)

தூய ஆவியார் நம்முடன் இருக்கும்போது ஒரு புது வாழ்வு பிறக்கிறது. விதைக்குள் இருக்கும் புதுச்செடி அதற்குரிய தன்மையடையும்போது புது உயிர்பெற்று வருவது போல் தூய ஆவியார் நம்மோடிருக்கும் போது புது வாழ்வு மலர்கிறது. யோவா. 14: 23-இல் இறைவார்த்தையைக் கைக்கொண்டால் தூய ஆவியார் நம்மில் குடிகொள்வார்.

தூய ஆவியாரின் துணையில்லாமல் கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சி செய்வது காது இல்லாமல் கேட்பதற்கும் நுரையீரல் இல்லாமல் சுவாசிக்கவும் முயல்வதாகும் என்கிறார் D.L. மூடி. மேலும் ஒரு மனிதரில் கடவுளின் தூய தன்மையை இணைக்கின்றபோது தூய ஆவி என்னும் இறைஇயல்பு வெளிப்படுகிறது. இத்தூய ஆவி நம் அனைவரையும் ஆட்கொண்டு நம்மை பாவ வாழ்வுக்குச் செல்லாதபடி பாதுகாத்து தூய வாழ்வுக்குத் தகுதிப்படுத்தும் துணையாளராகக் காணப்படுகிறது. தூய ஆவியார் உள்ளிருப்பதால் ஆவியின் கனி வெளிப்படுகிறது என்று தூய பவுலார் குறிப்பிடுகிறார் *(கலா. 5: 22-26).*

தூய ஆவி நமக்குள் இருக்கும்போது அது நம் செயல்களில் வெளிப்படும். தூய ஆவியின் துணையோடு நன்மையானவைகளைச் செய்ய ஆண்டவர் நம்மை அனுப்புகிறார் *(யோவா. 20: 19-23).*

தூய ஆவியின் செயல்பாடு எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் புதிய வாழ்வு பிறக்கிறது. ஆவியார் நமக்குள் செயல்பட நாம் இடம்கொடுக்க வேண்டும். பெந்தக்கோஸ்து நாளில் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் ஒன்றாய் ஒரேமனத்துடன் கூடியிருந்தபோது தூய ஆவியார் அவர்களுக்குள் செயல்பட்டார் *(திப. 2: 14-47).*

2. தூய ஆவியார் நம் துணையாளர்:

" . . . மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்" (யோவா. 14: 16).

தூய ஆவியார் நம் துணையாளராயிருக்கும்போது புது வரங்கள் நமக்குப் பகிரப்படுகின்றன. மேலும், ஞானம், மெய்யுணர்வு, துன்பம் மற்றும் வேதனை மேற்கொள்ளும் ஆற்றல், விசுவாச மறையுண்மைகளைப் புரியும் அறிவு, பக்தி, தெய்வபயம் இவைகளை நமக்குப் பகிர்ந்தளிக்கிறது *(யோவேல் 2: 28).*

தூய ஆவியாரை துணையாளராகக் கொண்டு உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கப் பெற்றவர்கள் படிப்படியாகத் தமக்கு வெளிப்படுத்தப்படும் உண்மைகளை எண்ணி நம்பிக்கை கொள்வர்.

தனிப்பட்ட வாழ்வில் நம்மைத் தூய ஆவியார் ஆயத்தப்படுத்துகின்றார். தூய ஆவி நம்மில் வந்து பாவம், நீதி, நியாயத் தீர்ப்பு இவற்றை உணர்த்துவார். இறைவன் முன்னிலையில் நம்வாழ்வை உணர்ந்து தூய ஆவியின் வழி நடத்துதலுக்கு ஒப்புக்கொடுக்கத் துணை செய்கிறது.

உண்மையை வெளிப்படுத்தும் ஆவி வரும்போது உண்மை வாழ்விற்குள் நம்மை நடத்துவார். *(யோவா. 14: 17)*-இல் உண்மையை வெளிப்படுத்தும் ஆவியாரை அறிந்து அவர் காட்டும் வழியில் நடந்துகொள்வது ஒரு விசுவாசியின் அடையாளம்.

தூய ஆவியார் உள்ளுறையும் உடனிருப்பால் வாழ்க்கை மாறும்.

தூய ஆவியினாலேயன்றி இயேசுவே ஆண்டவர் என்று ஒருவரும் அறிக்கையிட முடியாது (1 கொரி. 12: 23).

சீனாய் மலையில் உடன்படிக்கை வேளையில் ஆண்டவர் கார்மேகத்தில் ஆவியார் வாயிலாக வந்தார் (விப. 19: 9).

தூய ஆவியின் துணையோடு கிறிஸ்துவுக்குச் சான்றாய் மாறி இறைவர் காட்டும் தூய உள்ளத்தோடு வாழ்வோம் (2 திமொ. 1: 7).

ஆவியார் உள்ளில் இருக்கும்போது யோவா. 16: 8-இல் கூறுகிறபடி அவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதித்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

தூய ஆவியார் தரும் உள்ளுறையும் உடனிருப்பின் உறுதிமொழி அனுகூலமானது. யோவா. 14: 16-இன்படி இத்தூய ஆவியார் எப்பொழுதும் துணையாக இருப்பவர். அவர் நம்மோடும் நமக்குள்ளும் இருப்பவர். நாம் சுவாசிக்கும் காற்று எப்படி நமக்குள் மறைந்திருக்கிறதோ அப்படியே தூய ஆவியாரும் நமக்குள் இருந்து நம்மை உயிருள்ளவர்களாக மாற்றுகிறார் (திப. 2: 2-3). மேலும் தூய ஆவி புறாவைப் போல கபடற்றவர்களாகவும், நம்மை அடிமைகளாக அல்ல, கடவுளின் பிள்ளைகளாகவும் மாற்றுகிறது (கலா. 4: 6-7).

3. தூய ஆவியார் தந்தையால் அருளப்பெற்றவர்:

" . . . தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்" (யோவா. 14: 16)

தூய ஆவியின் வருகை அனைத்தையும் உருவாக்கும். பாவிகளாகிய நம்மைப் புனிதப்படுத்தும். சாவிலிருந்து நமக்கு விடுதலை கொடுத்து மீட்கும். சமத்துவ உலகைப் படைக்கத்தூண்டும். தூய ஆவியை தந்தை பகிர்ந்தளித்ததால் உலகம் தோன்றினது. நாமும் அவர் சாயலில் தோற்றுவிக்கப்பட்டோம். உலகம் பிறக்கிறதற்கு தூய ஆவியின் செயல்பாடு மிக முக்கியமானதாக இருந்தது (தொநூ. 1: 2). தூய ஆவி தண்ணீர் மீது அசைவாடின போது உருவமற்ற வெறுமையான உலகில் படைப்புகள் வெளிவந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் உயிரடையச் செய்வதற்கு தூய ஆவியின் செயல்பாடு மிக அதிகமாக இருந்தது. எசே. 37: 5, 6-இல் இறைவன் ஆவியை பொழிகிறபொழுது உலர்ந்த எலும்புகள் உயிரடைதன. கிறிஸ்துவின் பிறப்பில் தூய ஆவி வெளிப்பட்டது (மத். 1: 18-25). உலகைச் சிலுவையின் வழியாக மீட்பதற்கு மானிட மகன் தோன்ற தூய ஆவியார் துணையாக இருந்தார். திருச்சபைகள் தோன்ற தூய ஆவியின் செயல்பாடு இருந்தது (திப. 2: 1-11). பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியின் துணையால் திருச்சபைகள் தோன்றின.

எங்கே தூய ஆவியின் நடத்துதல் உண்டோ அங்கே புதிய பிறப்பு உண்டு. கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல என்கிறார் பவுல். ஒவ்வொரு மானிடரும் இறைவரிடம் பின்வருமாறு இறைவேண்டல் ஏறெடுக்கவேண்டும் :

"உம் தூய ஆவியை என்னில் தந்து என்னை ஒளிரச்செய்யும்
அனுதினமும் என்கடமை என்னவென்று எனக்குக் காட்டும்
என்ன நேர்ந்தாலும் அதை நிறைவேற்றிட உம் தூய ஆவியைத் தாரும் என்று வேண்டுவோம்.

பாடல் : வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே வாக்குமாறா உண்மை நாதரே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம் வல்ல ஆவி மாரி ஊற்றுமே.

அருள்திரு. G. சதிலால் விஜின்

வெந்தக்கோஸ்து: இரைச்சல் மிகுந்த உலகில் கடவுளின் குரலைக் கேட்டல்

Pentecost: Hearing God's Voice in a Noisy World

1 அர. 19: 11-18 *திப. 2: 1-13*
திபா. 29 *யோவா. 20: 19-23*

"அவர்கள் அனைவரும் தூய அவியால் ஆட்கொள்ளப்பட்டனர்."
(திப. 2: 4)

பெந்தக்கோஸ்து பண்டிகை கிறிஸ்தவ திருச்சபை வாழ்வில் மிக முக்கியமான பண்டிகை இயேசுவின் மரணத்திற்கு பின் அவரது சீடர்கள் யூதர்களுக்கு பயந்து மறைந்து வாழ்ந்த நிலையில், உயிர்த்தெழுந்த ஆண்டவராய் நாற்பது நாட்களாக அவர்களுக்கு முன்பாகத் தோன்றி, இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார். அதோடு பல தெளிவான சான்றுகள் வாயிலாக தாம் உயிரோடிருப்பதை அவர்களுக்கு காண்பித்தார் (திப. 1: 3). மேலும் தூய ஆவியாரைப் பற்றிய கடவுளின் வாக்குறுதி நிறைவேற எருசலேமில் காத்திருக்க அறிவுறுத்தியதோடு, தூய ஆவி அவர்களிடம் வரும்போது கடவுளின் வலலமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் எனக் கூறிவிட்டு விண்ணேற்றம் அடைந்தார் (திப. 1: 8, 9). யூதர்கள் பஸ்கா பண்டிகைக்கு பின் ஐம்பதாவது நாளில் அறுவடைக்காக நன்றி செலுத்தும் நெந்தேகோஸ்து பண்டிகையினை கடைபிடித்து வந்த நிலையில், இயேசுவின் மரணத்திற்கு பின்பு ஐம்பதாவது நாளானன பெந்தேகோஸ்து நாளில் அவரது சீடர்கள் ஒருமனப்பட்டவர்களாய் ஒரே இடத்தில் கூடிவந்து, கடவுளின் வாக்குறுதி நிறைவேற காத்திருந்தபோது, அனைவரும் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டனர். சீடர்கள் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட நாளினைத் திருச்சபை பெந்தேகோஸ்து நாளாக கடைப்பிடிக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களது வாழ்வின் பெந்தேகோஸ்து அனுபவத்தை புரிந்து கொள்ளும்போது, வானத்திலிருந்து கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது (திப. 2: 3) நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு வெவ்வேறான மொழிகளில் பேசினார்கள். இரைச்சலின் நடுவில் கடவுளின் செயலினைத் தெளிவாக உணர்ந்தனர். கடவுளின் குரலைக் கேட்டு சான்று பகிர தங்களை ஒப்புக்கொடுத்தனர். இரைச்சல் மிகுந்த உலகில்

கடவுளின் குரலைக் கேட்டது பெந்தேகோஸ்து என்று சிந்திக்கின்ற நிலையில், பெந்தேகோஸ்து அனுபவம் நம்மை ஒன்றிணைக்கின்றதாலும், கடவுளின் ஆற்றல் மிக்க செயல்களை அறிவிக்க நம்மை ஊக்கப்படுத்துகின்றதாகவும், கடவுளின் உண்மை வழியினை நமக்கு கற்பித்து வழிநடத்துகின்றதாகவும் அமைந்துள்ளது.

1. இரைச்சலில் வெளிப்பட்ட திடப்படுத்தும் கடவுளின் குரல்:

இறைவாக்கினர் எலியாவுக்கும் பாகாலின் பொய் இறைவாக்கினருக்கும் இடையே இறைநம்பிக்கை அடிப்படையில் ஏற்பட்ட விவாதத்தின் முடிவில் வெற்றிபெற்ற எலியா, பொய் இறைவாக்கினரை கீசோன் ஓடையில் கொன்று போட்டார் *(1 அர. 18: 40)*. எலியாவின் இச்செயலினை ஆகாபு அரசர் ஈசபேலுக்கு தெரிவித்தபோது, ஈசபேல் எலியாவுக்கு ஆள் அனுப்பி "நீ அவர்களது உயிரைப் பறித்தது போல, நானும் நாளை இந்நேரத்துக்குள் உன் உயிரை பறித்து விடுவேன் என்று சொன்னார்" *(1 அர. 19: 2)*. ஈசபேலின் வார்த்தையினைக் கேட்ட இறைவாக்கினர் எலியா அச்சமுற்று தம் உயிரைக் காத்துக் கொள்ளுமாறு பெயர் செபாவுக்கு தப்பி ஓடி தாம் சாக வேண்டுமென்று ஆண்டவரிடம் மன்றாடினர். வானதூதர் அவரை தட்டியெழுப்பி உணவுகொடுத்து தொடர்ந்து பயணிக்க அறிவுறுத்தியதால் நாற்பது நாள் இரவும் பகலும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையினை அடைந்தார் *(1 அர. 19: 3-8)*. ஓரேபில் குகையில் அச்சத்துடன் இருந்த எலியாவோடு ஆண்டவர் பேசி, திடப்படுத்தி, அமைதியுறச் செய்து, தன்னை காண்பிக்கும் பொருட்டாக குகையிலிருந்து வெளியே வரச் செய்து மலையின்மேல் ஆண்டவரின் திருமுன் நிற்கச் செய்தார்.

வாழ்வில் ஏற்பட்ட கலக்கத்தினால், திடனற்று. பெலனற்று கடவுளின் மலையின் மேல் எலியா நின்றபோது, பெருங்காற்று எழுந்து மலைகளை பிழந்து பாறைகளை சிதறடித்தது, பின்னர் நிலநடுக்கம் ஏற்பட்டு தீ இனம்பிற்று அதின்பின்பு ஆண்டவரின் அடக்கமான மெல்லிய ஒலி கேட்டது. பெருங்காற்று, நிலநடுக்கம், தீ ஆகியவைகளின் பேரிரச்சலின் நடுவில் ஆண்டவரின் அடக்கமான மெல்லிய ஒலி திடனற்று, பெலனற்றிருந்த இறைவாக்கினர் எலியாவை திடப்படுத்தியது. கடவுளின் மெல்லிய குரல் திடனற்றவர்களை திடப்படுத்துகிறது. அச்சத்தினாலும் பெலவீனங்களினாலும், வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களினாலும் திடனற்று தடுமாறும் போது, கடவுள் திடப்படுத்துகின்றவர். மானிட வாழ்வை சூழ்ந்திருக்கும் வேதனைகளும் துன்பங்களும் அழிவினை உணர்த்தும் இரைச்சல் போன்றவை. ஆனால் இரைச்சலின் நடுவில் ஆண்டவரின் மெல்லிய ஒலியை கேட்டு, அவரது திட்டத்திற்கு ஒப்படைக்கையில் வாழ்வில் அமைதி ஏற்படும். பெந்தேகோஸ்து திருநாளில் இரைச்சலின் நடுவிலே ஆவியானவரின் ஆட்கொள்ளுதலை அனுபவமாக்கிய சீடர்கள் அருட்பணி செய்ய ஆற்றல்படுத்தப்பட்டனர்.

2. இரைச்சலில் வெளிப்பட்ட அமைதி அருளும் கடவுளின் குரல்:

உயிர்த்தெழுதல் நாளின் மாலை வேளையில் யூதர்கள் கொலை செய்துவிடுவார்கள் என்ற பயத்துடனும் கலக்கத்துடனும் பூட்டிய அறையில் அமைதியின்றியிருந்த சீடர்களுக்கு உயிர்த்த ஆண்டவர் தரிசனமானார். அமைதியிழந்த, திகிலும் கலக்கமும் நிறைந்த வாழ்வு இரைச்சலுக்கு ஒப்பானது. அதோடு சீடர்களோடு பயணித்த ஆண்டவர் அவர்களோடு ஆண்டவர் இல்லாதிருந்து அவர்களது கலக்கத்தை அதிகரிக்கச் செய்தது. அமைதியிழந்திருந்த சீடர்களின் நடுவே நின்று ஆண்டவர் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று அவர்களை வாழ்த்தினார் (யோவா. 20: 19). உயிர்த்த ஆண்டவரின் வாழ்த்துதல் கலக்கத்தினால் அமைதியின்றியிருந்த சீடர்கள் கடவுளின் அமைதியின் குரலைக் கேட்கச் செய்தது. கலக்கத்தில் கேட்ட கடவுளின் குரல் புதிய நம்பிக்கையினைக் கொடுத்தது. தான் உயிர்த்த ஆண்டவர் என்பதை உணர்த்தும் நிலையில், தன் விலாவையும் கைகளையும் காட்டினார். அமைதியிழந்திருந்த சீடர்கள் மகிழ்ச்சியடைந்தனர் (யோவா. 20: 20).

கடவுளின் குரல் மானிட வாழ்வில் கலக்கத்தில் இருப்போருக்கு அமைதியருளி எதிர்கால நம்பிக்கையினைத் தந்து முன்னேறிச் சென்றிட துணை புரிகிறது. சீடர்களிடம் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று கூறிய ஆண்டவர், அதோடு நின்றுவிடாமல் அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியினைப் பெற்றுக்கொள்ளவும் செய்தார். தூய ஆவியின் ஆற்றலைப் பெற்ற சீடர்கள் கடவுளின் திட்டமான நற்செய்தி அறிவித்தலையும், பாவ மன்னிப்பின் வாழ்வினை அருள்வதற்கும் அவர்களுக்கு துணைச் செய்தது (யோவா. 20: 23). ஆண்டவர் இல்லாத வாழ்வு இரைச்சல் மிகுந்த, அமைதியிழந்த வாழ்வு. ஆனால், ஆண்டவரின் உடனிருப்பு அமைதி நிறைந்த வாழ்வினை அருளுகின்றது.

3. இரைச்சலில் வெளிப்பட்ட ஒன்றிணைக்கும் கடவுளின் குரல்:

இயேசுவின் சீடர்களின் பெந்தக்கோஸ்து அனுபவம் உன்னதமானது. பெந்தக்கோஸ்து நாளில் சீடர்கள் ஒன்றாய் கூடியிருந்த இடத்தில் வானத்திலிருந்து உண்டான இரைச்சலின் நடுவில் கடவுளின் குரலை அனைவரும் கேட்டனர். கடவுளின் குரல் பலமொழி பேசிய மக்களை ஒன்றிணைத்தது. தூய ஆவியின் தூண்டுதலால் கூடியிருந்த அனைவரும் வெவ்வேறான மொழிகளில் பேசினாலும் அவர்களிடையே இசைவு இருந்தது. உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பல ஆண்டுகளுக்குப்பின் பண்டிகை கொண்டாட வந்த யூதர்கள் ஒவ்வொருவரும் அவரவர் சொந்த மொழிகளில் பேசுவதைக் கேட்டு கலிலேயர்கள் நம்முடைய தாய்மொழியில் பேசுவது எப்படி என வியந்தனர்.

பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் அனைவரும் ஆவியானவரின் ஆட்கொள்ளுதலினால் பேசியதால் ஒருவர் பேசியது

மற்றவரது காதுகளல் இரைச்சல் போல் கேட்டது. மிகுதியாயிருந்தது. இவ்விரைச்சலின் நடுவில் அவர்கள் கேட்ட கடவுளின் குரல், மொழி எல்லைகளைத் தாண்டி அனைவரையும் ஒன்றிணைத்தது. கடவுள் தமது குரலினால் தம் மக்களோடு தம்மை தொடர்புபடுத்துகிறார். கடவுளின் குரலைக் கேட்டு, அதின்படி வாழ ஒப்படைக்கும் அனைவரையும் ஒன்றிணைந்து செயல்படுத்துகிறார். பெந்தக்கோஸ்து நாளில் கடவுளின் குரலைக் கேட்டு ஒன்றிணைக்கப்பட்ட அனைவரும், தாங்கள் அனுபவமாக்கியதை அறிவித்ததால் திருச்சபை உருவானது.

நமது தொழுகைகள், திருச்சபைகள் அனைத்தும் நமது வாழ்வுச் சூழலில் நாமும் நம்மோடு வாழ்கின்றவர்களும் கடவுளின் மெல்லிய குரலைக் கேட்கின்ற நிலையில் அமைய வேண்டும். நமது தொழுகைகள் ஆரவாரமான, சத்தமிடும் வெண்கலம் போன்ற இரைச்சல் நிறைந்ததாய் அமையாதபடி, இரைச்சலின் நடுவில் அமைதியாக ஒலிக்கும் கடவுளின் குரலைக் கேட்கின்றதாகவும், கடவுளின் குரலுக்கு செவி கொடுக்க நம்மை ஒப்படைக்கக் கூடியதாகவும், அமைந்திட வேண்டும். நம் காதுகளில் தொனிக்கும் கடவுளின் குரல் நம்பிக்கை இழந்து நமது வாழ்வில் நம்பிக்கைத் தருகின்றதாகவும், திடனற்ற நமது வாழ்வினைத் திடப்படுத்துகின்றதாகவும், அமைதியிழந்த நமது வாழ்வை அமைதிபெறச் செய்கின்றதாகவும், ஆற்றலிழந்த நமது வாழ்வை ஆற்றலடையச் செய்கின்றதாகவும், உடைந்த உறவுகளோடு வாழும் நமது வாழ்வை ஒன்றிணைக்கின்றதாகவும், உயிரற்ற நமது வாழ்வை உயிர்பெறச் செய்கின்றதாகவும் அமைந்திட ஆண்டவர் அருள்தருவாராக. ஆமென்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

மும்மை: அன்பின் இறைக்கூட்டுறவு

Trinity: The Divine Communion of Love

எசா. 48: 12-17 *எபே. 1: 3-14*
திபா. 33 *யோவா. 3: 8-16*

"தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்" (யோவா. 3: 16).

கிறிஸ்தவ நம்பிக்கையில் அன்பின் இறைக் கூட்டுறவு என்பது தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மும்மையை உள்ளடக்கியதாகும். கடவுள் இறைத்தன்மையில் ஒருவராகவும், ஆள்த்தன்மையில் மூவராகவும் இருக்கிறார். கடவுளின் இந்த இயல்பே மும்மை (Trinity) என்று அழைக்கப்படுகிறது. திருமறையில் திரித்துவத்தை குறித்த கோட்பாடுகளோ, வெளிப்பாடுகளோ நேரடியாக காணப்படவில்லை. ஆனால் கடவுள் தன்னை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம் (யோவா. 1: 1, தொநூ. 1: 1-3; யோவா. 6:63, கொலோ. 1: 20) ஆகவே மனித அறிவுக்கு புரிந்து கொள்ள கடினமாக அமைகிறது. எனினும் கிறிஸ்தவ நம்பிக்கையில் ஒவ்வொரு நபரும் அவர்களுக்கு தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களின் வேறுபாட்டையும் அதே நேரத்தில் பிரிக்க முடியாத ஒற்றுமையையும் வெளிப்படுத்துகின்றார். இந்த மூன்றுவிதமான ஆள்தன்மையில் தனித்திருப்பார்கள் என்றாலும் அவர்கள் ஒரே அன்புறவு, ஞானம், வல்லமை, மற்றும் இறைத்தன்மை கொண்ட ஒரே கடவுளாக இருப்பதால் அவர்களின் ஒருமித்த அன்பை குறிக்கிறது. இந்த அன்பு கட்டுப்பாடு இல்லாத, நெருக்கமான மற்றும் சுயம் கொடுக்கும் நிலையை குறிப்பிடுகிறது.

1. உணர்வடையச் செய்து வழிநடத்தும் மூவொரு கடவுள்: *(எசா. 48: 12-17)*

பாபிலோனிய சிறையிருப்பில் துன்புறும் மக்களுக்கு கடவுளின் வலிமையையும், திட்டத்தையையும் குறிதது ஏசாயா இறைவாக்கினார் வாயிலாக தன்னை வெளிப்படுததுகிறார். காரணம் இஸ்ரவேலர் தங்கள் கடினமான இருதயங்களாலும், செயல்களாலும் கடவுளை விட்டு தூரம் சென்றார்கள். இஸ்ரவேலர்களின் வெளிவேஷமான நம்பிக்கையை கண்டிக்கிறார். அவர்கள் இஸ்ரவேலின் கடவுளை குறிப்பிடும்போது அது இதயப்பூர்வமானதா அல்லது நேர்மையானதா என்பதை ஆண்டவர்

கேட்கிறார். சமய சடங்குகளில் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஆண்டவரின் பெயரின் மீது சத்தியம் செய்தார்கள். ஆனால் அதன் உண்மையான பொருள் அவர்களுக்கு புரியவில்லை. அவர்கள் தூய நகரத்தின் பெயரை அழைப்பது அவர்களின் செயல்திறனை நியாயப்படுத்த மட்டுமே பயன்பட்டது. ஆனாலும் நான் அவர்களுக்கு வழிகாட்டுபவராகவும் அவர்களுக்கு போதிப்பவராகவும் இருப்பதாக கூறுகிறார்.

இஸ்ரவேல் மக்கள் கடவுளால் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று கடவுள் வாக்குறுதி அளிப்பதே ஆகும். மேலும் அவர்களை பாதுகாத்து அவர்களுக்கு வழிகாட்டும் கடவுளின் அன்பை குறிக்கிறது. இங்கு கடவுளின் ஆவியும் என்னை அனுப்புகிறார் என்று கடவுள் பேசுவது போல் தெய்வீக அதிகாரத்தின் பண்புகளை வெளிப்படுகின்றன.

2. உடனிருந்து உதவிசெய்யும் முவொரு கடவுள்: *(எபே. 1: 3-14)*

திருத்தூதர் பவுல் எபேசு நகர இறைமக்களுக்கு, தந்தையாம் கடவுள் தம் மக்களை எப்படி ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும், அரிய வல்ல செயல்களாலும் நன்மை செய்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றார். காரணம் எபேசு நகரம் கிரேக்க மற்றும் ரோமனிய வழிபாடுகள் நிறைந்திருந்த காலத்தில் தூய பவுல் இரண்டு ஆண்டுகள் நற்செய்தி அறிவித்தார். இதன் பயனாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்ட மக்களோடு பேசுகிறார்.

இத்திருமறைப் பகுதி, கடவுள், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மீது செய்த செயல்களை விவரிக்கிறது. அவர்களை தேர்ந்தெடுத்தல், மீட்பு, பாவமன்னிப்பு, தூய ஆவியின் முத்திரையை பெற்றுக்கொள்ளுதல் போன்றவைகள் சுட்டிக்காட்டப்படுகிறது. இவைகளை பழைய ஏற்பாட்டில் சொல்லப்படுகின்ற பொருள்சார்ந்த ஆசீர்வாதங்களுக்கு மாறாக, கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் ஆசீர்வதிக்கபட்டுள்ளனர் என்று வலியுறுததுகிறது.

ஆகவே, கடவுளுடைய திட்டம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கிருபையின்படியே நாம் மீட்கப்பட்டு, தூய ஆவியானரால் வழி நடத்தப்படுகிறோம்.

3. நிலையான வாழ்வு வழங்கும் முவொரு கடவுள்: *(யோவா. 3: 8-16)*

நிக்கதேம் யூதத்தலைவர்களில் ஒருவரும், பரிசேயருமாயிருக்கிறார். யூத சமயத்தில் பரிசேயர்கள் ஒரு முக்கியமான பிரிவாக இருந்தனர். ஆனால் இயேசுவின் நாட்களில் அவருடைய போதனைகளையும், பணிகளையும் சந்தேகத்துடன் பார்த்தார்கள். இயேசு போதித்த கடவுளின் அரசு பற்றி, குறை காண்பிக்கும் கண்ணோட்டத்துடன் அணுகினர்.

வருடைய போதனைகளில் ஆர்வம் காட்டாமல் பல கேள்விகளை கேட்க முயன்றனர். இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை புரிந்து கொள்வதால் பல சிரமங்களை சந்தித்தார்கள்.

நிக்கதேம் இயேசுவிடம் இரவில் வந்து உரையாடும் சம்பவம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் இயேசுவின் போதனையை குறித்து மேலும் அறிய முயற்சி செய்து, மறுபடியும் பிறத்தல் குறித்த போதனையை நேரடியாக கேட்டார். ஆனால் இயேசு, மீண்டும் பிறப்பது என்பது உடல்ரீதியான நிகழ்வு அல்ல, அது தூய ஆவியானவர் வாயிலாக நிகழும் புதிய வாழ்க்கையாகும் என்று குறிப்பிடுகிறார். மேலும் கடவுள் உலகத்தின் மீது கொண்ட அன்பின், காரணமாக கிறிஸ்துவை வழங்கினார். ஆகையால் இயேசுவை விசுவாசிப்பவர்கள் அழிந்துபோகாமல் நிலையான வாழ்வை அடைவார்கள் என்று கூறினார்.

அருள்திரு. R. ராஜ பக்தசிங்

இயேசு: முழுநிறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்

Jesus: The Ultimate Influencer

2 குறி. 20: 13-19 *திப. 18: 24-28*
திபா. 89: 19-37 *யோவா. 8: 12-20*

"உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றார் (யோவா. 8: 12).

ஒளி தரும் நல்லாசிரியராம் இயேசு மாணாக்கரின் அக இருளை அகற்றி, ஒளியின் பாதையில் பொறுப்புடன் நடக்க வழிகாட்டுகின்றார். இப்புதிய கல்வியாண்டில் இறைமகன் இயேசுவை வழிகாட்டியாக மாணாக்கர் தேர்ந்துகொள்வது நன்று. அவர் காட்டும், கற்பிக்கும் முறைகளையும், மாதிரியையும் கற்பிக்கும் திருப்பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள், பெற்றோர், திருச்சபை என நாம் அனைவரும் பின்பற்றுவோம். "நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிட மாட்டார்" (நீ.மொ. 22: 6), "தம் அலுவலில் திறமை காட்டுகின்ற ஒருவரைப் பார்; அவர் பாமர மனிதரிடையே இரார்; அரசு அவையில் இருப்பார்" (நீ.மொ. 2: 29). ஆகிய இறைவார்த்தைகளைக் கருத்தில் கொள்வோம். கல்வி என்பது மாணவர்களைச் செதுக்குதலும் திறன்களை அவர்களிடமிருந்து தோண்டி எடுத்தலுமாகும். இத்திருப்பணியில் ஆசிரியர்கள் மாணவர்களின் மனதில் படிந்துள்ள மாசுகளை அகற்றி நிறைவுக்கு நேராக நடத்தி, ஒளிரச் செய்பவர்கள். நமக்கு சாதாரணமாக தோன்றும் கல், ஒரு சிற்பிக்கு மிகப் பெரிய சிற்பமாகக் காட்சி தரும். அவ்வண்ணமே ஆசிரியர்கள் மாணவர்களை செதுக்குகிறார்கள், வடிவமைக்கிறார்கள். இத்தகைய கல்வித் திருப்பணியில் இயேசு முழுநிறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர் என்பதைத் தியானிப்போமாக!

1. இறைநம்பிக்கையைக் கற்பிக்கும் ஆண்டவர்:

"...இப்பெரும் படையை எதிர்த்து நிற்க எங்களுக்கு வலிமை இல்லை. எங்கள் கண்கள் உம்மை நோக்கிக் கொண்டிருக்கின்றன... யூதா குலத்தார் அனைவரும் தங்கள் குழந்தைகள், மனைவியர், புதல்வர்களுடன் ஆண்டவர் திருமுன் நின்றுகொண்டிருந்தனர்" (2 குறி. 20: 12, 13).

இறை நம்பிக்கையில் குன்றி மக்கள் ஆண்டவரை மறந்து தூரம் போன சூழலில் யூதாவின் அரசராகப் பதவியேற்ற யோசபாத்து இறைப்பக்தி மிக்கவர். யோசபாத்து ஆண்டவர் மீது கொண்டிருந்த

இறைப்பக்தி அவருடைய தனிப்பட்ட வாழ்விலும், அரசியல் வாழ்விலும் பிரதிபலித்தது (குறி. 17: 10). பிற தெய்வங்களின் வழிபாடுகளையும், விக்கிரகத் தோப்புகளையும் அகற்றி, சமய வாழ்வில் மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து இறை நம்பிக்கையில் வளரத் தூண்டினார் (2 குறி. 17: 6). இவர் தமது ஆட்சியில் யூதாவின் நகர்கள் எங்கும் திருச்சட்ட நூலைப் போதிக்க திருத்தொண்டர் குழுவை ஏற்படுத்தினார் (2 குறி. 17: 7-9). யோசபாத்து இறை நம்பிக்கையைக் கற்பிக்கும் நல்லாசிரியராக தன்னை மாத்திரம் முன்னிலைப்படுத்தாது கற்பிக்கும் திருப்பணியில் குழு மேலாண்மை அமைப்பை (Team Management System) உருவாக்கினார். இத்தகைய கூட்டு முயற்சியில் இணைந்து கற்பிக்கும் முறையில் மக்களை சீர்திருத்தி ஆண்டவரிடம் திருப்பினார் (2 குறி. 19: 4). இத்தகைய செயல்பாடுகளால் ஆலயத் தொழுகைகள் அழகு பெற்றன. மக்கள் மனமாற்றத்துடன் வாழவும், திருச்சட்ட நூலின் அடிப்படையில் வினக்கமும், எச்சரிப்பும் கொடுக்கப்பட்டன. நீதி விளக்கமும் திருத்தொண்டர் குழுவும் சிறப்புடன் செயல்பட்டது (2 குறி. 19: 4-11). இத்தகைய சிறப்பான கூட்டு முயற்சியில் கற்பிக்கும் ஆசிரியரான யோசபாத்து துன்பச் சூழலின் நடுவிலும் அனைவரையும் இறை நம்பிக்கையில் இணைய, வளரத் தூண்டுகிறார். மோவாபியரும், அம்மோனியரும், மெயோனியருள் சிலரும் இணைந்து யோசபாத்திற்கு விரோதமாகப் போரிட வரும் செய்தி தெரிவிக்கப்பட்டது. இத்தகைய சூழலில் அறிவை நம்பவில்லை, இராணுவ பலத்தை நம்பவில்லை, இறை பெலத்தை நம்பினார் (2 குறி. 20: 1-4). யோசபாத்தின் சிறப்புமிகு குழு மேலாண்மை அமைப்பை, மிகவும் சிக்கலான தருணத்தில் பயன்படுத்தினார். "...யூதா மக்கள் அனைவரும் நோன்பிருக்குமாறு கட்டளையிட்டார்" (2 குறி. 20: 3), "...நாங்கள் செய்யவேண்டியது..." (2 குறி. 20: 12), "யூதா குலத்தார் அனைவரும் தங்கள் குழந்தைகள், மனைவியர், புதல்வர்களுடன்..." (2 குறி. 20: 13). அனைத்து மக்களையும் இறை நம்பிக்கையில் வேரூன்ற அறைகூவல் கொடுத்தார். விளைவு இணைந்து வந்த எதிரிகள், எதிரும் புதிருமாக அவர்களுக்குள்ளே சண்டையிட்டு மடிந்தனர். இறைமக்கள் இறை நம்பிக்கையில் மிளிர்பவர்களாக பெராக்காவில் பாடி மகிழ்ந்தனர்.

இத்தகைய இறை நம்பிக்கையை விதைக்கும் ஆசிரியராகச் செயல்பட்ட யோசாபாத்து போன்று ஆசிரியர்களாக, பெற்றோராக, திருச்சபையாக நாம் செயல்பட வேண்டும். கூட்டு முயற்சியில் இணைந்து கற்பிக்கும் அமைப்பு முறை எல்லாரும் சமமாக, சகஜமாக, அறிவில் தேறியவரும், குன்றியவரும் இணைந்து கற்றுக்கொள்ள உதவுகின்றது. இறைமகன் இயேசுவின் வகுப்பறையில் பயின்ற பன்னிரு மாணவர்களும் (சீடர்கள்) கூட்டு முயற்சியில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். இறைமகன் இயேசு தம் சீடர்கள் இறை நம்பிக்கையில் வளர கூட்டு முறையில் இணைந்து கற்பிக்கும் முறையைப் பயன் படுத்தினார் (யோவா. 15: 14; லூக். 2: 4; மத். 26: 50; யோவா. 13: 1-17).

2. அறியாமையை அகற்றும் ஆண்டவர்:

"அவர் தொழுகைக்கூடத்தில் துணிவுடன் பேசத் தொடங்கினார். அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கில்லாவும், அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினர்" (தி.ப. 18: 26).

ஆசிரியர்கள் கற்பிக்கும் பணியில் மாணவர்களின் புரிதல் உள்ள குறையை, அறியாமையை மாற்றி நிறைவுக்கு நேராக நடத்துபவர்கள். அப்பொல்லோ நாவன்மை உடைய மனிதர், நல்ல சொற்பொழிவாளர், மறைநூல்களில் புலமை பெற்றவர். தூய பவுலார் தனது இரண்டாம் அருட்பணிப் பயண முடிவில் எபேசுவை விட்டு சென்ற பின்பு, இந்த அப்பொல்லோ எபேசுவுக்கு வந்து யூதத் தொழுகைக் கூடங்களில் தீர்க்கமாக போதித்தவர் (தி.ப. 18: 6). ஆனால், அவர் இயேசுவின் போதனையை யோவானின் மனமாற்றத்திற்கான திருமுழுக்குடன் இணைத்துப் பார்க்கிறார். அவருடைய புரிந்துகொள்ளுதலில் மேசியாவைக் குறித்த தெளிவின்மையை தெளிவுபடுத்தி அக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அவருக்கு அறிவூட்டினர். இறைமகன் இயேசுவே மேசியா என்று தெளிவுடன் அறிவூட்டினர், கற்றுக்கொடுத்தனர். அதன் விளைவு அப்பொல்லோவும் தலைசிறந்த மாணவராக, கற்பிக்கும் ஆசிரியராக மாறினார்.

நற்செய்தியின் தெளிவுபெற்ற பின்பு அப்பொல்லோ தெளிவுடன் போதிப்பதையும், தொடர் பணியில் ஆசிரியர்களான அக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் ஊக்கம் தருகின்றனர். அப்பொல்லோவின் திருப்பணி கொரிந்து சபையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது (1 கொரி. 1: 12). கொரிந்தில் அப்பொல்லோ செய்த திருப்பணிக்காக தூய பவுலார் பாராட்டுகிறார் (1 கொரி. 3: 5-11). இன்றும் குறைவுடன் வரும் மாணவர்களை நிறைவுக்கு நோராக நடத்தும் ஆசிரிர்கள் தேவை. திறமைகளை அடையாளம் கண்டு செதுக்கும் ஆசிரியர்கள் தேவை. கடவுளின் குரலைக் கேட்டு யார் என்னை அழைத்தது என்ற ஏக்கக் குரலோடு நிற்கும் சாமுவேலுக்கு வழிகாட்டிய ஏலி போன்று மாணவர்களின் மனத்தில் உள்ள அறியாமைக்கும், எழும் கேள்விகளுக்கும் விடை கொடுக்கும் ஏலிக்கள் தேவை. இன்றைய சமூகத்தில் "ஆர்வமிக்க உள்ளத்தோடு இயேசுவைப் பற்றிய செய்தியை பிழையற அறிவித்து, கற்பிப்பதற்கு..." (தி.ப. 18: 24, 25). அப்பொல்லோக்கள் தேவை. இன்றைய அப்பொல்லோக்களை செதுக்க வேண்டியது ஆசிரியப் பணியின் தலையாயக் கடமை ஆகும்.

3. ஒளிரச் செய்யும் ஆண்டவர்:

"...உலகின் ஒளி நானே; என்னை பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றார் (யோவா. 8: 12).

ஒளி தரும் நல்லாசிரியராம் இயேசு கிறிஸ்து மாணவர்களின் அக இருளை அகற்றி, பாதை காட்டி, நம்பிக்கையூட்டி நடத்துகிறார். கலங்கரை விளக்கின் ஒளி கடலில் பயணம் மேற்கொள்ளும் கப்பல்கள், படகுகளுக்கு வழி காட்டி பாறைகள் மிகுந்த பகுதி, ஆழம் குறைந்த பகுதி, ஆபத்து நிறைந்த சூழல்களில் கரை திரும்ப உதவுகின்றது. அவ்வண்ணமே ஒளியாம் கிறிஸ்துவண்டை வருகிறவர்கள் வாழ்வுக்கு வழிகாட்டுதலைப் பெறுகின்றனர். இயேசு கிறிஸ்து தம்மை ஒளியாக உருவகப்படுத்தி உரைத்த சூழல் கூடாரத் திருவிழாவில் ஒளியின் திருவிழாவில் எருசலேம் ஆலயத்தில் பெண்கள் முற்றத்தில் நான்கு பெரிய தண்டுகளில் பல்லாயிரக்கணக்கான திரிகள் ஒரே நேரத்தில் எரிந்து ஒளிரச் செய்தனர். இவ்வொளி எருசலேம் நகரின் ஒரு பகுதியைத் தான் ஒளிரச் செய்கின்றது. ஆனால், இறைமகன் இயேசுவோ தம்மை உலகையே ஒளிர்விக்கும் ஒளி என்று எடுத்துரைத்து, அவரைப் பின்பற்றுபவர்கள் அக இருள் அகன்று ஒளி பெறுவர் என்று மாணவர்களை அவரின் ஒளியில், வழியில் நடக்க அழைக்கிறார். கிறிஸ்துவாகிய ஒளி "...இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை" (யோவா. 1: 5). "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி.." (யோவா. 1: 9). இந்த ஒளி அனைவருக்கும் வாழ்வானது, இருளாகிய சாவை வென்றது. இத்தகைய கிறிஸ்துவாகிய ஒளியின் தகவுகளை ஆசிரியர்கள் பின்பற்றி மாணவர்களை ஒளிரச் செய்ய வேண்டும்.

இறைமகன் இயேசு தம்மைப் பின்பற்றும் அடியவர்கள் ஒளிரும் மாணவர்களாகத் திகழ எளிய முறைகளைக் கையாண்டு கற்பித்தார். அவருடைய எளிய கற்பித்தல் முறை சாதாரணமானவர்களை அசாதாரணமானவர்களாக மாற்றியது. அனைவருக்கும் பரிட்சையமான ஒளி, இருள் (யோவா. 8: 12), கடுகு (மத். 13: 31), வானத்துப் பறவைகள், காட்டு மலர்கள் (மத். 6: 28) போன்ற பல எளிய உதாரணங்களைக் கொண்டு ஆழமானவற்றைக் கற்பித்தார். அவர் தம்மை இறைவன் உலகிற்கு அனுப்பிய நோக்கத்தில் தெளிவான புரிதல் இருந்தபடியால் அதிகாரத்தோடு கற்பித்தார் (யோவா. 8: 16-20). அவர் கேள்விகளை எழுப்பி, சிந்திக்கத் தூண்டி மாணவர்களை ஒளிரச் செய்தார் (யோவா. 8: 10, 17). திருப்பணியில் பயணிக்க வேண்டிய பாதையைக் காட்டுகிறார். அவர் மாற்றுக் கருத்துக்களையும் எதிர் கருத்துக்களையும் பேச அனுமதித்து கருத்து பரிமாற்றத்திற்கு இடம் தந்து, இறுதியில் சான்றாக்குகிறார் (யோவா. 8: 13-19). அனைவரின் அகத்தில் படிந்திருந்த இருளை அகற்றி, தன்னிலை உணரச் செய்து வாழ்வுக்கு நேராக வர வழிகாட்டினார்.

ஒளி தரும் நல்லாசிரியராம் இயேசுவின் அடிச்சுவட்டை பின்தொடர்வோம், அவர் கற்பிக்கும் , காட்டும் மாதிரிகளை செயல்படுத்தி ஒளிரும் மாணவர்களை உருவாக்குவோம். கிறிஸ்துவின் உண்மை மாணாக்கராய்த் (சீடர்களாய்) திகழ்வோம்.

அருள்திரு. அறிவர் C. கில்டன் தயானந்த்

படைப்பு பேசுகின்றது: இயற்கையில் கடவுளின் குரலைக் கேட்டல்

Creation Speaks: Listening to God's Voice in Nature

யோபு 12: 7-12 *திவெ. 22: 1-6*
திபா. 19 *லூக். 12: 24-34*

"இருப்பினும், விலங்கிடம் வினவுக; உமக்கு அது கற்றுக்கொடுக்கும்; வானத்துப் பறவை உமக்கு அறிவுறுத்தும்" (யோபு. 12: 7).

படைப்பின் கடவுள் எல்லாவற்றையும் படைத்து நல்லது என்று கண்டார். ஏதேன் தோட்டத்தில் இயற்கையில் கடவுள் உலாவி மகிழ்ந்தார். கடவுள் இயற்கையோடும் தன் உடன்படிக்கையை ஏற்படுத்தி வானவில்லை அதன் அடையாளமாக வைத்தார். ஆனால், ஆணாதிக்கம் நிறைந்த திருமறைத் தியானம், இயற்கை இறைவனை வெளிப்படுத்தும் என்பதை ஏற்க மறுக்கிறது. படைப்பு மனிதனுக்கு அடிமையே என்னும் ஆதிக்கச் சிந்தையே இதற்குக் காரணம். ஆனால், சூழியல் இறையியல் (Eco-Theology) வளர்ச்சி இயற்கையில் இறைவன் குரலைக் கேட்க உதவுகிறது.

இயேசு தம் தந்தையுடன் உரையாடத் தெரிந்தெடுத்த இடம் இயற்கை. நாற்பது நாள் வனாந்திரத்தில், இயற்கையினூடாய் கடவுள் தம் திருவுளத்தைத் தம் திருமகனுக்கு வெளிப்படுத்தினார். கடவுள் மனுக்குலத்தோடு மட்டுமல்ல; அனைத்துப் படைப்புகளோடும் தம் உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (தொ.நூ. 9: 12-17) மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையன (திபா. 24: 1). தாலந்து உவமை, கடவுள் நம்மிடம் தரும் தாலந்துகளுக்கு நாம் பொறுப்பாண்மைமிக்கவர்களே (stewards) *தவிர, உரிமையாளர்கள்* (owners) *அல்ல என்பதை விளக்குகிறது. கடவுள் நம்மை சிறப்பாகப் படைத்தார். பண்படுத்தவும், பாதுகாக்கவும் இவ்வுலகம் தரப்பட்டிருக்கிறது எனக் கூறும்போது, நம்மை உடன் படைப்பாளர்களாக* (co-creators) *கடவுள் அழைக்கிறார் என்பது புலப்படுகிறது. ஆக, கடவுள் நம்மை சூழல் சார்ந்த வாழ்வுக்கு* (Eco-Centered Life) *அழைக்கிறாரே தவிர, சுயம் மற்றும் அகங்காரம் சார்ந்த வாழ்வுக்கல்ல* (Ego-Centered Life). *இப்பின்னணியத்தில் படைப்புகளினூடாய் கடவுள் தம் ஞானத்தை நமக்கு உணர்த்தி, வாழ்வு தருகிறார் என்பதைத் தியானிப்போம்.*

1. இயற்கையில் கடவுளின் ஞானம் (God's Wisdom in Nature) : *(யோபு 12: 7, 10)*

விலங்கிடம் வினவுக; உமக்கு அது கற்றுக் கொடுக்கும்; வானத்துப்

பறவை உமக்கு அறிவுறுத்தும் அல்லது மண்ணில் ஊர்வனவற்றிடம் பேசுக; அவை உமக்குக் கற்பிக்கும். இன்று இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ள, அவசர உலகில் மனுக்குலம் தயாராக இருக்கிறதா? அவர் கையில்தான் அனைத்துப் படைப்புகளின் உயிரும் மனித இனத்தின் மூச்சும் உள்ளன (யோபு 12: 10) என கூறும்போது, கடவுள் கரத்தில் நாமும் இயற்கையும் சமம் என்பது புலனாகிறது.

திருப்பாடல்கள் 19-இல் வானங்கள் இறைவனின் மாட்சியை வெளிப்படுத்துகின்றன. வான்வெளி அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது. அவற்றுக்குச் சொல்லுமில்லை, பேச்சுமில்லை; அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை; ஆயினும், அவற்றின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகிறது (திபா. 19: 1, 3, 4). கடவுளின் மாட்சியை இயற்கை வெளிப்படுத்துவதோடு அவை நமக்கு நல்ல ஆசிரியர்களாகவும் இருக்கின்றன.

காகங்களைக் கவனியுங்கள்; அவைகள் விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, அவற்றுக்குச் சேமிப்பறையுமில்லை, களஞ்சியமுமில்லை (லூக். 12: 24). காட்டுச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கூர்ந்து கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை (லூக். 12: 27). இவை இயற்கையின் சுயநலமற்ற தன்மையை நமக்கு கற்றுத்தந்து அப்பாதையில் பயணிக்கத் தூண்டுகிறது.

இயற்கை தன் சுயநலத்துக்காக வாழ்வதில்லை, ஆறு தனக்காக ஓடுவதில்லை, மரங்கள் தன் பழங்களை உண்பதில்லை. சுயநலமும் இயற்கைச் சுரண்டலும் அதிகரித்து வரும் உலகில் இயற்கையினூடாய் கடவுளின் ஞானத்தை உணர இயற்கையோடு இணைந்து வாழ அழைக்கப்படுகிறோம்.

2. இயற்கையின் வாயிலாக கடவுளின் நலம் (God's Healing through Nature) : *(திவெ. 2: 1, 2)*

அந்த வானதூதர் வாழ்வு அளிக்கும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஓர் ஆற்றை எனக்குக் காட்டினார். நகரின் தெரு நடுவே பாய்ந்தோடியது. ஆற்றின் இரு மருங்கும் வாழ்வுதரும் மரம் இருந்தது. மாதத்துக்கு ஒரு முறையாக அது ஆண்டுதோறும் பன்னிரு முறை கனிகள் தரும். அதன் இலைகள் மக்களினங்களைக் குணப்படுத்தக் கூடியவை. கடவுள் நமக்கு சுகம் தருகிறார் எனக் கூறும்போது, இயற்கையினூடாய் சுகம் தரும் கடவுளை இங்குக் காண்கிறோம்.

இஸ்ரயேல் மக்களை வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் மன்னாவினால் கடவுள் உணவூட்டினார். அது கொத்தமல்லி போன்று வெண்ணிறமாயும், தேன் கலந்து ஆக்கிய பணியாரம் போன்ற சுவையாயும் இருந்தது (விப. 16: 31).

சீரியா மன்னனின் படைத்தலைவனான நாமானின் தொழுநோய் நீங்க எலிசா தீர்க்கரால் யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கினால் உடல் நலம்பெறும் எனக் கூறப்பட்டது (2 அர. 5: 14). கடவுள் தம் சுகம் தரும்

தெய்வீக தன்மையை இயற்கையினூடாக வெளிப்படுத்துகிறார் என்பதை இங்குப் புரிந்துகொள்ள முடிகிறது.

நாம் வாழும் உலகில் நாம் நலமுடன் வாழ இயற்கை நமக்கு உணவு தருவதோடு சீரான உணவு முறை மற்றும் ஆரோக்கியத்தையும் தருகிறது. சூரிய ஒளியிலிருந்து இலவசமாய் நாம் பெறும் ஊட்டச்சத்து, சுத்தமான காற்று, சுத்தமான நீர், காய் கனி, உணவு தானியங்கள் இவை யாவும் நலமருளும் கடவுளின் அருட்கொடைகளே. ஆனால், நாம் வாழும் இவ்வுலகில் 2 மில்லின் மக்கள் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் தவிப்பதும், அதன் மூலமாய் நோய்கள் தாக்குவதும் தொடர்கதையாகவே உள்ளது. இச்சூழலில் திருச்சபை இதற்கு என்ன செய்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

3. கடவுளின் உறவார்ந்த சமூகத்தை ஏற்றுக்கொள்தல் (Embracing God's Relational Community) : *(லூக். 12: 24, 27)*

காகங்களைக் கவனியுங்கள், காட்டுச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கூர்ந்து கவனியுங்கள் எனக் கூறி அதனூடாய் மனுக்குலத்தின் உண்மை நிலையை உணர்த்தி, கவலைகளைக் களையத் தூண்டினார் இயேசு. இங்கு கடவுளுக்கும், கடவுளின் படைப்புகளுக்கும் மனுக்குலத்துக்குமான உறவுசார் இருப்பியல்பைப் (relational ontology) புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆணாதிக்க சிந்தனை நிறைந்த சமூகத்திற்கு வாழ்வின் அர்த்தங்களைப் புரிய வைக்க படைப்புகளாகிய காகங்களையும், காட்டுச் செடிகளையும் பயன்படுத்துகிறார். சூழல் இறையியல் சார்ந்து லூக். 12: 24, 27-ஐ வாசித்தால், de-centers anthropocentrism by affirming that God's care encompasses all living being, not only human என்பது புரிகிறது.

இஸ்ரயேல் மக்களிடம் ஏழாம் ஆண்டு ஓய்வின் ஆண்டு மற்றும் யூபிலி ஆண்டைக் குறித்து கடவுள் கூறும்போது, நிலத்துக்கு ஓய்வு ஆண்டு (லேவி. 25: 4, 5), ஓய்வு நாளில் மனிதன் ஓய்வு எடுப்பதோடு மாட்டுக்கும், கழுதைக்கும் உன் அடிமைகளுக்கும் இளைப்பாறுதல் வேண்டும் (விப. 23: 12) எனக் கடவுள் கூறும்போது, இது கடவுளின் Ultimate ownership-ஐயும் divine compassion மற்றும் Eco-Justice-ஐயும் விளக்குகிறது. யூபிலி சட்டங்கள், "படைப்புகள் வாணிபப் பொருளல்ல ஆனால், சமூகம்" (creation is not a commodity but a community) என்பதையும், கடவுளுக்கும் படைப்புகளுக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள இணக்கத்தையும் புரிந்துகொள்ள அழைப்பு விடுக்கிறது.

அருள்திரு. முனைவர் O. டென்சிங்

இறைவழிபாடு: கடவுளின் திருமுன், கடவுளின் நோக்கத்துக்காக

Worship: In God's Presence, For God's Purpose

எசா. 6: 1-8 *திப. 2: 42-47*
திபா. 100 *மாற்கு 12: 28-34*

"ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள். மகிழ்ச்சிநிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள்" (திபா. 100: 2).

வழிபாடு அல்லது தொழுகை கிறிஸ்தவ நம்பிக்கையிலும் வாழ்விலும் ஆணிவேர் போன்றது. மனிதர் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டோர் என்னும் உண்மை, வழிபாட்டில் அழகுற வெளிப்படுகிறது. இன்றைய வழிபாடு இறைவனைச் சார்ந்து அவரை திருப்திப்படுத்துவதற்காகவும் இறைவனின் உறைவிடமாகக் கருதப்படும் நாம் அடைவதைத் நோக்கமாகக் கொண்டது. வழிபாடு கடவுளைத் திருப்திப்படுத்திவிடும். கடவுளும் நமக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்து தருவார். இதுவே வழிபாட்டைப் பற்றிய எண்ணமாக இருக்கிறது. கடவுளின் திருமுன்னிலையையும். நோக்கத்தையும் நினைவில் கொள்வதில்லை. நாம் உண்மையான உளப்பாங்குடன் வழிபடவேண்டும் என்று அவர் விரும்புவதின் நோக்கம் நமது வாழ்வு நன்கு அமையவேண்டும், அது பொருளுள்ளதாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கவேண்டும் என்பதே. அந்நோக்கம் நிறைவேற நாம் எப்படி வழிபடவேண்டும் எனத் தரப்பட்டுள்ள திருமறைப்பகுதிகள் சார்ந்து தியானிப்போம்.

1. தூய உள்ளத்தோடு வழிபடுவோம்: *(எசா. 6: 1-8)*

வழிபடுதல் என்றால் பின்பற்றுதல், நேர்படுதல். சீர்திருந்துதல் என்று பொருள். கடமைக்காக அல்லது நன்மைகள் வேண்டி இறையவரை வணங்குதல் என்பதைவிட எசாயா கண்ட காட்சியில் தூய மாட்சி படர்ந்திருந்தது. விண்தாதர் பாடிக்கொண்டிருந்தனர். இறைக்காட்சி கண்ட எசாயா ஐயோ! ஒழிந்தேன் நான் தூய்மையற்ற உதடுகளுடைய மக்களிடையே வாழ்பவன் என்று கத்தினார். இறை முன்னிலையில் அவரைக் காண தூய உள்ளம் வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் மலைபொழிவில் "தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்". ஏனெனில் அவகள் கடவுளைக் காண்பர் (மத். 5: 8) என்று போதிக்கின்றார். மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சிமையால் நிறைந்துள்ளதால் வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும் தூய்மை வேண்டும் என்ற செய்தியை எடுத்து கூற இறைவாக்கினர் ஏசாயாவுக்கு உந்துதலைக் கொடுத்தது. இது தனிமனிதர் ஒருவரின் சான்றாக இருந்தாலும் ஒரு சமூகத்தில் வழிபாட்டின் நோக்கத்தை வரையறுப்பதாக உள்ளது. இந்நிகழ்வு நம்மை

தூய உள்ளத்தோடு வழிபட அழைக்கின்றது.

2. ஒன்றிணைந்த உள்ளத்தோடு வழிபடுவோம்: *(திப. 2: 42-47)*

இன்றைய சூழலில் வழிபாடு என்பது வியாபாரமாகவும் வித்தை காட்டுவதுபோலவும் காட்சி கொடுக்கின்றன. இதனால் வழிபாடு குறித்து மக்களின் நம்பிக்கை குழப்பத்தில் இருப்பதோடு, எது உண்மை வழிபாடு என்கிற புரிதல் இல்லாமல் போகிறது. தொடக்கால திருச்சபை வழிபாடு இறை நம்பிக்கையை விதைக்கவும். முளைக்கவும் செய்வதோடு இறைமக்களை ஒன்று சேர்த்து ஒன்றாய் பகிரச் செய்தது. "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்' *(திபா. 2: 44)*. கிரேக்க மொழியில் Koinonia என்ற வார்த்தை ஐக்கியம் (Followship/Communion) என்கிற பொருள் கொண்டது. ஏனென்றால் இறைமக்கள் ஐக்கியத்தில் பணமோ, பொருளோ, பதவியோ, அந்தஸ்தோ (status), சாதியோ இதுபோன்ற எதன் அடிப்படையிலும் வேறுபாடில்லாமல் கூடிவருதல் தான் உண்மையான ஒன்றிப்பு. வழிபாட்டின் இடமாகிய ஆலயத்தில் இப்படிப்பட்ட ஒன்றிப்புக்கு நான் என்ன செய்யவேண்டும் எமது பங்கு என்னவென்று எண்ணும் நம் ஐக்கியம் வளரும். ஆனால் நான் என்னவாக இந்த ஐக்கியத்தில் இருக்க வேண்டும் என்கிற அடையாளத்தை தேடுகிறபோது அந்த ஐக்கியத்தை உடைக்கிறது. 'ஒவ்வொருநாளும் அவர்கள் ஒரே மனதோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள்.... உணவைப் பகிர்ந்தது உண்டு வந்தார்கள். *(திப. 2: 49* இப்படிப்பட்ட உணர்வுள்ள வழிபாடு ஒன்றிணைந்து செயல்படவும் ஒன்றாய் பகிர்ந்து வாழ செய்யும் என்பதை நாம் உணர்ந்து வழிபடுவோம்.

3. அன்பு நிறைந்த உள்ளத்தோடு வழிபடுவோம்: *(மாற்கு 12: 28-34)*

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் பல நூற்றுக்கணக்கான கட்டளைகளை கடைபிடித்து வந்தனர். அவர்களில் அடிக்கடி எழுந்த கேள்வி எது முதன்மையான கட்டளை என்பது. முதலாவது உன் கடவுளை முழு மனதால் அன்பு செலுத்து. இரண்டாவது உனக்கடுத்திருப்பவனை உன்னை போல் அன்பு செலுத்து அவர் இரண்டையும் ஒன்றாக இணைத்தார். அன்பு நிறைந்த உள்ளம் வெறும் உணர்வு அல்ல அது வழிபாடு, வாழ்வாக மாறும் செயல்முறை அன்பு நிறைந்த உள்ளத்தோடு வழிபடுவது என்பது சத்தமாக பாடி கைகளை உயர்த்தி, பிறமொழி பேசி பரவசநிலைக்கு செல்வதல்ல. மாறாக, நம் உள்ளத்தின் அன்பு கேட்கப்படும் போதுதான் அது வழிபாடாக மாறும்.

இறைவன் இயேசுவின் மீது நாம் வைக்கும் நம்பிக்கை ஒன்றே இயேசு கிறிஸ்துவின் பிறப்பு. வாழ்வு, வார்த்தை, சிலுவைப் பாடு, இறப்பு. உயிர்த்தெழுதல் இவைகளின் மூலமாகத்தான் மனுகுலத்திற்கு மீட்பு இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் நமது வழியாடு அமைகிறது என்பதை உணர்ந்து கடவுளின் நோக்கத்தை அவர் முன்னிலையில் தூய உள்ளத்தோடும், அன்பு நிறைந்த உள்ளத்தோடும் வழிபடுவோம்.

அருள்திரு. G. இராபர்ட் ஞானசிங்

சீடத்துவம்: வந்து பாருங்கள், சென்று அறிவியுங்கள்

Discipleship: Come and See, Go and Tell

செக். 8: 18-23 *உரோ. 10: 9-17*
தி.பா. 66 *யோவா. 1: 39-42*

அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள்" என்றார் (யோவா. 1: 39).

நற்செய்திப் பகுதியில் திருமுழுக்கு யோவான் தம் சீடர்களுக்கு இயேசுவை கடவுளின் ஆட்டுக்குட்டியாம் இவரே. உலகத்தின் பாவத்தைப் போக்குபவர் என்றும் யோவான் 1: 29, 36-இல் அறிமுகப்படுத்துகிறார்.

எந்தவொரு நிகழ்விலும் "அறிதல்" முதன்மையானது. அவசியமானது. ஒன்றைப் (ஒருவரை) பற்றி முழுமையாக அறிந்தவரே பிறருக்கு அறிவிக்க முடியும். சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும். அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கப்பட்டால்தான் அதை கேட்க வாய்ப்புண்டு. ரோமர் 10: 17. எனவே, நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.

இங்கே திருமுழுக்கு யோவான் வழியாக அறிமுகம் பெற்றவுடன் அவரது இரண்டு சீடரும் இயேசுவை பின்தொடர்ந்தனர். பின்தொடர்ந்தவர்களிடம் என்ன தேடுகிறீர்கள் (யோவா. 1: 38) என்பதே இயேசு பேசிய முதல் சொல். இங்கு சீடர்களின் தேடலை இயேசு நன்கு புரிந்து கொள்கிறார்.

உலக தொடக்க முதல் இன்று வரை மக்கள் நிலையான வாழ்வை, நிறைவான வாழ்வை, நிம்மதியான வாழ்வை தேடுகின்றனர். இந்த தேடலுக்கு இயேசுதான் விடை தர முடியும் என இயேசுவுக்கு தெரியும். ஏனெனில், அவரே வழியும், உண்மையும், வாழ்வும் என்றார் (யோவா. 14: 6).

மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு வந்தவர் இவரே (யோவா. 10: 10). ஆகவே, உலகோரின் தேடலுக்கு விடைதரும் நோக்கில்தான் அதன் பிரதிநிதிகளாய் நின்ற சீடர்களிடம் இயேசு என்ன தேடுகிறீர்கள் என்று கேட்டார். ரபீ நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று சீடர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் வந்து பாருங்கள் என்றார்.

1. வந்து பார்த்தனர்:

தேடலில் ஈடுபட்டிருந்த சீடர்களிடம் இயேசு வந்து பாருங்கள் என்கிறார். உண்மையான சீடர், அழைப்பைப் பெற்றவர் இயேசுவை

பற்றியும், அவர் தரும் வாழ்வு பற்றியும் கேள்விப்பட்டிருந்தாலோ, கேட்டறிந்திருந்தாலோ போதாது; நேரடியாக அறிய வேண்டும். ஆகவேதான் இயேசு நீங்களே வந்து பாருங்கள் என்கிறார். சீஷர்கள் மனமுவந்து பின்தொடர்கின்றனர். எந்த நிபந்தனைகளும், வற்புறுத்தலும் இன்றி முழு சுதந்திரத்தோடு செல்கின்றனர்.

ஆண்டவர் எத்தனை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள். அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர் (சங். 34: 8). ஆக சீடர்கள் நேரடியாக அறிய வேண்டும். அவர்கள் சொந்த அனுபவமாக மாற வேண்டும். உடன் செல்கின்றனர். வந்து பாருங்கள் என்பது இயேசு தங்கியிருந்த இடத்தை பார்ப்பதற்கான அழைப்பு அல்ல. அவரிடம் வந்து, அவரோடு தங்கியிருந்து, அவரது சொற்கள், செயல்கள், அணுகுமுறை, வாழ்க்கை முறை இவற்றை தெரிந்து பின்பற்றுவதற்கான அழைப்பாக மாறுகிறது.

2. சரணடைந்தனர்:

அன்றையத் தினம் அவரிடத்தில் தங்கினார்கள் (யோவா. 1: 39b). இறைவனின் அனுபவத்தை பெற்றவர்கள்தான் இறை அழைத்தலில் பங்கு பெற முடியும். இவர்கள் எல்லாவற்றையும் அவர் பொருட்டு இழக்க கற்றுக்கொண்டு சரணாகதி அடைகின்ற விதமாக நெருக்கமாக பின்தொடர்கின்ற நிலையில் அவரோடு தங்கி தங்கள் அழைப்பை ஆழப்படுத்திக் கொண்டனர். இதுதான் அவர்களுக்கு புனிதமான இரவு. விசுவாச அனுபவம் நிறைந்த இரவு. இயேசுவிடம் சரணடைந்தவுடன் அவர்கள் வாழ்வில் மாற்றம் பிறக்கின்றது. ஆழ்ந்த அன்பும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாத மனநிலையும் உருவாகிறது; புதிய பாதை, சான்று பகரும் அனுபவம் தொடர்கிறது. ஒருவர் என்னுடனும், நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார் (யோவா. 15: 5) என்பதற்கிணங்க அன்றிரவு அவர்களுக்கு சரணடைகிற அனுபவமாக மாறுகிறது.

அன்பு செய்பவன் அவரை மட்டும் அன்பு செய்பவராலேயே அவரை முழுமையாக பின்பற்ற முடியும். (எவரும் இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது. மத். 6: 24). இங்கே இயேசுவுக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கின்ற அனுபவம் பிறக்கின்றது.

"நான் வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி. 1: 21) என்ற பவுல் பெற்ற அனுபவம் போல் தங்களை முழுமையாய் இழக்கிற அனுபவம் பெறுகிறார்கள்.

என்னை பின்பற்ற விரும்பும் எவனும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னை பின்செல்லட்டும் (மாற். 8: 34) என்ற இறைவார்த்தைகளுக்கு இலக்கணமாக சரணடைந்த சிறப்பான அனுபவமாகும்.

3. சான்று பகர்ந்தனர்:

நாம் அறிந்தவைகளை பிறருக்கு அறிவிக்க வேண்டும். சீடர்களை உருவாக்க வேண்டும். வாழையடி வாழையாக தொடர்பணியாக சீடர்களை தொடர்ந்து உருவாக்கிட வேண்டும். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதுபோல இறை அனுபவம் பிறருடன் பகிரப்பட வேண்டும். இதையே அந்திரேயா செய்கிறார். இயேசுவை முதன் முதலாக மெசியா என்று அடையாளம் கண்டு கொண்ட பின்பு, சீமோனிடம் சென்று மெசியாவை கண்டோம் என்று இயேசுவிடம் அழைத்து வந்தார் (யோவா. 1: 41). இவருக்குப் பின் இவரது சகோதரர் பேதுரு இயேசுவை மெசியா என்று அடையாளம் கண்டு அனுபவமாக்கிக் கொண்டார் (லூக். 9: 18-21).

அந்திரேயா இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கை கொண்டவராக, மக்களோடு நன்கு பழகியவராக 5000 பேருக்கு உணவு வழங்குவதற்கான அருஞ்செயல் நடைபெறுவதற்கு "இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உள்ளன" (யோவா. 6: 9) என்று அடையாளம் காட்ட முடிந்தது.

கிரேக்கர் இயேசுவைக் காண விரும்பியபோது இயேசுவிடம் எடுத்து சொல்லி அவர்களும் இறை அனுபவம் பெற வழிகாட்டினார் (யோவா. 12: 2).

இறை அனுபவம் பெற்றவர்கள் பலன் கொடுக்க வேண்டும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது (யோவா. 15: 8). ஆக, உங்களை மனிதர்களை பிடிப்பவராக்குவேன் என்று சொன்ன இறை வார்த்தைக்கிணங்க மற்றவர்களை மற்றும் தன் சகோதரனை இயேசுவிடம் அழைத்து வந்தான்.

"விதை இல்லாமல் விருட்சமில்லை. இழப்பு இல்லாமல் நிறைவு என்பது இல்லை". தம் உயிரை காத்துக்கொள்ள விரும்பும் எவனும் அதை இழந்துவிடுவர். மாறாக, என் பொருட்டு தம்மையே அழித்துக்கொள்கிற எவனும் வாழ்வடைவர்" (மத். 16: 25).

சீடத்துவ வாழ்வில் உலகில் எதன் மீதும் பற்றற்றவர்களாக இருக்க வேண்டும். இறைவன் ஒருவரையே பற்றிக்கொள்ள வேண்டும். மண்ணில் விழுந்து மடியும் மறைசாட்சிய வாழ்வுக்கு தயாராயிருக்க வேண்டும்.

இவருடைய சீடத்துவப் பணி சீமோனை இயேசுவிடம் கொண்டு வந்து சேர்ப்பதில் ஆரம்பித்து, கிரேக்கர்களை கொணர்வதில் வேரூன்றி, பாலஸ்தீனம், அக்காயா, ஸ்கைத்தியா, கிரீஸ் என பரந்து விரிந்து கி.பி. 60-இல் நீரோவின் கொடுங்கோல் ஆட்சியில் ஆங்கில X வடிவ சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு, மரணத்தோடு போராடுகின்ற நிலையிலும் தம்மை சந்திக்க வந்த மக்களுக்கு இயேசுவை சாட்சியாக அறிவித்தார். இதுதான் உண்மையான சீடத்துவமன்றோ! இதுவே பேதுருவின் நிலை. வந்து பார்த்தார்கள். சரண் அடைந்தார்கள். சான்று பகர்ந்தார்கள்.

அருள்திரு. N. ஜான் பென்டிங்

இறைவழிபாடாகப் பணிவிடை: நம் பணிவிடைகளில் கடவுளுக்கு மதிப்பளித்தல்

Work as Worship: Honoring God in Our Professions

விப. 31: 1-11 *கொலோ. 3: 22-25*
திபா. 104: 1-24 *லூக். 17: 7-10*

"நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல; ஆண்டவருக்காகவே செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள்" (கொலோ. 3: 23).

ஒவ்வொரு மனிதரும் தம்தம் பணிகளில் உண்மை, நேர்மை, அர்ப்பணம் இவைகளுடன் செயல்படவேண்டும் என்பதை கடவுள் எதிர்பார்க்கிறார்.

Avodah *என்ற எபிரேயச் சொல்லிற்கு என்பதற்கு மூன்று பொருள் உண்டு. 1. உழைப்பு* (Labour), *2. பணிவிடை* (Service), *3. தொழுகை* (Worship). *அவோதா என்றால் உழைப்பும் வழிபாடும் ஒன்றாக இணைந்த புனிதச் சேவை ஆகும். நமது உழைப்பு கூட கடவுளுக்கான சேவையே என்ற சிந்தனையை வெளிப்படுத்துகிறது. உலகமும், அதின் படைப்புகள் அனைத்தும் ஆண்டவருடையன (திபா. 24: 1). நாம் உழைப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறோம் (தொநூ. 2: 15. கடவுள் உரிமையாளர், நாம் பொறுப்பாண்மை உடையோர். அனைத்துப் பணிகளின் ஆதாரமும் அவரே. அவர் கடினமான உழைப்பாளி. ஆறு நாள்கள் வேலை செய்து ஒவ்வொரு நாள் பணியினையும் நன்றாய் இருப்பதாய்ப் பார்த்தார். அவரே நமது பணிகளுக்கு மாதிரி. பணிவிடையே வழிபாடு என்ற உண்மையை திருமறைப்பகுதிகள் வழியாகக் கற்றுக்கொள்வோம்.*

1. அழைப்பை உணர்ந்து செய்யும் பணிவிடையே இறைவழிபாடு: *(விப. 31: 1-11)* Worship is an Act of Responding to God's Call

ஆண்டவர் மோசேயோடு ஆசாரிப்புக் கூடார வேலையைச் செய்வதற்காக யூதர்க் குலத்தைச் சார்ந்த கூரின் மகனான ஊரியின் மகன் பெட்சலேல் என்பவரை நான் பெயர் சொல்லி அழைத்திருக்கிறேன். அத்துடன் ஒகொலியாபு என்பவரையும் அவரோடு நியமித்திருக்கிறேன். இப்பகுதியில் ஆண்டவரின் அழைப்பு சிலருக்கு சில பணிகளைச் செய்து நிறைவேற்ற கொடுக்கப்படுகிறது. அந்த அழைப்பை அலட்சியப்படுத்தாமல் அழைப்பின் நோக்கத்தை உணர்ந்து அதை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெட்சலேலுக்கு ஆண்டவர் ஞானம். அறிவுக் கூர்மை, அனுபவம், தொழில் திறமை

அனைத்தும் உண்டாகுமாறு இறை ஆவியரின் ஆற்றலைக் கொடுத்துள்ளார். அவை அனைத்தும் இறைத்திட்டம் நிறைவேற்றப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆண்டவர் அருளும் திறமைகள் என்பது சுயலாபத்திற்காகப் பயன்படுத்த அல்ல. இறைவிருப்பு நிறைவேற என்பதாகும். இறைவிருப்பு என்பது ஆண்டவரின் ஆசரிப்புக் கூடாரப் பணிகள் அனைத்தும் மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான். பெட்சலேலுக்கு தரப்பட்ட திறமைகள் அனைத்தும் அப்பணிக்காகச் செலவிடப்பட்டு பணிகள் சிறப்புடன் நடப்பதே ஆண்டவருக்கு வழிபாடாக மாறுகிறது. பவுலடிகளார் சொல்வது, நீங்கள் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள் *(1 கொரி. 10: 31).* தூய ஆவியாரின் பணி பெரிதானவைகளைச் செய்யக் கற்றுக்கொடுப்பது அல்ல. ஆனால் சாதாரணமானவைகளை இறைஅழைப்பைச் சார்ந்து அர்ப்பணிப்புடன் செய்யக் கற்றுக் கொடுப்பது. நாம் எப்பணியில் அமர்த்தப்பட்டாலும் அதில் கடவுளின் அழைப்பு, எதிர்நோக்கு இவைகளை உணர்ந்து உண்மையாகச் செய்வது வழிபாடாகிறது (The work of the Holy Spirit is not to teach us to do great things. but to do ordinary things with great devotion depend on God's great calling).

2. ஆண்டவருக்கு அஞ்சி செய்யும் பணிவிடையே இறைவழிபாடு: *(கொலோ. 3: 22-25)* Worship is an Act of Revering the Lord

உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள், மனிதர்களுக்கு உகந்ததாகக் காட்டிக் கொள்ளாது ஆண்டவருக்கு அஞ்சி முழுமனத்துடன் வேலை செய்யுங்கள். நீங்கள் செய்யும் வேலையை ஆண்டவருக்காகச் செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள். இப்பகுதியில் ஆண்டவருக்காகச் செய்கிறீர்கள், உணர்ந்து உளமாரச் செய்யுங்கள் என்ற வார்த்தைகள் ஆண்டவருக்கு அஞ்சி பணி செய்வதை அழுத்தமாகக் கூறுகிறது. ஒரு சிறு பணியில் ஈடுபட்டாலும் அதில் இதயம் முழுமையாக ஈடுபடவேண்டும். திபா. 128: 2 சொல்வது, உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர், நீர் நற்பேறும் நலமும் பெறுவீர். ஒருவர் உண்மையுடன் செய்யும் பணியினால் பயன் உண்டு. அதுவே அவருக்கு ஆசீர்வாதமாகிறது. அது ஆண்டவருக்கு வழிபாடாகவும் மாறுகிறது. பில்லி கிரகாம் சொன்னார்: தன்னலமற்ற கிறிஸ்தவச் சேவையே ஆராதனையின் உயர்ந்த வடிவம் (The highest form of worship is the worship of unselfish christian service). *தன்னலமற்ற அலட்சியமற்ற, ஆண்டவருக்காகவே இப்பணியைச் செய்கிறேன் என்ற நல்லெண்ணத்துடன் செய்யப்படும் பணியே வழிபாடாக மாற்றம் பெறும். எபி. 6: 10 சொல்கிறது நீங்கள் முன்பு தொண்டாற்ற வந்தீர்கள். இப்போதும் தொண்டு செய்து வருகிறீர்கள். எனவே கடவுள் பெயரால் நீங்கள் காட்டிய அன்பையும் உழைப்பையும் அவர் மறக்கமாட்டார். ஒரு கட்டிடத் தொழிலாளி தான் ஓய்வுபெறும் போது அவரிடம் ஒரு வீடு கட்டச் சொன்னார்கள். அவர் அதைச்*

சோம்பலாகச் செய்தார். ஆனால் வேலை முடிந்த பின் எஜமான் சொன்னார்: இந்த வீடு உனக்காகத் தான் கட்டச் சொன்னேன். அப்போது அவர் தம் சோம்பலை எண்ணி வெட்கப்பட்டார். மிகச் சிறியவற்றில் நம்பத்தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத்தகுந்தவராய் இருப்பார் (லூக். 16: 10). நமது கரங்களில் தரப்படும் பணி எப்படிப்பட்ட பணியாயினும் அதை ஆண்டவருக்குப் பயந்து உண்மையுடனும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றினால் அது ஆண்டவருக்கு வழிபாடாகவும் நமக்கு ஆசீர்வாதத்துக்கு வழியாகவும் மாறும்.

3. அர்ப்பணம் நிறைந்த பணியே இறைவழிபாடு: (லூக். 17: 7-10) Worship is the Work with Dedication

லூக். 17: 7-10 வரை படிக்கும் போது ஓர் அடிமையானவன் தன் எஜமானனுக்கு முன் அர்ப்பணத்துடன் செய்யும் பணியைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை அவன் செய்யும் பணி மற்றவர்களால் கவனிக்கப்படவில்லை, பாராட்டப்படவில்லை, பரிசு தரப்படவில்லையெனினும் ஆண்டவர் அதனைப் பார்க்கிறார். நமது வேலை என்பது கடமையாக அல்ல ஆராதனையாக இருக்கட்டும். மனிதருக்காக அல்ல ஆண்டவருக்காக, பெருமைக்காக அல்ல ஆண்டவரின் மகிமைக்காக இருக்கட்டும். ஓர் ஆலயத்தில் பணிவிடை செய்த தூய்மைப்பணியாளரிடம் ஒருவர் கேட்டார், நீ இந்த ஆலயத்தின் உட்பகுதியையும், வெளிப்பகுதியையும் தூய்மைப்படுத்துகிறாயே, யாரும் உன்னைப் பாராட்டவில்லை என நினைக்கிறாயா? அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்; என் எஜமான் பார்க்கிறார். அவர் பாராட்டுவதே போதும். நமது ஆற்றலும், அறிவும் ஆண்டவரிடமிருந்து வந்தது. அவர் அருளால் அவைகளைப் பெற்றிருக்கிறோம். எனவே எப்படிப்பட்ட பணியில் நாம் இருந்தாலும் ஆண்டவர் நம்மேல் கண்ணோக்கமாய் இருக்கிறார். நாம் அவரது பணியாளர்கள் மட்டுமே என உணர்ந்து மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்யவேண்டும். ஆண்டவருக்காய் உழைப்பது வீண்போகாது (1 கொரி. 12: 28). ஆர்வம்மிக்க உள்ளத்தோடு ஆண்டவருக்கு பணிபுரியுங்கள் (உரோ. 12: 11). ஆண்டவருக்காகச் செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள் (கொலோ. 3: 24) என பவுலடியார் அர்ப்பணம் மிக்க பணியை, பணியாளரைக் குறிப்பிடுகிறார்.

திருமறை நமக்குக் காட்டுவது கடவுளே அனைத்துப் பணிவிடைகளின் ஆதாரம் நம் அனைத்துப் பணிகளும் ஆண்டவருக்கான வழிபாடுகளே. அனைத்துப் பணியாளர்களும் ஆண்டவருக்குப் பொறுப்பாண்மை உடையோர். அத்தகையோருக்கு ஆண்டவரின் ஆசி உண்டு, அங்கீகாரம் உண்டு. இயேசு கிறிஸ்து இறுதி விருந்தில் சீடர்களின் கால்களைக் கழுவி அன்புப் பணி செய்து தம்மை மாதிரியாகக் காட்டினார் (யோவா. 13: 1-10). D.L. மூடி சொன்னார்: நம்மில் பலர் கடவுளுக்காய்ப் பெரிதானவைகளைச் செய்ய ஆசைப்படுகிறோம். ஆனால் சிறிதானவைகளைச் செய்யத் தயங்குகிறோம். பேராயர் செல்வமணி

அவர்கள் சொன்னார்: பால் கறந்து விற்கும் மனிதரும் தன் தொழிலில் கலப்படம் செய்யாதிருந்தால் அதுவும் ஆண்டவருக்கான நமது திருப்பணிவிடையே.

நூறு நாள் வேலை செய்யும் கிளாரா என்ற பெண்மணி அடையாறு சாலையில் பணி செய்து கொண்டிருந்தார். அவர் குப்பை அள்ளும் போது தங்கச் சங்கிலி கிடைத்தது. வறுமைச் சூழலிலும் இது எனக்கு உரியதல்ல என உணர்ந்து அந்தப் பெண் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். காவல்துறை அதை உரியவரிடம் ஒப்படைத்தது. இச்செய்தி சமூக வலைத்தளங்களில் பரவ, முதலமைச்சர் அப்பெண்ணணை அழைத்துக் கௌரவித்தார். நமது அர்ப்பணிப்பும், இறைபயத்துடன் கூடிய பணிவிடையும் நமக்கு ஒருநாள் ஆண்டவர் அருளும் ஆசியைக் கொண்டு வரும். எனவே, நமது கரங்களில் தரப்பட்ட பணிவிடைகளை உண்மையாய் செய்து இறையாசி பெறுவோம்.

அருள்திரு. Y. லாறன்ஸ்

இறையியல் கல்வி: திருச்சபையை ஒரு கற்கும் சமூகமாக உருவாக்குவது

Theological Education: To Make the Church a Learning Community

நெகே. 8: 1-12 *1 கொரி. 14: 20-23*
திபா. 1 *மத். 13: 16-23*

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்துகொள்வார்கள்" (மத். 13: 23).

கிறிஸ்தவ இறையியல் கல்வி (Christian Theological Education) விவிலியத்தை இந்தியச் சூழலில் புரிந்து கொள்ளவும் மேலை நாட்டு விளக்கங்களை மட்டும் பின்பற்றாமல், இந்தியத் தத்துவம், இலக்கியம் மற்றும் வாழ்க்கை முறைகளின் வழியாக கடவுளின் வார்த்தையைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. நீண்டகாலமாக, இந்திய கிறிஸ்தவர்கள் மேலைநாட்டு கிறிஸ்தவ அடையாளத்தின் கீழ் இருந்து வந்தனர். இன்றைய இறையியல் கல்வி, ஓர் இந்தியராகவும், ஒரு கிறிஸ்தவராகவும் வாழ்வதற்கு ஊக்குவிக்கிறது. இந்தியக் கிறிஸ்தவம் என்பது இந்திய மண்ணில் விளைந்த, இந்திய கலாச்சாரத்துடன் பொருந்திப்போன ஒரு ஆன்மிகப் பயணமாக இருக்கவேண்டும் என்று A.J. அப்பசாமி கூறினார். இயேசு கிறிஸ்துவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, ஏழ்மை ஒழிப்பு, மற்றும் சமூக நீதிக்கான போராட்டத்தில் நம்மை ஈடுபடுத்துகிறது. சமய வன்முறைகளை தவிர்த்து, உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு மூலம் அமைதியான இணக்கத்தைக் கட்டியெழுப்ப உதவுகிறது.

இறையியல் கல்வி இந்தியச் சமூகத்தின் இதயத்தில் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், நீதியையும், சமாதானத்தையும் வேரூன்றச் செய்யும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். இது இந்தியாவின் பன்முகத்தன்மையை ஒரு சவாலாகக்காணாமல், ஒரு வளமாகக் கருதி, நீதி, அன்பு மற்றும் சமாதானத்தின் அரசைக் கட்டியெழுப்ப திருச்சபையைத் தயார்படுத்துகிறது. ஆகவே, இந்தியாவில் இறையியல் கல்வி என்பது ஒரு "ஆக்கபூர்வமான மற்றும் தீவிரமான நடைமுறை" ஆகும். இது இந்தியச் சமூகத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழமாகவும், பொருத்தமாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டாக்டர் C.J. சாமுவேல் கூறினார், இறையியல் கல்வி என்பது திருப்பணியாளர்கள் மட்டும் அல்ல, அனைத்து மக்களும் விவிலியத்தை

தங்கள் வாழ்வுடன் இணைக்க கற்றுக்கொள்ள வேண்டும் (Theological education must equip the laity to interpret Scripture and life together - The Cross and the Indian Context, 1975).

இறையியல் கல்வி என்பது வெறும் திருச்சபைப் பணியாளர்களைத் தயார்படுத்தும் பாடத்திட்டம் மட்டுமல்ல, மாறாக, ஒவ்வொரு மனிதரும் விவிலியத்தைப் புரிந்து கொண்டு வாழ்வில் அதைச் செயல்படுத்தும் சமூகமாக உருவாக்குவதுதான் இதன் நோக்கம். திருச்சபை ஒரு கற்கும் சமூகமாக உருவாக வேண்டும் என்பதைத் தியானிப்போம்

1. இறையியல் கல்வியும் கற்கும் சமூகமாகும் திருச்சபையும்: *(நெகே. 8: 1-12)*

யூத மக்கள் பாபிலோனியச் சிறையிருப்பு முடிந்து, தங்கள் நகரமும், மதில் சுவர்களும் நெகேமியாவின் தலைமையில் கட்டப்பட்ட பின்னர், ஒரு புதிய தேவையை உணர்ந்தார்கள். மதில் சுவர் கட்டப்பட்டுவிட்டது ஆனால் மக்களின் உள்ளங்களில் உள்ள சுவர்கள் இன்னும் உடைக்கப்படவேண்டும். மக்களின் உறவு கடவுளோடு புதுப்பிக்கப்படவேண்டும். அந்தப் பணிக்காக, அவர்கள் சபையாக, ஒன்று கூடினார்கள். எஸ்ரா மக்களுக்குக் கடவுளின் வார்த்தையை வாசித்தபோது மக்கள் ஒன்று சேர்ந்தனர் *(வ.1)*; சட்டம் வாசிக்கப்பட்டது *(வ.3)*; விளக்கம் அளிக்கப்பட்டது *(வ.8)*; மக்கள் புரிந்துகொண்டனர் *(வ.12)*.

1-ஆம் வசனம் கூறுகிறது: "அப்பொழுது ஜனங்களெல்லாரும் தங்கள் பட்டணங்களிலிருந்து தங்கள் குடும்பங்களோடே கூட ஒரே மனதாய் தண்ணீர் வாசலுக்கு முன்பாக இருக்கிற வீதியில் கூடினார்கள்." இங்கே, "ஒரே மனதாய்" என்ற சொல் முக்கியம். இது ஒரு கற்றல் சமூகத்தின் முதல் அடையாளம். குடும்பங்களோடு, பெரியோர், இளைஞர், ஆண், பெண் அனைவரும் சேர்ந்து கற்றுக்கொள்ள ஒன்று திரண்டனர். இது ஒரு தனிப்பட்ட ஆன்மிகத் தன்மை அல்ல; இது ஒரு கூட்டு, சமூகப் பயணம்.

எஸ்ரா கடவுளின் நியமப் புத்தகத்தைக் கொண்டு வந்து, அனைவர் முன்னிலையில் அதை வாசித்தார். வாசித்தது மட்டுமல்ல, -அதை வாசித்து, அதின் அர்த்தத்தைத் தெரிவித்து, வாசிக்கப்பட்டதை அவர்கள் புரிந்துகொள்ளும்படி செய்தார்" *(வ. 8)*. இதுவே இறையியல் கல்வியின் மையமான அழைப்பு. விவிலியத்தை வெறும் சடங்காக வாசிப்பது அல்ல; அதன் அர்த்தத்தைத் தெரிவித்து, மக்கள் அதைத் தங்கள் வாழ்க்கையில் புரிந்துகொள்ளச் செய்வது இன்றியமையாதது.

இந்தக் கற்றலின் உடனடிப் பலன் என்ன? மக்கள் விவிலிய வார்த்தையைக் கேட்டு, தங்கள் பாவங்களை உணர்ந்து, அழுதார்கள் *(வ. 9)*. விவிலியம் நம்மை நோக்கிப் பேசும்போது, அது நம்மை மாற்றுகிறது; நமது பாவங்களை வெளிப்படுத்தி மனந்திரும்பச் செய்கிறது. ஆனால் மனந்திரும்புதல் இறுதி நோக்கமல்ல; அது மகிழ்ச்சிக்கான

வாசல் (வ. 10). கற்றல் கடவுளை அனுபவிக்கும் ஒரு பயணம். அந்த அனுபவமே நமக்கு ஆழ்ந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

நெகே. 8: 12-இல், மக்கள் "புரிந்ததற்காக மகிழ்ந்தார்கள்". அறிவு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. கற்றல் ஆன்மிகப் புத்துணர்ச்சியைத் தருகிறது. அது திருச்சபையை ஒரு கற்கும், கற்றதன்படி வாழும் மற்றும் அன்பு செய்யும் (Learning-Living-Loving Community) சமூகமாக மாற்றுகிறது.

இன்றைய திருச்சபை இறைவழிபாடு, நற்செய்திப் பணி, சேவை, சாட்சியம் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடுகிறது. ஆனால் அடிப்படையில் கற்றல் முக்கியமானது. கற்றல் இல்லாத திருச்சபை, விவிலியத்தின் வெளிச்சமில்லாத ஒரு உடல் போலாகும். Y. கிறிஸ்துதாஸ் கூறினார், கற்றுக்கொள்கின்ற திருச்சபை உயிருள்ள திருச்சபை; ("A learning Church is a living Church" - The Church and Theological Education in India, 1992). கற்றலை நிறுத்தும் திருச்சபை உயிரற்ற சமூகமாகிவிடும்.

நெகேமியாவின் சபை நமக்கு ஒரு மாதிரியாக விளங்குகிறது. திருச்சபையின் ஒரு கற்றல் மையமாகவும், ஒவ்வோர் உறவும் ஒரு கற்பித்தல் தருணமாகவும், ஒவ்வொரு வழிபாடும் கடவுளோடும், அவர் வார்த்தையோடும் நம்மை ஆழமாகப் பிணைக்கும் ஒரு சந்திப்பாகவும் மாறுவதாக.

2. இறையியல் கல்வியும் ஆன்மிக முதிர்ச்சியும்: *(1 கொரி. 14: 20-23)*

திருத்தூதர் பவுல், இறையியல் கல்வி வழங்கும் ஆன்மிக முதிர்ச்சி பற்றி இந்தப் பகுதியில் தெளிவாக விளக்குகிறார்.

20ஆம் வசனத்தில் பவுல் கூறுகிறார், சகோதரர்களே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாக இருக்கவேண்டாம்; துர்க்குணத்திலே குழந்தைகளாகவும், புத்தியிலோ தேறினவர்களாகவும் இருங்கள். அதாவது, நம் சிந்தனையில், நம் புரிதலில், நம் ஆவிக்குரிய பகுத்தறிவில் நாம் முதிர்ச்சி பெற்றவர்களாக, முதியவர்களாக (releioi- தேர்ந்தவர்கள்) இருக்க வேண்டும் என்றார். ஒரு கற்றல் சமூகத்தின் முதல் அடையாளம், ஆவிக்குரிய குழந்தைத் தனத்திலிருந்து வெளியே வருவதே.

மூன்றாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த இறையியல் ஆசிரியரான ஆரிகன் (Origen) இதை வலியுறுத்துகிறார். "ஆவிக்குரிய விஷயங்களில் வளர, ஒருவர் திடமான உணவை விரும்பவேண்டும், பாலை அல்ல." (De Principiis, புத்தகம் 4, அதிகாரம் 2). இறையியல் கல்வியின் நோக்கம். திருச்சபையைத் திடமான உணவை- ஆழமான கடவுள் நம்பிக்கையின் அறிவை நோக்கி நடத்துவதாகும்.

கொரிந்து சபையில், ஆவிக்குரிய கொடைகள், குறிப்பாக அன்னிய மொழியில் பேசும்கொடை. ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது. சிலர் ஆவிக்குரிய அடையாளமாக இந்தக் கொடையைப் பெருமைப்படுத்தினர். ஆனால், அதன் மூலம் உருவான குழப்பத்தையும், சபையில் ஏற்பட்ட சீர்கேட்டையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார். 23-ஆம் வசனத்தில் பவுல் கேள்வி கேட்கிறார்: சபை முழுவதும் ஒன்றுகூடி, அனைவரும் அன்னிய மொழிகளில் பேசினால், திருச்சபைக்கு வரும் அறியாதவர் அல்லது நம்பாதவர். உங்களை பார்த்து "நீங்கள் பைத்தியக்காரர்கள்" என்று சொல்லமாட்டாரா? பவுல் சொல்கிறார்: உணர்ச்சியால் மட்டுமல்ல, புரிதலாலும் கல்வியாலும் வளரவேண்டும். அதுவே ஆன்மிக முதிர்ச்சி. அது திருச்சபையை உயிருள்ள, சிந்திக்கின்ற, கற்றுக்கொள்கின்ற சமூகமாக மாற்றுகிறது. இன்றைய திருச்சபை கற்றலின் ஆவியை இழந்து, உணர்ச்சியின் திருச்சபையாக மாறிக் கொண்டிருக்கிறது.

இங்கே தான் இறையியல் கல்வியின் இரண்டாவது அடித்தளத்தைக் காண்கிறோம். புரிந்து கொள்ளுதல் மற்றும் ஆன்மிக முதிர்ச்சி. திருச்சபையின் ஒவ்வொரு நடவடிக்கையும், ஒவ்வொரு தொழுகையும், ஒவ்வொரு பகிர்வும், அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில், அனைவரையும் கட்டமைக்கும் வகையில் இருக்கவேண்டும். இதன் நோக்கம் சமூக ஒற்றுமை மற்றும் வளர்ச்சி. திருச்சபை ஒழுங்காகவும், கட்டுக்கோப்போடும், கற்பித்தலை மையமாகக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். திருச்சபை கற்றுக்கொள்ளும் சமூகம் ஆகும்போது மட்டுமே, கிறிஸ்துவை இந்திய சூழலில் பிரதிபலிக்க முடியும். டாக்டர் C.J. சாமுவேல் கூறினார். இறையியல் கல்வி விலியத்தை வாழ்க்கையுடன் இணைக்க கற்றுத் தரவேண்டும். (Theological education must enable the laity to understand Scripture in relation to life - The Cross and the Indian Context,1975) அது புரிந்து கொள்ளுதல் மற்றும் ஆன்மிக முதிர்ச்சியுடைய திருச்சபையை உருவாக்கும்.

3. இறையியல் கல்வியும் நல்ல நிலமாக மாறும் திருச்சபையும்: *(மத். 13. 16-23)*

மத். 13: 16-23 வரையுள்ள வசனங்கள், விதைப்பவர் உவமையை மையமாகக் கொண்டுள்ளது. இயேசு விதையாகிய கடவுளின் வார்த்தை வெவ்வேறு இதயங்களில் எப்படி விதைக்கப் பெறுகிறது என்பதை விளக்குகிறார். மறுபுறம், இந்த வசனங்கள், ஒரு கற்றல் சமூகமாகிய சபையின் அடித்தளக் கூறுகளைப் பற்றியும் நமக்குச் சொல்கின்றன.

இயேசுவின் உவமையில் நான்கு நிலங்கள் காணப்படுகின்றன: 1. வழியோரம்-கேட்கிறார்கள் ஆனால் புரிந்து கொள்ளவில்லை. 2. பாறை-ஆழம் இல்லாதவர்கள். 3. முள்-உலகக் கவலைகளால் அடைபட்டவர்கள். 4. நல்ல நிலம்-கேட்டு, புரிந்து, பலன் அளிப்வர்கள். இது இறையியல் கல்வியின் நான்கு நிலைகளையும் காட்டுகிறது. 1. அறிவில்லாத நிலை-கேட்கிறார்கள்ஆனால் புரிவதில்லை, 2. ஆழமில்லாத நிலை-உணர்ச்சியில்

மட்டும் நிற்கிறார்கள், 3. மந்த நிலை-உலகச் சிந்தனைகளால் கல்வியில் மந்தம், 4. முழு விளைச்சல் நிலை-வாழ்வில் கற்றல் மூலம் பலன் அளிப்பவர்கள்.

ஆரிகன் (184-253 (C.E.) கூறினார், வார்த்தை விதை போன்றது; ஆனால் அது புரிந்துகொள்ளும் இதயத்தில் தான் வளர்கிறது. (The Word of God is like a seed. It needs the soil of understanding to grow (Homilies on Luke 21: 3). மத்தேயு 13:23-இல் இயேசு கூறினார், "வார்த்தையைக் கேட்டு, அதை புரிந்துகொள்கிறவர் பலனளிப்பார்..." இங்கே முக்கியமான சொல் "புரிந்து கொள்கிறவர்". இது வெறும் அறிவு அல்ல, அனுபவமான கற்றல். வார்த்தையை வாழ்வுடன் இணைத்துப் புரிந்துகொள்வது. இதுவே இறையியல் கல்வியின் அடிப்படை நோக்கம், அதாவது, கற்றல் (Education) -புரிதல் (Understanding) -செயல்பாடு (Fruitfulness). எப்போது இறையியல் கல்வி திருச்சபையை மாற்றும் என்று கேட்பவர்கள் புரிந்து கொண்டு பலனளிப்பவர்களாக மாறும் பொழுது அது நடைபெறும்.

திருச்சபையின் இன்றைய மிகப் பெரிய சவால் கேட்கிற காதுகளும், கற்றுக் கொள்ளாத மற்றும் புரிந்துகொள்ளாத இதயமும் ஆகும். ஆனால் இயேசு கிறிஸ்துவிதை (வார்த்தை) விளைச்சலைக் கொடுக்க, இதயம் கற்றுக்கொள்ளும் நிலமாக மாறவேண்டும் என அழைப்பு விடுக்கிறார். திருச்சபை கற்றுக்கொள்கின்ற சமூகமாக மாறும்போது மட்டுமே, அது கிறிஸ்துவின் உண்மையை உலகில் விதைத்து விளைச்சலை உருவாக்க முடியும்.

கிரகரி (Gergory of Naziansus) (329-390 CE) கூறினார். இறையியல் கல்வி என்பது கடவுளைப் பற்றி அறிதல் அல்ல. கடவுளுடன் வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வது (To learn theology is to learn how to live in God" (Oration 27.2). இறையியல் கல்வி என்பது திருச்சபையை நல்ல நிலமாக மாற்றும் செயல்முறையாகும். கடவுள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதைக் காண கண்களைத் திறப்போம். அவருடைய வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள, காதுகள் திறக்கப்பட ஒருவருக்கொருவர் உதவிசெய்வோம். உலகக் கவலைகளால் நிறைந்த கடினமான பாறை போன்ற இதயத்தையும் மென்மையான நல்ல, வளமான நிலமாக மாற்றுவோம்.

திருச்சபைகள் இறையியல் கல்வி மையங்கள். திருச்சபையில் விவிலியக் குழுக்கள் உருவாக்கி குழந்தைகள் முதல் முதியோர் வரை கற்றுக்கொள்ளும் சமூகமாக மாற இறையியல் கல்வி முக்கிய பங்களிப்பைத் தருகிறது. திருச்சபையில் சிறு "Theological Hubs" உருவாக்கி விவிலியத்தைக் கற்றுத்தருதல் ஆன்மிக முதிர்ச்சிக்கு வழி வகுக்கும்.

அருள்திரு. முனைவர் M. ஜஸ்டின் மோசஸ்

அருள்பொழிவுத் திருப்பணி: மேன்மை பெறுவதற்கன்று பணிவிடைபுரிய அழைப்பு

Ordained Ministry: Call to Serve not for Glory

எரே. 1: 4-10 *1 பேது. 5: 1-4*
திபா. 132 *மத். 20: 20-28*

"உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள்" (1 பேது. 5: 2).

சமயச் சடங்குகளைச் செய்பவரை குருக்களாக பார்க்கும் பார்வை எல்லா சமயங்களிலும் உள்ளன. இவர்களில் சிலர் முழுநேரப் பணியாளர்களாகவும் உள்ளனர். அது ஒரு தொழிலாகப் பலவேளைகளில் பார்க்கப்படுகிறது. கிறித்தவப் பின்னணியத்தில் அருட்பொழிவு திருப்பணி என்பது பணிச் செய்வதற்கான அழைப்பு என்னும் புரிதல் மேலோங்கி நிற்கிறது. அது அர்பணம் நிறைந்த பணியே ஆகும். எபி. 5:4-இன் படிமேலும், யாரும் இம்மதிப்புக்குரிய பணியைத் தாமேதேர்ந்து கொள்வதில்லை. ஆரோனுக்கு வந்தது போன்று கடவுளிடமிருந்து அழைப்பு வரவேண்டும். ஆக அருட்பணி செய்பவர் இறையவர் அழைப்பை பெற்றவராவார். தென்னிந்திய திருச்சபையின் சட்டத்தின் அடிப்படையில் அருட்பொழிவு திருப்பணி ஐந்து அம்சங்களை உள்ளடக்கியது. அவை அ). நற்செய்தி அறிவித்தல், ஆ). கிறித்தவ கூட்டுறவை வழிபாடு வழியாக, அருளுரை வழியாக, கிறித்தவ கல்வி வழியாக, ஆயர் கரிசனை வழியாக வெளிப்படுத்துதல், இ). அன்பு இரக்கம் வழியாக தேவையில் இருப்போர், புறக்கணிக்கப்பட்டவர்களுகு சேவை செய்தல், ஈ). படைப்பை பேணுதல் உ). சமூதாயத்தில் நீதியை நிலைநாட்டுதல் ஆகிய ஐந்தும் அருட்பொழிவு திருப்பணியில் நிறைவேற்ற வேண்டும்.

அருட்பொழிவு திருப்பணியில் ஒருங்கிணைவு, பொறுப்புடைமை மற்றும் கணக்கொப்புவித்தல் மூன்று செயல்கள் மிக முக்கியமானவை. (Integrity, responsibility and accountability). *பழைய ஏற்பாட்டில் அருள்;பொழிவு செய்யயப்பட்டவர்கள் கடவுளின் பணியைச் செய்துள்ளனர். மத். 16:1 5-19 -இல் "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று கூறிய பேதுருவிடம் "இந்தப் பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டுவேன்" என்றார் இயேசு கிறிஸ்து. இந்த பேதுரு தொடக்ககால திருச்சபையின் தலைமைப் பொறுப்பை நிர்வகித்து, அருள்பணியை சிறப்பாக நிறைவேற்றினார். அவர் தாம் எழுதிய கடிதத்தில் 1பேதுரு 5:1-4-இல் அருள்பொழிவுத் திருப்பணியை எந்த நிலையில் செயல்படுத்தவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அவை தரும்*

அறைகூவல் என்ன என்பதைச் சிந்தனைச் செய்வோம்.

1. அருள்பொழிவுத் திருப்பணி: மந்தை மேய்க்கும் பணி *(1 பேது. 5: 2)*

"மந்தை மேய்த்தல்" எளிமையான பணியல்ல, மிக கடினமான பணி ஆகும். எப்படியெனில் மந்தைக்கு ஆபத்து வராமல் மேய்க்கவேண்டும், மந்தைக்கு முன்சென்று மேய்க்க வேண்டும், மந்தையின் தேவை அறிந்து மேய்க்கவேண்டும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலர் தங்கள் மந்தைகளின் மேய்ச்சலுக்காக புலம் பெயர்ந்து சமூகமாக (migrated community) *வாழ்ந்தனர். மந்தைகளை மேய்த்து பாதுகாத்து வந்தனர். இஸ்ரயேலரும் கடவுளை ஆயராக பார்த்தனர். ஒரு ஆயர்தங்கள் மந்தையை மேய்த்து பாதுகாப்பது போல இறையவர் தங்களையும் பாதுகாக்கிறார், வழி நடத்துகிறார் என்பது அவர்களின் ஆழமான பற்றுறுதி. ஆகவே அவர்கள் கூறினார் "ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளி மீது இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்வார்" (திபா. 23: 1,2). புதிய ஏற்பாட்டில் இந்த மந்தை-ஆயர் கருத்தியலை இயேசு கிறிஸ்துவும் கையாளுகிறாஏ. யோ.10:11-இல்,-நல்ல ஆயர் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்". கிறிஸ்துவின் இந்த சாரத்தை மையப்படுத்தி திருத்தூதர்கள் திருப்பணியில் தங்களை ஈடுபடுத்தினர். இறைமகன் இயேசு கைதுச் செய்யப்பட்டு தலைமைக் குருவின் வீட்டு முற்றத்து விசாரணையின் போது அவரது சீடராகிய பேதுரு, இயேசு கிறிஸ்துவை யார் எனத் தெரியாது எனக் கூறி மூன்று முறை மறுதலித்தார் (லூக். 22: 54-60). இந்த பேதுருவை உயிர்த்த கிறிஸ்து திபேரியக் கடல் கரையில் சந்தித்தார், என்னுடைய மந்தையை மேய்ப்பாயாக என் மூன்றுமுறை கூறினார் (யோ. 21: 15-17). இத்தகைய அழைப்பு அல்லது அனுபவத்தை பெற்றுக் கொண்ட பேதுரு கிறிஸ்துவின் திருப்பணியை முதல் நூற்றாண்டில் தொடர்ந்தார். திருப்பணிக்கு நல்ல தலைமைத்துவம் கொடுத்தார். அவர் திருச்சபையை வழிநடத்தும் மூப்பர்களுக்கு அறிவுரை கூறும்போது உங்கள் பொறுப்பிலிருக்கும் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள் என்றார். மந்தை கடவுளுடையது அதனை மேய்க்கும் பணியினை நம் கரத்தில் தந்திருக்கிறார், அதனை அர்பணத்துடன் நிறைவேற்ற கூறுகிறார்.*

திருச்சபை உருவாக்கத்திற்கு பின் ஆயர் மந்தை உறவு அருள்பொழிவுத் திருப்பணியின் அச்சாரமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மந்தை மீது ஆயர் எப்போதும் பார்வை கொண்டிருக்க வேண்டும், மந்தையின் அசைவுகளை அறிந்திருக்க வேண்டும். அருள்பொழிவு பெற்ற ஒருவர் திருச்சபையை மந்தையாகப் பாவித்து, எல்லா நிலைகளிலும் மந்தையோடு ஒன்றித்து பயணிக்கிறவராக இருக்கவேண்டும். வழி தவறாமல் பாதை காட்டுபவராக, ஆபத்து நேரிடாமல் பாதுகாப்பவராக, உணவு தண்ணீர் தடையில்லாமல் கிடைக்கும் நிலையை உருவாக்குபவராக செயல்பட ஆயர்

கடைமைப்பட்டவர். ஆயர் ஆடுகளைத் தண்டித்து வழி நடத்துபவராக அல்ல, மாறாக அன்பு செய்து, தட்டிக் கொடுத்து, நெறிப்படுத்தி, இறைத்திருவுளத்தின்படி வழி நடத்தவேண்டும். இத்தகைய அருள்பொழிவுத் திருப்பணியை நிறைவேற்ற நம்மை அர்பணிப்போம்.

2. அருள்பொழிவுத் திருப்பணி: மந்தைக்கு முன்மாதிரியாகும் பணி
(1 பேது. 5: 3)

18-ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் இந்தியாவில் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்திற்கும் மைசூர் அரசுக்கும் இடையே நடைபெற்ற போர்களை ஆங்கிலய-மைசூர் போர்கள் என்று அழைக்கப்படுகிறது. கிழக்கிந்திய நிறுவனத்திற்கும், ஹைதர் அலிக்கும் இடையே நடந்த போரில் பலர் தங்கள் உயிர்களை இழந்தனர். பல சேதங்கள் ஏற்பட்டன. ஹைதர் அலியுடன் வீணாய் போரிட்டு தங்களை இழந்துப் போகவிரும்பாத கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகம் ஹைதர் அலியுடன் உடன்படிக்கைச் செய்ய விரும்பினர். அப்போது ஹைதர் அலி கிறிஸ்டியன் பிரடரிக் சுவாட்ஸ் அவர்களைச் சுட்டிக்காட்டி, அந்த கிறித்தவரை அழைத்து வாருங்கள் அவர் யாரையும் ஏமாற்றமாட்டார். அவர் சொன்னால் போதும் என்றார். ஒரு இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த அரசர் கிறித்தவ அருட்பணியாளரை குறித்து சொன்ன சான்று. அவர் சான்றாக சொல்லுமளவிற்கு கிறிஸ்டியன் பிரடரிக் சுவாட்ஸ் ஐயர் முன் மாதிரியாக வாழ்ந்தார், அருட்பணியைச் செய்தார்.

ஆயர் மந்தைக்கு முன் செல்லும் மாதிரி. நம் நாட்டில் மந்தைக்கு பின் செல்பவர் மேய்ப்பர். ஆனால் யூத மரபில் ஆயர் மந்தைக்கு முன் தான் செல்வார். மந்தை ஆயரை பின்பற்றிச் செல்லும். எனவே ஆயர் எப்போதும் தம் மந்தைக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். அருள்பொழிவு திருப்பணி கடவுள் கொடுத்த அழைப்பு. அதை கட்டாயத்தினாலோ, கடமைக்காகவோ செய்யக்கூடாது. ஊதியத்திற்காக செய்யாமல் விருப்போடு பணிச் செய்யுங்கள். அதிகாரத்தோடு, ஆளுகை மனநிலையில் அல்ல, மாறாக மந்தைக்கு முன் மாதிரிகளாக இருங்கள் என பேதுரு குறிப்பிடுகிறார். ஆடக்கி (இறுமாப்பாய்) ஆளுகை என்பது அதிகாரத்தால் கட்டுப்படுத்துவது ஆகும். கொடுங்கோல் ஆட்சியாளரின் தன்மை இது. அவரிடம் தன்னலம் நிறைந்திருக்கும். டக்ளஸ் என்ற தளபதியிடம், "ஒரு தலைவருக்கு தேவையான மிக முக்கிய குணம் எது?" என வினவியபோது ஒரே வார்த்தையில் சொன்னார் "தன்னலமின்மை". செபதேயுவின் மனைவி இயேசுவிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். "நீர் ஆட்சிபுரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவர் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவர் இடப்புறமும் அமரச்செய்யும்". இந்நிகழ்வு சீடர்களிடையே சினத்தை உருவாக்கியது. அப்போது இயேசு அவர்களிடம், பிற இனத்தவர்களின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றனர். அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தை காட்டுகிறார்கள். ஆனால் உங்களிடையே

அப்படி இருக்க கூடாது. உங்களிடையே பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராகவும், உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்கு பணியாளராக இருக்கட்டும் என்றார். இத்தகைய முன் மாதிரி தலைமையை கற்றுக்கொடுத்தார். ஆகவே பேதுருவும் மந்தைக்கு முன் மாதியுள்ள ஆயர்களாக இருங்கள் என வலியுறுத்துகிறார்.

3. அருள்பொழிவுத் திருப்பணி: கண்காணிக்கும் பணி *(1 பேது. 5: 3)*

கடவுள் இஸ்ரயேலரை வழி நடத்தும் கண்காணியர்களாக ஆடு மேய்க்கும் ஆயர்களை தேர்வு செய்கிறார். மோசே ஆடு மேய்ப்பவர் *(விப. 3)*, தாவீது ஆடு மேய்ப்பவர், மந்தையை பிற விலங்குகளிடமிருந்து பாதுகாத்தார் *(1சாமு. 17: 34,35)*. இந்த ஆயர்களைத் தான் இஸ்ரயேலரை மேய்க்கவும், இஸ்ரயேலின் கண்காணிகளாக பணிச் செய்யவும் கடவுள் பயன்படுத்தினார். பேதுரு இங்கு கூறும்போது மந்தையை கண்காணியுங்கள் என்கிறார். மந்தை எங்கே போகிறது, எங்கே வருகிறது, அதற்கு போதுமான உணவு கிடைக்கிறதா? அது வழி தப்பி செல்கிறதா எனக ண்காணிக்கவேண்டும். கண்காணிப்பு திருப்பணி மிகவும் கடினமானது. இந்த கண்காணிப் புஅருட்பணியை நிறைவேற்ற கண்டிப்பு, தாழ்மை, பெருமையில்லா வாழ்வு, பொறுமை தேவை என்பதை பேதுரு கூறுகிறார். கண்காணிப்பு பணிச் செய்பவர் எந்த நிலையிலும் அதிகாரத்தை அகந்தையோடு செயல்படுத்தாமல் அடக்கத்தோடு அறம் சார்ந்த செயல்படுத்தவேண்டும். கடவுளின் உண்மை பணிவிடையாளராக செயல்படவேண்டும்.

கண்காணிப்பு செய்யும் அருள்பொழிவு திருப்பணிக்கு இயேசு கிறிஸ்து சிறந்த சான்று. ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது என்னும் நாசரேத்தூர் அறிக்கையின்படி எளியவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வு பெறவும் தம் கண்காணிப்பு பணியை தொடர்ந்தார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு கொடுப்பது அவர் பணியாக இருந்தது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட பாவிகள், தாழ்த்தப்பட்ட சமாரியர்கள், புறக்கணிக்கப்பட்ட தொழுநோயளர்கள், வெறுக்கப்பட்ட வரி தண்டுபவர்கள் போன்றோர் வாழ்வுக்காக தம்மையே அர்பணித்தார். இந்த மக்களை ஏற்றுக்கொண்டார், அன்பு செய்தார், அவர்களின் உரிமைக்காக போராடினார். மக்களோடு இணைந்து பயணித்து கண்காணிக்கும் பணியை நிறைவேற்றினார். தாய் தன் குழந்தையின் தேவையை மட்டும் அறிவது கிடையாது, மாறாக தம் குழந்தையை முழுமையாக கண்காணிப்பாள். தம் குழந்தைக்கு ஏதாவது உடல்நலக் குறைவு, ஏதாவது கெடுதி ஏற்பட்டால் அக்குழந்தையின் மீது பாசம் கொண்டு அக்கரையோடு, பரிவோடு, கரிசனையோடு உண்ணாமலும், உறங்காமலும் அருகிலிருந்து பார்த்துக் கொள்வார். அதுபோல் ஆடுகளைக ண்காணிக்கும் ஆயர் தம் ஆடுகள் மீது மிகுந்த அக்கரை கொண்டிருப்பார். இதை இறைமகன்

இயேசு கிறிஸ்துவின் வார்த்தையினின்று அறியலாம். "அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப் போல இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு அவர்களுக்கு பலவற்றைக் கற்பித்தார்" (மாற். 6: 34). ஆயர் ஒருவரிடம் இருந்த நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற்போனால் அந்த ஆயர் 99 ஆடுகளையும் பாலைநிலத்தில் விட்டுவிட்டு மிகுந்த ஏக்கத்தோடு தேடி கண்டுபிடித்து, அவற்றை தம் தோள் மேல் போட்டுக் கொண்டு வந்து மகிழ்வார் (லூக். 15: 4-7) இது ஆயருடைய அர்பணிப்புள்ள கண்காணிப்பு பணி.

ஆன்மிக நிலையிலிருந்து விலகி ஆண்டவரற்ற செயல்பாடுகள் தங்கள் மட்டும் முன்னிலைப்படுததும் நினைப்புடன் வேடதாரிகள் பக்தி முகமூடி அணிந்து வலம் வரும் காலத்தில் அருள்பொழிவுத் திருப்பணியில் அழைக்கப்பெற்றுள்ள ஒவ்வொருவரும் இறைவாக்கினர் எரேமியா 91: 4-10) போன்று அழைப்பிற்கேற்ற அர்ப்பணிப்போடும், ஆண்டவரின் தெரிந்தெடுத்தலில் அவரது வாயாகவும் செயல்படுவோம். கல்வாரி திருச்சிலுவையின் வழிகாட்டுதலில் அவரது திருவுதிரத்தில் திருநிலைப் பெற்றோராய் திருவாக்கினை தியானிப்போராய் இறை திருவுளம் அறிந்து இறையாட்சிப் பணியை தொடருவோம், இறையாசி பெறுவோம்.

அருள்திரு. அறிவர் S. அருள் ஜெபசிங்

திருமணம்: ஒன்றிப்பு மற்றும் கூட்டுப்பங்காண்மையின் கொண்டாட்டம்

Marriage: Celebration of Unity and Partnership

சஉ. 4: 9-12 *எபே. 5: 21-33*
திபா. 128 *மத். 19: 4-6*

"...முப்புரிக் கயிறு அறுவது கடினம்" (சஉ. 4: 12).

மனித இனம் சேர்ந்து வாழும் பண்பை அடிப்படையாகப் பெற்றிருக்கிறது. அப்பண்பின் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உருவாகும் பந்தம்தான் திருமணம். வாழ்க்கைப் பயணத்தில் திருமணம் மிக முக்கிமான நிகழ்வு ஆகும். திருமணம் என்பது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனிதமான சமூக அமைப்பு ஆகும். "திரு" என்றச் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு போன்ற அர்த்தங்களைத் தருகிறது. எனவே, அழகு, செல்வம், செம்மை, சிறப்பு ஆகியவை அனைத்தும் மணமக்களிடையே சேரவேண்டும் என்பதால் "திருமணம்" என்றச் சொல் பழங்காலத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தப்படுகிறது. ஒரு தனி மனிதனைக் குடும்பமாக வாழ வைப்பதற்குப் பெற்றோராலும் உற்றோராலும் நடத்தி வைக்கும் சிறப்பு நிகழ்வுதான் திருமணம் என்று அறிஞர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

திருமணம் வரைக்கும் திருதிருவென முழித்துக்கொண்டு திரிந்தவன் திருமணமான பின்பு சமுகம் மதிக்கின்ற திருவாக மாறுகிறான். பெண் திருமதியாகிறாள். பொறுப்பற்றுத் திரிந்தவர்கள் ஒருவருக்கொருவர் பொறுப்பாளியாகிறார்கள் என்று க்ரியாவின் தற்கால அகராதி விளக்கம் தருகிறது. தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் அவர்கள், திருமணம் செய்யுங்கள். மனைவியிடம் அன்பாயிருந்தால் கவிஞன், இல்லாவிட்டால் தத்துவ ஞானி என்றார். "முப்புரிக் கயிறு அறுவது கடினம்" என்று சபை உரையாளர் (பிரசங்கி) குறிப்பிடுகிறார். திருமண வாழ்வில் ஒற்றுமை மற்றும் பங்காண்மையின் கொண்டாட்டமாக அமைய திருமறை தரும் ஆலோசனைகளை தியானிப்போம்.

1. ஒருமித்த கருத்துடன் வாழுங்கள்:

"...முப்புரிக் கயிறு அறுவது கடினம்" (சஉ. 4: 12)

ஒருமித்த கருத்து குடும்ப வாழ்வில் நன்மை பயக்கும். ஒருமித்த கருத்து இல்லையேல் குடும்பத்தில் பிரிவினை வந்துவிடுகிறது. கணவன், மனைவி, பிள்ளைகள் இணைந்து முப்புரிக் கயிறாக இணைந்து காணப்பட வேண்டும். இதைத்தான் சபை உரையாளர் முப்புரிக் கயிறு அறுவது கடினம் என்கிறார்.

2 அரசர்கள் 4: 8-18 - இறைவாக்கினர் எலிசா சூனேம் நகருக்குச் சென்றார். அந்நகரில் வாழ்ந்த பணக்கார பெண் ஒருவர் இறைவாக்கினரை உணவு உட்கொள்வதற்காக தனது இல்லம் வரும்படி வருந்தி அழைத்தார். இந்நிகழ்வுக்கு பின் எலிசா அவ்வழியே சென்ற போதெல்லாம் அவ்வில்லம் சென்று உணவு உட்கொள்வது வழக்கம். இச்சூழலில் பணக்கார பெண் தன் கணவரிடத்தில் அடிக்கடி நம் இல்லத்திற்கு வரும் இறைவாக்கினருக்கு நம் இல்லத்தின் மேல் தளத்தில் சிறு அறை ஒன்றைக் கட்டி, அதில் படுக்கை, மேசை, நாற்காலி, விளக்கு முதலியவற்றை தயார் படுத்தி வைப்போம். அவர் வரும் போதெல்லாம் அங்கே தங்கி செல்லட்டும் என்றார். கணவர் மனைவி ஒருமித்த கருத்துடன் இணைந்து செயல்பட்டனர். இல்லற வாழ்வின் குறைகள் மாற உதவியது. சந்தேகம் இல்லா வாழ்வு வாழ உதவியது.

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்சென்ட் சர்ச்சில் அவர்களிடம் உங்கள் வாழ்வில் மகிழ்வான அல்லது மறக்க முடியாத நாள் எது? என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலாக நானும் என் மனைவியும் திருமணம் என்ற உறவில் இணைந்த நாளே மகிழ்வான மறக்க முடியாத நாள். என் வெற்றிக்கு என் மனைவியே காரணம். ஏனெனில் நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒருமித்த கருத்துடன் இணைந்து பயணிக்கிறோம் என்றார். இதைத்தான் மத். 19: 6-இல் குடும்ப வாழ்வு குறித்து சொன்ன இயேசுகிறிஸ்து "அவர்கள் இருவர் அல்ல, ஒரே உடல்" என்றார்.

நமது குடும்ப வாழ்வில் இணைந்து திட்டமிடுதல் நல்ல இணக்கத்தை ஏற்படுத்தும். முப்புரி நூல் போல் உறுதியாக இருக்கும் என்பதை உணர்ந்து செயல்பட்டு நல்ல குடும்பத்தை கட்டியெழுப்ப முயற்சிப்போம்.

2. ஒருவருக்கொருவர் உணர்வுகளை மதியுங்கள்:

திருமணம் ஒற்றுமை மற்றும் பங்காண்மையின் கொண்டாட்டமாக இருக்க வேண்டுமென்றால் கணவர், மனைவி ஒருவருக்கொருவர் உணர்வுகளை மதித்து நடத்தல் அவசியம். கணவர், மனைவி இடையே முரண்பாடுகள் பல எழும்பலாம். ஆனால், ஒருவர் மற்றவர்களின் முரண்பாடுகளையும், உடன்பாடுகளையும், வேதனைகளையும், எண்ணங்களையும், உணர்வுகளையும் மதித்தால் வாழ்வு கரும்பாக இனிக்கும். முரண்பாடுகளை களைந்தால் வாழ்வு சிறக்கும். உணர்வுகள் மதிக்கப்படும்போது குடும்ப வாழ்வில் ஈடுபாடும், அன்பும் கூட்டுறவும் இருக்கும். எபே. 5: 21-33-இல் கணவர் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, சுயநலம் தவிர்த்து ஒருவரை ஒருவர் மதித்து கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒன்றித்து வாழ வேண்டும் என்று பவுலார் ஆலோசனை சொல்லுகிறார். தொ.நூ. 18: 1-14 - மம்ரே என்ற இடத்தில் பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில் மூன்று மனிதர்கள் தம் அருகில் நிற்பதைக் கண்டார்.

அம்மனிதர்களை ஆபிரகாம் உபசரிக்கின்றார். தன் மனைவி சாராளிடம் உணவு ஆயத்தம் செய்யச் சொல்லுகின்றார். தம் கணவரின் உணர்வுகளை புரிந்துகொண்ட சாராள் அதை மதித்து கணவரின் உபசரிக்கும் பண்பில் தன்னை இணைத்துக்கொண்டார். இதில் மகிழ்ந்த மனிதர்கள் ஆபிரகாம் சாராள் தம்பதியை வாழ்த்தி சென்றனர். கடவுளின் வாக்குறுதி நிறைவேறி இல்லற வாழ்வில் மகிழ்வு ஏற்பட்டது.

உணர்வுகள் மதிக்கப்படும்போது குடும்ப வாழ்வில் ஒற்றுமையும் கொண்டாட்டமும் ஏற்படுகிறது. நம் குடும்ப வாழ்வில் ஒருவருக்கொருவர் உணர்வுகளை மதிக்கின்ற பண்பு இன்று குறைந்துவிட்டது. இதனால் பிரிவினைகள் பெருகிவிட்டன. எனவே, இத்தவறு உணர்ந்து உணர்வுகளை மதித்து முன்னேறிச் செல்வோம்.

3. ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுங்கள்:

குடும்ப வாழ்வில் விரிசல்கள் பெருகிவிட்ட காலகட்டம் இது. கடவுள் மணவிலக்கை ஆதரிப்பவர் அல்ல. மணமுறிவை நான் வெறுக்கிறேன். மணமுறிவு செய்கிறவன் வன்முறையை மேலாடை கொண்டு மறைக்கிறான் என்று ஆண்டவர் சொல்வதாக மலாக்கி *2: 16*-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகு மணமுறிவுக்கு காரணம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் தன்மையற்ற நிலையே ஆகும்.

ரூத் தனது மாமியார் நகோமியைச் சரியாக புரிந்து கொண்டார். எனவேதான் மாமியார் நகோமியை பின்தொடர்ந்து ஆசி பெற்றார் (ரூத். *1*). இத்தகைய புரிந்துகொள்ளுதல் நம் குடும்பத்தில் தேவை. கணவர், மனைவி, மாமனார், மாமியார், பிள்ளைகள் இடையில் உண்மையாக புரிந்துகொள்ளுதல் இருந்தால் மகிழ்ச்சி உண்டு. புரிந்துகொள்ளுதல் இருக்கும் இடத்தில் அன்பு, விட்டுக்கொடுத்தல், மகிழ்ச்சி ஆகியவை தானாகவே வந்துவிடும். மத். *1: 18-25*-இல் மரியாள் யோசேப்பு தம்பதியரின் குடும்ப வாழ்வில் புரிந்துகொள்ளுதல் இருந்தபடியால் இயேசு குழந்தை பிறக்கும் வரை யோசேப்பு தன் ஆசைகளை விட்டுக்கொடுத்தார். தன் சந்தேகத்தை விட்டுவிட்டார். கண்ணும் கருத்துமாக தனது மனைவியைப் பாதுகாத்தார்.

அமெரிக்காவின் *33*-ஆவது அதிபரான ஹாரி S. ட்ரூமன் (Harry S. Truman) உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அப்போரில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். போர்க்களத்திலிருந்து தனது மனைவிக்கு கடிதம் எழுதினார். இந்த கடினமான காலத்திலும் மனைவிக்கு கடிதம் எழுத வேண்டுமா? என்று கேள்வி எழுந்தபோது, என் மனைவி கவலைப்படக் கூடாது. நான் நன்றாக இருப்பதை அவர் அறிய வேண்டும் என்றான். இது இவர்கள் வாழ்வில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுதலை வெளிப்படுத்துகிறது.

புரிந்துகொள்ளுதல் நம்பிக்கை துரோகத்தை மறையச் செய்கிறது. "நம்மை இணைத்தவர் கடவுள்" என்ற புரிந்துகொள்ளுதல் இருக்கும்வரை

வரும் மணந்த மனைவிக்கு நம்பிக்கைத்துரோகம் செய்யமாட்டார் (மலா. 2: 14, 15) என்று மலாக்கி இறைவாக்கினர் குறிப்பிட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்து கணவன் மனைவி ஒரே உடல் என்பதை புரிந்து வாழ வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் (மத். 19: 5-7).

புரிந்துகொள்ளும் இடத்தில் சந்தேகம் இல்லை. நான் என்ற ஆணவ பேச்சு இல்லை. சுயநலம் இல்லை. வன்முறை இல்லை. மணவிலக்கு இல்லை. மாறாக, விட்டுக்கொடுத்தல், பரிவு, அரவணைப்பு, மகிழ்ச்சி ஆகியவை உண்டு. எனவே, ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு திருமண வாழ்வில் கொண்டாட்டத்தை ஏற்படுத்த முற்படுவோம்.

அன்பர்களே! முப்புரிக் கயிறு அறுவது கடினம் என்ற சபை உரையாளரின் திருவாக்கிற்கிணங்க ஒருமித்த கருத்து, ஒருவருக்கொருவர் உணர்வுகளை மதித்து ஒருவரையொருவர் புரிந்துகொண்டு திருமண வாழ்வில் ஒற்றுமை மற்றும் பங்காண்மையின் கொண்டாட்டமாக அமைந்திட முற்பட்டு இறையாசி பெறுவோம்.

அருள்திரு. R. டேவிட் ஜெபசிங்

அருள்பணி: மனதுருக்கம் செயல்வடிவில்

Mission: Compassion in Action

எசா. 58: 6-10 *1 யோவா. 3: 16-18*
திபா. 82 *மத். 9: 35-38*

திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார்; அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டுச் சோர்ந்து காணப்பட்டார்கள். (மத். 9: 36)

மனதுருக்கம் என்பது விருப்பத்திற்குரியது அல்ல; அது கடவுளின் அருளின் செயல். மனதுருக்கம் இறைவனுடைய மீட்பின் பணியுடன் ஒன்றித்திருப்பது. நீதியிலிருந்து பிரிக்க முடியாததுமாகும். இரக்கமும், நீதியும் அன்பின் இரண்டு அளவீடுகளாக பார்க்கப்படுகிறது. பசித்தவர்களுக்கு உணவளித்தல், ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை அளித்தல், நோயாளிகளை பராமரித்தல் போன்றவைகள் இரக்கத்தின் உடல் சார்ந்த செயல்கள் ஆகும். இவைகள் திருச்சபை வாழ்வில் முக்கியமான பணிவிடையாகும். இரக்கத்தை மறுப்பது என்பது ஏழைகளில் கிறிஸ்துவை மறுப்பதாகும் (மத் 25). ஒரு விசுவாசி மனதுருத்தத்தை வெளிப்படுத்தும்போது அவர் இறை வாழ்க்கையில் பங்கேற்கிறார்; கிறிஸ்தவ அடையாளத்திற்கு இரக்கம் மிகவும் அவசியம்.

1. மனதுருக்கம்: கடவுள் விரும்பும் நோன்பு (Compassion is the fast, God Chooses)

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! (எசா. 58: 6).

கடவுளின் விருப்பமென்ன என்பதைக் குறிப்பிடுகின்ற எசாயா இறைவாக்கினர், அன்றைய காலத்தில் காணப்பட்ட அநீதியான செயல்களைக் கண்டித்தார். முறையான நோன்பு என்பது வெறும் உணவை மட்டும் தவிர்ப்பது அல்ல; மாறாக நீதிக்கும், எளியோருக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். கடவுளின் எதிர்பார்ப்பு ஒவ்வொருவரும் மாண்புடன் வாழ வேண்டும் என்பதாகும். இதைத் தவிர்த்து மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் வழிபாட்டு முறைமைகளையும், சடங்குகளையும் கடவுள் நிராகரிக்கிறார். மக்களின்

உரிமைகளை நசுக்கும் கொடுமைத்தளைகளான சட்டங்களும், வாழ்வாதாரத்தை சிதைக்கும் அதிகாரங்களும் அடிமைப்படுத்தி அச்சுறுத்தும் கொடுங்கோன்மையும் இறை நீதிக்கும், இறை மனதுருக்கத்துக்கும் எதிரானவை என்பதையே எசாயா தெளிவுபடுத்துகிறார். ஆகவே ஆன்மீக ஒழுங்காகும் கடைபிடிக்கப்படும் நோன்பு இறைவனால் ஏற்படுத்தப்படுவதற்கு வாழ்வியல் மாற்றம் தேவை என்பதை முக்கிய படுத்துவதாகும். மதிக்கப்படுவதும் மாண்புடன் நடத்தப்படுவதும் நோன்பின் அடையாளச் செயலாகும். அதுவே அர்ப்பணிப்புள்ள அருட்பணியின் அளவீடாகும். சமூக கட்டமைப்பில் மறுக்கப்பட்டவர்களை தேடுவதும் . அவர்களின் உரிமையை நிலை நாட்டுவதும் அவர்களின் இயக்கங்கள் ஏமாற்றங்கள் இவைகளில் இருந்து மீட்டெடுத்து நம்பிக்கை ஊட்டுவதும் மனதுருக்கத்தின் இறை வெளிப்பாடாகும். அன்பும், அக்கறையும் கொண்டோராய் தேவையில் இருப்பவரின் தேவைகளை கண்டறிந்து அவர்களுக்குள் வருங்கால நம்பிக்கை ஏற்படுத்துவது என்பது முக்கியமானதாகும். அதைத் தவிர்த்து நோன்பு என்ற நிலையில் பிதற்றும் எந்தவொருச் செயலையும் நிராகரிக்கிறார். ஆகவே உண்மையுடன் அருட்பணியின் பார்வையாக மானிட நலம், எளியோர் மற்றும் இயலாதோருக்கு உதவி செய்தல் எனும் உயரிய ஒப்படைப்புடன் இணைந்து செயல்படுவோம்.

2. மனதுருக்கம்: அன்பின் வெளிப்பாடு

பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். (1 யோவா. 3: 18)

யோவான் எழுதும் தொடக்ககாலத் திருச்சபை தவறான ஆன்மீகத்தால் அச்சுறுத்தப்பட்டது; அறிவை நேசித்த ஆனால் மக்களை புறக்கணித்த ஆன்மீகம். நாங்கள் கடவுளை அறிவோம் எங்களுக்கு ஆழமான நுண்ணறிவு உள்ளது நாங்கள் ஆன்மீக ரீதியாக முன்னேறியவர்கள் என்றனர். ஆனால், வாழ்வில் கிறிஸ்துவின் அன்பைக் காட்ட தவறினர்; கடவுளை அறிவோம் என்றனர்; சுற்றிலும் துன்புறும் விசுவாசிகளுக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்ய தவறிப் போயினர். அன்பின் தர நிலை சிலுவையாகும். யோவான் உணர்ச்சியுடன் அல்ல; கிறிஸ்துவின் செயலுடன் தொடங்குகிறார். கிறிஸ்துவ அன்பு சிலுவை வடிவமானது; இயேசுவின் தியாகத்தால் வடிவமைக்கப்பட்டது. யோவானின் தர்க்கம் அறுவை சிகிச்சை சார்ந்தது இறை அன்பு நம்மில் இருந்தால் கருணை நம்மிடமிருந்து வரவேண்டும். முன்னை காலத்தில் நலன்புரி அமைப்பு இல்லை; அரசாங்க மருத்துவமனை இல்லை; கைம்பெண்கள், ஆதரவற்றோர், தொழுநோயாளிகள், கைவிடப்பட்ட

குழந்தைகள் அனைவரும் நிராகரிக்கப்பட்டனர். கிறிஸ்தவ சமூகம் கேள்விப்படாத ஒன்றை செய்து உலகை திகைக்க வைத்தது. அவர்கள் தியாகத்துடன் நேசித்தார்கள், கைவிடப்பட்டவர்களுக்கு உணவளித்தனர், நோயாளிகளை பராமரித்தனர், மறக்கப்பட்டவர்களை அடக்கம் செய்தார்கள், தங்கள் வளங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவம் வாதங்களால் வளர்ந்தது அல்ல; ஆனால் செயலின் இரக்கத்தினால் வளர்ந்தது. யோவான் வலியுறுத்துகிறார் செயல் இல்லா அன்பு ஒரு பொய். இரக்கம் இல்லா விசுவாசம் செத்தது. தன் சகோதரன் தேவையில் இருப்பதை கண்டு தன் இருதயத்தை மூடினால் கடவுளின் அன்பு எப்படி அவனில் நிலைத்திருக்கும்? "இதயத்தை மூடு" என்ற கிரேக்க சொல்லின் பொருள் வாழ்க்கையை பூட்டுவது இரக்கத்தை ஒரு வாயிலுக்கு பின்னால் மூடுவது.

3. மனதுருக்கம்: கிறிஸ்துவின் அருட்பணியின் இதயம்

அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி, -அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. (மத். 9: 37)

இயேசு நகரங்கள் மற்றும் கிராமங்கள் வழியாக நடந்து கற்பித்து; இறையரசை போதித்து; நோய்களை குணப்படுத்தி; ஒவ்வொரு இடத்திலும் துன்பங்களை எதிர்கொள்வதை மத்தேயு நமக்கு காட்டுகிறார். இயேசு கூட்டத்தைக் கண்டார்; அவர்கள் மீது இரக்கம் கொண்டார்; ஏனெனில், அவர்கள் துன்புறுத்தப்பட்டு உதவியற்றவர்களாக இருந்தனர். பொருளாதாரரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டனர். அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டனர். சட்டம் சார்ந்து , சமயம் சார்ந்து நசுக்கப்பட்டனர். உடல் சார்ந்து நோய்வாய்ப்பட்டனர். ஆன்மீக ரீதியாக தொலைந்து போயினர். இயேசு இரக்கத்துடன் பதிலளிக்கிறார். கிறிஸ்துவின் இரக்கம் செயலில் உள்ளது கிறிஸ்துவின் இரக்கம் பரிதாபம் அல்ல; அது இயக்கம்.

அவர் கற்பிக்கிறார் - ஏனெனில் அறியாமை நசுக்குகிறது
அவர் குணப்படுத்துகிறார் - ஏனெனில் நோய் நீங்குகிறது
அவர் அறிவிக்கிறார் ஏனெனில் - நம்பிக்கை அவசியம்
அவர் தேர்ந்தெடுக்கிறார் - ஏனெனில் கண்ணியம் முக்கியமானது
அவர் உணவளிக்கிறார் - ஏனெனில் பசி அவமானப்படுத்துகிறது

திருச்சபை இந்த திருப்பணியைச் செய்ய கட்டளைப் பெறப்பட்டுள்ளது; அறுவடை ஏராளமாக உள்ளது; ஆனால் வேலையாட்கள் குறைவு.

உடைந்தவர்கள் - காத்திருக்கிறார்கள்; காயமடைந்தவர்கள் - தேடுகிறார்கள், ஒடுக்கப்பட்டவர்கள் - கூக்குரல் இடுகின்றனர்; பற்றாக்குறைத் திருச்சபையில் உள்ளது; இரக்கத்திலுள்ளது - அருட்பணியால் உருவாக்கப்பட்ட கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், விடுதிகள், மறுவாழ்வு இல்லங்கள், சமூக சேவை மையங்கள். இவை அனைத்தும் பக்க திருப்பணிகள் அல்ல; அவை கிறிஸ்துவின் இரத்தத்தில் புலப்படும் அடையாளங்களாக இருந்தன. திருச்சபை இரக்கத்தை மறந்த இடங்களில் எல்லாம் இறைத்தன்மையை இழந்து போனது ; திருச்சபை இரக்கத்தை கடைபிடித்த இடங்களில் எல்லாம் நம்பகத்தன்மையுடன் எழுச்சிப் பெற்றுள்ளது

இன்றைய திருச்சபைக்கான அழைப்பை, கடவுள் தெளிவாக பேசுகிறார். எசாயா நமக்குச் சொல்லுகிறார், நீதியில்லாத வழிபாடு கடவுளை புண்படுத்துகின்றது; யோவான் நமக்கு சொல்லுகிறார், தாழ்மையில்லாத விசுவாசம் போலியானது, மத்தேயு நமக்குச் சொல்லுகிறார், இரக்கமில்லாத பணிவு கிறிஸ்துவின் பணி அல்ல. திருச்சபை கிறிஸ்துவின் காணக்கூடிய இரக்கமாக இருக்க அழைக்கப்பட்டுள்ளது . இறைமக்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவின் முதன்மையான நோக்கமாக திருச்சபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு சீடத்துவ அருட்பணி நிறைவேற்றுவது என்ற அறிதலோடு இறையன்பை இதயத்தில் பதித்து பிறருக்கு முழு மனதுடன் அர்ப்பணிப்பு உணர்வுடனும் வழங்கிடுவோம். இயேசுவின் இறையாட்சி பணியில் மனதுருக்கத்துடன் முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. அறிவர் T. ராஜன்

கிறிஸ்துவில் அடையாளம் திருமுழுக்கால் அடையாளமிடப்படுதல்

Identity in Christ Marked by Baptism

தொநூ. 11: 7-24 *1 பேது. 3: 18-22*
திபா. 32 *யோவா. 3: 1-8*

. . . தண்ணீரானது திருமுழுக்கிற்கு முன்னடையாளம். இத்திருமுழுக்கு உடலின் அழுக்கைப் போக்கும் செயல் அல்ல; அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்குத் தரும் வாக்குறுதி ஆகும் (1 பேது. 3: 21).

அடையாளம் (Identity) என்பது பொதுவாக ஒருவரது இயல்பையும், தனிதத்துவத்தையும் பிரதிபலிக்கும் தன்மையாகும். இது ஒருவரின் பண்புகள், நம்பிக்கைகள், நடைமுறை மற்றும நோக்கங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும்.

கிறிஸ்துவில் அடையாளம் (Identity in Christ) என்பது ஒருவர் இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுகொண்ட பின்னர் அவரது வாழ்வு மாற்றம் கண்டு, வாழ்க்கை, நோக்கம் மற்றும் மதிப்பு அனைத்தும் கிறிஸ்துவோடு இணைந்து காணப்படும் நிலை ஆகும். அதாவது கிறிஸ்துவோடு இணைநத புதிய உறவு, புதிய வாழ்வு, புதிய எதிர்நோக்கு இவைகளால் வரையறுக்கப்பட்ட வாழ்க்கை. திருமுழுக்கு இதற்கான வெளிப்படையான அடையாளம். இது இறைப்பற்றாளரின் உள்ளார்ந்த மாற்றத்துக்கும் கிறிஸ்துவோடு ஒன்றுபட்ட புதிய வாழ்க்கைக்குமான முத்திரையுமாகும்.

1. கிறிஸ்துவில் புதுஉறவுக்கான அடையாளம் திருமுழுக்கு:

கிறிஸ்து உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களை கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார் . . . ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர்பெற்றெழுந்தார் (1 பேது. 4: 18).

இந்த திருவார்த்தையில் கொண்டு சேர்க்கவே என்ற சொல்லுக்கு கிரேக்க மொழியில் Prosagage என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் வேர்ச்சொல் Prosago என்பதாகும். இது நெருங்கிய உறவுக்குள் கொண்டு வருதல் என்கின்ற ஆழமான பொருளை உள்ளடக்கி நிற்கிறது.

கடவுளுக்கும் மனிதனுக்குமான நல்லுறவினை பாவம் பிரித்திருந்தது. பாவத்தால் முறிந்த உறவை மீட்டெடுக்க மனிதன் இயலாதவனாக இருந்தபொழுது கடவுள் தமது ஒரே மைந்தரான இயேசு கிறிஸ்துவை இந்த உலகினுக்கு பாவ நிவாரணமாக (Atonement) தந்தார். இயேசு கிறிஸ்து நமக்காக நமக்கு பதிலாக மரித்தார் (Substitution). பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்க மரித்தார் (Redemption) . அனைத்துக்கும் மேலாக கடவுளோடு நல்லுறவு ஏற்பட (Reconciliation) மரித்து உயிர்பெற்றெழுந்தார்.

திருமுழுக்கு என்பது கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்கேற்பதன் அடையாளமாகும் (ரோமர். 6: 4, 5). இதனூடாய் இறைப்பற்றாளர் ஒருவர் பாவத்துக்கென்று மாண்டவராயும் கடவுளோடு ஐக்கியப்படும் நிலைவாழ்வுக்கொன்று உயிர்த்தெழும் அனுபவத்தையும் பெறுகின்றார். பாவத்தால் தொலைந்த உறவைச் சீர் செய்து கடவுளினுடனாக நல்லுறவை கிறிஸ்துவுக்குள் நிலைநிறுத்துகிறார். இந்த நல்லுறவில் நிலைத்து நிற்க குற்றமற்ற மனசான்றுடன் கடவுளுக்கு வாக்குறுதி தருகிறார் (1 பேது. 3: 21) தொடர்ந்து கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் ஐக்கியமுமாகிறார் (1 கொரி. 12: 12).

2. கிறிஸ்துவில் புதுவாழ்வுக்கான அடையாளம் திருமுழுக்கு:

மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர் (யோவா. 3: 6)

பரிசேயரான நிக்கதேமு யூத தலைவர்களில் ஒருவராகவும், யூத சமய போதகராகவும் இருந்தார் (யோவா. 3: 1, 10). இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையினை உணர்ந்து ஒப்புக்கொண்டு அவருடன் உரையாடுகிறார். இந்த உரையாடலில் இயேசு மறுபடியும் பிறத்தல் பற்றி பேசுகிறார், மறுபடியும் பிறந்தாலன்றி இறையாட்சியை காண இயலாது என்கிறார் (யோவா. 3: 5). இதைக்கேட்டு குழப்பம் அடைந்த நிக்கதேமுவுக்கு மறுபடியும் பிறத்தல் என்பது உடல் சார்ந்த புதிய பிறப்பு அல்ல. மாறாக புதிய வாழ்வுக்கான அர்ப்பணம். தூய ஆவியாரின் இயல்பை பெற்று வாழ்தல் என்பதனை உணர்த்துகிறார் (யோவா. 3: 6).

தூய ஆவியாரின் இயல்பு என்பது மனிதனின் தீய வாழ்வுக்கு எதிரானது. நற்பண்புகளால் நிறைந்த தூய வாழ்வு, கிறிஸ்துவில் வெளிப்பட்ட நற்பண்புகளின் தொகுப்பு. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு மற்றும் தன்னடக்கம் என்பவைகள் அதன் கனிகளாகும் (கலா. 5: 22, 23).

காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்கு கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும், எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும் என்றார் (யோவா. 3: 8) இயேசு.

சுற்றி சுழன்று வீசும் காற்று கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் அது ஏற்படுத்தும் அசைவுகளும் அதிர்வுகளும் அதன் இருப்பை உணர்த்தும். கிறிஸ்துவில் புதுவாழ்வு வாழ்பவரும் தமது நற்பண்புகளால் அறியப்படுவர்.

திருமுழுக்கு தூய ஆவியரால் உண்டாகும் புதிய மாற்றத்திற்கான அடையாளமாகும். அதாவது மறுபடியும் பிறத்தலுக்கான அடையாளம் (மத். 3: 11; தீத்து 3: 5; யோவா. 3: 5) பழைய நோவா காலத்து பெருவெள்ளம் போல பாவவாழ்வின் அழிவுக்கும், தூய வாழ்வின் துவக்கத்துக்குமான அடையாளம் (1 பேது. 3: 21). இயேசுவின் திருமுகத்தில் புறாபோல் வந்திறங்கிய தூய ஆவியர் ஒவ்வொரு

திருமுழுக்கிலும் வந்திறங்கி கிறிஸ்துவில் புதுவாழ்வு வாழ துணை செய்கிறார் (மத். 3: 16; யோவா. 16: 13).

3. கிறிஸ்துவில் புது எதிர்நோக்குக்கான (இறையாட்சிக்கான) அடையாளம்: திருமுழுக்கு:

இயேசு அவரைப் பார்த்து, ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாதென்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன் (யோவா. 3: 5).

கிறிஸ்துவ வாழ்வின் ஆன்மிக எதிர்நோக்கு உண்மையாகவும், நம்பிக்கையாகவும் இருக்கிற இறையாட்சி என்பதாகும்.

இறையாட்சி என்பது புவிச்சார்ந்த ஆளுகையும் அல்ல, அதிகாரம் சார்ந்ததும் அல்ல (யோவா. 18: 36), மாறாக இறைவனின் திருவிருப்பம் நிறைவேறும் நிலை (மத். 6: 11). இயேசு கூறிய கடுகு விதை, புளித்த மா போன்ற உவமைகள் இறையாட்சி என்பது மானுட வாழ்வில் நிகழும் தொடர்ச்சியான செயல்முறை என்பதனை விளக்குகிறது (மத். 13: 31-33). நீதியும், அமைதியும், தூய ஆவியால் வரும் மகிழ்ச்சியும் இதன் மதிப்பீடுகள் ஆகும் (ரோம. 14: 17).

இயேசு கிறிஸ்து தமது திருப்பணியின் தொடக்கத்திலேயே மனம் மாறுங்கள் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என பறைச்சாற்றினார் (மத். 4: 17). சீடர்களுக்கு உமது ஆட்சி வருக என வேண்ட சொல்லித்தந்தார் (மத். 6: 10). இறையாட்சிக்கும் திருமுழுக்குமான தொடர்பு வலுவானது. இறையாட்சிக்கான நுழைவு வாயிலாக திருமுழுக்கு கருதப்படுகிறது (யோவா. 3: 5). தொடக்கக்கால திருச்சபை நடைமுறையில் இறையாட்சி குறித்த போதனைகள் கொடுக்கப்பட்டு இயேசு கிறிஸ்து பற்றிய நற்செய்தி அறிவிக்கப்பட்டு ஆர்வத்துடன் நம்பி ஏற்றுக்கொண்டோருக்கு திருமுழுக்கு தரப்பட்டு இருக்கிறது (அப். 8: 12). திருமுழுக்கு பெற்றோர் மறுப்படியும் பிறந்த அனுபவத்துடன் இறையரசில் பங்கேற்கின்றனர் (யோவா. 3: 3). இறையரசின் தகவுகளான நீதி, அன்பு, அமைதி இவைகளை கொண்டு இறையரசு விரிவாக்கத்தில் பங்கேற்க எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

கிறிஸ்துவில் அடையாளம் என்பது சொற்றொடர் அல்ல, மாறாக கிறிஸ்துவுக்குள்ளான ஒரு வாழ்வியல் மாற்றம். இது பாவத்தால் அறுபட்ட இறையுறவை திரும்ப ஏற்படுத்துவதையும், இயேசு கிறிஸ்துவில் காணப்பட்ட நற்பண்புகளை தூய ஆவியர் துணைகொண்டு தாங்கி நிற்பதையும், இறையரசில் பங்கேற்று அதன் விழுமியங்களை துணையாகக் கொண்டு அதன் விரிவாக்கத்திற்கு தங்கள் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. இவையனைத்துக்கும் சாக்கிரமெந்தான திருமுழுக்கு அடையாளமும், முத்திரையும், சாட்சியுமாகிறது.

அருள்திரு. T. சுதீர்

மக்களாட்சி: நீதியில் வேரூன்றி, பற்றுறுதியால் வழிநடத்தப்பெறுதல்

Democracy: Rooted in Justice, Guided by Faith

விப. 15: 1-8 *திப. 15: 1-8*
திபா. 69: 30-36 *யோவா. 8: 31-36*

கடவுள் சீயோனுக்கு மீட்பளிப்பார்; யூதாவின் நகரங்களைக் கட்டி எழுப்புவார்; அப்பொழுது அவர்களுடைய மக்கள் அங்கே குடியிருப்பார்கள்; நாட்டை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்கள் (திபா. 69: 35).

தொடக்கத்தில் மானிடத்தைப் படைத்த கடவுள் அவர்களை மெக்கென்று சொந்தமாக்கிக் கொள்ள ஆவல் கொள்கின்றார். அப்படியாகத் தமக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளப்பட்ட மானிட மக்களுக்கு தாம் படைத்த நாட்டையே உரிமைச் சொத்தாக வழங்குவதில் மிகவும் பேருவகை கொள்கின்றார் கடவுள். தம்முடைய மக்கள் தம்மால் வழங்கப்படும் மீட்பை பெற்றுக்கொண்டு அந்த நாட்டில் மிகவும் மகிழ்வுடன் வாழ்வர். கடவுள் பேரில் பற்றுறுதியுடன் வாழ்வோர் அந்த நாட்டில் குடியிருப்பர். அது மட்டுமல்லாமல் அந்த நாட்டை அவர்கள் உரிமை சொத்தாக்கி கொள்வர் என்பதில் மகிழ்வு கொள்கின்றார் கடவுள். ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சம்பாதிக்கின்ற சொத்துக்களை தன் பிள்ளைகளுக்கு மனமுவநது வழங்குவதைப் போல கடவுளும் தம் பிள்ளைகளுக்கு தமது நாட்டை சொந்தமாக அளிக்கிறார். அதற்கு மக்கள் கூட்டமைப்பு நீதியில் வேரூன்றி கட்டப்பட்டு கடவுளோடு உள்ள உறவில் பற்றுதியோடு வாழ வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு எவ்வகையான விடுதலையை கடவுள் வழங்குகிறார் என்பது குறித்து தியானிப்போம்.

1. பகைமையை மேற்கொண்டு அருளும் விடுதலை:

உம் மாபெரும் மாட்சியால் உம் எதிரிகளை தகர்த்தெறிந்தீர். உமது சீற்றக் கனலை கக்கித் தாளடி போல் அவர்களை எரித்துவிட்டீர் (விப. 15: 7). எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாயிருந்த சூழலில் அவர்களின் அழுகுரல் கேட்டு அவர்களை விடுதலையாக்க திட்டம் கொண்டார் கடவுள். அவ்வாறு மோசேயின் மூலமாக அவர்களை எகிப்பதிலிருந்து அழைத்து வரும்போது எகிப்தியர் அவர்களை பின்தொடர்ந்து வரவே, எகிப்தியரை நடுக்கடலில் கடவுள் அமிழ்த்தினார். இஸ்ரவேலுக்கு எதிராக இருந்த எகிப்தியரை கடவுள் வீழ்த்திவிடவே, இஸ்ரவேலர் மகிழ்வோடு சிவந்த சமுத்திரத்தை விட்டு வெளியேறினர். அநீதி இழைக்கப்பட்ட இஸ்ரவேலருக்கு கடவுள் மோசேயின் மூலமாக

நீதி வழங்கி அவர்களுக்கு விடுதலை வாழ்வை கட்டளையிட்டார். அது மட்டுமன்று அவர்களுக்கு தாம் நியமித்த கானான் நாட்டை சுதந்திரமாக அருளிச் செய்தார். அதைப்போன்று, தம்முடைய வாழ்விலும் எதிரியாக காணப்படுகின்ற பிசாசின் தந்திரங்களை தகர்த்து, நமக்கு நீதி வழங்கி அவர்களுக்கு விடுதலை வாழ்வினை அருளிச் செய்வதற்கு கடவுள் விருப்பமுள்ளவராக இருக்கிறார். லூக். 10: 19-ஆம் வசனம் இவ்வாறாக கூறுகிறது. பாம்புகளையும், தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆம்! கடவுளின் புத்திரராகிய நாம் கடவுளிடமிருந்து நம்முடைய பகைவரை வெல்லக்கூடிய அதிகாரமும் பெற்றிருக்கிறோம். இந்த அதிகாரத்தை நாம் கிரியையினால் அல்லாமல் கிருபையினால் பெற்றிருக்கிறோம். இலவசமாக நாம் பெற்றுக்கொண்ட கிருபையை காத்துக்கொண்டு பொல்லாதவனாகிய சாத்தானின் வல்லமையை வீழ்த்தி நாம் விடுதலை பெற்றுக்கொள்வோம்.

2. பாரம்பரியக் கட்டிலிருந்து விடுதலை:

உள்ளங்களை அறியும் கடவுள் நமக்கு தூய ஆவியை கொடுத்ததுபோல் அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்கொண்டார் (திப. 8) விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் மட்டுமே வாழ்வடைய முடியும் என்பது யூத மக்களின் நம்பிக்கை. ஏனெனில் இது மோசேயினால் விதிக்கப்பட்ட திருச்சட்டம். ஆனால் புறஜாதி மக்கள் கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டபோது தூய ஆவி பொழிந்தருளப்பட்டார். ஆயினும் அவர்களும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று யூத மக்கள் அறிவுறுத்தினர். அப்போது தான் அப்போஸ்தலனாகிய பேதுரு புறஜாதி மக்கள் உள்ளத்தால் தூய்மை பெற்றுவிட்டார்கள். நாம் எவ்வாறு தூய ஆவியை பெற்றுக் கொண்டோமோ அதைப்போன்று தான் புறஜாதி மக்களும் தூய ஆவியை பெற்றுக் கொண்டார்கள் என்று விளக்கம் கொடுக்கிறார்.

ஆம்! உண்மையாகவே கடவுள் தூய உள்ளத்தை தான் எதிர்பார்க்கிறார். வீண் சடங்காச்சாரங்களை நாம் தவிர்க்க வேண்டும் என்பதே கடவுளின் ஆவலும் கூட. வெளி வேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில், நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாக தோற்றமளிக்கின்றன. அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லா வகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன (மத். 23: 27).

நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கை படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றை கடைப்பிடிக்காமல்

விட்டுவிடுகிறீர்கள். இவற்றைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றையும் விட்டு விடக்கூடாது (மத். 23: 23).

இவ்விரண்டு வசனங்களில் பாரம்பரியச் சட்டங்களைக் கைக்கொள்ளுவதை விட நாம் உள்ளத்தில் தூய்மை பெறுவதே மிகவும் முக்கியமானது என்று அருமைநாதர் இயேசு கிறிஸ்து அழகாக கூறுவதை நம்மால் காண முடிகிறது.

புறத்தூய்மை நீரா னமையும் அகத்தூய்மை

வாய்மையாற் காணப் படும்

என்பது திருக்குறள். ஆக, பாரம்பரிய கட்டிலிருந்து விடுதலை பெற்று உள்ளத்தில் தூய்மை பெறுவோம்.

3. குமாரன் அளிக்கும் உண்மையான விடுதலை:

மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள். இந்த நாகரீக காலத்திலே மானுட மக்கள் பாவ அடிமைத் தனத்திலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும், கடன் பிரச்சனையிலிருந்தும் நோயின் கொடுமையிலிருந்தும் எவ்வாறு விடுதலை பெறுவது எனத் தெரியாமல் எங்கெங்கோ அலைந்து திரிகிறார்கள். ஆனால், திருமறை வசனம் சொல்லும் உண்மையை அவர்கள் கண்டு கொள்வதே இல்லை.

மானிட மகன் இவ்வுலகத்தில் மனிதனாய்ப் பிறந்து, எல்லாப் பாடுகளும் அடைந்து உலக மக்களின் அனைத்துப் பாவங்களுக்காய் தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அது மட்டுமல்லாமல் மனுக்குலத்தைப் பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக மூன்றாம் நாள் சிலுவை மரணத்தை வென்றவராய் உயிரோடு எழுந்தருளினார். இந்த சிலுவை மரணத்தை இவ்வுலக மக்கள் புரிந்து மகன் அளிக்கும் உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

யோவான் 8: 1-11 வரை உள்ள வசனங்களை நாம் பார்க்கும்போது விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தபோது, அப்பெண்ணுக்கு இயேசு மன்னிப்பருளி, உண்மையான விடுதலையை அருளிச் செய்தார் (யோவா. 8: 11) உண்மையாகவே மானிட மகன் இவ்வுலக மக்களுக்கு அருளிச் செய்யும் விடுதலை தான் உண்மையான விடுதலை.

மானுட மகன் அளிக்கும் உண்மையான விடுதலையை நாமும் நம் வாழ்வில் பெற்று, அவரை உண்மையாக சேவித்து வாழ்வோம்.

திரு. V. தீபக்

16.08.2026

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினொன்றாம் வாரம்

தூய நன்றித் திருவிருந்து: ஒப்புரவின் திருப்பந்தி

Holy Eucharist: Table of Reconciliation

விப. 24: 3-11 *1 கொரி. 10: 14-22*
திபா. 85 *மத். 5: 23-26*

அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம் (1 கொரி. 10: 17).

இறைவன் தம்மை மனுக்குல மீட்புக்காகத் தந்தார் என்பதின் அடையாளம் திருவிருந்து. இறை அன்பை வெளிப்படுத்தி இறை உறவினை வளர்க்கும் விருந்து. துன்புறும் மானிடம் ஒன்றுபடவும், மானிடமும் இறைவனும் ஒன்றுபடவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அன்பு செயல். விப. 12: 1-17 பஸ்கா விருந்தின் பின்னணியத்தில் தோன்றியது திருவிருந்து. உறவுகளை இழந்து, உரிமைகளை இழந்துபோன மக்கள் ஆசரித்தது பஸ்கா பஸ்கா விருந்தை வீடுகளில் கொண்டாட வேண்டும். ஏன் என்றால் அழிப்பவன் இஸ்ரவேல் வீட்டாரிடமிருந்து கடந்து சென்றான் என்பதற்கு அடையாளம் மட்டுமல்ல, வீட்டார் எல்லோரையும் ஒன்றிணைக்கும் விருந்து. அடிமைத்தனத்தி#ருந்து விடுதலை. ஆகவே பஸ்கா மேசையில், எகிப்திருந்து வேகமாக புறப்பட்டதை நினைவு கூறும் திராட்சைரசம் எகிப்தின் கசப்பான அனுபவத்தை நினைவுகூறும் கசப்புகீரை, செங்கடலை பிளந்து நடந்து இந்ததை நினைவு கூறும் உப்புத்தண்ணீர், எகிப்தில் வைக்கோல் சேகரிந்து செங்கல் செய்த கொடூரத்தை நினைவு கூறும் வைக்கோல், களிமண், இஸ்ரவேல் வீடுகளை கடந்து சென்று எகிப்தின் தலைப்பிள்ளை சங்கார விடுதலையை நினைவுகூரும் ஆட்டுக்குட்டியின் இரத்தம் வைக்கப்பட்டிருந்தது. இன்று திருச்சபை திருமேஜையில் அப்பமும், திராட்சை ரசமும் வைக்கப்பட்டிருக்கிறது. இயேசு தம்மையே உணவாகமாற்றி உலகமனைத்திற்கும் விருந்தானார். திருவிருந்தில் பகிரப்படும் அப்பம் கிறிஸ்துவின் திருவுடலோடும் திராட்சைரசம் கிறிஸ்துவின் இரத்தத்தோடும் ஒன்றுபடுத்தி நமது மீட்பை உறுதிபடுத்தி நமது கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொண்டு நிகழ்கால, எதிர்கால திருப்பணிக்காய் கடவுளோடு ஒப்புரவாகி நம்மை ஒன்றிணைக்கிறது. நன்றி திருவிருந்தில் நாம் பங்கு கொள்ளும் போது நம்மில் "வேற்றுமை மனம் அல்ல ஒப்புரவின் மனமாக நாம் மாறவேண்டும்." இயேசு கிறிஸ்துவின் உடலையும் உதிரத்தையும் பெற்றுக்கொள்ளும் பந்தி ஒப்புரவின் திருப்பந்தி என்பதை நாம் கற்றுக் கொள்வோம்.

1. உணவு தரும் ஒப்புரவின் திருப்பந்தி *(1 கொரி. 10: 16)*

உணவு நமக்கு உறவை தருகிறது. அனுதினமும் நாம் உண்ணும் உணவு உடலுக்கு ஆரோக்கியத்தையும், வாழ்நாளையும் பெருக்கிக்கொள்ளவும் உதவுகிறது. திருவிருந்து நமக்கு நிலையான வாழ்வை தருகிறது. பவுல் திருவிருந்து மூலம் கடவுள் நமக்கு நிலையான தந்திருப்பதை தெளிவுப்படுத்தியிருக்கிறார். கடவுள் வழங்கியிருக்கும் விடுதலையை உணராமல் உணவே பிரதாணம் என்ற மனநிலை இஸ்ரவேல் மக்களிடம் இருந்தப்படியால், உணவின் இச்சையால் ஒரே நாளில் இருபத்திமூவாயிரம் மடிந்தார்கள் எகிப்தின் அடிமைதனத்தில் அழைத்து வரும்போது உணவுக்காக முறுமுறுத்தார்கள். கடவுளின் வழிநடத்துதலை குறை கூறினார்கள் விளைவு வாக்களிக்கப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவின் உடல் உதிரத்தை உண்ணும் போது நாம் திடன் அடைகிறோம். பலப்படுகிறோம், உயிருள்ள சாட்சியாக மாறுவோம். இயேசு தன்னை விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே *(யோ. 6: 41)* என்று கூறுகின்றார். மேலும் இயேசு அவர்களிடம் உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடைய மாட்டீர்கள், *(யோ. 6: 53)* வாழ்வு தரும் உணவு நானே *(யோ. 6: 48)* என்று கூறுகின்றார். மேலும் உணவான இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் கானவூர் திருமண இல்லத்தில் திராட்ச ரசம் குறைவுபட்ட போது தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றி முதலில் அற்புதமாக நிறைவேற்றினார். *(யோ. 2: 16)* நீங்கள் அவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என கூறி ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்தார். மத். *14: 16)* இயேசு கிறிஸ்துவின் திருப்பணி உணவு ஒப்புரவின் பந்தியாக, ஒருங்கிணைக்கும் பந்தியாக மாற்றப்பட்டது. இன்று இயேசுவின் உடலையும் உதிரத்தை உணவாக திருச்சபையில் பெற்றுக்கொள்ள வரும் போது பகைமை, கோபம், சண்டையால் நாம் இவற்றை தவிர்க்கிறோம். தேர்தல் வாக்கை சிந்திக்கிறோம். சுயநலம், குழுநலம் இவற்றால் அன்பின் விருந்து வம்பின் விருந்தாக மாறி பிரிவினை மேலோ?ங்குகிறது. சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரலாக்க இப்படி செய்தார். *(எபே 2:16)* இவற்றை உணர்ந்து திருவிருந்து, இறைவனும் நாமும் இறைமக்களும் ஒப்புரலோடு இறை உணவில் பந்தியிருப்போம்.

2. உணர்வு தரும் ஒப்புரவின் திருப்பந்தி:

திருபந்தியில் பங்கு பெறும் நாம் சுய பரிசோதனை செய்ய நம்மை குறித்த உணர்வாக மாற வேண்டும். பாவத்தைக் குறித்து நம்முடைய மனசாட்சி நம்முடன் பேச வேண்டும். என் மக்கள்

அறிவிலிகள்; என்னை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை; மதிகெட்ட மக்கள் அவர்கள் வல்லவர்கள்; உய்த்துணரும் ஆற்றல் அவர்களுக்கில்லை; தீமை செய்வதில் அவர்கள் வல்லவர்கள்; நன்மை செய்ய அவர்களுக்கு தெரிவதில்லை *(ஏரே. 5: 22)* ஏரேமியா தீர்க்கன் வாயலாக நம்மை குறித்து ஆண்டவர் எச்சரிக்கிறார். இயேசுவின் இறுதி பந்தியில் என்னை காட்டிக்கொடுப்பவன் இதோ, என்னோடு பந்தியில் அமர்ந்திருக்கிறான் *(மத்: 22: 21)* என்று இயேசு கிறஸ்து குறிப்பிடும் போது "நம்மில் இச்செயலை செய்யபோகிறவர் யார் என்று தங்களுக்குள்ளே கேட்க தொடங்கினர்கள் *(மத். 22: 23)* இயேசுவின் சீடர்கள் குற்ற மனசாட்சி உடையவர்களாய், சுயகுற்றமுடையவர்களாய், நம்பிக்கை துரோகமுடையவர்களாய் பந்தியிருந்தர்கள். இயேசு சீடர்களில் குறைவுகளை சுட்டிகாட்டிய போது, யூதாஸ் கடின இருதயமுடையவனாகவே, தீய இதயமுடையவனாக, தீமையோடு கைகோர்த்து செய்யப்போகிற செயலை நியாயப்படுத்தி பந்தியிருந்தான். இயேசுவை முத்தம் என்னும் போலி அன்பினால் காட்டிக்கொடுத்தான். ஒப்புரவுக்கு தரப்பட்ட எச்சரிப்பின் உணர்வு அவனுக்குள் இல்லாமற் போயிற்று அவனுடைய மரணம் வரலாற்றில் நமக்கு எச்சரிப்பாக சொல்லப்படுகிறது. மற்ற சீடர்கள் தங்கள் தவறுக்காக மனம் வருந்தி ஒப்புரவானார்கள். இயேசு கூறியதை பேதுரு நினைவுகூர்ந்து வெளியே சென்று மனம் நொந்து அழுதான் *(மத். 26: 75)* தன் தவறை உணர்ந்து உள்ளுணர்வுடன் "ஒப்புரவானான். *15* எருசலேம் வீதியில் எந்த பயமும் இன்றி துணிச்சலுடன் 'கடவுள்' இந்த இயேசுவை உயர்த்தெழச்செய்தார் இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் என்று உரக்க அறிவித்தான்' *(திப. 2: 32)* மற்ற பத்து சீடர்களும் ஆண்டவரோடு ஒப்புரவாகி பழுதற்ற ஆட்டுக் குட்டிகளாக அடிக்கப்பட்டார்கள்; இயேசு கிறிஸ்துவை உலகிற்கு கொண்டு சென்றார்கள். திருச்சபை அவர்களால் கட்டப்பட்டது. திருவிருந்தில் பங்கு பெறும் நாம் உணர்வுடன் ஒப்புரவாகி பாவத்தி#ருந்து விடுதலை அடைகிறேன். இனி தீயோன் என்னை மேற்கொள்ளுவதில்லை உலகிற்கு சாட்சியாயிருக்கிறேன் என்ற உணர்வுடன் நம் பற்றுறுதியை பாதுகாப்போம்.

3. உறவு தரும் ஒப்புரவின் திருப்பந்தி: *(மத்: 5: 23,24)*

உறவின் அடையாளம் அன்பு. கடவுள் மனிதனோடு உள்ள உறவு அன்பாக வெளிப்படுகிறது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் *(யோ. 3:16)* அவருடைய உடலையும் உதிரத்தையும் நாம் பானம் பண்ணும் போது இரத்த உறவு கடவுளின் மனப்பூர்வமான அன்பாக

வெளிப்படுகிறது. அப்பம் ஒன்றே; ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். (1 கொ. 10:17) கடவுளின் ஆலயத்தில் காணிக்கை படைக்கும் முன் உன் சகோதர சகோதரிகள் எவரும் உங்கள் மேல் எதோ மனஸ்தாபங்கள் உண்டென அங்கே நினைவுற்றால் முத#ல் அவரிடம் நல்உறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள், பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். (மத் 5: 23,24) ஆண்டவரின் அன்பு கட்டளை அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை, ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார். (1 யோ. 4: 8) அன்பற்ற உலகில் அனிபுள்ளவர்களாக இருப்பதற்கு ஒப்புரவு இன்றி அமையாதது. அன்புக்கு சாட்சியாக அழைக்கப்பட்டு கடவுளின் ஐக்கியத்தில் இணைக்கப்பட்ட நாம் பகைமை உணர்வுடன் பந்தியிருப்பது முரணானது என்பதை குறித்து உணர்வு அடைதல் வேண்டும். நம்மில் உள்ள பகைமைகளை களைவோம். கடந்த நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் வாழ்ந்த மரியான் உபதேசியார் பணியாற்றிய திருச்சபையின் மூப்பர் ஒருவர் அவருடன் ஒத்துழைக்க மறுத்தார், அவருக்கு எதிரான நடவடிக்கையிலும் ஈடுபட்டார். அதனால் திருச்சபை வழிபாட்டில் கலந்து கொள்வதையும் நிறுத்தி விட்டார். இதை அறிந்து துயருற்ற மரியான், ஒரு ஞாயிற்றுக்கிழமை அவருடைய வீட்டிற்கு சென்றார் அவரை திருவிருந்து ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு வருந்தி அழைத்தார். அந்நிலையில் அவர் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை வெளிப்படுத்தி "கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா (கீர்-433) என்ற பாடலை உருக்கமாக பாடினார். அதைக்கேட்ட அந்த மூப்பனார் உடனே மனம்மாறி மன்னிப்புக்கேட்டு அந்நாளின் நற்கருணை ஆராதனையில் கலந்து கொண்டார். இன்று நம்மில் காணப்படும் பகைமையைக் களைந்து ஒப்புரவின் உறவில் ஒன்றிணைவோம். தூய நன்றி திருவிருந்து ஒப்புரவின் பந்தியாக்குவோம். உலகிற்கு பயனுள்ள உப்பாய், பிறருக்கு வழிகாட்டும் ஒளியாய், நற்செய்தியை நற்செய#ல் வெளிப்படுத்தும் சாட்சியாய் வாழ்ந்திடுவோம்.

அருள்திரு. R. சாம் கிறிஸ்டோபர்

கட்டிலிருந்து விடுதலைக்கு: கடவுள் ஒடுக்கப்படுவோருடன் நடக்கின்றார்

From Bondage to Freedom: God Walks with the Oppressed

இச. 26: 5-11 *பில. 10-18*
திபா. 146 *யோவா. 4: 5-14*

" . . . நீர் யூதர்; நானோ சமாரியப் பெண் . . ." (யோவா. 4: 9).

16 வயது இருக்கும் அந்தச் சிறுமி பசியினால் களைத்தும், உடல் இளைத்தும் போய், உடல் நடுநடுக்க, முச்சிரைக்க ஓடி மால்ட் அம்மையாரின் இருப்பிடத்திற்கு வந்தார். தன் எஜமானுடைய தாக்குதலின் கொடுமை தாங்காமல் தப்பி ஓடி வந்த அடிமைப் பெண் அவள் என்றாள். அது அடிமைப் பிள்ளைகளுக்குக் கல்வி கொடுக்க பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்ட காலம். ஒரு அடிமைச் சிறுமிக்கு ஒன்றரைப் பணமும், சிறுவனுக்கு ஒரு பணமும் வீதம் கூடுதலாக அடிமைகளை பள்ளிக்கு அழைத்து வரும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் வழங்கி ஊக்குவித்திருந்தார்கள் மீட் ஐயர். அத்தகு பள்ளியில் இச்சிறுமியும் சேர்க்கப்பட்டாள். சுமார் 10 நாட்களுக்குப்பின் இச்செய்தியறிந்து அவள் எஜமான் கோபத்துடன் மால்ட் அம்மையாரைச் சந்தித்து தன் அடிமையைத் தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கூறினார். அம்மையார் அச்சிறுமிக்கான விலையை அவருக்குக் கொடுத்து அவளை விடுவிக்க கெஞ்சி கேட்டும், அந்த எஜமான் இணங்கவில்லை. அச்சிறுப் பெண்ணை அம்மையாரால் விடுவிக்க முடியாமற் போயிற்று. சிறுபெண் எஜமானால் இழுத்துச் செல்லப்பட்டதைப் பார்த்த சக பள்ளி மாணவிகள் கண்ணீருடன், அவர் கால்களை பிடித்தும் எதுவும் நடக்கவில்லை. இந்தகோரக்காட்சி தான் அடிமைத்தனத்தை திருவிதாங்கூர் சமுதாயத்திலிருந்து ஒழிக்க அருள் தொண்டர்களை துரிதப்படுத்தியது. அதன் பயனாக 1855-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அடிமைகளை விடுவிக்கும் ஆணையைத் திருவிதாங்கூர் மகாராஜா வெளியிட்டார். திருவிதாங்கூர் மக்களாகிய நம் முன்னோர்களும், இன்று நாமும் கடவுளால் அவரை திருத்தொண்டர்கள் வழியாய் விடுதலை காற்றை சுவாசித்து, இன்று அனைத்து உரிமைகளோடும், உயர்வுகளோடும் வாழ்ந்து வருகிறோம்.

நம்பிக்கைக்குரிய கடவுள் இன்று இதுபோன்று அடிமைத்தளைகளிலும், ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சமூக அமைப்பிலும் ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்வோருடன் உள்ளார்; அவர் அடிமைச் சாசனங்களை அகற்றி விடுதலையாக்குகிறார் என்கிற நம்பிக்கையை அனைவருக்குள்ளும் விதைக்கிறது. இத்தகு சமூக அமைப்புகள் வாழும் நாம் எங்ஙனம் வாழ வேண்டும் என்னும் அறைகூவலையும் தருகிறது.

இன்று தலித் ஆதிவாசி மக்களை முதன்மைப்படுத்தும் ஞாயிறு. தலித் என்னும் சொல் வெறும் ஒரு சமூகத்தின் அடையாளம் அல்ல. எங்கெல்லாம் மக்கள் சாதி, மதம், இனம், மொழி, பாலினம், மற்றும் பல காரணிகளால் சிறுமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்படுகிறார்களோ அவர்களுக்கான பொதுவான அடையாள பெயர் சொல்லாகவே இன்று இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இன்றைய விவிலிய திருமொழிகளில் தெரிந்து கொள்ளப்பட்டவர் அன்னியர், எஜமான்-அடிமை, யூதர்-சமாரியர் போன்ற அக்காலப் பாகுபாடுகளினை கடவுள் எப்படி அகற்றினார் என்கிற வரலாற்று உண்மை உரைக்கப்பட்டுள்ளது. அவைகளை விவிலிய வெளிச்சத்தில் தியானம் செய்வோம்.

1. சமூக விடுதலைக்கு நடத்தும் கடவுள்: *(யோவா. 4: 9)*

யூதச் சமூகம் யூதர்-சமாரியர் என்கிற பகைமை இருளுக்குள் மூழ்கி இருந்தது. எப்ராயீம், மனாசேயின் வழித் தோன்றல்களாயினும், அசீரியரின் படையெடுப்பில் *(கிமு. 722)* தப்பி, அவர்களோடு திருமண உறவுகளில் இணைந்ததால் யூதத்தூய்மையை இழந்துவிட்டதாகக் கூறி ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள்தாம் சமாரியர்கள். இவர்கள் வாழ்ந்த பகுதியின் பெயரால் இவர்கள் அழைக்கப்பட்டனர். இந்தச் சமாரியா யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் இடையே உள்ளது. பொதுவாக யூதர்கள் சமாரியா வழியாகப் பயணம் செய்வதில்லை. அவர்கள் யோர்தானைக் கடந்து சென்று கலிலேயாவையோ அல்லது யூதேயாவையோ அடைந்தனர். இத்தகு வைராக்கியமும், வெறுப்பும் யூதர்கள் கொண்டிருந்த சூழலில்தான் இயேசு யூதேயாவை விட்டு கலிலேயா வரும் வழியில் அவர்கள் வழக்கத்தைத் தாண்டி, உடைத்து சமாரியா வழியாக வருகிறார் *(யோவா. 4: 3, 4)*. அவர் வந்த உர் சிக்கார் *(4: 5)*.

சமாரியாவிலுள்ள சிக்கார் *(4: 5)* என்பது சிக்கேம் என்பதன் திரிபு எனலாம். பழைய ஏற்பாடுக் காலத்தில் சிக்கேம் மைய இடம். சிக்கேம் யாக்கோபால் யோசேப்புக்கு கொடுக்கப்பட்ட இடம் *(தொநூ. 48: 22)*. இங்கிருந்த கிணறு யாக்கோபின் கிணறாக கருதப்படுகிறது. இந்தக் கிணற்று ஓரத்தில்தான் இயேசு பயணக் களைப்பில் ஒரு நண்பகல் வேளையில் தம் சீடர்களை நகரத்திற்குள் உணவு வாங்க அனுப்பிவிட்டு ஓய்ந்திருந்தார்.

இங்கு நடந்த உரையாடல் சமாரியப் பெண்ணின் சமூக நிலையை நமக்குக் காண்பிக்கிறது. நீர் யூதர்; நானோ சமாரியப் பெண். உங்களுடைய தூய்மை அளவுகோலின்படி உங்கள் தூய்மைக்கு முன் நாங்கள் தூரமானவர்கள். என் பாத்திரம் உங்களுக்கு தீட்டாயிருக்கும். ஒரு அடிமையாய் நான் உங்களுக்கு உதவுவதாயிருந்தாலும் எப்படி உதவுவது? உம்மிடம் பாத்திரங்கள் எதுவும் இல்லையே. உங்கள் அண்மையில் வருவதற்கு எங்களுக்கு அனுமதி இல்லையே. ஆனால், இந்தக் கிணற்றினை எங்களுக்குப்பயன்படுத்திட தானமாய் வெட்டித் தந்த யாக்கோபும் அவர் மக்களும், கால்நடைகளும் காலங்காலமாக இங்கு

தண்ணீர் குடித்திருக்கிறார்கள். நாங்கள் அவைகளுக்குப் பணிவிடை செய்திருக்கிறோம் என்று தன் நிகழ்நிலையை ஐயத்துடன் அடுக்கிக் கூறுகிறார். இயேசு அவரிடம் உம் கணவரை இங்கே கூட்டி வாரும் *(4: 16)* என்று கூறியபோது குடும்பம் என்கிற மதிப்புடனும் மாண்புடனும் வாழ முடியாத மிகக் கொடுமையான அவரது சமூக நிலை இங்கு காண்பிக்கப்படுகிறது. இப்பெண்மணியிடம் எத்தடையுமின்றி இயேசு பேசுவதைப் பார்த்து சீடர்கள் வியப்புறும் *(4: 21)* வகையில் இயேசுவின் செயல்பாடு இருந்தது. இதுவரை அடிமைப்படுத்தப்பட்டு, தாழ்வாக பார்க்கப்பட்ட ஒரு பெண் விடுதலைக்கு நடத்தப்பட்டார்.

இதுபோன்ற ஒரு சமூக நிலைக்குள்ளிருந்தவர்தான் ஒனேசிமு என்ற அடிமையானவர். இவர் தவறுதலாய் எஜமானைவிட்டு தப்பியோடியவர், சட்டப்படி தண்டனைக்குரியவர். அவர் பெயரின் பொருள் பயனுள்ள, ஊதியமுள்ள என்பதாகும். அதன்படியே கிறிஸ்துவுக்குள் பயனுள்ளவராக மாறி திருத்தொண்டர் பவுலுக்கு நற்செய்திப் பணியில் உதவியாக இருந்து கொண்டிருக்கிறார். ஆகையால் எஜமானர் பிலமோனிடம் அடிமையின் விடுதலைக்காக பவுல் வேண்டுகோள் விடுக்கிறார். அவ்வேண்டுகோளில் பவுல் *(பிலமோன் 16)* இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையைவிட மேலானவனாக, அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும் என்கிறார். என் அன்புக்குரியவன் என்கிற நிலையிலும் ஒரு மனிதன் என்கிற முறையிலும் அவனை முறையாய் விடுவியும் என்று மன்றாடுகிறார்.

ஆண்டவருக்குள் வருகிற எத்தகு ஒடுக்கப்பட்டோரையும் அவர் சமூக விடுதலைக்கு நடத்தி மதிப்பான வாழ்வை வழங்குகிறார். இத்தகு மதிப்பான வாழ்வைப் பெறவே அன்றும் இன்றும் மக்கள் திரளாய் இயேசு நாதருக்குள் நம்பிக்கையோடு அடைக்கலம் தேடுகிறார்கள். இன்றும் போதைகளுக்கு அடிமையாகி மறுவாழ்வு மையங்களிலிருப்போரும், அனாதைகளாய் ஆதரவிழந்தோராய் பராமரிப்பு இல்லங்களில் வாழ்வோரும் ஆண்டவர் இயேசுவிடம் வந்தால் அத்தகு நிலைகளிலிருந்து விடுதலையாக்கி மதிப்பான வாழ்வைத் தருகிறார்.

2. சமய விடுதலைக்கு நடத்தும் கடவுள்: *(யோவா. 4: 24)*

யூதர்களுக்கு எருசலேம் சமய வழிபாட்டின் மையமாய் இருந்தது போல சமாரியரின் வழிபாட்டு மையமாய் கெரிசிம் மலை இருந்தது. வழிபாட்டிலும், திருநாள் ஆசரிப்பிலும் யூதரிடையேயும் சமாரியரிடையேயும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் இருந்தன. யூதருக்கு மூன்று முக்கியமான திருநாள்கள் இருந்தன. அவை பாஸ்கா, வாரங்களின் திருநாள், கூடாரத் திருநாள். அதுபோல சமாரியர் ஏழு திருநாள்களைக் கொண்டாடினர் என்று Sylvia Powels-இன் Samaritan Calendar கூறுகிறது. சமய நம்பிக்கைகள் மனிதரை இன்று அடிமைப்படுத்துவது போல இயேசுவின் காலத்திலும் இருந்தது என்பதை யோவான் *4: 20* வெளிப்படுத்துகிறது. எருசலேமில் தான் வழிபடவேண்டும் (centripetal) என்கிறீர்களே என்று அப்பெண் சொன்னபோது இயேசு,

யாரை வழிபடுகிறீர்கள் எனத்தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள் (4: 22). யூதரும், நீங்களும் வழிபாட்டு முறைமைகளுக்குள்ளும், புனித தலங்களுக்குள்ளும் அடிமைப்பட்டு கிடக்கிறீர்கள். அவர் உருவமற்றவர் (வ.24) உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபட வேண்டும் (வ. 23) இடமும், பொருளும் அல்ல இதயமும் வழிபாட்டில் முதன்மையானது என்பதனை இயேசு கூறி சமாரியப் பெண்மணியை சமய விடுதலைக்கு நடத்துகிறார்.

யூதருக்குள்ளும் தங்கள் நம்பிக்கையே உயர்ந்தது, தங்களே வழிபாட்டில் மற்றவர்களைவிட சிறந்தவர்கள் என்கிற செருக்கு இருந்தது. தூய லூக்கா 10-ஆம் அதிகாரத்தில் தம்மையும், தம் வழிபாட்டு முறைமையையும் முதன்மையாய் காண்பிக்க விரும்பி திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் வந்தார். அவருக்கு மறுமொழியாக உவமை ஒன்றைக் கூறினார் இயேசு. எருசலேமிலிருந்து எரிகோ போகும் பாதையில் கள்வர்களால் காயப்படுத்தப்பட்டு குற்றுயிராக விடப்பட்ட மனிதனுக்கு உதவிட யூத மார்க்கத்தில் முதன்மையானவர்களாகப் பார்க்கப்பட்ட தேவாலய குருவையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களான லேவியரையும் புறந்தள்ளி, விளிம்புநிலையில் ஒடுக்கப்பட்வர்களாக இருந்த சமாரியரே உண்மையாய் வழிபடுகிறார்கள் என்று சமய நிலைகளில் ஓரங்கட்டப்பட்டிருந்தவர்களை மையத்திற்குக் கொண்டு வந்து நீரும் இப்படியே வழிபாடு செய்ய வேண்டும் எனக் கற்பித்தார். தொழுநோயிலிருந்து விடுதலை பெற்ற (லூக். 17: 16) பத்துப் பேரில் ஒன்பது பேர் தொழுநோய் விடுதலைக்குரிய சட்டத்தை (லேவி. 14: 1-32) நிறைவேற்றுகிற சமய கடமையில் தீவிரமாயிருந்தார்கள். யூதரால் வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட சமாரிய தொழுநோயாளர் மட்டுமே உண்மை வழிபாடாக விடுதலை. தந்தவரை நன்றியுடன் வழிபட்டான். கடவுளைப் போற்றி புகழ அன்னியர் என பார்க்கப்பட்ட சமாரியரே திரும்பி வந்தார் (லூக். 17: 18) என்று சிறப்புபடுத்துகிறார்.

இன்று நாமும் யூதரைப்போல பல சமய பாரம்பரியங்களுக்குள்ளும், முறைமைகளுக்குள்ளும், சடங்குகளுக்குள்ளும், கொள்கைகளுக்குள்ளும் மூழ்கி இருக்கிறோம். கடவுள் விரும்பும் வழிபாடு நாம் எண்ணுவது போன்றதல்ல என்பதை உணர்வோம். நம்மை அடிமைப்படுத்தும் சமய ஆச்சாரங்களிலிருந்து விடுதலையடைவோம். எவரையும் இந்நாட்டில் சமயத்தின் பெயரால் நடுக்காதிருப்போம். இந்திய பெண்கள் உலக கோப்பையில் (2025) ஆஸ்திரேலியாவுடனான அரையிறுதிப் போட்டியில் அதுவரை ஒடுக்கப்பட்டிருந்த ஜெமீமா ரொட்ரிக்ஸ்-ஐ புகழின் உச்சிக்கு கொண்டு சென்று கடவுளை மகிமைப்படுத்த செய்தது போல அவர் இன்றும் செய்வார்.

3. சகோதர வாழ்வுக்கு அழைக்கும் கடவுள் : *(யோவா. 4: 40)*

சமாரியப் பெண்ணின் வார்த்தைகளைக் கேட்டு இயேசுவைக் காண வந்த அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

அத்தோடு அவரைத் தங்களில் ஒருவராக தங்கள் உடன் சகோதரனைப்போல எண்ணி தங்களோடு தங்குமாறு கேட்டுக்கொண்டனர். வரவே கூடாத இடத்திற்கு, வெறுக்கப்பட்ட மக்களினத்திடம் வந்தது மட்டுமல்ல அவர்களில் ஒருவராக இயேசு இரண்டு நாட்கள் தங்கினார். கடவுள் ஒடுக்கப்பட்டோருடன் எப்படிப் பயணிக்கிறார் என்பதை இங்குத் தெளிவாக காணமுடிகிறது. பவுல் பிலமோனிடம் ஒனேசிமுவை உம் அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும் என வேண்டியது (பில. 16) இயேசுவிடம் கண்ட மாதிரியாகும்.

இஸ்ரயேல் மக்களினம் ஒருகாலம் அடிமைப்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டிருந்த சமூகம். அவர்களை கடவுள் விடுதலையாக்கி பாலும் தேனும் மிகுந்த செழிப்புள்ள கானான் நாட்டிற்கு அழைத்துவந்து; வசதியான வாழ்வையும் ஆசிகளையும் அவர்களுக்கு கொடுத்து கூறிய வழிபாடு சார்ந்த அறிவுரை, இணைச் சட்டம் 26-ம் அதிகாரம் 1 முதல் 15 வரையுள்ள திருமொழிகளில் இடம்பெற்றுள்ளது. நீங்கள் வாக்குப் பண்ணப்பட்ட நாட்டில் நன்றாய் வாழும்போது செய்ய வேண்டியது வழிபாடு; முதலாவது உன் விளைவின் பலன்களோடு கடவுளுக்கு நன்றி செலுத்து (வ. 2, 10) இரண்டாவது உன் அடிமை வாழ்வை அறிக்கையிடு (வ. 5-9) (Deuteronomy Creed) மூன்றாவது உன் வீட்டிலிருக்கும் அடிமையோடும், உன்னோடு வாழும் அன்னியரோடும், அனாதைகள் கைம்பெண்களோடும், சகோதர உறவுடன் உன்னுடையதை கொடுத்து மகிழ்ந்து கொண்டாடு, பின் உன் ஆசியை வேண்டு (வ. 11-15) என்று அவர்கள் வழிபாட்டையே புதுப்பிக்க மோசே வழியாகக் கட்டளையிட்டார்.

இன்று நாமும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்ற சமூகமே. நாம் பெற்றுள்ள விடுதலை பொருளாதார நிலைகளில் ஒடுக்கப்பட்டவர்களாக, பல நிலைகளில் இன்னும் அடிமை நிலையிலேயே உழல்பவர்களுக்கு உதவியாயிருக்கிறதா? இல்லை அவர்களை மேலும் அடிமைப்படுத்துகிறதாக இருக்கிறதா? தூய மத்தேயு 18:23-34-ல் பத்தாயிரம் தாலந்து கடன் மன்னிக்கப்பட்டவர் நூறு தெனாரியம் மனிக்க மறுத்தது போலவே, செயல்படுகிறோம். நம்முடன் வாழ்வோரை சகோதர அன்புடன் பார்க்கத் தயங்குகிறோம். நம்மையே அறியாமல் திருச்சபைகளில் உடன் குடும்பங்களை வெறுக்கிறோம். சமமாய் இறைப்பணியாற்ற மறுக்கிறோம். ஆனால், ஆண்டவர் இயேசுவோ சகோதர அன்புடனும் உறவுடனும் அவரைப் போல செயல்பட அழைக்கிறார். அவரது கட்டளையைக் கடைபிடிப்பதில் கருத்தாயிருந்தால் எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும் உன்னை உயர்த்துவார் என்று இணைச்சட்டம் 26: 19-இன் வழியாக உறுதிமொழிகிறார். விடுதலையடைந்த நாம் விடுதலை வழங்கி வளமாய் வாழ்வோம்.

அருள்திரு. J. ஹெரால்ட் அனித்

அந்நியர் இனி இல்லை: புலம்பெயர்ந்தோரையும் அகதிகளையும் (ஏதிலாரையும்) வரவேற்றல்

Strangers No More: Welcoming the Migrants and Refugees

லேவி. 19: 9-10, 33-37 *தீத்து 2: 1-10*
திபா. 146 *லூக். 10: 25-37*

". . . உங்கள் மீது நீங்கள் அன்புகூர்வதுபோல் அவர் மீதும் அன்புகூருங்கள் (லேவி. 19: 34).

பூமி தன்னைத்தானே சுற்றி சூரியனையும் அதன் சுற்றுவட்டப் பாதையில் சுற்றி வருகிறது. பூமி எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறதோ, அப்படியே பூமியில் வாழும் மனித வாழ்வும் இயங்கிக் கொண்டிருக்கிறது. பூலோகத்தில் நம்முடைய வாழ்வு தற்காலக் குடிகளின் வாழ்வின் அனுபவத்தைப் போன்றது. கூடாரத்தில் உறைபவர்கள் நாம். விண்ணகமே நம் தாய்நாடு (பிலி. 3: 20). இவ்வுடலை விட்டகன்று ஆண்டவரோடு குடியிருக்கவே விரும்புகிறோம் (2 கொரி. 5: 8). நமக்கு சொந்த வீடும் தேசிய அடையாளமும், குடியுரிமையும் இருக்கும்போது, அதை நமக்கான நிரந்தர அடையாளமாகவும் பேறாகவும் கருதுகிறோம். ஆயினும் வாழ்வதற்காக இயங்குகிறவர்கள் வாழ்வாதாரம் தேடி புலம் பெயர வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகின்றார்கள். போர் அபாயம், இயற்கைப் பேரிடர், அடக்குமுறை, வேலைவாய்ப்பின்மை, காலநிலை மாற்றம் போன்றவற்றால் இருப்பிடத்தை இழந்து, தேசிய அடையாளத்தை இழந்து அகதிகளாய் வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறவர்களும் உண்டு. புலம் பெயர்ந்தோர். அகதிகள் (ஏதிலார்) என்னும் அடையாளத்தைப் பெறுவோர் ஆதரிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். ஆண்டவர் அயல் நாட்டினரைப் பாதுகாக்கின்றார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார் (தி.பா. 146: 9) என்று திருமறையில் வாசிக்கிறோம். மாறிவரும் உலகில் மாறாத கடவுளின் வாக்கை மனத்தில் கொண்டு கடவுள் காட்டும் பாதையே நமது வாழ்வுக்கான பாதையும் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கு நாம் காண்பிக்கும் ஆதரவு நிலைப்பாடாகவும் இருக்க வேண்டும். திருமறையின் வெளிச்சத்தில் இப்பொருள் சார்ந்து நம்முடைய சிந்தனையை அமைத்துக் கொள்வோம்.

1. அந்நியரை ஆதரியுங்கள்:

அனைத்து உயிரினங்களுக்கும் உணவு வழங்குபவர் ஆண்டவர். அந்த ஆதரவின் கோல் அவரது கரத்தில் இருக்கிறது. ஆகவே, உடன் வாழ்வோருக்கு உணவு கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டியது நமது கடமை. கடவுள் உணவு கிடைப்பதை உறுதிபடுத்துவதற்கான பிரமாணத்தை இஸ்ரயேலருக்குக் கொடுத்தார்.

லேவி. 19: 9, 10-இல் "உங்கள் நாட்டில் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது, வரப்பு ஓரக் கதிரை அறுக்க வேண்டாம்; சிந்திக் கிடக்கும் கதிரையும் பொறுக்க வேண்டாம்; திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு வேண்டாம்; சிந்திக் கிடக்கும் பழங்களைப் பொறுக்க வேண்டாம். அவற்றை எளியோருக்கும் அன்னியருக்கும் விட்டுவிட வேண்டும்" என்கிறார் ஆண்டவர் (லேவி. 23: 22).

நாம் வாழும் பூமி எல்லோரும் வாழ்வதற்கானது. இறைப் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தேவ நீதியை நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். இச. 4: 19-21 வரையுள்ள வசனங்களை வாசிக்கும்போது நாம் வாழ்வதற்காக கடவுள் நம்மை ஆசீர்வதிக்கிறார். நம்முடைய உழைப்பின் பலன்களை ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம் என்பது நாம் கொள்ளுவதில் மட்டும் அமையாமல் கொடுப்பதிலும் அடங்கியுள்ளது. இறையழைப்பில் ஆசீர்வாதம் என்பது "உன்னை ஆசீர்வதிப்பேன்" என்னும் கடவுளின் வாக்குறுதியோடு இணைந்து "உன்னை அநேகருக்கு ஆசீர்வாதமாய் வைப்பேன்" என்பதிலும் அடங்கியுள்ளது. ஆகவே, ஆசீர்வாதத்தின் வாய்க்காலாய் வாழ்வது என்பது அந்நியரை ஆதரிக்கும் வாழ்வு என்பதை அறிந்து செயல்படுவோம்.

2. அந்நியரில் அன்புகூருங்கள்:

லேவி. 19: 33, 34-இல் "உங்கள் நாட்டில் தங்கியிருக்கும் அன்னியருக்குத் தீங்கிழைக்காதே! உங்களிடம் தங்கும் அன்னியர் உங்கள் நாட்டில் பிறந்தவரைப்போல் இருக்க வேண்டும். உங்கள் மீது நீங்கள் அன்பு கூர்வதுபோல் அவர் மீதும் அன்பு கூருங்கள். ஏனெனில், எகிப்தில் நீங்களும் அன்னியர்களாய் இருந்தீர்கள்" என அன்னியரிடத்தில் அன்புகூர்ந்து வாழும்படி கற்பிக்கும் ஆண்டவர், இஸ்ரயேலர் எகிப்தில் அன்னியராய் வாழ்ந்ததையும் நினைவுபடுத்துகிறார். ஆகவே, இஸ்ரயேலருக்குக் கற்பிக்கப்படும் பிரமாணம் என்பது அன்னியராய் இருந்ததை நினைவுகூர்ந்து அன்பு செய்ய அழைக்கப்படுகிறார்கள். வாழ்வு எப்படி நிரந்தரம் இல்லையோ அப்படியே நம்முடைய வாழ்வின் நிலைகளும் நிரந்தரமானவைகள் அல்ல. புலம் பெயர்தலும், அகதிகளாக்கப்படுதலும் உலகில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். எனவே, நம் நிலையை நாம் உணர வேண்டும் (இ.ச. 24: 17, 18).

முற்காலத்தில் அன்னியராய் இருந்த இஸ்ரயேலருக்கு கடவுள் ஆதரவாய் இருந்து அன்பு செய்தார். இறையன்பை இன்று அன்னியராய் உன் அருகில் வாழ்வோருக்குக் காண்பி என்பதே கடவுளின் எதிர்பார்ப்பு (வி.ப. 12: 48, 49).

அன்னியர் கடவுளின் உடன்படிக்கைக்கு உட்படுகின்றபோது தற்காலக் குடிகள் நாட்டினருடைய அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். நாமும் புலம்பெயர்ந்தோர், அகதிகள் (ஏதிலார்) போன்றோருக்கு ஆதரவு காட்டுவோம்; அன்பு செலுத்துவோம். இவ்விதமாய் இறைப் பிரமாணங்களை நிறைவேற்றுவோம்.

அருள்திரு. M. ஜோஸ் குமார்

கல்வி: சிந்தைகளை வடிவமைத்தல், வாழ்வை மாற்றுதல்

Education: Shaping Minds, Changing Lives

எசா. 50: 4-7 *தீத்து 2: 1-10*
திபா. 119: 9-16 *லூக். 5: 1-11*

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் (எசா. 50: 4).

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென் திருவாங்கூரில் சிறந்து விளங்கிய ஒரு பெரும் கல்வியாளர் மற்றும் கிறிஸ்தவ தொண்டர் பால் டேனியல் என்பவர் ஆவார். சாந்தபுரத்தில் பிறந்த அவர், ஆழ்ந்த கிறிஸ்தவ பயிற்சியால் உருவாகி, சிறந்த நடத்தையும் அறிவாற்றலாலும் அருட்பணியாளர் ஜேம்ஸ் டதி அவர்களின் கவனத்தை ஈர்த்தார். கல்லூரி படிப்பில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று, ஆங்கிலப் புலமைக்கான தங்கப்பதக்கத்தையும், மகாராஜாவிடமிருந்து வெப்ஸ்டர் அகராதியையும் பரிசாகப் பெற்றார். உயர்ந்த அரசுப் பதவியை மறுத்து, குறைந்த ஊதியத்துடன் கிறிஸ்தவ கல்விச் சேவையைத் தேர்ந்தெடுத்த அவர், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியராக நியமிக்கப்பட்டு, தொடர்ந்து தலைமை ஆசிரியராக உயர்வுப் பெற்று, பெரும் புகழ் அடைந்தார். மாணவர்களுக்கு ஒரு தந்தையைப் போல் இருந்து பாடசாலையில் ஒரு புது முறையான நல்லொழுக்கத்தை உருவாக்கினார். அவரது இனிமையான குரலும், இது எழுப்பும் பல்வேறு ஓசைகளும் அவரை கவர்ச்சிமிகு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஓர் ஆசிரியராக உருவாக்கியிருந்தது. 30 ஆண்டுகள் திருவிதாங்கூர் திருச்சபை மன்றத்தின் செயலாளராக பணியாற்றி, சிறந்த கல்வியாளராகவும், சமூகத் தலைவராகவும் பணியாற்றிய பால் டேனியல் அவர்களின் வாழ்வும் சேவையும் மாணாக்கர்களின் சிந்தைகளை வடிவமைத்தாய், சமூக வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதாய் அமைந்தன. இவை இன்றும் மக்களின் நினைவில் உயிரோடு வாழ்கின்றன.

கல்வி என்பது மனித வாழ்வை ஆழமாக வடிவமைக்கும் வல்லமைமிக்க மற்றும் நிலையான ஆற்றல் நிறைந்ததாகும். அது மனிதர்கள் எப்படி சிந்திக்கிறார்கள், எப்படி முடிவெடுக்கிறார்கள், உலகையும் தங்களைப் பற்றியும் எப்படி புரிந்து கொள்கிறார்கள் என்பதனை வெளிப்படுத்துகிறது. கல்வி என்பது வெறும் புத்தக அறிவு அல்ல, அது மனதை உருவாக்கும் பயணம், வாழ்க்கையை மாற்றும் செயல்முறை.

ஒரு மனிதன் எப்படி சிந்திக்கிறான், எப்படி முடிவெடுக்கிறான், சமூகத்தில் எப்படி வாழ்கிறான் என்பதை கல்வியே தீர்மானிக்கிறது. மேலும், ஒழுக்கத்தை வளர்த்து, மதிப்புகளைக் வெளிப்படுத்தி, வாழ்க்கையின் சவால்களுக்கு அறிவுடன் பதிலளிக்கும் திறனை வளர்க்கிறது. அமெரிக்க உளவியலாளரும், கல்வி சீர்திருத்தவாதியுமான ஜான் டுவி (John Dewey) என்பவர், கல்வி என்பது வாழ்க்கைக்கான தயாரிப்பு அல்ல; கல்வியே வாழ்க்கை என்கிறார். அதாவது, கல்வி என்பது பள்ளி மற்றும் கல்லூரியோடு அல்ல, மனிதன் தினசரி வாழ்வில் அனுபவிப்பதும், சிந்திப்பதும், செயல்படுவதுமே ஆகும். கற்றல் என்பது வாழ்விலிருந்து பிரிந்து நிற்கும் ஒன்று அல்ல; வாழ்க்கையின் ஒவ்வொரு சூழலிலும் தொடரும் ஒரு செயல்முறை ஆகும். கிறிஸ்தவ பார்வையில், கல்வி என்பது வெறும் அறிவுத்திறனை வளர்ப்பதற்கான கருவி மட்டுமல்ல; அது கடவுளின் வாழ்வை இறைவார்த்தைகளூனூடாய் உணர்ந்து, அதை வாழ்வில் செயல்படுத்தப் பயிற்றுவிக்கும் ஒரு ஆழமான ஆன்மீகப் பயிற்சி. இந்த வகையில், கல்வி மனதை மட்டும் அல்ல, முழு மனிதனை உருவாக்குகிறது. திருமறை நம்மைத் தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கும், ஞானத்தில் வளர்ச்சியடைவதற்கும் அழைக்கிறது. மனித வாழ்க்கையில் கல்வியும் ஞானமும் எவ்வளவு முக்கியமானவை என்பதை வலியுறுத்துகிறது. இந்தப் பயிற்சி தனிப்பட்ட மனிதரை மட்டுமன்று, சமூகத்தையும் மாற்றும் ஆற்றல் உடையது. கல்வியால் வடிவமைக்கப்பட்ட ஒருவர், ஒளியாகவும் உப்பாகவும் உலகில் தாக்கம் செலுத்த முடியும். கல்வியுடையோர் சமுதாயத்தில் நீதி, அமைதி, நேர்மை போன்ற மதிப்புகளை நிலைநிறுத்துவதற்கான கருவிகளாக மாறுகிறார்கள். அதனால் கிறிஸ்தவ கல்வி ஒரு பரிசுத்த பணியாக மதிக்கப்படுகிறது. அது வாழ்க்கையைத் தொடும், மாற்றும், உயர்த்தும் செயற்பாடு. கல்வி எவ்வாறு சிந்தைகளை வடிவமைத்து, வாழ்வை மாற்றுகிறது என்பதை திருமறையின் வழியாகச் சிந்திப்போம்.

1. ஊக்குவித்தல் (Encouraging): *(எசாயா 50: 4-7)*

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்; (எசாயா 50: 4)

எசாயா 40 முதல் 55 வரையுள்ள பகுதி பாபிலோனிய சிறையிருப்பில் வாழ்ந்த மக்களுக்கு இறைவாக்கினர் வழியாக கடவுள் அருளும் நம்பிக்கையின் வார்த்ததைகள் ஆகும். குறிப்பாக எசாயா 50: 4 - 7 பகுதியானது துன்புறும் பணியாளரின் மூன்றாம் பாடலிலுள்ள ஒரு பகுதியாகும். இந்த பாடலில், பணியாளர் அரசியல் விடுதலைக்காரராக அல்ல, ஆனால் கடவுளால் கற்றுக் கொள்ளும், கேட்கும், கீழ்ப்படிதலுடன் வேதனையை அனுபவிக்கும் வலிமையான சேவகனாக சித்தரிக்கப்படுகிறார். இஸ்ரயேல் மக்கள் தங்கள் தேசத்தை, ஆலயத்தை, தங்கள் அடையாளத்தையும் நம்பிக்கையையும் இழந்திருந்தார்கள்.

அரசியல் அடக்குமுறை, ஆன்மீக சோர்வு, சமூக அவமானம் இவையனைத்தும் ஒரே நேரத்தில் அவர்களை நசுக்கிய காலம் அது. இந்தச் சூழலில் கடவுள் வாளோடு அல்ல, வார்த்தையோடு பேசுகிறார். அவர் இறைவாக்கினரின் நாவை ஆறுதலின் கருவியாக மாற்றுகிறார். குறிப்பாக நலிந்தவனை எழுப்பும் வார்த்தை என்பது சிறையிருப்பில் உள்ள மக்களுக்கு உயிர் அளிக்கும் இறைவாக்காக வெளிப்படுகிறது. சோர்வு, வேதனை, நம்பிக்கையிழந்த நிலை ஆகிய சூழலிலும் கடினமான பற்றுறுதியைக் கற்பிக்கும் பாடலாகவும், ஊக்கமளிக்கும் வார்த்தையாகவும் உள்ளது. வால்டர் புரூக்மேன் என்ற அமெரிக்க இறையியலாளர், இறைவனின் வார்த்தை சோர்ந்தவர்களுக்கு ஆறுதலாகவும், அவர்களை ஊக்குவிப்பதுமாகவும், மற்றும் அதிகார அமைப்புகளின் அழுத்தத்திற்கு எதிரான மாற்றுக் குரலாகும். என்கிறார். மேலும் இந்த வார்த்தைகள் கல்வியின் தன்மையை தெளிவாக வெளிப்படுத்துகிறது:

உலகில் கல்வி பல நேரங்களில் போட்டி, அழுத்தம், மதிப்பீடு ஆகியவற்றால் மனிதனை சோர்வடையச் செய்கிறது. ஆனால் கடவுள் தரும் கல்வி மனிதனை எழுப்புகிறது, மீண்டும் நடக்க வைக்கிறது, பேச வைக்கிறது. "நீ தோல்வியடைந்தாய்" என்று சொல்லவில்லை; நீ இன்னும் "கடவுளுடைய எதிர்காலம் என்று உறுதி செய்கிறது. தெய்வீக கல்வி, மனிதனை சோர்வடையச் செய்யும் உலகியலான அழுத்தக்கல்வியல்ல; அது எழுப்பும், மீண்டும் நடக்கச் செய்யும் கல்வி என்பததை இப்பகுதி உணர்த்துகிறது. கல்வி வெறும் அறிவுப் பரிமாற்றம் அல்ல; அது கடவுளின் ஆறுதலுக்கும் மீட்புக்கும் கருவியாகும். ஆசிரியர் கடவுளின் இரக்கத்தின் பணியாளராக செயல்பட்டு, அதிகாரமோ கட்டுப்பாடோ மூலம் அல்ல, பொறுமை, அக்கறை, பாசத்தின் வெளிப்பாடாகக் கற்றல் வழங்குகிறார். ஆகவே உண்மையான கல்வி அறிவுத்திறனையே நோக்கமாகக் கொள்ளாமல், ஆன்மீக எழுச்சியையும், வாழ்க்கையின் மாற்றத்தையும் நோக்கமாகக் கொண்டது. இது ஒவ்வொரு மாணவருக்கும், கடினங்களை எதிர்கொண்டு முன்னேற எப்போதும் ஊக்கமும் நம்பிக்கையும் தரும் ஒரு கண்ணோட்டமாகும். ஆகவே ஊக்குவிக்கும் கல்வி என்பது, நலிந்தவரின் (தோல்வியுற்ற மாணவர்கள், வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்கள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள்) அருகில் உட்கார்ந்து, அவர்களின் மௌனத்தை கேட்டு, நம்பிக்கையின் ஒரு வார்த்தையை மெதுவாக விதைப்பதே ஆகும்.

2. உகந்த மாதிரியைக் கற்பித்தல்: (Teaching Through Example): *(தீத்து 2: 1-10)*

நற்செயல்களைச் செய்வதில் எல்லாவகையிலும் நீயே முன்மாதிரியாய் இரு. நாணயத்தோடும் கண்ணியத்தோடும் கற்றுக்கொடு *(தீத்து 1: 7).*

தீத்து இரண்டாம் அதிகாரம், பவுலின் உடன்பணியாளரான தீத்துவை கிரேத்து தீவில் உள்ள திருச்சபைகளை ஒழுங்குபடுத்தி வழிநடத்துமாறு அனுப்பிய அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும்

வெளிப்படுத்துகிறது. கிரேத்து தீவு பல்வேறு கலாச்சாரங்கள் கலந்திருந்ததும், ஒழுக்கக் குறைவு காரணமாகப் பெயர்பெற்றதும் ஆகும்; அங்கு போலிப் போதனையாளர்கள் (வார்த்தை சொல்லி, ஆனால் செயலால் இல்லாதவர்கள் மாணவர்களை குழப்பினர்), வீண்வாதம் செய்பவர்கள், நெறிமுறை இன்றிய வாழ்க்கை நடத்துபவர்கள் (உண்மையான கிறிஸ்தவ ஒழுக்கத்தை பின்பற்றாதவர்) என பலர் காணப்பட்டனர். இந்நிலைக்கு எதிராக, பற்றுறுதியை உறுதிப்படுத்தும் சீரான கற்பித்தலும், நல்லொழுக்கம் நிறைந்த நடைமுறையும், பற்றுறுதியின் உண்மையான வெளிப்பாடாகிய வாழ்க்கைச் சாட்சியையும் நிறுவுவதற்காக பவுல் தீத்துவை அனுப்பினார். அவர் முதியோர், முதிய பெண்கள், இளம் பெண்கள், இளைஞர்கள் மற்றும் அடிமைகள் என அனைவரும் தத்தம் வாழ்க்கை நிலைக்கும் அழைப்புக்கும் ஏற்ப நேர்மை, ஒழுக்கம், தூய்மை நிறைந்த வாழ்வை வெளிப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்; இதன் மூலம் திருச்சபை ஒழுங்கும் தெய்வீக அழகும் நிறைந்த சமுதாயமாக விளங்கும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

தீத்து 2:7-இல் -நற்செயல்களைச் செய்வதில் எல்லாவகையிலும் நீயே முன்மாதிரியாய் என பவுல் தீத்துவிடம் கூறுகிறார். கிரேத்து தீவில் தீத்து வழிநடத்திய திருச்சபையில் சில உறுப்பினர்கள் ஒழுக்கக் குறைவு கொண்டவர்கள், சிலர் வார்த்தையில் மட்டும் நம்பிக்கை காட்டுபவர்கள்; அவர்கள் வார்த்தை மற்றும் வாழ்க்கை இடைவெளியால் மக்களை குழப்பி வந்தனர். இதனால் பவுல், வார்த்தையால் மட்டுமல்ல; உங்கள் வாழ்க்கையால் கற்றுக்கொடுங்கள் என்பதைக் கூறி ஒரு மாதிரியானக் கற்பித்தலை வெளிப்படுத்துகிறார்.

கிறிஸ்தவப் கல்வி புத்தகத்திலிருந்து மட்டுமல்ல; வாழ்க்கையிலிருந்து தொடங்குகிறது. மாணவர்கள் கேட்பதைவிட பார்ப்பதை அதிகம் கற்றுக் கொள்கிறார்கள். ஆசிரியர் ஒரு சான்றாளராக, வார்த்தையையும் செயலையும் ஒருங்கிணைக்கும் போது, கற்பித்தல் உயிர் பெறுகிறது. எச். ரிச்சர்ட் நிபூர் என்ற இறையியலாளர், "கிறிஸ்தவ ஆசிரியரின் பொறுப்பு, விளக்குவதற்கு முன்பே பதிலை தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதுதான்". என்கிறார். கல்வி வெறும் சொல்லப்படுவது அல்ல; அது வாழப்பட வேண்டியது. பிள்ளைகள் முதலில் கேட்பதில்லை; அவர்கள் பார்க்கிறார்கள். இயேசு கிறிஸ்து தன்னுடைய போதனைகளில் வாழ்ந்து காட்டினார். அவர் தாழ்மைக் குறித்து போதிப்பதற்கு முன், சீடர்களின் கால்களைக் கழுவினார். யோவா 13: 15-இல் நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். எனக் கூறி மாதிரியான வாழ்வை வெறும் வார்த்தையில் அல்ல, தன் வாழ்வால் கற்பித்தார். டாலஸ் வில்லார்டு என்பவர் "இயேசு, வார்த்தைகளால் அல்ல; தன்னுடைய வாழ்க்கையால் சீடர்களை உருவாக்கினார்." எனக் கூறுகிறார். ஆசிரியர் ஒரு நடமாடும் பாடநூல்; வாழ்க்கைதான் சிறந்த பாடத்திட்டம். ஒழுக்கம் இல்லாத கல்வி, மனிதனை வெறுமனே புத்திசாலியாக்கும்; ஆனால் நல்ல மனிதனாக்காது. கிறிஸ்தவ தலைமையும் கல்வியும் அதிகாரத்திலிருந்து அல்ல,

சேவையிலிருந்து (மாதிரி வாழ்வு) பிறக்கிறது. ஆசிரியர், மேய்ப்பர் அல்லது தலைவன் என்பவர் சொல்வதனால் அல்ல; செய்வதனால் சீடர்களை உருவாக்குகிறார். ஆகவே உண்மையான கிறிஸ்தவக் கல்வி, சொல்லப்படும் வார்த்தைகளில் அல்ல; பார்க்கப்படும் வாழ்க்கையில் தன் வலி-மையை பெறுகிறது.

3. ஆழங்களுக்குள் அழைத்துச் செல்லுதல் (Leading into Transformative Depth) : (ලූක්. *5: 1-11)*

*...ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் (லூக்கா **5: 4**)*

இயேசு கிறிஸ்து தமது திருப்பணியின் ஆரம்ப நாட்களில் ஒரு அற்புதம் செய்யுமுன், ஒரு கல்வி ஆசிரியராகச் செயல்பட்டார் என்பதை லூக் *5:1-11* - இல் காணமுடிகிறது. அவர் சீடர்களை அவர்கள் பழகிய பாதுகாப்பான கரையிலிருந்து, பயமும் ஆபத்தும் நிறைந்த ஆழத்திற்குள் அழைத்தார். கெனசரேத்து ஏரிக்கரைக்கு வந்த இயேசுவை, மக்கள் கூட்டம் நெருக்கிக் கொண்டிருந்ததால், அவர், கரையோரமாய் நின்றுகொண்டிருந்த சீமோனின் படகில் ஏறி அமர்ந்து, மக்களுக்குப் போதித்தார். சீமோனின் படகை தன் போதனையின் மேடையாகப் பயன்படுத்திவிட்டு, இயேசு மீண்டும் தன் வழியே சென்றுவிடவில்லை. சீமோன் மற்றும் அவருடன் இருந்த மீன்பிடித் தொழிலாளர்கள் சிலரையும் தன் பக்கம் ஈர்க்க, இயேசு விடுத்த ஓர் அழைப்பு, ஒரு புதுமையாக உருவெடுத்தது. இங்கு இயேசு கிறிஸ்து, முதலாவது சீடர்களின் மனதை நகர்த்துகிறார்; பின்னர் அவர்கள் வாழ்க்கையை மாற்றுகிறார்.சீடர்கள் அனுபவமுள்ள மீனவர்கள். அவர்கள் இரவு முழுவதும் உழைத்தும் எதையும் பெறவில்லை. அந்தச் சூழலில் இயேசு, ..ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் (லூக்கா *5: **4***) எனக் கூறினார். ஆழத்திற்குச் செல்வது, எளிதான காரியம் அல்ல. ஆழத்திற்குச் செல்வதற்கு, ஏகப்பட்டத் தயக்கங்கள் நமக்குள் எழலாம். ஆனால் பேதுரு நினைத்திருந்தால், இயேசுவிடம் அவர் இவ்விதம் சொல்#யிருக்கலாம்: "ஐயா, பிறந்ததுமுதல், மீன்பிடித்து வாழ்பவர்கள் நாங்கள். இந்த கெனசரேத்து ஏரியில் எங்களுக்கு தெரியாதது அதிகம் இல்லை. உங்களுக்கு இந்தத் தொழிலைப்பற்றி எவ்வளவு தெரியும் என்பதும் எங்களுக்குத் தெரியாது. ஆனால், பகல்நேரத்தில் எங்களை மீன்பிடிக்கச் சொல்வது, மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இந்தப் பகல் நேரத்தில் நாங்கள் வலை வீசினால், பார்ப்பவர்கள், எங்களை எளனம் செய்வார்கள் என்று கூறியிருக்கலாம். மாறாக, சீமோன் பேதுரு, தன் இயலாமையையும், இயேசுவின் மீது தனக்கு உருவாகியிருந்த நம்பிக்கையையும்: "ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்" (லூக்கா *5:5*) என சொன்னார். எதையும், ஆழமாக அறிந்து, புரிந்து செயல்படுவதற்கும், ஆழமான, அர்ப்பண உணர்வுடன், உறவுகளை வளர்ப்பதற்கும், தனிப்பட்டத் துணிச்சல் தேவை. அத்தகைய ஆழத்திற்குச் செல்ல துணிச்சலைப் பெற்று சீமோன் இயேசுவின்

வார்த்தைக்கு கீழ்படிந்து வலையை வீசி, பெருந்திரளான மீன்களைப் பிடித்தனர். இயேசுவைப் பின்பற்றி, வாழ்வில் மாற்றத்தைக் கண்டுக் கொண்டனர்.

இங்கு கரை என்பது பழக்கம், பாதுகாப்பு, கட்டுப்படுத்தப்பட்ட அறிவு, நமக்குத் தெரிந்தது போதும் என்ற மனநிலை என்பதையும், ஆழம் (Deep waters) என்பது ஆபத்து, நம்பிக்கை, கேள்விகள் எதிர்பாராத மாற்றம் என்பதையும் குறிக்கிறது. ஆனால் இயேசு சீடர்களை கரையிலேயே கற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கவில்லை. அவர்களை ஆழத்தில் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.உண்மையான கல்வி மனிதனை மேற்பரப்பிலேயே வைத்துவிடாமல், கேள்வி கேட்கக் கற்றுக்கொடுத்து, விமர்சனமாக சிந்திக்க வைக்கிறது; புதிய பார்வைகளையும் புதிய உலகங்களையும் காண்பிக்கிறது. இவ்வகையான கல்வி பழைய சிந்தனைகளை உடைத்து, மனிதனின் மனதை புதிதாக்கி, வாழ்க்கையின் திசையையே மாற்றுகிறது. ஆகவே கல்வி என்பது வெறும் தகவல் பரிமாற்றம் அல்ல; அது மனிதனைச் சவால் செய்து, உள்ளார்ந்த மாற்றத்திற்கும் புதிய அழைப்பிற்கும் வழிநடத்தும் ஒரு மாற்றத்தின் பயணமாகும். ஆழத்திற்கு செல்லாத கல்வி, மனிதனை மேற்பரப்பிலேயே வைத்துவிடும். ஆழத்திற்கு அழைக்கும் கல்வி மனிதனை மாற்றி, சமூகத்தையும், திருச்சபையையும், உலகத்தையும் மாற்றும். இன்றும் இயேசு நம்மிடம் சொல்கிறார்; "கரையில் நிற்காதே; ஆழத்திற்குச் செல்." அங்கே தான், உண்மையான கல்வியும், உண்மையான மாற்றமும் ஆரம்பமாகிறது.

இயேசு கிறிஸ்து ஒரு சிறந்த ஆசிரியர் (Jesus, A Great Teacher). அவர் வெறும் வார்த்தைகளால் போதிக்கவில்லை; சோர்ந்து போனவர்களை ஊக்குவித்தார்; அவர் போதித்ததைத் தானே வாழ்ந்து காட்டி முன்மாதிரியாக இருந்தார்; மேலும் பற்றுறுதியின் எல்லைகளை விரித்துப் பார்க்கும்படி சீடர்களை ஆழத்திற்கு அழைத்தார். இயேசுவின் கல்வி, மனிதனின் அறிவை மட்டும் அல்ல; அவன் மனதையும் இதயத்தையும் மாற்றி, முழு வாழ்வையே புதிதாக்கியது. அதனால் அது தகவல்களைக் கற்றுத்தரும் கல்வி அல்ல; மாற்றத்தை உருவாக்கும் கல்வியாக இருந்தது. இன்றைய கல்வி உலகில், மதிப்பெண் மற்றும் போட்டி மையமாகிய கல்வி, அறிவு வளர்ந்தும் ஞானம் குறைதல், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மனித உறவுகள் பலவீனமாதல், வேலைக்கான பயிற்சி வாழ்க்கை மாற்றத்தை மறைத்தல் என பல சவால்கள் உள்ளன: இந்த சூழலில் இன்றும் அவர் நம்மை, "ஆழத்திற்கு செல்லுங்கள்." என்று அழைக்கிறார். ஆகவே நாம் கற்றுக் கொள்வதோடு மட்டுமல்ல, நம் சிந்தைகளை வடிவமைத்து, வாழ்வில் மாற்றம் பெறுவோம்; மாற்றம் பெற்றவர்களாக இருந்து, இறுதியில் இந்த உலகையே மாற்றும் கருவிகளாக மாறுவோம்.

அருள்திரு. முனைவர் முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்

கடவுளை நம்பும் பெண்கள்: நம்பிக்கைக்குரியோரும் அஞ்சாமை உடையோரும்

Women Who Trust God: Faithful and Fearless

2 அர. 22: 11-20 *உரோ. 16: 1-17*
திபா. 18: 1-19 *மத். 15: 21-28*

"அவர்கள் என் உயிரைக் காக்கத் தலைகொடுக்கவும் முன்வந்தார்கள்" (உரோ. 16: 4).

இயற்கையாகவே, பெண்கள் வாழ்வில் அச்சப்படுகிறவர்களாகவும், ஐயப்படுகிறவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். நம் சமுதாயமும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இக்குணாதிசயங்களை பெண்களிடம் எதிர்பார்க்கிறது. ஆனால், நம்பிக்கை நட்சத்திரங்களான பெண்கள், இறை நம்பிக்கையின் நங்கூரங்கள். பணிவும் அதே வேளையில் துணிவும் கொண்டவர்கள். இறையச்சமிகுந்த அஞ்சா நெஞ்சமுடையவர்கள். இறை நம்பிக்கையால் வாழ்வு பெற்றுஇ வாழ்வளிப்பவர்கள். எடுத்துக்காட்டாக, தெபொராள், மிரியம். திருமறையில் இப்பெண்கள் எப்படி உண்மையின் உறைவிடமாய்இ அஞ்சா நெஞ்சத்தின் அடையாளமாய் செயல்பட்டார்கள் என்பதை இங்கு சிந்திப்போம்.

1. திருவுளம் தெரிந்திருந்தார் குல்தா *(2 அர. 22: 13)*

திருவுளம் என்றால் இறைவனின் உள்ளம். இறைவனின் உள்ளக்கிடக்கையை அறிந்து செயல்படுதல் அவசியம். "திருவுளம் தெரிந்திருத்தல்" என்பது, "தெய்வீக விருப்பத்தை அறிந்திருத்தல்" அல்லது "கடவுளின் சித்தத்தை அறிந்திருத்தல்" என்று பொருள்படும். திருவுளமறிந்து அதை நிறைவேற்ற விரும்புகிற நமக்கு முடிவு எதுவாகயிருந்தாலும், அதை ஏற்கின்ற பக்குவத்தையும், சமாளிக்கின்ற திறனையும் இறைவன் அருளுவார் என்பது திண்ணம். பொதுவாக, நம் ஒவ்வொருவருக்கும் திருவுளமறிய ஆவலிருக்கிறது. யோசியா ராஜா "நீங்கள் போய் என்னைக் குறித்தும், மக்களைக் குறித்தும், யூதா முழுவதைக் குறித்தும் கண்டெடுக்கப்பட்ட இந்நூலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று ஆண்டவரின் திருவுளத்தைத் தெரிந்து வாருங்கள்." (2 அர. 22: 13) என பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவையும். மற்ற நான்கு ஆண் அதிகாரிகளையும் (அகிக்காம், அக்போர். சாப்பான். அசாயா) தீர்க்கதரிசினி (பெண்) குல்தாவிடம் அனுப்பும் அவர் இறைவனை, இறைவார்த்தையை, இறைவாக்குரைக்கும் குல்தாவையும் முழுமையாக நம்பினார். திருவுளமறிந்து சொல்லும்

குல்தாவும் இறைவனை நம்பினார். திருமறையில் விரல் விட்டு எண்ணக்கூடிய தீர்க்கதரிசினிகளின் பெயர்களே (மிரியாம் (விப. 15: 20), தெபோராள் (நீத. 4: 4), உல்தாள் (2 அர. 22: 14), நொவதியாள் (நெகே 6: 14) பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு தேசத்தின் அரசன் ஒரு தீர்க்கதரிசியினியிடம் திருவுளத்தை அறிய செல்வது அரிதான செயல். ஏனெனில், புகழ்பெற்ற எரேமியா மற்றும் செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்த காலத்தில் தான் குல்தாவும் பணியாற்றினார். பிரதான ஆசாரியரே தேடி வந்து இறைவார்த்தையைக் கேட்குமளவுக்கு, நியாயப்பிரமாணத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்ததோடு, கண்டெடுக்கப்பட்ட நூலின் சாராம்சத்தையும் நன்கு தெரிந்திருந்தார் குல்தா. இறைவார்த்தையை பூசி மெழுகாமல், கூட்டிக் குறைக்காமல் உள்ளதை உள்ளபடியே சொல்பவராக இருந்தார் குல்தா. பொதுவாக மெய்தீர்க்கதரிசிகள் (இச. 18: 18-19). இறைவார்த்தையை உண்மையாக அப்படியே வெளிப்படுத்துவார்கள். உல்தாளும் அப்படித்தான் திருவுளமறிபவர் அரசனாக இருந்தாலும் ஆண்டியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் "இதுதான் கர்த்தருடைய வார்த்தை" என்று நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் சொன்னவர் குல்தா.

ஆண்டவர் கூறுவது இதுவே: இந்த இடத்தின்மீதும், இதில் வாழ்வோர் மீதும் தீங்குகளை யூதாவின் அரசர் முன் படிக்கப்பட்டநூலின் வார்த்தைகளில் கண்ட அனைத்துச் சாபங்களையும் வரச் செய்வேன். (2 குறி. 34: 24). ஆண்டவரின் திருவுளம் தெரிந்து வருமாறு உங்களை அனுப்பிய யூதாவின் அரசனிடம் நீங்கள் இவ்வாறு கூறுங்கள்: நீ கேட்ட வார்த்தைகளைப் பற்றி இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: (2 குறி. 34: 26), என்று உண்மையை உறுதியோடு உரக்க கூறினார் குல்தா. ஆகவேஇ நீங்கள் பேசும்போது "ஆம்" என்றால் "ஆம்" எனவும் "இல்லை" என்றால் "இல்லை" எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது (மத். 5:37) என நாம் உண்மை பேசும்படி இயேசு வலியுறுத்துகிறார்.

மேரி ஜோன்ஸ் (1784-1864) ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இவர் தனது நீண்ட நாள் கனவான ஒரு வேதாகமத்தை சொந்தமாக்க விரும்பினார். இதற்காக, சுமார் 26 மைல்கள் தூரத்தை வெறுங்காலுடன் நடந்தே சென்று தனது கனவு வேதாகமத்தைப் பெற்றார். வேதாகமத்தை எப்படியாவது பெற்று, அதை கற்று, அதின் உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற மேரியின் பேராவல் தாமஸ் சார்லஸ் என்ற போதகரை ஈர்த்தது. அவர் வேதாகமங்களை மக்களுக்கு விநியோகிக்கும் ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்து 1804-ல் பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கம் நிறுவப்பட்டது. மேரிஇ தன் வாழ்வில் இறை திருவுளத்தை நிறைவேற்றியதால் வேதகாமச் சங்கம் (Bible Society) என்ற நிறுவனம் உதயமாயிற்று.

என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்; உமது திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கின்றது" (திபா. 40:8) என்று சங்கீதக்காரன் கூறுகிறார். இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாகஇ உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும் (உரோ. 12:2). என்று படிக்கிறோம். நம் வாழ்வில் திருவுளத்தை தெரிந்திருக்கிறோமா? திருவுளத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கிறோமா?

2. திடமனதோடிருந்தார் குல்தா: *(2 அர. 22: 13)*

திருவுளத்தை தெரிந்திருந்த, அறிவித்த குல்தா திடமனதோடிருந்தார். "திடமனது" என்பது மன உறுதிஇ தைரியத்தைக் குறிக்கிறது. "பலங்கொண்டு திடமனதாயிரு" என்பது அஞ்சாமல், கலங்காமல், எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும், உறுதியாக சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் குறிக்கிறது. நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவ தில்லையாம். பாரதியின் இப்பாடல் வரிகளுக்கு இலக்கணமாக திகழ்ந்தார் குல்தா. பயப்படாமல், அச்சமின்றி உணர்ச்சிகளை அடக்கி, நிதானத்துடன் செயல்படும் திறன் அவரிடமிருந்தன. தீர்க்கதரிசினியான குல்தாளுக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் சவாலானதாக இருந்தாலும் கூட உண்மையை உறுதியோடும் தைரியத்தோடும் தீர்க்கமாக கூறினார். ராஜா குல்தாளின் வார்த்தையைக் கேட்டு, தனது இதயத்தையும், மக்களையும் கர்த்தரைப் பின்பற்றத் திருப்பினார். பிரிஸ்கா அக்கிலா பற்றி பவுலடியார் கூறும்போது "அவர்கள் என் உயிரைக் காக்கத் தலைகொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" (உரோ. 16: 3-4) என்கிறார். இயேசுவின் சீடர்கள் அவரிடம் கானானிய பெண்ணைப் பற்றி, "நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரேஇ இவரை அனுப்பிவிடும்" என வேண்டினர் (மத். 15: 23). ஆனால், அப்பெண்ணின், "ஐயா, எனக்கு உதவியருளும்" (மத். 15: 25) மற்றும் "ஆம் ஐயா, ஆனாலும், தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே" (மத். 15: 27) என்ற தொடர் விண்ணப்பம், மற்றும் திடமனதுடன் கூடிய நம்பிக்கை அவரது மகளுக்கு சுகம் பெற்று தந்தது. பாராக்கு தெபோராவிடம், "நீர் என்னுடன் வந்தால் நான் செல்வேன். நீர் என்னுடன் வராவிடில் நான் செல்லமாட்டேன்" என்பது பாராக்கின் பலவீனமான மனதுக்கும் (நீமொ. 4: 8) "செத்தாலும் சாகிறேன்" (எஸ்தர் 4: 16) என்ற வார்த்தைகள் எஸ்தரின் திடமனதுக்கும் சான்றுகளாக இருக்கின்றன. "நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே

இருக்கிறார்" (யோசு. 1:9) என்ற வார்த்தைகள் திடமனதாய் இருப்பதற்கான நம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்கிறது.

இரண்டு அறிவியல் துறைகளில் (இயற்பியல், வேதியியல்) தனது தொடர் ஆராய்ச்சியின் பலனாக 1910-ல் ரேடியத்தைக் கண்டறிந்து 1911-ல் வேதியியலுக்கான நோபல் பரிசு வென்ற முதல் பெண் மேரி கியூரி. 1906 ஆம் ஆண்டு கியூரியின் கணவர் பியர் கியூரி சாலை விபத்தில் இறந்து போன நிகழ்வு கியூரியின் தனிப்பட்ட வாழ்விலும், அறிவியல் வாழ்விலும் சொல்லொணாத் துயரத்தை உண்டாக்கியது. இருப்பினும் துயரத்தை மறப்பதற்கு மீண்டும் கதிர்வீச்சு ஆய்வுப்பணியில் திடமனதோடு தீவிரமாக ஈடுபட்டு உழைத்து ரேடியம் தனிமத்தைத் தூய்மைப்படுத்தி வெளிக்கொணர்வதில் வெற்றி கண்டார். முதலாம் உலகப் போரில் காயமுற்றவர்களுக்கு பேருதவி புரிந்தார். கியூரியின் திடமனதுடன் கூடிய நம்பிக்கைக்கு சான்றாக ஒரு வேதியல் தனிமத்திற்கு கியூரியின் நினைவைப் போற்றும் வகையில் கியூரியம் (Curium) எனவும் கதிரியக்க அலகுகளில் (radioactivity unity) ஒன்று, கியூரி (Curie) என்றும் பெயர் சூட்டப் பெற்றுள்ளன. மார்ட்டின் லூதர் கிங் ஜூனியரின் சொற்றொடர்/ "உன்னால் பறக்க முடியாவிட்டால் ஓடு, ஓட முடியாவிட்டால் நட, நடக்க முடியாவிட்டால் தவழ்! ஆனால் நீ என்ன செய்தாலும், நீ முன்னேறிச் செல்ல வேண்டும்" ("if you can't fly then run, if you can't run then walk, if you can't walk then crawl, but whatever you do, you have to keep moving forward") நம்மை தடைகளை தகர்த்தெறிந்து திடமனதோடு விடாமுயற்சியுடன் தொடர்ந்து முன்னேற்றமடைய வலியுறுத்துகின்றன. நம் வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் போது திடமனதோடு செயல்படுகிறோமா?

3. தீங்கை முன்னறிவித்தார் குல்தா: *(2 அர. 22: 16)*

திருவுளத்தை தெரிந்து திடமனதோடிருந்த குல்தா தீங்கை முன்னறிவித்தார். தீங்கை முன்னறிவித்தல் என்பது பொதுவாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தீமைகளை அல்லது ஆபத்துகளை முன்கூட்டியே உணரும் திறனைக் குறிக்கிறது. மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை முன்கூட்டியே எச்சரித்து. நம்பிக்கையூட்டி மக்களை ஆறுதல்படுத்தவும், எதிர்நோக்கும் சவால்களுக்குத் தயாராகவும் உதவுகிறது. தீங்கை முன்னறிவித்ததால்இ தீமையைத் தடுத்து (வ. 20). தீவிரமாக செயல்பட்டார் குல்தா (வ.18, 20). "தீவிரமாக செயல்பட்டு" என்பது ஒரு செயலை மிகுந்த ஆற்றலுடனும், மிகத் தீவிரமாகவும், கவனத்துடனும், உறுதியுடனும் செய்வதாகும். அரசனின் ஆட்கள் வந்திருப்பதால், நீங்கள் அரசனிடம் சொல்லுங்கள் என கூறவில்லை. ஆனால், உங்களை அனுப்பினவரிடத்தில் சொல்லுங்கள், என குல்தா கூறுகிறார். வந்திருப்பது ராஜாவின் ஆளாகவே இருக்கட்டும். நான் தேவன்

சொல்வதை மாத்திரமே சொல்வேன் என்பதில் தெளிவாக இருந்த குல்தாஇ தீர்க்கமாக, தீவிரமாக திருவுளத்தை வெளிப்படுத்தினாரே தவிர, தீவிர வாக்குவாதத்தையோ தீவிரவாதத்தையோ வெளிப்படுத்தவில்லை

மலாலா யூசுப், நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தான் தேசத்தின் பெண்மணி, பெண்கல்வியின் முக்கியத்துவத்தையும், அறியாமையின் தீங்கையும் நன்கறிந்து தீவிரமாக செயல்பட்டார். வறுமை, போர்கள், குழந்தை திருமணம் மற்றும் பாலின பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடும் சிறுமிகளைச் சந்தித்துப் பள்ளிக்குச் செல்ல, பிரேசில் முதல் நைஜீரியா, ஈராக் வரை பல நாடுகளுக்குச் சென்றார். மலாலா நிதியம் (Malala Fund) மூலம், அவர்களின் வாழ்வின் கஷ்டங்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள கடுமையாக உழைத்தார். 2013-ம் ஆண்டு ஜூலை 12-ல் மலாலா தனது 16-வது பிறந்தநாளன்று ஐக்கிய நாடுகள் சபையை, தொடர்பு கொண்டு உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்று கேட்டார். அறியாமையினால் வரும் தீங்கை முன்னறிவித்து, தீவிரமாக செயல்பட்ட மலாலாவின் பிறந்தநாளை ஐக்கிய நாடுகள் "மலாலா தினம்" என்று கொண்டாடுவது பெருமைக்குரியதே! உலகம் வாசித்துக் கொண்டிருக்கும் திருமறை (Bible) நாம்தான் உலகத்திற்குத் தேவைப்படும் சமயக் கோட்பாடுகள் (Creed) நாம்தான் உலகம் செவி கொடுத்துக் கேட்க விரும்பும் பிரசங்கம் (Sermon) நாம்தான்- பில்லி கிரஹாம். எனவே, நம் வாழ்வில் திருவுளம் அறிந்து, அறிவித்து, திடமானதோடு, தீவிரமாக இறை சித்தம் செய்வோம்!

முனைவர். **சோபனா கின்சன்பெல்**

பன்மைத்துவம்: பற்றுறுதியும் நட்புறவும்

Pluralism: Faith and Friendship

எரே. 29: 1-7 *உரோ. 12: 9-18*
திபா 37: 1-24 *லூக். 11: 5-10*

"இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள்" (உரோ. 12: 18).

சாமுவேல் கமலேசன் என்ற இராணுவ அதிகாரி கோவிலுக்குள் சென்று மத வழிபாட்டில் இணையாத காரணத்தால் மார்ச் 2021-இல் பணிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். ஆனாலும் நவம்பர் 2025-இல் உச்சநீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்து பணிவாய்ப்பைக் கொடுக்க மறுத்த நிகழ்வு அனைவரும் அறிந்ததே. தற்போது கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிறுவனமொன்றில் பணி செய்துவரும் இவரது வாழ்க்கை பன்மைத்துவத்தில் பற்றுறுதி வாழ்விற்கு ஒரு எடுத்துக்காட்டு. National Association of Evangelicals *என்ற இங்கிலாந்து அமைப்பினர் 1940-களில் தங்களது அடிப்படைக் கொள்கையாக "சமரசமில்லாத ஒத்துழைப்பு"* (Co-operation without Compromise) *என்பதைத் தெரிந்துகொண்டு பல்சமய மற்றும் பன்மைச் சூழலில் பற்றுறுதியை இழக்காமல் பிறருடன் ஒத்துழைத்து இறைப்பணி செய்தல் என்பதை உருவாக்கினர். பேராயர் லெஸ்லி நியூபிகின் அவர்களின் பன்மைச் சமூகத்தில் நற்செய்தி என்ற புத்தகத்தில் "சமரசமில்லாமல் சூழ்நிலைப்படுத்தல்" என்ற கருத்தை முன்மொழிந்தார். அதில் சமகாலக் கிறிஸ்தவர்கள் தாய்மொழிகளில் பேசக்கூடியவர்களாகவும் சமூகத்தின் கலாச்சார மொழியிலும் நற்செய்தியிலும் தொடர்புகொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.*

இன்று இந்தியச் சமுதாயத்தில் திருச்சபைகள் பன்மைத்துவத்தில் நம்பிக்கையைவிடாது நட்புறவுடன் வாழ்தல் என்பது மிகவும் சவாலான ஒன்று. எனவே, இன்று நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள திருமறைப்பகுதிகளினூடாய் எவ்வாறு பன்மைத்துவத்தில் பற்றுறுதியுடனும் நட்புறவுடனும் வாழலாம் என்பதைச் சிந்திப்போம்.

1. நல்வாழ்வின் சமுகமாதல்: *(எரே. 29: 7)*

இஸ்ரயேலர் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்த காலகட்டத்தில் (கி.மு. 586) எரேமியா இறைவாக்கினர் உரைத்த இறைவாக்குகள், இஸ்ரயேலர் அந்நிய தேசத்திலே பல்சமயச் சூழலில் எவ்வாறு

வாழவேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன. பாபிலோனில் பல் சமய நம்பிக்கை கொண்ட மக்கள் குழு வாழ்ந்தனர். பல கலாச்சாரங்களைப் பின்பற்றும் மனிதர்களும் வாழ்ந்தனர். இச்சூழலில் கடவுள் இஸ்ரயேலரிடம், "உங்களை எந்த நகருக்கு நாடுகடத்தியுள்ளேனோ அந்த நகரின் நல்வாழ்வைத் தேடுங்கள்" (எரே. 29: 7) என்று குறிப்பிடுகின்றார்.

எரேமியா 29: 7-இல் மூன்று முறை "ஷாலோம்" என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரேய மொழியில் மிகவும் பிரதானமான இந்த வார்த்தை ஒரு முழுமையைக் குறிப்பதாகும். கடவுள் தம் மக்களிடம் அந்த நகரின் நல்வாழ்வைக் குறித்துப் பேசுகின்றார். அந்த நகரில் நல்வாழ்வை ஏற்படுத்துவதே தமது ஜனத்திற்கும் நல்வாழ்வு என்பதைக் குறிப்பிடுகின்றார்.

இதற்கு கடவுள் பயன்படுத்துகின்ற சில தகவுகள் இஸ்ரயேலர் தங்கள் கடவுள் நம்பிக்கையில் உறுதியாயிருந்து நல்வாழ்வை ஏற்படுத்தும் சமூகமாக வாழவேண்டும் என்பதைக் குறிக்கின்றது. குறிப்பாக,

i) வீடுகளை கட்டி (5)

i i) தோட்டங்களை அமைத்து (5)

i i i) மணம் முடித்து வையுங்கள் (6)

i v) பலுகிப் பெருகுங்கள் (6)

v) அந்நகருக்காக மன்றாடுங்கள் (7)

இங்கு கடவுள் குறிப்பிடும் ஒவ்வொன்றும் இஸ்ரயேலர் ஒரு நல்வாழ்வின் சமூகமாக மாறவேண்டும் என்பதைக் குறிக்கின்றது. வீடு கட்டுதல் என்பது குடும்ப உறவையும் சமூக நல்லுறவையும் குறிக்கின்றது. தோட்டம் அமைத்தல் விவசாய செழிப்பினால் மக்கள் பயனடைவதைக் குறிக்கின்றது. மணம் குடும்பங்கள் பலுகிப் பெருகுதலைக் குறிக்கின்றது. மன்றாடுதல் இஸ்ரயேலரின் பக்தி வாழ்வையும் பிற மக்கள் மீது தாங்கள் கரிசனையுள்ளவர்களாக வாழவேண்டும் என்பதையும் குறிக்கின்றது.

ஆபிரகாம் நகருக்காக மன்றாடினார் (தொநூ. 18), மோசே மக்களுக்காக மன்றாடினார் (விப. 32), யோபு தனது நண்பருக்காக மன்றாடினார் (யோபு 10), தாவீது தேசத்தின் அமைதிக்காய் மன்றாடினார் (திபா. 122: 6). இவைகள் எல்லாம் எதைக் குறிக்கின்றதென்றால் அந்நிய தேசத்தில் இருப்பினும் அந்தத் தேச மக்களின் நலனுக்காக இஸ்ரயேல் செயல்பட வேண்டும் என்பதே. எனவே, இன்று பன்மைச் சமூகத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் பிற மக்களின் நல்வாழ்வு அல்லது முழுமை வாழ்வில் தங்களது முழுப் பங்களிப்பைத் தரவேண்டும் என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகின்றது.

2. அன்பின் சமூகமாதல்: *(உரோ. 12: 9)*

உரோமைத் திருச்சபை பன்மைச் சூழல் கொண்ட திருச்சபை. கிறிஸ்துவைப் பின்பற்றிய யூதர்கள் காணப்பட்டனர். பிற இனத்தவர்களும் காணப்பட்டனர். பலதரப்பட்ட சமூக பொருளாதார சூழல் கொண்ட மக்கள் வாழ்ந்தனர். செல்வர், ஏழைகள், அடிமைகள் மற்றும் வியாபாரிகள் காணப்பட்டனர். கிரேக்க, உரோமை, யூத மற்றும் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரமும் காணப்பட்டது. கிரேக்கம், இலத்தீன், அரமேயம் மற்றும் எபிரேய மொழியின் தாக்கமும் காணப்பட்டது. இத்தகைய பன்மைத்துவம் காணப்பட்ட சூழலில் பவுல் இங்கு முக்கியப்படுத்துவது அன்பு. "உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக" (உரோ. 12: 9) என்று கூறுவது பவுல் ஒரு அன்பின் சமூகத்தை எதிர்நோக்குவதைக் குறிக்கின்றது. பவுல் பயன்படுத்தும் அகாப்பே என்ற கிரேக்கச் சொல் திருமறையின் பிரதானமான சொல். கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் இச்சொல்லை இங்கு பவுல் தமது விசுவாசிகளுக்குக் குறிப்பிடுகின்றார்.

மாயமற்ற அன்பு என்பது இறைமக்கள் கடவுளுடன் கொண்டுள்ள அதே அன்புறவை தாங்கள் வாழும் சமூகத்திலும் பிரதிபலிக்க வேண்டும் என்பதே. உண்மையான அன்பு எல்லைகளைத் தாண்டி மனிதருடன் நல்லுறவை ஏற்படுத்தும். அத்தகைய அன்பை வெளிப்படுத்த பவுல் கூறும் சில தகவுகளாவன.

i) *உடன்பிறப்புகள் போன்று அன்பு செய்தல் (10)*

ii) *பிறர் உங்களைவிட மதிப்புக்குரியவர் எனக் கருதுதல் (10)*

iii) *அழுவாரோடு அழுங்கள் (14)*

iv) *எல்லாரோடும் அமைதியை ஏற்படுத்துதல் (11)*

இங்கு குறிப்பிடப்படும் அனைத்தும் அன்பின் விழுமியங்களாக பவுல் குறிப்பிடுகின்றார். எனவே, இறைமக்கள் பன்மைத்துவம் கொண்ட நம் இந்தியச் சமூகத்தில் அன்பை வெளிப்படுத்தும் சமூகமாக வாழ கடவுள் அழைக்கின்றார்.

3. பகிரும் சமூகமாதல்:

வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் (உரோ. 12: 13).

திருத்தூதுவர் பவுலின் காலகட்டத்தில் உரோமைத் திருச்சபை மற்றும் உரோமைச் சமூகத்தில் வாழ்ந்த பல குழுக்களில் பொருளாதாரச் சூழலில் பின்தங்கிய விசுவாசிகளும், பிறஇனத்தவரும் காணப்பட்டனர். இப்பகுதியில் "பகிர்ந்து கொள்ளுங்கள்" (13) என்ற வார்த்தை கிரேக்க மொழியில் கொய்னோனோன்றெஸ் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தை மூலச்சொல்லான

கொய்னோனியா என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது. கொய்னோனியா என்பது ஐக்கியம், நல்லுறவு போன்ற அர்த்தங்களைக் கொண்டது. ஒரு நல்லுறவு கொண்ட சமூகம் உருவாக பகிர்தல் மிகவும் இன்றியமையாதது என்பதை இங்கு பவுல் தெளிவுபடுத்துகின்றார். ஆண்டவர் இயேசு பன்மைச் சூழலில் பகிர்தலின் முக்கியத்துவத்தை இறையரசின் விழுமியங்களுக்கு ஒப்பிடுகிறார் (மத். 25: 35-40). பகிர்தல் திருச்சபையின் பிரதானக் கடமையானது (தி.ப. 2: 44, 45). இஸ்ரயேல் மக்கள் ஒரு பகிரும் சமூகமாக வாழவேண்டும் என்று கடவுள் கட்டளையிட்டார் (இச. 15: 7-11).

லூக். 11: 5-10 வரையுள்ள பகுதியில் தேவையுடன் வந்த தனது நண்பரின் பசியைப் போக்க பகிரும் ஒரு மனிதனை குறித்து இயேசு கூறுகின்றார். இங்கு பயன்படுத்தப்படும் "விடாபிடியாய் கதவைத் தட்டிக்கொண்டேயிருத்தல்" (8) என்று கூறி தற்காலச் சமூகத்தில் தேவையுடன் வாழும் மக்களின் குரலாக இருக்கின்றது. இன்று பசி, வீடின்மை, வறுமை, வேலையின்மை போன்றவை இறைமக்களையும், திருச்சபையையும் தட்டிக்கொண்டே இருக்கின்றது. எனவே, சமய, சமூக எல்லைகளைக் கடந்து பகிரும் சமூகமாக வாழ கடவுள் நம்மை அழைக்கின்றார்.

ஒரு பெண் தனது பணியிடத்தில் ஏற்பட்ட கடினங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் சார்ந்த திருச்சபை ஆயரிடம் தனது பணியை ராஜினாமா செய்வதாகக் கூறினார். காரணம் அங்கு பன்மைத்தன்மை கொண்ட மக்கள் பணி செய்தனர். இப்பெண்ணின் உண்மைத்தன்மை, நல்லுறவுடன் பழகுதல் போன்றவை பிறருக்கு எரிச்சலை உண்டுபண்ணியது. போதகர் அவரிடம், அம்மா ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்கள் என்றார். விளக்கு எங்கு வைக்கப்படும் என்று கேட்டார். இருள் இருக்கும் இடத்தில் என்றார் அப்பெண். உண்மையே இன்று பல நிலையில் இருளின் மத்தியில் உள்ளது. ஒளியாக கடவுள் உங்களை வைத்துள்ளார். உங்கள் நம்பிக்கையை விட்டுவிலகாமல் பன்மைச் சமூகத்தில் பணி செய்வதே நலம் என்றார்.

இன்றைய பன்மைத்துவம் கொண்ட சமூகத்தில் பற்றுறுதியை விட்டுவிடாமல், உறுதியாயிருந்து நட்புறவில் வளர நல்வாழ்வின் சமூகமாகவும், அன்பின் சமூகமாகவும், பகிர்தலின் சமூகமாகவும் வாழ கடவுள் நம்மை அழைக்கின்றார்.

அருள்திரு. A. பிரைட் சாலமோன்

குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை: சிறந்தது இனிமேல்தான் வர உள்ளது

Purposeful Living: The Best is Yet to Come

யோசு. 14: 6-13 *பிலி. 3: 12-16*
திபா. 16 *யோவா. 21: 18-23*

". . . கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொடர்ந்து ஓடுகிறேன்" (பிலி. 3: 12).

1990-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் நாள் ஐக்கிய நாடுகளின் சபையானது அக்டோபர் 1-ஆம் நாளை மூத்த குடிமக்கள் தினமாக அறிவித்தது. மூத்தோரின் பங்களிப்புக்கு மதிப்பளிப்பதும், அவர்களின் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும். அறுபது வயது நிரம்பிய அனைவரும் மூத்த குடிமக்கள் என அழைக்கப்படுகின்றனர்.

மூத்தோரைப் பேணுவதும், பாதுகாப்பதும், மதிப்பளிப்பதும் இன்றையத் தலைமுறைக்கு மிகச் சிறப்பான கடமையாகும். நம் மூத்தோர் கரும்பின் சக்கையாக மாற்றப்பட்டதால் நாம் இன்று சர்க்கரையாக இனிக்கிறோம். இதனை உணராமல் நம் மூத்தப் பெற்றோரை கவனிக்கத் தயங்குகிறோம். "வீட்டின் பெயரோ அன்னை இல்லம்; அன்னை இருப்பதோ அனாதை இல்லம்" என்ற புதுக்கவிதை வரிகள் இன்றையச் சமூகச் சூழலின் வெளிப்பாடாகும். பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டிய பிள்ளைகள் தங்கள் பெற்றோரை முதியோர் இல்லத்துக்கு அனுப்பி தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர். முதியோர் இல்லத்துக்கு பணம் கொடு, பொருள் கொடு, உணவு கொடு, உடை கொடு. ஆனால், உன் பெற்றோரை மட்டும் கொடுத்துவிடாதே என்ற எச்சரிப்புக் குரல்களும் ஒலிக்கத்தான் செய்கிறது.

உலகின் சிறந்த வகுப்பறை வயதான ஒருவரின் காலடியிலேயே இருக்கிறது என்று ஆண்டி ரூனி குறிப்பிடுகிறார். விவிலியத்தில் குறிக்கோளுடன் வாழ்ந்த மூத்தோரின் வாழ்வில் வெளிப்பட்ட நற்பண்புகளை நம் வாழ்வில் உடைமையாக்கிக் கொள்வோம்.

1. இறைவாக்குறுதிக்கேற்ப வாழ்தல்: (Living according to God's Promise) *(யோசு. 14: 12)*

"ஆண்டவர் கூறியபடி அவர்களைத் துரத்தியடிப்பேன்".

இஸ்ரயேலரை கானானுக்கு நேராக வழிநடத்திய மோசே கானானை உளவு பார்க்க குலத் தலைவர்களை அனுப்பினார். அவர்கள் திராட்சை அறுவடை காலத்தில் உளவு பார்த்ததாக அறிகிறோம் (எண். 13: 23-27). அவர்களில் யோசுவாவும், காலேபும் நாம் கானானுக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையளித்தனர். ஏனையோர் அங்குள்ள மனிதர்களையும், சூழல்களையும் பெரிதாகக் கருதி (எண். 13: 32) மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தினர். கடவுளின் வாக்குறுதியில் நம்பிக்கையாயிருந்த காலேபையும், யோசுவாவையும் தவிர கடவுளின் வாக்குறுதியில் நம்பிக்கையாயிராத ஏனையோர் நாற்பது ஆண்டு காலத்தில் பாலை நிலத்தில் மாண்டனர். அவர்கள் மரிக்கும் வரை நாற்பது ஆண்டுகள் இஸ்ராயேலர் பாலை நிலத்தில் அலைந்தனர் (எண். 14: 30, 26: 65, 32: 12). ஆண்டவரின் வாக்கை நம்பி வாக்குறுதிக்கேற்ப வாழ்ந்த காலேபின் தலைமுறையினர் கானானை உடைமையாக்கிக் கொள்வதாக ஆண்டவர் உறுதிளித்தார் (எண். 14: 24). இவ்வாக்குறுதியை தனதாக்கிக் கொண்ட காலேப் நாற்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு இம்மலை நாடாகிய எபிரோனை தன் மரபினருக்கு பெற்றுக்கொள்வதில் உறுதியாயிருந்தார். அதனை யோசுவாவிடம் முறையிட்டு, எபிரோனை உடைமையாக்கிக் கொண்டார். எபிரோனில் தீமைகளுக்கு அடையாளமாய் விளங்கிய ஆனாக்கின் மூன்று புதல்வர்களை காலேப் துரத்தி தீமையில்லா அமைதியை ஏற்படுத்தினார் (நீ.த. 1: 20, யோசு. 15: 14). மூத்த குடிமக்களான இறைமக்களும் ஆண்டவர் அருளிய வாக்குறுதிகள் நிறைவேறும் வரை ஆண்டவரின் வாக்குறுதிக்கேற்ப வாழ்ந்து தீமைகளை எதிர்த்துப் போராடி சிறப்பு மிக்க நற்பண்புகளை தலைமுறையினருக்கு கற்றுத் தந்துள்ளனர் என்பதைப் புரிந்து இறை வாக்குறுதிக்கேற்ப வாழ்வோம்.

2. இறைவிருப்பத்திற்கேற்ப வாழ்தல்:
(Living according to God's will): *(பிலி. 3: 14)*

"பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன்".

ஒருவர் எப்படிப்பட்டவராக மாறியிருக்கிறார் என்பதன்று, எப்படிப்பட்டவராக மாறிக் கொண்டிருக்கிறார் என்பதே கிறிஸ்தவ வாழ்வின் தன்மையென மார்ட்டின் லுத்தர் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ வாழ்வு தொடர் ஓட்டத்தைப் போன்றது (1 கொரி. 9: 24-26, 1 திமொ. 6: 11). பற்றுறுதி வாழ்வில் இறுதி இலக்கை அடைந்துவிட்டோமென இறுமாப்புடன் வாழ்வதை பவுலார் கடிந்து கொள்கிறார் (பிலி. 3: 13). கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வின் ஓட்டத்தில் எப்படி ஓடினேன் என்கிற கடந்ததை மறந்து, முன்னிருக்கும் நிலைவாழ்வுக்கான பரிசுப் பொருளை வேண்டி எப்படி ஓடப்போகிறேன் என்று திட்டமிட்டு முன்னுக்குச் செல்வதே இறை விருப்பமாகும் (பிலி. 3: 14). இத்தொடர் ஓட்டத்தில் கிறிஸ்துவை விட்டு நம்மை பின்னுக்கு தள்ளுகிற அனைத்தையும் குப்பையாகக் கருதி, வாழ்வை முன்னுக்கு அழைத்து செல்லும் இறை விருப்பத்திற்குரியவராய் நிறைவு வரை தொடர்ந்து ஓட

அழைக்கப்பட்டுள்ளோம் (பிலி. 4: 8). மூத்த குடிமக்களான இறைமக்களும் வாழ்வின் தொடர் ஓட்டத்தில் இறை விருப்பத்திற்கேற்ப வாழ்ந்து சான்றாய் உள்ளனர். பாதையில் கிடக்கும் பெரிய கல்லானது பலரை காயப்படுத்தும். அக்கல் சிற்பியின் கரத்தில் கிடைக்கும்போது, அவர் கல்லின் கரடு முரடுகளை அகற்றி அழகாக வடிவமைத்து நாம் விரும்பும், வீட்டுக்குள் வைத்து அழகு பார்க்கும் சிற்பமாக மாற்றுகிறார். நாமும் கடவுளின் கரங்களில் அர்ப்பணித்தால் கடவுளின் விருப்பப்படி நம் வாழ்வில் பின்னுக்குத் தள்ளுகிற கரடு முரடுகளை மாற்றி, முன்னுக்குச் செல்லும் நற்பண்புகளால் அவரது விருப்பப்படி நம்மை அழகுபடுத்துவார்.

3. இறைஅழைப்புக்கேற்ப வாழ்தல்: (Living according to God's Calling) *(யோசு. 21: 19)*

"என்னைப் பின் தொடர்"

ஆண்டவரின் அழைப்பு "என்னை பின் தொடர்" என்பதாகும். முதல் சீடர்களான பேதுருவுக்கும், அவர் சகோதரர் அந்திரேயாவுக்கும் தனக்கு பின்னே வரும்படி ஆண்டவர் அழைப்புக் கொடுத்தார் (மத். 4: 19). இவ்வழைப்புக்கு தகுதியுடையவராய் வாழாமல் ஆண்டவரை மூன்று முறை தனக்குத் தெரியாதென பேதுரு மறுதலித்தார் (மத். 26: 69-75; மாற். 14: 66-72; லூக். 22: 54-62, யோவா. 18: 15-27). இத் தவறினை பேதுருவுக்கு உணர்த்த மூன்று முறை "நீ என் மீது அன்பு செலுத்துகிறாயா?" (யோவா. 21: 15-17) என ஆண்டவர் பேதுருவிடம் வினா எழுப்பினார். அதன்பின் அழைப்புக்கேற்றவராய் இருக்க வேண்டும் என்பதற்காக "என்னைப் பின் தொடர்" (யோவா. 21: 19) என்று தான் முன்பு கொடுத்த அழைப்பையும் (மத். 4: 19) நினைவுபடுத்தினார். மறுதலியேன், பின் செல்வேன் என்று கூறிய பேதுரு தன் இயலாமையை உணர்ந்து தான் தூங்கியதும், ஆண்டவரை விட்டு ஓடியதும், மறுதலித்ததும், தன் பழைய மீன்பிடி தொழிலுக்குச் சென்றதும், அழைப்புக்கு தகுதியுடையவனாயிராததும் "ஆண்டவர் அறிவார்" (யோவா. 21: 17) என்ற உள்ளுணர்வு அடைந்தபின் ஆண்டவரின் அழைப்புக்கேற்ப உண்மையாய் வாழ அர்ப்பணித்தார். அதன் விளைவால் தொடக்கக்கால சபைகள் வளர்ந்து பெருகின. பேதுருவிடம் ஆண்டவர் "முதிர்ந்த வயது ஆகும் போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய்" (யோவா. 21: 18) என வாழ்வின் நிறைவை விளக்கினார். விரிக்கும் கைகள் வெறுமையை வெளிப்படுத்தினாலும், பின் மரபினருக்கு விட்டுச் செல்லும் நற்செயல்களையும் மறைமுகமாய் சுட்டுகிறது. இறை அழைப்புக்கேற்ப வாழ்ந்த பேதுரு போன்று மூத்த குடிமக்களாயிருக்கும் இறைமக்களும் இறையழைப்புக்கேற்ப வாழ்ந்த வாழ்வின் தடையங்களை விட்டுச் சென்றுள்ளனர். இவைகளை மனதில் பதிய வைத்து இறையழைப்புக்கேற்ப வாழ்வோம்.

அருள்திரு. S. கிரீஷ் குமார்

பணிவிடையில் ஒன்றாக்கப்பெற்றோம்

United in Service

நெகே. 2: 17-20 *1 கொரி. 3: 1-15*
திபா. 28 *லூக். 9: 10-17*

"நடுகிறவரானாலும் நீர் பாய்ச்சுகிறவரானாலும் ஒன்றுதான்" (1 கொரி. 3: 8).

ஒரு பிரபலமான ஆப்பிரிக்க பழமொழி இவ்வாறு கூறுகிறது. "நீங்கள் வேகமாக செல்ல விரும்பினால், தனியாகச் செல்லுங்கள்; ஆனால், நீங்கள் வெகுதூரம் செல்ல விரும்பினால், ஒன்றாகச் செல்லுங்கள்". கடவுளின் பணி என்பது தனிப்பட்ட சாதனைகளைப் பற்றியது அல்ல; மாறாக, பணியில் ஒற்றுமையைப் பற்றியது. அவருடைய மக்கள் ஒன்றாக நிற்கும்போது சாத்தியமற்றவைகள் சாத்தியமாகும். 1910 எடின்பர்க் அருட்பணி மாநாடு ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இது சர்வதேச மற்றும் இந்தியத் தலைவர்களை ஒற்றுமையோடு செயல்படத் தூண்டியது. உலக போர், இறையியல் கோட்பாடுகளிலே வேற்றுமைகள் என பல சவால்கள் அணிவகுத்து வந்தபோதும், திருச்சபைகள் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கதான் செய்தது. V.S. அசரியா, லெஸ்லி நியூபிகின், G.T. செல்வராஜ் போன்ற இந்திய தலைவர்களின் ஒன்றித்த முயற்சியால் உருவானதுதான் தென்னிந்தியத் திருச்சபை. 1947-இல் செப்டம்பர் 27-இல் சுதந்திர காற்றை சுவாசித்த இந்தியத் திருச்சபைகள் இன்று பெரும் இயக்கங்களாக மாற காரணம் அதன் ஒற்றுமைதான். யோவான் 17: 21-ஐ "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்ற வசனத்தை குறிக்கோளாக கொண்டு கடவுளுக்காக எல்லா துறைகளிலும் அசாதாரணமானவைகளை செய்து வருகிறது. தென்னிந்தியத் திருச்சபையின் உருவாக்கம் நமக்கு கற்றுத் தரும் செய்தி என்ன?

1. ஓரணியாய் எழுந்திடுவோம்:

"...இனியும் நமக்குச் சிறுமை வராதபடி, எருசலேமின் மதில்களைக் கட்டியெழுப்புவோம், வாருங்கள்" என்று சொன்னேன் (நெகே. 2: 17).

நெகேமியாவின் காலத்தில் பாபிலோனிய படையெடுப்பு எருசலேம் நகரத்தையும், ஆலயத்தையும் பேரழிவிற்குள்ளாக்கியது. கி.மு. 586-இல் பாபிலோனிய அரசன் நேபுகாத்நேச்சார் எருசலேமின் மதில்களை இடித்து தரைமட்டம் ஆக்கினான். நகரத்தின் வாயில்கள் நெருப்பிற்கு இரையாக்கப்பட்டது. வீடுகளும், கட்டடிடங்களும் இடிபாடுகளுக்குள் சிக்கின. வழிபாட்டு வாழ்க்கை சீர்குலைந்தது. சமூக நீதி சுரண்டப்பட்டது. எதிரிகள் நகரத்தை சூழ்ந்தனர். சன்பல்லாத், தொபியா, கேஷேம் போன்றோர் கேலி செய்தனர். ஓய்வுநாள் புறக்கணிக்கப்பட்டது. இத்தகைய

சவால்களிலே நெகேமியாவின் திருப்பணி உடைந்தவர்களுக்கு ஊக்கத்தை உருவாக்கியது. கடினமான பாதைகளிலே கடவுளை தேடிய விதமும், தொலைந்த கனவுகளிலே கடவுளை தொடர்ந்த விதமும், நெகேமியாவின் பலமாக அமைந்தது.

காத்திருந்த காலங்கள் கடவுளின் பாதங்கள் என்பதால் கச்சிதமாக எழுந்து நின்றார். நான் மீண்டும் கட்டுவேன் என்று சொல்லவில்லை. மாறாக, "நாம் எழுந்து கட்டுவோம்" என்றார். சிதைக்கப்பட்டவர்களையும், சிறுமைப்பட்டவர்களையும், சிதறடிக்கப்பட்டவர்களையும் சீரய பணிக்கென "ஓரணியில் எழு" அழைப்பைக் கொடுக்கின்றார். விளைவு 52 நாட்களில் அலங்கம் சீரமைக்கப்பட்டது.

பண்டைய ரோமில் போர் வீரர்கள் "டெஸ்டுடோ" ஆமை அமைப்பு, என்று அழைக்கப்படும் ஒரு அமைப்பைப் பயன்படுத்தினர். போர்கள் நடைபெறும்போது வீரர்கள் தங்கள் கேடயங்களை ஒன்றோடு ஒன்று இணைத்து அதற்குள் மறைந்து கொள்வார்களாம். இந்த வகை அமைப்பு, எதிரி நாட்டு அம்புகள் எளிதில் ஊடுருவாத வண்ணம் கோட்டையாக நின்று பாதுகாத்து கொள்ளுமாம். ஓரணியில் நிற்கின்றபோது வெற்றி எளிதானதாக மாறிவிடுகின்றது. இதை நெகேமியாவின் செயலிலிருந்தும் நாம் தெளிவாக புரிந்துக்கொள்ளலாம்.

திருச்சபைகள் கேடயங்களாக இணையட்டும். உடைகளிலும், சீரழிவுகளிலிருந்தும் இறைமக்களை மீட்டிட, அரசியலிலும் அதிகாரத்திலிருந்தும் ஆன்மீகத்தை காத்தி. "ஓரணியில் எழுவது" அவசியம் என்ற நிலைப்பாட்டோடு முன்னேறி செல்வோம்.

2. ஒருமித்துப் படர்ந்திடுவோம்:

"அனைவரும் வயிறார உண்டனர்" (லூக். 9: 17)

பகிர்தல் குணம் மற்ற எல்லா குணத்தை விட சற்று உயர்ந்தே நிற்கிறது எனலாம். இது அன்பு, அரவணைப்பு, சுயநலம் அற்ற எண்ணம் போன்ற பண்புகளுக்கு அடிப்படையாகவும் அமைகிறது. இயேசுவை காண பெருங்கூட்ட மக்கள் திரண்டனர். இதனை கண்ட சீடர்கள், மாலை வேளை நெருங்கினபடியால் இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவிடுவது நல்லது என்று எண்ணி இயேசுவிடம் வந்தனர். ஆனால், இயேசுவோ "நீங்களே இவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்று சொல்ல திகைத்து போனார்கள். ஒரு சிறுவன் தனக்கென கொண்டு வந்திருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் எந்த நிபந்தனையும் இன்றி கொடுத்தான். இயேசுவும் அதை ஆசீர்வதிக்க, சீடர்கள் பாரபட்சமின்றி பகிர்ந்தார்கள். சிறிதளவு அதிகளவாக மாறியது. திருச்சபை பகிர்தலின் இடமாக மாறவேண்டும்.

ஒரு எளிய கிராமம் பஞ்சத்தினால் கடும் வறுமையை சந்தித்தது. வசதிபடைத்தோர் தங்கள் உணவை ஏழைகளோடு பகர்ந்துக்கொள்ள மறுத்தனர். இதனை கவனித்த வெளிநாட்டு பயணி, தண்ணீரைக்

கொதிக்க வைத்து, அதில் ஒரு கல்லை இட்டார். அதிசயமாய் பார்த்த அந்த கிராமவாசிகள் என்ன சமைக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அந்த வெளிநாட்டு பயணி பதிலளித்தார், கல் சூப் சமைக்கிறேன். இது மிகவும் சுவையாக இருக்கிறது. மேலும் சுவையாக்க வேண்டுமானால் கொஞ்சம் கேரட் தேவைப்படுகிறது என்றார். உடனே சிலர் அவர் கேட்டபடி கொண்டு கொடுத்தனர். இன்னும் சுவையாக்க வேண்டுமானால் உள்ளி தேவை என்றார். உடனடி உள்ளியும் வந்தது. இப்படி எல்லாரும் அரிசி, காய்கறிகள், உப்பு என தங்களிடம் இருந்தவற்றை பகிர்ந்தனர். அந்த கிராமமமே ஒன்று கூடியது. இணைந்து எல்லாரும் அந்த விருந்தை அனுபவித்தனர்.

திருமறையில் சமாரியன் அன்பை மட்டும் குற்றுயிரானவனிடத்தில் பகிரவில்லை. மாறாக தனது உழைப்பையும், உடைமைகளையும் பகிருகின்றார். திருத்தூதுவர்களிடம் வெளிப்பட்ட ஒருமித்த பகிர்தல் நம்மிடமும் மலரட்டும்.

3. ஒருங்கிணைந்த பண்ணையாவோம்:

"...நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம்" (1 கொரி. 3: 9).

திருச்சபை என்பது பண்படுத்தப்பட்ட தோட்டமாக மாறவேண்டும். ஒருங்கிணைந்த பண்ணை என்று சொல்லும்போது ஒரே பண்ணையில் விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, காளான் வளர்ப்பு போன்றவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. அதுமட்டுமல்லாமல் மறுசூழற்சி செய்யப்படும் இடமாகவும் அமைகிறது. திருச்சபையும் ஒருங்கிணைந்த பண்ணையாய் மறுசூழற்சிக்கு வித்திட வேண்டும். எவர் எப்பணியை நிறைவேற்றினாலும், வெவ்வேறு ஊதியம் பெற்றாலும், நாம் அனைவரும் சமம் *(1 கொரி. 3: 8)* என்ற மனநிலையோடு திருப்பணி ஆற்றிட வேண்டும்.

திருச்சபை என்னும் தோட்டத்தில் (பண்ணை) பிரிவுகள் (திருப்பணி) இருக்கலாம். ஆனால், யார் பெரியவன் என்ற எண்ணம் இருக்கக்கூடாது என தூய பவுல் எச்சரிக்கின்றார். பவுல் யார்? அப்பொல்லோ யார்? எல்லாரும் ஊழியக்காரர்கள்தானே. நாமனைவரும் கடவுளின் ஒருங்கிணைந்த பண்ணையில் உடன் பணியாளர்கள் என்ற சிந்தனையில் பண்படுத்தப்பட்டவர்களாய் பணி செய்வோம் என அழைக்கின்றார்.

நெகேமியா இடிந்த அலங்கத்தை கட்டினார். இயேசு பசியுற்ற அனைவருக்கும் உணவு கொடுத்தார். பவுல் பிரிவுகளை சரி செய்கின்றார். இவை அனைத்தும் பணிவிடையில் ஒன்றுபட்டபடியால் சாத்தியமாயிற்று. இன்றும், இடிந்துபோன நிலையில், பசி நிறைந்த வயிற்றோடு பிரிவுகளாலே பாதிக்கப்பட்ட சூழலில் வாழும் உலகிற்கு திருச்சபைகள் வழிகாட்டட்டும். ஓரணியில் எழுந்து, ஒருமித்து பகிர்ந்து, ஒருங்கிணைந்த பண்ணையாய் கடவுளோடு இணைந்து பணிச் செய்வோம். இறையருள் நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

திரு. X. ஜெயா எபநேசர்

உறுப்பினர் ஒவ்வொருவரும் திருப்பணிவிடையாளரே

Every Member a Minister

எண். 11: 24-30 *திப. 6: 1-7*
திபா. 92 *யோவா. 15: 12-19*

கடவுளது வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக் கொண்டே சென்றது. குருக்களுள் பெருங்கூட்டத்தினரும் இவ்வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நம்பிக்கை கொண்டனர் (திப. 6: 7).

நான் முதல்வன் என்கிற திட்டம் தமிழ்நாடு அரசின் முதன்மையான திட்டங்களில் ஒன்று. இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், மாணவர்களை படிப்பில் மட்டுமல்ல வாழ்க்கையில் வெற்றியாளராய் மாற்றவேண்டும். இளைஞர்களை படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில் திறமையை மேம்படுத்தி நாட்டிற்கு வழங்குதல் போன்றவை. இதன் வழியாக அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வாய்ப்பு அருளப்படுகிறது. இத்திட்டத்தின் வழியாக இந்தியா மற்றும் உலகின் எல்லா பகுதிகளிலும் தமிழக மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு.

பழைய ஏற்பாட்டில் தலைவர்கள், தீர்க்கதரிசிகள், நியாயதிபதிககள், அரசர்கள், ஆசாரியர்கள் என தெரிவு செய்து அவர்களை அபிஷேகம் பண்ணி கடவுளின் திட்டமாகிய இறையரசை இவ்வுலகில் நிறுவுவது கடவுளுடைய எதிர்பார்ப்பாயிருந்தது.

புதிய ஏற்பாட்டில் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுததி இறையரசை விரிவுபடுத்துவது கடவுளின் எதிர்பார்ப்பாயிருந்தது. Greek Word 'laos' *என்பதன் பொருள். "மக்கள்"* 'Laikos' *என்பது* adjective form of (or) belonging to the people-common ordinary, non-clerical. *போதகர்கள், சமயத்தலைவர் அல்லாதவர்களை* loy people common folk *என்று குறிப்பர்.*

கடவுளின் திட்டம் (அல்லது) எதிர்பார்ப்பு முழுமை பெறவேண்டுமென்றால் கடவுளின் பணிக்கென்று பிரத்யேகப்படுத்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு உறுப்பினர்களும் திருப்பணிவிடையாளராக செயல்பட வேண்டும் என்பதனை மூன்று திருமறைப்பகுதிகளும் விளக்குகின்றன.

1. உறுப்பினர்கள் திருப்பணிவிடையாளர்களே:

ஆனால் மோசே அவரிடம் என்னை முன்னிட்டு நீ பொறாமைப்படுகிறாயா? ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்கு தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு என்றார் (எண். 11: 29).

உறுப்பினர்கள் அனைவரும் திருப்பணிவிடையாளர்களே என்பதை இந்த திருமறைப்பகுதி உறுதிச் செய்கிறது. முன்னால் நடந்தவைகளையும், பின்னால் நடக்கப் போவதையும் அறிவித்து மக்களை நல்வழிப்படுத்துவது, எச்சரிப்பு கொடுப்பது இறைவாக்கினரின் பணி. கடவுளின் செய்தியை அறிவிப்பவர்கள், கடவுளுக்கும், மக்களுக்கும் இடையீட்டாளராக பணியாற்றுபவர்கள். இத்தகைய திருப்பணியை மோசே நிறைவேற்றி வந்தார். இறைவாக்கினர் பணி, தலைமைத்துவ பணி ஆகியவற்றை ஒருவராக நிறைவேற்றி வந்தார். விடுதலை பயணத்தின் போது இஸ்ரயேலர்கள் உணவுக்காக அதாவது மாம்சீக உணவும், காய்கறியும் கிடைக்காததாலும் எப்போதும் மன்னா உணவாக கிடைத்ததாலும் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டபோது கோபம் அடைந்தார். கடவுளிடம் தகப்பன் சுமந்து கொண்டு போகிறது போல இந்த மக்களை மார்போடு அனைத்து கொண்டு போக நான் கர்ப்பந்தரித்தேனோ நான் இவர்களைப் பெற்றேனோ என்று மோசே முறையாய் இந்த சூழலில், கடவுள் மோசேயின் பாரத்தை குறைத்து கடவுளின் திட்டம் முழுமைப்பெறவும், திருப்பணி தடையில்லாமல் நடைபெறவும், அக்கூட்டத்தின் உறுப்பினர்களான மூப்பர்களில் 70 பேரை ஆசரிப்பு கூடாரத்தின் வெளியே வந்து நிற்கச் சொன்னார். மோசேயும் கடவுளுடைய வார்த்தைகளை சொல்லி கூடாரத்தின் வெளியே நிற்கச் சொன்னான்.

ஆசரிப்பு கூடாரம் என்பது கடவுளின் பிரசன்னத்தை உணரும் இடம், கடவுள் தம்மை வெளிப்படுத்தும் இடம். கடவுளை தொழுது கொள்ளும் இடம். கடவுளோடு உள்ள உறவை மேம்படுத்தும் இடம். கடவுளின் மகிமை, பரிசுத்தம் நிறைந்திருக்கும்.

அவர்கள் அங்கு வந்து நின்றார்கள். கடவுள் மேகத்தில் இறங்கி, மோசேயோடு பேசி அவன் மேலிருந்த இறைவாக்கு உரைக்கும் கடவுளின் ஆவியை பகிர்ந்து கொடுத்தார். அனைத்து உறுப்பினர்களும் திருப்பணிவிடையாளர்களாய் திருப்பணி செய்ய ஆரம்பித்தனர். எல்தாத் மற்றும் மேதாத் ஆகிய இரண்டு பேரும் கூடாரத்தில் செல்லாமல் பாளையத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் மேலும் ஆவி வந்து தங்கினபோது அவர்களும் திருப்பணிவிடையாளர்களாய்த் திருப்பணி செய்ய ஆரம்பித்தனர். யோசுவா இதனை தடை பண்ண மோசேயோடு

சொன்னபோது, "கடவுளின் ஆவி அவர்களுக்கும் அருளப்பட்டிருக்கிறதால் கடவுளின் நோக்கம் அனைத்து உறுப்பினர்களும் திருப்பணியாற்ற வேண்டும்" என்பதை யோசுவாவுக்கு புரியவைத்தார்.

இந்த நிகழ்வு நமக்கு கற்று தருவது என்னவெனில், கடவுள் எல்லைகளைக் கடந்து அனைவரையும் திருப்பணிக்கு ஆயத்தப்படுத்துகிறவர். கடவுளின் Inclusive nature ஒவ்வொரு உறுப்பினர்களின் திருப்பணி வழியாக தமது திட்டத்தை முழுமை பெறச் செய்ய விரும்புகிறார். கடவுளின் திருப்பணியைச் செய்ய இடம், பொருள், பின்னணியம் ஒரு பொருட்டு அல்ல, கடவுளின் திருப்பணிக்கு மோசே உறுப்பினர்களை பரிசுத்த ஆசரிப்புக் கூடாரத்தின் அருகே நிறுத்தினதுபோல, சபையார் உறுப்பினர்களை திருப்பணி செய்ய உருவாக்கும் பணி முக்கியம் என்பதை புரிந்து கொள்வோம்.

2. திருப்பணிவிடையாளர்களால் திருச்சபையின் வளர்ச்சி:

கடவுளது வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக்கொண்டே சென்றது. குருக்களுள் பெருங்கூட்டத்தினரும் இவ்வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நம்பிக்கை கொண்டனர். (திப. 6: 7)

ஒவ்வொரு உறுப்பினர்களும் திருப்பணிவிடையாளர்களாய் திருப்பணி செய்யும்போது கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை வளர்ச்சி பெறும். திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும் திருப்பணிவிடையாளராய் பணி செய்யாதபோது பிரிவினையும், வீழ்ச்சியும் காணப்படும்.

ஆரம்ப காலத்தில் எருசலேம் நகரில் அமைந்த திருச்சபையில் உறுப்பினர்கள் திருப்பணி செய்யாதபோது பிரிவினை வந்தது. ஆரம்ப கால எருசலேம் திருச்சபையில் ரோமர்கள், கிரேக்கர்கள், எபிரேயர்கள் என வித்தியாசமான கலாச்சாரங்களை உள்ளடக்கிய இறைமக்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இரண்டு பிரிவினருக்கு இடையே பிரிவினை ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் பிறந்து வளர்ந்த எபிரேய மொழி மற்றும் அரமேய மொழி பேசும் எபிரேயர்களுக்கும், சிதறடிக்கப்பட்ட யூதர்களாக பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்து கிரேக்க கலாச்சாரத்தை உடையவர்களாய் கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்களுக்கும் பிரிவினை ஏற்பட்டது.

கிரேக்கரான கைம்பெண்களை பராமரிப்பதில் பாரபட்சம் காண்பித்தால் எபிரேயர்கள் இதனால் முறுமுறுப்பு உண்டாக்கி பிரிவினை உண்டாயிற்று. St. Cyprian of Carthage பிரிவினையை குறித்து இப்படி சொல்லுகிறார், "திருச்சபை கிறிஸ்துவின் உடல் சபையின் ஒற்றுமையை குலைக்கின்றவர்கள் கிறிஸ்துவின் ஆடையை கிழிக்கின்றனர்."

"ஒருவன் திருச்சபையை தாயாக கொண்டிருக்கவில்லையென்றால் கடவுளை தந்தையாக கொள்ள முடியாது."

பிரிவினை நிறைந்த எருசலேம் திருச்சபையில் அப்போஸ்தலர்கள் அத்திருச்சபையில் உறுப்பினர்களைத் தெரிவுசெய்து திருப்பணி செய்ய ஊக்குவித்து பிரிவினையை தடுத்தனர்.

பரிசுத்த ஆவியும் ஞானமும், நற்சாட்சி பெற்றவர்களை தெரிவு செய்தனர். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் கடவுளுக்கு தன்னை ஒப்படைத்து வாழ, நடைமுறை சார்ந்த ஞானமுடைய விசுவாச முதிர்ச்சிகளும் விசுவாச முதிர்ச்சியின் வெளிப்பாடான நற்சாட்சியின் தகவுகளான அன்பு, சந்தோசம், சமாதானம் இச்சையடக்கம் உடையவர்களை தெரிவு செய்ய ஊக்குவித்தனர்.

அதனடிப்படையில் தெரிவு செய்தபோது திருச்சபை மாபெரும் வளர்ச்சியை கண்டது. இறைமக்களின் ஆன்மீக வாழ்வில் மாற்றம் ஏற்படுமளவிற்கு வசனம் போதிக்கப்பட்டது. சீடர்களின் எண்ணிக்கை பெருகியது. ஆசாரியர்கள் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள்.

ஒரு திருச்சபையின் வளர்ச்சி என்பது அங்கு இருக்கிற சூழலை புரிந்துகொண்டு, அங்கு இருக்கிற கலாச்சாரத்தை அழிக்காமல் அத்திருச்சபையின் உறுப்பினர்களையே திருப்பணி செய்ய ஊக்குவிப்பதில்தான் இருக்கிறது.

A.J. *அப்பாசாமி (இந்திய இறையியலாளர் &* Bishop*) "மேற்கத்திய முறைகளை இந்திய திருச்சபை பின்பற்ற கூடாது, இந்திய கலாச்சாரத்தில் சபைகள் அமையவேண்டும்".*

M.M. Thomas *"நம்முடைய மண்ணை சார்ந்ததாக அருட்பணி அமையவேண்டும்."*

மண்ணின் மைந்தர்களை திருச்சபை உறுப்பினர்களை திருப்பணி செய்ய ஊக்குவித்து திருச்சபைகளை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்துவோம்.

3. திருச்சபையின் வளர்ச்சி சமுகத்தின் மாற்றம்:

இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்கு தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன். ஏனெனில், என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன். யோவான் 15: 15

Andy Stanly என்பவர், திருச்சபை உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் நம்பிக்கையின் வாகனமாக செயல்படுகிறது என்கிறார்.

ஆண்டவர் சீடர்களோடு கூறின வார்த்தைகள் சமூக மாற்றத்திற்கான விதைகளாக இருக்கிறது. இன்றைய உலகில் சமூக மாற்றம் மிக அவசியமாக இருக்கிறது.

ஆண்டவர் சீடர்களிடம் நான் இனி உங்களை பணியாளர் என்று சொல்லமாட்டேன் என்கிறார். அதாவது 'doulos' என்ற கிரேக்க வார்த்தை 'servant' (or) 'slave' என்று மொழி பெயர்க்கப்படுகிறது. ஒரு அடிமை தன் எஜமானின் திட்டத்தையும், நோக்கத்தையும் சரியாக புரிந்து கொள்ளமாட்டான். எஜமானின் கட்டளையை புரிந்துகொள்ளாமலே கீழ்ப்படிவான். ஆண்டவர் நண்பர் என்று சொல்வேன் என்கிறார். நண்பர்களிடத்தில் வெளிப்படைத்தன்மை, சரிசமமான மதிப்பு, தகவல்களை எளிதாக பரிமாறும் தன்மை இயல்பாக இருக்கும். ஏற்றதாழ்வுக்கு இடமிருக்காது. சமத்துவம் இருக்கும். ஆண்டவர் சீடர்களை நண்பர்களாக அழைப்பது சமத்துவம் ஏற்படுத்தும் புரட்சியாகவே இருக்கிறது.

சமத்துவ சமூகம் அமைய வேண்டுமென்றால் அடிப்படையானது அன்பு. ஆண்டவர் இயேசு கிறிஸ்து அத்தகைய உயர்வான தியாக அன்பை சிலுவையின் வழியாக காண்பித்தார். எதையும் எதிர்பாராமல் கொடுக்கும் அத்தகைய அன்பை பிறரிடம் காண்பிக்க கட்டளையிட்டார்.

இறையரசின் தகவுகளான அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவைகளை உடைய சமூகம் அமைய கடவுள் நம் உறுப்பினர்களை திருப்பணியாளர்களாக பணியாற்ற அழைக்கிறார். இதற்காக நீங்கள் அல்ல, நான் உங்களை தெரிந்து கொண்டேன் என்கிறார்.

ஜான் கிறிஸ்சொஸ்தம், பிரிவினை என்பது நரகத்தின் படைப்பு அன்பு, ஒற்றுமை என்பது கடவுளின் பரிசு என்கிறார்.

"Every believer A Minister" written by Rex. D. Edwards, இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்த ஒரு நிகழ்வு. போதகர் ஒருவர் இன்னொரு போதகரிடம் கேட்டாராம். உங்கள் திருச்சபையில் 1500-க்கும் மேலான உறுப்பினர்கள் இருக்கிறார்களே, இவர்களைக் குறித்து கடவுளின் திட்டம் என்ன? இவர்கள் திருப்பணிக்கு உதவியாயிருக்கிறார்களா? ஒரு போதகராக எப்படி இத்திருப்பணியை நிறைவேற்றுகிறீர்கள் என்று கேட்டார். மற்ற போதகரின் பதில்: இத்திருச்சபையில் 1500 மேலான திருப்பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திருப்பணிக்கு உதவி

செய்பவர்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்பவர்கள், சாட்சிகளாயிருக்கிறார்கள் என்றாராம்.

ஒரு திருச்சபையின் இத்தனை உறுப்பினர்களும் திருப்பணியாளர்களாக செயல்படும்போது எவ்வளவு பெரிய மாற்றம் அந்த சமூகத்தில் ஏற்பட்டிருக்கும்.

திருச்சபையின் உறுப்பினர்கள் திருப்பணியாளர்களாக பணிசெய்தால் திருச்சபை வளர்ச்சி பெறும். திருச்சபை வளர்ச்சி பெற்றால் சமத்துவ சமூகம் அமையும். மருத்துவ கல்லூரி மருத்துவத்தில் சிறந்த மாணவனை உருவாக்கும். பொறியியல் கல்லூரி பொறியியலில் சிறந்த மாணவனை உருவாக்கும். ஆனால் திருப்பணியாளரை உருவாக்காது. திருமறைப்பள்ளி சிறந்த மருத்துவரையோ, பொறியியலாளரையோ உருவாக்க முடியாது. திருமறைப்பள்ளி சிறந்த திருப்பணியாளரை உருவாக்க முடியும். திருமுழுக்கு பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களையும் கிறிஸ்துவின் பணிசெய்ய கிறிஸ்து அனுப்பியிருக்கிறார் என்கிற உணர்வோடு வாழ்கிற சமூகத்திலும், வசிக்கிற இல்லத்திலும், பணி செய்கிற பகுதியிலும் *(2 கொரி. 3: 3)*, கிறிஸ்துவின் நிருபங்களாயும் கிறிஸ்துவின் தூதுவர்களாயும் வாழ்வோம் *(1 பேதுரு 4: 10)*. கடவுள் நமக்குத் தந்திருக்கிறவரங்களைப் பிறருக்காகப் பயன்படுத்தி, திருப்பணிவிடையாளராகத் திருப்பணி செய்வோம். கடவுள் விரும்பும் உலகாக மாற்றுருவாக்கம் செய்வோம்.

திரு. N. ஜெயக்குமார்

11.10.2026 பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தொன்பதாம் வாரம் & உடல், உளநலம் குன்றியோர் மற்றும் நோய்த்தடுப்பு நோயாளிகளுக்கான ஞாயிறு

வலுவின்மையில் வல்லமை: நம் வாழ்வில் கடவுளின் அருள்

Strength in Weakness: God's Grace in Our Lives

எசா. 35: 1-10 *2 கொரி. 12: 1-10*
திபா. 34 *யோவா. 9: 1-7*

ஆனால் அவர் என்னிடம், "என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" என்றார் (2 கொரி. 12: 9).

> *நான் கடவுளிடம் வலிமை கேட்டேன். அதன் மூலம் நான் சாதிக்க முடியும் என்பதற்காக. ஆனால் நான் பலவீனமாகப் படைக்கப்பட்டேன், பணிவோடு கீழ்ப்படிய கற்றுக் கொள்வதற்காக. நான் ஆரோக்கியத்தைக் கேட்டேன் மாபெரும் காரியங்களை ஆற்றுவதற்காக. ஆனால் எனக்கு பலவீனம் அளிக்கப்பட்டது. சிறப்பான விசயங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக. நான் பணம் கேட்டேன். சந்தோஷமாக இருப்பதற்காக. ஆனால் வறுமைக்கு வாக்கப்பட்டேன். விவேகமாக இருப்பதற்காக நான் சக்தி கேட்டேன். மக்கள் என்னைப் புகழ வேண்டும் என்பதற்காக. ஆனால், சக்தி இல்லாதவனாக படைக்கப்பட்டேன் கடவுளின் தேவையை உணர வேண்டும் என்பதற்காக. எனக்கு எல்லாம் வேண்டுமென்று கேட்டேன் வாழ்க்கையை அனுபவிப்பதற்காக. ஆனால் எனக்கு வாழ்க்கைக் கொடுக்கப்பட்டது. எல்லாவற்றையும் அனுபவிப்பதற்காக நான் கேட்ட எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், எனக்கு நம்பிக்கையளிக்கும் எல்லாம் கிடைத்தன. ஏறக்குறைய நான் கேட்டதைத் தவிர, நான் கேட்காத பிரார்த்தனையெல்லாம் பலித்தன. நான் மனிதர்களிடையே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன். - ராய் காம்பெனெல்லோ*

வலுவானவர்களாக வாழவேண்டும் என்றும் அனைவரும் விரும்புகின்றனர். வலிமை மூலம் விரும்புகின்றவற்றை சாதிக்க முடியும் என மனிதன் நினைக்கின்றான். ஆனால் வலுவின்மையில் ஆண்டவர் நம்மை வலிமையாக்கி நம்மை சாதிக்க வைக்கிறார். ஆகவே பவுல் சொல்லும்போது, எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு (பிலி. 4; 13). வலுவின்மையால் இழைக்கப்பட்ட தாவீது, வலிமையான கோலியாத்தை வீழ்த்த ஆண்டவர்

பெலன் கொடுத்தார். *1 சாமு. 17: 41-50.* திருமறையில் ஆண்டவரின் பணிக்காக அழைப்பு பெற்ற அனைவரும் வலுவானவர்கள் அல்ல. ஆனாலும் வலுவற்றவர்களை அழைத்து தன்னுடைய பணிக்கு தகுதிப் படுத்தி சாதிக்க வைத்தார். வலுவின்மையில் ஆண்டவரின் ஆற்றல் எப்படி விளங்குகிறது என்பதை இந்த செய்தியில் சிந்திப்போம்.

1. மனதளவில் வலுவற்றோருக்கு இறையருள்:

உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகிறார் *(திபா. 34: 18)*

தாவீது சவுல் ராஜாவுக்குப் பயந்து உயிர் தப்ப பல இடங்களுக்கு ஓடினார். காத் மன்னன் ஆக்கீசிடன் தாவீது சென்றபோது அவன் பணியாளர்கள் தாவீதை அடையாளம் கண்டுக்கொண்டனர். ஆகவே தாவீது காத் மன்னன் ஆக்கீசினால் மிகவும் பயப்பட்டான். தாவீது அவனிடம் இருந்துத் தப்ப மனநிலை பாதிக்கப்பட்டவனைப் போல் நடித்து உயிர்த் தப்பினான் *(1 சாமு. 21: 10-15)* கடவுளால் தெரிந்துக் கொள்ளப்பட்ட தாவீது ராஜாவாக பொறுப்பேற்கும் முன் பல்வேறு இன்னல்களை சந்திக்க வேண்டியிருந்தது. எல்லா இடர்பாடுகளிலும் தாவீதோடு ஆண்டவரின் அருள் இருந்தது. மனதளவில் காயப்பட்டு உயிர் பயத்தோடு ஓடிய தாவீது அரியணையை இறுதியில் பெற்றுக்கொண்டார்.

பாபிலோனில் அடிமை வாழ்வு வாழ்ந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஏசாயா இறைவாக்கு உரைக்கின்றார். அந்நிய நாட்டில் எவ்வளவு தான் அல்லல்பட்டாலும் இஸ்ரயேல் மக்கள் தம் சொந்த நாட்டில் ஒருநாள் குடியேறுவர். அவர்கள் அடிமை வாழ்விற்கு ஒரு விடிவு ஏற்படும் என்ற உறுதி வழங்கப்படுகிறது. *ஏசா. 35: 4.* பாதுகாப்பான பாதைகளல் பயணம் செய்து மகிழ்வுடன் சீயோனை வந்தடைவீர் *ஏசா 35: 8-10.* ஆண்டவர் தரும் மீட்பு மக்களன் வாழ்நாள் சோகத்தை மாற்றி, மகிழ்ச்சியும் பூரிப்பும் நிறைந்திருக்கச் செய்யும். இறுதி நாட்களில் கடவுள் தம் மக்களை தம் இறையருளால் அவர்களின் பாவங்களலிருந்து விடுவித்து தங்களின் மாண்பை முழுமையாகப் பெற்று மகிழ்ச்சி பொங்கும் வாழ்வு நடத்துவர். மக்களின் பூரிப்பும் அவர்களை மூழ்கடிக்கும். மனதளவில் பெற்ற காயங்களிலிருந்து இறையருளோடு இறைவனிடம் இருந்து வலிமை பெறுவோம்.

2. வலுவின்மையில் வல்லமை தரும் இறையருள்:

ஆகவே என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன் *(2 கொரி. 12: 10).*

கொரிந்து திருச்சபை மக்களுக்கு தன்னுடைய வலுவின்மையைப் பற்றி பவுல் கூறுகிறார். உடலில் தைக்கப்பட்ட முள் அவரை வருத்திக்

கொண்டே இருக்கிறது. இறுமாப்பு, அகங்காரம் அடையாதபடிக்கு தடுத்துக் கொண்டிருக்கிறது. ஆண்டவரிடம் மூன்று முறை மன்றாடியபோது இறைவன், என் அருள் உனக்குப் போதும். வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றார் 2 கொரி. 12: 9. ஆகவே வலுவின்மையை நேர்மறையாக எடுத்துக்கொண்ட பவுல் வலுவின்மையிலும், இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு மகிழ்ந்து வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவராக திகழ்கிறார் (2 கொரி. 11; 23-30). எனவே தான் அவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் பவுல் உலக பாடுகள் மூலமாக கிறிஸ்துவின் அன்பிலிருந்து தன்னை பிரிக்க முடியாது என்கிறார் (உரோ. 8: 35).

துன்பங்கள் மத்தியிலும் துணிவுடன் வாழ இறைவன் நம்மை வலுவாக்குகிறார். இயேசுவும் இதை நமக்கு கற்றுத்தருகிறார். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மேல் வெற்றி கொண்டுவிட்டேன் என்றார் (யோவான் 16: 33). வலுவற்ற பவுல் நற்செய்திப் பணியில் துணிவுடன் செயல்பட்டு ஆதித் திருச்சபை வளர காரணமாக அமைந்தார். அவரிடம் இருந்த முள் அதற்குத் தடையாக இருக்கவில்லை. வலுவின்மையை சாதகமாக வைத்து சாதனைகள் படைத்தார். அதற்கு ஆண்டவரின் அருள் அவரிடம் இருந்தது. நாமும் வலுவின்மையில் ஆண்டவரின் அருளோடு இறைப்பணி செய்வோம். சாதனைகள் புரிவோம்.

3. பார்வையற்றவருக்குப் பார்வை தந்த இறையருள்:

நீர் சீலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும் என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்பது பொருள். அவரும் போய்க் கழுவிப் பார்வைபெற்றுத் திரும்பினார் (யோவா. 9: 7)

இயேசுவும் சீடர்களும் நடந்து செல்லும்போது பிறவியிலேயே பார்வையற்ற ஒரு மனிதரைப் பார்க்கின்றனர். பார்வையற்ற மனிதரை சீடர்கள் பார்த்ததும் இயேசுவிடம், இவர் பார்வையற்றவராய்ப் பிறக்க காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா? என்று கேட்கின்றனர். பார்வை இல்லாமல் பிறந்தற்கு காரணம் பாவம் என்ற முடிவுக்கு சீடர்கள் வந்துவிட்டனர். யூதர்களின் மரபில் ஒருவர் துன்புற்றால் அதற்கு அவர் செய்த பாவம் அல்லது துன்புறும் இந்த மனிதரின் முன்னோர்கள் செய்த பாவம் என்று கருதினர் (விப. 20: 5; 34: 7; எண். 14; 19). அதே சிந்தனையை உள்வாங்கிய சீடர்களின் மனதிலும் இக்கேள்வி எழும்பியதில் வியப்பு இல்லை. பிறவியிலேயே பார்வையற்ற மனிதர்கள் சமூகத்தில் மிகக் காரணமான துன்பங்களுக்கு ஆளானவர்கள். பிச்சை எடுத்து வாழவேண்டும். ஆலயத்தில் நுழையத்தடை விதிக்கப்பட்டவர்கள், சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்கள் மீது இயேசு கரிசனையும் அக்கரையும் கொண்டிருந்தார்.

இயேசு சீடர்களிடம் இவர் செய்த பாவமும் அல்ல. இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல. இவருக்கு ஏற்பட்ட துன்பம் யாரால், எதனால் ஏற்பட்டதென்று ஆய்வு செய்வது முக்கியமல்ல. அதன் வழியாகக் கடவுளின் செயல் வெளிப்பட வேண்டும். அதற்கான வழியைச் சிந்திக்க வேண்டும் என்பதாய் இருக்கிறது என்பதை புரிந்துக்கொள்ள முடிகிறது. பார்வையற்ற மனிதர் சீலோவாம் குளத்துக்கு அனுப்பப்படுகிறார். அந்தக் குளத்தில் போய்க் கண்களைக் கழுவியதால் பார்வை பெறுகிறார். கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப்பிறந்தார் என்பதை அனுப்பப்படுதல் என்னும் செயலோடு சிந்திக்க வேண்டும். இப்போது கடவுளின் செயலை இவ்வுலகிற்குப் பறைசாற்ற இவர் அனுப்பப்படுகிறார். ஆகவே இறையருள் பெற்ற பார்வையற்றவன் பார்வை பெற்று இயேசுவைப் பற்றி அறிவிக்க பயணப்பட்டான்.

வலுவின்மையில் வல்லமை மிக்கவர்களாக அனைவரும் எழுந்து ஒளிவீசிட வேண்டும். ஆண்டவரின் இறையருளால் முறையே நூறு வயதிலும் தொண்ணூறு வயதிலும் ஈசாக்கைப் பெற்றெடுத்த ஆபிரகாம்-சாராள் தம்பதியினரை *(தொநூ. 21: 1-5)* காணலாம். பேசும் திறன் குறைந்த திக்குவாயன் என்று அறியப்பட்ட மோசே எகிப்தில் அடிமைப்பட்ட மக்களை கானானுக்குள் வழிநடத்தினார். ஆகவே வலுவின்னையை இறைவன் வல்லமையுள்ளதாக மாற்றுவார். குறைகளை நிறைவாக்குவார். துன்பங்களை இன்ப மயமாக்குவார். நிராகரிக்கப்பட்டவர்களை உயர்த்துவார். விலக்கப்பட்ட கல்லை நிச்சயமாய் மூலைக் கல்லாக்குவார். ஆகவே வலுமின்மையால் மனம் தளராது இறையருளைப் பெற்று முன்னேறுவோம்.

அருள்திரு. S. ஜாண் பிராங்கிளின் ராஜ்

உணர்வுகளுக்கு மேலாகப் பற்றுறுதி: வாழ்வு பொருளற்றதாகும்போது கடவுளை நம்பி நிற்றல்

Faith Over Feelings: Trusting God When Life Does not Make Sense

எரே. 29: 10-14 *எபி. 11: 17-31*
திபா. 37: 23-40 *மாற்கு 4: 35-41*

". . . உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் . . . வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல," என்கிறார் ஆண்டவர் (எரே. 29: 11) .

இளைஞர்களே, நாம் வாழும் காலம் உணர்ச்சிகள் ஆதிக்கம் செலுத்தும் காலம். நல்ல மதிப்பெண் மகிழ்ச்சி; தோல்வி தாழ்வு மனப்பான்மை;

ஒரு உறவு கெட்டால் உடைந்த மனம்; கடவுள் அமைதியாக இருந்தால் கடவுள் இல்லை போல உணர்வு. உணர்ச்சி சீர்குலைப்பு நம்மை நம்பிக்கையிழக்கச் செய்யும்.

ஆனால் இறைவார்த்தை சொல்வது: "உணர்ச்சிகளால் அல்ல, நம்பிக்கையாலும் பற்றுறுதியிலும் வாழுங்கள்" என்பதுதான்.

1. இறைத்திட்டம் நன்மைக்கானதே: *(எரே. 29: 10 - 14)*

எரேமியா 29-ஆம் அதிகாரம், நாடு கடத்தப்பட்டவர்களுக்கு இறைவாக்கினர் எழுதிய கடிதம் ஆகும். இக்கடிதத்தின் ஒரு பகுதிதான் இன்றைய திருமறைப் பாடம். கடவுள் இஸ்ரயேல் மக்களை பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களுக்கு நம்பிக்கை, எதிர்காலம் மற்றும் செழிப்புக்கான திட்டங்களைக் வைத்திருக்கிறார் என்பதை உறுதியளிக்கும் ஒரு முக்கிய வாக்குறுதி ஆகும். மக்கள் மனதாரக் கடவுளைத் தேடும்போது கடவுள் அவர்களைக் கேட்பார், பதிலளிப்பார், அவர்களை மீண்டும் கொண்டுவருவார் என்பதை இத்திருமறைப் பகுதி கூறுகிறது. இது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் எழுதப்பட்டாலும், இது கடவுளின் நிலையான திட்டங்கள் மற்றும் அவரது மக்கள் அவரைத் தேடும்போது கிடைக்கும் மீட்புக்கான ஒரு உலகளாவிய செய்தியை வழங்குகிறது.

இது சொல்லப்பட்ட சூழல், பெரும் துயரம் மற்றும் வேதனையின் சூழல். இஸ்ரவேல் மக்கள் தங்கள் நாடு, ஆலயம், குடும்பம் என

எல்லாவற்றையும் இழந்திருந்தனர். அவர்களின் உணர்வுகள் எல்லாம், அவர்கள் பாழாகிவிட்டதாகவும், கடவுள் அவர்களை மறந்துவிட்டதாகவும், எதிர்காலமே இனி இல்லை என்ற நிலையில்தான் இருந்தன. ஆனால், கடவுளின் திட்டமோ, அவர்களுக்கு வளமான எதிர்காலத்தைக் கொடுப்பதுதான்.

நாம் புரியாத நேரங்களிலும், கடவுள் நமக்கான திட்டங்களை செயல்படுத்துவார் என அவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். கடவுள் அமைதியாக இருப்பது போல இருந்தாலும், அவர் பின்னணியில் செயல்படுகிறார். கடவுளின் திட்டங்கள் அழிப்பதற்கானவை அல்ல, மாறாக, நம்பிக்கையையும், வளமான எதிர்காலத்தையும் தருவதே ஆகும்.

2. உணர்வுகளைத் தாண்டி செயல்படும் பற்றுறுதி: *(எபி. 11: 17-31)*

பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் தங்கள் தனிப்பட்ட, கடுமையான சூழ்நிலைகளில் தேவனை எவ்வாறு நம்பினார்கள் என்பதைக் காட்டுகிறது.

பற்றுறுதி என்பது காணாதவைகளை நம்பி, எதிர்காலத்தை குறித்து உறுதியுடன் இருப்பதும், கடினமான நேரத்திலும் கடவுளின் திருவுளத்திற்கு கீழ்ப்படிவதுமாகும்.

எபிரெயர் 11: 17-31 வரையுள்ள பகுதி, பற்றுறுதியின் செயல்களையும், அது கொண்டுவரும் கடினமான சோதனைகளையும் விளக்குகின்றன; இதில் ஆபிரகாமின் ஈசாக்கை பலியிடத் துணிந்த பற்றுறுதி, மோசே பார்வோனிடம் செல்லத் தேர்ந்தெடுத்தது, இஸ்ரயேலர்கள் செங்கடலைக் கடந்தது போன்ற பழைய ஏற்பாட்டு பற்றுறுதியாளர்களின் சான்றுகள் உள்ளன;

இது, காணாதவைகளைக் குறித்து நம்பி, நிலையான பலனை நோக்கி வாழும் உண்மையான பற்றுறுதியை வலியுறுத்துகிறது, நாம் நமது கடினமான சூழ்நிலைகளிலும் கடவுளை நம்புவதற்கு ஊக்கமளிக்கிறது. வாழ்க்கை பொருளற்றதாக தோன்றிய வேளைகளிலும் அவர்கள் பற்றுறுதியில் நிலைத்து நின்றார்கள்.

கடவுள் கொடுத்த ஒரே மகனை பலியிட சொல்லப்பட்டது. இங்கு, உணர்வு "இது அநீதி" எனக்கூறியிருக்கலாம். ஆனால், பற்றுறுதி என்பதோ, கடவுள் உயிரோடு எழுப்புவதற்கும் ஆற்றல் உடையவர் என்பதுதான். மோசே, தன் அடையாள நெருக்கடியின் நடுவிலும் பற்றுறுதியில் நிலைத்து நின்றார்.

பற்றுறுதியுடன் நடந்தவர்கள், ஆபத்துக்குள், குழப்பத்துள் இருந்தும் கடவுள் அவர்களைத் திருப்பி நல்லவைகளுக்கு பயன்படுத்தினார்.

3. பிரச்சனைகளிலும் புயல்களிலும் கடவுள் உடனிருக்கிறார்: *(மாற்கு 4: 35-41)*

இயேசு சீடர்களிடம், "அக்கரைக்கு போவோம்" எனக்கூறி, கடல் பயணம் மேற்கொண்டார்

கடலில் சென்றபோது ஏற்பட்ட புயலையும், இயேசு அதை அமைதிப்படுத்தியதையும் இப்பகுதி கூறுகிறது. இது பற்றுறுதியின் சோதனை, இயேசுவின் அதிகாரத்தைக் காட்டுதல், மற்றும் சோதனைகளின் போது கடவுள் நம்மைக் கைவிடுவதில்லை என்பதை உணர்த்தும் ஒரு பாடம் ஆகும். இங்கு சீடர்களின் உணர்வு என்பது, அச்சம், சந்தேகம், "உமக்கு கவலையில்லையா?" என குற்றம்சாட்டும் நிலையில்தான் அமைந்திருந்த்து. அவர்களின் உணர்ச்சியைப் பார்த்து இயேசு நகரவில்லை. மாறாக, அவர்களின் பற்றுறுதியை நிலைநிறுத்த தம் உடனிருப்பால் அமைதி உருவாக்கினார். நம் வாழ்வின் புயல்களில் நம்மோடு இருப்பவர் மனிதர் மட்டும் அல்ல, சமுத்திரத்தையும் காற்றையும் ஆள்கிற கடவுள் என்பதை நாம் நம்ப வேண்டும்.

இன்று, இளைஞர்கள் சந்திக்கும் புயல்கள்: மனஉளைச்சல், தோல்வி பயம், உறவு முறிவு, தன்னம்பிக்கை இழப்பு, எதிர்காலம் பற்றிய கவலை போன்றவை. அவர்களின் உணர்வோ, "நீ ஒருவன்தான்", "உன்னை யாரும் புரிய மாட்டார்கள்," "கடவுளும் அமைதியாக இருக்கிறார்" எனக்கூறுகின்றது. ஆனால், கடவுள் வாழ்வாகிய படவில் உடனிருக்கிறார் என்னும் நம்பிக்கையை வளர்த்தவேண்டும்.

அருள்திரு. T.P. சலீம் தங்ககுமார்

சீர்திருத்தம்: புதுப்பிக்க ஓர் அழைப்பு

Reformation: A Call for Renewal

2 அர. 23: 1-8 *தீத்து 3: 3-8*
திபா. 119: 25-32 *லூக். 5: 36-39*

"நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு, புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார் (தீத்து 3: 5).

"சீர்திருத்தம்" (Reformation) என்பதைச் சீர்திருத்துதல், மறு சீராக்கம், மீட்டுருவாக்கம் என பல நிலைகளில் பொருள் கொள்ளலாம். "சீர்திருத்தம்" என்பது ஒரு தனி நபரின் அறவாழ்வில் திகழும் ஒரு நல் மாற்றம். அதை ஒரு சமூகத்தில் ஏற்படும் புனரமைப்பு, வரலாற்றில் ஏற்படும் புரட்சிகரமான நிகழ்வு, மாறி வரும் உலகில் மாறாத கிறிஸ்துவின் மாட்சிமைமிகு செயலாற்றல் எனலாம். வரலாற்றில் செயலாற்றும் வல்லவராம் கடவுளின் வல்ல செயலாற்றலின் ஒரு பகுதி எனலாம். கடவுளின் இச்செயலை எல்லாக் காலத்திலும் காண முடியும். இது இறைமக்கள் புதுப்பித்தலுக்கான ஓர் அழைப்பாக உணர வேண்டும்.

இறைவன் காலாகாலங்களில் தம் அடியவர் வாயிலாக திருச்சபையைச் சீரமைத்துப் புதுப்பிக்கிறார். திருச்சபை கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற அமைக்கப்பட்டது. கடவுளுடைய விருப்பத்திற்கு மாறாக திருச்சபை செல்லும்போது, கடவுள் தடுத்து அவர் விருப்பத்தை நிறைவேற்றும் அளவில் தம் அடியவர்கள் மூலம் செயலாற்றுகிறார். பழைய ஏற்பாட்டுச் சபையாகிய யூத சமயத்தைச் சீர்திருத்த இறைவாக்கினர் (தீர்க்கர்) பயன்படுத்தப்பட்டனர். இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, போதனைகள் யூத மரபில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. யூத சமயத்தினுள் ஒரு சீர்திருத்தப் பிரிவாக எழுந்த கிறிஸ்தவம் ஏழு தனி சமயமாக மலர்ந்தது. இச்சமயத்தில் பிற்போக்குச் சிந்தனைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் நுழைந்தபோது கடவுள் சீர்திருத்தவாதிகள் வாயிலாக புதிய திருப்புமுனையை ஏற்படுத்தினார்.

இடைக்கால வரலாற்றில் திருச்சபை தடம் புரண்டபோது கடவுள் தம் அடியவர் மூலம் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதைத்தான் வரலாற்றில் "திருச்சபை சீர்திருத்தம்" என அழைக்கிறோம். 16-ஆம் நூற்றாண்டில் பாவம், புண்ணியம், அருள், திருவருட்சாதனம், திருச்சபை அதிகாரம் போன்றவற்றில் தவறான போதனைகள் இருந்தது. கிறிஸ்தவ நம்பிக்கைக்கும், திருமறைக்கும் முரணாக இருப்பதை உணர்ந்த மார்ட்டின்

லூதர் இதனைத் திருச்சபைகளில் தொடரும் "பாபிலோனிய அடிமைத்தனம்" என்றார். இத்தகைய அடிமைத்தனத்திலிருந்து, அறியாமையிலிருந்து விடுபட மனிதன் இறைவனோடு கொள்ளும் நேரடி தொடர்பால் மட்டுமே முடியும் என்றார்.

ரோம் நகரில் புனித பேதுரு பேராலயத்தைக் கட்ட அதிகப் பணம் தேவைப்பட்டபோது அதற்காக போப் 10-ஆம் லியோ "பாவ மன்னிப்பு சீட்டு" விற்பனை ஆணை பிறப்பித்தார். பாவ மன்னிப்புச் சீட்டை விலை கொடுத்து வாங்குகிறவர் எப்படிப்பட்ட பாவம் செய்திருந்தாலும் அது மன்னிக்கப்படும். இறந்தவர் பாவம் மன்னிக்கப்பட அவர்கள் பெயரிலும் பாவமன்னிப்புச் சீட்டு வாங்கலாம் எனவும் விளக்கம் தரப்பட்டது. தான் செய்த பாவத்திற்கு மனம் வருந்தி கடவுளிடமிருந்து பாவ மன்னிப்பு பெறாமல் பணத்தினால் பாவமன்னிப்பா? என்று சிந்தித்தவர்கள் தங்களைச் சீர்திருத்தத்தில் ஈடுபடுத்தினர். ஜாண்விக்ளிப், ஜாண் ஹஸ், ஜாண் கால்வின், உல்ரிச் சுவிங்லி போன்றோர் இறைமக்களுக்குச் சீர்திருத்த கருத்துக்களைப் போதித்தனர். பாவமன்னிப்புச் சீட்டு, புனிதர் வணக்கம், அதிகாரப் போட்டி போன்றவை வழியாகத் திருச்சபை திருமறை போதனையிலிருந்து விலகிச் செல்வதைக் கண்டு சீர்திருத்த போதனைகளை கொடுத்தனர்.

மனிதன் கடவுளிடம் கொள்ளும் பற்றுறுதியைவிட சமய சடங்காச்சாரம் மேலோங்கி நின்றதைக் கண்ட மார்ட்டின் லூதர், ரோ. 1: 17 "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற திருமறை சத்தியத்தை வலியுறுத்திப் போதித்தார். மக்களின் ஆத்மீக வாழ்வுக்கு எல்லாமாக இருப்பது திருமறை "திருமறை மட்டும்" (Scripture Alone) "பற்றுறுதி மட்டும்" (Faith Alone) "கிறிஸ்து மட்டும்" (Christ Alone) "கிருபை மட்டும்" (Grace Alone) "கடவுளுக்கு மட்டும் மாட்சி" (God's Glory Alone) என்றார். 1517-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் ஜெர்மனியில் விட்டன் பர்க் ஆலய வாசலில் 95 தர்க்க நியாயங்களை மக்கள் பார்வைக்கு வைத்து சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தார். சீர்திருத்த சிந்தனைகளைப் புதுப்பித்தலுக்கான ஓர் அழைப்பாய் ஏற்கும்போது ஏற்படும் மாற்றம் குறித்து சிந்திக்கும்போது,

1. சீர்திருத்தம்: தனி நபர் வாழ்வில் புதுப்பிக்க அழைப்பு: *(தீத்து 3: 5)*

"நாம் செய்த அறச் செயல்களை முன்னிட்டு அல்ல; மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு... கடவுள் நம்மை மீட்டார்".

"சீர்திருத்தம்" ஏற்பட தனிப்பட்ட வாழ்வில் இறைத்திட்டத்தின்படி வாழ நம்மை அர்ப்பணிப்பது முக்கியமாகிறது. திருமறையில் தனிநபர் வாழ்வு புதுப்பித்தலுக்கான அழைப்பு பல நிலைகளில் காணப்படுகிறது. இவ்வுலகு தீமைகளில் உழன்றாலும் நீங்கள் தூயவராக இருங்கள் என்று ஆண்டவர் கூறுகிறார். "நான் தூயவர்; ஆகவே, நீங்களும்

தூயவராயிருங்கள்" என்று ஆண்டவர் கூறுவது தீயவர்களாக வாழக்கூடாது என்ற எச்சரிப்போடு, தனிப்பட்ட வாழ்வில் தூயவராக வாழ நம்மைப் புதுப்பித்தலுக்கான அழைப்பு கூட. உரோ. 13: 12, 13-இல் "இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக". V. 13 "பகலில் நடப்பதுபோல மதிப்போடு நடந்து கொள்வோமாக. களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச்சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக" . இவை நம் தனிப்பட்ட வாழ்வில் சீர்படுத்தப்பட, நம்மை புதுபித்துக்கொள்ள தரப்படும் அழைப்பாகும்.

தீத்து 3: 1-11-இல் கிரேத்துத் தீவின் ஆயராக தீத்து பணியாற்றும்போது அங்கே ஆயர்கள், மூப்பர்களை நியமிக்கும் பொறுப்பு அவரிடம் இருந்தபோது, பல அறிவுரைகள், எச்சரிப்புகள் கொடுக்கப்படுகிறது. பிறர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முயலுவதைப் பார்க்கிலும் நம் வாழ்வில் நம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் அனுபவத்தோடு சீர்படுத்தி வாழ அறிவுரை வழங்க அழைக்கிறார். நற்செயல்கள் செய்ய ஆயத்தம், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல், எவரையும் பழித்துரையாமை, சண்டையிடாமை, பணிவுடன் பழகுதல், கனிவுடன் வாழ்தல்... என அறிவுரை தரப்படுகிறது. காரணம் ஒருகாலத்தில் நாமும் நெறி தவறி சென்றோம், சிற்றின்பங்களுக்கு அடிமைப்பட்டிருந்தோம், தீமை, பொறாமையுடன் வாழ்ந்தோம், மற்றவரை வெறுத்தோம். ஆனால், கடவுளின் இரக்கச் செயலால் நாம் அவராலே மீட்கப்பட்டோம். ஆகவே, நம் வாழ்வில் புதுப்பித்தல் அனுபவம் தேவை என்கிறார். பிரிவினை, சண்டை, போட்டி மனப்பான்மைகளை விட்டு விலகக் கூறுகிறார்.

நாம் தனிப்பட்ட வாழ்வில் சீர்பட ஆவியின் கனிகளைத் தரித்துக்கொள்ள வேண்டும் (கலா. 5: 22, 23). கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் "வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப் படாமலும் இருப்போமாக" என்கிறார் (கலா. 5: 26). இன்று நம்மில் காணப்படுகிற சுயநலம், அதிகார வெறி, பழிவாங்கும் மனப்போக்கு, பொறாமை, கர்வம், பெருமை, தற்புகழ்ச்சி, பண ஆசை இவைகள் எல்லாம் நம் வாழ்வையும் சிதைத்து, பிறர் வாழ்விலும் கடும் துயரத்தைத் தரும் காரணிகளாக உள்ளது. இத்தீமைகளிலிருந்து விடுபட்டு சீர்பட அழைப்பு தரப்படுகிறது. அன்பு, பொறுமை, மன்னிப்பு, தயவு, பணிவு, சேவை மனப்பான்மை, பிறருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகளை ஏற்க வேண்டும். கொலோ. 3: 2, 5 "பூமியிலுள்ளவைகளையல்ல; மேலானவைகளை நாடுங்கள்". திருச்சபை சீர்திருத்தத்தில் பல இறையடியார்களின் தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட சிந்தனை மாற்றம், அகில உலகத்திலும் சீர்திருத்தக் கருத்துக்கள் பரவி, சமய வாழ்வில் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பாக

அமைந்தது. திருச்சபை சீர்திருத்தம் குறித்து முதன் முதலில் குரல் கொடுத்தவர் அவிக்னானில் ஆயராக இருந்த பெட்ராக் (1304 - 1374) என்பவர். இவர் "புது யுகத்தின் முன்னோடி" என்று அழைக்கப்படுகிறார். இந்த தனி நபரின் வாழ்வில் ஏற்பட்ட சிந்தனை மாற்றம், துணிவு இவை திருச்சபையை ஒரு புது யுகத்திற்கு அழைத்துச் சென்றது.

2. சீர்திருத்தம் : இறையில்லத்தைப் புதுப்பிக்க அழைப்பு : *(2 அர. 23: 3)*

"அரசர் தூணருகில் நின்றுகொண்டு ஆண்டவரைப் பின்பற்றி நடப்பதாகவும் ...மக்களும் அவ்வுடன்படிக்கைக்கு உடன்பட்டனர்".

யூதா அரசர் யோசியா எருசலேமில் 31 ஆண்டுகள் ஆட்சி செய்தார் அவர் அரச பொறுப்பை எடுத்துக்கொண்டபோது யோசியாவுக்கு வயது 8. இவர் ஆண்டவர் பார்வையில் நேர்மையுடன் நடந்தார். தனது ஆட்சியின் 18-ஆம் ஆண்டில் சாப்பான் என்ற எழுத்தரை ஆண்டவர் இல்லத்திற்கு அனுப்பி தலைமைக்குரு இல்க்கியாவிடம் ஆண்டவர் இல்லம் பழுது பார்க்கும் பணிகளை ஒழுங்கு செய்யக் கூற, தலைமைக்குரு இல்க்கியா எழுத்தர் சாப்பானிடம் ஆலயத்தில் கண்டெடுத்த சட்ட நூலை கொடுக்க, சாப்பான் அரசர் யோசியா முன் அதை வாசிக்க, இறைமக்களை இறை இல்லத்தில் கூடி வரச் செய்தார். அரசர் இறை இல்லத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை நூலை அனைவரும் கேட்கும்படி வாசித்து, ஆண்டவரைப் பின்பற்றி நடக்கவும், அவருடைய விதிமுறைகள், ஒழுங்குமுறைகள், நியமங்களை முழு மனதோடு கடைப்பிடிக்க ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்தார். மக்களும் அவ்வுடன்படிக்கைக்கு உடன்பட்டனர்.

இங்கு இறை நியமங்கள் பயன்படுத்தப்படா நிலை இருந்தது. அதை தலைமைக்குரு கண்டெடுக்கிறார் (2 அர. 23: 3-10). கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை நூல் தகுந்தவரிடம் கொடுத்து, வாசிக்கப்பட அதை முதலாவது ஏற்று உடன்பட்ட அரசன் யோசியா இறை இல்லத்தில் மக்கள் காதுகள் கேட்க வாசித்தார் அல்லது மக்களுக்கு அறிவித்தார். இது இறைமக்களிடம் பெரிய மாற்றத்தையும், குற்ற உணர்வையும், ஏற்றுகொள்ளுதலையும், சீர்ப்படுதலையும் ஏற்படுத்தியது. அறிவிக்கப்படாமல் மறைந்து கிடக்கும் உண்மைகளை இறை நியதிகளை ஆள்பவருக்கும், மக்களுக்கும் அறிவிக்க வேண்டியது இறைப்பணியாளர் கடமை. நியாயப்பிரமாணத்தின்படி வாழ உணர்த்துவது சீர்திருத்தம். இறை இல்லத்தைத் தூய்மையாக காக்க முயலுவது சீர்திருத்தம். இறை இல்லங்களில் இறைமக்கள் இறை வார்த்தைகளைக் கேட்கும்படி செய்து மனமாற்றத்திற்கான அழைப்பைத் தருவது தேவையானதாக உள்ளது. இறை இல்லங்களில் இறைமக்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்கான அழைப்புகள் கொடுக்கப்பட வேண்டும். மக்கள் கடவுள் முன் தங்களை அர்ப்பணிக்க அறைகூவல் தேவை. பாவம், சாபம்,

தண்டனை, நரகம் இவைகளின் பயங்கரங்களும், நீதி, நியாயம், நேர்மை, பரலோகம் இவைகளின் மேன்மைகளும் போதிக்கப்பட வேண்டும். இவைகள் இறைமக்களைச் சீர்படுத்தும்.

இன்றைய திருச்சபைகளின் நிலைகளைச் சிந்திப்போம். ஆத்மீகத்துக்குரிய ஆலயங்களில் அரசியல் தலைவிரித்தாடுகிறது. சமாதானத்தின் ஆண்டவரை ஆராதிக்கும் இடங்களில் சண்டை, கலவரம், வழக்குகள்... ஆலயங்கள், ஆண்டவரின் மக்கள் சீர்பட, இறை இல்லங்களில் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள அழைப்புகள் அறைகூவல்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆலயம் பரிசுத்தமானது. தூய்மைக் கேடுகளுக்கு இங்கு இடமில்லை என்ற நிலை வரவேண்டும். இதற்குச் சீர்திருத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். சமயத்தின் பெயரில் செய்யப்படும் சடங்குகள் பற்றுறுதிக்கு மாதிரியாய் அமைய வேண்டும். போலி பக்தி அடையாளப்படுத்தப்பட வேண்டும். ஆலயம் பொருளாதார நிலையை வளர்த்துக்கொள்ளும் இடமாக இல்லாமல், மக்களுக்கு வாழ்வு தரும் இடமாக அமைய வேண்டும். வியாபாரப் போங்கிற்கு இங்கு இடமில்லை. மாறாக, இரக்கம் காட்டப்பட வேண்டிய இடம். "தந்தையின் வீட்டை வியாபார வீடாக்காதீர்கள்" *(யோவா. 2: 16)* என்ற இயேசுவின் கூற்று திருச்சபை இறைவனுக்குரியது. அது அனைவருக்கும் உரியது. அது வியாபார இடமும் அல்ல; பொழுதுபோக்கு இடமும் அல்ல; பரிசுத்தமான பக்தி வாழ்வின் உறைவிடம் என உணர்த்துகிறார்.

திருச்சபை மக்களாகிய நாம் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செய்து, ஆன்மீக வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டியவர்கள். திருச்சபை கடவுளின் சரீரம் என்பதைப் புரிந்து, எல்லா மக்களுக்கும் வாழ்வு தரும் இடமாகவும், ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லாரும் அவருடைய பிள்ளைகள் என்ற பற்றுறுதியை உருவாக்க வேண்டும். உலகப் பற்றிலிருந்து விடுபட்டு, உலகைப் படைத்தவரில் பற்றுறுதி வைக்க வேண்டும். இன்று சீர்திருத்த கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளும் நம்மில் சீர்பட வேண்டிய பல காரியங்கள் உள்ளன. "பாவ மன்னிப்பு சீட்டை" எதிர்த்து உருவான சீர்திருத்த சபைகள் "ஆசீர்வாதத் தட்டு" என்று பெயர் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்திப் பணத்தை வசூலிக்கிறது. "தங்கச் சாவி", "கிருபாசனம்" திட்டங்களை விமர்சிக்கும் சபையில் "ஆசீர்வாதத் தட்டு" ஏற்கப்படுவது வியப்பைத் தருகிறது. "சீர்திருத்தம்" என்பது முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல. அது ஒரு தொடர் நிகழ்வு. இன்றைய திருச்சபையிலும், வருங்காலத் திருச்சபையிலும் அதனதன் காலத்திற்கேற்ப சீர்திருத்தம் நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அது எளிதல்ல; தியாகமும், அர்ப்பணமும் தேவை.

ஜாண் விக்ளிப் (1324 - 1384) இங்கிலாந்தைச் சார்ந்தவர். Oxford பல்கலையில் பயின்றவர். *1360*-இல் அருட்பொழிவு பெற்று குருவானார். திருச்சபை மீது பற்றுக்கொண்ட அவர் போப்பின் தவறான செயல்களை எதிர்த்தார். சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டார். *1382*-இல் திருமறை இலத்தீன் பிரதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கொலை செய்ய திட்டமிட்டனர். காண்டின் ஜாண் அரசன் ஆதரவால் முடிவில்லை. *1401*-இல் இங்கிலாந்து பாராளுமன்றம் அதை அழிக்க ஆணையிட்டது. *1384*-இல் இறந்த ஜாண் விக்ளிப் கல்லறையைத் தோண்டி சுமார் *30* ஆண்டுகளுக்குப் பின் அவர் "திரிபு கொள்கைக்காரர்" எனத் தீர்ப்பிட்டு, அவர் எலும்பைத் தோண்டி எடுத்து எரித்து கோபத்தை தீர்த்தனர். அன்று திருமறை மொழிபெயர்ப்பைக் கடுமையாய் எதிர்த்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றம் ஏற்பட்டு, *2*-ஆம் வாட்டிகன் சங்கம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் திருமறை வேண்டும் என்றது. ஆம்! சீர்திருத்த செம்மல்கள் கோதுமை மணிகளாய்ப் புதைக்கப்பட்டனர், இரத்தசாட்சியாயினர். ஆனால், அவர்களின் சீர்திருத்தக் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஆம்! சீர்திருத்தம் புதுப்பித்தலுக்கான ஓர் அழைப்பு. ஆமென்.

அருள்திரு. T. டேவிட் கிளோட்சன்

ஒளியாகத் திகழ்க: மாறுபட்டிருக்கத் துணிக

Be the Light: Dare to be Different

தானி. 3: 16-30 *பிலி. 2: 14-16*
திபா. 119: 9-16 *மத். 5: 13-16*

"இவ்வாறே, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" (மத். 5: 16).

கிறிஸ்தவ வாழ்வு மற்றும் கிறிஸ்துவில் வாழ்வு என்பவை இந்த உலகிற்கு ஒளி கொடுக்கும் வாழ்வு. இருளால் நிறைந்தது இந்த உலகம். தீமை, அநீதி, துன்மார்க்கம் பகைமை, வெறுப்பு, பிரிவினை, வேசித்தனம் போன்ற தீய பண்புகளால் இந்த உலகம் இருளில் மூழ்கிப் போயுள்ளது. இவைகளை விட்டு கிறிஸ்துவுக்காகவும் நீதிக்காகவும் உலகில் வாழ்வதற்காகவே கிறிஸ்து தம் இன்னுயிரை சிலுவையில் தந்து நம்மை மீட்டெடுத்தார்.

கிறிஸ்துவுக்காய் உண்மையுடனும் நீதியுடனும் நற்செயல்களுடனும் வாழ்வதற்கு நிச்சயமாய் துணிச்சல் வேண்டும். அந்தத் துணிவும் கிறிஸ்துவிடமிருந்தே நமக்கு வருகிறது. அப்படி வாழ்பவர்கள் ஒருபோதும் மறைந்திருக்க இயலாது. இதனையே இயேசு கிறிஸ்து மலையின் மேலிருக்கிற பட்டணம் என்றும் கம்பத்தின் (விளக்குத்தண்டின்) மேல் இருக்கிற விளக்கு (மத். 5: 14, 15) என்றும் குறிப்பிடுகிறார். இயேசு தம் சீடர்களைப் பார்த்தே இதனைக் குறிப்பிடுகிறார். கம்பத்தின் மேல் ஏற்றப்பட்ட விளக்கு ஒருபோதும் மறைந்திருக்க இயலாது. அது சுற்றிலும் தன்னலம் துறந்து ஒளி கொடுக்கும்.

1780-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் கிளவுசெஸ்டர் நகரைச் சார்ந்த இராபர்ட் ரெய்க்ஸ் என்பவரால் கம்பத்தின் மேல் ஏற்றப்பட்ட விளக்கைப் போல் உருவாக்கப்பட்டது தான் திருமறைப்பள்ளி என்ற அமைப்பு. தொழில் புரட்சியின் தாக்கத்தால் சரியான பராமரிப்பின்றி ஆண்டவரையும், ஆலயத்தையும் மறந்து தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அழைத்து, அரவணைத்து, அன்பைக் கொடுத்து ஆண்டவரை அவர்களுக்குக் காண்பித்தவர் இறைப்பணியாளர் இராபர்ட் ரெய்க்ஸ். உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க என்ற இறைவாக்கின்படி 1783-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் நாள் பத்திரிகையில் திருமறைப்பள்ளி பற்றி தலையங்கக் கட்டுரை ஒன்றை எழுதினார். அதுவே கம்பத்தில் ஏற்றப்பட்டு அனைவருக்கும் ஒளி கொடுக்கும் விளக்கைப் போல இங்கிலாந்து நாடு முழுமைக்கும் திருமறைப்பள்ளி

பிரபல்யமடையக் காரணமாக அமைந்தது. உலகத் திருமறைப்பள்ளி நாளைக் கொண்டாடும் இந்தச் சிறப்பான நாளிலும் ஒளியாகத் திகழ்க மாறுபட்டிருக்கத் துணிக என்ற கருப்பொருளை மையப்படுத்தி இன்றைய திருமறைப்பகுதிகள் பல உண்மைகளை நமக்கு கற்றுத் தருகின்றன. கிறிஸ்துவால் மீட்கப்பட்ட நம் வாழ்வைக் குறித்த எதிர்பார்ப்புகள் இவ்வுலகுக்கும் இறைவனுக்கும் ஏராளம் உண்டு. அதனை உண்மையோடும் நீதியோடும் வெளிப்படுத்தி ஒளியாய்த் திகழ்வதே நாம் கற்றுக் கொள்ளும் உண்மையாகும்.

1. இருளை அகற்றிட ஒளிருங்கள்:

தந்தை ஒருவர் தன் முதிர்ந்த காலத்தில் செல்வம் அனைத்தையும் தன் மூன்று பிள்ளைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, விலை மதிப்புமிக்க தன் சில உடைமைகளை நிர்வகிப்பதற்கு மூவரில் யாரைத் தெரிவு செய்யலாம் என்பதற்காக ஒரு சோதனையை நடத்தினார். மூவருக்கும் மூன்று அறைகளைக் காட்டி தேவையான பணமும் கொடுத்து இடைவெளி இல்லாமல் அறைகளை ஏதாவது பொருட்களால் நிரப்பச் சொன்னார். இச்சோதனையில் வெற்றி பெறுபவரிடம் அப்பொறுப்பை ஒப்படைக்க எண்ணினார். மூன்றுபேரும் பலவாறு சிந்தித்து அறைகளை நிரப்பினார்கள். குறிப்பிட்ட நாளில் தந்தை அறைகளைப் பார்ப்பதற்குச் சென்றார். முதலாமவன் கற்களாலும் மண்ணாலும் அறையை நிரப்பியிருந்தான். இரண்டாமவன் வைக்கோல் போரால் அறை முழுமையும் நிரப்பியிருந்தான். மூன்றாமவன் அறைக்குச் சென்றார். அந்த அறை காலியாக இருந்தது. ஆனால் இருள் முழுமையாய் நிறைந்திருந்தது. திடீரென அவன் தன் கையில் இருந்த மெழுவர்த்தியைப் பற்றவைத்தான். அறையெங்கும் ஒளி நிரம்பியது. இருள் அகன்று போய்விட்டது. தன் அறிவால் அறையை ஒளியாக்கிய அவனையே தெரிவு செய்தார் வெற்றியாளனாக.

ஒளி இருக்கும் இடத்தில் இருளுக்கு இடமில்லை. ஒளி எங்கேயோ அங்கே மாற்றம் நிச்சயம். மாற்றம் நிகழ்ந்திட மாறுபட்டவர்களாக இருக்கும் துணிச்சல் வேண்டும். அது ஒரு அலட்டலுக்கான துணிச்சல் அல்ல, கர்வம் கொள்வதற்கானதுமல்ல, மாறாக ஒளிமிகு வாழ்வுக்கான பொறுப்பு.

மாற்றத்தை எதிர்நோக்கிய மக்களுக்கு நம்பிக்கையூட்ட எசாயா இறைவாக்கினர், காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா. 9: 2) என்கிறார். இயேசுவின் வருகையையும் அவரால் இவ்வுலகம் பெற்றுக்கொள்ளவிருக்கும் இருள் அகன்ற ஒளிமிகு வாழ்வையுமே எசாயா குறிப்பிடுகிறார். நாம் உலகுக்கு ஒளியாகிட கிறிஸ்துவாகிய ஒளி நமக்குள் ஒளிரவேண்டும். புதுப்பிக்கப்பட்ட வாழ்வு நமக்குள் வெளிப்பட வேண்டும். இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள், மாறாக உங்கள் உள்ளம் புதுக்பிக்கப்பெற்று மாற்றம்

அடைவதாக! அப்போது கடவுளின் திருவளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும் (உரோ. 12: 2). இந்த உலகத்துக்குச் சாய்ந்து போகாமல் மனமாற்றத்தால் புதுப்பிக்கப்பட்டவர்களாக இருங்கள். உள்ளான மனிதனில் ஏற்படும் மாற்றமே எந்த வழி நன்மை, எந்த வழி உண்மை என்பதை உணர்த்துகிறது. அதுவே நானே ஒளி என்ற கிறிஸ்துவை நம் செயல்கள் வழி இவ்வுலகில் பிரதிபலிக்கிறது. குழந்தைகள் இவ்ஒளியைச் சொந்தமாக்கி ஒளியாகத் திகழ அவர்களை உருவாக்குவதே திருமறைப்பள்ளியின் திருப்பணி. குழந்தைகள் மனத்தில் இருக்கும் அறியாமை என்னும் இருளை அகற்றி ஒளிமிக்கவர்களாக அவர்களை மாற்றும் பணியையே இராபர்ட் ரெய்க்ஸ் நிறைற்றி வெற்றி கண்டார். அதுவே நமது பொறுப்பும். நம் முன்னோர்கள் அறியாமை என்னும் இருளில் வாழ்ந்தவர்கள். ஆனால் அருட்பணியாளர்கள் நற்செய்தியையும் ஆண்டவரையும் தந்து அவர்களை ஒளியாய்த் திகழ வைத்தார்கள். இருளகற்றி ஒளிவீச நாமும் பிரயாசப்படுவோம்.

2. நம்பிக்கையில் மாறுபட்டிருக்கத் துணியுங்கள்:

எது நிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற எங்கள்கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர் (தானி. 3: 17).

நம்பிக்கையில் மாறுபட்டிருப்பது என்பது ஒரு தனிமையைப் பொருள் கொள்ளவில்லை. அது ஒரு அழைப்பு நோக்கம். ஒரு தெளிவான பாதை என்பதாகும். கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் உறுதியான இறை நம்பிக்கை மட்டுமே. நம்பிக்கையின்றி இறைவனை எவரும் அணுகிட இயலாது. நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. இந்த நம்பிக்கையால் தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றனர் (எபி. 11: 1, 2). ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலைபோல் என்றும் அசையாது இருப்பர் (திபா. 125: 1).

உலகில் கடவுளுக்குச் சான்றாய், ஒளியாய்த் திகழ நம்பிக்கையில் மாறுபட்டிருக்கும் துணிச்சல் வேண்டும் என்பதை இன்றைய முதல் திருமறைப் பாடமான தானியேல் 3: 16-30 தெளிவாய் விளக்குகிறது. தானியேலின் நண்பர்களான சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ பாபிலோனின் சிறைப்பிடிக்கப்பட்ட சூழலிலும் நம்பிக்கையில் உறுதியுடன் நிற்கிறார்கள். மன்னர் நேபுகாத்நேச்சர் நிறுத்தின பொற்சிலையை அனைவரும் பணிந்து வணங்க வேண்டும். இல்லையேல் பற்றி எரிகின்ற தீச்சூளையில் போடப்படுவார்கள் என்பது மன்னரின் கட்டளை. ஆனால் நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூவரும், எது நிகழ்ந்தாலும் நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள் எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர் (தானி. 3: 17) என்று பதிலளித்து மன்னர் நிறுத்தின பொற்சிலையை வணங்க மறுத்து

நம்பிக்கையுடன் எந்தத் தண்டனையையும் ஏற்கத் துணிந்து நின்றனர். விளைவு தீச்சூளையில் மூவரும் மன்னரின் கட்டளைப்படியே தூக்கிப் போடப்பட்டனர். ஆனால் அவர்கள் நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றியது கடவுள் தம் தூதனை அனுப்பி தீச்சூளையில் எந்தச் சேதமும் ஏற்படாமல் அவர்களைப் பாதுகாத்தார். அவர்களது நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றியது கடவுள் தம் தூதனை அனுப்பி தீச்சூளையில் எந்த சேதமும் ஏற்பாடமல் அவர்களைப் பாதுகாத்தார். அவர்களது நம்பிக்கை அந்நிய நாட்டில் கம்பத்தில் ஏற்றப்பட்ட விளக்காக ஒளிர்ந்தது. மன்னன் நேபுகாத்நேச்சர் சான்றாக நின்று, சாத்ராக் மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் கடவுள் புகழப்படுவாராக! தங்கள் கட்டளையையும் பொருட்படுத்தாமல், அவர்மேல் நம்பிக்கை வைத்துத் தங்கள் உடலைக் கையளித்த அவருடைய ஊழியர்களை அவர்தம் தூதரை அனுப்பி மீட்டருளினார் (தானி. 3: 28) என்கிறார்.

இத்தகைய துணிச்சல்மிகு நம்பிக்கையுடையவர்களாய் நாம் உருவாக வேண்டும். நம் பிள்ளைகள் உருவாக்கப்படவேண்டும். சிறுபிள்ளைகள் எதையும் இலகுவாய் நம்பும் குணம் படைத்தவர்கள். அவர்களில் இறைநம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். மோசே, சாமுவேல், நாமான் வீட்டு பணிப்பெண் சிறுமி, மிரியாம் இவர்களெல்லாம் பெற்றோர் கற்றுக்கொடுத்த நம்பிக்கையில் உறுதியாய் நின்றவர்கள். நம்பிக்கையில் மாறுபட்டிருக்கத் துணிந்தவர்கள். தாங்கள் சார்ந்த சமூகத்திற்கும் வாழ்ந்த நாட்டிற்கும் நற்செய்தியை சான்றாய் நிறுத்தி ஒளியாய்த் திகழ்ந்தவர்கள். நம் பிள்ளைகளையும் உருவாக்குவோம். நமது வாழ்வு பிறரது பயத்தைக் குறைக்கவும் நம்பிக்கையை அதிகரிக்கவும் உதவவேண்டும். அதுவே ஒளிமிகு வாழ்வு.

3. நற்செயல்களில் வளருங்கள்:

உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். மத். 5: 16

மனித வாழ்வை அலங்கரிக்கும் அற்புத ஒளிதான் அவர் அன்புடன் நிறைவேற்றும் நற்செயல்கள். மனப்பூர்வமாய் நிறைவேற்றப்படுகின்ற நற்செயல்கள் பலரது வாழ்வில் ஒளியேற்றுகிறது. உலகில் சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் கடவுளின் மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் (பிலிப். 2: 13-16) என்று பவுலடியார் பிலிப்பித் திருச்சபைக்குக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். கிறிஸ்தவ வாழ்வின் வெளிப்பாடே நற்செயல்கள்தாம். இறைவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் இறையருளும், அன்பும் நற்செயல்களாக உலகில் வெளிப்படுகிறது. இது ஒரேநாளில் முழுமையடைந்து விடுவதில்லை. ஒரு விதை செடியாகி, மரமாகி, கிளைகள் பரப்பி கனிதருவதுபோல் ஒருவரின்

வாழ்வு முழுமையும் இறையருளில் வேரூன்றி தொடர் வளர்ச்சியால் நற்செயல்கள் வழி நிறைவை எட்டுகிறது. நற்செயல்களால் நற்கனியைக் காண்பதின் வழி விண்ணகத் தந்தையைப் பிறர் போற்றி, மகிழ்வார்கள்.

குழந்தைகள் இறைவன் நமக்கு வழங்கியிருக்கும் அருள்கொடை. அவர்களால் விண்ணகத்தந்தையாம் கடவுள் மாட்சிமையடையும்படி தூய்மையாய் வளர்க்கப்படவேண்டியவர்கள். விதை செடியாகும்போது அதனைப் பேணி வளர்ப்பதால் மட்டுமே கனிதரும் மரமாய் வளரமுடியும். ஆண்டவரின் எதிர்பார்ப்பு இன்று நம்மிலும் இதுவே. யூதச் சமய குழந்தைகள் நற்செயல்கள் செய்ய இயலாதவர்கள். எனவே மீட்பின் படிநிலை அவர்களுக்கு இல்லை எனப் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான், இயேசுவிடம் சிறுபிள்ளைகளைக் கொண்டுவந்தபோது சீடர்கள் அவர்களைத் தடுத்தார்கள். ஆனால், இயேசு சிறுவர்கள் என்னிடம் வருவதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள் எனச் சீடர்களை அதட்டி சிறுவர்களை அணைத்து ஆசீர்வதித்தார். ஆகவே, திருமறையின் வெளிச்சத்தில் குழந்தைகள் ஒளியாகத் திகழ்ந்து மாறுபட்டிருக்கக் கற்பிப்போம். இறையரசுக்காக உலகில் மாறுபட்டிருக்க அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வோம்.

அருள்திரு. J. வின்சென்ட் இராபர்ட்

கிறிஸ்துவில் ஒன்றுபட்டு, உலகுக்குச் சான்றாதல்

United in Christ, Witnessing to the World

எசா. 2: 2-4 *2 கொரி. 13: 5-13*
திபா. 133 *மத். 18: 18-20*

"சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது" (திபா. 133: 1).

அருட்பணியாளரும் 60-ஆவது ஆட்சிக்குழுவின் அமெரிக்க சட்டப்பேரவையாளருமான ரிச்சர்ட் சி. ஹல்வர்சன் கிறிஸ்துவில் ஒற்றுமையை குறித்துக் கூறும்போது கிறிஸ்துவில் ஒருவருக்கொருவர் ஒப்படைப்புடன் வாழ்வது கிறிஸ்தவச் சாட்சிக்கு அடித்தளம் என்கிறார். தொடக்க கால மனிதன் கூட்டம் கூட்டமாகவே குடிசைகள் அமைத்து வாழ்ந்தார்கள். இதனால் அவர்களை யாரும் எதிர்கொள்ள முடியவில்லை. ஆனால் இன்று கிறிஸ்துவில் ஒன்றுபட்டு வாழ வேண்டிய அழைப்பைப் பெற்றிருக்கும் நாம் பல்வேறு வகையான வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, சாதீய அடிப்படையில் வேற்றுமை ஆண் பெண் எனும் பாலின வேறுபாடு, மதத்தின் பெயரிலும் மொழியின் பெயரிலும் பிரிவினைகள் காணப்படுகின்றன. இவைகள் சமுதாயத்தில் மட்டுமல்ல திருச்சபைக்குள்ளும் திகழ்கின்றன. சவால்களாகவே திகழ்கின்றன.

இப்படிப்பட்ட வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்டு வாழ்வதற்கான அறைகூவலைத் திருப்பாடலாசிரியர் 133-ஆவது திருப்பாடலின் மையச் செய்தியாகத் தருகின்றார். விலையுயர்ந்த நறுமணத் தைலம் ஆரோனின் தலையின் மீது ஊற்றப்படுகிறது. அது தலையோடும் பொன் தலைப்பாகையோடும் ஒருபோதும் தேங்குவதில்லை. அந்தத் தைலம் தலையிலிருந்து தாடி, விலையுயர்ந்த கற்கள், அங்கி ஆடையின் கீழ் உள்ள பொன்மணிகள், பாதம் வரையிலும் ஊறி நனைக்கிறது. தலையிலிருந்து சிறிது சிறிதாக இறங்கி முழு உடலையும் உடையையும் நனைத்து இணைத்து நறுமணம் வீசச்செய்கிறது. விலையுள்ளவற்றையும் விலையற்றவற்றையும் ஒன்றுபோல் நனைத்து மதிப்புள்ளதாக்குகிறது. வேறுபாடுகளை வேரறுத்து ஒன்றுபடுத்துகிறது. இத்தகைய அழைப்பைக் கொண்டிருக்கும் நாம் நம்மில் காணப்படும் வேற்றுமைகளை அகற்றி கிறிஸ்துவில் ஒன்றுபட்டு உலகிற்குச் சான்றாக வாழ என்ன செய்ய வேண்டும் என்பதைத் திருமறை வெளிச்சத்தில் தியானிப்போம்.

1. இறைவழிபாட்டில் ஒன்றிப்பு: *(எசா. 2: 4)*

ஆன்மிக வாழ்வின் உயிர் நாடி இறைவழிபாடாகும்.

இறைவழிபாட்டில் ஒவ்வொரு அம்சமும் (Liturgical Element) ஒன்றோடு ஒன்று இணைந்து இறைவழிபாட்டை முழுமைப்படுத்துகின்றன. அதுபோல வழிபாட்டில் பங்குபெறும் நாமும் ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டு வழிபடுவதே இறைவனோடு நம்மை இணைக்க வழிவகுக்கும். பொழுதுபோக்கிற்காக கடற்கரைக்குச் செல்பவர்களில் சிலர் கடலின் அழகை ரசிப்பார்கள். சிலர் கடல்காற்று வாங்குவார்கள். சிலர் அலையில் மட்டும் கால் நனைத்து இன்பம் காண்பர். சிலர் உட்கார்ந்து உரையாடி பொழுது போக்குவர் சிலர் கொஞ்சமாக கடலலையில் விளையாடி மகிழ்வர். ஆனால் சிலரோ கடலில் இறங்கிக் கடல் நீரில் மூழ்கி ஆனந்தமாக ஆசைதீர குளித்து மகிழ்வர். இதைப் போலவே இறைவழிபாட்டில் கலந்துகொள்பவர்களிலும் இப்படிப்பட்டவர்கள் உண்டு. சிலர் ஓய்வுநாளில் ஆலயம் சென்று கடமையை மட்டும் நிறைவேற்றிச் செல்லுகிறவர்கள், சிலர் பாடலுக்காகவே தொழுகையில் பங்குபெறுவர், சிலர் இறைவார்த்தைக்காக மட்டுமே செல்வர். இன்னும் சிலர் தங்கள் பொறுப்பு பதவிகளைத்தக்க வைப்பதற்காகச் செல்வதுண்டு ஆனால் சிலரோ வழிபாட்டில் இறைவனோடு ஒன்றற கலந்து பக்தியாய், தூய்மையாய்ப் பணிந்து செயல்படுவர்.

இதனையே ஏசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். இதற்குக் காரணம் இறைவனை வழிபட அனைத்து வாய்ப்புகளும் இருந்தபோதிலும் இஸ்ரயேல் மக்களுக்குள் காணப்பட்ட வேற்றுமைகளும் பகைமை உணர்வும் ஒன்றித்த இருதயத்தோடு இறைவனை வழிபட தடையாக இருந்தது. மேலும் இந்த நிலை அவர்களை கடவுளை மறக்கவும் செய்தது. இறை நீதியை நிலைநாட்ட அழைக்கப்பட்டவர்கள் சுயநீதியை மட்டுமே நிலை நாட்டியதால் பாபிலோனுக்கு அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். அதுமட்டுமல்ல பாபிலோனிலும் யூதா எப்பிராயீம் என பிரிந்தே செயல்பட்டனர். இதனால் பாடுகளும் உபத்திரவங்களும் அனுபவிக்க நேரிட்டது. எனவேதான் வால்டேர் சொல்லும்போது ஒரு நாடு வளமாக இருக்க வேண்டுமானால் அந்த நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமை உணர்வுடன் விளங்க வேண்டும் என்கிறார். இஸ்ரயேல் மக்கள் தங்கள் சுய நீதியை விட்டு இறைவனிடத்தில் திரும்பியபோது எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் கொடுத்த வாக்குறுதிகளே சோ எசாயா *2: 2-4* வரையிலான திருமறை வார்த்தைகள் இங்கு இஸ்ரயேல் மக்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து மீண்டும் கானானுக்குள் வரும்போது பிரிவினைகளோடு அல்ல ஒன்றுபட்டு ஒற்றுமையோடு வருவர் என்கிறார். இதனை உறுதிப்படுத்தும் வண்ணமாக எசாயா *2: 4*-இல் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள் என்கிறார். இதன் அர்த்தம் பகைமையை வெறுத்து பாசத்தை வெளிப்படுத்துவதாகவும்,

போர்க்களம் வெறுத்து சமாதானத்தை ஏற்று நீதிக்காகப் போராடுகிறவர்களாகவும் மாறுவர் என்பதை வெளிப்படுத்துகிறது. இறைவழிபாட்டில் ஒன்றித்திருந்தால் தாழ்விலிருந்து (பாபிலோன் அடிமைத்தனம்) உயர்வான இடத்தை (சீயோனை விடுதலை) அடையலாம் என்பதை எசாயா இறைவாக்கினர் உறுதிப்படுத்துகிறார். இத்தகைய மாற்றங்களே இறைவழிபாட்டின் வழியாக உலகிற்கு இறைமக்கள் வாயிலாக இறைவன் அருளும் அருட்கொடையாகும்.

2. இறைவேண்டலில் ஒன்றிப்பு: *(மத். 18: 20)*

இறைவேண்டல் என்றால் ஆள்தத்துவத்துடனும் அன்புணர்வுடனும் விளங்குகின்ற இறைவனோடு அன்புறவில் உரையாடி மகிழ்வதையே இறைவேண்டல் என்கிறோம். இறைவேண்டலில்தான் கிறிஸ்தவ வாழ்வின் உயிர்த்துடிப்பு அடங்கி இருக்கிறது. இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் இறைவேண்டல் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தது. வாயின் ஆயுதமாகிய இறைவேண்டல் வல்லமையுள்ளது என்பது யூத ரபிமார்களின் போதனையாகும். இத்தகைய சிறப்புமிக்க இறைவேண்டலின் பிரதிபலிப்பு உலகில் மட்டுமல்ல விண்ணுலகிலும் பிரதிபலிக்கிறது என்பதை தான் இயேசு கிறிஸ்து தனது சீடர்களுக்கு போதனையாக வழங்குகிறார்.

மத். 18: 1-இல் இயேசுவின் சீடர்கள் விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்று கேள்வியை எழுப்பினர். இக்கேள்விக்கான பதிலின் தொடர்ச்சியாகவே மத்தேயு 18: 18-20 வரையிலான திருவசனங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. யார் பெரியவர்? என்னும் இவ்வார்த்தையிலேயே தனது சீடர்களுக்குள்ளே இருந்த வேற்றுமையை புரிந்து கொள்ளுகிறார் இயேசு கிறிஸ்து. இதனால்தான் விண்ணக வாழ்வை குறித்து சிந்திப்பதற்கு முன்பாக இம்மண்ணுலகில் ஒன்றித்த வாழ்வின் அவசியத்தை இறைவேண்டுதலை மாதிரியாக கொண்டு விளக்குகின்றார். எனவேதான் மத். 18: 20-இல் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்பதின் வாயிலாக இறைவேண்டல் ஏறெடுக்கும்போது ஒன்றித்து செயல்படுவதின் அவசியத்தை எடுத்துக் கூறுகிறார். இன்றளவும் ஆற்றல் மிகு இறைபணியாளர்களை இயக்கி கொண்டிருப்பதும் இறைவேண்டலே எனவே தான் இயேசு கிறிஸ்து இறைவேண்டலை குறித்து இந்த நற்செய்தி பகுதியில் சொல்லும் போது உள்ளம் ஒன்றுபடாத உதட்டு பிதற்றல்கள் எல்லாம் இறையுறவு வாழ்வை மாய்மாலம் ஆக்குகிறது என்கிறார். மேலும் இறைவேண்டலுக்கு முன்பாக நல்லுறவும் நட்பும் இயேசுவால் இங்கு வலியுறுத்தப்படுகிறது. இறைவேண்டுதல் வழியாக கிறிஸ்துவில் ஒன்றுபட்டு உலகிற்குச் சான்றாகும் அழைப்பை இதன் வழியாக இயேசு கிறிஸ்து தருகின்றார்.

3. இறைத்திட்டத்தில் ஒன்றிப்பு: *(2 கொரி. 13: 11)*

இறைத்திட்டம் என்பது ஒவ்வொரு தனிமனித வாழ்விற்கும் இறைவன் கொண்டிருக்கும் நோக்கத்தை குறிக்கிறது. 2 கொரிந்தியர் 13: 5-14 வரையிலான திருமறைப்பகுதியில் தூய பவுல் கொரிந்து திருச்சபை மக்களுக்கு எழுதிய கடிதம் தரப்பட்டிருக்கிறது. தூய பவுல் வாழ்ந்து வந்த காலகட்டத்தில் கொரிந்து பட்டணம் செல்வ செழிப்புமிக்க நகரமாக திகழ்ந்தது. துறைமுக பட்டணமானபடியால் வணிகங்கள் செழித்தோங்கின பல்வேறு தரப்பட்ட பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள் வாழ்வியல் முறைகள், கொரிந்து பட்டணத்தில் அதிகமாக காணப்பட்டன. தூய பவுலின் நற்செய்தி பணியின்போது கிறிஸ்துவின் நற்செய்தியை கொரிந்து மக்கள் ஏற்றுக் கொண்டாலும் அங்கு காணப்பட்ட கேளிக்கைகள் மற்றும் ஆடம்பர வாழ்விற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். தவறான போதனைகள் (False Teachings) கொரிந்து திருச்சபைக்கு மிகுந்த சவாலாக இருந்து வந்தது. இறைத் திட்டம் தங்கள் மீது என்ன என்பதை புரிந்து கொள்வதில் கொரிந்து மக்கள் குழப்பம் அடைந்தனர். தாகூர் சொல்லும்போது "கூட்டம் கூடுவது எளிதான காரியம் ஆனால் ஒன்றுப்படுவது தான் கடினம்" என்கிறார்.

இந்தச் சூழலில் தான் தூய பவுல் தனது இரண்டாவது நிருபத்தினை தீமோத்தேயுவோடு இணைந்து கொரிந்து மக்களுக்கு கொடுக்கிறார். அந்தக் கடிதத்தில் கொரிந்து மக்களுக்கான இறைத் திட்டத்தினை 2 கொரி. 13:11-இல் மகிழ்ச்சியாயிருங்கள்; உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள்; என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்; மன ஒற்றுமை கொண்டிருங்கள்; அமைதியுடன் வாழுங்கள்: அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார் எனக் குறிப்பிடுகிறார். இங்கு பவுல் சகோதரரே என அழைத்து, அவர்களுக்குள்ளாக இருந்த வேற்றுமைகளை அடையாளப்படுத்துகிறார். நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள் என்பதன் வழியாக அவர்கள் கலக்கத்திற்கான தீர்வு கிறிஸ்து ஒருவரே என்பதை தெளிவுப்படுத்துகிறார். மேலும் மன ஒற்றுமை கொண்டு வாழும் போது அன்பிற்கும் சமாதானத்திற்கும் காரணமான இறைவன். அவர்களோடு இருப்பார் என்னும் இறை திட்டத்தை கடிதத்தின் வழியாக வழங்குகிறார். இந்த இறைத் திட்டத்தை பின்பற்றி, வாழ்ந்த கொரிந்து திருச்சபை இன்றும் இவ்வுலகிற்குச் சான்றாக திகழ்கிறது.

கிறிஸ்துவுடன் ஒன்றித்து இவ்வுலகிற்குச் சான்றுகளாக நாம் விளங்க வேண்டும் என்றால், இறைவழிபாட்டிற்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை கொடுத்து இறைவேண்டுதலோடு நம்முடைய கடமைகளை நிறைவேற்றி இறைத் திட்டத்திற்கு நம்முடைய வாழ்வை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. அறிவர் S. ஏசு ரெனி பெல்

அவளுடைய குரல், அவளுடைய வருங்காலம்

Her Voice, Her Future

எண். 27: 1-7 *திப. 16: 13-15*
திபா. 8 *மாற்கு 5: 21-43*

சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், "தலித்தாகூம்" என்றார். அதற்கு, "சிறுமி, உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு" என்பது பொருள் (மாற்கு 5:41).

1970-ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையாருக்கு ஒரு சிறுமி கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். சாதாரண ஒரு அஞ்சல்அட்டையில் எழுதப்பட்ட கடிதம் அது. அதில் அந்த சிறுமி எழுப்பிய கேள்வி முக்கியமானது. ஆங்கிலேயர் காலகட்ட கல்வி சி.வி.ராமன், மேக்நாட் சாகா, சத்தியேந்திரநாத் போஸ் போன்ற அறிவியலாளர்களை உருவாக்கியது போல் நமது கல்வி முறையால் யாரையும் உருவாக்க முடிந்ததா? என்பது தான் அந்த சிறுமியின் கேள்வி. புதுடெல்லியில் உள்ள பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் சிலருக்கு பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் அந்த கடிதத்தை அனுப்பி வைத்து உண்மையில் அப்படி உருவானவர்கள் குறித்து அந்த சிறுமிக்கு எழுதி உதவுமாறு கேட்டிருந்தார். ஆனால் அந்த சிறுமியின் கேள்விக்கு கடைசி வரை பதில் வரவும் இல்லை. அந்த சிறுமி என்ன ஆனார் என்பதும் தெரியாது.

இன்று பெண் பிள்ளைகள், பெண்கள் எழுப்பும் பல கேள்விகளுக்கு அவர்கள் விடைகளை பெற்றுக் கொள்வதில்லை. யூதர்கள் தங்கள் சமுதாயத்தில் பெண்களை, குழந்தைகளை வெளிப்படையாகவே ஒதுக்கி வைத்தார்கள். இன்று நம் சமூகமோ வெளியே பெண்களை கொண்டாடும் சமூகமாக தம்மை முன்னிறுத்தி, மானசீகமாக எதிராக செயல்படுவது கண்கூடு. அவர்களின் வருங்காலத்திற்காக நாம் இணைந்து குரல் எழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம். நமக்கு தரப்பட்ட திருமறைப் பகுதிகளைக் கொண்டு திருமறையின் வெளிச்சத்தில் இதனை நாம் சிந்திப்போம்.

1. அவளுடைய குரலை ஆண்டவர் கேட்கிறார்:

நம் குரல், நம் விண்ணப்பம் கேட்கப்பட வேண்டும் என்பதை நாம் அனைவருமே எதிர்பார்க்கிறோம். விரும்புகிறோம். ஆண்டவரிடம் தன் குரலைக் கேட்கும்படி தாவீதும் மன்றாடுகிறார் (திபா. 5: 2). பெண் பிள்ளைகள், பெண்களின் குரல் கேட்கப்படுமா? என்ற கேள்விகள் எழாமல் இல்லை.

2015-ஆம் ஆண்டு போப் பிரான்சிஸ் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மனிலாவிற்கு சென்றிருந்தார். அங்கு ஒரு 12 வயது சிறுமி போப் அவர்களிடம் ஒரு கேள்வியை கேட்டார். என்னைப் போல் ஏராளனமான குழந்தைகள் பெற்றோரால் கைவிடப்படுகின்றனர். இதில் பெரும்பாலான பிள்ளைகள் பாலியியல் தொழிலில் தள்ளப்படுகின்றார்கள். சிலர் போதை கடத்தில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். கடவுள் இதை ஏன் அனுமதித்தார்? எங்களுக்கு ஏன் இந்த நிலைமை? என்று கண்ணீர் மல்க கூறினார் . . . அந்த சிறுமியின் கண்ணீருக்கு போப் ஆண்டவரால் பதில் அளிக்க முடியவில்லை. உணர்ச்சிப் பெருக்குடன் அவரை கட்டித் தழுவி ஆறுதல் கூறினார். அவர் பேசும்போது. "இந்த சிறுமியின் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. அவள் வார்த்தைகளை விட கண்ணீர் பேசுகிறது" என்றார்.

ஆனால் நீதி, உண்மை, நம்பிக்கை, ஆகியவற்றைப் பேசும் பெண்களின் குரலை கர்த்தர் ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. மனாசேயின் குடும்பத்தைச்சேர்ந்த செலோப்பிகாத்தின் புதல்வியர் மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா இவர்கள் மோசே, ஆசாரியராகிய எலயாசர், தலைவர்கள் அனைத்து மக்கள் முன்பாக தைரியமாய் வநது தங்கள் குரலை எழுப்பினர். ஒரு குடும்பத்தில் ஆண் வாரிசு இல்லாவிட்டால் அந்த குடும்பத்தின் பங்குகள் பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படாது. இதை யாரும் கேள்வி கேட்கவில்லை. ஆனால் செலோப்புகாத்தின் குமாரத்திகள் தைரியமாய் கேட்டனர் (எண். 37:4). அதே நேரம், இவர்களின் கேள்வி அமைதியான முறையிலும், சாதுர்யமாகவும் இருந்தது. இது அவர்களுக்கு மட்டுமல்ல, அந்த சமுதாயத்திற்கே மாற்றத்தை கொண்டு வந்தது. இந்தியாவிலும் பெண்களுக்கான சொத்துரிமை சட்டத்திற்கான பாதை பல கடினங்களை கடந்தே வந்திருக்கிறது.

2. அவளுடைய மனத்தை ஆண்டவர் திறக்கிறார்:

லீதியாவின் உள்ளம் திறக்கப்பட்ட நிகழ்வை நாம் காண்கிறோம். லீதியா என்பது அவரது பெயர் அல்ல. அவர் வாழ்ந்து வந்த ஊர் தியத்திரா என்றும், அந்த ஊர் லிதியா என்ற பகுதியிலுள்ளது என்றும் எனவே அவர் லீதியா என அழைக்கப்பட்டார் என்றும் சொல்லப்படுகின்றது. தியத்திரா துணி நெய்தலுக்கும், மண் பாண்டங்கள், வெண்கலப் பாத்திரங்களுக்கு பேர்பெற்றதாகும். லீதியா தம் சொந்த ஊரில் நெய்த இரத்தாம்பரத்துணிகளை பலமைல் தொலைவிலுள்ள பிலிப்பிப் பட்டணம் கொண்டு வந்து வியாபாரம் செய்து வந்தார்.

லீதியா செல்வ செழிப்பு நிறைந்த பெண்ணாயிருந்தார். நல்ல தொழில் இருந்தது. கை நிறைய சம்பாத்யம் இருந்தது. நிலையான ஒரு வாழ்க்கை இருந்தது. ஆனால், இவைகளின் மத்தியிலும் தான் எல்லாம் அறிந்தவர் என்றோ, செல்வம் உடையவர் என்றோ எண்ணாமல் இறைவார்த்தைகளை கேட்க அவரது உள்ளம் திறந்தே இருந்தது. பவுலின்

வார்த்தைகள் அவளை தொட்டபோது, அவள் வாதிடவில்லை, புறக்கணிக்கவில்லை. மாறாக, இதய வாசலை திறந்தே வைத்திருந்தார் (திப. 16: 14).

இறை வார்த்தைகளால் லீதியாவின் உள்ளம் திறக்கப்பட்டதும், அவரது கரங்கள் திறந்தன. அவரும் அவரது இல்லத்தில் இருந்தோரும் திருமுழுக்குப் பெற்றனர். அத்துடன் தனது வீட்டில் தங்கும்படி அன்புடன் அவர்களை அணைத்து ஏற்றுக்கொண்டார் (திப. 16: 15) இது மிகவும் முக்கியமான ஒன்று ஆகும்.

சீரிய மன்னனின் படைத்தலைவனாகிய நாகமான் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது, அங்கிருந்த அடிமைச் சிறுமியின் இருதயத்தை கர்த்தர் திறந்தார். அதன் பிறகுதான் நாகமானிற்கு ஒரு விடுதலையின் கதவு பிறந்தது (2 அரச. 15) இன்றும் உலகம் முழுவதும் இருக்கிற பெண் குழந்தைகள். பெண்கள் உள்ளங்கள் திறக்கும்படி கர்த்தர் அருளுகின்றார்.

3. அவளுடைய எதிர்காலம் ஆண்டவர் உருவாக்குகிறார்:

இன்று இளையோர் சமூகமாக இருக்கட்டும், பெண் பிள்ளைகளாக இருக்கட்டும். எல்லாம் முடிந்து விட்டது .. இனி எதுவும் ஆகாது . ..சாத்தியமே இல்லை போன்ற குரல்களை கேட்டுக் கொண்டே இருக்கலாம். யாயிரின் மகள் உயிரோடு எழுப்பப்பட்ட நிகழ்விலும் நாம் இதனைக் காணலாம். அவள் இனி இந்த உலகில் இனி இல்லை என்பது தான். இவ்வுலகப்பார்வை. உண்மை நிலையும் அதை தான் காட்டியது. ஆனால், இறைமகனின் பார்வையிலோ வித்தியாசமான உணர்வை வெளிப்படுத்துவதை காணமுடியும். அவள் மரிக்கவில்லை . . . அவள் உயிருடன் இருக்கிறாள் இது இறைப்பார்வை.

கடந்த 2012-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் தேதியன்று பலக் கனவுகளுடன் பள்ளிக்கு புறப்பட்டுச் சென்றுக் கொண்டிருந்தாள் அந்த 15 வயது சிறுமி. திடீரென்று அங்கு வந்த தீவிரவாதிகள் அந்த இளம் மொட்டை இரக்கமின்றி சுட்டனர். இரத்த வெள்ளத்தில் அவள் சரிந்ததும், அவள் இறந்துவிட்டாள் எனக் கருதி மகிழ்ச்சியுடன் கடந்துச் சென்றது அக்கூட்டம். அவள் செய்த தவறு என்ன? பழமைவாதம் நிறைந்த கூட்டத்தின் மத்தியில் பெண் பிள்ளையாக படிக்கச் சென்றது. அதற்காக குரல் கொடுத்தது. எழுதியது தான் அவர்களுக்கு தவறாகத் தெரிந்தது. ஆனால் அந்த சிறு பெண் உயிரோடு எழும்ப இறைவன் சித்தம் கொண்டார். அது மட்டுமல்ல முன்பை விட தீவிரமாய் உழைத்தாள். 2014-ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு இவர் வசமானது. அவர் வேறு யாருமல்ல பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த மலாலா யூசுப் சாய்.

இயேசு கிறிஸ்துவை நேரடியாகவே சென்று அழைத்தார் யாயிர். ஆனால், வரும் வழியில் 12 ஆண்டுகளாய் தீரா இரத்தப்போக்கினால்

கடினப்பட்டப் பெண் குணமாக்குதல் நிகழ்வு நடைபெற்றதால் தாமதமானது. இந்த நேரத்தில் அந்த சிறுபெண் இறந்துவிட்டச் செய்தியும் வந்து சேர்ந்தது.

ஆனால், எதைக் கண்டும் கலங்காத கிறிஸ்து யாயிர் வீட்டை அடைந்தார். அழுது கூக்குரலிட்ட மக்களை அதட்டிய கிறிஸ்து உள்ளே சென்று கனிவாய் சிறுமியை தொட்டார். தலித்தாகூம் என்று அவர் சிறுமியின் கரத்தை பிடித்துக் கொண்டேச் சொல்ல தூக்கத்திலிருந்து விழிப்பது போல எழுந்தாள் சிறு பெண்.

பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாலியல் சீண்டல்கள் நாள்தோறும் பெருகி வருகின்றன. 2015-ம் ஆண்டில் ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 21.1% ஆக இருந்த குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் விகிதம். 2016-ம் ஆண்டில் 24.0%, 2017-ம் ஆண்டில் 28.9, 2018-ம் ஆண்டில் 31.8%, 2019-ம் ஆண்டில் 33.2% என படிப்படியாக அதிகரித்து வருகிறது. இன்று மென்மேலும் பெருகி விட்டது. தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றச் சம்பவங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் 50.71% அதிகரித்துள்ளது.

பெண் குழந்தைகளுக்கான நாம் குரல் எழுப்ப அழைக்கப்படுகிறோம். அந்த குரல் கர்த்தரால் கேட்கப்படும். பெண் குழந்தைகளுக்காக உழைக்க, ஜெபிக்க நம் உள்ளம் திறக்கப்பட வேண்டும். மரித்த சிறுபெண் நிலை போல காணப்படும். இன்றைய பெண் குழந்தைகளின் வாழ்வு உயிரோடு எழுப்பப்பட வேண்டும். இதற்காய் இறைவேண்டல் ஏறெடுப்போம். உழைப்போம்.

அருள்திரு. M. கிதியோன்

அமைதியான உடன்வாழ்வு: சகிப்புத்தன்மையற்ற உலகில் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்தல்

Peaceful Co-existence: Sharing Christ's Love in a World of Intolerance

தானி. 6: 1-17 *கொலோ. 3: 12-17*
திபா. 120 *லூக். 9: 51-56*

"கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக!" (கொலோ. 3: 15).

சார்லி கிர்க், கிறிஸ்துவுக்காகவும் அவரது தூய்மைக்காகவும் தன்னை முற்றிலும் ஒப்படைத்து ஊழியம் செய்துவந்த அமெரிக்க ஊழியர். 10.09.2025 அன்று துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். அவர் கொலை செய்யப்படுவதற்கான காரணம்: கருக்கலைப்பு எதிர்ப்பு, துப்பாக்கி கட்டுப்பாடு போன்ற பழமைவாத நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாது கிறிஸ்தவ தேசியவாதத்திற்காக வாதாடினார். இளம் தலைமுறையினரின் பல சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் திருமறையின் அடிப்படையில் தெளிவான பதில்களை கொடுத்தார்.

செப்டம்பர் 10, 2025 அன்று வட்டார பள்ளத்தாக்குப்பல்கலைக்கழக வளாகத்தில் சார்லி நடத்தின பொதுவிவாத நிகழ்வில் பேசிக் கொண்டிருந்த போது சகிப்புத்தன்மையற்ற 22 வயது நிரம்பிய டைலர் ராபின்சனால் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டார்.

இயேசு கிறிஸ்து அமைதியின் அரசனாகவே வெளிப்பட்டார். யோவான் 14: 27-ல் "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல . . ." என்று அருள்நாதர் இயேசு சொல்லியுள்ளார். இன்றைய சமூகம் இயேசுவை பற்றிக்கொண்டு பெற்றுக்கொள்ளும் அமைதியை விட தங்களது விருப்பத்தின்படி திருமறைக்கு முரணான வழித்தடங்களை பின்பற்றி நடப்பதையே விரும்புகின்றது. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள திருப்பாடல் 120-ல் சங்கீதக்காரன் சொல்லும்போது வ.6-ல் சமாதானத்தைக் குலைப்பவர்களோடு, நான் நெடுநாள் வாழ வேண்டியதாயிற்று என்கிறார்.

சகிப்புத் தன்மையற்ற உலகில் கிறிஸ்துவின் அன்பை எவ்வாறு பகிர்ந்து அமைதியான சுகவாழ்வை நிலைநாட்ட முடியும் என்பதை இன்றைய திருமறைப் பகுதிகளிலிருந்து கற்றுக் கொள்வோம்.

1. கடவுளோடுள்ள ஒன்றிப்பு: *(தானியேல் 6: 10)*

தானியேல் தரியு ராஜாவான தேசாதிபதிகளுக்கு மேலாக பிரதானியாக ஏற்படுத்தப்பட்டார். தானியேல் தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளில் உண்மையுள்ளவனாயிருந்தான். யாதொரு குற்றமும் குறைவும் தானியேலிடம் காணப்படவில்லை. தானியேல் தேசாதிபதிகளுக்கும் பிரதானிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தபடியால் பொறாமை கொண்டு ராஜ்யத்தின் விசாரிப்பிலே குற்றப்படுத்த முகாந்தரம் தேடினார்கள். தானி. 6: 4-ல் எழுதப்பட்டுள்ளது. "... அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை". தானியேலின் வாழ்வு பிறருக்கு முன்பாக சாட்சியுள்ள வாழ்வாக காணப்பட்டது. குற்றப்படுத்த முகாந்தரம் தேடின மனுஷர், "தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம் பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள்." (தானி. 6: 11). நாம் வாழும் உலகம் பல்வேறு மதம், இனம்,கலாச்சாரம், அரசியல் கருத்துக்களால் பிரிந்துள்ளது. சமூக ஊடகங்களிலும், அரசியலிலும், குடும்பங்களிலும் ஏன் திருச்சபைகளிலும் கூட சகிப்புத்தன்மை குறைந்து வருகிறது. இத்தகைய காலகட்டத்தில், கிறிஸ்துவின் அன்பு அனைவரையும் இணைக்கும் பாலமாக அமைய வேண்டும். சகிப்புத்தன்மையற்ற உலகிலே நாம் தேவனோடு கொண்டுள்ள ஐக்கியமும் நம்முடைய நற்சாட்சியான வாழ்வும் அமைதியான சுகவாழ்விற்கு நேராக நம்மை நிச்சயம் நடத்தும்.

2. கிறிஸ்துவின் நற்செய்தி நம்மில் குடிகொள்வதாக: *(கொலோ. 3: 16)*

பவுலார் கொலோசெ பட்டணத்தின் விசுவாசிகளுக்கு சாட்சியின் வாழ்வைக் குறித்து எழுதும்போது, கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லவேண்டும். உங்கள் இருதயங்களிலே கர்த்தரை பக்தியுடன் பாடவேண்டும். எதை செய்தாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்து, பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார். மிக முக்கியமாக கிறிஸ்துவின் வசனம் பரிபூரணமாக வாசமாயிருந்தால் கிறிஸ்துவின் அன்பை நாம் பகிர்ந்து அமைதியான சுகவாழ்வை நிலைநாட்ட முடியும். கிறிஸ்துவின் வசனம் அனுதினமும் நம்மை பெலப்படுத்தும். தாவீதரசர் கூறுகையில் உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன் (சங். 119: 92) வேதத்தைப் பற்றிய தியானமும் அது தந்த மகிழ்ச்சியும் இல்லையென்றால் என் வாழ்க்கையில் ஏற்பட்ட துக்கங்களிலேயே நான் அழிந்து போயிருப்பேன் என்கிறார்.

ஜெமிமா ஜெசிக்க ரோட்ரிக்ஸ் தனது அசத்தலான விளையாட்டால் 2025 அக்டோபர் 30 நவிமும்பையில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கோப்பையின் அரை இறுதி கிரிக்கெட் விளையாட்டில் 134 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 127 ரன்கள் எடுத்து ஆஸ்திரேலியா அணியை வென்று

ஆட்டநாயகன் விருது பெற்றார். அந்த வெற்றியில் தருணத்தில் அவர் கூறின முதல் வார்த்தை "நன்றி இயேசுவே" அவர் சொன்ன மற்றும் ஒரு காரியம், நான் சோர்ந்து போன வேளையில் என் மனதிலே வந்த ஒரு திருவசனம், கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் (விப. 14: 14). கிறிஸ்துவின் வசனம் பரிபூரணமாக வாசமாயிருந்ததால் ஜெமிமா ஜெசிக்க ரோட்ரிக்ஸ்சால் மிகப் பெரிய சாதனை செய்ய முடிந்தது. மட்டுமல்ல கிறிஸ்துவின் அன்பை பகிர முடிந்தது.

3. இறையாவியால் நடத்தப்பெறுதல்: *(லூக்கா 9: 55)*

இயேசுவையும் அவரது சீஷர்களையும் சமாரியருடைய கிராமத்திலே ஏற்றுக்கொள்ளாதபோது வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களை அழித்து போட கட்டளையிடட்டுமா? என்று இயேசுவிடம் கேட்டனர். நம்மை ஏற்றுக்கொள்ளாதவர்கள், நம்மை விரோதிப்பவர்கள், நமக்கு எதிராக செயல்படுபவர்கள் நமது எதிரிகள் அவர்கள் அழிக்கப்படவேண்டும் என்பது சாதாரண மனித சிந்தனை. ஆனால் இயேசு தமது சீடர்களிடம் சொன்னது, நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டினார். மனுஷருடைய ஜிவனை அழிப்பது மனுஷகுமாரனுடைய சித்தம் அல்ல, இரட்சிப்பதே திட்டம் அதுவே சித்தம் என்றார்.

தேவ ஆவியினால் நடப்பட்டால் மட்டுமே நாம் சகிப்புதன்மையற்ற இந்த உலகில் கிறிஸ்துவின் அன்பை பகிர முடியும். இயேசுவின் போதனையும் ஊழியமும் தேவ ஆவியினால் நிரம்பினதாகவே காணப்பட்டது. மத். 5: 44-இல் நான் உங்களுக்கு சொல்கிறேன்; உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்றார்.

நம்மை பகைக்கிறவர்களை நம்மால் நேசிக்க முடிகிறதா? திபா. 27: 2-ஐ அடிப்படையாக கொண்டு எழுதப்பட்ட பாடலின் வரிகள்

> "தீமை செய்கின்றவர்கள் எனக்கு
> தீமை செய்ய விரும்புகையில்
> என் தேவன அருகில் வந்து என்னைக் காத்து நின்றார்
> என்னை பகைத்தவர்கள் உடனே அழிவார்கள்"

சிலுவை நாதர் இயேசுவின் அன்பினை அறிந்த பிள்ளைகளாகிய நாம் இறுதி வரியை சற்று மாற்றி "என்னை பகைத்தவர்கள் தேவனை அறிவார்கள்" எனப் பாடுகின்றோம்.

நாம் வாழும் உலகம் பல்வேறு மதம், இனம், கலாச்சாரம், மொழி போன்ற பாகுபாடுகளால் பிரிந்து காணப்படுகிறது. எல்லா இடங்களிலும் சகிப்புத்தன்மை குறைந்து வருகிறது. இத்தகைய சூழலில், கிறிஸ்துவின் அன்பினால் உலகை ஒன்றுபடுத்துவோம்.

அருள்திரு. P. சாம் பிளசிங்

எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு நல்லெதிர்நோக்குடன் இடர்பாடுகளைக் கடந்து நிற்றல்

Meeting of Mary with Elizabeth Transcending Adversity with Hope

எரே. 33: 10-16 *1 தெச. 3: 6-13*
திபா. 68: 11-20 *லூக். 1: 39-45*

"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்றார். (லூக். 1: 45)

இயேசுவின் வருகைக்கு நம்மை தகுந்த முறையில் தகுதிப்படுத்தும் காலம் திருவருகைக்காலம் ஆகும். திருவருகைக் காலத்தை "Advent" (அட்வெந்து) என்னும் ஆங்கிலச் சொல்லால் அழைப்பர். "Advent" என்ற சொல் "Adventus" என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து உருவான ஓர் சொல் ஆகும். இதனுடைய பொருள் வருகை என்பதாகும். Advent என்பது ஒரு குறிப்பிட்ட அல்லது சிறப்புடைய ஒருவரின் அல்லது ஒரு பொருளின் வருகையைக் குறிக்கும் (the arrival of a notable person or thing).

கிறிஸ்தவ இறையியலில் Advent என்பது கிறிஸ்துவின் வருகை அல்லது இரண்டாம் வருகையைக் குறிக்கிறது (the coming or the second coming of christ). இக்காலத்தை பழைய கிறிஸ்தவ வழக்கில் அதாவது தொடக்கக்காலத்தில் "ஆகமன காலம்" என்று அழைப்பர். அதாவது இறைவரின் வருகைக்கு மனதை, ஆன்மாவை தகுதியுள்ளதாக்கும் காலம் என்பது இதன் பொருள். காலப்போக்கில் இதன் பொருள் வளர்ச்சி பெற்று, திருவருகைக் காலம் என்பது, வரலாற்றில் மனிதராகப் பிறந்த, கடவுளின் மைந்தரான இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையை சிறப்பிக்கவும் (பிறப்பை) உலக முடிவில் அவர் மாட்சியுடன் வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கவும் நம்மை தகுதிப்படுத்துகின்ற/ஆயத்தம் செய்கின்ற காலமாக இக்காலம் கடைபிடிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ திருச்சபைகளின் நாள்காட்டிப்படி திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு (டிசம்பர் 25) நான்கு ஞாயிற்றுக்கிழமைக்கு முன் துவங்குகின்றது. மொத்தத்தில் கிறிஸ்துவின் நம்மைத் தகுதிப்படுத்தும் காலமாக இக்காலம் அமைகின்றது. இயேசுவின் இரண்டாம் வருகையோடு இக்காலத்தை தொடர்புபடுத்தி சிறந்த அறிவை இறைவார்த்தைகள் நமக்கு வழங்குகின்றன. எனவே, இக்காலத்தின் மாட்சியையும், பெருமையையும் புனிதத் தன்மையையும் உணர

அழைக்கப்படுகின்றோம். மேலும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பை, அது சுட்டிக்காட்டும் அன்பு, பகிர்வு, எளிமை, நட்பு முதலிய வாழ்க்கைப் பண்புகளோடு பொருளுணர்ந்து கொண்டாடும் காலமாய் திருவருகை காலத்தை கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

குதிரைப் படையை வலுப்படுத்த விரும்பிய ராஜா ஒருவர் 10 குதிரைகளை விலை கொடுத்து வாங்கினார். அரண்மனைக்கு கொண்டு வரப்பட்ட அக்குதிரைகளுக்கு ராஜாவின் பணியாளர்கள் வழியாக முறையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. பயிற்சி கடினமாக இருந்ததால் தாக்குப்பிடிக்க முடியாத இரண்டு குதிரைகள் அங்கிருந்து தப்பி காட்டுப் பகுதியில் சென்று வாழ்ந்தன. சில நாட்களில் மழையில்லாமல் காட்டில் புற்கள் காய்ந்தன. தப்பிச் சென்று வாழ்ந்து வந்த குதிரைகளின் உடல்கள் மெலிந்தன. ஆனால் ராஜ அரண்மனையிலுள்ள அனைத்து குதிரைகளும் ஆரோக்கியமாக இருந்தன. பணியாளர்கள் வழங்கிய கடினமான பயிற்சிக்கும், சில கடினங்களுக்கும் தங்களை அர்ப்பணித்ததால் அவைகள் நல்வாழ்வு பெற்றன. உபத்திரவங்கள், சோதனைகளைக் கண்டு பின்வாங்காமல் கர்த்தருக்காக உறுதியாய் நிற்பவர்கள கனம் பெறுவது அதிக நிச்சயமே!

மனித வாழ்வில் இன்னல்களும், இடர்பாடுகளும் வருவது இயல்பான ஒன்று. ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி பயணிக்கின்ற நாம், இன்னல்கள் இடர்பாடுகள் மத்தியிலும், கடவுளிடம் கொண்டுள்ள நம்பிக்கையிலும் அவரிடம் பாராட்டுகின்ற அன்பிலும், பலப்பட அழைக்கப்படுகிறோம். உன் வருங்காலம் வளமானதாயிருக்கும், உன் நம்பிக்கையும் வீண்போகாது (நீதிமொழிகள் 23: 18) என்ற திருவார்த்தையின் அடிப்படையில், நம் வாழ்வில் அனுதினமும் நாம் சந்திக்கின்ற இடர்பாடுகளை நல்எதிர்நோக்குடன் கூடிய நம்பிக்கையோடு கடந்து செல்ல திருமறை தருகின்ற போதனையை தரப்பட்டுள திருமறைப் பகுதிகளின் துணையோடு சிந்தனை செய்வோம்.

1. உள்ளங்கள் உறுதிப்படுத்தப்படும்:

இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு . . . உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக! (1 தெச. 3: 13).

திருச்சபை வளர கிறிஸ்தவ ஆன்மிக பண்புகளான நம்பிக்கை, அன்பு, தூய்மை, மனந்திரும்புதல் போன்ற குணநலன்கள் அவசியமானவை. பவுல், தான் நிறுவிய தெசலோனிக்கா திருச்சபையில் இத்தகைய பண்புகள் மக்களிடம் காணப்பட்ட இடர்பாடுகள் பலவரினும் நம்பிக்கையோடு இப்பண்புகளை பின்பற்றி செயல்படுங்கள் என்று வேண்டுதல் செய்கிறார். இப்பகுதியின் பின்புலம் குறித்து ஆராய்கையில், பவுல் தமது இரண்டாவது நற்செய்திப் பயணத்தின்போது தெசலோனிக்கா செல்கிறார். ஆனால் அங்கு அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக தெசலோனிக்காவை விட்டுப் பெரேயா வழியாக அவர் ஏதென்சு

(அத்தேனே) சென்றார். இதனால் அவர் தெசலோனிக்கிடம் இருந்து பிரிய நேரிட்டது. அந்த இடைப்பட்ட காலத்தில் தெசலோனிக்கத் திருச்சபையில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாகத் தெசலோனிக்கரின் விசுவாசத்திலே தளர்வு ஏற்பட்டது. எனவே உண்மை நிலையை அறிய திமொத்தேயுவைத் தெசலோனிக்காவிற்குப் பவுல் அனுப்பி வைக்கிறார். தெசலோனிக்கா வந்த திமொத்தேயு மக்களின் நம்பிக்கை வாழ்க்கையைப் பார்த்துவிட்டு பவுலிடம் திரும்பி வந்து எவ்வாறு அவர்கள் இன்னல்கள் நடுவிலும் நம்பிக்கையில் நிலையாய் இருந்தார்கள் என்று அறிவித்தார். இச்செய்தியை கேட்டு மகிழ்ச்சியடைந்த பவுல், அவர்களது விசுவாச வாழ்விற்காக, வளர்ச்சிக்காக இரவும் பகலும் ஜெபிக்கிறார்.

திருத்தூதர்கள் நற்செய்தியை அறிவிக்கின்றவர்கள். இங்கு நற்செய்திப் பணியில் ஏற்படும் பாடுகள், இடர்பாடுகள் மத்தியில், தெசலோனிக்கத் திருச்சபையினரின் உறுதியான இறைநம்பிக்கை திருத்தூதர்களுக்கு ஆறுதலாகவும், உற்சாகமூட்டுவதாகவும் அமைகிறது. ஏனெனில், ஒரு வேளை தெசலோனிக்கர் கிறிஸ்துவை விட்டு விலகியிருந்திருந்தால் பவுலும் அவர் தோழர்களும் அங்கு ஆற்றியிருந்த திருப்பணி முழுவதும் வீணாகியிருக்கும், அவ்வாறு வீணாகும் பட்சத்தில் அப்பணியினை மேற்கொண்ட திருத்தூதர்களும் இறந்து போனார்கள் என்று கருதப்பட முடியும். எனவே தான், தளர்வு ஏற்பட்ட போதிலும் தெசலோனிக்கத் திருச்சபையினர் இறைநம்பிக்கையில் உறுதியோடு இருப்பது இறந்துபோனதாகத் தங்களைக் கருதிய திருத்தூதர்களுக்கு புதிய வாழ்வு கிடைத்தற்குச் சமம் என்று குறிப்பிடுகிறார் (1 தெச. 3: 7, 8).

இடர்பாடுகள் களையப்பட பவுல் ஓர் கரிசனையுடைய பணியாளராக செயல்படுகிறார் எனலாம். ஏனெனில், தனக்கும் தெசலோனிக்கத் திருச்சபையினருக்கும் இடையே உள்ள அன்பு வளர்ந்து கொண்டே இருப்பது போல, நீங்களும் திருச்சபையினர் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்புறவில் வாழ, வளர வேண்டியது அவசியம் என பணிக்கிறார் (1 தெச. 3: 12). மரத்தை நடுகிறவர் அதற்குத் தண்ணீர் ஊற்றித் தேவையானவற்றைச் செய்தால்தான் அம்மரமானது வளர்ந்து, பூத்து, காய்த்து கனிதரும். அதுபோலவே, பவுலும் தாம் ஏற்படுத்திய திருச்சபையோடு தொடர்ந்து தொடர்பு கொண்டு, அவர்களின் விசுவாச வாழ்வு பற்றி அக்கறையோடு கேட்டறிந்து விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், அன்புறவில் வளரவும் அவர்களுக்கு உற்சாகமூட்டுகிறார். எனவேதான், இவர்களது உள்ளங்களை உறுதிப்படுத்துமாறு ஆண்டவரிடம் மன்றாடுகின்றார். ஏனெனில், ஆண்டவரின் இரண்டாம் வருகையின்போது திருச்சபையினர் (திருஅவையினர்) குற்றமற்றவராக இருக்க வேண்டும் என்பது பவுலின் விருப்பம். எனவேதான் 1தெச. 3: 13-இல் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக! என்று வேண்டுதல்

செய்கிறார்.

இங்கு தூய்மையில் குற்றமற்றவராக என்னும் சொற்றொடர் யூத சிந்தனையை தழுவியதாக கருதப்படுகிறது. குற்றமற்றவர் என்று கூறுகிறபோது, இதனை இரண்டு விதங்களில் புரிந்து கொள்ளலாம்.

1. "குற்றமற்றவர்", என்பது ஒருவர் தனது புறவாழ்வின் மூலம் தான் எவ்வித தவறும் செய்யாதவர் என்பதைக் குறிக்கிறது.

2. "தூய்மையாய்", என்பது புறவாழ்வை மட்டுமல்லாமல் அகவாழ்வையும் உள்ளடக்கியதாக உள்ளது. இது தந்தையாகிய கடவுளுடனும் இயேசுவிடமும் கொண்டுள்ள உறவைக் குறிக்கிறது.

ஆக குற்றமின்றித் தூய்மையாக இருத்தல் என்பது ஒருவர் வெளியுலக வாழ்விலும், உள்ளார்ந்த வாழ்விலும் நன்மதிப்புடன் வாழ்தல் என்பதாகும். செக்கரியா 14: 5-இல் கூறப்பட்டுள்ளது போன்று, இயேசுவும் தனது இரண்டாம் வருகையின்போது, ஆண்டவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை தூய்மையில் குற்றமற்றவர்களாகச் சந்திக்க நமது உள்ளங்கள் உறுதிப்பட்டதாயிருக்க விரும்புகிறார்.

பாவத்தில் வாழ்ந்து வந்த மக்கள் மனந்திரும்ப வேண்டி தனது கடினமான, கண்டிப்பான வாழ்த்தைகளின் வழி இறையுரைப்பணியினை செவ்வனே செய்து வந்தார் தீர்க்கர் ஏரேமியா. இங்கு இஸ்ரயேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று மீளவிருப்பத்தையும் நாடு புத்துயிர் பெறவிருப்பத்தையும் முன்னறிவிக்கிறார். தங்கள் உள்ளங்களை ஆண்டவருக்கு நேராக திருப்புகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற நல்வாழ்வைக் குறித்து அவர் கூறுகையில், மகிழ்ச்சி நிறைந்த மக்களால் நாடு குடியமர்த்தபடும்; மலைகள் மந்தைகளால் நிறைந்திருக்கும்; நீதியின் தளிர் (மேசியா) தாவீதினிடத்திலிருந்து முளைத்தெழுவார்; நீதியும் நேர்மையும் நாட்டில் அமையும் என்கிறார் (எரேமியா 33: 10-16) இத்தகைய நன்மைகளை பெற மக்கள் தங்கள் உள்ளங்களை கடவுளிடம் திருப்ப வேண்டும் என்கிறார். இத்திருவருகை காலத்தில் நமது உள்ளங்கள் தூய்மைக்கடுத்த காரியங்களில் உறுதிப்பட்டதாய் இருக்கவேண்டும்.

2. நம்பிக்கையினால் வாக்குறுதிகள் நிறைவேறும்:

ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் (லூக். 1: 45).

திருமறையின் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் கடவுள் பல்வேறு வாக்குறுதிகளை தமது அடியவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். தம்மை ஒரு வாக்குறுதிகளின் கடவுள் என்ற நிலையில்தான் வெளிப்படுத்தியிருக்கிறார் எனலாம் (God of promises). இதனை பல நிகழ்வுகளின் வாயிலாக கண்டுகொள்ள முடியும். ஆண்டவர் ஆபிராமை பார்த்து, உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆவி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்;

ஆசியாக விளக்குவாய் (தொ.நூ. 12: 2) என்றார். பாரத்தோடு ஜெபித்த அன்னாளுக்கு, ஆசாரியனாகிய ஏலி மூலம் கடவுள் வாக்குறுதி அளித்தார். மனநிறைவோடு செல் இஸ்ரயேலின் கடவுள் நீ அவரிடம் விண்ணப்பித்த உனது வேண்டுகோளைக் கேட்டுள்ளார் (1 சாமு. 1: 17). கலிலேயக் கடலோரமாய் நடந்து சென்ற இயேசு, கடலில் வலைவீசிக்கொண்டிருந்த பேதுருவையும், அந்திரேயாவையும் பார்த்து, என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் (மத். 4: 19) என்றார். இந்த வரிசையில் எலசபெத்து-மரியா சந்திப்புக்கு சான்று பகர்தலுக்கும் அடித்தளமாய் காணப்பட்டு கடவுளின் வாக்குறுதி ஆகும்.

யூத சமூகத்தில், பெண்கள் ஆண்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. அவர்கள் இரண்டாம் நிலையினராகத்தான் கருதப்பட்டனர். சமய, சமூக, குடும்ப வாழ்வில் போதிய உரிமையோ, இடமோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஒரு பொருளைப் போன்று நடத்தப்பட்டனர். இச்சூழலில்தான், வயது முதிர்ந்தவரும் கருவுற இயலாதவருமாயிருந்த எலிசபெத்துக்கும், திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த மரியாளுக்கும் கடவுளின் வாக்குறுதி வானதூதர் வழியாக வழங்கப்படுகிறது. ஒடுக்கப்பட்ட நிலைமையில், வலுவிழந்தவர்களை போல நடத்தப்பட்ட சூழ்நிலையில், நன்னம்பிக்கையூட்டும் நல்வாக்காக இறைவாக்குறுதி அருளப்படுகிறது. லூக். 1: 13-17 வரையுள்ள வசனங்களில் எலிசபெத்தின் கணவர் செக்கரியாவுக்கு கடவுளின் வாக்குறுதியைக் குறித்து காண்கின்றோம். அவ்வண்ணமே, லூக். 1: 30-37 வரையுள்ள வசனங்களில் மரியாவுக்கு கடவுளின் வாக்குறுதியைக் குறித்து காண்கின்றோம். கடவுளின் வாக்குறுதியை பதற்றத்தோடு கேட்ட மரியா, நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக். 1: 38) என்று நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்கின்றார்.

எலிசபெத்து-மரியா இருவருடைய வாழ்விலும் நடைபெற்ற நிகழ்வுகள் அவர்களின் குடும்பத்திலும், சமூகத்திலும் இகழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் நிச்சயமாகவே அடிகோலியிருக்கும். கடவுளின் வாக்குறுதியை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்ட மரியா, ஒப்படைத்த நிலையில் கடினமான சூழலிலும் எலிசபெத்தை சந்திக்க யூதேயா மலைநாட்டிலுள்ள ஒரு பட்டணத்திற்கு சென்றார் என்று காண்கின்றோம் (லூக். 1: 39). இந்த பட்டணம் நாசரேத்திலிருந்து 130 கிலோமீட்டர் தூரத்தில் காணப்பட்டது. அதாவது 81 மைல் தூரம் கொண்டது. 3 முதல் 5 நாள் பயண தூரம் கொண்ட பட்டணம் ஆகும். நெடுந்தூரம் பயணப்பட்டு சென்ற மரியாவுக்கு எலிசபெத்து அளித்த வரவேற்பும், காட்டிய தயவும் இருமடங்கு இனிமைபடைத்ததாய் அமைந்தது எனலாம். மரியா எலிசபெத்தை வாழ்த்தினார் (லூக். 1: 41-45). எலிசபெத்தின் வாழ்த்து செய்தியில், மரியா விசுவாசத்தின் காரணமாக நிறைவான பலனை பெறுவார் என்றும், அவருடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும்;

நம்பிக்கை வீண்போகாது கொடுக்கப்பட்ட வாக்குறுதியின்படி அவர் பிள்ளையை பெற்றெடுப்பார் என்றும் வாழ்த்தினார். ஆம், கடவுளின் வாக்குறுதிகள் மீது இருவருமே கொண்ட நம்பிக்கையின் வெளிபாடாய் நிந்தைகள் சவால்கள் மத்தியிலும், பிள்ளைகளை பெற்றெடுத்து மகிழ்கின்றனர்.

வாழ்வில் தாழ்வுற்ற நேரங்களிலும், சிறுமைப்படுத்தப்படும் நேரங்களிலும் கொந்தளிப்பான அனுபவங்கள் மத்தியிலும், இடர்பாடான வேளைகளிலும் கடவுளும், அவரது வாக்குறுதியுமே நமக்கு நம்பிக்கை என்பதற்கு எலிசபெத்து -மரியா இரண்டு பெண்களும் சான்றாக விளங்குகின்றனர்.

"உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். "நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்" (யோவான் 16:33b) என்ற திருவார்த்தையின் அடிப்படையில், உலகத்தை ஜெயித்த இயேசு தம் பெலனை, தம் பிள்ளைகளாகிய நமக்குள் வைத்திருக்கிறார். ஆதலால் நாம் மாறும் இவ்வுலகில் வரும் பாடுகள், வேதனைகள், உபத்திரவங்கள், நோய்கள் ஆகியவற்றை ஜெயிக்க முடியும் என தைரியப்படுத்துகிறார். இவ்வுலக வாழ்வில் ஆண்டவர் இயேசுவுக்காக எதையும் சகிக்க ஆயத்தமானவர்கள் நட்சத்திரங்களாய் பிரகாசித்து வருகிறார்கள். அநேக மிஷனெரிகள் கிறிஸ்து இயேசுவுக்காக உபத்திரவத்திலும் உறுதியாய் நின்றனர்; கனப்படுத்தப்பட்டனர். நாமும் இத்திருவருள் காலத்தில் நல் எதிர்நோக்குடன் இடர்பாடுகளை கடந்து செல்ல இயேசுவுக்காக தைரியமாய் நிற்போம். தெசலோனிக்கா திருச்சபை போன்று, எலிசபெத்து-மரியா போன்று நல் எதிர்நோக்குடன் இடர்பாடுகளை கடந்து கிறிஸ்துவின் வருகைக்காய் நம்மை அர்ப்பணிப்போம்!

அருள்திரு. P. பால் ஓய்சர் ஷெல்லி

இறைவார்த்தையால் வழிநடத்தப்பெறுதல்: சரியான வழியைப் பகுத்தறிதல்

Guided by the Word: Discerning the Right Path

யோசு. 24: 15-21 *கலா. 1: 11-17*
திபா. 119: 105-112 *லூக். 1: 57-66*

"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!
(திபா. 119: 105)

வருகையின் காலம் மிகவும் மகிழ்வான காலம். இந்த காலத்தில் மானிடராக வந்த வார்த்தையாகிய இயேசுவை முதன்மைபடுத்தவும், இறைவார்த்தை அடங்கியுள்ள திருவிவிலியத்தை முக்கியப்படுத்தவும், இறைவார்த்தை சார்ந்த வாழ்வை முன்னெடுத்துச் செல்லவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

சுவாமி விவேகானந்தர், "இறைவார்த்தைகள் உண்மையானவை. மேலும் இந்த வார்த்தைகள் கடவுளின் இதயத்தில் இருந்து வெளிவந்தவை" என மத்தேயு 7: 7-ஐ குறிப்பிட்டுக் கூறுகிறார். இறையியலாளருமான டீட்ரிச் பான்ஹோஃபர் என்பவர், "திருவிவிலியம் உண்மையானது மற்றும் போதுமானது. அது நம்மை மீட்புக்கு ஞானமுள்ளவர்களாகவும், தேவைக்கேற்ப நம்மை வடிவமைக்கவும் வல்லது" என்று கூறுகிறார்.

இறைவார்த்தை சரியான வழியில் நம்மை நடத்துகிறது என்பது நிறைவான உண்மை. திருப்பாடல்கள் 119-ஐ எழுதிய ஆக்கியோன் தனது வாழ்வில் வந்த துன்பம் மற்றும் நெருக்கடிகளில், இறைவார்த்தை பலத்தையும், ஆறுதலையும் தருகிறது என்றும், சரியான வழியில் வழிநடத்துகிறது என்பதை இன்றைய திருவிவிலியப் பகுதிகள் வழியாகச் சிந்திப்போம்.

1. இறைவரைத் தேட வழிநடத்துகிறது: *(யோசு. 24: 18)*
(God's Word guides a person to seek God)

யோசுவா, இஸ்ரயேலின் எல்லாக் குலங்களையும் செக்கேமில் கூடிவரப்பண்ணி, இஸ்ரயேலின் முதியோர், தலைவர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் என அனைவரும் இணைந்து நின்றனர். மக்களிடம் - முற்காலத்தில் தேராவின் நாட்களில் பிற தெய்வ வழிபாடு காணப்பட்டது. அதன்பின், இஸ்ரயேலின் கடவுள் ஒவ்வொரு காலத்திலும் இஸ்ரயேலரை நடத்தினார், தப்புவித்தார், நல்ல நாட்டைத் கொடுத்தார். எனவே,

இஸ்ரயேலரே, நீங்கள் ஆண்டவரைத் தேடுங்கள், ஆண்டவரைப் பணியுங்கள், வணங்குங்கள் என்று இறைவார்த்தையை எடுத்துரைத்தார். ஆண்டவரைத் தேடினால் வாழ்வு உண்டு என்பதையும் ஆண்டவரைத் தேடாமற்போனால், அந்நிய தெய்வங்களை வணங்கினால், தீமை உண்டு என்பதையும் குறிப்பிட்டார். எனவே, இஸ்ரயேல் மக்கள், இந்த வார்த்தைகளைக் கேட்டு, "நாங்கள் ஆண்டவரையே தேடுவோம் - வணங்குவோம்" என்றனர். ஆம்! இறைவார்த்தை இஸ்ரயேல் மக்களை இறைவரைத் தேட வழிநடத்தியது. இது சரியான வழி அன்றோ!

இன்றைய உலகில் வாழுகின்ற இறைமக்களாகிய நாமும், நமது பிள்ளைகளும் இறைவரைத் தேடவேண்டும். நாம் தேடினால், ஆண்டவரும் நமக்கு எதிர்படுவார். நம்மை ஆசீர்வதிப்பார். ஆண்டவரையும், அவரது வார்த்தைகளையும், மறந்தால், ஆண்டவரும் நம்மையும், நம் மக்களையும் மறந்துவிடுவார் (ஓசே. 4: 6). ஆலயத்தில் ஆண்டவரைத் தேடுதல் என்பது தற்காலத்தில் குறைந்து வருகிறது. தொலைக்காட்சியிலும், அலைபேசியிலும் ஆண்டவரைத் தேடும் நிலை அதிகரித்து வருகிறது. பயபக்தியுடன் ஆண்டவரைத் தேடுவது குறைந்து கடமைக்காக தேடும் நிலை மேலோங்கி வருகிறது. இவற்றைத் தவிர்த்து, இறைவார்த்தையைப் படிப்போம் (வாசிப்பது அல்ல) - கேட்போம் - தியானிப்போம். இறைவார்த்தை நம்மைச் சரியான வழியில் ஆண்டவரைத் தேட வழிநடத்தும்.

இலண்டனைச் சேர்ந்த ஜான்ஹென்றி நியுமென் என்பவரின் தந்தை செல்வரான வங்கி அதிகாரியாவார். ஆங்கிலச் சபையின் போதகராக இறைப்பணி செய்தார். 1833-இல் இத்தாலி சென்றார். அங்கு நோய்வாய்ப்படுகிறார். பின் இங்கிலாந்து செல்ல யோசிக்கிறார். அப்பொழுது ஆரஞ்சுப் பழங்களை ஏற்றிச் சென்ற ஒரு பாய்மரக்கப்பலில் பயணமாகிறார். சரியான திசையில் காற்று வீசாததால், மத்திய தரைக்கடலில் போனிபேஸியோ என்ற ஜலசந்தியில் ஒரு வாரம் காத்திருக்க நேரிடுகிறது. அங்கிருந்து ஆண்டவரைத் தேடுகிறார். வணங்கி மன்றாடுகிறார். இறைவேண்டலின் பாடலான "காரிருளில் என் நேச தீபமே நடத்துமே..." என்று பாடுகிறார். ஆண்டவரைத் தேடின ஜாண் ஹென்றி நியுமென் பாதுகாப்பாக இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். ஆம்! ஆண்டவரைத் தேடுவது நமக்கு நன்மையைத் தரும் என்ற உண்வுடன் பற்றுறுதி வாழ்வில் பணிப்போம்.

2. இறைச்செய்தியை அறிவிக்க வழிநடத்துகிறது: *(கலா. 1: 16)*
(God's Word guides a person to proclaim God's Message)

ஆண்டவர் இயேசுவைப் பற்றிய செய்திதான் ஒவ்வொரு பற்றுறுதியாளரின் கடமை (மாற். 16: 15; 1 கொரி. 9: 16). இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளையும் இதுதான். திருத்தூதராகிய பவுல் இயேசுவைச் சந்திப்பதற்கு முன், கடவுளின் திருச்சபையை மிகக் கொடுமையாகத் துன்புறுத்தி ஒழிக்க முயன்றார். யூத நெறியில் மிகவும்

வைராக்கியமுள்ளவராகச் செயல்பட்டார். ஆனால், தமஸ்குவின் பாதையில் பவுலைச் சந்தித்த ஒளி, அவருடன் பேசியது. அவர் கேட்ட ஆண்டவரின் வர்த்தை, பவுலை பிற இனத்தவருக்கு இறைச்செய்தியை அறிவிக்கும் ஊடகமாய் வழிநடத்தியது. எத்துணை வியப்பு! சரியான வழியில் நடக்காத பவுலை, இறைவார்த்தை நற்செய்தியை அறிவிக்க வழிநடத்தியது. பவுல் என்பவர் திருத்தூதரானார் - அனைத்து இடங்களுக்கும் சென்றார். அனைவருக்கும் இறைச்செய்தியைக் கூறினார். நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு! என்றார். இறைச்செய்தியாகிய நற்செய்தி - நல்லவராக்கும் - நல்லதைத் தரும். இன்றும், இன்னமும் நற்செய்தி தெரிவிப்பவர்கள் அதிகம் வேண்டும், அவசியம் வேண்டும், அவசரமாக வேண்டும் (லூக். 10: 2). நான்கு தொழுநோயாளிகள் அறிவித்த நற்செய்தி, சமாரியா மக்களின் பட்டினியைப் போக்கியது (2 அர. 7: 9). இஸ்ரயேலின் சிறுமி தெரிவித்த நற்செய்தி, சிரியா மன்னனின் படைத்தலைவரான நாமானின் கொடிய நோயை மாற்றியது (2 அர. 5: 3). சமாரியப் பெண் தெரிவித்த நற்செய்தி, கிராமத்தவரை விசுவாசிகளாக்கியது (யோவா. 4: 39). இறைவார்த்தை நம்மை, இறைவனின் செய்தியாகிய நற்செய்தியைத் தெரிவிக்கும்படி சரியாக வழிநடத்துகிறது. நற்செய்தி மனிதரில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. விண்ணகத்துடன் இணைக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையான கன்னங்குளம் ஊரைச் சார்ந்தவர் திரு. சிவமூர்த்தி ஆவார். தென்திருவிதாங்கூரில் காணப்பட்ட அடக்குமுறை, இங்கேயும் பரவியிருந்த காலமது. உயர்குடி மக்களால் சிவமூர்த்தி என்பவரும், அவரது சமூகமும் பாதிக்கப்பட்டார்கள். விளைபொருட்கள் அனைத்தையும் குறிப்பிட்ட மக்கள் தங்கள் அடியாட்களுடன் வந்து, வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொண்டு சென்றுவிடுவர். இதை சிவமூர்த்தி எதிர்த்தார். இந்த அடக்கு முறை எப்படியாகிலும் ஒழிக்கப்பட வேண்டுமென வேட்கை கொண்டார். இச்சூழ்நிலையில் பாளையங்கோட்டையில் இருந்த கனம் W.T.ரிங்கல்தெளபே அவர்களைச் சந்தித்து நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டார். W.T.ரிங்கல்தெளபே அவர்கள் பகிர்ந்த நற்செய்தி சிவமூர்த்தியிடம் மாற்றத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து ரிங்கல்தெளபே அவர்கள் மயிலாடியில் தங்கியிருந்தபோது, எல்லா இடங்களுக்கும் சென்று நற்செய்தியைக் கேட்டார். இதன் விளைவாக சிவமூர்த்தி ஜெபமூர்த்தி என திருமுழுக்கு பெற்றார். 1810-இல் கன்னங்குளத்தில் திருச்சபை உருவானது.

"எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்,
என்னைப் போல் அலைந்திட கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆள்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் தரவேண்டும்"

என்ற பாடல் வரிகளின் செய்தியை உணர்ந்து, நற்செய்தி அறிவிப்பது எத்துணை தேவையானது என்பதைப் புரிந்து செயல்படுவோம்.

3. இறைத்திட்டம் நிறைவேற்ற வழிநடத்துகிறது:
(God's Word guides a person to execute God's Plan)

செக்கரியாவும் எலிசபெத்தும் யூதேய மலைநாட்டில் வாழ்ந்த குடும்பத்தார் ஆவர். இருவரும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தனர். ஆனால், வானதூதர் மூலமாக இறைவார்த்தை அவர்களுக்கு வெளிப்பட்டது (லூக். 1: 13). நாட்கள் நகர்ந்தன. எலிசபெத்து, அழகான ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அப்பொழுது, சுற்றி வாழ்ந்தவர்களும், உறவினரும் மகிழ்ச்சி அடைந்தனர். எட்டாம் நாளில் அவர்கள் எல்லாரும் குழந்தைக்கு விருத்தச்சேதனம் செய்ய வந்தனர். குழந்தையின் தந்தையின் பெயராகிய "செக்கரியா" என்ற பெயரை குழந்தைக்குச் சூட்ட முற்படுகின்றனர். ஆனால், இறைப்பணி செய்த குடும்பத்தின் அங்கமாகிய எலிசபெத்து, இறை வார்த்தையின்படி "வேண்டாம், அதற்கு யோவான் எனப் பெயரிட வேண்டும்" என்று கூறினாள். மீண்டும் அந்த உறவுகள், செக்கரியாவிடம், "குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?" என்று சைகை காட்டி கேட்டபொழுது, அவரும் "யோவான்" என்று எழுதுபலகையில் பெயர் எழுதினார். ஆம்! இறைவார்த்தை செக்கரியா-எலிசபெத்து தம்பதியரை இறைத்திட்டம் நிறைவேற்ற வழிநடத்தியது. அந்த யோவான், எரிந்து பிரகாசிக்கிற விளக்காக காணப்பட்டார். அநேகர் மனம் திரும்பினர்.

இறைத்திட்டம் செய்ய பலர் முன்வருவதில்லை. முன்வருபவரையும் முடக்கிவிடும் காலம் இது. ஆனால், இறைமக்களாகிய நாம் இறைத்திட்டம் செய்ய அழைக்கப்பட்டவர்கள். நம் சுயதிட்டம் மற்றும் பிற மனிதரின் திட்டம் நிறைவேற்றத் துணிந்து செயல்படாமல், இறைத்திட்டம் செய்ய துணிந்து செயல்பட வேண்டும். தாவீது அரசர் இறைவார்த்தையின் வழிநடத்துதல் மூலமாக, இறைத்திட்டத்தை நிறைவேற்றினார் (தி.ப. 13: 22). இவரது தலைமுறையில் "உலகின் மீட்பர் இயேசு" தோன்றினார். நாமும் இறைத்திட்டம் நிறைவேற்ற வேண்டும். அது நமக்கும், நம் தலைமுறைக்கும் இறையாசியைப் பெற்றும் தரும். இறைத்திட்டம் நிறைவேற்றிய Dr. வில்லியம் கேரி, ஏமி கார்மைக்கேல் அம்மையார், அன்னை தெரசா போன்றோரைப்போல நாமும் இறைத்திட்டம் நிறைவேற்றி கடவுளின் மாட்சியைச் சேர்ப்போமாக. இறைவரின் சாயலில் படைக்கப்பெற்ற நம் உடன் வாழ சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை செய்வோம்.

இறைவார்த்தை - இறைவரைத் தேட வழிநடத்தும்
- இறைச்செய்தியை அறிவிக்க வழிநடத்தும்
- இறைத்திட்டம் நிறைவேற்ற வழிநடத்தும்

நாமும், இறைவார்த்தையில் வழிநடத்தப்படுவோம்! வழிநடப்போம்!! வழிநடத்துவோம்!!!

அருள்திரு. அறிவர் P. பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ்

எதிர்பாராதோரைத் தழுவிக்கொள்தல்

Embracing the Unexpected

நீத. 6: 11-24 *திப. 9: 10-19*
திபா. 43 *மத். 1: 18-25*

"என் நெஞ்சே! நீ நம்பிக்கை இழப்பது ஏன்? நீ கலக்கமுறுவது ஏன்? கடவுளையே நம்பியிரு" (திபா. 43: 5).

மனித வாழ்வு என்பது மனிதனின் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது. நம் வாழ்வு இப்படித்தான் இருக்கும் என்று எவரும் கணக்கிடமுடியாது. மனித வாழ்வில் உயர்வு-தாழ்வு, வெற்றி-தோல்வி, இன்பம்-துன்பம், நிறைவு-குறைவு இவைக்ள எப்போது வேண்டுமென்றாலும் சந்திக்கலாம். நம் எண்ணங்களுக்கு மாறாக நாம் எதிர்பார்க்காதது நடந்தாலும், கலக்கமடையாமல் கடவுள் மீது நம்பிக்கை வைத்து அதை ஏற்றுக்கொண்டு வாழ கடமைப்பட்டுள்ளோம். என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல என்றார் ஆண்டவர் (எசா. 55: 8).

ஈசாயின் மகன் தாவீது ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பனாக இருந்தவர். இவரிடம் ஒரு படைத்தலைவனுக்கும், ஆட்சியாளருக்கும் உரிய மதிநுட்பமோ, மனத்துணிவோ இல்லை. இஸ்ரயேலின் அரசராக வரவேண்டும் என்ற எண்ணமும் எதிர்பார்ப்பும் சிறிது கூட இல்லை. ஆனால் ஆடுகளோடு வாழ்ந்து கொண்டிருந்த தாவீதை சாமுவேல் இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் அரசராக்கினார் (1 சாமு. 16: 13). வாழ்வில் நிந்தனைகளையும் அவமானங்களையும் அனுபவித்து மகவாடலோடும், கவலையோடும் காணப்பட்ட அன்னாளுக்கு எதிர்பாராத நேரத்தில் சாமுவேல் என்ற பிள்ளையை ஆண்டவர் கொடுத்தார். அருந்செயல் செய்த ஆண்டவரை புகழ்ந்து அன்னபாள் பாடின நன்றிப்பாடலில் உலகினரால் இழிவாக கருதப்படும் அனைவரையும் அவர் உயர்த்தி, அரியாணையை அவர்களுக்கு கொடுக்கிறார் என்றார் (1 சாமு. 2: 8). யோபு பக்தன் ஒரு பணக்கார விவசாயி. இவருக்கு பதது பிள்ளைகளும் ஆயிரக்கணக்கான ஆடுகளும், ஓட்டகங்களும், வீட்டு விலங்குகளும் இருந்தன. இவர் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலத்தில் எதிர்பாராத, ஏற்றுக்கொள்ள முடியாத பெரும் துன்பங்கள் இவரை ஆட்கொண்டது. பிள்ளைகள் மற்றும் செல்வங்கள் அனைத்தையும் இழந்தார். இத்தருணத்தில் பெரும் துன்பத்தை ஏற்றுக்கொண்டவராய் ஆண்டவர் அளித்தார்; ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக! என்றார் (யோபு 1: 21).

சாது கொச்சு குஞ்ஞு என்ற உபதேசியார் ஒரு பெரும் இழப்பை சந்தித்தார். அதாவது அவருடைய குழந்தை மரித்துபோனது. அந்த

பெரும் இழப்பை ஏற்றுக்கொண்டவராய் ஒரு பாடல் ஒன்றை பாடினார்.

துக்கத்தின்றே பான பாத்றம்
கர்த்தாவென்றே கையில் தந்நால்
சந்தோஷத்தோடது வாங்கி
அல்லேலூயா பாடிடும் ஞான்

நம் வாழ்வில் எதுவும் நடக்கலாம். நாம் சிறிது கூட எதிர்பார்க்காதது நடக்கலாம். எது நடந்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1: 37) என்ற மரியாவை போல வாழ அழைக்கப்படுகிறோம்.

1. அடிமைத்தளைகளை அகற்ற கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொள்ளல்: (நீத். 6: 12)

"ஆண்டவரின் தூதர் அவருக்கு தோன்றி, வலிமைமிக்க வீரனே ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்" என்றார்)

இஸ்ரயேல் மக்களை மிதியானியர் அடிமைப்படுத்தி ஆட்சி செய்த காலத்தில் அதிக கொடுமைகளை அனுபவித்தனர். இஸ்ரயேலர் தங்களை மிதியானியரிடமிருந்து காத்துக்கொள்ள மலைபிளவுகளையும், குகைகளையும், கோட்டைகளையும் தங்கள் வாழ்விடமாக அமைத்துக் கொண்டனர். இவர்களின் விளைச்சலை அழித்து, மிருக ஜீவன்கள் மற்றும் அன்றாட உணவினை கூட கொள்ளையிட்டனர். தங்களுக்கான அன்றாட உணவை பாதுகாப்பது பெரும் சவாலாகவே இருந்தது. கிதியோன் மிதியானிடமிருந்து கோதுமையை பாதுகாக்க திராட்சை ஆலையை பயன்படுத்தினார் (நீத. 6: 11). இப்படி மிதியானியருக்கு பயந்து இஸ்ரயேலர் வாழ்ந்த காலத்தில் இவர்களை மீட்டெடுக்க கடவுள் கிதியோனுக்கு அழைப்பு கொடுத்தார் (நீத. 6: 12). ஆனால் கிதியோன் தனது வாழ்வில் மிதியானியரின் அச்சுறுத்தலின் அனுபவங்களோடு தனது இயலாமையை கடவுளிடம் சொன்னார். அப்போது கடவுள் என்ன சொன்னார் என்றால் (நீத. 6: 14)-இல் உனக்கு இருக்கும் இதே ஆற்றலுடன் போ. மிதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நான் அல்லவா? என்றார். அப்போது கிதியோன் ஆண்டவரே நான் சிறியவன். என் குடும்பமும் எளிய குடும்பம் என்று தனது தகுதியின்மையை இயலாமையை ஆண்டவரிடம் சொல்லிக்கொண்டே இருந்தார். ஆண்டவர் சொன்னார் "நான் உன்னோடு இருப்பதால் நீ தனி ஒரு ஆளாய் மிதியானியரை வெல்வாய்" என்றார். என்றாலும் கிதியோனுக்கு முழுமையான நம்பிக்கை வரவில்லை. கிதியோன் சிறிது தைரியம் பெற்ற நிலையில் ஆண்டவரே என்னோடு பேசுகிறவர் நீர்தான் என்றால் எனக்கு ஒரு அடையாளம் காட்டும் என்றான். ஆண்டவர் அவருக்கு அடையாளத்தையும் காண்பித்தார். இப்போது தான் கிதியோன் ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டர் (நீத. 6: 17-24). பிற்பாடு இஸ்ரயேலை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கும் கடவுளின் கருவியாய் செயல்பட்டார்.

ஆளுகின்றவர்களாலும், அதிகாரத்திலிருப்பவர்கினாலும், சில ஆதிக்க சக்திகளாலும் இன்றும் பலர் ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு அடிமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் விடுதலை வாழ்வு பெற ஆண்டவர் விரும்புகிறார். அவர்களை விடுதலையாக்க ஆண்டவர் நம்மையும் அழைக்கிறார். ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அவர்தரும் ஆற்றலோடு அடிமைத்தனங்களை அகற்றும் கருவிகளாவோம்.

2. இறைத்திட்டம் வெளிப்பட கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொள்ளல்: *(மத். 1: 18, 24)*

மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும்முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார்.

யோசேப்பு ஆண்டவரின் தூதர் தமக்கு பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.

இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்ட ஒன்று. இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவார் *(எசா. 7: 14)*. இந்த இறைத்திட்டத்திற்கு யோசேப்பும் மரியாளும் அர்ப்பணிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். இவர்கள் கூடி வாழும் முன் மரியாள் கருவுற்றிருந்தாள். தூய ஆவியரால் கருவுறும் பேறு மரியாளுக்கு கிடைத்தது. இது யோசேப்பின் பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனென்றால் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது உண்மைதான். ஆனால் இன்னும் கூட வாழவில்லை. யூத சட்டப்படி ஒரு பெண் ஒழுங்குக்கு மாறாக கருதரிக்கப்பட்டால் அப்பெண் கல்லால் எறிபட்டு சாகவேண்டும் *(இணை சட்டம் 22: 22-24)*. யோசேப்பு நேர்மையாளரானபடியால் மரியாவை இகழ்ச்சிக்கும் தண்டனைக்கும் உட்படுத்தாமல், இந்த உறவிலிருந்து விடுபட விரும்பினார் *(மத். 1: 19)*. ஆனால், ஆண்டவரின் தூதனுடைய அழைப்பு அவரை இந்த உறவில் நீடிக்க செய்தது *(மத். 1: 20)*. இது முழுமையாக ஆண்டவரின் திட்டம் என்பதை உணர்ந்துகொண்ட யோசேப்பு ஆண்டவர் தூதர் வழியாக கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டார் *(மத். 1: 24)*. யோசேப்பு இறைத்திட்டத்திற்கு தன்னை முழுமையாக ஒப்படைத்தபடியால் உலக மீட்பருக்கு இயேசு ன்று பெயரிடும் உரிமையும் நாட்டின் சட்டப்படி யோசேப்பின் மகன்இயேசு என்ற உரிமையும், யோசேப்பு தாவீது குலத்தில் தோன்றியதால் இயேசு தாவீதின் மகன் என்ற உரிமையும் பெற்றுக் கொண்டார்.

ஆண்டவர் நம் அனைவரையும் ஒரு திட்டத்தோடு படைத்திருக்கிறார். அவருடைய திட்டம் நிறைவேற இறைபயத்தோடும், நேர்மையோடும் நம் வாழ்வை அமைத்து அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு அவரது திட்டத்தை நிறைவேற்றுவோம்.

3. நற்செய்தியை அறிவிக்க கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொள்ளல்: *(திப. 9: 15)*

பிற இனத்தாருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்.

சவுல் யூத சமயத்தின் மீது வெறிகொண்டு வாழ்ந்தார். திருச்சட்டங்கள் அனைத்தையும் யூத திருச்சட்ட ஆசிரியரான கமாலியேலிடமிருந்து தெளிவாக கற்றிருந்தார். அதிக செல்வமும், செல்வாக்கும் உடையவராகவும் கொடூர மனமுடையவராகவும் காணப்பட்டார். இயேசு கிறிஸ்துவையும் அவரை ஏற்றுக்கொண்டவர்களையும் வெறுத்தார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களை தண்டிக்கும் அதிகாரத்தை தலைம குருக்களிடமிருந்து பெற்றிருந்தார். ஒருமுறை கிறிஸ்தவர்களை துன்புறுத்த தமஸ்கு சென்றபோது வானத்திலிருந்து ஒரு ஒளி அவரை கீழே விழச்செய்தது. அத்தருணத்தில் "சவுலே சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" என்று ஆண்டவர் சவுலோடு பேசினார். அப்போது சவுல் ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டார். அப்போது ஆண்டவர் சொன்னார் "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" *(அப். 9: 5)*. உடனே சவுல் தரையிலிருந்து எழுந்தார். அவரது கண்கள் திறந்திருந்தது ஆனால் பார்வையற்றவரானார். அவரோடு பயணம் செய்தவர்கள் அவரை தமஸ்குவில் கொண்டு சேர்த்தனர். தமஸ்குவில் ஆண்டவரின் பணியாளரான அனனியா என்னும் சீடர் ஒருவர் இருந்தார். இவரிடம் ஆண்டவர் நீ தமஸ்குவிலுள்ள நேர்தெரு என்னும் இடத்திற்கு போய் சவுலை தேடு என்றார். உடனே அனனியா ஆண்டவரே இவன் உம்முடைய பெயரை சொல்கிறவர்களை கைதுசெய்ய தலைமை குருக்களிடமிருந்து அதிகாரம் பெற்று இங்கே வந்திருக்கிறான் என்றார். அப்போது ஆண்டவர் அனனியாவிடம் என்ன சொன்னார் என்றால் அவன் பிற இனத்தாருக்கும், அரசருக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் என்னுடைய பெயரை எடுத்துச் செல்ல நான் தெரிந்துகொண்ட கருவியாய் இருக்கிறான் *(திப. 9: 15)*. அனனியா ஆண்டவரின் வார்த்தையின்படி சவுல் இருந்த வீட்டுக்கு சென்று இறை ஆற்றலோடுஅவரை தொட்டபோது சவுலின் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவை விழுந்தது. அந்த நிமிடமே இழந்த பார்வை பெற்றவராய் திருமுழுக்கு பெற்றார் *(திப. 9: 17,18)*. இந்த சவுல் ஆண்டவரை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல சில நாட்களில் நற்செய்தியாகிய இயேசு கிறிஸ்துவை அறிவிக்கும் நற்செய்தியாளரானார் *(திப. 9: 20)*. ஆண்டவரின் அழைப்பு குறித்து சவுல் என்ன சொன்னார் என்றால் இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியக்காரனாக சான்றுபகர அவர் என்னை அழைத்திருக்கிறார் *(திப. 26:16)*. நற்செய்திக்கான அழைப்பு சவுல் எதிர்பார்த்த ஒன்று அல்ல. அவருக்கு நடந்த எதிர்பாராத நிகழ்வுகளின் வழியாக ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். நற்செய்திக்கான

அழைப்பை பெற்ற சவுல் தனது கல்வி, குலம், செல்வம், புகழ், அதிகாரம் எல்லாவற்றையும் குப்பையாக கருதினார் (பிலி. 3: 8). நற்செய்தி பணியில் இருந்த கடினங்களையும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு (2 கொரி. 11: 22-29), அனேக இடங்களில் நற்செய்தி பரவுவதற்கும் திருச்சபைகள் உருவாவதற்கும் காரணமானார்.

நாம் அனைவரும் நற்செய்தி அறிவிக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நமது குமரி மண்ணில் மகாராசன் வேதமாணிக்கம், Rev. றிங்கல் தெளபே இவர்கள் வழியாக நமக்கு கிடைத்த நற்செய்தி நம்மை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கிறது. இந்த நற்செய்தியான இயேசு கிறிஸ்துவை பிறரும் ஏற்றுக்கொண்டு வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ நாம் அனைவரும் சான்றுள்ள வாழ்வோடு நற்செய்தியை அறிவிப்போம்.

அன்பர்களே, அடிமைத்தளைகளை அகற்றவும், இறைத்திட்டத்தை நிறைவேற்றவும், நற்செய்தியை அறிவிக்கவும் இன்றைய திருவசனங்கள் வழியாக ஆண்டவர் நமக்கம் தந்திருக்கின்ற அழைப்பை ஏற்றுக்கொண்டு அழைப்பிற்கு உகந்தவர்களாய் வாழ்வோம்.

அருள்திரு. J. ஸ்டீபன்

நீதியின் ஆண்டவருக்காகக் காத்திருத்தல்

Waiting for the Righteous Lord

எசா. 30: 15-21 *2 பேது. 3: 8-15*
திபா. 50: 1-15 *மாற்கு 13: 28-37*

". . . ஏனெனில் ஆண்டவர் நீதியின் கடவுள்; அவருக்காகக் காத்திருப்போர் நற்பேறு பெற்றோர்" (எசா. 30: 18).

கடவுள் நீதி செய்கிறவர் என்பதும் நீதியுள்ளவர் என்பதும், உலக வரலாற்றில் கடவுள் செயல்பட்ட சூழல்களை கொண்டு திருமறையின் வழியாக அறிய முடியும். ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர் (திபா. 145: 17) அவர்தம் வழிகள் அனைத்தும் நீதியானவை ". . . அவர் நீதியையும் நேர்மையும் உள்ளவர்" (இச. 32: 4) அவர் நீதியையும் நேர்மையையும் விரும்புகிறார் (திபா. 33: 5) என்பது போன்ற குறிப்புகள் கடவுளின் நீதியை வெளிப்படுத்துகின்றன. நீதி என்பது சமூகத்தின் நரம்பு மண்டலம் போன்றது கடவுள் தன் மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் உறவே நீதியின் அடிப்படையாகும் (தொநூ. 15: 6, 18: 19). எபிரேயத்தில் நீதி என்ற வார்த்தையை விளக்குவதற்கு மிஸ்பாத் (Mispat) மற்றும் செதகா (Sedaga) என்ற இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. மிஸ்பாத் என்பது சட்ட ரீதியான சூழ்நிலைகளுக்கு நீதித்துறை நடவடிக்கையின் பேரில் எடுக்கப்படுகிற தீர்மானங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது (விப. 21: 31; 1 அர. 3: 28). நீதியின் கடவுள் எடுத்த நடவடிக்கைகளை குறிப்பதற்கும் (எசா. 30: 18) பயன்படுத்தப்படுகின்றது. கடவுள் வழங்கும் நீதி என்பது, கடவுள் அன்பானவர், கடவுள் நம்பிக்கைக்குரியவர், இரக்கமானவர் என்ற கூற்றிலிருந்து வரக்கூடியவை. "செதகா" என்ற வார்த்தைக்கு, எதற்கும் வளைந்து கொடுக்காத தன்மை, நேர்மை சரியானது என்றும் பொருள் கொள்ளலாம்.

நீதியுள்ள ஆண்டவர் வரவிருக்கும் மேசியாவாக, எரே. 23: 6-இல் வெளிப்படுத்தப்படுகின்றார். வரலாற்றில் நீதியுள்ள ஆண்டவருக்கான எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்த காலத்தில் அனைத்துலகுக்கும் நற்செய்தியாக இயேசுவின் பிறப்பு அமைந்தது. குழந்தை இயேசுவை எருசலேம் கோவிலில் கண்ட, இஸ்ரவேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்த சிமியோன் என்னும் நேர்மையாளர் (லூக். 2: 25) தாயாகிய மரியாளிடம் இதோ, இக்குழந்தை இஸ்ரவேல் மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருக்கும், எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும் என்பதும், இயேசுவின் மேல் இருந்த எதிர்பார்பை வெளிப்படுத்துகின்றது (லூக். 2: 34). இயேசுவின் வாழ்வு,

மரணம், மற்றும் உயிர்த்தெழுதல் கடவுளின் நீதிக்கு சான்று பகர்ந்தது. இயேசுவில் நம்பிக்கை கொள்வோரை கடவுளுக்கு ஏற்புடையோராக்கி, தமது நீதியை கடவுள் பொறுமையோடு காட்டி வருகிறார் என பவுலார் உரோ. 3: 26-இல் குறிப்பிடுகிறார். மேலும், திப. 17; 31-இல் நாள் ஒன்று வரும் இயேசு கிறிஸ்துவை கொண்டு உலகத்துக்கு நேர்மையான தீர்ப்பு உண்டு என்பதையும் 2 திமொ. 4: 8-ல் தனது நேர்மையான வாழ்வுக்குரிய வெற்றிவாகையை, நீதியின் ஆண்டவர் தனக்கு மட்டுமல்ல, விரும்பி காத்திருக்கும் அனைவருக்கும் தருவார் எனக் குறிப்பிடுகிறார். நீதியுள்ள ஆண்டவருக்காகக் காத்திருப்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒரு மையப்பொருளாகும். இது கடவுளின் நீதியிலும், அவருடைய வாக்குறுதிகளிலும், அநீதிகளுக்கெதிரான நீதியின் வேட்கையிலும் நீதியை நிலைநாட்ட எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளிலும், தியாகங்களிலும் குறிப்பாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய நம்பிக்கையிலும் வெளிப்படுகின்றது. நீதியுள்ள ஆண்டவருக்காகக் காத்திருத்தலைக் குறித்துத் தரப்பட்டுள்ள திருமறைப்பகுதிகள் வாயிலாகச் சிந்திப்போம்.

1. மனந்திரும்பிக் காத்திருத்தல்: *(எசா. 30: 15)*

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடநாடான இஸ்ரயேல் அசீரிய பேரரசால் அழிக்கப்பட்டதை பார்த்த தென்னாடான யூதா மிகுந்த அச்சத்தில் இருந்தது. இதனால் எகிப்துடன் கூட்டணி அமைத்துக்கொள்ள விரும்பினார். இதனை எசாயா கண்டித்து (எசாயா 30: 1-3) கடவுளுக்கு எதிரினான அகந்தை செயலிலிருந்து விடுபட்டு, திரும்பி வந்தால், விடுதலை பெறுவீர்கள் 915) என்று உணர்த்துகின்றார். வீணான முயற்சிகள் (16, 17) எதுவும் பயனளிப்பதில்லை என்றும், தோல்வியே மிஞ்சும் என்றும் எச்சரிக்கின்றர். கடவுளை ஆதாரமாக கொண்டிருக்க வேண்டிய யூதேயா, கடவுளை விட்டு எகிப்துவுடன் அமைத்துக்கொண்ட கூட்டணி, மாறுபாடானதாக இருந்தது. இந்நிலையில் மனந்திரும்பி, கடவுளிடம் நம்பிக்கை கொண்டு, அமைதி பெறும்படி அழைப்பினை பெறுகின்றார்கள். நீதியுள்ள ஆண்டவருக்கு காத்திருந்து, அவரது கருணையையும், இரக்கத்தையும் கண்டுகொள்ள கடவுளால் அழைப்பு பெற்றுக் கொண்டார்கள். நாம் வாழ்கின்ற உலகில் அடைய விரும்புகின்ற பதவி, பணம், ஆளுகை இன்னும் பல காரணிகளுக்காக கடவுள் வகுத்து தந்த வழிகளை விட்டு, தவறான கூட்டணி வைத்துக்கொள்ளுகின்ற நிலை பெருகி வருகின்றது. குறுக்கு வழியில் குபேரனாகிவிட வேண்டும் என்கிற விபரீத எண்ணங்களால், சமுகம், மற்றும் குடும்பங்கள் அடைகின்ற பேரழிவுகள் ஏராளம். உச்சி வெயிலில் பாம்பு ஒன்று படமெடுத்து நின்றது. நிழல் தேடி வந்து தவளை, பாம்பின் நிழலில் பதுங்கி கொள்ளலாம் என்று நினைத்தது. வெயில் தீர்ந்ததும், பாம்பு என்ன செய்யும், தவளை என்ன ஆகும் என்பதை நாம் எளிதாக புரிந்துகொள்ள முடியும். தவறான எந்தக் கூட்டணியும் தகுதியாயிராது என்பதை உணர்ந்து முழுமையாக இறைத்திட்டத்திற்கு ஒப்படைத்து இன்பத்திலும் துன்பத்திலும் நீதியுள்ள

கடவுளுக்குக் காத்திருப்பதே தகுதியானது என்பதை புரிந்து, தவறான கூட்டணிகளை விட்டு மனந்திரும்பி கடவுளுக்குச்காத்திருப்போம்.

2. மனத்தெளிவுடன் காத்திருத்தல்: *(மாற்கு 13: 37)*

கிபி. 64-க்கும் 70-க்கும் இடைப்பட்ட காலத்தில் உரோமையரின் கொடூரத் தாக்குதல்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த சூழல்களில் எருசலேம் அழிக்கப்படுவதற்கு சற்று முன்பாக, உரோமையில் வாழ்ந்து கொண்டிருந்த புற இன கிறிஸ்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை தொகுத்து எழுதவேண்டிய கட்டாயம் மாற்குவுக்கு ஏற்பட்டது. கிறிஸ்தவர்கள் துன்புற்றுக் கொண்டிருந்த காலத்தில், எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற மனப்பான்மையில் போலி இறைவாக்கினரும் போலி மேசியாக்களும் தோன்றி, இதோ மெசியா அங்கே இருக்கிறார் இங்கே இருக்கிறார் என்று கூறி, தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையே நெறி தவறச் செய்ய, அடையாளங்களையும், அருஞ்செயல்களையும் காட்டுகின்ற நிலையில் விழிப்புடன் இருக்க மாற்குவின் நற்செய்தி அழைப்பு விடுத்தது. மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும், மானிட மகன் மேகங்கள் மீது வருவதைக் காணும் வரை *(மாற்கு 13: 26)* காத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. மேலும், வருகையானது விண்ணகத்தந்தைக்கு மட்டுமே தெரியும் *(32)* எனவே விழிப்புடனும், கவனமுடனும் காத்திருக்க வேண்டும் என்ற செய்தி சொல்லப்படுகிறது.

கிறிஸ்துவை உண்மையாகப் புரிந்துகொண்டவர்கள் எப்போதும் தெளிவுடன் இருப்பார்கள். உண்மைக்குப் புறம்பான எந்தச் செய்திகளுக்கும், இடங்கொடுக்காமல் செயல்படுவார்கள். வதந்திகளே, ஆளுகை செய்கின்ற இந்த காலகட்டத்தில், தெளிவுடன் இருப்பதற்கான துணிச்சல் மிகவும் அவசியமானது. விழிப்பாக இல்லையென்றால் விழுந்துவிடுவோம். கவனமாக இல்லையென்றால் காலைவாரி விடுவார்கள். எனவே மனத்தெளிவுடன் நீதியுள்ள ஆண்டவருக்குக் காத்திருப்போம்.

3. மனந்தளராமல் காத்திருத்தல்: *(2 பேது. 3: 12)*

முதலாம் நூற்றாண்டின் இறுதியில் *(கிபி. 96)* சிறிய ஆசியா கிறிஸ்தவர்களுக்கு, பேதுருவின் மறைசாட்சி மரணத்திற்கு சிறுது காலமுன்பு இக்கடிதம் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆரம்ப கால கிறிஸ்தவ திருச்சபையில், கிறிஸ்துவின் வருகை மற்றும் நீதித்தீர்ப்பு ஆகியவற்றில் ஏற்படும் தாமதம் குறித்த கவலை வெளிப்படையாகவே காணப்பட்டது. கிறிஸ்துவின் வருகையை குறித்த ஏளனம் அதிகமாக காணப்பட்டது. ஏன் தாமதிக்கிறார். அவரது வருகையை குறித்த வாக்குறுதி என்னவாயிற்று *(2 பேது. 3: 4)* என்ற கேள்விகள் கிறிஸ்தவர்களுக்கிடையே, கிறிஸ்துவின் வருகையை குறித்த நம்பிக்கையில் தளர்வினை ஏற்படுததியிருக்கக் கூடும். இந்நிலையில்,

ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள் போலவும் இருக்கின்றன *(3: 8)*, ஆண்டவரின் காலதாமதம், எவரும் அழிந்து போகாமல் அனைவரும் மனந்திரும்புவதற்கானதே *(9)*. எனவே, தூய இறைப்பற்றுள்ள நடத்தையில் சிறந்து விளங்கவேண்டும், மாசு மறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய் வாழவேண்டும். நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகுமும், மண்ணுலகும் வரும்வரை மனந்தளராமல் காத்திருக்கவேண்டும் என்கின்ற தெளிவு கொடுக்கப்படுகின்றது.

"வாழ்க்கை எப்போதும் சரியான தருணத்திற்காக காத்திருப்பதே" (Life was always a matter of waiting for right moment) என்ற பால் கொகிலா என்பவது கூற்றுப்படி கிறிஸ்வ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நீதித்தீர்ப்பு மற்றும் கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருப்பதிலே நமது நம்பிக்கை அடங்கியிருக்கின்றது. காத்திருக்கின்ற காலம், கடவுளுக்காக விரைந்து பணியாற்றும் காலம் என்பதை உணர்ந்து, நம்பிக்கையில் தளர்வுகளை ஏற்படுத்துகின்ற அறிவற்ற, அழிவைத் தருகின்ற செயல்களுக்கு உடன்படாமல் மனந்தளராது இறுதிவரை உறுதியுடன் காத்திருப்போம். ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவும் நம்மை நீதியுள்ள ஆண்டவருக்காகக் காத்திருக்கத் தூண்டுகின்ற நம்பிக்கை தரும் நற்செய்தி என்பதையும் உணர்ந்து காத்திருப்போம்

அருள்திரு. R. ஜசக் மொரின்சிங்

24.12.2026 Christmas Eve

நல்லெதிர்நோக்கின் கனவுகள்
கடவுள் கனவுகளின் வாயிலாக வழிகாட்டுதல்களை வழங்குகிறார்

Dreams of Hope
God Gives Directions through Dreams

தொநூ. 15: 1-6 *திப. 16: 6-10*
திபா. 147 *மத். 2: 7-15*

ஏரோதிடம் திரும்பிப் போகவேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள் (மத். 2: 12).

இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கும் திருச்சபையாகிய நாம், கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும்போது, நல்லெதிர் நோக்கின் கனவுகளோடு கொண்டாட ஆண்டவரால் அழைக்கப்பெறுகின்றோம். நாம் வாழும் உலகில் அன்றாடம் எண்ணற்ற சவால்களைச் சந்தித்து வருகிறோம். நோய்கள், வறுமை, வெறுமை, போராட்டங்கள் மற்றும் தடைக்கற்கள் போன்ற சவால்கள் மத்தியில் நம்முன் நிற்கும் கிறிஸ்துப்பிறப்பு மற்றும் புதிய ஆண்டில் நாம் எதிர்நோக்கும் கனவுகள் நனவாக மாறுவதற்கு, ஆண்டவர் அருள் செய்வார்.

ஆங்கிலக் கூற்றுப்படி "Dreams without goals are just dreams" *இலக்குகளில்லாத கனவுகள் வெறும் கனவுகளே - அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அவர்களின் மனைவி அன்னா ரூஸ்வெல்ட் கனவுகளைப் பற்றி குறிப்பிடுகின்றபோது, எதிர்காலம், தங்களின் கனவுகளின் அழகில் நம்பிக்கை வைக்கும் மனிதர்களுக்கே சொந்தமானது என்கிறார்.*

கிறிஸ்து பிறப்பு மற்றும் புதிய ஆண்டை ஆவலோடு எதிர்நோக்கும் நம் ஒவ்வொருவரும் நல்லெதிர்நோக்கின் கனவுகளோடு வாழ கடவுள் தரும் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

1. நல்லெதிர்நோக்கும் நம்பிக்கை தரும் வார்த்தையும்: *(தொநூ. 15: 1-6)*

வார்த்தைகளுக்கு அபரிமிதமான ஆற்றல் உண்டு என்பது இஸ்ரயேலர்களின் நம்பிக்கை (நீமொ. 18: 21). பற்றுறுதியாளரின் தந்தையான ஆபிரகாமின் பரந்த பார்வை, கடவுள் எப்படியும் என்னை ஆற்றல்படுத்த வல்லவர். அவருடைய வார்த்தை ஒன்றும் வெறுமையாய்ப் போவதில்லை என்பதே. இத்தகைய நம்பிக்கையுடன் கூடிய ஆபிரகாமின் வாழ்க்கைப் பயணம் நல்லெதிர் நோக்கின் கனவுகளோடு கூடிய

பயணமாய் இருந்தது.

ஒருமுறை ஆபிரகாமினுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும் லோத்துவின் மந்தை மேய்ப்பர்களுக்கும் இடையே வாக்கு வாதம் உண்டானபோது, ஆபிரகாம், லோத்துவிடம் இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது. உனக்கு விருப்பமானதை நீ தெரிந்து கொள்ளலாம் என்று கூறினார். உடனே லோத்து,தன் பார்வைக்கு செழிப்பான யோர்தான் நதிக்கு அருகான சமபூமியைத் தெரிந்து கொண்டார். ஆபிரகாமுடைய நல்லெதிர் நோக்கு என்னவெனில் பாலைநிலம் கூட ஆண்டவரின் வார்த்தையால் வளமிக்க நிலமாக மாற்றம் பெறும் என்பதுதான். அந்த நம்பிக்கை தான் ஆபிரகாம் தன் வாழ்வில் சந்தித்த கடினமான பாதையிலும், வெறுமையான சூழ்நிலைகளின் நடுவிலும் நல்லெதிர்நோக்குடன் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளோடு பயணிக்க உதவியது. ஆண்டவர் தனக்கு உறுதிமொழிந்த உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய் (தொநூ. 12: 2) என்ற நம்பிக்கை தரும் நல்வார்த்தையைப் பிடித்துக்கொண்டு வாழ்ந்தபடியால், கடவுளிடமிருந்து ஆசி பெற்றார்.

விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் தன்னை சந்தித்து ஆலோசனை கேட்க வந்த ஹென்றி போர்டு என்பவரிடம், நீ வடிவமைத்த வாகனத்தைத் தைரியமாய்த் தயாரிக்கலாம் என்று சொன்ன நம்பிக்கை தரும் வார்த்தை தான். தனக்குக் கனவாக இருந்த போர்டு என்னும் வாகனத் தயாரிப்பு நிறுவனத்தைப் பெரிய அளவில் நிறுவுவதற்கு ஏதுவாக அமைந்தது.

2. நல்லெதிர்நோக்கும் நலம் தரும் அழைப்பும் :

தூய பவுல் அடிகளாருடைய திருப்பணி முழுவதுமே நல்லெதிர் நோக்கின் கனவுகள் நிறைந்த திருப்பணியாய் இருந்தமையால் திருச்சபைகள் கட்டப்பட்டன. அவை மனிதச் சிந்தனையால் உருவாக்கப்பட்டவையல்ல. மாறாக இறையாளுகையாலும், கடவுள் வகுத்துக் கொடுத்த திட்டத்தினாலும், கடவுளின் நடத்துதலினாலும் உருவாக்கப்பட்டவை. பவுலடிகளார் ஒருமுறை துரோவா பட்டணத்திலே தங்கியிருந்தபோது, இரவிலே மக்கதோனியா நாட்டினர் திருப்பணியிலே தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தன்னை வேண்டிக் கொண்டதாகக் கண்ட தரிசனத்தை அவர் நல்லெதிர் நோக்கின் கனவுகளோடு, ஏற்றுக்கொண்டு, இது தனக்குக் கிடைத்த நலம் தரும் அழைப்பாக உறுதிப்படுத்திக் கொண்டு, இறை விருப்பமும் இதுவே என்று தனக்குத்தானே நிச்சயித்துக் கொண்டு, நற்செய்தி சொல்லப் புறப்பட்டார்.

இயேசுவின் தந்தையாகிய யோசேப்பு மரியாவை விலக்கி விடவேண்டும் என்று தனக்குள்ளே தீர்மானம் செய்து கொண்டபோது, விண்தூதர் தந்த நலம் தரும் அழைப்பை ஏற்றுக்கொண்டு, நல்லெதிர் நோக்குடன் மரியாவைத் தன்னுடைன் சேர்த்துக் கொண்டார்.

3. நல்லொதிர்நோக்கும் நல்வாழ்வு தரும் நற்செய்தியும்: *(மத். 2: 7-15)*

ஞானிகள் நல்லெதிர் நோக்கு, மீட்பர் இயேசுவைக் காண வேண்டும் அவரை வணங்க வேண்டும் என்பதாகும். ஆனால், ஏரோது அவர்களை இரகசியமாய் அழைத்து அவர்களிடத்திலே திட்டமாய் விசாரித்து, நீங்கள் போய் திட்டமாய் விசாரித்து அப்பிள்ளையைக் கண்டபின் நானும் வந்து பணிந்து கொள்ளவேண்டும் என்று மனதில் எதிர்மறை எண்ணத்தோடு அவர்களிடம் சொல்லி அனுப்பினார். பிள்ளையைப் பணிந்து கொண்ட பின் ஞானிகள் ஏரோதினிடத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் கொண்டபோது, ஆண்டவரால் பெற்ற நற்செய்தி என்னவென்றால் நீங்கள ஏரோதினிடத்திற்கு போகவேண்டாம். வேறு வழியாய் திரும்பிப் போங்கள் என்பதாகும். இந்த நல்வாழ்வு தரும் நற்செய்தியினால் ஞானிகள் வேறு வழியாய் திரும்பிப் போனார்கள். ஏரோதைச் சந்திக்க அவர்கள் செல்லவில்லை.

இன்றும் கூட பாலகன் இயேசுவைத் தரிசித்து, பணிந்து, போற்றி, துதித்துவிட்டு, தீமைக்கு நேராய், போதைக்கு நேராய்ச் செல்லும் மக்களுக்கு ஓர் எச்சரிப்பு செய்தி என்னவென்றால், நல்வாழ்வு தரும் மீட்பரை வழிபட்ட பின்பு, தீமையான பாதையைத் தெரிந்து கொள்வது மிகவும் ஆபத்தானது என்பதை மறந்து போகவேண்டாம்.

கடவுளின் பிள்ளைகளாகிய நாம் நல்லெதிர் நோக்கின் கனவுகளோடு, நம்பிக்கைத் தரும் அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, நலம் தரும் அவருடைய அழைப்பை எதிர்மறையாய் எண்ணாமல், நல்வாழ்வு தரும் நற்செய்திக்குச் செவி சாய்த்து வாழ்வோமென்றால் கடவுள் நம்மிடையே இடைபடுவார். பாதைகள் மாற்றப்படும், தூய்மை நம் வாழ்வில் ஏற்படும். கடவுளின் ஆசிகள் நமக்குக் கிடைக்கும்.

தென்னிந்தியாவில் டோனாவூர் ஐக்கியம் என்ற திருப்பணியை ஏற்படுத்தின ஏமி கார்மிக்கேல் அம்மையார் பறைசாற்றிய நல்வாழ்வு தரும் நற்செய்தி, செம்புலிங்கம் என்பவரை மாற்றியது. இந்தத் திருவருகைக் காலத்தில் நல்லெதிர்நோக்கின் கனவுகளுடன், கனவுகள் வழியாக கடவுள் தரும் வழிகாட்டுதல்களை ஏற்றுச் செயல்படுவோம்.

அருள்திரு. S. செல்ல ஜெபராஜ்

கிறிஸ்துப் பிறப்பு: அனைத்து மக்களுக்குமான ஒளி

Christmas: The Light for All People

எசா. 60: 1-7 *1 யோவா. 1: 5-10*
திபா. 112 *யோவா. 1: 1-14*

"அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது." (யோவா. 1: 9).

கிறிஸ்து பிறப்பு என்ற வார்த்தையை கேட்டவுடன், நமது நினைவில் உடனே தோன்றுவது விளக்குகள், அலங்காரம், பாடல்கள், பரிசுகள்ஆகும். இவை அனைத்தும் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தின் வெளிப்புற அழகை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் திருமறை பேசும் கிறிஸ்து பிறப்பு, வெளிப்புற அலங்காரத்திற்கான ஒளி அல்ல; அது உள்ளார்ந்த இருளை உடைக்கும் ஒளி ஆகும்.

எனவே, ஒளியைப் பற்றி பேசுவதற்கு முன், நாம் ஒரு கணம் நின்று இருள் என்னவென்று உணரவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், இருள் அனுபவிக்கப்படாத இடத்தில், ஒளி தனது தீர்க்கதரிசனத் தன்மையை இழந்து, ஒரு சாதாரண அலங்காரமாகவே மாறிவிடுகிறது.

ஜெர்மன் போதகரும் இறையியலாளருமான. Dietrich Bonhoeffer *இதனை மிக ஆழமாகச் சொல்கிறார்:* "Only those who cry out for the darkness are ready to see the light." *(இருளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் மட்டுமே ஒளியை உண்மையாகக் காணத் தயாராக இருப்பார்கள்.)*

இன்றைய சமூகயதார்த்தத்தை கவனித்தால் ஒளியால் நிரம்பிய உலகம். ஆனால் இருளால் காயமடைந்த மனங்கள். ஒரு வியத்தகு முரண்பாட்டைக் காண்கிறோம். சத்தமாக பேசப்படும் மதம் இருக்கிறது ஆனால் மெதுவாக அழும் மனிதர்களும் இருக்கிறார்கள். வளர்ச்சி, முன்னேற்றம் என்று பேசப்படுகிறது. ஆனால் மனித மரியாதை நாளுக்கு நாள் சுருங்குகிறது .மதத்தின் பெயரில் வெறுப்பு உருவாகிறது அதிகாரத்தின் பெயரில் அடக்குமுறை நடைமுறையில் உள்ளது. வறுமை, வேலை இழப்பு, சமூக அநீதி தொடர்கிறது. மனித மனங்களில் பயம், மனச்சோர்வு, பாதுகாப்பின்மை அதிகரிக்கிறது. ஆன்மீக வாழ்க்கையில் உண்மை குறைந்து, போலித்தனம் அதிகரிக்கிறது. வெளிப்புறமாகப் பார்த்தால் ஒளி எங்கும் இருக்கிறது. ஆனால், உள்ளார்ந்த மனங்கள் இருளாகவே இருக்கின்றன. ஒளி இருக்கிறது ஆனால் இருளும் அதே அளவு, அல்லது அதை விட அதிகமாகவே இருக்கிறது.

இந்த நிலையில் தான் ஜெர்மன் சீர்திருத்த இறையியலாளர் Jürgen Moltmann கூறும் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன: "Where there is despair, faith must not decorate reality but transform it"*(நம்பிக்கை என்பது யதார்த்தத்தை அலங்கரிக்க அல்ல; அதை மாற்றுவதற்காகவே).*

இப்படிப்பட்ட சூழலில் கிறிஸ்து பிறப்பு வருகிறது. அது அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு அல்ல உடைந்த மனித வாழ்க்கைக்குள் வருகிறது. திருமறை இந்த இடத்தில் மிகவும் தெளிவாகவும், உரத்த குரலிலும் அறிவிக்கிறது: "ஒளிவந்துவிட்டது." இந்த ஒளி ஒரு கருத்தல்ல, ஒரு சிந்தனையல்ல, ஒரு தத்துவம் அல்ல, அந்த ஒளி இயேசு கிறிஸ்து.

சுவிஸ் சீர்திருத்த இறையியலாளர் Karl Barth கிறிஸ்து பிறப்பை இவ்வாறு விளக்குகிறார்: "The light of Christ does not deny the darkness of the world; it enters into it." *(கிறிஸ்துவின் ஒளி உலகின் இருளை மறுப்பதில்லை அதற்குள் நுழைகிறது.)*அதனால், கிறிஸ்து பிறப்பு என்பது இருளை மறைக்கும் பண்டிகையல்ல இருளுக்குள் இறைவன் நுழையும் தெய்வீக நிகழ்வு. இந்த ஒளி ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ, ஒரு சமயக் குழுவிற்கோ, ஒரு ஆன்மீக உயர்வுக்கோ மட்டுமல்ல

"அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது." யோவான் ***1:9***

இந்த ஒளி நம்பிக்கையிழந்த சமூகங்களுக்குள் எவ்வாறு ஒளியாகிறது?

இந்த ஒளி போலியான ஆன்மீக வாழ்க்கையை எவ்வாறு வெளிச்சத்தில் கொண்டு வருகிறது?

இந்த ஒளி அதிகாரம், அகந்தை, ஒடுக்குமுறை ஆகியவற்றை எவ்வாறு சவாலிடுகிறது?

இந்தக் கேள்விகளின் ஒளியில், "கிறிஸ்து பிறப்பு: அனைத்து மக்களுக்கும் ஒளி" என்ற இந்தத் தலைப்பின் அர்த்தத்தை, இந்த நாளுக்குரிய திருமறை வாசகங்களின் வழியாக நாம் தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

1. நம்பிக்கையிழந்த சமூகத்தில் ஒளியின் அழைப்பு: *(எசா. 60: 1-7)*

எசாயா 60-ஆம் அதிகாரம், வேதாகமத்தில் மிகவும் நம்பிக்கை நிறைந்த பகுதியாக வாசிக்கப்படும் ஒன்று. ஆனால் அந்த நம்பிக்கை வலி இல்லாத சூழலில் பிறந்த நம்பிக்கை அல்ல. இதன் பின்னணியைப் புரிந்து கொள்ளாமல் வாசித்தால், இந்த உரையின் தீவிரமும் ஆழமும் மங்கிவிடும். எசாயா பேசும் காலம், இஸ்ரவேல் மக்கள் பாபிலோன் சிறையிலிருந்து திரும்பிய காலமாகும். சிறை முடிந்துவிட்டது. ஆனால் வாழ்க்கை சீராகவில்லை. நகரம் சிதைந்திருக்கிறது, தேவாலயம்

இடிந்திருக்கிறது, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கிறது. அரசியல் அதிகாரம் இல்லை பேரரசுகளின் கட்டுப்பாட்டில் வாழும் நிலை. இதைவிட வலியானது மக்களின் உள்ளங்களில் நம்பிக்கை இழந்து போயிருந்தது. இந்தச் சூழலில் தான் இறைவன் தீர்க்கதரிசியின் வாயிலாகச் சொல்கிறார்:

"எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன் மேல் உதித்துள்ளது! இதோ! இருள் பூவுலகை மூடும்; காரிருள் மக்களினங்களைக் கவ்வும்; ஆண்டவரோ உன் மீது எழுந்தருள்வார்; அவரது மாட்சி உன் மீது தோன்றும்!" (எசாயா 60: 1-2).

இது ஒரு சாதாரண ஆன்மீக வார்த்தையல்ல. இது ஒரு கட்டளை போலத் தோன்றினாலும், உண்மையில் இது ஒரு காயமடைந்த சமூகத்திற்கு வழங்கப்பட்ட நம்பிக்கை அழைப்பு ஆகும். தேவன், இடிபாடுகளைப் பார்த்தும், சிதைவுகளை மறைத்தும் பேசவில்லை. அவர் உண்மையை மறுப்பதில்லை. அதனால் தான் தேவன் தெளிவாகச் சொல்கிறார்: "இருள் பூமியை மூடுகிறது; அந்தகாரம் ஜனங்களை மூடுகிறது." இந்த வசனம் மிக முக்கியமான ஒரு தத்துவ உண்மையை வெளிப்படுத்துகிறது. இறைவன், "இருள் இல்லை" என்று சொல்லவில்லை "எல்லாம் சரியாகி விட்டது" என்று கூறவில்லை மாறாக, இருள் உண்மை என்பதை ஒப்புக்கொண்டு, அதற்குள் தான் தமது ஒளியை எழுப்புகிறார். இங்குமறைந்திருக்கும் இறைவனின் செய்தி இதுதான்: "இருள் உன்னை அடையாளம் காணவேண்டாம்; ஒளி உன்னை வரையறுக்கட்டும்."

இந்த எசாயா உரை, இன்றைய உலகத்திற்கு ஆழமாகப் பேசுகிறது. இன்று நாம் வாழும் சமூகத்திலும் சமய சமூக இருள் இருக்கிறது, அரசியல் இருள் தொடர்கிறது, பொருளாதார இருள் மனித வாழ்வை நசுக்குகிறது, மனித மரியாதையை அழிக்கும் இருள் எல்லா திசைகளிலும் பரவி நிற்கிறது.

இத்தகைய சூழலில், கிறிஸ்து பிறப்பு ஒரு முக்கியமான அறிவிப்பை முன் வைக்கிறது. கிறிஸ்து பிறப்பு வலியை மறுப்பதில்லை, கண்ணீரை அவமதிப்பதில்லை, மனிதர்களின் கேள்விகளை அடக்குவதில்லை மாறாக, ஆண்டவர் இருளுக்குள் தான் ஒளியை எழுப்புகிறார் என்பதை உறுதியாக அறிவிக்கிறது.

ஜெர்மன் சீர்திருத்த இறையியலாளர் ஔழ்ஞ்ங்ய் ஙர்ப்ற்ம்ஹய்ய் இதனை இவ்வாறு கூறுகிறார்: "God's light does not shine above suffering, but through it." (ஆண்டவரின் ஒளி வேதனைக்கு மேலாக அல்ல வேதனையின் வழியாகவே பிரகாசிக்கிறது). இதனால், எசாயா 60-ல் அறிவிக்கப்படும் ஒளி, அரண்மனை ஒளி அல்ல, வெற்றியின் ஒளி அல்ல மாறாக, இடிபாடுகளுக்குள் எழும் நம்பிக்கையின் ஒளிஆகும்.

2. போலியான ஆன்மிகத்துக்கு எதிரான ஒளி: *(1 யோவா. 1: 5-10)*

1 யோவான் எழுதப்பட்ட திருச்சபைச் சூழலை கவனித்தால், அங்கு ஒரு ஆழமான ஆன்மீகப் பிரச்சினை நிலவியது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்தச் சமூகத்தில் சிலர் தங்களை ஆன்மீக ரீதியாக உயர்ந்தவர்கள் எனக் கருதி, விசுவாசத்தை வாழ்க்கை நடை முறையிலிருந்து பிரித்துவிட்டார்கள். அவர்கள் சொன்னார்கள்: "நாங்கள் ஆண்டவரை அறிந்திருக்கிறோம், -நாங்கள் ஒளியில் இருக்கிறோம்". ஆனால் அவர்களின் வாழ்க்கை நடைமுறை அதற்கு முரணாக இருந்தது. ஆன்மீக உரைகள் இருந்தன ஆனால் நெறிமுறை பொறுப்பு இல்லை. ஆண்டவரைப் பற்றி பேசப்பட்டது ஆனால் மனிதர்களின் வேதனைக்கு எதிரான மௌனம் தொடர்ந்தது. இந்தச் சூழலில் தான் அப்போஸ்தலன் யோவான் எந்தத் தயக்கமும் இல்லாமல், மிகவும் தெளிவாக அறிவிக்கிறார்:

"கடவுள் ஒளியாய் இருக்கிறார்; அவரிடம் இருள் என்பதே இல்லை." (1 யோவா. 1:5)

இந்த வாக்கியம், கடவுளைப் பற்றிய ஒருவரையறை மட்டுமல்ல; அது திருச்சபைக்கு முன் வைக்கப்பட்ட ஒரு சவால் ஆகும். கடவுள் ஒளியாயிருக்கிறார் என்றால், அவருடன் உறவு கொண்டாடுகிறோம் என்று சொல்லும் வாழ்க்கையும் ஒளியால் வடிவமைக்கப்பட வேண்டுமென்பதே இதன் பொருள்.

"நாம் இருளில் நடந்து கொண்டு, அவருடன் நமக்கு நட்புறவு உண்டு என்போமென்றால் நாம் பொய்யராவோம்; உண்மைக்கேற்ப வாழாதவராவோம்". (1 யோவான் 1: 6)

இந்த ஒளி வெளிப்படுத்தும் உண்மை கிறிஸ்து பிறப்பு என்பது பாவத்தை மறைக்கிற பண்டிகையல்ல, சுய நியாயத்தை வளர்க்கிற நாளல்ல. மாறாக, ஒளி வந்தால் உண்மை வெளியில் வரும், ஒப்புக்கொள்ளுதல் (confession) தொடங்கும், மாற்றம் (transformation) நிகழ ஆரம்பிக்கும்.

"அவர் ஒளியில் இருப்பது போல் நாம் ஒளியில் நடப்போமானால், ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம். மேலும் அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும்". (1 யோவான் 1:7)

கிறிஸ்தவ தத்துவஞானி, இறையியலாளர் மற்றும் ஹிப்போரெஜிஸ் பேராயர் St. Augustine *இதனை இவ்வாறு சொல்கிறார்:* "The confession of evil works is the beginning of good works." *(பாவங்களை ஒப்புக்கொள்வதே நல்ல செயல்களின் ஆரம்பம்). ஒளி மனிதனை அவமானப்படுத்துவதற்காக வருவதில்லை அது மாற்றுவதற்காக வருகிறது.*

இந்த யோவான் உரை, இன்றைய சமகாலத் திருச்சபையையும் நேரடியாக எதிர்கொள்கிறது. இன்றைக்கு நாம் திருச்சபையில் பேசுகிறோம், சமூகத்தில் மௌனம் காக்கிறோம், ஜெபிக்கிறோம், ஆனால் அநியாயத்தை பார்த்தும் அமைதியாக இருக்கிறோம், இந்த மௌனம், நடுநிலையல்ல இது இருளின் ஒரு வடிவமே. Dietrich Bonhoeffer இதனை மிகக் கடுமையாக எச்சரிக்கிறார், "Silence in the face of evil is itself evil" *(தீமையின் முன்னிலையில் மௌனம் காப்பதும் ஒரு தீமையே).*

கிறிஸ்து பிறப்பு என்பது போலியான ஒளியை உடைக்கும் ஒளி எனவே, கிறிஸ்து பிறப்பு வெளிப்புற ஆன்மீகத்தைக் கலைக்கிறது, உள்ளார்ந்த நேர்மையை கோருகிறது, விசுவாசத்தை சமூகப் பொறுப்புடன் இணைக்கிறது. கிறிஸ்து பிறப்பு, இந்த போலியான ஆன்மீக இருளை உடைத்து, ஒளியில் நடக்க அழைக்கும் தேவனின் தீர்க்கதரிசன அழைப்பாக நம் முன் நிற்கிறது. இதுவே இரண்டாம் பெரிய செய்தி ஒளி வந்தால், விசுவாசம் வெளிப்பாடாக மாறும்.

3. அதிகாரத்துக்கு எதிரான இறையொளி *(யோவா. 1: 1-14)*

யோவான் நற்செய்திநூல், கிறிஸ்து பிறப்பு கதையை ஒரு மாம்சக் குழந்தை பிறந்த நிகழ்வாக மட்டும் சொல்லாமல், ஒரு தெய்வீக சவாலாகவும், அரசியல் அறிவிப்பாகவும் முன் வைக்கிறது. இந்தப் பகுதியில் யோவான் நமக்கு முன் வைக்கும் மைய வாக்கியம் இது தான்,

"வாக்கு மனிதர்ஆனார்." *(யோவான் 1: 14*a *)*

இந்த ஒரு வாக்கியம், கடவுள் பற்றிய நமது பல பழைய எண்ணங்களை குலைக்கிறது. கடவுள் வானத்தில் இருந்து கட்டளை போடவில்லை, அரண்மனையில் பிறக்கவில்லை, அதிகாரத்தின் மையத்தில் நின்று தம்மை வெளிப்படுத்தவில்லை. மாறாக, அவர் மனித வாழ்க்கையின் விளிம்பைத் தேர்ந்தெடுத்தார். அவர் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தார், ஒதுக்கப்பட்டவர்களோடு நடந்தார், நோயாளிகளைத் தொட்டார், "பாவிகள்" என்று சமூகத்தால் அழைக்கப்பட்டவர்களோடு உட்கார்ந்தார் இவை எல்லாம் தனிப்பட்ட ஆன்மீகச் செயல்கள் அல்ல.

இவை எல்லாம் ஒரு இறை ராஜ்யத்தின் அறிவிப்பு. அந்த அறிவிப்பு என்னவென்றால்: கடவுள்அதிகாரத்தின் பக்கம் அல்ல; ஒடுக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்கிறார். யோவான் எழுதும் காலத்தில், ரோமப் பேரரசு உலகை ஆளிக் கொண்டிருந்தது.

அந்த பேரரசு சொன்னது: "சீசர் ஆண்டவன்", "சீசரே சமாதானத்தின் தந்தை" ஆனால் கிறிஸ்து பிறப்பு அமைதியாக, ஆனால் தைரியமாக அறிவித்தது "குழந்தையாக வந்த இயேசுவே ஆண்டவர்." இது ஆயுதமில்லாத, ஆனால் அதிகாரத்தை குலைக்கும் அறிவிப்பு.

Karl Barth இதை இவ்வாறு சொல்கிறார், "The incarnation is God's judgment on all human pride and power." (அவதாரம் என்பது மனித அகந்தை மற்றும் அதிகாரத்தின் மீது தேவன் வழங்கும் தீர்ப்பாகும்). இதனால், "வாக்கு மனிதர் ஆனார்" என்பது ஒரு தத்துவக் கருத்து மட்டுமல்ல, ஒரு பக்தி மொழி மட்டுமல்ல, ஒரு மாற்று அதிகாரக் கண்ணோட்டம். இந்த அவதார ஒளி, இன்று சாதி ஒதுக்கீடு இன்னும் மனித மரியாதையை அழிக்கும் இடங்களில், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சமூக அமைப்புகளில், வேலை இல்லாமல் திணறும் இளைஞர்களின் எதிர்காலக் கனவுகளில், இடம் பெயர்ந்த மக்களின் கண்ணீரில், மதத்தின் பெயரில் வெறுப்பு வளர்க்கப்படும் பொதுவெளிகளில் தேவை.

இந்த இடங்களில் தான் கிறிஸ்து பிறப்பு ஒளி வெறும் நினைவாக அல்ல, சாட்சியாக தேவைப்படுகிறது.

இந்த இடத்தில் திருச்சபைக்கு முன் வைக்கப்படும் கேள்வி மிகவும் நேரடியானது:

நாம் அலங்கரிக்கிறோமா? அல்லது வெளிச்சமாகிறோமா?

சான் சால்வடார் பேராயர், Oscar Romero கூறிய வார்த்தைகள், "A church that does not provoke any crisis has no relevance to the Gospel." (சுவிசேஷத்தின் பெயரில் எந்தச் சவாலையும் எழுப்பாத திருச்சபைக்கு சுவிசேஷத்தின் தொடர்பே இல்லை.) இங்கு பொருத்தமாகும். கிறிஸ்து பிறப்பு திருச்சபையை வசதியாக வைத்திருக்க அல்ல மாறாக உலகிற்கு ஒளியாக நிற்க அழைக்கிறது

கிறிஸ்து பிறப்பு ஒரு நினைவுகூரல் அல்ல; அது ஒரு நிரந்தரமான தெய்வீக அறிவிப்பு. இந்த அறிவிப்பு,

வேதாகமத்தின் மூன்று வாசகங்களின் வழியாக ஒரே ஒளியாக நம் முன் நிற்கிறது. எசாயா 60, நம்பிக்கையிழந்த சமூகத்தின் நடுவில் தேவன் பேசுவதை நாம் கேட்டோம். இடிபாடுகளுக்குள், அதிகார இழப்பிற்குள், பொருளாதார வீழ்ச்சிக்குள் கூட, கடவுள் சொல்கிறார்: "எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன் மேல் உதித்துள்ளது." கிறிஸ்து பிறப்பு நம்பிக்கையை மறுக்காத யதார்த்தத்திலிருந்து எழுப்புகிறது; இருளை ஒப்புக்கொண்டு, அதற்குள் ஒளியை அறிவிக்கிறது.

1 யோவான் 1, போலியான ஆன்மீகத்துக்கு எதிரான ஒளியாக நம்மைச் சவாலிடுகிறது. நாம் இருளில் நடந்து கொண்டு, அவருடன் நமக்கு நட்புறவு உண்டு என்போமென்றால் நாம் பொய்யராவோம்; உண்மைக்கேற்ப வாழாதவராவோம். கடவுளை அறிந்திருக்கிறோம் என்று சொல்லும் வாழ்க்கை, உண்மையில் ஒளியில் நடக்காவிட்டால் அது இருளே என்று திருமறை எச்சரிக்கிறது. கிறிஸ்து பிறப்பு, வெளிப்புற ஆன்மீகத்தை

உடைத்து, ஒப்புக்கொள்ளுதல், நேர்மை, மாற்றம் ஆகியவற்றை கோரும் ஒளியாக நம்முன் நிற்கிறது.

யோவான் 1, அதிகாரத்திற்கும் அகந்தைக்கும் எதிரான இறைஒளியை அறிவிக்கிறது. "வாக்கு மனிதர் ஆனார்" என்ற அறிவிப்பு, கடவுள் மனித வேதனையின் விளிம்பில் குடியிருப்பதையும், ஒடுக்கப்பட்டவர்களின் பக்கத்தில் நிற்பதையும் வெளிப்படுத்துகிறது. இது ஒரு தனிப்பட்ட பக்தி செய்தி மட்டுமல்ல இது உலக அதிகாரங்களை கேள்விக்குள்ளாக்கும் இறை ராஜ்ய அறிவிப்பு.

இந்த மூன்று வாசகங்களும் இணைந்து கிறிஸ்து பிறப்பு சொல்லும் செய்தி ஒன்றே:

இருள் இறுதி அல்ல. நம்பிக்கையிழப்பு இறுதி அல்ல. போலித்தனம் இறுதி அல்ல. அநியாயமும் பயமும் இறுதி அல்ல.திருமறை உறுதியாகச் சொல்கிறது: "அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை." (யோவான் 1:5) அதனால், இந்தக் கிறிஸ்து பிறப்பில் ,நாம் ஒளியை அலங்கரிக்காமல் ஒளியாக வாழ அழைக்கப்படுகிறோம். உண்மையைப் பேசவும், நம்பிக்கையை விதைக்கவும், அன்பைச் செயல்படுத்தவும், இயேசுவைப் போல மனிதர்களுக்குள் வாசிக்கவும் அழைக்கப்படுகிறோம். இதுவே கிறிஸ்து பிறப்பு. இதுவே நம்பிக்கை. இதுவே அனைவருக்குமான ஒளி.

அருள்திரு. R. டட்ஸ் ஞானறாபி

குடும்பம்: உறவுகளின் கொண்டாட்டம்

Family: Celebration of Relationships

செக். 8: 1-8 *கலா. 6: 1-10*
திபா. 128 *மாற். 3: 31-35*

"உம் இல்லத்தில் உம் துணைவியார் கனிதரும் திராட்சைக் கொடிபோல் இருப்பார்; உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப்போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்" (திபா. 128: 3).

சமுதாயத்தின் அடிப்படை ஆதாரக்குழுவாகவும் இயற்கையான அமைப்பாகவும் குடும்பம் இருக்கிறது. தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோர் ஒரு கூரைக்குக் கீழ் வாழ்வதால் அதைக் குடும்பம் என்று சொல்லிவிட முடியாது. மாறாக, இனிய உறவுகளின் சங்கமமே குடும்பம் ஆகும். ஏனெனில் குடும்பம் வெறும் உறவுகளின் தொகுப்பு மட்டுமல்ல, அது உணர்வுகளின் கலவையும் கூட. குடும்பம் என்பது செங்கலால் கட்டப்பட்ட கட்டடத்தில் நடக்கும் இல்லறம் மட்டுமல்ல. அது அன்பான உள்ளங்கள் உள்ளன்போடு வாழும் அன்பாலயம். இதைத்தான் மேற்சொன்ன திருப்பாடல்கள் 128: 3 தெளிவுபடுத்துகிறது. குடும்பம் என்பது ஒரு தனிச் சொல்லாயினும் அதைப்பிரித்துப் பார்க்கும்போது அதில் "கொடு இன்பம்" என்கின்றதொனி ஒலிக்கிறது. எனவே, இன்பத்திற்குப் பஞ்சமில்லாத உறவுகளின் சங்கமமே குடும்பம் எனப்படும். ஆகவே தான், "மனங்கள் ஒருவருடன் மற்றொருவர் உறவாடும் இடம் குடும்பம்" என்றார் புத்தர். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பும் உறவுகளின் வலிமையும் இருக்கும்போது, குழந்தைகள் தன்னம்பிக்கை, பாதுகாப்பு, மற்றும் பரிவு கொண்டவர்களாக வளர்கிறார்கள். சுற்றிலும் உறவுகள் கூடி இருக்கும்போது மனவலிமையும் கூடுகிறது. இதுதான் குடும்பத்தின் மேன்மை; உறவுகளின் வலிமை. கடவுள் நமக்குத் தந்திருக்கும் "குடும்பம்: உறவுகளின் கொண்டாட்டமாக" அமைய திருமறை கற்றுத்தரும் விழுமியங்களை ஈண்டு சிந்திப்போம்.

1. உறவுகளை மறுசீரமைப்பு செய்தல்: *(செக். 8:1-8)*

கடவுள் தம்முடைய மக்களை எருசலேமுக்கு மீட்டெடுப்பதாகவும், அவர்கள் மத்தியில் வாழ்வதாகவும், பாதுகாப்பையும் சமாதானத்தையும் கொண்டு வருவதாகவும் அவர் அளித்த வாக்குறுதியை அல்லது உறுதிபூண்ட ஓர் ஆற்றல் வாய்ந்த மறுசீரமைப்பின் தரிசனத்தை சகரியா 8:1-8 விவரிக்கிறது. கடவுளின் மறுசீரமைப்பின் செய்தி எருசலேமில் முதியவர்களும் குழந்தைகளும் மகிழ்ச்சியாக இணைந்து வாழும் காட்சியை நினைவுபடுத்துகிறது. இது தலைமுறை ஒன்றிணைப்பையும்,

பாதுகாப்பான குடும்ப சூழலையும் குறிக்கிறது.

சகரியா கூறும் மறுசீரமைப்பின் இந்த செய்தி இன்றைய வாழ்க்கைக்கு, குறிப்பாக சவால்கள், பிரிவினைகள் அல்லது நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு மிகவும் பொருத்தமானது. பழைய எருசலேம் போல, இன்றைய குடும்பங்களும் பிரிவு, மோதல், நிச்சயமற்ற நிலை ஆகியவற்றை எதிர்கொள்கின்றன. சகரியாவில் கடவுள் அளித்த உறுதிமொழி, குடும்பங்களை நம்பிக்கை சார்ந்த உறவுகளை வளர்க்கவும், ஒப்புரவிற்கு முன்னுரிமை அளிக்கவும், ஒற்றுமையை நம்பிக்கை மற்றும் நன்றி செலுத்தும் செயலாகக் கொண்டாடவும் ஊக்குவிக்கிறது.

இன்றைய உலகில், குடும்பங்கள் மனஅழுத்தம், மோதல்கள் மற்றும் மாறி வரும் சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றன. இத்தகைய சூழலில் சகரியா 8:1-8, ஒற்றுமை மற்றும் மறுசீரமைப்பை நாட அனைவரையும் அழைக்கிறது. அது மட்டுமல்லாமல் உண்மை, அன்பு மற்றும் அமைதி ஆட்சி செய்யும் ஒரு புதிய சமூக உருவாக்கத்திற்கான கடவுளின் விருப்பத்தையும் இப்பகுதி எதிரொலிக்கிறது. திருமறைவலியுறுத்தும் இக்கொள்கைகளைப் ஏற்றுக்கொள்வதன் மூலம், குடும்பங்கள் தங்கள் இல்லங்களை குணமளிக்கும், பாதுகாப்பு வழங்கும் மற்றும் ஊக்கமளிக்கும் இடங்களாக மாற்றமுடியும் என்பதை "அவர்களை மீண்டும் கொண்டு வந்து அவர்கள் மத்தியில் வசிப்பேன்" என்ற கடவுளின் வாக்குறுதியின் வார்த்தைகள் பிரதிபலிக்கிறது.

குடும்ப உறவில் ஏற்படும் விரிசல்களை களைந்து உறவுகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியம். உறவுகளுக்குள் விரிசல் ஏற்படுத்தும்

1. ஈகோ (Ego)
2. தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex)
3. தவறான புரிதல் (Misunderstanding)
4. தனக்கு மட்டுமே சொந்தம் என்ற பொஸசிவ்னஸ் (Possessiveness)
5. சந்தேகம் (Suspicion)
6. மனம் விட்டுப் பேசாதது (Not being open about their feelings)
7. மூன்றாம் நபரின் தலையீடு (The intervention of a third person)
8. துன்புறுத்தல் (Harassment)
9. விட்டுக் கொடுக்காதது (Being Selfish)
10. சோசியல் மீடியா (Social Media)

இவற்றை விடுத்து, குடும்ப உறவுகளை மறுசீரமைப்பு செய்து அதன் வழி குடும்பங்களில் உறவுகளை கொண்டாடுவோம்.

2. இறையருள் நிறைந்த செயல்களை வெளிப்படுத்துதல்: *(கலா. 6:1-10)*

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் பொறுப்புடன், அன்பாக நடந்து கொள்ள வேண்டியதையும், ஒருவரின் பிழையை மற்றவர்கள் கண்டிக்கும் போது இரக்கம் வேண்டும் என்பதையும், மற்றவர்களின் பாரத்தை சுமந்து உதவ வேண்டுமென்பதையும் இந்த பகுதியில் பவுல் வலியுறுத்துகிறார். மேலும், எல்லோருக்கும், குறிப்பாக விசுவாச கூட்டத்தாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் *(கலா. 6:7)*எனும்வசனத்தின் மூலம் நேர்மை மற்றும் நற்பண்பில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார். சுருங்கக்கூறின், அன்பு, பொறுப்பு, மன்னிப்பு, ஒற்றுமை மற்றும் சுமைகள் பகிர்வு போன்ற இறையருள் நிறைந்த செயல்கள் பற்றிய முக்கிய கூறுகளை கலாத்தியர் *6:1-10* எடுத்துரைக்கிறது. மேலும், பழுதடைந்த உறவுகளை திருத்துவதும், ஒற்றுமை மற்றும் அன்பை வளர்க்கும் விஷயங்களில் முனைப்பு காட்டுவதும் மிகவும் முக்கியம் என்பதையும் இப்பகுதி வலியுறுத்துகிறது.

இன்றைய உலகில் விவாகரத்து மிக எளிதாகப் பேசப்படும் ஒரு முடிவாக மாறிவிட்டது. பெண்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நிலைமைகளில் விவாகரத்து நியாயமானதாக இருந்தாலும், பலர் அன்பில் இசைந்து செல்ல வேண்டிய சிறிய விஷயங்களுக்கு கூட ஈகோ பார்த்துக் கொண்டும், குடும்ப உறவுகளின் வற்புறுத்தலுக்கும் நண்பர்களின் தேவையற்ற ஆலோசனைகள் போன்றவற்றிற்கு செவி சாய்ப்பது இளம் வயதினர் அதிகம் விவாகரத்தை நாடி செல்ல காரணமாகி விடுகிறது. "உனக்கு என்ன கை நிறைய சம்பாதிக்கிற; ஆணைச் சார்ந்து பெண் வாழும் சூழலும் இப்போது இல்லை; உன்னால் உன்னையும் உன் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளமுடியும். யோசிக்காதே, தைரியமா ய்முடிவெடு" என்று ஆலோசனைகள் அதிகம் கொடுத்து கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் இன்றைய உறவுகள்.

உறவுகள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. நமது வாழ்க்கைப் பயணம் முழுக்க உடனிருக்கக் கூடியவர்கள் நம் உறவுகள். கடினமான நேரங்களில் ஆறுதல் அளிக்கக்கூடியவர்கள். சில உறவுகள் நமது கஷ்டத்தில் உதவியும் செய்யக்கூடியவர்கள். சில உறவுகளில் எதிர்பார்ப்புகள் இருக்கும், அவற்றை நிறைவேற்றினால் தான் உறவு தொடரும் என்று பலரும் கருதுகின்றனர். அது ஒருவருக்கொருவர் நம்பிக்கையை பொறுத்தது. தன்னால் உதவி செய்ய முடியாவிட்டாலும், உறவை அன்பினாலும் இறையருள் நிறைந்த செயல்களாலும் நிலைக்கச் செய்வது நம்கையில்தான் உள்ளது. இதை அறிந்து கனிவுள்ள செயல்களை

உறவுகளில் வெளிப்படுத்துவோம். அதுவே, வெற்றியுள்ள குடும்ப வாழ்விற்கு வழி கோலும்.

3. இறைவரின் திருவுளப்படி வாழ்தல்: *(மாற்கு 3: 31-35)*

இயேசுவின் தாய் மற்றும் சகோதரர்கள் அவரை சந்திக்க வந்தபோது, தன்னைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரும், சகோதரியும் தாயும் ஆவார். என்று சொல்லி குடும்பம் குறித்து புதிய விளக்கத்தை அளிக்கிறார் *(மாற்கு 3: 31-35)* இயேசு.

பிறப்பால் ஏற்படும் உறவுகளை விட இறையச்சம் கொண்டவர்களையே உண்மையான உறவினர்கள் என அறிவித்தார் இயேசு. கடவுளின் திருவுளத்தின்படி செய்கிறவர்கள்தான், இயேசுவின் பார்வையில், உண்மையான உறவினராக அறிவிக்கிறார். உண்மையான குடும்பம் என்பது உடல்/குருதித்தொடர்பானது அல்ல; இறையவரின் சித்தத்தின்படி நடக்கிறவர்களே என்ற எண்ணத்தை விளக்குதல் ஆகும். இயேசு யூதச் சமுதாயத்தில் மிக முக்கியமானதாக கருதப்பட்ட குடும்ப உறவுகளை மறுமலர்ச்சி செய்து, "உறவு" என்பது உடல் தொடர்பைத் தாண்டி, "இறையவரின் திருவுளத்தைபடி செய்கிறவர்களே என் குடும்பம்" என்று புதிய குடும்பக் கலாச்சாரத்தை உருவாக்குகிறார்.

குடும்பம் ஒரு பெரிய மரம் போன்றது. அதன் வேர்களாகிய பெற்றோர் தம் பிள்ளைகள் நிலைத்திருக்க உதவவேண்டும்; அதன் கிளைகளாகிய உடன்பிறப்புகள் ஒருவரையொருவர் பாதுகாக்க வேண்டும்; அதன் இலைகளாகிய உறவினர்கள் நிழல் போன்று சூழ்ந்து கொள்ளவேண்டும். அப்போது தான் உறவுகள் ஒருவரையொருவர் வளரச் செய்யும்; வலுவாக்கும்; சந்தோஷமாகவும் வைத்துக்கொள்ளும். குடும்ப அமைப்பு வலுவாக இருந்தால் அது சமுதாயத்தையும் நாட்டையும் வலுப்படுத்தும். வலிமையான குடும்பம் உருவாகும்போது அது வலுவான சமூகத்தை உருவாக்கும். வலுவான சமூகமே வலிமையான தேசம் உருவாக காரணமாக அமையும். ". . . எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" *(மத்தேயு 19:6; மாற்கு 10:9)* என்ற இறைசித்தம் வாழ்வில் நிறைவேறுவதன் வழி குடும்ப உறவுகளின் மேன்மையை கொண்டாடி மகிழ்வோம்

"கன்னியாகுமரியில் அதிகரிக்கும் விவாகரத்து: குடும்பநல நீதிமன்றத்தில் *2500* வழக்குகள் விசாரணை" என்ற தலைப்பில் *25/10/2025* அன்று தினமலர் நாளிதழில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதில் இளைய தலைமுறை தம்பதியினரிடம் தற்போது விவாகரத்து என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. படிப்பு, பணம், யாருடைய துணையுமின்றி வாழமுடியும் என்ற அசட்டு தைரியம், குழந்தையின்மை, சந்தேகம், தகாத உறவு போன்ற பல்வேறு காரணங்களால் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று அந்த

கட்டுரையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. குடும்ப வாழ்க்கை என்பது வெறுமனே நான்கு சுவர்களுக்குள் முடிந்து போகும் நிகழ்வல்ல. குடும்பத்தில் விதைக்கப்படும் நல்ல செயல்கள் சமூகத்தின் நற்பண்புகளாக அறுவடையாகும். குடும்பம் என்கிற மாளிகையை தாங்கி பிடிக்கும் தூண்களாக இருப்பவை உறவுகள். உறவுமுறைகள் அன்பின் அடையாளங்கள், பாசத்தின் பிணைப்புகள். ஒவ்வொருவரையும் இணைக்கின்ற சங்கிலிப் பிணைப்புகளாக உறவுகள் உள்ளன. சங்கிலியில் ஒரு கண்ணி அறுந்தாலும் அணியவியலாது. அதுபோல குடும்ப உறவுச் சங்கிலியில் ஒரு உறவு பிரிந்தாலும் அது மேன்மையாக இருக்காது. ஆகவே "குடும்ப உறவுகளை மறுசீரமைப்பின் வழி புதுப்பித்து, இறையருள் நிறைந்த செயல்களால் வலுப்படுத்தி, இறையவரின் திருவுளப்படி வாழ்ந்து" குடும்பங்களை உறவுகளின் கொண்டாட்டமாக மாற்றுவோம்

அருள்திரு. G. சந்தோஷ்

கடவுள் நம்பிக்கைக்குரியவர் என்பதை நினைத்துப் பார்த்தல்

Remembering God's Faithfulness

புல. 3: 21-31 *1 திமொ. 1: 12-17/1கொரி. 1: 1-9*
திபா. 90 *லூக். 17: 11-19*

இதை என் நினைவுக்குக் கொண்டு வருகின்றேன்; எனவே நான் நம்பிக்கை கொள்கின்றேன் (புல. 3: 21).

கடந்து போன பிரச்சனைகள் அனைத்தையும் நினைத்துப்பார்த்து மறந்திருங்கள், என்றென்றும் பெற்ற ஆசிகளை நன்மைகளை ஒருபோதும் நினைத்துப்பார்க்க மறவாதிருங்கள் (Always remember to forget the troubles that passed away. but never forget to remember the blessings that come each day) *என்று பாப்பி ஸீக் என்பவர் குறிப்பிடுகின்றார். ஓராண்டின் இறுதி நேரத்தில் கடவுள் செய்த நன்மைகளையும் ஆண்டவர் நம்பிக்கைக்குரியவர் என்பதையும் நினைத்துப் பார்த்து நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.* (How sharper than a serpent's tooth it is to have a thankless child). *ஒரு நன்றியற்றவரை வைத்திருப்பது என்பது ஒரு பாம்பின் விஷப்பல்லை விட கூர்மையானது என்று ஷேக்ஸ்பியர் தனது கிங் லியர் நாடகத்தில் எழுதுகிறார். எனவே இன்றைய திருமறைப் பகுதிகள் வழியாக கடவுள் நம்பிக்கைக்குரியவர் என்பதை நினைத்துப்பார்த்து கடவுளுக்கு நன்றிகூற அழைக்கப்படுகின்றோம். கடவுள் என நம்பிக்கைக்குரியவர் என்பதை மூன்று சிந்தனைகள் வழியாய் தியானிப்போம்.*

1. கடவுளின் பேரன்பை நினைத்துப்பார்த்தல்: (Remembering God's Steadfast Love) *(புல. 3: 21-31)*

கி.மு.586-ல் பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சார் தனது படைகளைக் கொண்டு எருசலேம் நகரத்தை கைப்பற்றினார். யூதர்கள் சிதறடிக்கப்பட்டனர். பலர் அகதிகளாயினர். கோயில் சுட்டெரிக்கப்பட்டு தகர்க்கப்பட்டது. பொருட்கள் சூறையாடப்பட்டது. இப்படிப்பட்ட கடினமாக சூழலில் மக்கள் உணவின்றி தவித்தனர். குழந்தைகளை கொன்று சாப்பிடும் நிலைக்கு பெண்கள் தள்ளப்பட்டனர். யூத அரசன் செதேக்கியாவை சிறைப்பிடித்து அவரது கண்களுக்கு முன் அவரது இரண்டு குமாரர்களை கொன்றனர். இப்படி சில நாட்களில் எருசலேம் நகரமே மக்கள் வாழத்தகுந்த இடமில்லாதபடி மாறியது. இந்த சூழல்கள் அறிந்த அல்லது நேரடியாக பார்த்த ஒருவர்தான் புலம்பல் 3-ம் அதிகாரத்திலுள்ள பாடல்களை எழுதியிருக்க கூடும் என்று இறையியல் அறிஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

தகர்க்கப்பட்ட அனுபவங்களில் தான் கடவுள் நம்பிக்கைக்குரியவர் என்று இந்த பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார் (புலம். 3: 23). ஏன் அவர் நம்பிக்கைக்குரியவர் என்றால் அவரது பேரன்புக்கு முடிவேயில்லை (3: 22) சுமார் 40 ஆண்டுகள் ஏரேமியா தீர்க்கதரிசி இறைவாக்கு உரைத்தபின்னரே இத்தகைய அழிவு வந்தது. எனவே நகரம் தகர்க்கப்பட காரணம் மக்களின் மீறுதல்களும், பாவங்களும். ஆனாலும் தமது கட்டளைகளை விட்டு விலகிய மக்கள் மீது பேரன்பு கொண்ட கடவுளை இந்த பாடலாசிரியர் நம்பிக்கைக்குரியவர் என்கின்றார். கடவுளின் நிலையான அன்பு தகர்க்கப்பட்ட அனுபவங்களில் மக்கள் பெறுவர் என்றும் அந்த பேரன்புக்கு நிகரான அன்பு இல்லை என்பதையும் இப்பாடலாசிரியர் அறிந்துள்ளார். கடவுள் என்றுமே "கைவிடமாட்டார்" (3: 31) என்ற பாடலாசிரியரின் வார்த்தை கடவுளின் பேரன்பை விளக்குகின்றது. இன்று வருடத்தின் நிறைவு நேரத்தில் வைக்கப்பட்டிருக்கும் இறைமக்கள் தகர்க்கப்பட்ட அனுபவங்களின் மத்தியிலும் வருடம் முழுவதும் தமது பேரன்பை வெளிப்படுத்திய கடவுள் நம்பிக்கைக்குரியவர் என்பதை நினைவுகூர அழைக்கப்படுகின்றோம்.

2. கடவுளின் அழைப்பை நினைத்துப்பார்த்தல்: (Remembering God's Call) *(1 திமொ. 1: 12-17/1 கொரி. 1: 1-9)*

கடவுள் நம்பிக்கைக்குரியவர் ஏனெனில் தம் மகனும் நம் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நட்புறவில் பங்குபெற அவர் அழைத்துள்ளார் (1 கொரி. 1: 9). பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது அழைப்பு என்பது உறவு சார்ந்த ஒன்றாக குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவுடன் உள்ள உறவு என்பது அது தற்காலகமானதல்ல அது நிரந்தர உறவு. கிறிஸ்துவுடன் இணைக்கப்பெற்றதால் எல்லா வகையிலும் செல்வர்களானீர்கள் (1: 5) என்பது கிறிஸ்துவுடன் கூடிய உறவு வாழ்வுக்கு வளமும் நலனும் சேர்ப்பது என்பதை தெளிவுபடுத்துகின்றது. கிறிஸ்து வழியாக பவுல் பெற்ற நல்லுறவை எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றார் (1: 4).

திமொத்தேயுவுக்கு எழுதும்போது கடவுளின் இரக்கத்தினால் அவர் தன்னை அழைத்தார் என்பதற்காக கடவுளுக்கு நன்றி என்று கூறுகின்றார் (1 தீமொ. 1: 13) இப்பகுதியில் பவுல் தனது பழைய அல்லது முந்தைய கால வாழ்வை நினைத்து பார்க்கின்றார். முன்பு இயேசு கிறிஸ்துவை தான் பழித்ததாகவும், துன்புறுத்தினதாகவும், இழிவுபடுத்தினதாகவும் குறிப்பிடுகின்றார். ஆனால் அந்த நிலையிலும் கிறிஸ்துவின் இரக்கத்தினால் பவுல் அழைக்கப்பட்டு அவரது பணியை செய்தார் என்பதை பதிவு செய்கின்றார். இன்று இவ்வருடத்தின் முந்தைய காலங்களை யோசித்து, நினைவுபடுத்தி கடவுளின் உறவில் நாம் வாழ்ந்ததற்காக, அவரது அழைப்பில் பங்குபெற்றனருக்காக அவரது அழைப்பின் நோக்கத்தை இதுவரைக்கும் நிறைவேற்றியதற்காக நன்றி செலுத்த இத்திருமறைப்பகுதி நம்மை அழைக்கின்றது.

3. கடவுளின் அற்புதங்களை நினைத்துப் பார்த்தல்: (Remembering God's Miracles *(லூக். 17: 11-19)*

யூதர்களுக்கு சமாரியர்களோடே எந்த தொடர்புமில்லை. யூதர்கள் சமாரியர்களை சமயதன்மையற்றவர் என்று கருதினர். சமாரிய இஸ்ரயேலின் வடமாகாணத்தின் தலைநகரம். ஓம்ரி என்ற அரசன் இந்த நகரத்தை அடைத்தார் (1 ராஜா. 16:24). 2 அப்.சார்கன் என்ற அரசன் தான் கைப்பற்றிய பல தேசத்து மக்களை இந்நகரத்தில் குடியமர்த்தினான். (2 இராஜா. 17: 6). இந்நகரத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் சொந்த கடவுள்களையும் இஸ்ரவேலின் கடவுளையும் வழிபட்டனர். இவர்களது வழிமரபினர்கள் தான் சமாரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் யூத இனத்தவராகவும் புற இனத்தவராகவும் யூதர்களால் அங்கீகரிக்கப்டாதவர்கள்.

மேலும் யூத பாரம்பரியத்தின்படி தொழுநோயாளிகள் சுகமடைந்தால் அவர்களுக்கு பல சங்காசாரங்கள் செய்யப்பட்டு பின்னரே அங்கீகரிக்கப்படுவர். குறிப்பாக குழு அவரை பரிசோதிக்க ஏழு நாட்கள் தனி அறையில் அடைத்து வைப்பார் (லேவி. 13: 1-7). பொது இடத்தில் இவர்கள் வந்தார் தீட்டு, தீட்டு என்று சத்தமிடவேண்டும். (லேவி. 13: 45-46). மேலும் இவர்கள் சமூக இடைவெளியை பின்பற்றவேண்டும். தோராயமாக 50 அடி தூரத்தை கடைபிடிக்கவேண்டும்.

இத்தகைய பெரும் கட்டுப்பாடுகள் கொண்ட இந்த தொழுநோயாளர் சமாரியர் என்ற நிலையிலும் தொழுநோயாரை என்ற நிலையிலும் ஒதுக்கப்பட்டவர் தூரத்தில் நின்றார் (லூக். 17: 12-13). பத்து பேர் அவருடன் இயேசுவிடம் வந்து தங்களை குணமாக்க வேண்டினர். பின்னர் அற்புதமாக அவர்களது உடலில் சுகம் பெற்றனர்.

இங்கு தூரத்தில் நிற்கின்ற ஒருவரை இயேசு தமது இரக்கத்தினால் எல்லைகள் கடந்து செல்லும் அன்பினால் அற்புதம் செய்து நலமளிக்கிறார். எல்லா கோட்பாடுகளையும், சமய சட்டத்திட்டங்களையும் கடந்து கடவுளின் கருணையால் நலம்பெற்ற அந்த ஒரு சமாரியன் ஆண்டவரின் அருகில் வந்து நன்றி கூறுகின்றான்.

கடவுளின் அற்புதங்களும் அடையாளங்களும் எல்லைகள் கடந்து நம்மை வந்து சேரும் என்பதற்கு இத்தொழுநோயாளர் நலம்பெறுவது ஒரு எடுத்துக்காட்டு. இந்த வருடம் முழுவதும் நம்மை தமது அற்புதங்களினால் வழி நடத்திய கடவுளை நம்பிக்கைக்குரியவர் என்பதை இந்நேரம் எண்ணிப் பார்த்து நன்றி செலுத்த அழைக்கப்படுகின்றோம். ஒரு வருடத்தின் நிறைவு வேளையில் ஒரு புது வருடத்தை எதிர்நோக்கும் நிலையில் கடவுள் கடந்த ஆண்டு முழுவதும் தமது பேரன்பை வெளிப்படுத்தியதற்காக நன்றி கூறுவோம். அவரது அழைப்பை நினைத்து நன்றி கூறுவோம். கடவுளின் அற்புதங்களை நினைத்துப்பார்த்து நன்றி கூறுவோம். கடவுள் நம்பிக்கைக்குரியவராகவும் நம் வாழ்வில் செயல்பட்டார் என்பதை நினைவு கூர்ந்து புதிய ஆண்டில் கடவுள் நம் வாழ்வை நலமுறச்செய்வார் என்ற நம்பிக்கையுடன் வாழ கடவுளிடம் நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. Y. சுஜின் ராஜ்

புதிய மாத நன்றியறிதல் இறைவழிபாட்டு அருளுரைகள்

பெராக்கா:
ஆசிகளின் பள்ளத்தாக்கு

2 குறி. 20: 25-30

நான்காம் நாள் பெராக்கா பள்ளத்தாக்கில் ஒன்றுகூடி, ஆண்டவரைப் புகழ்ந்து பாடினர். எனவே இந்நாள் வரை அவ்விடம் 'புகழ்ச்சிப் பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படுகிறது (2 குறி. 20: 26).

சில இடங்கள், கடவுள் அங்கே செய்பவற்றால் மறக்க முடியாத இடங்களாக மாறுகின்றன. 2 குறி. 20-இல், ஒரு காலத்தில் சாதாரணமான ஒரு பள்ளத்தாக்கு, பெராக்கா பள்ளத்தாக்கு. பின்னர் "ஆசிகளின் பள்ளத்தாக்கு" என என்றென்றும் அறியப்படுகிறது. பெராக்கா என்ற பெயர் எபிரேயத்தில் "ஆசீர்வாதம்" என்று நேரடிப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால், இந்த நிகழ்வுக்கு முன்பு, இந்தப் பள்ளத்தாக்கு இந்தப் பொருளைக் கொண்டிருக்கவில்லை. அது யூதாவில் உள்ள ஒரு சாதாரண புவியியல் இருப்பிடமாக இருந்தது. அங்கே ஆண்டவர் செய்த செயலினால் அது ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காக மாறியது. இந்த மாற்றம் இயற்கையானதல்ல. அது வரலாற்றுச் சிறப்புமிக்க, மற்றும் சமுதாய மாற்றமாக இருந்தது. இந்த மாற்றம் புவியியல் காரணங்களால் நிகழவில்லை, மாறாக யூதாவின் மிக இருண்ட நெருக்கடியில் கடவுளுடைய தலையீட்டால் நிகழ்ந்தது. இந்த மாற்றத்தின் பின்னணி என்ன? யூதா அதன் அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு சிறிய நாடு, பெரிய நாடுகளின் படையெடுப்பினால் அடிக்கடி பாதிக்கப்படக்கூடியதாக இருந்தது. இந்த யூதாவின் மிகவும் நம்பிக்கையான அரசர்களில் ஒருவரான யோசபாத் அரசரின் (கி.மு. 9 ஆம் நூற்றாண்டு) ஆட்சிக் காலத்தின் போது யூதாவின் நிலை எப்படி இருந்ததென்றால் யோசபாத் வட அரசுடன் கூட்டணிகளை வலுப்படுத்தியிருந்தார் மற்றும் நாட்டிலே பலவிதமான சீர்திருத்தங்களை ஏற்படுத்தி இருந்தார். ஆனால் சுற்றியுள்ள நாடுகளோ யூதாவின் சீர்திருத்தங்கள், மறுமலர்ச்சி மற்றும் வளர்ந்து வரும் நிலைத்தன்மை ஆகியவற்றை கண்டு அச்சப்பட்டன. ஆகவே, யூதாவைச் சுற்றியுள்ள அரசுகளான மோவாப், அம்மோன் மற்றும் ஏதோம் யூதாவுடன் நீண்ட காலமாக மோதல்களைக் கொண்டிருந்தன. இவர்கள் யூதாவின் பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரத்தை பலவீனப்படுத்த கூட்டணிகளை உருவாக்கினர். இந்தப் பகுதியில் அமைந்த அவர்களின் கூட்டணியின் நோக்கம் யூதாவின் நிலைத்தன்மையை அழிப்பது, எருசலேமைக் கைப்பற்றுவது, மற்றும் யூதா வழியாகச் செல்லும் வர்த்தகப் பாதைகளைக் கட்டுப்படுத்துவது. இந்தத் தாக்குதல் வெறுமனே

இராணுவத் தாக்குதல் அல்ல மாறாக அரசியல், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இப்படிப்பட்ட சூழலில் யூதா மிகப்பெரிய நெருக்கடியை சந்தித்தது. எப்படியென்றால் யூதா மிகப்பெரிய எதிரிகளின் கூட்டணியை எதிர்கொண்டது. மூன்று வலிமை வாய்ந்த இராணுவங்களால் யூதா சூழப்பட்டது. மோவாபியர், அம்மோனியர் மற்றும் சேயீர் மலை மக்கள் இஸ்ரயேலின் பரம எதிரிகள் ஆவர். அவர்களின் திடீர் கூட்டணி அரசியல் ரீதியாக மிகவும் ஆபத்தானதாகவும், இராணுவ ரீதியாக சமாளிக்க முடியாத ஒன்றாகவும் இருந்தது. பண்டைய காலத்தில், போர்கள் இராணுவ மோதல்களாக மட்டுமல்லாமல், தெய்வங்களுக்கு இடையேயான ஆவிக்குரிய மோதல்களாகவும் பார்க்கப்பட்டன. வெற்றி அல்லது தோல்வி என்பது ஒரு தேசத்தில் கடவுளின் வெற்றி அல்லது தோல்வியாகப் புரிந்துகொள்ளப்பட்டது.

யோசபாத் ராஜாவிடம் அவர்களை எதிர்க்கும் அளவுக்கு வலிமையான எந்த இராணுவத் திட்டமும் இல்லை. படைபலமும் இல்லை. ஆனாலும், ஒரு நெருக்கடியாகத் தொடங்கும் இந்த நிகழ்வு ஒரு கொண்டாட்டமாக முடிகிறது. போர்க்கள அனுபவம் ஒரு ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காக (பெராக்காவாக) மாறுகிறது. ஆண்டவருடைய மக்கள் அவரை முழுமையாக நம்பும்போது, நம்முடைய மிகத் தாழ்வான பள்ளத்தாக்குகளை எவைகளின் வழியாக ஆண்டவர் ஆசீர்வாதத்தின் இடங்களாக மாற்றுகிறார் என்பதைத் தியானிப்போம்.

1. ஆண்டவரின் உடனிருத்தல் வழியாக: *(2 குறி. 20: 22)*

அவர்கள் அவ்வாறே ஆண்டவரைப் புகழ்ந்து பாடத் தொடங்கிய போது, யூதாவை எதிர்த்து வந்தவர்களான அம்மோனியரையும் மோவாபியரையும் சேயீர் மலைநாட்டவரையும் ஒருவருக்கொருவர் பகைவராக்கி முறியடித்தார் ஆண்டவர்.

வரலாற்று ரீதியாக, பள்ளத்தாக்குகள் பெரும்பாலும் போர்க்களங்களாக இருந்தன, ஏனென்றால் படைகள், குன்றுகளுக்கு இடையில் பொருட்கள் மற்றும் துருப்புகளை எளிதாகக் கொண்டு செல்ல முடிந்தது. தெக்கோவாவுக்கு அருகிலுள்ள பெராக்கா பள்ளத்தாக்கு எதிரிகள் தாக்குதல் நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட இடமாக இருந்தது. அந்தப் பள்ளத்தாக்கு யூதாவின் தோல்விக்கான இடமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் ஆண்டவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தலையிட்டார். ஒருவரும் மீந்துபோகாதபடி எதிரிகள் ஒருவருக்கொருவர் எதிராகத் திரும்பினர். யூதா சண்டையிடுவதற்கு

ஆண்டவர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவில்லை அவர்களுக்குப் பதிலாக அவரே சண்டையிட்டார். யூதா மரணத்தை எதிர்பார்த்த இடத்தில், ஆண்டவர் விடுதலையை உண்டாக்கினார்.

2. நிறைவான நன்மை வழியாக: *(2 குறி. 20: 25)*

உடனே யோசபாத்தும் அவர் மக்களும், அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிட வந்தனர். அவர்களிடையே பொருள்களும், ஆடைகளும், விலையுயர்ந்த அணிகளும், அவர்கள் சுமக்க முடியாத அளவுக்கு, மிகுதியாகக் கிடக்கக் கண்டனர். அவை எவ்வளவு மிகுதியாய் இருந்தனவெனில், அவற்றைக் கொள்ளையிட மூன்று நாள்கள் ஆயின.

யூதா இறுதியாக போர்க்களத்தை அடைந்தபோது, அவர்கள் அழிவைக் காணாமல், மாறாக தேவனுடைய அளவற்ற நன்மையின் நிறைவைக் கண்டு திகைத்தனர். மரணத்தை எதிர்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் மலை போலக் குவிந்திருந்த தங்கம், வெள்ளி, ஆபரணங்கள், விலையுயர்ந்த ஆடைகள், பொருட்கள் மற்றும் அளவிட முடியாத செல்வத்தின் முன் நின்றார்கள். அவற்றைச் சேகரிக்க மூன்று முழு நாள்கள் தேவைப்பட்டன. அவர்களுடைய பலத்தை உறிஞ்சி, அவர்களின் எதிர்காலத்தை முடிவுக்குக் கொண்டுவர இருந்த அந்தப் பள்ளத்தாக்கு, கடவுள் செழிப்பை ஊற்றின இடமாக மாறியது. இந்தப் காட்சி திருமறையின் தலைகீழ் மாற்றங்களில் ஒன்றாகும். யூதாவின் உயிரையும் விடுதலையையும் திருட வந்த படைகள், அறியாமலேயே, வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு யூதாவைச் செழிப்பாக்கப் போகும் ஆசிகளைத் தாங்கி வந்தன. "மூன்று நாட்கள் சேகரிப்பு", "அவர்களால் சுமக்க முடியாத அளவுக்கு அதிகம்" என்ற சொற்றொடர்கள் அளவற்ற ஆசீர்வாதத்தைக் காட்டுகிறது. பள்ளத்தாக்கிற்குள் கடவுள் அடியெடுத்து வைக்கும்போது அழிக்க நினைப்பவை ஆசீர்வாதமாக மாறுகிறது. பலவீனப்படுத்த நினைத்தது பலமாக மாறுகிறது. நஷ்டத்தை பரிபூரணமாக்குவதில் ஆண்டவர் வல்லவர் என்பதை உணர முடிகிறது.

ஆண்டவர் தமது மக்களைப் பாதுகாப்பவர் மட்டுமல்ல, எதிர்பார்ப்பதற்கும் அதிகமாக நிறைவான நன்மையைத் தருபவர். நாம் ஒருபோதும் கற்பனை செய்யாத, எதிர்பாராத வாய்ப்புகள் மற்றும் அற்புதமான திருப்புமுனைகளால் செழுமைப்படுத்தப்படுகிறோம். ஒரு காலத்தில் நம்மை அச்சுறுத்திய இடங்கள், ஆண்டவருடைய தயவு தங்கும் இடங்களாக மாறுகின்றன. ஆண்டவர் பள்ளத்தாக்கிற்குள் நுழையும்போது, அது ஆசீர்வாதத்தின் களஞ்சியமாக மாற்றப்படுகிறது.

3. தொழுகை மற்றும் சான்று வாழ்வின் வழியாக: *(2 குறி. 20: 26)*

நான்காம் நாள் பெராக்கா பள்ளத்தாக்கில் ஒன்றுகூடி, ஆண்டவரைப் புகழ்ந்து பாடினர். எனவே இந்நாள் வரை அவ்விடம் 'புகழ்ச்சிப் பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படுகிறது.

"பெராக்கா" யூதேயாவின் வனாந்தரத்தில், தெக்கோவாவுக்கு அருகில் அமைந்துள்ளது. அறிவியல் மற்றும் புவியியல் ரீதியாக இந்தப் பள்ளத்தாக்கு ஒரு வறண்ட பாலைவனப் பகுதியாகும். நீர் ஓட்டம் அதிகமாக இல்லாத, தாவரங்கள் குறைவாகவே உள்ள, வெப்பநிலை மிகவும் அதிகமாக உள்ள பகுதி. இராணுவ வழித்தடமாக, மற்றும் போருக்குரிய அபாயகரமான இடமாக இருந்த போதும் ஆண்டவர் தமது புதுமையான ஆற்றலைக் காண்பிக்க இந்த வறண்ட, வெப்பமான, இடத்தைத் தேர்ந்தெடுத்தார்.

யூதா மக்கள் நான்காம் நாளில் அந்தப் பள்ளத்தாக்கில் கூடிவந்தபோது, அவர்களின் முதல் பதில் தாங்கள் பெற்ற செல்வத்தைக் கொண்டாடவில்லை, மாறாக ஆண்டவரைத் துதித்தார்கள்; மேலும் இந்த தொழுகைச் செயல் அந்த இடத்தின் அடையாளத்தையே மாற்றியது. அவர்கள் தங்கம் அல்லது பொக்கிஷத்தைக் கண்டுபிடித்ததால் மட்டும் அந்தப் பள்ளத்தாக்கு ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காக மாறவில்லை; மக்கள் தொழுது, நன்றி செலுத்த, தங்கள் குரல்களைப் பொதுவில் எழுப்ப, மற்றும் ஆண்டவருடைய வல்லமையுள்ள கரத்திற்குச் சாட்சியளிக்க நேரம் ஒதுக்கியதாலேயே அது பெராக்கா - "ஆசீர்வாதம்"ஆக மாறியது. அவர்களின் தொழுகை ஒரு தற்காலிக அற்புதத்தை ஒரு நிரந்தர நினைவுச் சின்னமாக மாற்றியது. அவர்கள் தொழுததால், தேசம் ஓய்வைப் பெற்றது, யோசபாத்தின் அரசு அமைதி வாழ்வை அனுபவித்தது, அந்தப் பள்ளத்தாக்கு ஒரு நினைவுச் சின்னமாக மாறியது. "இன்றுவரை" நீடிக்கும் ஒரு சாட்சி. தொழுகை அந்தப் பள்ளத்தாக்கின் பெயரை நிரந்தரமாக மாற்றுகிறது.

பெராக்கா பள்ளத்தாக்கு நமக்குக் கற்பிப்பது அச்சமாகத் தொடங்குவது ஆசீர்வாதமாக முடியும். ஆண்டவர் போராடுகிறார், ஆசியை அளிக்கிறார், மற்றும் அமைதியை நிலைநாட்டுகிறார். நம் வாழ்விலுள்ள எந்தப் பள்ளத்தாக்கும் நோய், இழப்பு, நிதிப் போராட்டம், கவலை ஆகியவற்றின் நடுவில் நாம் ஆண்டவரைத் தேடும்போது, அவருடைய வார்த்தையை நம்பும்போது, மற்றும் கீழ்ப்படிதலில் அவரை தொழும் போது ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காக மாற முடியும். ஆண்டவர் நமது கவலையைச் சாட்சியாகவும், ஆபத்தை விடுதலையாகவும், பள்ளத்தாக்குகளை ஆசிகளாகவும் மாற்றுவதில் வல்லவர்.

திரு. P.C. பெரின் போபி

01.03.2026

நலமருளும் ஆண்டவர்

விப. 15: 22-27

" . . . நான் எகிப்திற்கு வரச் செய்த கொள்ளை நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன். ஏனெனில் நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர்" என்றார் (விப. 15: 26).

ஆப்பிரிக்காவின் ஒரு சிறிய கிராமத்திற்கு எலிசா என்ற இளம் அருட்பணியாளர் அனுப்பப்பட்டார்.அந்த கிராமத்தில் மருத்துவ வசதி எதுவும் இல்லை மக்கள் நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். எலிசா மருத்துவப் படிப்பு படிக்கவில்லை; ஆனால் இயேசுவின் அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தீவிரமான அழைப்பு மட்டும் இருந்தது. ஒரு நாள் கிராமத்தில் மிரி என்ற 7 வயது சிறுமி கடுமையான ஜுரத்தில் இருந்தால் மருந்தும் இல்லை மருத்துவமனையும் இல்லை. சிறுமியின் தாய் அழுது கொண்டே எலிசாவை நோக்கி எங்களை காப்பாற்ற கூடியவர் ஒருவரே நீங்கள் சொல்வது போல் அந்த இயேசு என்றாள். எலிசா மனதுக்குள் கலங்கினான். தான் மருத்துவர் அல்ல என்ன செய்யலாம்? அவள் திருமறையை திறந்த போது வி.ப. 15:26 "நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர் என்ற வார்த்தை கண்களுக்கு விழுந்தது. எலிசா சொன்னாள். ஆண்டவரே நான் ஒன்றும் செய்ய முடியாது ஆனால் நீர் "யாவே ராஃபா" நீர் குணமாக்கும் இந்த கிராமம் உம்மை அறிய வேண்டும் என்று கூறி சிறுமியின் அருகில் மண்டியிட்டு கண்ணீருடன் நம்பிக்கையுடன் யாவே ராஃபா, இந்த குழந்தையை தொடுங்கள் என்று வேண்டிக் கொண்டாள். அடுத்த நாள் காலையில சிறுமி மிரி எழுந்து விளையாடிக் கொண்டிருந்தார் ஜுரம் முற்றிலும் நீங்கியிருந்தது. அந்த கிராமத்தில் அனைவரும் அதிசயித்தார்கள். சிறுமியின் தாய் ஆனந்த கண்ணீருடன் சொன்னாள் யாவே ராஃபா, ஆண்டவர் மக்களுக்கு குணமளிக்கிறார் என்று மக்கள் பலர் ஆண்டவரை அறிந்தார்கள்.

யாவே ராஃபா (Jehovah Rapha) *என்பதன் பொருள் குணமாக்கும் ஆண்டவர்* (The Lord who Heals). *யாவே ராஃபா என்ற எபிரேயச்சொல்; சீர் செய்தல், புதுப்பித்தல், குணமாக்குதல் என்று அர்த்தம் தருகிறது*

நான் எகிப்துக்கு வர செய்த கொள்ளை நோய்கள் உன் மேல் வர விடமாட்டேன். ஏனெனில் நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர் என்று இந்த புதிய மாதத்தில் ஆண்டவர் நமக்குச் சொல்லுகின்றார். இந்த வார்த்தை இஸ்ரவேல் மக்களுடைய ஆண்டவர் இக்கட்டு சூழ்நிலையில் பல தடைகளைத் தாண்டி எங்கள் வாழ்வு மீண்டும் உயரும் என்ற எண்ணத்தோடு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பயணமாய் சென்று கொண்டிருக்கின்ற பயணத்தில் மாராவின் சோதனை

சூழ்ந்து கொள்கின்றது. நம்பிக்கை இழந்து போன மக்களின் வாழ்வில் ஆண்டவர் சொன்ன வார்த்தை "நான் உங்களை குணமாக்குவேன்". ஆண்டவரின் குணப்படுத்துதலை, இந்த புதிய மாதத்தில் ஆண்டவரின் இறையாசியை நிறைவாய் பெற நாம் என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்திப்போம்.

1. குணப்படுத்தும் ஆண்டவரை நோக்குங்கள்: *(விப. 15: 25)*

இஸ்ரயேல் மக்கள் சிவப்பு கடலை கடந்தார்கள் மூன்று நாள் தண்ணீர் இல்லா பயணம் சரீரத்தின் களைப்பு தாகத்தின் தவிப்பு இறுதியில் மாராவில் நீரை காணகின்றனர். மகிழ்ச்சி கொண்ட மக்களுக்கு கசப்பின் செய்தி நிறைந்திருந்தது. நீர் கசந்ததாய் இருந்ததினால் இஸ்ரவேலரால் மாராவின் கசந்த நீரை குடிக்க முடியவில்லை. ஏற்கனவே பல சோதனைகளை சந்தித்து கைவிடப்பட்ட, கனவுகள் உடைந்த உறவுகள் நெருக்கடியான சூழல்கள் ஏமாற்றம் மனவேதனை மிகுந்து வேளைகள் நாங்கள் நிறைவான அனுபவங்களை காண முடியாதோ என்று ஏங்கி இச்சூழலியில் ஆண்டவரை நோக்கின வேளையில் ஆண்டவர் காட்டிய மரக்கிளையினால் கசந்த நீர் இனிப்பாக மாறியது "நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர்" என சொன்னார்.

திபா. 107: 20 "அவர் தமது வார்த்தையின் மூலம் குணமாக்குகிறார்" (யாக். 5: 15) நம்பிக்கை ஜெபம் நோயாளியை குணமாக்கும் நாம் கடவுளை நோக்கி விண்ணப்பம் செய்கின்ற வேளையில் அவர் நம்மை குணமாக்குகிறார்.குணமாக்கும் கடவுளுடைய வல்லமையினை உணர்ந்திருக்கின்ற நாம் அவரை நோக்கி பார்க்கும்போது, முழுமையான குணப்படுத்துதலை பெற்றுக் கொள்ள இயலும்.

2. குணமாக்கும் கடவுளுக்குக் கீழ்ப்படியுங்கள் *(விப. 15: 26)*

குணமாக்கும் ஆண்டவர், தம்முடைய மக்கள் நிறைவான அனுபவங்களை வாழ்வில் காண வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கு ஆண்டவருக்கு நாம் கீழ்படிய வேண்டும்.இங்கு இஸ்ரவேல் மக்களுக்கு இனிமையான நீரை கொடுத்த ஆண்டவர் அவர்களிடத்திலே மூன்று நிபந்தனைகளை பின்பற்றும்படி கொடுக்கின்றார்

1) ஆண்டவரின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்

2) ஆண்டவரின் பார்வைக்கு நலமானவைகளை செய்ய வேண்டும்

3) ஆண்டவரின் கட்டளைகளைப்பின்பற்றி, சட்டங்களை கைக்கொள்ள வேண்டும்

ஆண்டவர் தம்முடைய மக்களை குணமாக்குவது மாத்திரம் அல்ல, தம்முடைய மக்கள் அவருக்கு கீழ்ப்படிகின்ற வேளையில் தொடர்ந்து அவர்கள் வாழ்வில் உடனிருந்து வழி நடத்திச் செல்கின்றார். வழிநடத்தப்படும் மக்கள்ஆண்டவரின் சத்தத்தை கேட்டு அவருக்கு

கீழ்ப்படிகின்ற வேளையில் ஆண்டவர் குணப்படுத்துகிறார். இங்கு மாராவின் பயணத்தைத் தொடர்ந்து ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை ஏலிம் என்று சொல்லுகின்ற மேலான பகுதிக்கு வழி நடத்துகிறார் (விப. 15: 27). ஏலிம் என்பது 12 நீரூற்றுக்களும் 70 பேரீச்ச மரங்களும் நிறைந்த செழுமையான பகுதி. நாம் ஆண்டவருக்கு கீழ்ப்படிகின்ற வேளையில் ஆண்டவர் நம்மையும் மேலான ஆசிகளுக்கு நேராக வழி நடத்திச் செல்வார்.

யாவே ராஃபா, குணமாக்கும் ஆண்டவராக இருந்து நம்முடைய ஆன்மா, மனம், உடல், குடும்ப உறவுகள் எல்லாவற்றையும் புதுப்பிக்கிறார்

மத்தேயு 9: 35-இல் இயேசு எல்லா நோய்களையும் குணமாக்கினார், கண் திறந்தார். குஷ்டரோகியை சுத்திகரித்தார், ஊனரை எழுப்பினார் இரத்தப் போக்குடைய பெண்ணை குணப்படுத்தினார். திபா. 147: 3-இல் உடைந்து இருதயம் உள்ளவர்களை அவர் ஆறுதலாக்குகிறார். அவருடைய தழும்புகளால் குணமானீர். எசா. 53: 5 "பாவங்களில் இருந்து குணமாக்குகிறார் தேசத்திற்கு நான் குணமளிப்பேன்

நமது வாழ்வுச் சூழலில் நோயினால் பாதிக்கப்பட்ட வேதனைகளுடன் கைவிடப்பட்ட நிலையில் வாழ்வில் விளிம்பில் போராடுகிறவர்களுக்காக இறைவேண்டல் செய்து குணமாக்கும் திருப்பணியை ஊக்கப்படுத்துவது நமது கடமை. இதனால் மானுடம் நலம் பெற்று முழுமையுடன் வாழ ஆண்டவர் கிருபை செய்கிறார். இந்த புதிய மாதத்தின் துவக்க நாளில் ஆண்டவர் யாவே ராஃபாவாக இருந்து சகல தீமைகளுக்கும் நம்மை விலக்கி உடனிருந்து நலம் அருளும் ஆண்டவராய் காணப்படுகிறார். நாம் சந்தித்திருக்கின்ற புதிய மாதத்தில் ஆண்டவரை நோக்குவோம், ஆண்டவருக்கு கீழ்ப்படிவோம், ஆண்டவர் நம்மோடு இருந்து சகல தீமைக்கும் நம்மை விலக்கி உடனிருந்து நலம் அருள்வாராக!

அருள்திரு. C.S. **வெஸ்லி ஜெபராஜ்**

01.04.2026

துணையாளராய் இருக்கும் ஆண்டவர்

திபா. 54

இதோ! கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கிறார்; என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கிறார் (திபா. 54: 4).

ஸ்வீட்சர்லாந்து நாட்டின் பெர்ன் என்ற பகுதியில் ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அது பாயும் வேகத்தை பார்த்தால் பள்ளத்தாக்கில் இருக்கும் கிராமத்தை அடியோடு அடித்து சென்று விடும் போல் தோன்றும். ஏனென்றால் அந்த நீர்வீழ்ச்சியின் உயரம் 900 அடி செங்குத்தான பாதையில் இருந்து தண்ணீர் மிக வேகமாக பாயும். ஆனால் இந்த நீர்வீழ்ச்சியினால் எந்த பாதிப்புமே ஏற்படுவதில்லை. காரணம் இந்த நீர்வீழ்ச்சியில் காற்று வேகமாய் வீசுவதால் தண்ணீர் மென்மையான சாரல்களாக மாறி; பின்பு பள்ளத்தாக்கில் உள்ள பசுமையான பகுதிக்கு நீர் துளிகளாக சாரலாக மாறிவிடும். காற்று எப்படி பள்ளத்தாக்கில் இருக்கின்ற மக்களுக்கு துணையாளராய் இருக்கிறதோ அதேபோன்று ஆண்டவரும் நமக்குத் துணையாளராக இருக்கின்றார் என்பதே ஆண்டவர் அருளும் செய்தி. புதிய மாதம் என்பது ஒரு புதிய பக்கத்தைத் திருப்புவது போல. பழைய கவலைகள், தோல்விகள், பயம், துயரம் ஆகியவற்றை பின்னால் விட்டு, புதிய நம்பிக்கை, புதிய விசுவாசம், புதிய எதிர்பார்ப்பு, புதிய வாய்ப்புகள் ஆகியவற்றுடன் நாம் முன்னோக்கி செல்ல வேண்டிய காலம் இது. திருப்பாடல் 54 இல் அதன் பின்னணியத்தை பார்க்கும் போது தாவீது அரசரின் வாழ்வும் குழப்பம் நிறைந்ததாகவே இருந்தது. அவரது வாழ்வில் அது மிகப் பெரிய ஓட்டப்பந்தயக் காலம். சவுல் அரசன் தாவீதை கொல்ல வேண்டுமென்று தேடிய போது தாவீது காட்டுக்குள் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தார். தாவீதுக்கு பாதுகாப்பளிக்க வேண்டிய சீப் ஊரார் (Ziphites) தாவீது எங்களிடத்தில் மறைந்திருக்கிறான் என்று கூறி (1 சாமுவேல் 23:19; 26:1) அவரை துரோகப்படுத்தி சவுலிடம் புகார் செய்தனர். தாவீது காடுகளில் ஒளிந்து ஒளிந்து கொண்டிருந்தபோது மனிதரால் கிடைக்கக்கூடிய எந்த உதவியும் கிடைக்கவில்லை, நண்பர்கள் தூரத்திலிருந்தார்கள், உறவினர் உதவ முடியவில்லை. ஆகவே துரோகமும், மரண அச்சமும் நிரம்பிய சூழ்நிலையில் தாவீது கடவுளை நோக்கி ஏறெடுத்த மன்றாட்டே திருப்பாடல் 54. எனவே தான் இந்த திருப்பாடலை ஒரு இரக்கத்தின் வேண்டுதல் திருப்பாடல் (Lament Psalm) மற்றும் நம்பிக்கையின் அறிக்கை (Statement of Trust) என்று கூறுவர். மனிதர் துரோகிப்பார்; ஆனால் தேவன் ஒருபோதும் துரோகிக்கமாட்டார் என்பதைக் கற்றுக்கொடுக்கும் திருப்பாடல். கடவுள் உதவி செய்கிறவர்

மட்டுமல்ல; தாங்குகிறவரும் ஆவார். ஏனென்றால் மனித வாழ்க்கையின் அடித்தளம் இரண்டு உண்மைகளில் நிற்கிறது:

1. நாம் பலவீனமானவர்கள்.

2. ஆண்டவர் வல்லமையானவர்.

எபிரேயத்தில் 'Ozer' என்ற வார்த்தை "வீரனாய் வந்து காப்பவர்" என்றும், "அதிர்ச்சி தரும் சக்தியால் காப்பவர்" என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது, நம் வாழ்க்கையில் எதிர்பாராத சூழ்நிலைகள் வரும் போது, தேவன் ஒரு வலிமையான போர்வீரனாய் நிற்பவர். இன்றைய உலகில் மனிதர்கள் பல விஷயங்களைத் துணைப்பொருளாகக் கருதுகிறார்கள்: பணம், மனித உறவுகள், அதிகாரம், அறிவு, மருத்துவம், தொழில், சமூக ஆதரவு போன்றன. ஆனால் இவை அனைத்தும் மாறும், மனிதன் மாறலாம், உலகம் மாறலாம், சூழ்நிலை மாறலாம்; ஆனால் ஒரே ஒருவர் மாறமாட்டார் அவர் தான் நம் ஆதரவாய் இருக்கும் ஆண்டவர். எனவே புதிய மாதத்தில் தேவன் நமக்குத் துணைபுரிபது எப்படி? என்று தியானிப்போம்.

1. ஆண்டவர் எந்நேரமும் வழிநடத்தும் துணையாளர்:

இதோ கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கிறார்; (திபா. 54: 4)

எல்லா சூழல்களிலும் ஆண்டவர் நம்மை வழிநடத்துகின்றார் என்பதற்கு இந்த திருப்பாடல் ஒரு சரியான எடுத்துக்காட்டு. தன்னுடைய ஆற்றலின் மீதோ, தன்னுடைய நண்பர்கள் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்றோ அவர் நினைக்கவில்லை. ஆண்டவர் மட்டும் தான், தன்னை இக்கட்டிலிருந்து முழுமையாகக் காப்பாற்ற முடியும் என்று நம்புகிறார். எனவே, அவரையே முழுமையாக நம்பி அவரிடத்தில் முறையிடுகிறார். மேலும் திபா 139: 3-இல் நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னை சூழ்ந்து இருக்கிறீர் என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரியும் என வாழ்வில் எல்லா நேரங்களிலும் ஆண்டவர் வழிநடத்துகிறார் என்பதை உணருகிறார். இதில் நடந்தாலும் படுத்தாலும் எல்லா சூழ்நிலையில் ஆண்டவர் நம்மை வழி நடத்துகின்றார்; இங்கே நடப்பது என்பது வாழ்க்கையின் செயற்பாடு, அலைச்சல், வேலை, ஓட்டம் ஆகிய அனைத்தையும் குறிக்கும். அதாவது, நான் புறப்படும்போது அவர் அறிகிறார் என்பதாகும். படுப்பது என்பது "படுக்கும்," "இளைப்பாறும்," "தனிமையில் இருக்கும்" என்பதைக் குறிக்கிறது. நான் அமைதியாக இருக்கும்போதும், அழுதுகொள்ளும் நேரத்திலும், தனிமையில் இருக்கும் நேரத்திலும் அவர் எனக்குத் தெரியும். "என் எல்லா வழிகளையும் அறிந்தீர்" என்பது பாதை மட்டும் அல்ல, உள்ளத்தின் வழி, உள்ளடக்க நோக்கம், எதிர்காலம், பழக்கம், போராட்டம் என எல்லாவற்றையும்

குறிக்கிறது. நாம் எதைப் பற்றி குழம்புகிறோமோ, எதன் வழியில் போக தெரியாமல் தடுமாறுகிறோமோ அந்த நேரங்களில் எல்லாம் அவர் நம் வழிகளை அறிந்தவர்; ஆகவே அவரே நம்மை வழிநடத்தும் துணையாளர். புதிய மாதத்தில் எந்த பாதையைத் தேர்ந்தெடுப்பது? எந்த முடிவை எடுப்பது? எந்த வாய்ப்பை பயன்படுத்துவது? எந்த அபாயத்திலிருந்து விலகுவது? என்ற கேள்விகளோடு நாம் இருக்கலாம் ஆனால் ஆண்டவர் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் நான் நடக்கும் பொழுதும், நான் படுக்கும் பொழுதும், என் வாழ்வின் எல்லா பாதைகளிலும் எந்நேரமும் ஆழமாக அறிந்தும் கவனித்தும் இருப்பவர்.

2. ஆண்டவர் இன்னலின்று அமைதியருளும் துணையாளர்:

ஏனெனில், அவர் என்னை எல்லா இன்னல்களினின்றும் விடுவித்துள்ளார்; என் எதிரிகளின் வீழ்ச்சியை நான் கண்ணாரக் கண்டுள்ளேன்" (திபா. 54: 7)

நம் வாழ்க்கையின் மிகப் பெரிய பிரச்சனை அமைதி இல்லாத மனம். மனிதன் எல்லா காலத்திலும் தேடியது அமைதி. வீடு இருந்தாலும் மன அமைதி இல்லாவிட்டால் வாழ்க்கை துயரமானது. பணம் இருந்தாலும் மன அமைதி இல்லாவிட்டால் இரவு தூக்கம் கெட்டுவிடும். அதிகாரம், பதவி, சமூக மரியாதை இருந்தாலும் அமைதி இல்லாவிட்டால் அது வெறும் ஓடு (shell) மட்டுமே. இன்றைய மனிதனின் உண்மையான பிரச்சனை: வெளி பிரச்சனை அல்ல; உள்ளம் கலங்குவது. அதே நேரத்தில் உலகம் தரும் அமைதி தற்காலிக அமைதி. உலகம் தரும் அமைதி என்பது சூழ்நிலை சரியாக இருக்கும்போது கிடைக்கும் அமைதி; பணம் இருந்தால் அமைதி, எல்லாரும் எனக்குப் பக்கம் இருந்தால் அமைதி; நோய் இல்லாததால் அமைதி; எதிரிகள் இல்லாததால் அமைதி ஆனால் அது ஒரு "தற்காலிக அமைதி" மட்டுமே. ஒரு துன்பம் வந்தால் முடிந்துவிடும். ஒரு மனிதர் நம்மை காயப்படுத்தினால் உடைந்து போகும். சுற்றுப்புறம் மாறினால் காணாமல் போகும். திபா 54 இல் தாவீது அரசரின் வாழ்வும் குழப்பம் நிறைந்ததாக அமைதியிழந்து காணப்பட்டது. காரணம், அவரது வாழ்வில் அது மிகப் பெரிய ஓட்டப்பந்தயக் காலம். சவுல் அரசன் தாவீதை கொல்ல வேண்டுமென்று தேடிய போது தாவீது காட்டுக்குள் ஒளிந்து நிம்மதி இழந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் ஆண்டவர் மீது நம்பிக்கைக் கொண்டவராய் அவர் துணைவராய் இருந்து அமைதியான வாழ்வை அருளுவார் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தான். அது அவனது இன்னல்கள் நிறைந்த வாழ்வில் ஆண்டவரின் துணையைப் பெற்றுக் கொள்ள காரணமாக அமைந்தது.

நம்முடைய வாழ்வில் சோதனைகள், தோல்விகள், போராட்டங்கள் மத்தியில் ஆண்டவர் இயேசு தரும் அமைதி இன்னல்கள் நிறைந்த

சூழ்நிலை மத்தியிலும் நிலைக்கும் தெய்வீக அமைதி. இயேசுவின் அமைதி சூழ்நிலையை மீறி நிற்கும் சக்தி. இயேசு தரும் அமைதி நம் உட்புறத்தைக் குணப்படுத்தும். மனதில் உள்ள பயம் சந்தேகம் குற்ற உணர்வு கடந்தகால மன உளைச்சல் மக்கள் காயப்படுத்தியது இவற்றைக் குணப்படுத்தும் தெய்வீக சமாதானம். (பிலி. 4:7) புதிய மாதத்தில் எத்தனை மனஅழுத்தங்கள் வந்தாலும், எத்தனை எதிர்பாராத மாற்றங்கள் வந்தாலும், ஆண்டவர் நமக்கு நிறைவான அமைதி வாழ்வை தருவார். எத்தனை ஆதாரங்கள் இருந்தாலும்கூட, மனிதர்கள் உதவ முடியாத நேரம் வரும். ஆனால் தேவன் எப்போதும் உதவுவார். யோவான் 14:27 -இல் அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம் என இயேசு கிறிஸ்து கூறுகிறார் ஆகவே

இந்த புதிய மாதத்திலும், உங்கள் குடும்பம், வேலை, கல்வி, நோய்கள், சோதனையான நேரங்கள், மனவருத்தங்கள் மத்தியிலும் ஒரு குரல் ஒலிக்கிறது: "ELOHIM OZER LI" *"ஆண்டவர் என் துணைவர்." இது ஒரு வார்த்தை அல்ல, இது ஒரு வாக்குத்தத்தம். இது ஒரு அறிக்கை அல்ல, இது ஒரு அனுபவம். இது ஒரு வசனம் அல்ல, இது ஒரு வாழ்க்கை மாற்றம்.*

அருள்திரு. J. ஜாண் லெனின்

01.05.2026

ஆண்டவரே நம்மைத் தப்புவிக்கும் பாறை

1 சாமு. 23: 24-29

அதனால், சவுல் தாவீதைத் தொடர்வதைக் கைவிட்டு பெலிஸ்தியரை எதிர்க்கத் திரும்பி சென்றார். ஆதலின், அவ்விடம், 'பிரிக்கும் பாறை' என்று அழைக்கப்பட்டது (1 சாமு. 23: 28).

தாவீது சவுலுக்கு பயந்து தன் உயிரை காத்துகொள்ள இஸ்ரவேலுக்கு புறம்பான மாகோன் வனாந்தரத்தில் மலைகளிலும் குகைகளிலும் தங்கி அலைந்து திரிந்தார். இதை அறிந்த சவுல் தாவீதை கொல்லுவதற்கு துரத்துகிறார். அந்த வேளையில் தூதன் ஒருவன் வந்து சவுலினிடத்தில் பெலிஸ்தியரை எதிர்க்கும் படி வழிகாட்டுகிறான் சவுல் பெலிஸ்தியரை எதிர்க்க சென்றதால் தாவீது தப்பித்து கொள்கிறார். சவுலின் கையிலிருந்து தங்களை காப்பாற்றிய கர்த்தருக்கு நன்றி செலுத்தும் பொருட்டு அந்த இடத்திற்கு "சேலா அம்மாலிகோத்" தப்புவிக்கும் பாறை (or) பிரிக்கும் பாறை என்று பெயரிடப்படுகிறது. புதிய மாதத்தில் ஆண்டவர் தரும் நம்பிக்கையின் வார்த்தை தான் உள்ளன. தப்புவிக்கும் பாறை என்பதாகும். ஏந்நிலைகளில் எல்லாம் ஆண்டவர் ஆபத்தில் தப்பிக்கும் வாழ்வு அருள்கிறார் என்பதை திருமறை நின்று தியானிப்போம்.

1. உடனிருந்து தப்புவிக்கும் பாறை *(திபா. 20: 1)*

தாவீது தன் வாழ்நாளில் ஆண்டவரோடு மன்றாடி வாழ்வு பெறுகிறார். தாவீது அனுபவத்தினின்று அவர் கூறும் போது சங். 20: 1 நெருக்கடி வேளையில் உமக்கு ஆண்டவர் பதிலளிப்பாராக கடவுளது பெயர் உம்மை பாதுகாப்பதாக மனம் விருப்பம் நிறைவேற்றுபவர் ஆண்டவர் தப்புவிக்கும் பாறையாக இருக்கிறார் ஆபத்தான சு+ழ்நிலையிலிருந்து பாதுகாப்பை தரும் ஆண்டவர் நம் அருகில் இருக்கிறார். திபா. 91: 15 அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது அவர்களுக்கு பதிலளிப்பேன். துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களை தப்புவித்து அவர்களை பெருமைப்படுத்துவேன் என்று ஆண்டவர் உடனிருப்பேன் வாக்குரைக்கிறார். சாலோமன் ஞானி நீதி. 14: 27 ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் வாழ்வளிக்கும் ஊற்றாக சாவை விளைவிக்கும் கன்னிகளுக்கு அது மனிதரை தப்புவிக்கும் என்று குறிப்பிடுகிறார்.

2. உறுதியுடன் பற்றிக்கொள்வோம் தப்புவிக்கும் பாறையை:

கைவிடாமல் தன்னை காப்பாற்றிய கர்த்தருக்கு நன்றி செலுத்தும் நிலையில் சேலா அம்மாலிகோத் என்று பெயரிடப்பட்டது.

சேலா என்பது பல அர்த்தங்களை கொண்டது இடத்தை பொறுத்து அர்த்தங்கள் அமையும். இங்கே குறிப்பிடும் சேலா என்பதின் பொருள் இரு கருத்துக்களை இணைக்கிற வார்த்தை வெளிப்படுகிறது. இடை நிறுத்தம் செய்து கவனி தியானி தாவீதின் வாழ்வில் இணைக்கின்றதாக இருக்கிறது. கவனித்து தியானித்து ஆண்டவரோடு இணைகின்றது. வாழ்வு உயர்த்தப்படுகிறது. தவறு செய்த தாவீது எப்போது தான் செய்தது தவறு என்று உணர்ந்து ஆண்டவரிடம் அறிக்கையிட்டு பற்று கொண்டாரே (51 சங்கீதம்) அப்போது வாழ்வு பெறுகிறார் அப் 13:22 தாவீதை இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன் என்று குறிப்பிடுகிறார் ஆண்டவர்.

திபா. 27: 5 குன்றின் மேல் என்னை பாதுகாத்து வைப்பார்.

திபா. 40: 2 கற்பாறையின் மேல் காலுன்றி நிற்க செய்தார் என் காலடிகளை உறுதிப்படுத்தினார்.

திபா. 62: 6 உண்மையாகவே என் கற்பாறையும் மீட்பும் அவரே எனவே நான் சிறிதும் அசைவுறேன்.

திபா. 81: 6

தாவீது அனுபவமாக உறுதியுடன் ஆண்டவரை பற்றிக் கொள்ளும் போது அவர் நமக்கு தப்புவிக்கும் பாறையாக நமக்கு புகழிடம் தருபவராக இருக்கிறார். Rock of Ages என்று பாடல் எழுதியவர் Rev. அகஸ்டல் டாப்லடி என்பவர் மலைப்பகுதியில் போதகர் தியானத்திற்கு சென்ற போது புயல் ஒன்று வேகமாக அடிக்கின்றது மழை பெய்கின்றது. இவர் ஒதுங்குவதற்கு வழி தேடுகின்றார் ஒரு சாத்தியமும் இல்லை சுற்றி சுற்றி பார்க்கிற ஒரு செங்குத்தான பாறை, அதில் வெடிப்புகள். இரு பாறை பிரிந்து நிற்கின்ற அந்த பகுதியில் ஒதுங்குகின்றார் பாதுகாக்கப்படுகின்றார். அப்பொழுது அவர் உள்ளத்தில் உணர்வு பூர்வமாய் எழுந்த பாடல் கிறிஸ்துவின் நிழலில் புகலிடம் தேடுவது பற்றியும் பாவங்களிலிருந்து கிடைக்கும் விடுதலைகளை பற்றியும் ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டு பாடிய பாடல் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் ஆழப்படுத்துகிறது.

"சேலா அம்மாலிகோத்" தப்புவிக்கும் பாறையாகிய ஆண்டவரை பற்றிக்கொண்டு புதிய மாதத்தில் பயணம் செய்வோம் உடனிருக்கிறார் நம்மை உன்னதங்களில் உட்கார செய்து நம்மை உயர்த்துவார்.

சுவி. J. பிரபின் செல்வமணி

01.06.2026

வெற்றிதரும் ஆண்டவர்

விப. 17: 8-16

மோசே பலிபீடம் ஒன்று கட்டி அதற்கு 'யாவே நிசீ' என்று பெயரிட்டழைத்தார் (விப. 17: 15).

"யாவே நிசீ" என்ற எபிரேய வார்த்தையின் பொருள், "ஆண்டவரே என் வெற்றிக் கொடி" (The Lord is My Banner) என்பதாகும்.- வெற்றி தரும் ஆண்டவர் நமது அனைத்து செயல்களிலும் வெற்றி அருளுவார். நாம் விரும்பவுது போல நமது வெற்றி அமையாவிட்டால் ஆண்டவர் நம்மைக் கொண்டு பெரிய திட்டங்களை வைத்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டு நம் கடமைகளை செய்வோம். தாவீது அரசன் சாமுவேல் ஆசாரியனால் அபிஷேகம் பெற்றபின் கோலியாத்தை வென்றதை தவிர அனைத்தும் அவருக்கு தோல்வியாக இருந்தது. சவுலுக்கு பயந்து ஓடும் தாவீது ஆபத்திலிருந்து உயிர் தப்புவதை பார்க்கிறோம். ஆனால் அனைத்தையும் தாவீதுக்கு வெற்றியாக மாற்றி ஆசீர்வதித்தார் ஆண்டவர். வில்லியம் ஹென்றி பெக்சின் மலேரியாவுக்கான மருந்து கண்டுபிடிப்பதில் தீவிரமாக செயல்பட்டார். 1856 ஏப்ரல் மாதம் கண்டுபிடிப்புகளின் நிறைவாக Aniline - tolnidiue -þ பொட்டாசியம் டை குளோரோபில் என்னும் அமிலத்தோடு கலவை செய்யும்போது Quine என்னும் மருந்து கிடைக்கும் என்று நம்பினார். கிடைத்தது களிமண் போன்ற ஒன்று. மிகுந்த பாரத்தோடு ஆல்கஹால் அவற்றை சுத்தம் செய்ய ஆரம்பித்தார். இப்போது அந்த களிமண் ஊதா நிறத்தில் சாயமாக மாறியதை கண்டார். அந்த நாட்களில் ஐரோப்பியர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக அமைந்தது இந்த சாயத்தொழில். ஆடைகளில் சாயம் சேர்ந்து விற்பனை செய்து பொருளாதார நிலையிலும், சமூக நிலையிலும் பெரும் மாற்றமடைய காரணமானது.

சில வேளைகளில் நாம் விரும்புவது போல வாழ்க்கை அமையாவிட்டால் தோல்வி என்று நினைக்கிறோம், இல்லை. அது இன்னொரு வெற்றியின் படிக்கட்டு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இஸ்ரயேல் மக்களும் கானானை நோக்கிய பயணம், அவர்களின் விடுதலையைக் கொண்டாட பயணம். ஆனால் அனேக இடங்களில் தோல்வி என்று எண்ணினார்கள். செங்கடல், வனாந்தரம், எரிகோ மற்றும் எதிரிகளின் பெலமும் தங்கள் இயலாமைகளையும் பார்த்து தோல்வி என்று முறுமுறுத்தார்கள். ஆண்டவர் தலைமுறைகளுக்கான வெற்றியை அவர்கள் வழியாக ஏற்படுத்துகிறார். அவர்கள் பெற்றுக் கொண்ட வெற்றி என்பது தனிப்பட்ட மனிதனின் வெற்றியாக அல்லாமல் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கான வெற்றியாகவும் அவர்களின் குடும்பங்களின் எதிர்காலங்களுக்கான வெற்றியாகவும் மாறுகிறதை பார்க்கிறோம்.

ஆண்டவரை சார்ந்து அவர்கள் பெறும் வெற்றி எதிர்காலத்தின் நம்பிக்கையின் வாழ்வுக்கு ஆதாரமாய் அமைகிறது.

1. வெற்றி: நம் உரிமையைப் பாதுகாக்கும்:

உரிமைக்கான போராட்டங்கள் இன்று அதிகரித்து வருகின்றதை காண முடியும். அனேகர் இயலாமைகளினால் தங்கள் அடையாளங்களை கூட இழந்து போகிற சூழல் ஏற்படுகின்றது. அதிக பாடுகள் நாம் பெறும் வெற்றி. நமது உரிமையை பாதுகாக்கும். இஸ்ரவேல் மக்களின் அடையாளம் அடிமைகள், எகிப்தியருக்காக கடினமாக உழைப்பவர்கள் இந்த அடையாளங்களில் அவர்கள் அறியப்பட்டிருந்தனர். கடவுளின் பிள்ளைகள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்கின்ற அடையாளத்தை பெற்றுக் கொள்ள பாடுகளை அனுபவிக்கின்றார்கள். நமது உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கவும். இழந்து போனதை திரும்ப பெறவும் பாடுகளை பாராமல் வெற்றி என்கிற இலக்கை பெற வேண்டும். உரிமையை பாதுகாக்க எதிரிகளின் பகை, எதிர்ப்பும் ஒருபுறம் என்றால் சொந்த மக்களின் முறுமுறுப்பும் (வி.ப. 14: 11) மோசேயின் தலைமைத்துவம் குறித்த கேள்வியும் (எண். 16: 11-5), எழுந்து தண்ணீருக்காக முறுமுறுப்பு. சொந்த மக்களின் எதிர்ப்பு மிக அதிகம்.

சில நேரங்களில் பாலை நிலத்தின் அனுபவம் என்பது எகிப்தின் அடிமைத்தனத்தை விட கொடுமை என்று உணர்ந்தார்கள் (வி. ப. 14:11). ஆனாலும் அவர்களின் வெற்றி தலைமுறையினரின் உரிமையை நிலைநாட்டினது, உரிமைக்காக போராடுகின்ற நாம் கல்வி என்கின்ற மகத்தான பொக்கிஷத்தை பெற்றிருக்கிறோம். கல்வியில் நாம் பெறும் வெற்றியும் உயர்வுகளும் நம் உரிமையை நிலைநாட்டும்.

2. வெற்றி: புதிய பாதைக்குரிய தொடக்கமாக அமையும்:

எந்த ஒரு செயலின் வெற்றியிலும் வெற்றிக்கு முன் வெற்றிக்கு பின் என இரண்டாக பிரித்து பார்க்க இயலும். வெற்றிக்கு முன் பயம், பதட்டம், எதிர்பார்ப்பு, குழப்பமான சூழல், கேள்விகள் என அனேக பிரச்சனைகளை எதிர்கொள்ளுகிறோம். ஆனால் இந்த பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்ளுகிறோம் என்பதில் வெற்றி இருப்பதை காண இயலும். மோசே, அமலேக்கியர் போரிட வருகிறார்கள் என்ற உடன் அனேக கேள்விகள் உள்ளத்தில் எழுந்தாலும் தெளிவான முடிவை எடுக்கிறார். யுத்தம் கர்த்தருடையது. அவர் வெற்றி சிறப்பார். எனவே மோசே ஆண்டவர் சமூகத்தில் தன்னை நிறுத்தினார்.

உடல் பெலனற்ற இஸ்ரவேல் மக்கள் பயணக்களைப்பு வேறு அவர்களை வாட்டியது. ஆயுதங்கள் எதுவும் இல்லாத நிலையில் எத்தனை பேரை தாக்க இயலும் எதிர்த்து நிற்கவும் இயலாது. மறுபுறம் அமலேக்கியர் நல்ல ஆயத்தமும், உடல்வலிமையும், மனவலிமையும் கொண்டவர்களாய் ஆயுதங்களோடு வருகிறார்கள். இஸ்ரவேல் மக்கள் அடைந்த பதட்டம் மோசே என்னும் தலைவனுக்கு இல்லை. ஏனெனில் மோசே ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணினார் (வி. ப. 3:7-10). வாக்கு

மாறுவதில்லை என்பதில் நம்பிக்கை கொண்டான். ஆண்டவர் வெற்றி சிறந்தார்.

இந்த வெற்றி இஸ்ரவேல் மக்களுக்கு அனுபவங்களை கொடுத்தது. தாங்கள் கடந்து வரும் பயணம் தங்களால் அல்ல. இஸ்ரவேலின் கடவுளால் என்பதை உணர்ந்தார்கள். இது எதிரிகளுக்கு பயத்தையும் இஸ்றவேல் மக்களுக்கு புதுதைரியத்தையும் கொடுத்தது. கானானுக்குள் பிரவேசிக்கும் போது முழுநம்பிக்கையின் சமூகமாய் அவர்கள் விளங்க தொடக்கமாய் இருந்த இந்த எதிரிகளின் மேல் கொண்ட வெற்றி, அவர்கள் விடுதலைப் பயணத்தில் எதிரிகளுக்கு எதிரிகளுக்கு மிகப்பெரிய பாடமாக அமைகிறது. பயம் நீங்கி நம்பிக்கையும், நிறைவான இறையாசியும் தருகிறது. இறைவேண்டல் வெற்றியின் தொடக்கம் அது நம்மை புதிய பாதையில் நடத்தும் (வி. ப. 17:9).

3. வெற்றி: பற்றுறுதியின் தலைமுறைகளை உருவாக்கும்:

நம்பிக்கையின் சமூகம் உருவாக காரணமாக இந்த வெற்றி மாறுவதை பார்க்கிறோம். வி.ப. 17:14 புத்தகத்தில் எழுதிவைக்கவும், யோசுவாவின் காதுகளில் போட்டுவைக்கவும், தலைமுறையினருக்கு இந்த வெற்றியை சொல்லி இறைப்பற்றுறுதியில் வளர்க்கவும் ஆண்டவர் அறிவுறுத்துவதை பார்க்கிறோம்.

இரணடாம் உலகப்போரின் போது அணு ஆயுதப்போர் காரணமாக அமெரிக்காவின் மில்வாகி நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டார்கள். காட்டு வாத்து ஒன்று உயிர் பிழைத்து மில்வாகி ஆற்றின் பாலத்திற்கு கீழ் தஞ்சம் புகுந்தது. அதை மில்வாகி மக்கள் கெர்டி (Gertie) என்ற பெயர் சூட்டி மிக கவனமாய் பாதுகாத்தனர். 9 முட்டைகள் போட்டு குஞ்சுகள் பொரித்தன. அவற்றை யுத்த சத்தத்திலிருந்தும் ஆற்று வெள்ள பெருக்கிலிருந்தும் பாதுகாப்பது அந்த மக்களின் அனுதின பணியாக மாறியது. போர் முடிந்தது. வாத்து குஞ்சுகளும் வளர்ந்தன. அவை காட்டிலே விடப்பட்டது. போரில் பெரும் இழப்பு ஏற்பட்டாலும் வாத்தையும் குஞ்சுகளையும் பாதுகாப்பதில் வெற்றி கண்டார்கள். 1997-ம் ஆண்டு குவைகன் டெலின் கில்வென் என்ற சிற்பி 4 அடி உயரத்தில் கெர்டிக்கும், குஞ்சுகளுக்கும் சிலை ஒன்றை அமைத்து உலகமெங்கும் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரு செய்தியை சொன்னார். ஒவ்வொரு உயிரிக்கும் இருக்கின்ற முக்கியத்துவம் என்ன என்பதையும் அனைத்து தலைமுறையினரும் உணர வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது. தலைமுறையினருக்கு நல்லவற்றை கற்றுக்கொடுப்போம். நல்ல தலைமுறையை உருவாக்குவோம்.

வெற்றி தனிமனித ஒழுக்கத்தையும், சமூக நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டுவதாய் அமைய வேண்டும், அது சிறந்த கல்வி அறிவாலும் இறைவன் பேரில் கொண்டுள்ள பற்றுறுதியாலும் மட்டுமே இயலும். ஆண்டவர் நம்மை வழிநடத்துவாராக.

அருள்திரு. J.K. ஜெனிபர்

01.07.2026

மன்றாட்டைக் கேட்கும் ஆண்டவர்

திபா. 66: 16-20

ஆனால், உண்மையில் கடவுள் எனக்குச் செவிகொடுத்தார்; என் விண்ணப்பக் குரலை உற்றுக்கேட்டார். (திபா. 66: 19)

புதிய மாதம் புதிய கிருபையோடு கடவுளை தேடுவது மிகவும் முக்கியமானது அதற்கு துணையாக அமைவது மன்றாட்டு. பல நேரங்களில் நாம் எல்லோரும் கடவுளோடு நம் தேவையை முன்வைக்கின்றோம். குறிப்பாக, நமது அச்சம், கடினங்கள், கோரிக்கைகள் என பல. ஆனால் பல நேரங்களில் நாம்அமைதியை மட்டுமே உணருகின்றோம். அத்தகைய சூழலில் நமக்குள் எழுகின்ற கேள்விகள், கடவுள் உண்மையில் நமக்கு செவி கொடுக்கின்றாரா? அவர் நான் கடந்து போகும் சூழ்நிலையை உணருகின்றாரா? என்பவையாகும். உண்மை என்னவென்றால், இறைவேண்டல் என்பது நம் ஒவ்வொரு சிறுகாரியத்திலும் ஆழமானஅக்கரை கொண்டிருக்கும் கடவுளோடு பேசுவதே. திபா 66:19 இல் ...உண்மையில் கடவுள் எனக்கு செவிகொடுத்தார் என்பது கடவுள் நம் மன்றாட்டை கேட்பவர்என்ற நம்பிக்கையை தருகின்றது.

எல் டெப்பில்லா (El-Tefillah) *என்ற எபிரேய வார்த்தை "கடவுள் மன்றாட்டைக் கேட்பவர்" என்ற பொருளைத் தருகிறது. அதாவது, தொலைவிலோ, அமைதியாகவோ அல்ல; மாறாக நெருக்கமாகவும், அமைதியாகவும் பதிலளிப்பவர் என்று பெருள்படுகின்றது. திபா. 66: 19 இல் கடவுள் உடனடியாக என் வேண்டுதலுக்கு பதிலைத் தந்தார் என்று திருப்பாடல் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அசீரிய இராணுவம் எருசலேமை முற்றுகையிட்ட நிலையில் கடவுள் மக்களின் வேண்டுதலை கேட்டு விடுவித்ததை எண்ணி இத்திருப்பாடல் எழுதப்பட்டது. மேலும் இது, கடவுளின் மக்கள் எந்த சூழ்நிலையிலும் கடவுளை நோக்கி முறையிடுகையில் அவர் விடுவிப்பார் என்ற நம்பிக்கையை நமக்கு தருகின்றது. பால் டியுக்* (Paul Tiuich) *என்ற இறையியாளர் "கடவுள் இருக்கும் நிலையின் அடித்தளம்" என்று கூறுகிறார். மேலும் நாம் ஜெபிப்பது வேற்று ஆகாயத்தில் கூப்பாடு போடுவது போல் அல்ல; மாறாக இந்த உலகத்தையும் நம்மையும் படைத்து அதில் முழுமையாக ஈடுபட்டுள்ள கடவுளோடு பேசுவது தான் என்று விளக்குகிறார். இன்று நாம் மதம், கலாச்சாரம், அரசியல்அமைப்பு போன்ற பல வேறுபாடுகளால் முற்றுகையிடபட்டு நம்பிக்கையிழந்தச் சூழலில் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இச்சூழலில் கடவுள் எவ்வாறு மன்றாட்டைக் கேட்டு பதிலளிப்பார் என்பதைத் தியானிப்போம்.*

1. சவால்களின் நடுவில் இறைவேண்டல்:

புதிய மாதத்தைத் துவங்கும் போது, இன்று பல கேள்விகள் நமக்கு எழும், இம்மாதமும் எனக்கு கடந்த மாதத்தை போல் தான் இருக்குமா, கடிதம் தான் எனக்கு மிச்சமா என்று நினைக்கலாம். ஆனால் திருப்பாடல் ஆசிரியர் கூறுகையில், "எங்களை ஆய்ந்து, வெள்ளியைப் புடமிடுவதுபோல் புடமிட்டீர்;கண்ணியில் எங்களை விழும்படி செய்தீர்; பளுவான சுமைகளை எங்கள் முதுகின் மீது சுமத்தினீர்" (திபா 66: 10,11) என்று குறிப்பிடுகின்றார். இன்று நாம் கடவுளோடு வேண்டுதல் செய்யும்போது இத்தகைய சூழலில் தான் நம்முடைய வேண்டுதலை அமைக்கின்றோம். காரணம் வேலையில்லாத சூழ்நிலை கடினங்கள் குடும்பங்களில் அமைதியற்ற சூழ்நிலை கடன்பாரங்கள் போன்ற சூழ்நிலைகளால் அஞ்சி நிற்கின்றோம். ஆனால் இத்திருப்பாடகர் அடுத்த பகுதியில், "நீர் எங்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தீர்" (திபா. 66: 12) குறிப்பிடுகிறார். சோதனைகள் வளர்ச்சிக்கான வாய்ப்பு என்பதை உணர வேண்டும். கடவுள் சோதனைகளை மட்டும் தருபவரல்ல சோதனைகளோடு வாழ்வை வளமாக்கும் வழியையும் தருபவர் என்ற நம்பிக்கையோடு நாம் மன்றாடவேண்டும்.

1800களில் ஆதரவற்ற பிள்ளைகளின் இல்லத்தை நடத்தியவர் தான் ஜார்ஜ் முல்லர். ஒரு காலை நேரம் குழந்தைகளுக்கு காலை உணவு எதுவுமில்லாத நிலை ஏற்பட்டது. முல்லர் குழந்தைகளை மேஜையின் சுற்றி அமர வைத்து வரவிருக்கும் உணவுக்காக கடவுளுக்கு நன்றி கூறுங்கள் என்று குழந்தைகளோடு வேண்டிக்கொண்டார். அவர் ஜெபம் முடித்ததும் வாசலில் தட்டும் சத்தம் கேட்டது. அங்கு அப்பம் விற்கும் மனிதர் நின்றிருந்தார். அந்த ஆதரவற்ற இல்லத்திற்கு அப்பம் தேவைப்படும் என்று இரவில் ஒரு வலுவான உணர்வு எனக்குள் எழும்பியது என்று கூறினார். அவர் புதிதாக தயாரித்த அப்பங்களை குழந்தைகளுக்காக கொண்டு வந்திருந்தார். அதற்கு சிறிது நேரத்திற்கு பிறகு ஒரு பால் வண்டி நேரடியாக அந்த இல்லத்தின் முன்னால் செயல் இழந்து நின்றது. வண்டியோட்டி வாசலுக்கு வந்து எனது வண்டியை சரி செய்ய சுமையை குறைக்க வேண்டும்; இந்த பாலைக் கெடுவதற்கு முன்னால் உங்களால் பயன்படுத்த முடியுமா என்றார். முல்லருக்கு முன்னால் அடுத்தநேர உணவுக்கு என்ன செய்ய போகிறேன் என்ற சவால் இருந்தது; ஆனால் அவர், கடவுள் மன்றாட்டைக் கேட்பவர் என்ற நம்பிக்கைக் கொண்டதினால் பிள்ளைகளோடு இணைந்து வேண்டுதல் செய்தார். சோதனைகள் நம் ஜெப வாழ்க்கையை ஆழப்படுத்தும் தருணங்கள். இன்று நாம் செய்ய வேண்டியது சவால்களை கண்டு அஞ்சுவது அல்ல; மாறாக, நம்பிக்கையோடு மன்றாடுவது தான். இந்த மன்றாட்டினால் வளம் நிறைந்த, பாதுகாப்பான வாழ்வை கடவுள் நமக்கு தருகின்றார்.

2. நேர்மையான உள்ளத்தோடு இறைவேண்டல்: *(திபா. 66: 18)*

இறைவேண்டலில் மிக முக்கியமானது நேர்மை. இறைவேண்டல் என்பது கேட்பது மட்டுமல்ல; மாறாக, கடவுள் நமது குறைவுகளை கேட்டு விடுவிப்பார் என்று நம்பிக்கை கொள்வது ஆகும். நேர்மையற்ற உள்ளத்தை அவர் வெறுக்கிறார் என்பதை திருப்பாடல் ஆசிரியர், "என் உள்ளத்தில் தீய எண்ணங்களை வளர்த்திருந்தேனாகில், என் தலைவர் எனக்குச் செவிசாய்த்திருக்கமாட்டார்" *(திபா 66:18)* என தெளிவாக எடுத்துரைக்கின்றார். நேர்மை என்பது பாவம் இல்லாத வாழ்க்கை குற்றத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் இதயம் இறைவேண்டலுக்குத் தடையாக இருக்கின்றது; நம் வாழ்வில் குற்றம் இல்லாத வாழ்க்கையை கடவுள் நம்மில் எதிர்பார்க்கின்றார். இன்று அநேகர் தங்கள் வாழ்வில் நேர்மையாக இருப்பது போல்பாவித்துக் கொண்டு பலரை குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து, உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? , வெளிவேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும் *(மத்தேயு 7:3,5)* என குறிப்பிடுகிறார். இறைவேண்டல் என்பது அடுத்தவர்களை குற்றம் கண்டுபிடிப்பது குறை கூறுவது அல்ல; மாறாக நம் கனிவான இதயத்தோடு நமது குறைகளை ஏற்றுக்கொண்டு நம்மை மீட்பின்பாதையில் நடத்துவதுதான். எனவே நாம் இறைவேண்டல் ஏறெடுக்கும் போது நேர்மையுள்ள உள்ளத்தோடு ஏறெடுக்க வேண்டும்.

இறைவேண்டல் என்பது சோதனைகளைத் தவிர்பதற்கான கருவியே அல்லது குறை கூறுவதற்கான வழியோ அல்ல மாறாகசோதனையை வெல்லும்வல்லமையும் மீட்பை பெற்றுக் கொள்ளும் பாதையுமாகும். கடவுள் எல்லா சூழ்நிலையிலும் நம்மோடு இருக்கிறார். நாம் வேண்டுதல் செய்யும்போது அவர் இருக்கும் நிலையில் பதிலளிக்கின்றார். இன்று நம்வாழ்வில் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும், திபா *66:19*-இல் சொல்லப்பட்டிருக்கும் வாக்குறுதியை நம்பிக்கையோடு பற்றிக்கொண்டிருந்தால். நம் வாழ்வை கடவுள் வளமாக்குவார் என்ற நம்பிக்கையோடு புதிய மாதத்தில் மன்றாடுவோம். இம்மாதம் ஆசீர்வாதமாக அமையும்.

திரு. S. பிளஸ்சின்

01.08.2026

மீட்பருளும் ஆண்டவர்

எசா. 45: 20-25

". . . என்னிடத்தில் திரும்பி வாருங்கள்; விடுதலை பெறுங்கள்" (எசா. 45: 22)

அழிவின் விளிம்பில் நின்ற மக்களைத் தன்னையும் மறந்து மீட்டெடுக்க முனைந்தவர்களை நாம் வரலாற்றில் காண்கிறோம். அத்தகைய அரிய பெருங்குணம் கொண்டவர்களில் ஒருவர்தான் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க அருட்பணியாளர் Jozef De Veuster என்பவர். ஹவாயில் உள்ள Molokai தீவில் தனிமைப்படுத்தப்பட்ட தொழு நோயாளிகள் வசித்து வந்தனர். இவர்கள் சமூகத்தால் தள்ளி விடபட்டவர்கள், குடும்பத்தாரால் மறுக்கப்பட்டவர்கள், எவராலும் தொடப்படாதவர்கள். அம்மக்கள் வாழ்ந்த குடியிருப்பில் 16 ஆண்டுகள் சேவை செய்து பலரை குணமாக்கினார். நோயாளிகளை பராமரித்துக் கொண்டிருந்தபோது தொழுநோயாளிகளிடமிருந்து தொழுநோய் பரவியது. அதன் விளைவால் 1889ம் ஆண்டு மரித்து போனார். மரண தருவாயில் அவர் கூறிய "I am ready to give my life for these people whom God has entrusted to me." அழிவின் விளிம்பில் இருந்த அம்மக்களின் மீட்புக்காய் முழுமையாக தன்னை அர்ப்பணித்ததால் அவர் Saint Damien என்று எல்லாராலும் போற்றப்படுகிறார்.

மனிதன் தொட அஞ்சிய மக்களைத் தொட்டு குணப்படுத்திய Damien, எப்படி ஒரு "மீட்பர்" என போற்றப்பட்டாரோ அதை விட அதிகமாக, அதிசயமாக, எல்லையற்ற அன்போடு கடவுள் மக்களை மீட்பவராய் காணப்படுகிறார். அதைத் தான் Yahweh Yasha என்கின்ற எபிரேய வார்த்தை சுட்டிக் காட்டுகிறது. இதன் ஆங்கில வார்த்தை The Lord is Salvation அதனைத் தான் தமிழில் "மீட்பருளும் ஆண்டவர்" என்று பார்க்கிறோம்.

யூத மக்கள் பாபிலோனில் சிறைப்பட்டிருந்த இருண்ட காலத்தில் கடவுள் தம் மக்களை மீட்பதற்காக அந்நிய ராஜாவான கோரேசுவை பயன்படுத்தினார். இதனை எசாயா 45:1 இல் காண்கிறோம். இதன் வழியாக இன்னல்கள் மத்தியில் கடவுளின் மீட்பின் செயல்பாடு உண்டு என்பதனையும் மக்கள் பாபிலோனிய சிறையிருப்பின் கீழ் அழிவடைய மாட்டார்கள் என்பதற்கான இறைவாக்கின் உறுதி நிறைவேறும் என்பதனையும் கடவுள் உறுதிப்படுத்துகிறார். இஸ்ரவேல் மக்கள் எங்கள் வாழ்க்கை முடிந்து விட்டது. எங்களுக்கு எதிர்காலமே பாபிலோனிய அடிமைத்தளத்தில் அழிந்து விட வேண்டியது. தான் என்று எண்ணிய சூழ்நிலையில் கடவுளின் வாக்குறுதி "என் மீட்பு உங்களை தேடி வரும்".

ஏசாயா 45:21 என்னையன்றிக் கடவுள் வேறு எவரும் இல்லை நீதியுள்ளவரும் மீட்பு அளிப்பவருமான இறைவன் என்னையன்றி வேறு எவரும் இல்லை. இன்றும் இந்த புதிய மாதத்தில் நம்மை பார்த்து சொல்லுகிறார் "என் மீட்பு உங்களைத் தேடி வரும்" என்று உறுதியாக சொல்கிறார் இறைவாக்கினர் ஏசாயாவின் பெயரின் பொருள் கடவுள் மீட்பராய் இருக்கிறார் என்பதாகும். ஏசாயாவின் இறைவாக்குகள் பலவும் இயேசுவில் நிறைவேறியதால் அவர் "மீட்பின் இறைவாக்கினர்" என்றும் அழைக்கப்பட்டார்.

அழிவில் இருக்கிற மக்களுக்கு, துன்பத்தில் இருக்கிற மக்களுக்கும், இருளில் அழுது கொண்டிருக்கும் மனங்களுக்கும் கடவுள் மீட்பராய் இருக்கிறார். கடவுள் மீட்பர் என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியை தருகிறதோ அதே போல மீட்பராம் கடவுளின் மீட்பின் தன்மைகளை நாம் பெற்று கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்பதனையும் சிந்திக்க வேண்டும்.

1. இறைவனிடம் திரும்புங்கள்: *(எசா. 45: 22)*

ஏசாயாவின் தீர்க்கதரிசன ஊழியத்தின் ஆரம்பகட்டத்தில் இஸ்ரவேலின் அரசும், யூதாவின் அரசும் அதன் ஆட்சியின் உச்சத்தில் இருந்தன. அவர்கள் செல்வமும், செழிப்பும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் ஏசாயாவின் வாழ்வின் இறுதிக்கட்டத்தில், இஸ்ரவேல் இல்லாமல் போயிற்று, யூதாவை அசீரியா பேரரசுடன் ஒப்பிடுகையில் "சிறுபூச்சி" போல சிறியதாக பரப்பளவில் குறுகிப்போயிருந்தது.

யூதா தேசமானது கடவுளை சேவித்து, தங்கள் அயலகத்தாரை அன்பு செய்வதை விடுத்து எருசலேமில் தேவனுடைய ஆலயத்தில் அர்த்தமற்ற பலிகளை செலுத்திக்கொண்டிருந்தது. தேசம் முழுவதும் அநீதியின் காரியங்கள் நடந்தன. கடவுள் ஏசாயா இறைவாக்கினர் வழியாக பல எச்சரிப்புகளை கொடுத்தார். இதனை ஏசாயா புத்தகத்தின் முதல் பகுதியில் (ஏசா. 1: 39) காண முடிகிறது. இப்படி எச்சரித்த பின்பும் கடவுள் சொன்ன காரியங்களுக்கு தங்கள் காதுகளை அடைத்துக்கொண்ட தேசம் பாபிலோனிய சிறையிருப்பிற்கு நேராக தள்ளப்பட்டது. சிறையிருப்பின் காலத்தில் கடவுள் அம்மக்களுக்கு அழைப்பு கொடுக்கிறார் என்னிடம் திரும்புங்கள் (Return Back) அப்பொழுது மீட்பு பெறுவீர்கள். மீட்பு பெறுவதற்கு இறைவன் கூறுகின்ற செய்தி தீய வழியை விட்டு திரும்புங்கள் அப்போது மீட்பு உண்டு.

2. இறைவனோடு ஒன்றுபடுங்கள்: *(எசா. 45: 20)*

இஸ்ரவேல் மக்களின் அழிவு என்பது பிரிவில் இருந்து தொடங்கியது. ஒன்றாய் இருந்த 12 கோத்திரங்கள் சாலொமோன் அரசர் இறந்ததும், இஸ்ரவேல் ராஜ்யம் பத்தாக, மற்றும் இரண்டாக பிளவுபடுகிறது. பிளவடைந்த ராஜ்யங்கள் பெலவீனமாகின. அதே நேரத்தில் அசீரிய மற்றும் பாபிலோனிய ராஜ்யம் எழும்பியது. பிளவுபடுத்தப்பட்ட இஸ்ரவேல் கோத்திரங்கள் ஒருவரை ஒருவர் நம்பவில்லை, ஒரே கடவுளின் மக்களாக நடக்கவில்லை, பல தவறுகள் செய்தனர் கடவுளிடம் நம்பிக்கை இழந்து வெளிநாட்டு இராஜாக்களிடம் உதவி தேடினர்.

இதனால் உள்பிளவு காணப்பட்டு எதிரிகள் இவர்களை வீழ்த்துவதற்கு எளிதாக அமைந்தது. அடிமைப்படுத்தபடுகிறார்கள். இப்பொழுது கடவுள் அவர்களிடம் ஒன்றுபடுங்கள் என்ற அழைப்பை கொடுக்கிறார்.

"Unity is Christ's gift, but division is satan's work among us."- John Chrysostom - ஒன்றிப்பு கிறிஸ்துவின் வரம்,பிரிவு என்பது சாத்தான் நம்மிடையே செய்கிற வேலை. பல சூழ்நிலைகளை பல காரியங்களால் பிரிப்பது எளிது. ஆனால் ஒன்றுபட்டால் எவ்வளவு பெரிய எதிரியையும் வீழ்த்தலாம். பிளவு அழிவை உண்டாக்குகிறது ஒற்றுமை மீட்பை உண்டாக்குகிறது.

3. இறைத்தன்மையை கொண்டிருங்கள்: *(எசா. 45: 24)*

இறைவனுடைய மீட்பினை பெற இருக்கின்ற மக்கள் இறைவனுடைய தன்மையை இந்த சமூகத்தில் கொண்டு இருக்க வேண்டும். இறைவனின் தன்மை

* கடவுளின் நீதி (God's Justice)
* கடவுளின் உண்மைத்தன்மை (God's Truthfulness)
* கடவுளின் தூய்மை (God's Holiness)

மீட்பிற்கு இவைகளை வாழ்வில் கொண்டவர்களாய் இருங்கள். ஏசாயா 3:14,15 பலவீனர்களை ஒடுக்கிய பாவம், ஏசாயா 1: 23 - அநீதியின் அவலம் ஏசாயா 10: 1,2-ஏழைகள், விதவைகளுக்கு எதிரான செயல், இவ்வசனங்கள் வழியாக வறியவர்கள் ஒடுக்கப்படுதலையும் மக்களின் அகோர பாவ நிலைகளையும் கண்டுகொள்ள முடிகிறது. இறைச்சாயலை இழந்த தீமையான காரியங்கள் இனி மீட்பின் வாழ்வில் வரக்கூடாது எனவே மீட்பிற்கு வழியாக இறைத்தன்மையை எதிர்பார்க்கிறார். இறைச்சாயலை பெற்றுக் கொள்ளுங்கள் அப்போது மீட்பு வரும்.

ஆகஸ்ட் மாதத்திற்குரிய தனி சிறப்பு விடுதலை. அடிமைத்தனத்திலிருந்து மீட்பு என்பது எப்போதும் மகிழ்ச்சி கொடுக்கின்ற ஒன்று. கடவுள் நமக்கு தருகின்ற மீட்பு என்பது அதைத்தான் முன்னுரைக்கின்றது. நம் அடிமைத்தன வாழ்விலிருந்து கடவுள் நம்மை மீட்பு பெற செய்கின்றவராய் இருக்கிறார். அந்த மீட்பினை சுவைக்கின்ற நாம் அந்த சுவையின் சாரம்சத்தை இறைவனிடம் திரும்ப இறைவனிடம் ஒன்றுபட இறை தன்மையை கொண்டிருக்க கடவுள் எதிர்பார்க்கின்றார்.

மீட்பரான தேவன் இந்த ஆகஸ்ட் மாதத்தில் நம்மை பார்த்து சொல்லுகிறார். நான் மீட்பை அருளுகிறேன். நீங்கள் என் நீதியும், உண்மையும், நேர்மையும் கொண்டவர்களாக இருங்கள். நீங்கள் எங்கு செல்கிறீர்களோ அங்கு நீதியை எடுத்துச் செல்லுங்கள், எங்கு பேசுகிறீர்களோ அங்கு உண்மையை உயர்த்துங்கள், எங்கு வாழ்கிறீர்களோ அங்கு நேர்மையின் வாசனை பரவட்டும். இந்த ஆகஸ்ட் மாதம் நம் வாழ்வினை மாற்றி அனைவருக்கும் மீட்பின் மாதமாக மாற்றி தருவாராக.

திரு. S.V. உதய் நிர்மல் சிங்

01.09.2026

ஆண்டவரே நம் ஆயர்

திபா. 23

ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை (திபா. 23: 1).

திருப்பாடல் 23, திருவிவிலியத்தில் மிகவும் பிரசித்திப் பெற்றதும் அனைவராலும் விரும்பி தியானிக்கப்படுகின்ற பாடல்களில் ஒன்றுமாக இருக்கின்றது பழைய ஏற்பாட்டின் தொடக்க நூல் தொடங்கி திருவிவிலியம் முழுவதுமே கடவுள் ஒரு நல்ல ஆயராகவே அறியப்படுகிறார். பழைய ஏற்பாட்டின் வசனங்கள் எல்லாமே இறைவனை நல்ல ஆயராகவே சித்தரிக்கின்றன. மேலும் இறைவாக்கினர்களில் பலர் ஆண்டவரை, இஸ்ரயேல் மக்களுக்கு உணவூட்டி வழிநடத்தி அவர்களைப் பாதுகாக்கும் ஆயராகவே எடுத்துரைத்துள்ளனர். ஆண்டவர் ஒரு மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார் என்று எசா. 40:11 கூறுகிறது.

குறிப்பாக. அந்நாட்களில் மேய்ப்பனின் தொழில் தாழ்வான தொழிலாகக் கருதப்பட்டது. தாவீதின் தகப்பனாகிய ஈசாவும் அவனை அற்பமாய் கருதி ஆடுகள் மேய்க்கும்படிக்கு வனாந்தரத்திற்கு அனுப்பினான். அவனுடைய தாழ்வில் ஆண்டவரைத் தன் மேய்ப்பராகக் ஏற்றுக் கொண்டான். அதன்பின்பு ஒவ்வொரு நாளும் கர்த்தர் அவனை மேன்மையாக நடத்தினார். தமது ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களை மேய்க்கிற ராஜாவாக அவனை உயர்த்தினார்.

திருப்பாடல் 23 நம்பிக்கையின் திருப்பாடல் ஆகும். இந்த பகுதியில், தாவீது அரசர் ஆண்டவரை தனது ஆயராக வைத்து ஒப்புமைப்படுத்தி எழுதியுள்ளார். இங்கு கடவுள் ஒரு அக்கறையுள்ள ஆயராகவும் நம்பகமான வழிகாட்டியாகவும் காணப்படுகிறார். ஆண்டவரை ஆயராக விவரிப்பதில், கவியரசர் தாவீது தனது சொந்த அனுபவத்திலிருந்து எழுதினார். ஏனெனில் அவர் தனது ஆரம்ப ஆண்டுகளில் ஆடுகளைப் பராமரித்து வந்தார் (1 சாமு 16: 10, 11). ஆடுகள் தங்கள் ஆயனை முழுமையாகச் சார்ந்து இருப்பது போல, பாதுகாப்பு, ஏற்பாடு மற்றும் வழிகாட்டுதலுக்காக ஆண்டவரைச் சார்ந்து இருந்தார்.

கடவுள் தம் அன்புக்குரிய மக்களை மேய்ப்பதற்குத் தாவீதை அவர்களின் ஆயராகத் தேர்ந்து கொள்கிறார். தாவீதும் கடவுளின் முழு பராமரிப்பில் ஒரு பொறுப்புள்ள ஆயராக இருந்து அம்மக்களைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்துக் கொள்கிறார். தாவீது இஸ்ரயேல் மக்களின் ஆயராக அல்லது தலைவராக அருள்பொழிவு செய்யப்பட்டபோது ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் தனது மக்களை

இறைத் துணையோ சிறப்பாக வழி நடத்திச் சென்றார், பலமுறை அவற்றை பேராபத்துக்களிலிருந்து அவர் காப்பாற்றி இருக்கிறார். அவைகளுக்கு உணவளித்து பராமரித்திருக்கிறார். அவ்வாடுகளோடு அவர் எப்போதும் கூடவே ஒன்றாகப் பயணித்திருக்கிறார் என்பதை நாம் இங்குப் புரிந்து கொள்ளலாம். எனவேதான், இறைவனை ஆயராகவும் இஸ்ரயேல் மக்களை ஆடுகளாகவும் உருவகப்படுத்தி, தாவீது இந்தப் பாடலை இயற்றி இருப்பதாக விவிலிய அறிஞர்கள் கருதுகிறார்கள்.

ஆண்டவரே என் ஆயர் (The Lord is My Shepherd) என்பதன் எபிரேய வார்த்தை - யாவே ரோஹி (Jehovah Rohi) ஆகும். ரோயி என்ற சொல், சில சமயங்களில் ராஹ் என்றும் உச்சரிக்கப்படுகிறது. ரோஹி மற்றும் ராஹ் ஆகிய இரண்டும் "உணவளிக்க" ("to feed") என்று பொருள்படும் எபிரேய மூல வார்த்தையிலிருந்து வந்தவை. மேலும் அது தனது மந்தையை மேய்க்கும் மேய்ப்பன் என்று பொருள்படும். மேலும் இந்த வினைச்சொல் ஆடுகளை வழிநடத்துதல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற மேய்ப்பனின் செயல்கள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியது. அன்பான மேய்ப்பன் தனது ஆடுகளைப் பராமரிப்பது போல ஆண்டவர் நம்மைப் பராமரிப்பது போன்ற உருவகம் திருவிவிலியத்தில் ஆண்டவர் தமது மக்களின் வாழ்க்கையில் அன்பான, அக்கறையுள்ள மற்றும் பாதுகாக்கும் மேய்ப்பரின் பங்கை நிறைவேற்றுகிறார் என்ற கருத்தை அது வெளிப்படுத்துகிறது. எனவே இந்தத் திருப்பாடலில் நல்ல ஆயராம் ஆண்டவரின் தன்மைகளைக் குறித்து தியானிப்போம்.

1. பராமரிக்கும் ஆயர்:

ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார் (திபா 23:1,2).

கடவுளே என் ஆயராக இருக்கின்றபோது நான் எதைக் குறித்தும் அஞ்சவும் கவலைப்படவும் தேவை இல்லை. எல்லாவற்றையும் அவரே பார்த்துக்கொள்வார். அவரது அளவு கடந்த அன்பும் பராமரிப்பும் எனக்கு எப்போதும் துணை இருக்கும்; அவரில் நான் இளைப்பாறுவேன் என்பது கடவுளின் மீதான தாவீதின் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. பொதுவாக, ஆடுகள் மிகவும் பெலவீனமானவைகள், அவைகளுக்கு தங்கள் எதிரிகளிடமிருந்து தங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று கூட தெரியாது. ஆகவே தான் மேய்ப்பனுடைய பராமரிப்பும், பாதுகாப்பும், வழிகாட்டுதலும் அவைகளுக்கு அதிகம் தேவைப்படுகிறது. அப்படியே தாவீதும், தன்னை பெலவீனனாகவும், ஆண்டவர் பெலமுள்ள ஒரு நல்ல மேய்ப்பன், தன் தேவை உணர்ந்து, சரியான வேளையில், பராமரிப்பார் என்றும் அறிந்திருக்கிறார்.

இதனையே நம் ஆண்டவர் இயேசுவின் வாழ்விலும் காண்கின்றோம். அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார் என்று (மாற் 6:34) வாசிக்கிறோம். ஆகவே, ஆண்டவர் நமது வாழ்விலும் தம்முடைய மக்களை பராமரித்து தேவைகளைப் பூர்த்திச் செய்யும் ஆயராக (சாரிபாத் கைம்பெண் இல்லம், இயேசு கிறிஸ்து மக்களைப் போஷித்தல்) நம்மை வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு வாழ்வோம்.

2. பாதுகாக்கும் ஆயர்

...சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும். (திபா. 23: 4).

பொதுவாக, ஆடுகள் வலு குறைந்தவை. பயந்த சுபாவம் கொண்டவை. எதிரிகள் அவைகளைச் சுலபமாக உணவாக்கிட முடியும். ஆகவே, அவற்றிக்கு ஆயனின் உதவி அவசியம் தேவை. இவை அப்படியே மனித வாழ்விற்கும் கச்சிதமாய்ப் பொருந்தும். எனவேதான், தாவீது அரசர் தனக்கான பாதுகாப்பை கடவுளிடம் மட்டுமே தேடுகின்றார். தாவீது தன் வாழ்வில் வனாந்தரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது, ஆடுகளைப் பாதுகாக்க கடின மிருகங்கள் மத்தியில் வாழ வேண்டிய சூழ்நிலைகளில் வந்த ஆபத்துகளில் நல்ல ஆயராம் ஆண்டவர் அவரோடு கூட இருந்தார், பாதுகாத்தார் என்ற நம்பிக்கை அவரில் காணப்பட்டது. திருவிவிலியத்தில் தானியேலை சிங்க கெபியிலிருந்தும், அவரது நண்பர்களை தீச்சூளையிலிருந்தும் பாதுகாத்தார் என்பதை காண முடிகிறது (தானி 6: 23 & 3: 25). ஆகவே, நமது வாழ்விலும் கடினமான சூழல்கள், ஆபத்துகள் வருகிறபோது ஆண்டவர் நம்மைப் பாதுகாக்க வல்லவராயிருக்கிறார்.

3. நிறைவாழ்வருளும் ஆயர்

"உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும்; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன் (திபா. 23: 6).

சுமக்கத் தெரிந்தவர்களே சுகம் பெறுகிறார்கள். ஆகவே, வாழ்வில் துன்ப துயரங்களையும் வேதனை சோதனைகளையும் அமைந்த மனதுடன் ஏற்றுக் கொள்பவர்களே இறுதியில் இறைவனின் இரக்கத்தையும் இளைப்பாறுதலையும் பெற்றுக் கொள்கின்றனர். இதனையே தாவீது அரசரும் ஆண்டவர் நிறைவாழ்வு அருளுவார் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பாடலை நிறைவு செய்கின்றார். பழைய ஏற்பாட்டில் யோபுவும் புதிய ஏற்பாட்டில் ஏழை லாசரும் தங்கள் வாழ்வில் துன்பங்களைத் தாண்டி நிறைவாழ்வைப் பெற்றனர் என்பதை பார்க்க முடிகிறது.

இன்றைய நிலையில் மக்களை ஆளும் தலைவர்களைப் பார்த்தோம் என்றால் அவர்களின் கொடிய நிலைகள் நம் மனங்களைப் பதை பதைக்கச் செய்கின்றன. பெரும்பாலான தலைவர்கள் அக்கறையற்றவர்களாக, ஆணவம் மிகுந்தவர்களாக, பொறுப்பற்றவர்களாக, தங்களின் நலத்திற்காக அப்பாவி மக்களை பலிக் கொடுப்பவர்களாக வலம் வருவதைப் பார்க்கின்றோம். நமது ஒப்பற்ற அரசரான ஆண்டவர் இயேசு பயிரைக் காக்கும் வேலியாகத் திகழ்ந்தார். ஆனால், மக்களின் பாரங்களைச் சுமக்க வேண்டியவர்கள் அவர்களின் தோள்களின் மேல் சுமக்க முடியாப் பாரங்களைச் சுமத்துகிறார்கள்.

ஒரு நல்ல மன்னருக்கு இருக்க வேண்டிய நான்கு நற்குணங்களை திருவள்ளுவர் தனது 390 -வது குறளில் பட்டியலிடுகின்றார்.

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையானாம் வேந்தர்க் கொளி.

தேவைப்படுவோருக்குத் தேவையான நேரத்தில் தேவையான அளவிற்கு உதவி செய்வது, எதிரிகளையும் மதித்துப் போற்றுவது, நீதி வழுவாமல் ஆட்சி செய்வது, தளர்ந்த குடி மக்களைக் காப்பாற்றுவது ஆகிய நான்கு நற்பண்புகளைக் கொண்ட மன்னரே மன்னர்களுக்கெல்லாம் ஒளி தரும் விளக்கைப் போன்றவர் என்கிறார் வள்ளுவர்.

நமது ஆண்டவர் இயேசு தம்மை ஒரு நல்ல ஆயராக வெளிப்படுத்தினார். தம் ஆடுகளான மக்களை அறிந்துகொண்ட அவர், அவ்வாடுகளாகிய நாம் நிலைவாழ்வு பெறும்பொருட்டு, அதனையும் நிறைவாகப் பெறும்பொருட்டு, தமது இன்னுயிரையும் ஈந்தார். "நான், ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் (யோவா 10: 10-11) என்ற இயேசுவின் வார்த்தைகள் நம்மில் வாழ்வாகின்றன.

இந்தப் புதிய மாதத்திலும் நம் ஆண்டவர் ஆயராக இருந்து, நம்மை பராமரித்து, பாதுகாத்து, நிறைவான வாழ்வைப் பெற அருள்புரிவாராக.

அருள்திரு. S.G. சன் பிரதீப்

01.10.2026

நீதியை நிலைநாட்டும் ஆண்டவர்

எரே. 33: 14-16

அந்நாள்களில் யூதா விடுதலை பெறும்; எருசலேம் பாதுகாப்புடன் வாழும். 'யாவேசித்கேனூ' என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும். (எரே. 33: 16).

வழக்கறிஞர் ஒருவர் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட நபராக காணப்பட்டார். நீதியை நிலை நாட்டுவதற்காக தன்னுடைய வாதங்களை முன்வைத்து வாதாடி நீதியை நிலைநாட்டியதே அதற்கு காரணம். ஆண்டுகள் பல கடந்த நிலையில் நீதிபதியாக உயர்வை பெற்றார் மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர். இந்த சூழலில் ஒருநாள் நண்பர்களுக்கு இடையே நடைபெற்ற மோதலில் ஒரு வாலிபனை கொலை செய்ததாக குற்றவாளிக் கூண்டில் கொலை குற்றவாளியாய் நிறுத்தப்பட்டான் மற்றொரு வாலிபன் இவனுக்கு என்ன தீர்ப்பு வழங்கப்படும் என்பதை எல்லாரும் ஆவலாய் எதிர்பார்த்தது நின்றனர் காரணம், கொலைக் குற்றவாளியாய் நிறுத்தப்பட்டு இருந்த வாலிபன் இவரது ஒரே மகன் வழக்கை விசாரித்த இவர் தனது ஒரே மகனாகிய இந்த வாலிபனுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார் ...ஏன் இப்படி செய்தீர்கள்! என்று மகன் கேட்க நீதியை நிலைநிறுத்துவதே நீதிபதியாகிய எனது பணி என்றார்.

பணம், பதவி, செல்வாக்கு போன்றவற்றின் அடிப்படையில் நீதி புரட்டப்படுவதும் ஏழைகளுக்கு நீதி மறுக்கப்படுவதும் அதிகரித்து வரும் சமூகச் சூழலில் நாம் வாழ்ந்து வருகின்றோம். இவ்வண்ணமாகவே பாபிலோனிய அடிமைத்தனத்திலே வாழ்ந்த இஸ்ரவேல் மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டது. இழைக்கப்பட்ட அநீதிகளோ ஏராளம்.....இச்சூழலில் கிமு 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 6ம்நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வரும் பாபிலோனிய மன்னனால் எருசலேமும் திருக்கோயிலும் அழிவுற்றதை கண்களால் கண்டவருமாகிய எரேமியா தீர்க்கர்.....எரேமியா 33:16ல்- அந்நாள்களில் யூதா விடுதலை பெறும்: எருசலேம் பாதுகாப்புடன் வாழும். யாவேசித்கேனூ என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும் என்கிறார். இந்த இறைவார்த்தையின் பின்புலத்தை பார்க்கின்றபோது, இது யூதாவிற்கும் எருசலேமிற்கும் கிடைக்கவிருக்கும் எதிர்கால மீட்பு மற்றும் பாதுகாப்பைப் பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகளாகும். பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து யூதா நாடு விடுவிக்கப்படும் என்றும், எருசலேம் நகரம் இனி அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழும். இஸ்ரவேல் மக்கள் மீட்கப்பட்டு, தங்கள் சொந்த நிலத்தில் சமாதானத்தோடும் பாதுகாப்போடும் அவர்களை வாழச்செய்து ஆண்டவர் நீதியை நிலை நாட்டுவார் என்னும் புது நம்பிக்கையை அருளுகிறார்....

இதையே-யாவேசித்கேனூ என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும் என்கிறார்: "யாவேசித்கேனூ" என்ற எபிரேயச் சொற்றொடரின் பொருள் கர்த்தர் நம் நீதி என்பதாகும்.

எரேமியா 23:6-ல் இதே பெயர் வரவிருக்கும் மேசியாவைக் (நீதியுள்ள கிளை) குறிக்கிறது. எரேமியா 33:16-ல், இந்த பெயர் எருசலேம் நகரத்திற்கு (அல்லது அங்கு வாழும் மக்களுக்கு) வழங்கப்படுகிறது. இதன் பொருள், கடவுளே தங்கள் நீதியின்ஆதாரம் என்பதை நகரம் உணர்த்தும் என்பதாகும். மக்கள் தங்கள் சொந்த நீதியால் அல்ல, மாறாகக் கடவுள் வழங்கும் நீதியால் மீட்கப்பட்டு, நிலைநிறுத்தப்படுவார்கள் என்கிறது இவ்இறைவார்த்தை இவ் வாறு கடவுள் நீதியை நிலைநிறுத்துகிறார் என்பதை தரப்பட்ட திருமறைப் பகுதி சார்ந்து சிந்திப்போம்.

1. வாக்குறுதிகளை நிறைவேற்றி நீதி வழங்குகிறார்:

இதோ நாள்கள் வருகின்றன என்கிறார் ஆண்டவர். அப்பொழுது இஸ்ரயேல் வீட்டாருக்கும் யூதா வீட்டாருக்கும் நான் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவேன். (எரேமியா 33 : 14)

இன்றைய வாக்குறுதிகளின் நிலை குறித்து ஒருவர் இணையத்தில் தனது வேதனையை இவ்வாறு பதிவிடுகிறார் ...இரண்டு ஆண்டுகள் என்னோடு வாழ்வதாக வாக்குறுதி கொடுத்த சிஎப்எல் பல்ப் (CFL BULB) 15 ஆண்டுகளாக என்னோடு வாழுகிறது. ஆயுள் முழுவதும் என்னோடு வாழ்வதாய் வாக்குறுதி கொடுத்த மனைவியோ ஓராண்டில் என்னை விட்டு சென்றுவிட்டாள்....

வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகளாய் மாறிவிட்ட உலக சூழலில் எனது வாக்குறுதிகள் என்றும் மாறாதவையே என்கிற உறுதியை இஸ்ரவேல் மக்களுக்கு வழங்குகிறார் ஆண்டவர்....

ஆண்டவர் கூறுவது இதுவே: இதோ நாள்கள் வருகின்றன: அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள தளிர் தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையும் நிலைநாட்டுவார். (எரேமியா 23 : 5) ஆண்டவர் வழங்கிய வாக்குறுதியை இவ்இறைவார்த்தையில் நாம் காண்கிறோம்.

தளிர்/கிளை- --கிளையை- மேசியாவுக்கு ஒரு பெயர் (எரேமியா 33: 15, ஏசாயா 11: 1, சகரியா: 3: 8, 6: 12). ஒரு மனிதன் என்கிற முறையில் அவர் தாவீதின் சிங்காசனத்தின் ஒரு கிளை ஒரு ராஜாவாக அவருடைய எதிர்கால ஆட்சி பல பழைய ஏற்பாட்டு வேதாகமப் பகுதியில் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கிறது (சங்கீதம் 2: 6-9, 45: 1-7, 72: 5-17, ஏசாயா 9: 6-7, 11: 1-9, 32: 1-3, சகரியா14: 9-21, ஏசாயா 2: 2-4.) இந்த தீர்க்க தரிசனம், இஸ்ரேலையும் யூதாவையும் கடவுள் கைவிடமாட்டார் என்பதற்கும், எதிர்காலத்தில் நீதியையும் நேர்மையையும் நிலை நாட்டும் ஒரு புதிய யுகத்தை அவர் கொண்டு வருவார் என்பதற்கும் ஒரு

நம்பிக்கையான வாக்குறுதியாக அமைந்தது. ஆம், கடவுள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் வழியாய் இஸ்ரவேல் மக்களுக்கு நீதி வழங்குகிறார். இறைமக்கள் நமது வாழ்வில் ஆண்டவர் தந்திருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றி நமக்கு நீதி வழங்குவார்.

2. விடுதலை வாழ்வால் நீதி வழங்குகிறார்:

அந்நாள்களில் யூதா விடுதலைபெறும்: எருசலேம் பாதுகாப்புடன் வாழும். (எரே. 33 : 16)

இந்த உலக வாழ்வில் யாரும் யாருக்கும் அடிமையானவர்களாய் வாழ விரும்புவதில்லை விடுதலையாய் வாழவே விரும்புகின்றோம். ஆபத்து நிறைந்த உலக வாழ்வில் தனது வாழ்வும் எதிர்காலமும் பாதுகாப்பு நிறைந்ததாகவே காணப்படவேண்டும் என்று விரும்புகின்றோம். தனது வாழ்வை பாதுகாத்துக் கொள்ள மனிதன் இன்று ஆறு மாதத்திற்கு ஒரு முறை உடல் ஆரோக்கிய பரிசோதனைகளை மேற்கொள்கின்றான். எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ள சேமிப்பு திட்டங்களையும் மேற்கொள்ளுகின்றான். பாபிலோனிய அடிமைத்தனத்தில் வாழுகின்ற யூதா விடுதலை பெறும் எனவும் எருசலேம் பாதுகாக்கப்படும் அநீதிகள் வேரறுக்கப்பட்டு நீதிநிலை நாட்டப்படும் என்கிற நம்பிக்கையை கடவுள் வழங்குகிறார்.

இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனும் பல்வேறு நிலைகளில் விடுதலையை எதிர்பார்த்து வாழ்கின்றான். பாவத்திலிருந்து விடுதலை சாபத்திலிருந்து விடுதலை வியாதியிலிருந்து விடுதலை கடனிலிருந்து விடுதலை. இறைமகன் இயேசுவின் திருப்பணி காலத்தில் அவ்வாறாகவே மக்கள் விடுதலையின் எதிர்பார்ப்போடு வாழ்ந்தனர். இறைமகன் இயேசுவும் அவ்வாறாகவே விடுதலை வாழ்வை மக்களுக்கு விளங்கி சிறந்து விளங்கினார்.

தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக்காலம் தாழ்த்துவாரா? (லூக்கா 18 : 7) என இறைமகன் இயேசு, ஒரு உவமையின் வழியாக ஆண்டவர். தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு நீதியை செய்கின்றவர் காரணம் அவர் நீதியை நிலைநாட்டும் ஆண்டவர் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

இப்புதிய மாதத்தில் ஆண்டவர் நமது வாழ்வில் வாக்குறுதிகளை நிறைவேற்றி நீதி வழங்குபவராகவும் விடுதலை வாழ்வு வழங்கி நீதி வழங்குபவராகவும் செயலாற்றுவார். நாமும் இவ்வுலக வாழ்வில் நீதியை செய்கின்ற இறைமக்களாய் வாழ்வோம், இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவோம், விண்ணரசின் பங்காளிகளாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம். ஆண்டவர் தாமே இந்த இறைவார்த்தைகளின் வழியாய் நம்மை ஆசீர்வதிப்பார்.

திரு. J. ஸ்டாலின்

01.11.2026

ஆண்டவரே நம் ஒளி

திபா. 27: 1-6

"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு; யாருக்கு நான் அஞ்சவேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம்; யாருக்கு நான் அஞ்சி நடுங்கவேண்டும்?" (திபா. 27: 1).

கடவுள் ஒளியாக இருக்கிறார். "யெகோவா ஓரி" என்ற எபிரேயப் பெயரின் பொருள். கடவுள் என் ஒளி என்பதாகும். ஓர் என்ற வார்த்தை ஒளி, பிரகாசம், வழிகாடுதல், உயிர்ப்பு, இரட்சிப்பு ஆகியவற்றை குறிக்கும். அத்துடன் கடவுள் தனது எழுந்தருளால் இருள், பயம், குழப்பம் ஆகியவற்றை அகற்றுகிறார் என்பதையும் உணர்த்துகின்றது. திபா 21-ல் திருப்பாடகர் தாவீது தனது ஆழமான தனிப்பட்ட நம்பிக்கையுடன் அறிவிக்கிறார். உலகை ஒளியினால் உருமாற்றம் செய்து கடவுள், தாவீதின் வாழ்வு பயணத்தை தெளிவுபடுத்தி, பாதுகாத்து, மீட்பு வழங்கி திடமான மதிலாக நிற்கிறார். எனவே யெகோவா ஓரி என்பது தைரியம், நம்பிக்கை ஆகியவற்றின் சுருக்கமாக தாவீதின் இதயத்திலிருந்து எழுந்து நம்பிக்கையின் அறிவிப்பாக உள்ளது.

யெகோவா ஓரி (ஒளியாகும் ஆண்டவர்) நம்மோடும் இருக்கிறார். ஒளி காட்டும் விளக்காக இருக்கிறார். புதிய மாதத்தில் நமது வாழ்வு பயணத்தில் ஒளியாகும் ஆண்டவரின் செயல்பாடு குறிதது தியானிப்போம்.

1. அச்சம் அகற்றுபவர்:

. . . ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம்; யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும் (திபா. 27: 1)

யெகோவா ஓரி -மனிதரின் அச்சம் அகற்றும் ஒளியாக இருக்கிறார். அச்சம் மனித வாழ்வில் தவிர்க்க இயலாத ஒன்று. சூழல்கள் மாறும்போது, எதிர்பாராத நிகழ்வுகள் வாழ்வில் நிகழும்போது நினைத்தவை நடக்காத போது அச்ச உணர்வு ஏற்படுகிறது. ஆனால் கடவுள் அச்சம் அகற்றம் ஒளியாக இருந்து செயல்படுகின்றார். தாவீது தனது வாழ்வின் அசாதாரணச் சூழல்களில் துன்பச் சூழல்களல் கடவுள் ஒளியாக நின்று அச்சம் அகற்றி திடப்படுத்துவதை அழகாக எடுத்துரைக்கின்றார்.

லூக்கா 2: 8-11-ல் வயல்வெளியில் இருள், குளிர் பயம் நிறைந்த இரவு வேளையில் இடையர்களின் அச்சத்தை அகற்றும் ஒளியாக இயேசு குழந்தையின் பிறப்பின் நற்செய்தி சொல்லப்பட்டது. அச்ச உணர்வுடன் இருந்த இடையர்கள் ஒளியைக் கண்டார்கள். இருளில் நம்பிக்கைப் பெற்றார்கள்.

அன்பர்களே, கடந்த பத்து மாதங்களின் வேதனை, சங்கடம், கஷ்டம் போன்ற இருள் அகற்றும் ஒளியாக கடவுள் நம்மோடு செயல்படுகிறார் என்ற நம்பிக்கையோடு புதிய மாதத்திற்குள் அடியெடுத்து வைக்க முற்படுவோம்.

2. ஆபத்தில் காக்கிறவர்:

ஏனெனில் கேடுவரும் நாளில் அவர் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்துவைப்பார்; தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பார்; குன்றின் மேல் என்னை பாதுகாப்பாய் வைப்பார் (திபா. 27: 5)

கடவுள் ஒளியாயிருந்து ஆபத்தில் நம்மை காக்கிறவர். தாவீது தனது வாழ்வில் தன்னைச் சுற்றியிருந்தவர்களால் ஆபத்து சூழ்ந்தபோது, நம்பியிருந்த மனிதர்களால் ஆபத்து சூழ்ந்தபோது கடவுளின் ஒளியாய் பாதுகாக்கப்பட்டதை நினைத்து பாடுகின்றார். கேடு வரும் நாளில் கடவுள்தன்னை கூடாரத்தில் மறைத்து வைத்து பாதுகாப்பாக வைப்பார் என்று குறிப்பிடுகின்றார்.

விப. 13: 21, 22 இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலைப் பெற்று பாலைநிலம் வழியாக சென்றபோது அவர்கள் பயணம் ஆபத்து நிறைந்ததாகவே இருந்தது. கடவுள் இருள் சூழ்ந்த நேரத்தில் நெருப்புத் தூணாக இருந்து ஒளி காட்டினார். இதனால் இஸ்ரயேலர்கள் மகிழ்ச்சியோடு பயணித்தனர். இந்த அனுபவத்தினை பெற்ற தாவீது ஒளியாகும் ஆண்டவர் கேடுவராமல் குன்றின் மேல் என்னை பாதுகாப்பாக வைப்பார் (திபா. 27: 5) என்று குறிப்பிடுகின்றார்.

அன்பர்களே, யெகோவா ஓரி (ஒளியாகும் ஆண்டவர்) ஒளியாக இருந்து நம்மை ஆசீர்வதிக்கிறார். இந்த புதிய மாதத்தில் ஒளியாகிய ஆண்டவர் அச்சம் அகற்றி, ஆபத்தில் காத்து வழி நடத்துகிறவர் என்பதை உணர்ந்து செயல்படுவோம். நாம் தொடங்கியிருக்கும் புதிய மாதம் நமக்கு ஆசி மிகுந்தாக இருப்பதாக!

திரு. S.G. சிபி

01.12.2026

வாக்குரைக்கப்பட்ட மெசியா

எசா. 11: 1-9

"ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்; அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும்" (எசா. 11: 1).

மேசியா (Messiah) என்ற சொல் "மஷியாக்" (Mashiach) என்ற எபிரேய வார்த்தையில் இருந்து வருகிறது. இதன் பொருள் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (Anointed One) அதாவது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட அரசன். யூத வரலாற்றில் ஒவ்வொரு அரசரும் அபிஷேகம் பண்ணப்படும் போதும் விடுதலை வாழ்வு தரும் மெசியாவாகவே எண்ணினார்கள். ஆனால், அந்த நம்பிக்கை காலப்போக்கில் சிதைந்து போனது. ஆகவே, தாவீதின் வம்சத்தில் வரப்போகும் மேசியா மறுபடியும் மீட்பின் வாழ்வை தருவார் என்ற நம்பிக்கையை ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். இந்த நம்பிக்கை தான் யூத மக்கள் வாக்குரைக்கப்பட்ட மேசியாவின் வருகைக்காக காத்திருக்கின்ற அனுபவமாக மாறியது. ஆனால், மேசியாவாக வந்த இயேசுவை யூதர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லை. கிரேக்க மொழியில் "கிறிஸ்டோஸ்" (Christos) என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை மேசியாவாம் இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. மத்தேயு 1: 21-இல், தேவதூதன் இயேசுவின் பிறப்பை குறித்து யோசேப்பினிடத்தில் முன்னறிவிக்கும்போது, "அவள் (மரியாள்) மகனை பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு என பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்று உரைக்கப்பட்டது. வாக்குரைக்கப்பட்ட மெசியா எப்படிப்பட்டவராக இருக்கப்போகிறார் என்பதை குறித்து ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடும் மூன்று சிந்தனைகள்.

1. நியாயம் செய்கிறவர்: *(எசா. 11: 3-5)*

வாக்குரைக்கப்பட்ட மேசியாவாம் இயேசு கிறிஸ்து நியாயம் செய்கிறவராக வருகிறார் என்ற தீர்க்கதரிசனம் மக்களுக்கு மிகுந்த நற்செய்தியாக இருந்தது. காரணம் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் நியாயமும், நீதியும் இல்லாமல் ஏழைகள் அதிகமாக ஒடுக்கப்பட்டார்கள். ஏழைகளின் நியாயத்தைப் புரட்டி பணத்திற்காக நீதி விலை பேசப்பட்டது (ஆமோஸ் 5: 12). ஆகவே, "நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியை போலவும் புரண்டு வரவேண்டும்" எனக் குறிப்பிடுகிறார் (ஆமோஸ் 5: 24). மீகா தீர்க்கதரிசியும் "நியாயம் செய்து இரக்கத்தை சினேகியுங்கள்" (மீகா. 6: 8) என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். வாக்குரைக்கப்பட்ட மேசியாவின் வருகையில், கண்ணால் காண்கின்றபடி மட்டும் நியாயம் செய்வதில்லை, காதால் கேட்கின்றபடி மட்டும் நீதி தீர்ப்பு செய்கிறதுமில்லை. மாறாக, ஏழைகளுக்கு நீதியின்படி நியாயம் விசாரித்து நடுநிலையோடு நீதி செய்கிற

மேசியாவாக இருப்பார் (ஏசா. 11: 3, 4). சங்கீதம் 140: 12-இல் "எளியோரின் நியாயத்தை கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்" என்று குறிப்பிடுகிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எல்லா மக்களுக்கும் நற்செய்தியாக அமைய காரணம் அவர் நீதியாய் நியாயம் செய்கிறவராக வந்தார்.

2. நிம்மதி தருகிறவர்: *(எசா. 11: 6, 7)*

வாழ்வில் எல்லோரும் எப்போதும் நிம்மதியாக இருக்க விரும்புகின்றனர். மனிதன் நிம்மதி இல்லாமல் பல இடங்களில் நிம்மதியை தேடி அலைகின்ற பரிதாபமான நிலை. ஒரு மனிதனின் வாழ்வில் எப்போது நிம்மதி என்றால் சண்டையில்லாமல் சமாதானத்தோடு கூடி வாழுகின்ற நிலையில்தான் கிடைக்கிறது. ஏசா. 11: 3-8-இல் சண்டையில்லாமல் சமாதானத்தோடு கூடி வாழ்வதால் நிம்மதி வாழ்வை பெற முடியும் என அற்புதமான ஒரு உதாரணத்தை தருகிறார். அதாவது, வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்ட விலங்குகள் ஒன்றாக வாழுகின்ற அற்புதமான காட்சி. ஓநாய் ஆட்டுக்குட்டியோடு தங்குகிறது. புலி வெள்ளாட்டு குட்டியோடு படுத்துக்கொள்கிறது. கன்றுக்குட்டியும், பால சிங்கமும் காளையும் ஒன்றாக கூடி வாழ்கிறது. பசுவும் கரடியும் கூடி மேய்கிறது. இந்த காட்சி சொல்லப்படுகின்ற செய்தி வரவிருக்கும் மேசியாவாம் இயேசுவின் ஆளுகையில் மக்களின் குணாதிசயங்கள் வெவ்வேறாக இருந்தாலும் எல்லாரும் ஒன்றாய் கூடி, சமாதானமாய் வாழ கூடிய நிம்மதி வாழ்வை தருகிறவர் என்பதை வலியுறுத்துகிறது.

3. நம்மோடு இருக்கிறவர்: *(எசா. 11: 8)*

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்து முன்னறிவிக்கப்பட்ட செய்தி "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள்" (ஏசா. 7: 14). "இம்மானுவேல்" என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள் (மத். 1: 23). மேசியாவாக வந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மனிதரிடம் இருந்து தூரமாக இருப்பது அல்ல; மாறாக, மனிதர்களுக்கு இருக்கின்றதுதான். மனிதனின் மீட்பிற்காக மானிடராகவே எளிமையின் வடிவில் பிறந்தார். மனிதர்களோடு தன்னை இணைத்து கொண்டு வாழ்ந்தார். மத்தேயு 28: 20, இயேசு கிறிஸ்து தன் சீடர்களுக்கு கொடுத்த வாக்குறுதியில் "இதோ, உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினார். இயேசு கிறிஸ்து நம்மை விட்டு விலகி செல்லுகிறவர் அல்ல, நம்மோடு இருந்து நம்மை விடுவித்து காக்கிறவர்.

வாக்குரைக்கப்பட்ட மேசியாவாம் இயேசு கிறிஸ்து நீதியாய் நியாயம் செய்கிறவரும், நிம்மதி வாழ்வை தருகிறவரும், நம்மோடு கூட இருக்கிறவருமான தேவகுமாரன். அவருடைய வருகை எல்லா மக்களுக்கும் நற்செய்தியாகவும் மீட்பாகவும் அமைகிறது.

அருள்திரு. C. ஜெபக்குமார்

தவக்கால புதன் அருளுரைகள்

தவக்கால புதன் தியான உரை அறிமுகம்

தவக்காலம் என்பது இறைமக்களின் சிலுவையை நோக்கிய திருப்பயணம். இப்பயணத்தின் மய்யம் துன்புறும் பணியாளர் என்னும் விவிலியப் படிமம் ஆகும். அதிகாரம் ஆதிக்கம் வழியாக அல்ல, மாறாக துன்புறுதலை ஏற்று அன்பின் வழியாக உலகை மீட்கிறார் என்ற பற்றுறுதியின் பயணத்தைக் காட்டுகிறது. அநீதி, அடக்குமுறையினால் பிளவுபட்ட சமுதாயத்தில் பணியாளரின் துன்புறுதல் ஒரு மீட்புக்கான துன்புறுதல் நீதி, அமைதி, சமத்துவப் பாதைகளை வடிவமைக்கும். எனவே, தவக்காலம் தனிப்பட்ட பக்தி அல்லது நோன்பு அல்ல. மானுடத் துன்பங்களால் நம் பற்றுறுதியை இணைத்துப்பார்க்க அழைக்கும் காலம். ஐந்து அருளுரைகளைக் கொண்ட "துன்புறும் பணியாளர்" என்னும் இத்தொடர் இன்றைய கிறிஸ்தவ வாழ்வு முறையைப் புரிந்து கொண்டும் ஒரு பார்வையை முன்வைக்கிறது. எனவே, தவக்காலம் கடவுள் ஆதிக்கத்தின் பாதையைவிட பலவீனத்தின் பாதை தெரிவு செய்கிறார்; மேன்மையைவிட ஒற்றுமையின் பாதையை தெரிவு செய்கிறார் என்பதைக் காட்டி தவக்காலம் அன்பும் நீதியும் சமத்துவமும் அடிப்படையாகக் கொண்ட தியாகமிக்கச் சீடத்துவத்திற்கு நம்மை அழைக்கிறது.

அருள்திரு. முனைவர் **M. பீட்டர் சிங்**

நீதிக்காகத் துன்புறும் பணியாளர்

எசா 42: 1-9

உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் (எசா 42: 4).

இருபதாவது நூற்றாண்டின் மிகச்சிறந்த சீர்த்திருத்த இறையியலாளர் கார்ல் பார்த் "தகுதியானவர்களை கடவுள் தெரிவு செய்வதில்லை; மாறாக தெரிவு செய்தவர்களை கடவுள் தகுதிப்படுத்துகிறார்" (God does not choose the qualified; God qualifies the chosen) என்கிறார். எசாயாவின் இந்த முதல் பணியாளர் பாடலில் கடவுள் தெரிவு செய்த பணியாளரை அறிமுகப்படுத்துகிறார். அவர் மென்மையானவர்; ஆவியாரால் நிரப்பப் பெற்றவர்; நீதிக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்; சத்தத்தாலும் வன்முறையினாலும் அல்ல; கருணையாலும் பொறுமையாலும் ஆளுகை செய்கிறவர்; துன்புறும் உலகில் கடவுளின் மறுமொழியாகின்றார். (This servant is God's answer to a hurting world). யார் இந்தத் துன்பறும் பணியாளர்? சிலர் இது இஸ்ரயேல் நாட்டை (எசா 41: 8,9) குறிப்பிடுகிறது என்பார்கள்; சிலர் இது எசாயாவை அல்லது எதிர்கால இறைவாக்கினரைக் குறிக்கிறது என்பார்கள். எசாயாவின் துன்புறும் பணியாளர் இயேசுவைக் குறிக்கிறது என்பது தொடக்கக்கால கிறிஸ்தவச் சிந்தனையில் உருவான ஒன்று. இயேசுவின் துன்புறுத்தலைப் பார்த்த தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் இயேசுவை எசாயாவின் துன்புறும் பணியாளர் என்ற கருத்தியலாக்கத்துடன் தொடர்புப் படுத்தினார்கள் (திப 8; 1பேது 2) என்பது தான் சரியான புரிந்து கொள்ளுதல். ஆண்டவரின் பணியாளர் "உண்மையாகவே நீதியை நிலைநாட்டுவார் (எசா 42: 3) என்பது காயங்களை ஆற்றும் நீதி. தன் வலிமையால் அல்ல; பணிந்திருப்பதின் ஆற்றலினால் உலகை மாற்றுருவாக்கம் செய்வார்" (The servant transforms the world not by force, but by vulnerability) என்ற வால்டர் புரூக்கமேனின் கருத்து உண்மையான வலிமை நீதியில் வெளிப்படும் (True power shines through justice) என்பதை வெளிப்படுத்துகிறது. எசாயாவின் முதல் துன்புறும் பாடல் மூன்று நீதி பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது.

1. மீளமைவு நீதி (Restorative Justice)

"உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார்; மனம் தளர மாட்டார்" (எசா 42: 4).

மீளமைவு நீதி தண்டனையை மையப்படுத்துவது அல்ல; மாறாக மானுட மாண்பு, சமுதாய அமைதி ஆகியவற்றை மீண்டும் அமைத்தல் பற்றிய நீதி ஆகும். நடந்த தவறு என்ன? பாதிக்கப்பட்டவர் யார்?

உடைவை எவ்வாறு மீளமைவு செய்வது? போன்ற வினாக்களை எழுப்பி பாதிக்கப் பெற்றவர்; பாதிப்பை ஏற்படுத்தியவர்; சமுதாயம் இவர்களின் காயங்களை குணமாக்கும் நீதி கடவுளின் நீதி மீளமைவு நீதி (God's justice is restorative). லேவியர் 25-இல் விடுதலை ஆண்டில் நில விடுதலை, சமுதாயச் சமநிலை (Social balance) மீளமைவுச் செய்தலைப் பற்றி விளக்குகிறது. ஓசேயா, எரேமியா இறைவாக்குரைஞர், மனுக்குலத்தோடு உள்ள உறவை மீளமைவு செய்ய கடவுள் விரும்புகிறார். சக்கேயுவின் வாழ்விலும் (லூக்கா 19) தன் மீளமைவு சமுதாய மீளமைவுக்குக் காரணமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார் என்றும் விளக்குகிறது. மீளமைவு நீதி சமுதாயத்தை மறு கட்டுமானம் செய்யவும், முழுமையாக்குதலை (Shalom) மீளமைவு செய்யவும் விரும்பும் கடவுளின் இதய ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது.

2. உறவுசார் நீதி (Relational Justice)

திருமொழி 6 -இல் பிறஇனத்தாருக்கு ஒளி; திருமொழி 7 -இல் பார்வை இழந்தோர், கைதிகள், இருளிலும் இருப்போர் மீட்கப்படுதலைத் துன்புறும் பணியாளரின் பணிகளாக விளக்கம் பெறுகிறது. கடவுளின் நீதி விளிம்பு நிலை மக்களுடனான உறவு. நாடுகளுக்கு ஒளியான பணியாளர் (Servant is light for the nations) என்பது கடவுளின் உறவு அனைவருக்கும் உரியது; தவறு என்பது சட்டங்களை மீறுவது அல்ல; உறவை உருவாக்கத் தவறுவது (not just violation of rules, but failure of relationship). கடவுளின் உடன்படிக்கை (விப. 19 & இச. 6) அடிப்படையில் உறவை அடிப்படையாகக் கொண்டது. இறைவாக்குரைஞர் இஸ்ரயேலைக் கண்டித்துரைப்பது அவர்கள் சட்டங்களை மீறுகிறார்கள் என்பதற்காக அல்ல; மாறாக ஏழைகள், ஒடுக்கப்பட்டோரிடையே உள்ள உறவை உடைக்கின்றனர் என்பதாலேயே. அயலாரிடம் அன்பு கூருங்கள் (மத் 22) என்பது உறவுசார் நீதி. டிட்ரிச் போன்காப்பரின் "பாடுபடும் கடவுளால் மட்டுமே உதவி செய்ய முடியும்" (Only a suffering God can help) இந்த உண்மையை வலியுறுத்துகிறது. அவர் நீதியை ஓரங்களுக்கும் கொண்டு செல்லுகிறார் (Justice to the margins).

3. சீரமைப்பு நீதி (Reparative Justice)

திருமொழி 9-இல் "புதியவற்றை நான் அறிவிக்கிறேன்" என்பது சீரமைப்பு நீதியை வெளிப்படுத்துகிறது. இந்த நீதி உடைவைப் பழுது பார்க்கும் நீதி; இடிந்ததை மறு கட்டுமானம் செய்யும் நீதி; இது உடைந்து போன உலகைக் குணமாக்கும் கடவுளின் இயக்கம் (God's movement of healing). விப 22: 1-15 இல் தவறு செய்தவர்கள் எவ்வாறு சீரமைப்புச் செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறது. எசாயா 58 - இல் உண்மையான வழிபாடு என்பது தவறுகளைப் பழுது நீக்கம் செய்வதும்; தெருக்கள் பாதுகாப்பான இடங்களாக மாறுவதுமான சீரமைப்பை வலியுறுத்துகிறது. சக்கேயு நான்கு மடங்கு திரும்பக் கொடுத்துத் தம் வாழ்வை மட்டுமல்ல; பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வையும் மாற்றினார்.

சீரமைப்புச் செய்கிறார். தென்ஆப்பிரிக்கா பேராயர் டெஸ்மண்ட் டுடு (Desmond Tutu) "மன்னிப்பு இல்லையென்றால் எதிர்காலம் இல்லை, நீதி இல்லை என்றால் உண்மையான மன்னிப்பு சாத்தியமற்றது" (without justice true forgiveness is impossible) என்கிறார்.

துன்புறும் பணியாளர் மானுடத்தைப் பழுது நீக்குகிறார். மிரோஸ்லவ் வுல்ப் (Miroslav Volf) என்ற இறையியலாளர் "கடவுளின் நீதியின் நோக்கம் பாவியின் அழிவு அல்ல, மாறாக உடைந்து போன உறவை மீளமைவு செய்வது" (The goal of God's justice is not the destruction of the sinner, but the restoration of the broken relationship) என்கிறார். ரூவாண்டா (Rwanda) நாட்டில் நிகழ்ந்த இனப்படுகொலைக்குப் பின் தம் குடும்பத்தை இழந்த பெண்; தம் குடும்பத்தை அழித்தவர்களின் மரண தண்டனைக்குக் கோரிக்கை விடாமல் "என் குடும்பத்தை நீர் அழித்தீர்; ஆனால் வாரத்திற்கு ஒருமுறை உங்கள் குடும்பத்துடன் என் வீட்டில் வந்து என்னுடன் உணவு உண்ண வேண்டும்" என்கிறார். இந்தப் பெண் தீமையைப் புறக்கணிக்காமல் அதனை எதிர்கொள்கிறார் - குணமாகுதலை நோக்கி... (She did not ignore evil, she confronted it, but with the purpose of healing, not destroying). துன்புறும் பணியாளரின் நீதி குணமாக்கும் நீதி. ஆமென்.

அருள்திரு. முனைவர் M. பீட்டர் சிங்

விடுதலைக்காகத் துன்புறும் பணியாளர்

எசா 49: 1-13

"...உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்" (எசா. 49: 6).

லியானடோ போஃப் (Leonardo boff) *என்ற விடுதலை இறையியலாளர் "ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான அழுகுரலில் தான் கடவுளைக் காண முடியும்"* (God is found in the cry for liberation that rises from the oppressed) *என்கிறார். எசாயாவின் இரண்டாவது துன்புறும் பணியாளர் பாடல் மிகத் தெளிவாக விடுதலையை உலகின் எல்லை வரைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்றும், துன்புறும் பணியாளர் வன்முறையினால் அல்ல; துன்புறுதலின் வழியாக விடுதலை வழங்குகிறார் என்றும், துன்புறும் பணியாளர் தாம் விடுதலையின் கடவுள்தம் முகவர்* (God is agent of liberation) *என்றும் தெளிவு படுத்துகிறார். இஸ்ரயேலர் நாடு கடத்தப்பட்ட போது தங்கள் மாண்பு, அடையாளம், எதிர்கால நம்பிக்கை இழக்கப் பெற்றார்கள். இந்தச் சூழலில் தான் பணியாளர் எழுதுகின்றார், கடவுளின் விடுதலை அழைப்பில் இருந்து தொடங்குகிறது (எசா. 49: 1-13). விடுதலை மனிதர் கண்டுபிடிப்பு அல்ல; அது கடவுளின் தூண்டுதல்* (God's initiative). *வாய் கூரான வாள் என்பது அதிகாரத்தை எதிர்க்கும் உண்மையின் வழியாக கடவுள் விடுதலை வழங்குகிறார். இஸ்ரயேல் மட்டுமல்ல, விடுதலை அனைத்து நாடுகளுக்கும் உரியது (எசா. 49: 5,6).* விடுதலை உலகளாவியது (Liberative is Universal). *புறந்தள்ளப்பெற்றோரை கடவுள் விடுதலையின் கருவிகளாக* (God chooses the rejected to be instrument of liberation) *பயன்படுத்துகிறார். அதிகாரமற்றவர்களை அதிகாரமற்றவர்களின் விடுதலைக்காக பயன்படுத்துகிறார்* (God uses the powerless to liberate the powerless). *விடுதலை என்பது சமுதாய, பொருளாதார, உணர்வுபூர்வமான அன்புமயமான அரசியல் சார்ந்த முழுமையாகும்* (Liberation is holistic). *(எசா 49:8-12). விடுதலை ஒரு கனவு அல்ல மாறாக இது கடவுளின் வாக்கு* (Liberation is not a dream, it is the promise of God) *(எசாயா 49 13). இப்பகுதியில் எசாயா விடுதலையின் மூன்று படிநிலைகளை விளக்குகிறார்.*

1. எதிர்த்தல் (Resistence): *(எசா 49: 1-3)*

விடுதலையின் முதல் படி எதிர்த்தல். "அவர் என் வாயை கூரான வாள் போன்று ஆக்கினார்" (எசா. 49: 2) என்று சொல்லும் பணியாளர் அநீதியை அமைதியாக ஒப்புக்கொள்ளாமல் கடவுளின் உண்மையை பேசும் இறைவாக்கு எதிர்ப்பைக் காட்டுகிறார் (Prophetic resistence). *எதிர்ப்பு என்பது பழி வாங்குதல் அல்ல, மாறாக அடிமைப்படுத்தும் அல்லது தாழ்த்தும் ஆற்றல்களுக்கு அடிமையாக இருப்பதை மறுப்பது ஆகும்* (Resistence is standing against dehumanizing forces). *பொய்யை உண்மையால் எதிர்ப்பது; தவறான அடையாளங்களுக்குத் தலை வணங்குவதை மறுப்பது; அநீதியைப் பார்க்கும் போது அமைதியாக இருப்பதை மறுப்பது எதிர்த்தல். மோசே அவரது காலத்தில் இருந்த பேரரசை "என் மக்களைப் போக விடு" என்ற கடவுளின் கட்டளையால் எதிர்த்தார் (விப. 5: 12). எரேமியா இறைவாக்கினர் நாட்டில் ஊழல் பெருகிய காலத்தில் சிலை வணக்கம் வற்புறுத்தப்பெற்ற சூழலில் இறைவாக்கு நெருப்பாக* (Prophetic fire) *செயல்பட்டார் (எரே. 1: 9,10). இயேசுவும் தம் பணிக் காலத்தில் அதிகாரம், வசதி, சமரசம்* (Power, comfort, compromise) *போன்ற உண்மைக்கு மாறான ஏமாற்றுதல்களை எதிர்த்தார். (மத் 4: 1-11). விடுதலை இறையிலாளரான ஜேம்ஸ் கோன் "தீமைக்கு எதிராக நிற்பது கடவுளின் விடுதலை செயலில் பங்கேற்பதே"* (To resist evil is do participate in God's Liberating activity in the world) *என்கிறார்.*

2. எதிரொலித்தல் (Resilience): *(எசா. 49: 4,5)*

"வீணாக நான் உழைத்தேன்; என் ஆற்றலைச் செலவழித்தேன்" (எசா. 49: 4) என்பது பணியாளரின் மன உளைச்சலை வெளிப்படுத்துகிறது. ஆனால் தொடர்ந்து சொல்கிறார் "ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது" (எசா. 49: 4) என்பது தான் எதிரொலித்தல். விடுதலை தாமதித்தாலும் அது அழிவதில்லை என்று காத்திருக்கும் ஆற்றல் நம்பிக்கை விடாமல் பிடித்து இருக்கும் துணிவு தான் எதிரொலித்தல். முடிவு தெரியாவிடினும் தொடர்வது வலிமை பலவீனமாக இருந்தாலும் நம்புவது நம்பிக்கை இழக்கும் சூழலிலும் பற்றிக் கொள்வது, மடிந்து போக மறுப்பது தான் எதிரொலித்தல். மண்ணிற்குள் மறைந்திருக்கும் விதை கதிரவனைப் பார்ப்பதில்லை; ஆனால் இருளின் வழியாக மேல்நோக்கி அழுத்துகிறதைப் போன்றது எதிரொலித்தல். இறைவாக்கினர் எலியா தூரைச் செடியின் அடியில் அமர்ந்து "என்

மூதாதையரை விட நான் நல்லவன் அல்ல" என்று மன அழுத்தத்துடனும் மன உளைச்சலுடனும் முறையிட்டபோது கடவுள் உணவளித்து புதிய பணிகளைக் கொடுத்து ஆற்றல் படுத்தினார் *(1 அரசர் 19: 1-18).* யோபு தாம் எங்குச் சென்றாலும் கடவுள் அங்கு இல்லை "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்" என்று தன் வினாக்களுக்கு பதில் கிடைக்காத சூழலிலும் நம்பிக்கையுடன் இருந்தார் *(யோபு 23: 8 -10).* எதிரொலித்தல் என்பது கண்களில் கண்ணீருடன் பற்றுறுதியுடன் இருத்தல் (Resilience is faith with tears with still in the eyes) ஆகும். பவுல் தன் வாழ்வில் கொடுக்கப்பட்ட முள் மாற வேண்டும் என்று கேட்கிறார்; ஆனால் "என் அருள் உனக்குப் போதும்" என்ற கடவுளைச் சார்வது தான் எதிரொலித்தல். எதிர்நோக்கு இறையியலாளர் ஜர்கன் மோல்ட்மான் (Jürgen Moltmann) "எதுவும் தெரியாத போதிலும் நம்பிக்கையுடன் நின்றிடும் ஆற்றலே உண்மையான எதிர்நோக்கு" (Hope is the power to resist despair even when nothing is visible) என்கிறார்.

3. உயிர்ப்பித்தல் (Reviving): *(எசா 49: 6-13)*

உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை ஒளியாக ஏற்படுத்துவேன் *(எசா. 49: 6)* என்பது விடுதலையின் உச்சிப்புள்ளி. இது மறு உயிர்ப்பித்தல் - புதிய ஆற்றல், புதிய எல்லைகள், புதிய பணிச்சுமை. பணியாளரின் பணி இஸ்ரயேலைத் தாண்டி அனைத்து மக்களுக்குமென்று விரிகிறது. விடுதலை என்பது தப்பி செல்வது அல்ல; அது மக்களுக்கு நம்பிக்கையும் உயிரையும் கொடுக்கும் ஆற்றல். புயலைத் தாண்டி நிற்குமரம் பசித்தோருக்குக் கனி; பயணிகளுக்கு நிழல்; பறவைகளுக்கு அடைக்கலம் என்பதுதான் உயிர்ப்பித்தல். அநீதிகளையும் சிறை வாழ்வையும் பெற்ற யோசேப்பை நாடுகளைப் பாதுகாக்கும் நிலைக்கு கடவுள் உயிர்ப்பித்தார் *(தொநூ. 37: 50)* (God revived Joseph from pit to palace). எசேக்கியாவின் உலர்ந்த எலும்பு பள்ளத்தாக்கு உயிர்ப்பித்தலின் பட்டறிவைக் கொடுத்தது *(எசே. 37 : 1-14).* பயந்து மறைந்து வாழ்ந்த சீடர்கள் தூய ஆவியரால் உயிர்ப்பிக்கப் பெற்றார்கள். நாடுகளுக்கு விளக்கானார்கள் *(திப. 2).* கடவுள் நம் உடைந்த நிலையில் இருந்து பலருக்கு வாழ்த்தாக மாற்றுவதே உயிர்ப்பித்தல். குஸ்டோவோ குட்டிரஸ் (Gustavo Gutiérrez) என்ற விடுதலை இறையியலாளர் உண்மையான விடுதலை என்பது "ஏழைகள் உயிரையும் நம்பிக்கையும் உருவாக்கும் புதிய படைப்பாக மாறும் நிலை" (True liberation is

where the poor become agents of life and hope) என்கிறார்.

விடுதலை ஒரு பயணம் ஆற்றல் நிறைந்த பயணம். இந்தப் பயணத்தின் ஒவ்வொரு படி நிலையிலும் கடவுள் உண்மை உள்ளவராக இருக்கிறார். ஒரு வேளாண் பணியாளர் மூங்கில் ஒன்று நட்டு நான்கு ஆண்டுகள் தண்ணீர் விட்டாராம். மூங்கிலின் முளை வெளியே வரவில்லை; மக்கள் நகைத்தார்கள். ஐந்தாவது ஆண்டு திடீரென்று 90 அடிகள் வளர்ந்து விட்டது. இவ்வளவு உயரமாக வளர முடியுமா? ஐந்து ஆண்டுகள் வெளியே தெரியாமல் ஆழமாக வேரை வளரச் செய்திருக்கிறது. விடுதலையும் இதனைப் போன்றதே. கடவுள் மேற்பரப்புக்கு அடியில் செயல்படுகிறார்; செடி வெளியே வருவதற்கு முன் அதன் வேர்களைப் பலப்படுத்துகிறார் துன்புறும் பணியாளர். நமக்கு விடுதலை தருகிறார்.

அருள்திரு. முனைவர் M. **பீட்டர் சிங்**

அன்புக்காகத் துன்புறும் பணியாளர்

எசா. 50: 4-14

"...ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்;..." (எசா. 50: 4)

எரிக் ஃபுரோம் (Erich From) தாம் எழுதிய "அன்பு செலுத்தும் கலை" (The Art of Loving) என்ற நூலில் அன்பு ஒரு கலை. ஒழுக்கத்துடனும், பொறுமையுடனும், ஒப்படைப்புடனும் ஒரு இசைக்கருவியை மீட்டக் கற்பதைப் போன்று கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று என்கிறார். அன்பு ஒரு கட்டத்தின் அடித்தளத்தை போன்றது அன்பு உடையும் போது அனைத்தும் உடைகிறது (When love breaks, everything breaks). அன்பு உடையும்போது உறவு உடைகிறது; குடும்பங்கள் பிரிகின்றன; சமுதாயங்கள் உடைகின்றன; திருச்சபைகள் பிளவு படுகின்றன; பற்றுறுதியும் உடைகிறது. பேராயர் அகஸ்டின் "வாழ்வின் அழகே அன்பு" (Love is the beauty of soul) என்கிறார். அன்பு உடையும் போது அழகு உடைகிறது. அன்பு உடைந்தால் மனிதர் தனிமையிலும், சந்தேகத்திலும், போட்டியிலும், வன்முறையிலும் தள்ளப்படுகிறனர். இந்நூலின் திருமறைப்பகுதியும் பாடுபடும் பணியாளர் அன்பின் பணியாளராக நம்மை ஆற்றுப்படுத்தி ஆற்றல் படுத்தும் அன்பாகவும், பாடுபடும் அன்பாகவும் இருக்கிறார் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. திருமொழி 4, 5 "கற்றோரின் நாவை எனக்கு அளித்துள்ளார்" என்பது பணியாளர் அன்பின் மொழியைப் புரிந்துகொள்ள அனுதினமும் கடவுளின் வார்த்தையைக் கேட்க வேண்டும் என்று விளக்குகிறார். தொடர்ந்து அன்பு ஆபத்தானது (50: 6) "அடிப்போர்க்கு முதுகையும், காறி உமிழ்வோருக்கு முகத்தையும் மறைக்காமல் காட்டுவது" என்பது அமைதி ஒரு பலவீனம் அல்ல; அது ஓர் ஆற்றல் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. திருமொழிகள் 7 முதல் 11 வரை உள்ள பகுதி, பாடுகளிலும் அன்பு உறுதியாக நிற்கிறது என்றும்; துன்புறும் பணியாளர் அவமானங்களைச் சந்தித்தார், ஆனால் அவமானப்படவில்லை என்பதை விளக்குகிறது அன்புக்காக துன்புறும் பணியாளர் அன்பின் மூன்று தன்மைகளை விளக்குகிறார்.

1. அன்பு ஒரு கலை: (Love is an Art)

அன்பு ஓர் உணர்வு அல்ல; மாறாக கற்றுக் கொள்ள வேண்டிய பாடம். பயிற்சி வழியாக வளர்க்கப்பட வேண்டிய கருணை. திருமொழிகள் 4 மற்றும் 5, அன்பு பேசுவதில் அல்ல, கேட்பதில் தொடங்குகிறது (Love begins not with speaking but with listening). கேட்பது தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலின் வெளிப்பாடு. "ஆண்டவரை பேசும் உமது அடியேன் கேட்கிறேன்" என்று சாமுவேல் கடவுளிடம் அன்பு கூருவது கேட்க கற்றுக்

கொள்வது என்பதைப் புரிந்து கொண்டார் *(1 சாமு 4: 10).* மோசே மக்களின் முறுமுறுப்பு, சந்தேகம், கிளர்ச்சி செய்யும் வேளையில் பொறுமையைக் கற்றுக் கொண்டார் (Love is learning to be patience). யோசேப்பு தாம் மறுதலிக்கப்பட்ட சூழலிலும் மண்ணுக்கு கற்றுக் கொள்கிறார் *(தொநூ 50: 20)* (Love is learning to forgive). ரூத்து புதிய வாழ்வின் சூழலை ஏற்றுக் கொள்ள கற்றுக்கொண்டார் *(ரூத் 1 - 4)* (Love is learning to adapt). பவுல் தெசலோனிக்க திருச்சபையாருக்கு எழுதிய கடிதத்தில், அன்பு செலுத்த கடவுளிடமிருந்து கற்றுக்கொண்டீர்கள்; எனவே இன்னும் முன்னேறுங்கள் *(1 தெச 4: 10)* என்பது அன்பிற்கு முடிவு இல்லை; அது எப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது என்கிறார். டிட்ரிச் போன்காஃபர் (Dietrich Bonhoeffer) "அடுத்தவருக்கு நாம் செய்யும் முதல் சேவை - அவர்களைக் கேட்பதே" (The first service one owes to others is to listen to them) என்கிறார்.

2. அன்பு ஒரு கொடை: (Love is a Gift)

எசாயா *50: 7-9* வரை உள்ள திருமொழிகளில் அன்பு தானாக உருவாக்கப்படுவதில்லை, அது கடவுளிடமிருந்து வரும் கொடை என்கிறார். துன்புறும் பணியாளர் இறையன்பின் வாய்க்காலாக மாறுகிறார். "ஆண்டவர் எனக்கு துணை நிற்கிறார்; என் முகத்தைக் கற்பாறையாக்கிக் கொண்டேன்" *(50: 7)* என்பது அன்பு ஓர் உணர்ச்சி அல்ல (not senitmental); அது மனவுறுதியுடன் தாங்கும் திறன் (courageous endurance). பணியாளர் அவமானத்தையும், மகிழ்ச்சியையும், எதிர்ப்பையும் தாங்குகிறார். ஏனென்றால் அன்பு ஒரு கொடை. ரூத்திற்கு கடவுள் கொடுத்த அன்பு நகோமியை கடினமான நிலையில் இருந்து மீட்டது *(ரூத்து 1: 16, 17).* நல்ல சமாரியனிடமிருந்து வெளிப்பட்ட அன்பு அவர் பெற்ற அருட்கொடையின் வெளிப்பாடாக இயேசு விளக்குகிறார் லூக். *10: 33-35).* சிலுவையில் இருந்து இயேசு கொடுத்த மன்னிப்பும், மறுவாழ்வும் அவர் பெற்ற அருள்கொடையின் வெளிப்பாடு *(லூக். 23 34).* திருமறையில் அன்பு கடவுளின் அருள் கொடை *(யோவா. 3: 16).* அன்பு கடவுளிடமிருந்து வருகிறது (Love comes form God) *1 யோவா 4: 7,8).* அன்பு இறைத்தன்மை உடையது. அன்பு ஒரு கட்டளை அல்ல; ஆனால் மானுடத்தன்மையை தூய்மைப்படுத்தி உயர்த்துகிறது. எனவே அன்பு ஓர் இறையியல் தகவு என்பது தாமஸ் அக்குவினாஸின் கருத்து. அன்பு ஒரு கருத்தியல் கோட்பாடு அல்ல; மாறாக மனுக்குலத்தோடு கடவுளின் உறவின் அடித்தளம் (Love is not simply on abstract ideal, but the very foundation of God's relationship with humanity) என்று கார்ல் பார்த் குறிப்பிடுகிறார்.

3. அன்பு ஒரு செயல்: (Love is an act)

எசாயாவின் துன்புறும் பணியாளர் அன்பைச் செயல்படுத்துபவர். தன் விலையுயர்ந்த கீழ்ப்படிதலாலும், தைரியமான உறுதியிலும், கருணை நிறைந்த சேவையினாலும் அன்பைச் செயல் வடிவமாக்குகிறவர் என்று

விளக்குகிறார் (Love lived in action). உண்மை அன்பு வாழ்வை மாற்றும்; மானிட மாண்பை மீட்கும். நீதியை வெளிப்படுத்தும்; அன்பு எல்லைகளை உடைக்கும் (மாற்கு 1: 40, 41). அன்பு மக்களின் தேவைகளைச் சந்திக்கும் (மாற்கு 6: 34-44). அன்பு தடைகளை உடைத்து மக்களைக் குணமாக்கும் (மாற்கு 2: 1-12). அன்பு பகிர்ந்து கொடுக்கச் செய்யும் (திப. 2: 42-47). அன்பு புறக்கணிக்கப்பட்டவர்களைத் தூக்கி நிறுத்தும்; புறந்தள்ளப்பட்டவர்களையும், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களையும் அரவணைக்கும் (திப. 9: 26, 27). அன்பு தன் உயிரையே கொடுக்கும் (யோவான் 15: 13). சிலுவை அன்பின் வெளிப்பாடு (Cross is the revelation of God's love). இயேசு சிலுவையை அன்பின் பணிமனை ஆக்கினார் (Cross is Jesus' workshop); மீட்பின் செயலை நிறைவேற்றினார் சிலுவையில் (The Cross is love in action). மோல்ட்மேன் என்ற எதிர்நோக்கு இறையியலாளர் "சிலுவை, உடைக்கப்பட்ட உலகில் கடவுளின் முழுமையான சுயதானம் (God's total self-donation) என்கிறார்.

ஜப்பானிய இறையியலாளர் கொசுகே கோயாமா (Kosuke Koyama), கடவுளின் அன்பைப் புரிந்து கொள்ள வாளையும், நாற்காலியையும், மணிமுடியையும் பார்க்காமல் பாத்திரத்தையும், துண்டையும், தண்ணீரையும் பார்க்க வேண்டும் (யோவா. 13). மேல்வீட்டு அறையில் சீடர்களின் பாதங்கள் இருக்கும் வரை தன் முழங்கால்களை முடக்கி, அவர்களது பாதங்களைத் தண்ணீரினால் கழுவி, துண்டினால் துடைக்கிறார். தம் முதுகைத் தரைமட்டும் வளைக்கும் கடவுள் தம் சீடர்களுக்கு பணி செய்கிறார். எனவே திருச்சபைகளில் வரவேற்று போடப்படும் துண்டுகள் ஆணவத்திற்கும், ஆடம்பரத்திற்கும் அல்ல; அன்பு பணி செய்து மக்களின் பாதங்களைத் துடைத்து பணி செய்யும் துண்டுகளாக இறையியலாக்கம் செய்யும்போது அன்பு செயல் வடிவம் பெறுகிறது; இறையியல் சேவையாக மாறுகிறது; கடவுள் நாம் தொடக்கூடியவராக (touchable) மாறுகிறார்.

அருள்திரு. முனைவர் M. பீட்டர் சிங்

சமத்துவத்திற்காகத் துன்புறும் பணியாளர்

எசா 52: 13 - 53: 3

...ஆண்டவரின் ஆற்றல் யாருக்கு வெளிப்பட்டது (எசா 53: 1)

ஆண்ட்ரூ லெஸ்டர் என்ற திருச்சபை இறையியலாளர் "ஆயர் பராமரிப்பு ஆற்றுப்பணியில் எதிர்நோக்கு" (Hope in Pastoral Care and Counselling) *என்ற நூலில் மக்களால் மறக்கப்பெற்ற உதவாதவர் என்று புறக்கணிக்கப்பட்ட ஒரு மனிதரைத் தாம் சந்தித்ததை விளக்குகிறார். அந்த மனிதருடன் ஆயர் அமர்ந்து, அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு இருந்தபோது, அந்த மனிதர் சொல்கிறார் "என் வாழ்வில் முதல் முறையாக என் வலியைப் பகிர்ந்து கொண்டதை நான் உணர்கிறேன்; அன்று நான் சமநிலையை உணர்ந்து கொண்டேன்...; என்னை ஒருவர் பார்ப்பதாக நான் உணர்ந்தேன்; ஒரு நம்பிக்கையை நான் பெற்றேன் என்று" ஆண்ட்ரூ சொல்கிறார் "அடுத்தவர்களின் துன்பத்தில் ஒருவர் தம்மை நினைத்துக் கொள்ளும்போது நம்பிக்கை மீண்டும் பிறக்கிறது"* என்கிறார் (Hope is reborn, when someone enters the suffering of another) *இந்த நாளின் திருமறைப் பகுதியில் எசாயாவின் துன்புறும் பணியாளர் துன்புறும் மக்களுடன் தம்மை அடையாளப்படுத்துவதை விளக்குகிறது. துன்புறும் பணியாளர் துன்புறும் மண்ணுக்குலத்தோடு தன்னை இணைத்துக் கொள்கிறார்; மக்களால் சுமக்க முடியாத சுமைகளைத் துன்புறும் பணியாளர் சுமக்கிறார். துன்புறும் மக்களுடன் துன்புறும் கடவுள் என்பது சமநிலை - சமத்துவத்திற்கான கடவுளின் எதிர்நோக்கு. இப்பகுதியில், எசாயா சம நிலையில் சமத்துவத்திற்கான துன்புறுதலை மூன்று நிலைகளில் விளக்குகிறார்.*

1. அடையாளப்படுத்துதலின் வழியாகச் சமத்துவம் (Identification):

அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைந்ததால்... அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; ...அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை. (எசா 52: 14, 53:2-3) என்ற எசாயாவின் துன்புறும் பணியாளரின் தோற்றம் உருக்குலைக்கப்பெற்ற; புறக்கணிக்கப்பட்ட; மாண்புகள் மறுக்கப்பட்ட மனுகுலத்தோடு தம்மை அடையாளப்படுத்திய செயலாக எசாயா பார்க்கிறார். பணியாளர் சிறியவர்களின் வாழ்வில் இணைந்து கொள்கிறார். உயர்ந்தவர்களுக்கு அல்ல; ஏழைகள் எங்கு இருக்கிறார்களோ அங்கே நிற்கிறார். விளிம்புநிலை மக்களுடனும்,

அவர்களது உணர்வுகளுடனும் தம்மை அடையாளப் படுத்துகிறார். மோசே அடிமைகளோடு தன்னை அடையாளப்படுத்தினார் (விப 2: 11,12). எசாயா, ஆமோஸ் போன்ற இறைவாக்கினார்கள் ஒடுக்கப்பட்ட மக்களுடன் தங்களை அடையாளப்படுத்தினார்கள். இயேசுவும் தொழுநோயால் மானுட மாண்பு மறுக்கப்பட்ட மக்களுடன் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்தார் (மாற்கு 1:40-45). ஒடுக்கப்பட்ட மக்கள் நிற்கும் இடத்தில் தலைவர் நிற்பதில் இருந்து தான் சமத்துவம் தொடங்குகிறது (Equality begins when a leader stands where the oppressed stand). மானுட மாண்பு மறுக்கப்பட்டவர்களின் மாண்பை உறுதி செய்வது அடையாளப்படுத்துதல் (Identification is giving diginty to the dehumanized). சமத்துவம் என்பது ஒரு கருத்து அல்ல மாறாக அதை அடையாளப்படுத்துதல் (Equality is not an idea, but and identification). ஒடுக்கப்பட்ட புலம்பெயர்ந்த, பாலின வன்முறையால் பாதிக்கப்பெற்றவர்களோடு அடையாளப்படுத்துதல் சமத்துவத்திற்கு நேரான முதல் படிநிலை.

2. அருள்செயல்களால் இடையீடு செய்தல் (Intervening):

எசாயா உடைப்பட்ட உலகில் கடவுளின் இருத்தல் நிலையை சுமந்து செல்லும் பணியாளரை நம்முன் காண்பிக்கிறார். இடையீடு செய்தல் என்பது மானுட பாடுகளின் மேலிருந்து (from above) வருகிறவர் அல்ல; மாறாக உள்ளிருந்தே வருகிறவர் (from within). வேதனையுற்று, நோயுற்று நலிந்த மனிதரைப் போலிருந்தார் (எசா 53: 3). இது சமத்துவத்திற்காக இடையீடு. சமத்துவம் என்பது குறைவாகப் பெற்றுக் கொள்கிறவர்களுக்கு அதிகமாக கொடுப்பது (Equity is giving more to those who have required less). சமநிலை என்பது ஒரே மாண்புடன் அனைவரையும் ஒன்று போல் நடத்துவது (Equality means everyone treated with the same dignity). ஜேம்ஸ் கோன் (James H. Cone) என்ற கருப்பு இறையியலாளர் "ஒடுக்கப்படுகிறவர்களின் பக்கம் கடவுள் நிற்கிறார்; ஒதுக்குகிறவர்களை அவர் வெறுக்கிறார் என்பது அல்ல; ஆனால் சமத்துவம் தாழ் நிலையில் இருப்பவரைத் தூக்கி விடுவதை வலியுறுத்துகிறது" (God takes the side with oppressed, not because God hates the oppressor, but because equality demands lifting the lowly) என்கிறார். எகிப்தில் அடிமைகளால் - சமகூலி மறுக்கப்பெற்ற - சம உரிமை மறுக்கப்பெற்ற, குழந்தைகளைப் பெற்று வளர்க்க அனுமதி மறுக்கப்பெற்ற இஸ்ரயேல் மக்களின் சுமைகளைச் சுமந்து அவர்களுடன் பாலை நிலத்தில் கடந்த கடவுள், எருசலேம் - எரிகோ சாலையில் குற்றுயிராக்கப்பட்ட மனிதருடனும் நிற்கிறார் (லூக்10:

25-37). உரிமை மறுக்கப்பட்ட பெண் பக்கமாக சீகார் கிணற்றின் அருகில் நிற்கும் கிறிஸ்து (யோவான் 4), ஆணாதிக்க சிந்தனையினால் ஒரு பெண்ணை மட்டும் கல்லெறிந்து கொல்ல சட்டத்தை உயர்த்திக் காட்டிய சூழலில் தரையில் குனிந்து சமுதாய நீதியை எழுப்பி சமத்துவத்திற்கான குரலை ஓங்கியொலித்த இயேசு (யோவான் 8), தங்கள் உடமைகளை சம நிலையில் பகிர்ந்து பொது உடமை சமுதாயமாக வாழ்ந்த தொடக்கக்கால திருச்சபை (திப 4) - சமத்துவத்திற்கான அருள்செயல்களால் இடையீடு செய்தலின் மாதிரிகளாக இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவரை உயர்த்துவது சம நீதியின் இதயம்.

3. ஆற்றலுடன் குணமாக்குதல் (Infusion):

குணமாக்குதல் என்பது மந்திரக்கலை அல்ல; ஆனால் ஆற்றல் ஊட்டுவது அல்லது உட்புகுத்துதல் (Healing is not magic; but an infusion). *ஊடுருவிப் பரவி உள்ளிருந்தே மாற்றங்களைக் கொண்டு வருவது* (permiting restoration from within). *உள்ளிருந்து வெளியே கொண்டு வரும் ஆற்றலே குணமாக்குதல். துன்புறும் பணியாளர் உயர்த்தப்பட்டார்; ஆனால் "காண்போர் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையிலிருந்தார்" என்பது, பெருமை முடியும் இடத்தில் குணமாகுதல் தொடங்குகிறது; தாழ்மையின் வழியாக குணமாகுதல் வருகிறது; பாடுபடுதல் வழியாக குணமாக்குதல் ஏற்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. யோசேப்பு தம் துன்பங்களுக்கு பின் உயர்த்தப்பட்டார் அவரது காயங்களே பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்றின (தொநூ 47). யோபு தம் புண்களின் வழியே மறுவாழ்வு பெறுகிறார். இயேசுவும் சிலுவையின் வழியே குணமாக்கும் பணி செய்தார். "துன்புறும் கடவுளால் தான் உதவிச் செய்ய முடியும்" என்ற டிட்ரிச் போன்காஃபரின்* (Dietrich Bonhoeffer) *கூற்றின்படி குணமாகுதல் இருத்தல் நிலை வழியாக உட்படுத்தப்படுகிறது* (Only the suffering God can help, healing is infused through presence). *வலி இல்லாமை குணமாகுதல் அல்ல; வலியை மீட்புக்காக மாற்றுருவாக்கம் செய்வது தான் குணமாகுதல் என்பதை எசாயா விளக்குகிறார்* (Healing is not the absence of of pain, but the transformation of pain with redemption). *அன்னாளின் அமைதிக் கண்ணீர் சாமுவேலை திருப்பணியின் விதையாக விதைத்தது; குணமாகுதலை பிறப்பித்தது (1 சாமு 1). துன்புறும் பணியாளர் நம்முடன் குணமடைகிறார்; நமக்காக அல்ல. இதைத்தான் பவுல் "நாங்கள் கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் இன்னல்களில் உழலும் மக்களுக்கு ஆறுதல் அளிக்க முடிகிறது" (2 கொரி 1: 4). நம் வடுக்கள்*

ஆறுதலின் திருவருள்சாதனமாக மாறுகின்றன (Our scars become sacraments of consolation).

திருச்சபை பணியாளரின் பணியைத் தொடர வேண்டும். துன்புறு மக்களுடன் அடையாளப்படுத்தி, இடையீடு செய்து குணமாக்குதலை ஊடுருவிப் பரப்பும் திருச்சபையும் காயப்பட்ட திருச்சபை தான். கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை காயப்பட்டு வடுக்கள் நிறைந்ததாக உலகில் செயல்படுகிறது. திருச்சபை அதிகாரத்தால் அல்ல; உடனிருப்பாலும், தியாகத்தாலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். திருச்சபையின் ஆற்றல் கட்டடங்களிலும், பணத்திலும் அல்ல; காயங்களிலும், தியாகங்களிலும் உள்ளது. பணியாளரின் காயங்களே குணமாக்கும் ஆற்றல். திருச்சபை ஒரு துன்புறும் பணியாளர் (Church is a Suffering Servant). உலகின் காயங்களைச் சுமந்து குரல் இழுந்த மக்களுடன் நின்று, தாழ்மையைத் தெரிவுச் செய்து, அன்பின் காயங்களைச் சுமந்து, பணியாளரைப் போல மனுக்குல வலிகளைச் சுமக்கும் சுமை தாங்கியாக திருச்சபை மாற வேண்டும்.

அருள்திரு. முனைவர் M. பீட்டர் சிங்

அமைதிக்காகத் துன்புறும் பணியாளர்

எசா. 53: 4 - 6

...அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் (எசா. 53: 4).

சீடத்துவத்தின் விலை (The Cost of Discipleship) *என்ற நூலில் டிட்ரிச் போன்காஃபர்* (Dietrich Bonhoeffer) *அவர்கள் "அமைதி என்பது மோதலில்லாமை அல்ல; கிறிஸ்துவின் உடனிருப்பே"* (Peace is not the absence of conflict but the presence of Christ) *என்கிறார். உண்மையான அமைதி மலிவானது அல்ல; துன்பத்திலிருந்து ஓடிச் செல்லும் அமைதி அல்ல. எசாயா இறைவாக்கினர் இதனைத்தான் அதிகாரத்தால் அமைதி கொண்டு வர முடியாது; துன்புறும் பணியாளரின் வழியினால் மட்டுமே அமைதி என்பதை இப்பகுதியில் விளக்குகிறார். அமைதி மேற்பரப்பான அல்லது வெளிப்பரப்பான ஒன்று அல்ல; அது தியாகம்* (Peace is not superficial, but sacrifiicial). *துன்புறும் பணியாளரின் உடல் வன்முறையை ஏற்று அதனை மாற்றுருவாக்கம் செய்யும் போராட்டக் களமாக மாறுகிறது. ஜூர்கன் மோல்ட்மேன்* (Jürgen Moltmann) *என்பவர் "கடவுளின் அன்பு துன்பறும் அன்பு; வலியை தவிர்ப்பதால் அல்ல; அதை ஏற்றுக் கொள்வதால் அமைதி வருகிறது" என்கிறார். "அவர் வாயைத் திறவாதிருந்தார்" (53: 7) என்பது தோல்வியின் அமைதி அல்ல; தன்னை ஒப்படைத்தலின் ஆற்றல்* (Surrendered strength). *பணியாளர் பழிவாங்குதல் எதிர்த்து நிற்றலை மறுக்கிறார். இது பலவீனமல்ல; அன்பின் ஆற்றல் நிறைந்த அமைதி. அவர் பழிவாங்கவில்லை, மிரட்டவில்லை, கத்தவில்லை. அவரின் அமைதி சமாதானத்தை உருவாக்கியது. பணியாளரின் அமைதி சமாதானத்தின் நிலம்* (The servant's silence is the soil of peace). *சமாதானம் காயங்களின் பலன்* (Peace is the fruit of pain). *எசாயாவின் அமைதி இறையியல்* (Peace Theology) *கடினமான ஒன்று என்பதை இப்பகுதி வலியுறுத்துகிறது.*

1. அமைதி என்பது நீதி (Peace is Righteousness)

எசாயா அதிர்ச்சியூட்டும் செய்தியைச் சொல்கிறார். உலகத்தின் காயங்களில் கடவுள் நுழையும் போது இறை அமைதி தொடங்குகிறது (53: 4). உண்மையான அமைதி என்பது நீதியின் செயல்பாடு. நீதியினால் மட்டுமே அமைதி உருவாக வேண்டும். துன்புறும் பணியாளரின் காயங்கள்

அநீதிகளை வெளிக்காட்டுகிறது; அவரது தியாகம் நீதியைக் காட்டுகிறது; அவரது பாடு நீதி-அமைதியை உருவாக்குகிறது. நீதி அமைதியின் இதயம் (Peace is the heart of Justice). அரசராகிய தாவீதை, இறைவாக்கினர் நாத்தான் சந்திக்கிறார் (2 சாமு 12). இஸ்ராயேலில் அமைதி திரும்ப வேண்டும் என்றால், அநீதியைப் பெயரிட்டுச் சொல்ல வேண்டும். "நீயே அந்த மனிதன்" - அநீதி நேரடியாக மறுக்கப்படுகிறது. நீதிக்கு சமரசம் அல்லது நடுநிலை இல்லை. மோசே அடிமைப்படுத்தப்பட்ட மக்களோடு நிற்கிறார். அநீதி நிறைந்த சூழலில் நடுநிலையில் நிற்க மறுக்கிறார். இயேசு காசு மாற்று செய்பவர்களைத் துரத்தும் போது ஊழலுக்கு எதிராக, சமுதாய நீதிக்காகச் செயல்பட்டு கோயிலின் மாண்பை மீட்டெடுக்கிறார் (மத். 21: 12,13). சமுதாய நீதியற்ற அமைதி பொய்த் தோற்றம். நீதியின் பலன் அமைதி. சமுதாய நீதி பக்கச் சார்பு சமாதானத்தை நிலை நிற்கச் செய்யும். நீதியற்ற அமைதி பொய்யான அமைதி. "அமைதி அமைதி என்று சொல்லுகிறார்கள்; ஆனால் அமைதி எதுவும் இல்லை" (எரே 6: 14). நீதியின் குறைவு அமைதியின் அழிவு. நீதியை மறுக்கும் அமைதியை கடவுள் வெறுக்கிறார் என்பதை எரேமியா விளக்குகிறார். நீதி இல்லாத அமைதி (dangerous) ஆபத்தானது, அது பொய் அமைதி. நீதியும் அமைதியும் ஒன்றையொன்று முத்தமிடும் (திபா 85: 10).

2. அமைதி ஓர்உறவு (Peace is Reconciliation)

துன்புறும் பணியாரம் "நமக்கு நிறை வாழ்வை அளிக்க துன்பங்களைச் சுமந்தார்" என்பது எசாயாவின் அழுத்தமான செய்தி. பணியாளர் துன்பங்களை ஒப்புரவாக்குதலின் பட்டறிவுகளாக மாற்றுகிறார் (The servant transforms suffering into reconciliation). ஏசா - யாக்கோபு உறவு ஏமாற்றுதலின் வழியாகவும், பகை வெறியாகவும் மாறி, ஒரு காலத்தில் அவர்கள் மீண்டும் சந்திக்கும் போது அவர்கள் கட்டித்தழுவி இணைகிறார்கள் (தொநூ 33). பகைவர்கள் உடன்பிறப்புக்களாக மாறுகிறார்கள். தம்மை வேதனைக்குள் படுத்திய மீண்டும் திரும்பி வந்த இளைய மகனை ஓடிச் சென்று ஏற்றுக்கொண்ட தந்தையின் அன்பு (லூக் 15), பகையைத் தகர்த்து உறவை உருவாக்கும் போது அமைதி ஏற்படுகிறது. பவுல் எபே 2: 16 -இல் "தாமே துன்புற்று பகையை அளித்தார்; சிலுவையின்... வழியாக ஒப்புரவாக்கினார்". சிலுவை ஒப்புரவாக்குதலின் அனுபவம் (Cross is an experience of reconciliation). ஒப்புரவு சிலுவை வடிவமானது (Reconciliation is cross shaped). ஜான் ஸ்டாட் என்ற இறையியலாளர் "சிலுவையில் ஒப்புரவு கடவுளுக்கும் மக்களுக்கும்

இடையே மட்டுமல்ல, மனிதருக்கும் மனிதருக்கும் இடையே நடைபெறுகிறது" (At the cross reconciliation is not only between God and humanity, but also between person to person) என்கிறார். சிலுவையைப் பார்க்கும் போது பாடுகளையும், மன்னிப்பையும் மட்டுமல்ல; ஒவ்வொரு திசையை நோக்கி ஒப்புரவாகுதல் என்கிறார். கார்ல் பார்த் என்ற இறையியலாளர் சொல்லும் போது "இயேசு கிறிஸ்துவில் கடவுள் ஒருமைப்பாட்டின் மானுடப் பக்கம் எடுக்கிறார்" என்கிறார். இயேசு பேதுருவைப் பார்த்து "நீ என்னிடம் அன்பாக இருக்கிறாயா?" (யோவா 21) என்று கேட்பது ஒருமைப்பாடு மறுதலிப்பரை ஆயராக மாற்றுகிறது. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் கைகள் அகலமாக விரிக்கப்பட்டிருக்கிறது. இதுவே ஒருமைப்பாட்டின் வடிவம்.

3. அமைதி ஒரு பொறுப்பு (Peace is Responsiblity)

அடுத்தவர்களின் துன்பத்தைத் தம் பொறுப்பாக ஏற்பது தான் அமைதி என்று எசாயா 53-இல் ஒரு புதிய உண்மையைச் சொல்லுகிறார் (Taking responsibility for the suffering of others). நெகேமியா உடைந்து போன நகரத்தின் பொறுப்பை ஏற்கிறார் (நெகே 1: 6,7). நாட்டின் பிழைகளைத் தம் பிழைகளைப் போன்று அறிக்கையிடுகிறார். மோசே மக்களின் தவறுக்கு தாமே பொறுப்பேற்கிறார். இவர்களை மன்னியும் அல்லது உம் நூலில் இருந்து என் பெயரை அழித்துவிடும் (விப 32: 32). துன்புறும் பணியாளர் காயப்பட்டவராக குணமாக்குகிறவர் (எசா53: 5). இவர்கள் பொறுப்பின் பாதையைத் தெரிவு செய்தவர்கள்; பொறுப்பேற்பின் வழியாக அமைதியை ஏற்படுத்தும் தலைவர்களானார்கள்; மாறாக அடுத்தவர்கள் உடைத்ததைக் குணமாக்கினார்கள்; அடுத்தவர்கள் அழித்ததைப் பழுது பார்த்தார்கள்; அடுத்தவர்கள் சேதப்படுத்தியவைகளை மீட்டார்கள். இயேசுவும் ஒரு பெண்ணிற்கும் கல்களுக்கும் இடையே நின்று, வாழ்வைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்று நானும் உன்னைத் தண்டிக்கவில்லை என்று கல்களைக் கீழே போட செய்து அமைதியை ஏற்படுத்தினார். ஹோவார்ட் துர்மேன் இதனை "அமைதியான வாழ்வு குணப்படுத்தும் பொறுப்பின் வாழ்வு" (The life of peace is a life of healing responsibility) என்கிறார். வன்முறையின் தொடர்ச்சிக்கு முடிவு காண அமைதி பொறுப்பேற்கிறது (Peace takes responsibility to end the cycle of violence). திருமொழி 7-இல் "அவர் தன் வாயைத் திறக்கவில்லை" - பதிலடி என்னும் விலங்கை ஒடிக்க அமைதி என்னும் பொறுப்பை ஏற்கிறார் துன்புறும் பணியாளர். காயத்திற்குக் காயம் ஏற்படுத்தும் போது வன்முறை

தொடர்கிறது. "என்னுடன் இது நிற்கட்டும்" (It steps with me) என்று ஒருவர் சொல்லும் போது அமைதி தொடங்குகிறது. ஸ்தேவான் தம் மரணத்தில் அமைதிக்கான பொறுப்பை ஏற்கிறார் (திப. 7: 60). சிலுவையில் இயேசுவும் அமைதிக்கான பொறுப்பை ஏற்க்கிறார். மிராஸ்லாவ் வோல்ஃப் (Miroslav Volf) என்ற இறையியலாளர், "வன்முறையை மற்றவர்களுக்கு மாற்றி அனுப்பாமல் தாமாகவே ஏற்றுக் கொள்ளும்போது அமைதி உருவாகிறது" (Peace emerges when someone obsorbs violence without passing it on) என்கிறார். பதிலடியை மறுப்பதின் வழியாக துன்புறும் பணியாளர் வன்முறையை நிறுத்துகிறார் (The suffering servant stops violence by refusing revenge).

துன்புறும் பணியாளரின் அனைத்துப் பண்புகளையும் பணியாளரின் பணியாளராக வந்த இயேசுவிடம் காண்கிறோம். இயேசுவின் மனுவுருவேற்றல் மானுட வாழ்வின் காயங்களில் குணமளிப்பவராக வந்தார், கார்ல் பார்த் சொல்வதைப்போல "நம் நிலைக்கு கடவுள் வளைந்து குனிந்தார்" என்பது தான். பணியாளரின் உயர்நிலை செயல் சிலுவையாகும் (Cross is the ultimate servant act). உலகின் வன்முறையும் கடவுளின் மன்னிக்கும் அன்பும் சந்தித்த இடமே சிலுவை. உண்மையான அதிகாரம் என்பது ஆதிக்கம் செலுத்துவது அல்ல; தம்மை வெறுமையாக்கும் அன்பு. கடவுளின் அமைதி மலிவானது அல்ல; அவரது அமைதி நீதி, உறவு பொறுப்பின் மேல் கட்டப்பட்டது. துன்புறும் பணியாளர் துன்புறும் மக்களாக திருச்சபையை ஆற்றல் படுத்துகிறார். பாதிக்கப்பட்ட துன்புறும் மக்களுடன் எங்கெல்லாம் திருச்சபை நிற்கிறதோ - திருச்சபை துன்புறும், ஆனால் அமைதியை உருவாக்கும். ஜூர்கன் மோல்ட்மேன் (Jürgen Moltmann) சொல்வதைப் போல "அடுத்தவர்கள் வலியை மக்கள் பகிர்ந்து கொள்ளும் போது திருச்சபையின் நிலைநிற்கும்" (Church exists where people share in the pain of others).

அருள்திரு. முனைவர் M. பீட்டர் சிங்

தவக்கால வெள்ளி அருளுரைகள்

தவக்கால வெள்ளி தியான உரை
அறிமுகம்

தவக்காலம் உயிர்ப்புக்கு நேராக நம்மை வழிநடத்தும் காலம். நம்முடைய தியானங்கள், ஜெபங்கள், அன்பின் செயல்கள் புதிய வாழ்வுக்காக நம்மை ஆயத்தப்படுத்துகிறது. தவக்காலச் சிந்தனைகள் நம்மை சிலுவைச் சிந்தனைக்கு நேராக வழிநடத்துகிறது. சிலுவை என்பது முடிவு அல்ல; அது வாழ்வின் வழி. (The cross is not the end - it is the path to life) என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் சிலுவையின் உன்னத நிலையை நமக்கு உணர்த்துகிறது. நம்பிக்கையோடும் பொறுமையோடும் கிறிஸ்துவின் சிலுவையைப் பின்பற்ற தவக்காலத் தியானங்கள் நமக்கு ஆற்றலைத் தரட்டும். கிறிஸ்து தம்முடைய ஆற்றலையும் வாழ்வையும் மனுக்குலம் வாழ்வதற்காக தம்மையுமே தந்தது அது கிறிஸ்துவின் தியாக அன்பை நமக்குக் கற்றுத் தருகிறது. அதுவே கிறிஸ்தவ வாழ்வு முறையாகும். சிலுவை கீழ்ப்படிதலின் உச்சநிலையாகும். இயேசு கிறிஸ்து தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவே சிலுவையை ஏற்றுக்கொண்டார். கெத்சமனி நிகழ்வு அதை நிரூபிக்கிறது. சிலுவையை நாம் நோக்கும்போது நமது பாவத்தின் விளைவையும் கிறிஸ்துவின் எல்லையற்ற அன்பையும் நமக்குக் கற்றுத்தருகிறது. கிறிஸ்து நம்மைத் தண்டிப்பதற்காக அல்ல தந்தையிடம் திரும்பி வருவதற்காகவே (ஒப்புரவாக்குவதற்காக) சிலுவையை ஏற்றுக்கொண்டார். நாம் நமது ஊனியல்பின் சிந்தனைகளையும் செயல்களையும் விட்டு தாழ்மையோடும், நம்பிக்கையோடும் சிலுவையை அன்றாடம் சுமந்து புதிய மாற்றுருவாக்கச் சிந்தனைகளோடு வாழ தவக்கால வெள்ளி தியானங்கள் நம்மை வழிநடத்தட்டும்.

The cross is salvation; The Cross is Life - சிலுவையே நம்பிக்கை, சிலுவையே வாழ்வு, சிலுவை மீட்பின் தொடக்கம் என்பதை உணர்ந்து ஆண்டவரே உம் சிலுவையின் அடியில் எமக்கு வலிமை அளியும் என்ற வேண்டுதல் நமதாகட்டும்.

அருள்திரு. அறிவர் ரமேஷ் D. தாஸ்

20.02.2026 தவக்கால முதலாம் வெள்ளி

சிலுவையும் தாழ்மையும்

பிலி. 2: 1-11

சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் (பிலி. 2: 8).

பிரபல்யமான ஆங்கில எழுத்தாளரும் ஆங்கில இலக்கியத் துறையில் வல்லுனருமான பெர்னார்ட் ஷா ஒருமுறை ஒரு உணவுச் சாலைக்கு உணவருந்துவதற்காகப் போயிருந்தார். அவர் தனது மூக்கு கண்ணாடியை கொண்டு போகத் தவறியதால் உணவுப் பெயர்ப் பட்டியலை வாசிக்குமாறு உணவு பரிமாறுபவரைக் கேட்டார். அதற்கு அவர் ஒருவித வெட்கம் கலந்த சிரிப்புடன் தானும் உங்களைப்போல எழுத வாசிக்கத் தெரியாதவன் என்றார். ஆங்கில இலக்கியத்தில் வல்லுனரும் பிரபல எழுத்தாளருமான பெர்னாட் ஷாதான் இவர் என்பதை அந்த உணவு பரிமாறுபவர் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. யோவானும் இயேசுவைக் குறித்து எழுதும்போது, "அவர் உலகத்தில் இருந்தார். உலகமோ அவரை அறியவில்லை" (யோவான் 1: 10) என்று எழுதுகிறார். இயேசுவை மக்கள் மனிதனாக வந்த ஆண்டவர் என்று அறிந்துகொள்ளவில்லை. ஒரு சாதாரண மனிதராகவே நோக்கினார்கள். பவுலும் அவர் மானிட சாயலாகவே காணப்பட்டதாக எழுதுகிறார்.

அவர் மானிட சாயலாக காணப்பட்டதுடன் "மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" என வாசிக்கிறோம். இயேசு மானிட சாயல் எடுத்ததோடு நின்றுவிடவில்லை. அவர் தம் வாழ்நாள் முழுவதும் தந்தைக்கு கீழ்ப்படிந்தார். தந்தைக்கு கீழ்ப்படிந்து அவரது சித்தத்தை செய்வதே இயேசுவின் உணவாக இருந்தது. பிதாவிற்கு சமமாக இருந்தவர் அடிமையாக இறங்கி வந்து தன் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிந்தார்.

1. முழுமையான கீழ்ப்படிதல்

பிலிப்பியர் 2:8-இல் இயேசு கிறிஸ்து சிலுவையின் மரணம் வரை கீழ்ப்படிந்து தம்மைத் தாழ்த்தினார் என்பதைக் குறிப்பிடுகிறது. இது, அவர் மனிதனாகப் பிறந்து, சாதாரண மனிதர்களைப் போலவே வாழ்ந்து, இறுதியில் சிலுவையில் மரணமடையும் அளவுக்குக் கீழ்ப்படிந்ததால், ஆண்டவர் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார் என்பதற்கான அடிப்படையாக அமைகிறது.

அவமானத்தின் சின்னமாகிய கொடூர சிலுவையில் பாவத்திற்கான தண்டனையை அனுபவிப்பது அவருக்கு இலகுவாக இருக்கவில்லை. ஆனாலும் கீழ்ப்படிந்தார். சிலுவையில் அறையப்படும் வேதனையைவிட பாவத்தின் தண்டனையை அனுபவிப்பது மிக மிகக் கடினமாக இருந்தது. ஆனாலும் கீழ்ப்படிந்தார். சிலுவையில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமானார் (கலா.3:13). அவருடைய கீழ்ப்படிதலின் சிறப்பு என்னவென்றால், யூதரால் வெறுக்கப்பட்டு அவமானச் சின்னமாகிய அந்தச் சிலுவையில் கொடூரமாகக் கொல்லப்படும் நிலை வந்தபோதும் கீழ்ப்படிந்தார். தூக்குத் தண்டனை யாகிய சிலுவையும் ஒரு புது அர்த்தத்தைப் பெற்றது. அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக் பொகுட்படுத்தாமல் சிலுவையின் மரணத்தை ஏற்றுக் கொண்டார். கன்னியின் வயிற்றில் பிறந்தது. ஏழைப் பெற்றோர்களுக்கு மகளாக இருந்தது, மற்றும் சிலுவையின் மரணத்தை ஏற்றுக்கொண்டது ஆகியவை அவரது தாழ்மையின் சின்னங்கள்.

2. சுயத்தை வெறுமையாக்குதல்

இந்த அதீத தாழ்மையின் காரணமாகவே, தேவன் அவரை உயர்த்தி, எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை அவருக்கு அளித்தார் (பிலி. 2:9), தாழ்மையின் மூலம் இயேசு சிலுவையை ஏற்றுக்கொண்டதால், அவர் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டார். சிலுவை என்பது தியாகத்தின் சின்னம், தாழ்மை என்பது அந்தத் தியாகத்தை மேற்கொள்ளும் மனப்பான்மை. இயேசு தனது சொந்த விருப்பங்களை விட, தந்தையின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, இகழ்ச்சி மற்றும் அவமானங்களை ஏற்றுக்கொண்டு சிலுவை மரணத்தை ஏற்றார். இதுவே தாழ்மையின் மிக உயர்ந்த உதாரணமாகக் கருதப்படுகிறது, மேலும் இந்த தாழ்மையான தியாகத்தின் மூலம் கிறிஸ்து உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

இயேசுவின் சுய வெறுமையாக்கும் தியாக அன்பு சிலுவையில் துன்பப்பட்டு இறக்கச் தன்னை அறப்பணிப்பதற்கு காரணியாய் அமைந்தது. சிலுவை துன்பத்தையும் கடவுளின் விருப்பத்தையும் ஏற்றுகொள்ளும் செயலாகவே அமைந்தது. இயேசு கடவுளாக இருந்து மனித வடிவத்தை எடுத்தது சிலுவையின் மரணம் வரை தன்னை தாழ்த்தினதின் விளைவாகும். அது அவருடைய கீழ்ப்படிதலைக் குறிக்கிறது. சிலுவையில் அவர் செய்த தியாகம் தனிப்பட்ட ஆதாயத்திற்காக அல்ல மனித குல மீட்பிற்கான தன்னலமற்ற அன்பின் இறுதிச் செயலாகும். கிறிஸ்தவ வாழ்வில் வரும் துன்பங்கள் கடினங்கள் மற்றும் வலிகளை மனத்தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள முன்வருவோம்.

இன்று சிலுவை என்பது ஒரு புனிதச் சின்னம். ஆனால் அன்று அது அவமானச் சின்னம். இயேசுவின் காலத்தில் ரோமர்கள் வழங்கும் அதி கொடூரமான தண்டனை சிலுவை மரணமாகும். தூக்கிலிடும் சுயிறு நமக்கு எவ்வளவு பயத்தை ஏற்படுத்துமோ, அப்படியே சிலுவை மரணமும் அவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தியது. ரோம எழுத்தாளர்கள், "சிலுவை என்ற சொல் ரோமப் பிரஜைகளின் உடலுக்கு மட்டுமல்ல, சிந்தனைக்கும் கண்களுக்கும் காதுகளுக்கும் தூரமாயிருப்பதாக" என்று எழுதியிருக்கிறார்கள். யூதரைப் பொறுத்தவரையில், "சிலுவையில் தூக்கப்பட்டவன் சபிக்கப்பட்டவனாகவும் இஸ்ரவேலின் சுதந்தரத்திற்கு புறம்பானவனாகவும் கருதப்பட்டான்" (இச. 21: 23). சிலுவை அவமானத்தின் சின்னமாக கருதப்பட்டது (எபி. 12: 2). இயேசு கிறிஸ்து அவமானத்தின் சின்னமாகிய சிலுவையையும் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தார்.

அருள்திரு. அறிவர் ரமேஷ் D. தாஸ்

சிலுவையும் ஒப்புரவாகுதலும்

எபே. 2: 11-22

"தாமே துன்புற்று பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்" (எபே. 2: 16).

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் மனுக்குலத்திற்கு கிடைத்த சிறப்புக்களில் ஒன்று ஒப்புரவாகுதல், ஒப்புரவாகுதலைக் குறித்து 2 கொரி. 5: 18-20, உரோ. 5: 10-11 கொலோ. 1: 20. 21, எபே. 2: 14-16 ஆகிய பகுதிகளில் பவுல் தெளிவாகப் பேசுகிறார். எபே. 2: 14-16 இல் யூதருக்கும் கிரேக்கருக்கும் இருந்த பகையை சிலுவையினால் கொன்று அழித்து இரு இனத்தவரையும் நல்லுறவு கொள்ளச் செய்தார் என்கிறார்.

கடவுள் தமக்கும் மனுக்குலத்திற்கும் இடையே இருந்த பகைமையை நீக்கி மனிதர் கடவுளோடு தொடர்புகொள்ள கிறிஸ்துவை வழியாக்கினார் என W. G. கும்மல் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

ஒப்புரவாக்குதலை மீட்பின் வழியாக புரிந்துகொள்ளலாம். மீட்பற்ற நிலையை உதவுமுறிந்த நிலை எனலம். இந்த உறவை ஏற்ப்படுத்துவது ஒப்புரவாகுதலாகும். நாம் கடவுளுக்கு பகைவராக இருந்த போது அவருடைய திருமைந்தரை உலகில் அனுப்பி தம்மோடு நம்மை ஒப்புரவாக்கினார்.

1. பகைமையை அழித்தல்:

ஒப்புரவாகுதல் என்பது இரண்டு பேர் அல்லது இரண்டு குழுக்களிடையே பகைமையின் காரணமாக உறவு முறிவு ஏற்பட்டு பிரிந்திருந்து திரும்பவும் ஒன்றாக இணைந்து நல்லுறவுடன் வாழும் நிலையாகும். பவுலின் கருத்துப்படி மனுக்குலம் தமது பாலத்தின் காரணமாக கடவுளைவிட்டுப் பின்வாங்கி விலகி வாழ்ந்தபோது கடவுள் தம் மைந்தராகிய கிறிஸ்துவை சிலுவைப்பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தை தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டார். எனவே ஒப்புரவாக்குதல் கடவுளால் நடைபெற்ற செயலேயண்றி மனித முயற்சியினால் விளைந்ததன்று.

எபேசியர் 2:16 இன்படி, கிறிஸ்துவின் சிலுவை, மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த பகைமையை அழித்து, யூதர்கள் மற்றும் புறவினத்தவர் என்ற இரண்டு பிரிவினரையும் ஒரே சரீரமாக கடவுளுடன் சமரசம் செய்தது. இதன் மூலம், முன்பு கடவுளிடமிருந்து "தூரமாய்" இருந்த புறவினத்தவரையும், இப்போது கிறிஸ்துவால் "அருகில்" கொண்டுவரப்பட்டு, அவருடைய மக்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

இயேசு சிலுவையில் மரித்ததன் மூலம், மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த பகையையும், மனிதர்களுக்கிடையே இருந்த பிரிவினையையும் அகற்றி ஒன்றாக்கினார்.

2. ஒருடலாக மாற்றப்படுதல்:

இயேசுவின் சிலுவை மரணம், மனிதர்களுக்கிடையேயான பகைமையைப் போக்கி, கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தி, அனைவரையும் ஒரே குடும்பமாக இணைத்தது. சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்கினார் என பவுல் குறிப்புடுகிறார். *(எபேசியர் 2: 16).*

பழைய ஏற்பாட்டு காலத்தில், இஸ்ரயேல் மக்களுக்கு பல கட்டளைகளை கடவுள் கொடுத்திருந்தார். அதுவே நியாயப்பிரமாணம் ஆகும். மோசேயின் மூலமாக மக்களுக்கு அது கொடுக்கப்பட்டது. இந்த நியாயப்பிரமாணமே இருதிறத்தாருக்கும் அதாவது இஸ்ரயேல் மற்றும் புறஇன மக்களுக்கு பகையாக இருந்தது. மேலும் நியாயப்பிரமாணத்தினால் ஒருவரும் நீதியை பெற்றுகொள்ள முடியவில்லை. இதனாலேயே கிறிஸ்து பூமிக்கு வந்தார். அவர் தன் ஜீவனை சிலுவையில் கொடுத்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடித்தார். இப்படியாக இருதிறத்தாருக்கும் இருந்த பகையை ஒழித்து நம்மை ஒரே சரீரமாக கடவுளுக்கு முன்பாக ஒப்புரவாக்கினார். இவ்வாறாக இஸ்ரயேலர்கள் மற்றும் புறவின மக்கள் கிறிஸ்துவின் ப# மூலமாக ஒரே சரீரமாக ஆகப்பட்டனர். தடையாக நின்ற சட்டங்கள், மரபுகள் போன்ற நடுச்சுவர்கள் சிலுவையால் தகர்க்கப்பட்டு ஒரே உட#ல் பங்கடைகின்றனர்.

ஒப்புரவாக்குதல் ஏற்கனவே நடந்துமுடிந்த நிகழ்ச்சி என பவுல் குறிப்பிடுகிறார். கடவுள் தமது மைந்தராகிய கிறிஸ்துவின் இறப்பின் மூலமாக மனுக்குலத்தை தம்மோடு நல்லுறவு கொள்ளும்படி செய்திருக்கிறார். ஆயினும் ஒப்புரவாக்குத#ன் பணியை நமக்கு கொடுத்திருப்பதினால் அது இன்னும் தொடர்ந்து செய்யவேண்டிய ஒன்று. சுடவுள் முழு உலகையும் தம்மோடு ஒப்புரவாக்க திட்டமிட்டுள்ளார் *(1கொரி. 5: 18-20).* எனவே மனுக்குலம் கடவுளோடு நல்லுறவு கொள்ளும் வரைக்கும் ஒப்புரவாக்குத#ன் பணி தொடரவேண்டும்.

அருள்திரு. அறிவர் ரமேஷ் D. தாஸ்

சிலுவையும் நீதிக்காக வாழ்தலும்

1 பேதுரு 2: 19-25

". . . நாம் பாவங்களுக்காக இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார்" (1 பேது. 2: 24)

சிலுவை என்பது இயேசு கிறிஸ்துவின் தியாகத்தையும், நீதி என்பது அவருடைய தியாகத்தால் நமக்குக் கிடைக்கும் கடவுளின் கருணையையும் குறிக்கிறது. சிலுவையில் இயேசுவின் மரணம், உலகத்தின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், அவருடைய நீதி அவரை நம்புபவர்களுக்கும் வழங்கப்படுகிறது. நீதி என்பது வெறும் சட்டங்கள் அல்லது செயல்களைப் பின்பற்றுவது மட்டுமல்லாமல், இயேசுவைப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்படுவதால், நமது சொந்த செயல்களால் அல்லாமல் அவருடைய நீதியின் மூலம் கடவுளின் நீதியைப் பெறுகிறோம்.

கிறிஸ்துவின் சிலுவை அன்பையும் மன்னிப்பையும் மட்டும் அல்ல, நீதியின் வழியில் நடக்கும் வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்பதையும் கற்றுத் தருகிறது. கிறிஸ்துவின் மீட்பின் நோக்கம் வெறும் பாவமன்னிப்பு மட்டும் அல்ல, மாறாக நீதியிலும் பரிசுத்தத்திலும் நடந்து, தேவனுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழச் செய்வதே அவர் நோக்கம். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடும் போது "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்' (1 பேதுரு 2: 24). இயேசுவின் தியாகத்தால் நாம் பாவங்களுக்கு மரித்து, நீதிக்காக வாழ்கிறோம் என்று பேதுரு கூறுகிறார்.

1. காயங்களினால் குணமடைகிறோம்

காயம் என்பது உடலில் தோன்றும் வலி; பாவம் என்பது ஆத்துமாவில் மறைந்து இருக்கும் வலி. இயேசு உடலில் பெற்ற காயம்: நமது ஆன்மாவின் பாவங்களை மூடுகிறது. நம் குற்ற உணர்வின் நஞ்சை நீக்குகிறது. நம் உடைந்த உள்ளத்திற்கு பூரணத்தைத் தருகிறது. அவர் காயங்களைப் பார்க்கும் ஒவ்வொரு நேரமும் நாம் நமது பாவங்களையும் வேதனைகளையும் நினைவில் கொள்கிறோம்.

எசாயா தீர்க்கத்தரிசி, கிறிஸ்துவுக்கு முன்பு, 700 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர். கிறிஸ்துவின் பிறப்பு, ஊழியம், பாடு, மரணத்தைக் குறித்து அதிகமாய் முன்னறிவித்தவர். இயேசுவினுடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் என்றும் முன்னறிவித்தார். பேதுரு அப்போஸ்தலர்

இதைக் குறித்துக் கூறும்போது. நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் *(1 பேதுரு 2: 24).*

இயேசு கிறிஸ்துவின் காயங்கள் நம்முடைய வியாதிகளிலிருந்தும் நமக்கு விடுதலையைத் தருகிறது. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் *(எசாயா 53: 4).* சிலுவையைச் சுமந்த ஆண்டவர், வியாதிகளினால் உண்டாகும் பாடுகளையும் துக்கங்களையும் கூட சுமந்தார். அவருடைய தழும்புகள் அதற்கும் அடையாளமாய் காணப்படுகிறது. சிலுவை உலகம் காட்டும் தண்டனை அல்ல, தேவன் காட்டும் நீதி. ஏனெனில், சிலுவை நம்மை குற்றத்திலிருந்து விடுவிக்கிறது. நீதிக்குள் நடக்க செய்வது. *1* பேதுரு *2: 24* நமக்கு சொல்கிற உண்மை, சிலுவை காயம் தருவதற்காக இல்லை, மாறாக, குணம் அளிப்பதற்காகத்தான்.

2. கல்வாரியால் களிகூருகிறோம்

கல்வாரி என்பது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடமான கொல்கொதாவைக் குறிக்கிறது. இது "கபாலஸ்தலம்" என்றும் அழைக்கப்படுகிறது. இது "கபாலம்" அல்லது "தலை ஓடு" என்று பொருள்படும். இது எருசலேம் நகரின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள ஒரு குன்று. மனிதகுலத்தின் மீட்புக்காக கல்வாரி மலையில் நிகழ்ந்த தியாகத்தினால், கடவுளின் நீதியும் அன்பும் நிறைவேறியது; ஒரு சிலுவையின் முன், ஒரு தியாகத்தின் சத்தத்தில், ஒரு நீதியின் நிறைவேற்றத்தில் நம்முடைய மகிழ்ச்சியை காண்கிறோம். நாம் கல்வாரியை நினைத்து களிகூருகிறோம். ஏனெனில் கல்வாரி மனிதரின் தோல்வி அல்ல, தேவனின் வெற்றி. கல்வாரியில்லாமல் மனிதருக்கு நம்பிக்கையும் இல்லை. நித்தியமும் இல்லை.

மனிதர்களாகிய நாம் ஏன் கல்வாரியால் களிகூருகிறோமென்றால் இயேசு கிறிஸ்துவின் கல்வாரிச் சிலுவையால் தான் நாம் மீட்கப்பட்டோம். நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டது. நித்திய நம்பிக்கை கிடைத்தது. எல்லாவற்றிக்கும் மேலாக நாம் கடவுளின் பிள்ளைகள் ஆனோம்.

இன்றும் நாம் கல்வாரியை நினைக்கிறோமென்றால், நம் பழைய மனிதனை ஒவ்வொரு நாளும் சிலுவையில் அறைய வேண்டும். நம் வாழ்க்கை சிலுவை சார்ந்த, கிருபை சார்ந்த புதிய வாழ்க்கையாக மாற வேண்டும். இன்று நாம் உலகம் தரும் மகிழ்ச்சியை அல்ல, கல்வாரி தரும் சிலுவையின் நீதியை மகிழ்ச்சியாய் கொண்டாட வேண்டும்.

அருள்திரு. C. ஜெபக்குமார்

சிலுவையும் துன்பமும்

கலா. 6: 1-12

" . . . கிறிஸ்துவின் சிலுவையை முன்னிட்டு தாங்கள் துன்புறுத்தப்படாமல் இருக்கவே அவர்கள் இப்படிச் செய்கிறார்கள்" (கலா. 6: 12).

இத்திருமறைப் பகுதியில் பவுலடியார் கலாத்தியத் திருச்சபைக்கு ஏன் இவ்வசனத்தை எழுதுகிறார் எனில் மாற்றம் பெற்ற யூதர்களிடையே பிரச்சினை இருந்தது. விருத்தசேதனமா? அல்லது ஞானஸ்நானமா? இதில் சிலுவைக்கேதுவான திருவசனத்தை போதித்ததால் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். விருத்தசேதனத்தை ஆதரித்தவர்கள் துன்புறும் வாழ்வு இல்லை. எனவே, சிலுவை துன்புறுத்தும் அடையாளம் என்று கண்டனர். சிலுவையை குறித்த நற்செய்தி என்பது வெளிப்புறத்தின் அடையாளம் அல்ல; மாறாக, அது உள்ளான மாற்றத்திற்கான அடையாளம். எனவே, சிலுவையை குறித்து உபதேசித்தவர்களுக்கு வெளியே துன்பத்தை தந்தது. உள்ளத்தில் ஏற்றுக்கொண்டவர்களுக்கும் மாற்றத்தை தந்தது. எங்ஙனம் மாற்றத்தை தந்தது எனக் காண்போம்.

1. திருத்துங்கள்:

கலாத்தியர் 6: 16-இல் "...தூய ஆவியை பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரை திருத்துங்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதம் சுய இச்சைகளினால் சோதிக்கப்படும்போது நாம் கனிந்த உள்ளத்தோடு திருத்த வேண்டும். சிலுவையில் இருக்கும் அருள்நாதர் இயேசு கிறிஸ்து தம்மை துன்பப்படுத்திய மக்களின் பாவத்தை மன்னித்ததுபோல கனிந்த உள்ளத்தோடு திருத்த வேண்டும். எப்படியெனில் இறை நாதரில் நம் பாவங்களை அறிக்கையிடுதல் (1 யோவான் 1: 9) வேண்டும். ரோமர் 12: 14-21 வரை எப்படி வாழ வேண்டும் என்பதையும், துன்புறுத்துவோருக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார். ஊனியல்பின் செயல்கள் கலாத்தியர் 5: 19-21 வரையில் சொல்லப்பட்டுள்ளன. திருந்திய ஆவியின் கனியோ கலாத்தியர் 5: 22, 23 ஆகிய அருள்வாக்குகளில் காணலாம். திருத்தம் என்பது சோதனைக்கு உள்ளாகாதவாறு பார்த்து கொள்ளுதல், பிறருடைய பாரத்தை சுமத்தல், பெருமை வாழ்வை களைதல். தம்மையே ஆய்ந்து பார்த்தல், இறைவார்த்தையை கற்றுக்கொள்ளுதல். இவற்றின் வழியாய் நம்மை நாம் திருத்த முடியும். பிறரையும் திருத்த முடியும்.

2. தாங்கிக்கொள்ளுங்கள்:

கலாத்தியர் 6: 2-இல் "ஒருவர் மற்றவருடைய சுமைகளை தாங்கிக் கொள்ளுங்கள்" என்ற இறைவசனத்தின் மூலம் கிறிஸ்துவின் இறைச் சட்டத்தை நிறைவேற்றலாம். இது இன்றைய காலகட்டத்தில் சாத்தியமா?

என்பது கேள்விக்குறி. நவீன உலகத்தில் பிறருடைய பாரத்தை பார்த்து சிரிப்பதும், படம் பிடிப்பதும் (selfie) தான் இன்றைய வாழ்வாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து பிறருடைய துன்பத்தை ஏற்றுக்கொண்டதுபோல நாமும் தாங்கிக்கொள்ள வேண்டும். சிலுவை அதற்கான அடையாளம். சிலுவை நேர்கோடு குறுங்கோட்டினால் இணைக்கப்பட்டது. நேர்கோடு இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் உறவையும் குறுங்கோடு மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் உறவையும் பிரதிபலிக்கிறது. எனவே, சிலுவை இறைவனோடும் மனிதனோடும் இணைவை ஏற்படுத்துகிறது. எனவே, பிறருடைய சுமைகளை ஏற்கும் மனநிலை நம்மிடம் வரவேண்டும். கலாத்தியர் *6: 2*-இல் சுமைகளை தாங்கி கொள்ளுங்கள் வ. *5*-இல் அவரவர் சுமையை தாங்கிகொள்ள வேண்டும். வ. *6*-இல் அனைத்து பாவங்களையும் பகிர வேண்டும். வ. *9*-இல் நன்மை செய்ய தளராதிருப்போம். வ. *10*-இல் நன்மை செய்ய முன்வர வேண்டும் என்கிறார். பிறருடைய சுமையை தாங்கிக் கொள்ள வேண்டும்.

3. சகித்துக்கொள்ளுங்கள்:

கலாத்தியர் *6: 12*-.இல் "கிறிஸ்துவின் சிலுவையை முன்னிட்டுத் தாங்கள் துன்புறுத்தப்படாமல் இருக்கவே அவர்கள் இப்படி செய்கிறார்கள்". சிலுவை என்பது துன்புறுத்தலின் அடையாளம். தவறான போதனைகள் நல்வேஷத்தை தரும். சிலுவையின் உபதேசம் துன்பத்தை தரும். வெளியரங்கமான வாழ்வு நாம் முகத்தில் Mask அணிவதுபோல் அது உடலின் உள்ளே கிருமிகளை செலுத்தாமல் தடுக்கும். அதைப்போல் வெளியரங்கமான வாழ்வு உள்ளான மாற்றத்தைத் தடுத்துவிடுகிறது. யூதர்களின் சட்டங்கள் வாழ்வை தருவதில்லை. மாறாக, இறை இயேசுவின் சிலுவை மாற்றத்தை தருகிறது. விருத்தசேதனம் எடுத்தால் துன்பம் இல்லை. சிலுவையை எடுத்தால் துன்பமே. துன்பத்தை ஏற்காமல் மீட்பு இல்லை. எனவே, சிலுவையை எடுத்து மனிதனில் சட்டத்தை விட்டுவிடுதல் நல்லது. சிலுவையின் வாழ்வு தாழ்மை. அர்ப்பணிப்பு, துணிவை தருகிறது. விருத்தசேதன வாழ்வு வெளிவேடத்தை தருகிறது. துன்பத்திலிருந்து பாதுகாக்கிறது. சிலுவையை குறித்து அல்லாமல் வேறு எதையும் பெருமை பாராட்ட மாட்டேன் என்று பவுலடியார் குறிப்பிடுகிறார் (வ. *14*). விருத்தசேதனம் என்பது மாற்றத்திற்கான அடையாளம் அல்ல. சிலுவையை ஏற்றுக்கொண்டு, அதன் வழியாக வரும் புதிய படைப்பே வாழ்விற்கான அடையாளம்.

எனவே, நம்மை திருத்திக் கொண்டு, பிறருடைய துன்பங்களை தாங்கிக் கொண்டு, உலகத்தின் துன்பத்தை சகித்துக்கொண்டு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சிலுவை சுமக்க ஆயத்தமாவோம்.

திரு. S. ஜான் வினோ ராஜ்

சிலுவையும் ஊனியல்பும்

கலா. 5: 13-26

கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள் (கலா. 5: 24).

"மீட்பின் செய்தியைக் கேள்விப்படாதவர் ஆயிரமாயிரமாவர்; அதைக் கேட்டும் உதறித் தள்ளிவிட்டுப் போகிறவர் ஆயிரமாயிரமாவர்; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகும் மங்கி எரிகிற திரிகளைப் போலிருப்பவர் இன்னும் பலர்" என ஏமி கார்மைக்கல் அம்மையார் தமது நற்செய்திப் பணியில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி ஒரு தொகுப்புரை எழுதியிருந்தார். நற்செய்திப்பணி வாயிலாக உலகம் விழிப்படைந்தது. நற்செய்திப்பணி உலகத்தின் பல பாகத்திலுள்ளவர்களையும் இறைவன் திருமுன் சந்திக்கச் செய்தது. நற்செய்தியை நம்பி வாழும் மனிதர் அருளின் ஆட்சிக்கு உட்படுகிறார். வேறொரு அல்லது போலி நற்செய்தியை நம்புகிற எவரும் அருளாட்சியினின்று விலகிச் செல்லுகின்றனர். (கலா. 1: 8, 9).

தவக்காலத்தில் நாம் கடவுளிடத்தில் நெருங்கிச் சேர்வதற்கும், நம் வாழ்வைக் கடவுளுக்கென்று மறு அர்ப்பணம் செய்யவும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, பாடு, மரண, உயிர்த்தெழுதலைக் குறித்து சிந்திக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே, "சிலுவையும், ஊனியல்பும்" என்கின்ற கருப்பொருளின் அடிப்படையில் இறைவார்த்தைகளைச் சிந்திப்பது பொருத்தமானது. சிலுவை கடவுள் பழைய உலகையும் அதன் மதிப்பீடுகளையும் உடைத்துவிட்டுப் புதிய உலகை உருவாக்கப் பயன்படுத்திய ஒரு கருவியாகும் (1 கொரி. 1: 18-28). சிலுவையும், ஊனியல்பும் பற்றிய சிந்தனை நம்முடைய மனித இயல்பையும், இறையருளையும் ஆழமாகப் புரிந்துகொள்ள வழிநடத்துகின்றது. சிலுவை இயேசுவின் அன்பின் உச்சநிலையை வெளிப்படுத்துகிறது. இயேசு சிலுவையில் மனுக்குலத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தார். "ஊனியல்பு" என்ற சொல் தமிழ் கிறிஸ்தவ சிந்தனையில் மிக ஆழமான, ஆன்மிக அர்த்தம் கொண்டது. "ஊன்" என்பது மனிதனின் உடல், இயற்கை, விருப்பங்கள், ஆசைகள், சுயநல உணர்வுகளை குறிக்கிறது. "இயல்பு" என்பது அந்த ஊனத்தின் இயற்கையான பண்பைக் குறிக்கிறது. ஆகவே, "ஊனியல்பு" என்பது மனிதனின் உடல் சார்ந்த ஆசைகள், சுயநல எண்ணங்கள், பாவத்தைச் சார்ந்த மனோபாவங்கள் ஆகியவற்றின் இயல்பைச் சுட்டுகின்றது. ஏனெனில், ஊனியல் மனநிலை கடவுளுக்குப் பகையானது. அது கடவுளின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதில்லை, இருக்கவும் முடியாது.

ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. ஆனால், கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல (உரோ. 8: 7-9) என்று தூய பவுல் உரோமையருக்கு எழுதின திருமுகத்தில் பதிவு செய்கின்றார். சிலுவைப் பாடுகளைத் தியானித்துக் கொண்டிருக்கும் நாம் இத்தவக்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து சிந்தனை செய்வோம்.

1. சிலுவையில் ஊனியல்பின் செயல்களை அறைதல்:

மனிதருக்குள் ஒரு வகையான நிரந்தரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்வர். முரண்பட்ட இரு சக்திகளுக்கு இடையே - ஊனியல்புக்கும் ஆவிக்கும் இடையே - எழுகின்ற போராட்டமாக பவுல் இதைப் பார்க்கிறார் (கலா. 5: 17; உரோ. 7: 14-3). நன்மை செய்யும் இயல்பு, தீமை செய்யும் இயல்பு என்னும் இரு இயல்புகளை மனிதர் கொண்டிருக்கின்றனர். ஆகவே, ஒரே நேரத்தில் இரு துருவங்களிலும் ஈர்க்கப்படுகின்றனர்; மனப் போராட்டத்தில் உழல்கின்றனர் என்பது யூதக் கோட்பாடு. "மனிதர் தம் தீச்செயல்களை விரும்பவும் செய்கின்ற அதே நேரத்தில் வெறுக்கவும் செய்கின்றனர்" என்கிறார் கிரேக்க அறிஞர் செனக்கா. பவுலோ இதை ஊனியல்புக்கும், தூய ஆவிக்கும் இடையே நடக்கின்ற போராட்டமாகக் காண்கிறார். தமது சொந்த வாழ்க்கை அனுபவத்தினின்றே விளக்குகிறார். நாம் ஆவியால் வழிநடத்தப்படுகிறோம். இது கடவுள் நமக்கு அருளிய கொடை. அந்த ஆவிக்கு ஏற்ப வாழ வேண்டும். இது நம்மீது சுமத்தப்பட்ட கடமை. ஆவியின்படி நடப்பதும் ஊனியல்பின்படி நடப்பதும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை (2 கொரி. 10: 3, 4; 1 கொரி. 3: 3; பிலி. 3: 19, 20). கலா. 5: 19-21-இல் பதினைந்து வகை பாவங்களின் பட்டியலை இங்கு தருகிறார் பவுல். தொடக்கத் திருச்சபையில் வழக்கில் இருந்த பட்டியலே இது. பிற இனத்தார் நடுவிலும் இதே பட்டியலைக் காணலாம் (உரோ. 1: 26-32). பல இடங்களில் பவுல் இப்பட்டியலைத் தருகிறார் (உரோ. 13:13; 1 கொரி. 5: 10, 11; 2 கொரி. 12: 20, 1; எபே. 5: 3-5; கொலோ. 3: 8). இதை வைத்து ஒருவர் ஆவியின்படி நடக்கிறாரா? ஊனியல்பின்படி நடக்கிறாரா? என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். ஊனியல்பின் செயல்களைச் சிலுவையில் அறைய வேண்டும்.

ஊனியல்பின் செயல்கள்:

அ) சிற்றின்பப் பாவங்கள் : i) பரத்தமை, ii) கெட்ட நடத்தை, iii) காமவெறி. ஆ) வழிபாட்டுப் பாவங்கள் : i) சிலை வழிபாடு, ii) பில்லிசூனியம். இ) சமூக வாழ்வைப் பாதிக்கும் தீச்செயல்கள் : i) பகைமை, ii) சண்டை சச்சரவு, iii) பொறாமை, iv) சீற்றம், v) கட்சி மனப்பாண்மை, vi) பிரிவினை, vii) பிளவு, viii) அழுக்காறு, ix) குடிவெறி, x) களியாட்டம் (கலா. 5: 19-21). ஊனியல்பின் செயல்களை கலாத்தியர்

சிலுவையில் அறைய வேண்டும் என்னும் எண்ணத்தோடு அவற்றால் உண்டாகும் தீய விளைவுகள் பற்றிப் பவுல் அவர்களை எச்சரிக்கிறார். ஏனெனில், கொலை, விபசாரம், பரத்தைமை, களவு, பொய்ச்சான்று, பழிப்புரை ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன (மத். 15: 19) என்ற இயேசுவின் போதனைகள் நமக்கு சான்றாகும். எனவே, சிலுவையில் ஊனியல்பின் செயல்களை அறைந்து சாட்சிகளாக வாழ நம்மை அர்ப்பணிப்போம். சுயநலம் மற்றும் அகந்தை, பேராசை மற்றும் சினம், கோபம், பழிவாங்கும் எண்ணம், உலக ஆசைகள் மற்றும் பாவ விருப்பங்கள், இறைவனைவிட தன்னை சார்ந்த வாழ்வை விட்டுவிடுவோம்.

2. சிலுவையின் வழி மீட்பைப் பெறுதல்:

சிலுவை மீட்பின் அடையாளம். கிறிஸ்து இயேசு துன்பத்தின் வழியாகவே சிலுவையின் மூலம் மீட்பை (or) இரட்சிப்பை அளித்தார். இயேசு சிலுவையில் தொங்கியபோது உடலால் துன்பப்பட்டவராக, மனதால் பாடுபட்டவராக ஆன்மாவில் காணப்பட்டவராக இருந்தார். இது பாடுகளின் உச்சநிலை. இதில்தான் கடவுளின் அன்பு வெளிப்பட்டது. சிலுவை ஒரு தண்டனைச் சின்னமாக இருந்தது. ஆனால், கிறிஸ்து அதை மீட்பு மற்றும் அன்பின் சின்னமாக மாற்றினார்.

இந்த உலகில் நாம் வாழும்போது பலவித போதனைகளையும், வேதனைகளையும் அனுபவிக்கின்றோம். இவற்றுக்குப் பின்னால் நம்மைவிட வலுவான சக்தி இயங்குவதை நாம் பல வேளைகளில் உணரலாம். இந்த சக்திகள் ஏழ்மை, நோய்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள், வன்முறைகள் போன்ற முகங்களில் தோன்றலாம். ஆனால், சாவே நம்மைச் சரிய வைத்தாலும் நாமே வெற்றிவாகை சூடுவோம். ஏனெனில், இயேசுவின் சிலுவைத் துன்பங்களே கடவுளின் அன்பை நமக்கு வெளிப்படுத்தின. இந்த அன்பே சாவைக்கூட வென்றது. இதை நம் உள்ளத்தில் தேக்கி வைத்தால் எந்த விதமான துன்பங்களையும் நாம் வென்றுவிட முடியும். இந்த அன்பே நம் வாழ்வின் தூண்டுகோலாகும் (உரோ. 8: 35). "கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்" (கலா. 5: 24) என்ற இறைவார்த்தைக்கேற்ப நாம் கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்களாக மாறி மீட்பின் சிலுவையின் வழியாக பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டியவை: நம் நிலையை உணர வேண்டும் (தி.ப. 9). பாவங்கள் களையப்பட வேண்டும் (2 கொரி. 5: 17). கிறிஸ்து இயேசுவின் மீட்பின் இரகசியமான பாடு, மரண உயிர்த்தெழுதலை நினைவு கூர வேண்டும் (மத். 27, 28 அதிகாரங்கள்). போலித்தனமான வாழ்வை விட்டு உண்மையாக மனம் மாற வேண்டும் (மத். 3: 2; 4: 17; லூக். 19: 1-10). நம் பேச்சிற்கும், நமது வாழ்விற்கும் (அகவாழ்வு) தொடர்பு இருக்க வேண்டும். தன்னைப்போல் பிறரை நேசித்தல் வேண்டும் (லூக். 10: 27). மன்னித்தல்

வேண்டும் (லூக். 23: 32, 34). விட்டுக்கொடுத்தல் வேண்டும் (தொ.நூ. 32-ஆம் அதிகாரம்). அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்குதல் வேண்டும் (1 கொரி. 13). நற்குணம், நீதி, உண்மையுடன் வாழுதல் வேண்டும் (எபே. 5: 9).

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையின் மூலம் நமக்கு மீட்பை நிலைநாட்டினார். நமது பாவங்களுக்காய் தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலின் மூலம் மீட்பின் இரகசியத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். எனவே, இத்தவக்காலத்தில் எப்பொழுதும் கிறிஸ்துவுடன் இணைந்து வாழ்வோம். வில்லியம் கேரியின் சிந்தனைக்கேற்ப,

"கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்
கடவுளுக்காக பெரிய காரியங்களை சாதிக்கப்பார்"

என்கின்ற நிலையில் கிறிஸ்து இயேசுவுடன் இணைந்து பயணிப்போம். ஊனியல்புகளை விட்டுவிடுவோம். சிலுவையில் ஊனியல்பின் செயல்களை களைவோம். சிலுவையின் வழி மீட்பை பெறுவோம்.

திரு. P. சோபால்

சிலுவையும் வெற்றியும்

கொலோ. 2: 1-15

தம் சிலுவையினால் கிடைத்த வெற்றியால் . . . இழுத்துச் சென்றார் (கொலோ. 2: 15).

சிலுவையும் வெற்றியும் என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின்படி, இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம், உலகத்தின் பாவங்கள் மற்றும் இருளின் சக்திகளுக்கு எதிரான வெற்றியைக் குறிக்கிறது. இது உலகத்தின் பார்வையில் தோல்வியாகத் தோன்றினாலும், உண்மையில் இயேசுவின் சிலுவை மரணம் மரணத்தின் மீது வெற்றியை அளித்து, உயிர்த்தெழுதலுக்கு வழிவகுத்ததால் அது ஒரு மகத்தான வெற்றி என்று கருதப்படுகிறது.

இயேசு சிலுவையில் மரித்ததன் மூலம், மனிதகுலத்தின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்தார். அவரது மரணம், அவரை நம்புபவர்களுக்கு மரணத்தின் மீது வெற்றி பெற்று. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை அளிக்கிறது. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்ததால் நாமும் உயிர்த்தெழுவோம் என்ற நிச்சயத்தின் நற்செய்தியைப் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்ல. இதனால் உண்டான நித்திய வாழ்வின் நிச்சயமும் நமக்குண்டு, நாம் இனி இந்த சரீர மரணத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை. ஆனால், ஒரு காரியம் உண்டு. இயேசு பாவத்தின் கொடூரம் முழுவதையும், அதனாலுண்டான நித்திய மரணத்தையும் சிலுவையிலே வெற்றிபெற்றுவிட்டார்.

இயேசுவின் சிலுவை எப்படிப்பட்ட வெற்றியை தருகிறது என்பதனை இரண்டு சிந்தனைகளின் வழியாக தியாகம் செய்வோம்

1. சிலுவை: பாவத்திலிருந்து வெற்றி

பாவத்தின் மீது வெற்றி பெறுவது என்பது ஒருவரின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டது என்றும், பாவம் மரணம் மற்றும் குற்றத்திலிருந்து விடுதலையாகி விட்டனர் என்றும் புரிந்து கொள்ள வேண்டும். பாவம் மனிதனை கட்டி வைத்தது. சிலுவை அந்த சங்கிலியை உடைத்தது. இயேசு தனது ஒரே பேறான குமாரனாக பாவ மாம்சத்தின் சாயலில் வந்து சிலுவையில் பாவத்தை மாம்சத்திலேயே ஆக்கினைக்குள்ளாக்கிவிட்டார். இயேசுவின் சிலுவை மரணம் மூலம் சாத்தானின் அதிகாரத்தை முறியடித்தது. பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை வென்றது. இந்த வெற்றியின் மூலம் மக்களுக்கு பாவத்திலிருந்து மீட்பு கிடைத்தது. அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடும்போது "அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6: 5).

நமது பாவங்களுக்காக, நமது அக்கிரமங்களுக்காக இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தினார் (கொலோ. 1: 20). இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. தன்

பாவங்களை நன்கு உணர்ந்த தாவீது, "என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும் (சங்கீதம் 51: 9) என்று மனதுருகி மன்றாடி புதுவாழ்விற்குத் தகுதியுடையோரானார். பாவத்தால் இறை உறவு துண்டிக்கப்பட்டது. பாவத்தால் முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது சிலுவையில் ஒப்புரவாக்கினார் (கொலோ. 1: 21) பாவத்திலிருந்து விடுபட்டு புது உறவு பெற்றதால் தான் அப்பா பிதாவே (உரோ. 8: 16) என்று அழைக்கும் உரிமை பெறுகின்றோம்.

சிலுவை: சாபத்திலிருந்து வெற்றி

சிலுவை என்றால் அவமானம். சிலுவை என்றால் சாபம். சிலுவை என்றால் அடிமை நிலை. சிலுவை என்றால் துன்பம் தருவது என்று மக்கள் பயந்து வீடுகளில் சிலுவை வைக்க விரும்புவதில்லை. ஆனால் இயேசு என்று சிலுவை சுமந்து இரத்தம் சிந்தி கல்வாரியில் தம் இறுதி மூச்சை விட்டு மரித்தாரோ அந்த நாள் முதல் அகில உலகமெங்கும் சிலுவை சாபத்திலிருந்து வெற்றி என்று போற்றப்படுகின்றது.

பயத்தால் வரும் நோய், மூட நம்பிக்கையால் வரும் இழப்புக்கள் இவை அனைத்தும் சாபத்தின் காரணம் என்பர்கள். யூத பாரம்பரிய நம்பிக்கையின் அடிப்படையில் மூதாதையரின் தீச்செயல்களால் சாபம் தம் பிள்ளைகளைத் தாக்குகிறது. பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் (யாத். 34: 7) என்று பார்க்கிறோம். ஆயினும் நம் பாவங்கள் இயேசு சிந்திய இரத்தத்தால் கழுவப்படுகிறது. எனவே, இயேசு சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நம் பாவங்களுக்காக அவரே இறந்தார் (1பேது 3: 24). இவ்வாறு நம் பாவங்கள், சாபங்களைச் சுமந்து இயேசு சிலுவையில் மரித்து நமக்குப் புதுவாழ்வு தந்தார். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (3:13).

இந்தச் சாபம், அடிமைத்தனம் அனைத்தையும் இயேசு தம் சிலுவைச் சாவால் முறியடித்தார். எனவே, நம்மை படைத்த ஆண்டவரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாது மனம் போன போக்கில் வாழ்ந்து பாவத்திற்கு அடிமையாகி சாபத்தால் மடியும்போது மனம் மாறி மன்றாடுகையில் தாவீதுக்கு நான் காட்டிய மாறாத பேரன்பை உங்களுக்குக் காட்டுவேன் என்கிறார் நம் கடவுள் (எசா 55:3). இவ்வாறு இறையன்பை நாம் பெற்று மகிழ, சாபத்திலிருந்து விடுபட சிலுவையில் மரித்தார் இயேசு. எனவே, மீட்பராம் இயேசு சுமந்த சிலுவையால் நாம் சாபத்திலிருந்து விடுதலை வெற்றி பெற்றோம் என்று இறைவனைப் போற்றி மகிழ்கின்றோம்.

அருள்திரு. C. ஜெபக்குமார்

இயேசு கிறிஸ்துவின்
சிலுவைத் திருமொழிகள்

மன்னிப்பு

லூக். 23: 32-34

"தந்தையே, இவர்களை மன்னியும்" *(லூக். 23: 34)*

வார்த்தை மாம்சமாகி உலகில் வந்தவர், மாம்ச வாழ்வின் தகவுகளை கற்றுக்கொடுத்தவர் மாம்ச நொருக்கப்பட்டு, சிதைக்கப்பட்ட நிலையில் மாம்ச வாழ்வின் சான்றோடு நிற்பது - நம்மை சிந்திக்க தூண்டுகிறது. மனித வாழ்வில் மரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மரணமும் அதை சார்ந்த நிகழ்வுகள் பிற மக்களிடம் அதிகம் பேசப்படுபவை. இயேசுவின் மரணமும் அதை சுற்றிலும் நடந்த நிகழ்வுகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகும் எலலா மனிதர்களாலும் அதிகம் பேசப்படுகிறது. சமுதாயத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் அதிகம். 1976-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் சோவேட்டோ என்ற நகரில் 12 வயது சிறுவன் ஹெக்டர் பீட்டர்சன் தனது நண்பர்களுடன் மொழி திணிப்புக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்டார். போலீசின் துப்பாக்கிச் சூட்டில் ஹெக்டர் பீட்டர்சன் உயிரிழந்தார். அவரது உடலை முபியசா மகுபோ தூக்கி ஊர்வலமாக சென்றார். ஹெக்டரின் சகோதரி அன்டொய் நெட் சிதோல் அழுது கொண்டு சென்றார். இதை சாம்நசிமா புகைப்படம் எடுத்தார். இந்த புகைப்படம் உலகம முழுவதும் பெறும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வு தென்னாப்பிரிக்கா விடுதலை போராட்டத்தை தீவிரப்படுத்தி விடுதலையை பெற்றுத்தந்தது. இதேபோல் ஒரு மனிதனின் மரணத்தில் நடக்கும் நிகழ்வுகள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இயேசு தான் மரணமடையும் முன்பு சொன்ன மிக முக்கியமான வார்த்தையாகிய மன்னிப்பு கடவுளின் தன்மையையும் எதிர்பார்ப்பையும் நமக்கு கற்றுத்தந்து பெரும் சவாலை முன்வைக்கிறது. மன்னிப்பின் வார்த்தைகளின் சாராம்சங்களை சிந்திப்போம்.

1. மன்னிப்பு வாழ்வானது

இயேசு தான் போதனைகளில் எல்லாம் மன்னிப்பையும் பிறர் மீது காட்டும் அன்பையும் அதிகம் வலியுறுத்துகிறார். இயேசுவின் பேச்சுகள் மன்னிப்பை மையமாக கொண்டிருந்தது மத். 18: 21, 22-இல் பேதுரு மன்னிப்பை மையப்படுத்தி தன் கலாச்சார பின்னணியில் நான் எத்துணை முறை என்சகோதரனை மன்னிக்க வேண்டும் என்று கேட்டபோது இயேசு அதை மிக தெளிவாக மன்னிப்பு என்பது எண்ணிக்கையில் அல்ல அது உணர்வு சார்ந்த எண்ணிக்கை அல்ல பண்பு என்பதை மிக தெளிவாக விளக்குகிறார். எல்லாவற்றையும் கணக்கு பார்த்து செய்யும் உலகில் கணக்கில்லா மன்னிப்பை வழங்க இயேசு போதிக்கிறார். அவர் மன்னிப்பின் வார்த்தைகள் அவர் மரணத்தில்

வாழ்வாகின. தன்னை கொலை செய்ய சூழ்ச்சிகள் செய்தோரை அடித்தவர்களுக்கு, ஏழனப்படுத்தினவர்களுக்கு, மறுதலித்தவர்களுக்கு, மன்னிப்பை வழங்கி, பிதாவினிடம் பரிந்து பேசுகிற நிகழ்வு நமக்கு பெரும் சவாலை தருகிறது. கிறிஸ்துவையும், மன்னிப்பையும் வார்த்தைகளில் அடிக்கடி கூறும் நம் வாழ்வில் மன்னிப்பு வாழ்வானதா? பிறரை மன்னிக்க நாம் ஆயத்தமா என சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

2. மரணம் சாட்சியானது:

ஒரு மனிதன் மரித்தபின்பு அவனின் செயல்கள் மட்டுமே நினைவுகூறப்படுகிறது. நம் மதிப்பை நம்சாட்சி வாழ்வு தீர்மானிக்கிறது. 1956-ஆம் ஆண்டு ஜிம் எலியட் என்னும் மிஷனெறி ஈக்வடார் பகுதியில் திருப்பணி செய்தார். அவரை ஈட்டியால் குத்தி அந்த மக்கள் கொன்றுவிட்டனர். அவரது மனைவி எலசபெத் எலியட் தன் கணவனை கொலை செய்தவர்களை மன்னித்து அந்த மக்களுடன் வாழ்ந்தார். இவரது சாட்சி வாழ்வை பார்த்து அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். எலியட்டின் வார்த்தையால் செய்யமுடியாததை அவரது மனைவியின் மன்னிப்பின் வாழ்க்கை செய்தது. சாட்சியின் மரணம் மாற்றத்தை ஏற்படுத்தியது. இயேசுவின் சாட்சி வாழ்வு மரணத் தருவாயிலும் இருந்தது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது.

இயேசு கிறிஸ்து எல்லா சூழலிலும் எப்படி வாழவேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தார். அதை வாழ்ந்தும் காட்டினார். அவரைபோல் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் சாட்சி வாழ்வு பிறருக்கு வாழ்வு கொடுக்கவேண்டும். இயேசு தன்னை சுற்று இருந்தவர்களுக்கு வாழ்வு கொடுத்தார். நாமும் அவரைபோல் வாழ்வு கொடுக்க வேண்டும். வார்த்தைகள் வாழ்வாக செயல்வடிவில் மாறவேண்டும்.

கடவுளின் மன்னிப்பினால் வாழ்வு பெரும் நாம் பிறரை மன்னித்து நாமும் பிறரும் கடவுளோடு இணைந்து வாழ்வோம் ஆசி பெறுவோம்.

திரு. நிஸ்பர்ட் G.M.. ஷாலோம்

மீட்பு

லூக். 23: 39-43

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (லூக். 23: 43).

சிலுவையில் இயேசு மொழிந்த இரண்டாம் வார்த்தை கள்வனுக்கு பரதீசின் வாழ்வைக் கொடுத்தது. பரதீசு என்பது பாரசீக வார்த்தை. இதன் அர்த்தம் வேலியடைக்கப்பட்ட செழிப்பான தோட்டம். பாரசீக அரசன் தன் விருந்தினர்களைக் கௌரவிக்கும் அடையாளமாக செழிப்பான தோட்டத்தில் விருந்து கொடுப்பார். இயேசுவும் சிலுவைக் கள்வனை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக பரதீசின் வாழ்வை அவனுக்கு அருளுகிறார். பொது மொழிபெயர்ப்பு பரதீசு என்கிற வார்த்தையை, "பேரின்ப வீடு" எனக் குறிப்பிடுகிறது. இயேசு கள்வனுக்கு கொடுத்த வாழ்வு தம்முடன் கூட இருக்கும் வாழ்வு. பரதீசு என்ற வார்த்தைக்கு பல விளக்கங்கள் தரப்பட்டாலும் அதன் மையக் கருந்து இயேசுவோடு உடன் இருக்கும் வாழ்வு.

1. பரதீசு வாழ்விற்கு முன் கள்வனின் நிலை:

இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களைக் குறிக்க ககர்கொயஸ் (kakourgous) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் புரட்சியாளர்கள். இவர்கள் செலோத்தே எனும் புரட்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எனச் சில திருமறை அறிஞர்கள் கூறுகிறார்கள். செலோத்தே என்பது ரோம ஆட்சியில் அடிமைப்பட்டுள்ள யூதேயாவை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க ஆயுதம் ஏந்தி போராடிய இயக்கம். உரோமை ஆட்சியாளர்களைப் பொறுத்தமட்டில் இவர்கள் தீவிரவாதிகள். வேறு சில திருமறை அறிஞர்கள் இவர்களைக் கலகக்காரர்கள் எனக் குறிப்பிடுகிறார்கள். ஏரோது எருசலேம் தேவாலயத்தைக் கட்டியபின் ஆலயம் கட்ட பயன்படுத்தப்பட்ட 40,000 பேர் வேலையில் இருந்து நீக்கப்பட்டார்கள். அவர்களில் பலர் பிழைக்க வழியின்றி திருடர்களாக மாறினர். இவர்கள் மலைச் சிகரங்களிலும் காடுகளிலும் பதுங்கி வாழ்ந்து வழிப்போக்கர்களிடம் கொள்ளையடித்து வாழ்வு நடத்தினர். மாத்திரமல்ல, உரோமைப் பேரரசை எதிர்த்து கலகம் செய்தார்கள். இப்படிப்பட்ட குற்ற பின்னணியத்தைக் கொண்ட இரு கள்வர்களில் ஒருவன் முன்பின் அறிமுகம் இல்லாத இயேசுவைத் தூஷிக்கிறான். ஏனெனில், இது பாஸ்கா விழாவின் காலம். பொதுவாக, பாஸ்கா விழாக் காலத்தில் யாரையும் சிலுவையில் அறைய மாட்டார்கள். ஆனால், இப்பொழுதோ இயேசுவைக் கொலை செய்வதற்காகத் தங்களையும் அவசரம் அவசரமாக சிலுவையில்

அறைகிறார்கள். இன்னும் ஓரிரு வாரங்கள் உயிரோடு இருப்போம் என்று நம்பிய நம்பிக்கை பொய்யாய்ப் போனது. ஆகவே தான், நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று இகழ்ந்தான் (லூக்கா 23: 39). தன் தவறுகளுக்காய்ச் சிலுவை தண்டனை கிடைத்த பின்பும் இயேசுவை இகழ்கிறான். ஏன் இகழ்ந்திருப்பான்? ஒருவேளை இயேசு தப்பித்தால் தானும் தப்பி விடலாம் என்கிற ஒரு குறுகிய எண்ணத்தில் இகழ்ந்திருக்கலாம் அல்லது உரோமையர்களோடு இணைந்து நானும் இயேசுவை இகழ்ந்தால் என்னை விடுவித்து விடுவார்கள் என்றெண்ணி இயேசுவை இகழ்ந்திருக்கலாம். அந்தக் கள்வன் தன் வாழ்வின் இறுதி நிமிடங்களில் இயேசுவின் அருகில் இருக்கிறான். ஆனால், வாய்ப்பை பயன்படுத்தவில்லை. தன் அபாத்திர நிலையை உணரவில்லை. வாழ்வை இழந்து போனான்.

2. மற்றொரு கள்வனின் மனமாற்றம்:

ஒரு கள்வன் இயேசுவை இகழ்ந்த வேளையில் மற்றொரு கள்வனோ தன்னை நிதானித்துப் பார்க்கிறான். நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம் (லூக். 23: 41). தான் செய்த கொலைகள், வன்முறைகள், அநியாயங்கள் யாவும் அவன் கண்முன் வருகிறது. தான் தண்டிக்கப்பட்டது நியாயத்தின் படி என உணர்கிறான். நான் ஒரு அக்கிரமக்காரன், குற்றவாளி என்பதை ஏற்றுக் கொள்கிறான். மட்டுமல்ல, இயேசுவை உற்றுக் கவனிக்கிறான். பொதுவாக சிலுவையில் மரண தண்டனை பெற்றவர்கள் தீய வார்த்தைகளைப் பேசுவார்கள். தன்னை சிலுவையில் அறைந்தவர்களைச் சபிப்பார்கள். காதுகள் கேட்கக் கூசும் வார்த்தைகள் பலவற்றைப் பேசுவார்கள். ஆனால், இயேசுவின் செயல் இதற்கு எதிர்மறையாக இருந்தது. இயேசு நிதானத்தோடு பேசினார். வார்த்தைகளை மிக மிக கவனத்தோடு பேசினார். எல்லாவற்றுக்கும் மேலாக, தம்மைக் காயப்படுத்தினவர்களை, சிலுவையில் அறைந்தவர்களை, தமக்குத் தீமை செய்தவர்களை இயேசு மன்னித்தார் (லூக்கா 23: 34). இவை எல்லாவற்றையும் கவனித்த கள்வன் தன்னை பாவி என உணர்ந்து ஆண்டவரின் இரக்கத்திற்காய் வேண்டினான். இரக்கம் பெற்றான். சகேயு தன்னை உணர்ந்தான். அநியாயமாய் வாங்கினதை நான்கு மடங்காக கொடுக்கிறேன் என தன்னை திருத்திக் கொள்ள முன்வந்த வேளையில் ஆண்டவருடைய இரக்கத்தை அவனும் அவன் வீட்டாரும் பெற்றுக் கொண்டார்கள் (லூக்கா 19: 9). நாம் நம்முடைய தவறுகளை, குற்றங்களை, அபாத்திர நிலையை, தகுதி இன்மையை, இயலாமையை உணர்கிறோமா?

3. பரதீசின் வாழ்வு கள்வனுக்கு ஏன்?:

இயேசு தம்மோடு மூன்றரை வருடம் பணி செய்த சீடர்களுக்கு வாக்குப்பண்ணாத பரதீசை ஏன் கள்வனுக்கு கொடுத்தார்? தன் குற்றத்தை அறிந்த, தன் நிலை உணர்ந்த கள்வன் திறந்த மனதோடு தன் தவறை

ஒப்புக்கொள்கிறான். மாத்திரமல்ல, மற்ற கள்வனையும் திருத்த முயன்றான் (லூக்கா 23: 40, 41). இதுவே பரதீசு (பேரின்ப வீட்டின்) வாழ்வை கள்வனுக்குக் கொடுத்தது. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீ.மொ. 28: 13). இந்தக் கள்வன், ஆண்டவரே வாழ்வு தாரும். உடனே தாரும் என்று கேட்கவில்லை. வலது பக்கம், இடது பக்கம் இடம் தாரும் என்ற சீடர்களைப் போல கேட்கவில்லை. ஆண்டவரே, உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன தருவீர்? என்று சீடர்களைப் போலக் கேட்கவில்லை. மாறாக, உம் ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்று தாழ்மையோடு ஜெபிக்கிறான். அவனுடைய ஜெபம் அங்கீகரிக்கப்படுகிறது. பரதீசு வாழ்வு கிடைக்கிறது. இங்கு எந்த வகை ஞானஸ்நானமோ, ஆவிக்குரிய கூட்டங்களோ தேவைப்படவில்லை. தேவைப்பட்டது, கள்வனின் மனமாற்றம் மட்டுமே. அதே வேளையில், சிலுவையில் மலர்ந்த மன்னிப்பின் நறுமணம் கள்வனுடைய மனதைக் கவர்ந்தது. அவன் தன்னை உணர்ந்தான், தாழ்த்தினான். மன்னிப்பிற்காய் வேண்டுதல் செய்தான். வாழ்வு பெற்றான். ஆண்டவருடைய பாதத்தில் சிலுவைக் காட்சிகளைத் தியானித்துக் கொண்டிருக்கும் நாமும் நம்மை உணர்வோம். நம்மைத் தாழ்த்துவோம் மன்னிப்பிற்காய் மன்றாடுவோம். ஆண்டவர் தரும் பேரின்ப வீட்டின் வாழ்வு பெறுவோம்.

திரு. சகுந்த் J. மார்ட்டின்

அரவணைப்பு

யோவா. 19: 25-27

இயேசு தம் தாயையுயம் அருகில் நின்ற தம் அன்புச்சீடரையும் கண்டு தம் தாயிடம், "அம்மா, இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்." (யோவா. 19: 26-27)

கொல்கதா மலையில் இயேசுவைச் சுமந்த சிலுவை நிறுத்தப்பட்டிருக்கிறது. சிலரின் அழுகையும், சிலரின் துக்க மொழிகளும் பலரின் ஏளனச் சொற்களும் அங்கே ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்டச் சூழலில் இயேசு கிறிஸ்து சிலுவையில் நின்று அன்பின் பொறுப்பை நிறைவேற்றும் வாக்கியமாக "அம்மா, இவரே உம் மகன்; சீடரே, இவரே உம் தாய்" என்னும் வாக்கியத்தைக் கூறுகிறார்.

யோவான் நற்செய்தியாளர் இந்த நிகழ்வினை உணர்வுப் பூர்வமாகப் பதிவு செய்கிறார். தனது கருவில் வளர்ந்து தனது கைகளில் தவழ்ந்த தனது மகன் சிலுவையில் தொங்க விடப்பட்டிருக்கிறானே, உழப்பட்ட நிலம் போல தனது மகனின் உடல் சிதைக்கப்பட்டிருக்கிறதே என்ற வேதனையின் உச்சத்தில் சிலுவைக்கு அருகே நின்று,

"உனது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக். 2: 37) என்ற சிமியோனின் வார்த்தைகளையும் தனது மனதிலே அசைபோட்டு நிற்கிறார். இப்படிப்பட்ட ஒரு வேதனையானத் தருணத்தில் தான் இயேசுநாதர் மூன்றாவது வார்த்தையான "அம்மா, இவரே உம் மகன்; இவரே உம் தாய்" என்பதனைக் கூறுகிறார். இயேசுக்கிறிஸ்து சொன்ன இந்த வாக்கியத்தினைக்குறித்து தியானிப்போம்.

1. பரிவின் வெளிப்பாடு (Expression of Care) :

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு கிறிஸ்து கண்ணீரோடு நின்ற தனது தாயைக் கண்டார். தனிமையாக்கப்பட்ட நிலையில் நின்ற அவரின் வேதனையைப் புரிந்து கொண்டு பரிவு கொள்கிறார். வலியின் மத்தியிலும் அவர் பரிவை மறக்கவில்லை. தனது பணியிலும், போதனையிலும் பரிவினை முன்னிலை படுத்திய இயேசு நாதர், தனது மூச்சடங்கும் நேரம் நெருங்கிவிட்ட பின்பும் பரிவினை வெளிப்படுத்துகிறார்.

அம்மா, இவரே உம் மகன், என்று சொல்லும்போதுதனது தாய்க்கான பாதுகாப்பை உறுதி செய்ய முற்படுகிறார். யூத பாரம்பரியத்தில் செல்வச் செழிப்போடு வாழும் மக்கள் கூட "கொர்பான்"

என்னும் பரிகாரம் செய்து பெற்றோரை, தள்ளிவிட எண்ணும் சூழலில் "பரிகாரம் அல்ல, பரிவே முதன்மையானது" என இயேசுக் கிறிஸ்து சிலுவையிலிருந்தும் மாதிரியினை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

முதுமையின் துயரத்தையும் தனிமையின் வேதனையையும் ஔவையார் அவர்கள் தனிப்பாடல்கள் என்னும் தொகுப்பில், "கொடிது கொடிது முதுமையில் தனிமை" என்னும் வரிகளிலே வெளிப்படுத்துகிறார். வலி நிறைந்த சூழலிலும் தனது தாய் முதுமையிலே தனிமை என்னும் கொடுமையினை அனுபவித்து விடக்கூடாது என்னும் நோக்கில் இந்த வார்த்தையைக் கூறுகிறார். சிலுவையில் வெளிப்பட்ட பரிவு திருச்சபைகளின் அடையாளமாக இருக்க வேண்டும். இயேசுவை மாதிரியாகக் கொண்டு பரிவினை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம்.

2. பொறுப்புக்கு அழைப்பு (Call to Commitment) :

"அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவான் 19: 27).

பொறுப்பு என்பது உணர்ச்சியோ, மனக்காட்சியோ அல்ல. மாறாக செயல்பாடு வழியாய் வெளிப்படும் கடமை. இயேசுக் கிறிஸ்து தனது பொறுப்பினை இந்த வாக்கியத்தின் வழியாய் நிறைவேற்றி தனது அன்பு மிக்க சீடரிடம் பொறுப்பைத் தொடரும்படியான அழைப்பினைக் கொடுக்கிறார். பொறுப்பிற்கான அழைப்பினைப் பெற்றுக்கொண்ட யோவானும் தனது தாயாக மரியாளை ஏற்றுக்கொண்டு பராமரிக்கிறார்.

உண்மையான பொறுப்பு என்பது தற்காலிகமானது அல்ல. அது தொடர்ச்சியான நம்பிக்கையுடன் கூடிய செயல்வடிவம். பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். தங்கள் பெற்றோரைக் கவனிக்க மனமின்றி காப்பங்கள், ஆதரவற்றோர் இல்லங்களிலும் அவர்களை சேர்த்து அவர்களை வேதனைப்படுத்தும் செயல்களைச் செய்யும் இழிவான நிலையையும் இன்றைய சமூகத்தில் காண இயலும். ஆனால் இயேசுவும் தனது பொறுப்பினைச் செய்கிறார். இயேசுவின் சீடரான யோவானும் இரத்த பந்தம் ஏதும் இல்லாதிருந்தும் மரியாளைத் தனது தாயாக ஏற்று பொறுப்பினைத் தொடர்கிறார். திருச்சபையாகிய நமக்கும் கடவுள் தருகின்ற பொறுப்பிற்கான அழைப்புகள் ஏராளம். அவைகளைத் தட்டிக் கழிக்காமல் பொறுப்பாய் செயல்பட நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

3. அன்பின் நிலைத்த உறவு (Lasting Relationship through love) :

இயேசு நாதர் சிலுவையில் நின்று மரியாளுக்கும், யோவானுக்கும் இடையே ஏற்படுத்தின உறவு என்பது அன்பினால் உருவான உறவு. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது எல்லாரும் தன்னை விட்டு போய்விட்ட சூழலிலும் தனிநபராய் அன்பினை வெளிப்படுத்தி நிற்கும் யோவானிடம் தனது தாயை ஒப்படைத்து உறவை உருவாக்கினார்.

நாகப்பட்டினம்; மாவட்டம் வேளாங்கண்ணி அருகில் வாழ்ந்த 60 வயதான மீனாட்சி அம்மாள் என்ற தாயார் 2004-ம் ஆண்டில் சுனாமி பேரலையில் தனது குடும்பத்தை மொத்தமாக பறி கொடுத்தார். சோகத்தின் உச்சத்தில் இருந்த மீனாட்சி அம்மாள் தனது தாய், தந்தை மற்றும் உடன் பிறந்த சகோதரியை இழந்து நின்ற 8 வயது சிறுவனைக் கண்டு அவனிடம் சென்று "இன்று முதல் நீ என் மகனாக இரு நான் உன் அம்மாவாக இருப்பேன்" என்று சொல்லி தனது மகனாக ஏற்று வளர்த்து அவனுக்கு நல்ல கல்வி மற்றும் அரவணைப்பைக் கொடுத்தார். தாய், மகன் என்னும் உறவு இரத்த பந்தத்தையும் தாண்டி அன்பால் நிலைத்தது.

சிலுவையிலும் இயேசுவால் உருவாக்கப்பட்ட அன்பு இரத்த சம்மந்தமான உறவு அல்ல. அன்பு, பொறுப்பு, அர்ப்பணிப்பு கொண்டு உருவான உறவு. எனவே இயேசுக் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி திருச்சபையாகிய நாம் சமூகத்தின் அவலங்களாய் துன்புற்று ஒடுக்கப்படும் மக்களோடு கரம்கொடுத்து கலா. 6: 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒருவர் மற்றவர்களுடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுவோம். எல்லாம் வல்ல கடவுள் தாமே நம்மை ஆசீர்வதித்து அன்பின் பொறுப்பை நிறைவேற்றும் மக்களாக நம்மையும் மாற்றுவாராக!

திரு. J. ரெஜின்

வேட்பு

மத். 27: 45-50

"என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத். 27: 46).

உலக வாழ்க்கையில் மனிதர்கள் மரண வேளையில் சொல்லுகின்ற வார்த்தைகள் சரித்திரத்தில் முக்கியத்துவம் நிறைந்த வார்த்தையாக கருதப்படுகின்றது. சிலுவை நாதர் இயேசு கிறிஸ்துவும் சிலுவையில் மொழிந்த வார்த்தைகள் மிக முக்கியமானவை. அவைகளில் இயேசு நாதர் மொழிந்த நான்காவது வார்த்தை ஏலீ, ஏலீ லாமா சபக்தானி அதற்கு என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் என்று அர்த்தமாம். இந்த வார்த்தையை மத்தேயு மற்றும் மாற்கு நற்செய்தியாளர்கள் தங்கள் நூல்களில் பதிவு செய்து இருக்கின்றார்கள். மேலும் ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரை அந்த காரம் உண்டாயிற்று எனவும் கூறுகிறார்கள. (மத். 27: 45, மாற். 15: 33) மத்தேயு ஏலி என்ற எபிரேய வார்த்தை பயன்படுத்துகிறார். மாற்கு ஏலோயி என்ற அரமேய வார்த்தையை பயன்படுத்துகிறார். இரண்டு வார்த்தைகளும் ஒரே பொருளை (இறைவன்) தன்னை உலகில் அனுப்பிய பெற்றோராம் கடவுளை குறிக்கிறது. மேலும் சபக்தானி என்ற வார்த்தையும் அரமேய வார்த்தை இயேசு அன்றாடம் பேசும் மொழியான அரமேயத்தில் மனத்தின் ஆழத்திலிருந்து வந்த வார்த்தை அல்லது குரல் தான் இது. இந்த வார்த்தை எப்படிப்பட்ட வார்த்தை என்று சிந்திப்போம்.

1. உரிமையின் குரல்:

அனைத்து உலக மக்களின் பாவத்தை மன்னிக்க மீட்பை உலகிற்கு பிரசித்தப்படுத்த சிலுவையை ஏற்றுக்கொண்டார் இயேசு கிறிஸ்து. இயேசு, வார்த்தையினாலும் வாரினாலும், காயப்பட்டவராய், மனமுடைந்தவராய், இருந்த சீடர்களால் கைவிட்டபவராய் தன்னை .... அனுப்பிய நம்முடைய சொந்த தந்தையை நோக்கி உரிமையோடு எழுப்புகின்ற குரல் தான் இந்த நான்காம் வார்த்தை. இது ஒரு அபயக்குரல் அல்ல, அவலக்குரலும் அல்ல, ஒப்பாரி ஓலமும் அல்ல. ஆனால் ஒரு உரிமைக் குரல். யோவா. 8: 29 பிதாவாகிய கடவுளுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே இருந்த நெருங்கிய உறவை பிரதிபலிக்கிறது. தடுமாறி விழுந்த பிள்ளை தாயை நோக்கி அம்மா என்று அழைப்பது போல இயேசுவும் பிதாவை நோக்கி கூப்பிடுகின்றார். எனவே தான் என் தேவனே என்று உரிமையோடு கூப்பிடுகின்றார். சங். 23: 1-இல் தாவீது அரசர் கடவுளை உரிமையோடு கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் என்று சொல்வது போல இயேசுவும் சொல்கிறார்.

இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்திலும் ஜெபித்த போது என் பிதாவே என்று தான் ஜெபித்தார் (மத். 26: 39) இஸ்ரவேல் ஜனத்தை நம் சொந்த இனமாக உரிமை சொத்தாக இறைவன் தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்து உலமனைத்தையும் தம் உரிமை மக்களாக ஏற்றுகொண்டு நம் அனைவரின் பாவத்திற்காக மரித்தார். அந்த உரிமையை நாமும் உணர்ந்து வாழ்வின் நெருக்கடியில் எப்பொழுதும் உதவுகின்ற ஆண்டவரை உரிமையோடு கூப்பிடுவோம்.

2. உறுதியின் குரல்:

இது ஒரு நம்பிக்கையின் குரல் சங்கீதம் 22-இல் மனிதனுடைய இன்னல்கள், துன்ப சூழல்கள் பற்றியும் அதன் மத்தியில் ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வோரை ஆண்டவர் விடுவிப்பார் என்பதையும் அறிய முடிகிறது. இயேசு ஒரு யூதனாக இந்த சங்கீதத்தை முழுமையாக சொல்லியிருக்கலாம் என இறையியலாளர்கள் கூறுகின்றார்கள். எனவே இது வெறுப்பின் வார்த்தையல்ல வெற்றியின் வார்த்தை. தோல்வியின் வார்த்தை அல்ல நம்பிக்கையின் வார்த்தை. இயேசு நாதர் தன்னோடு இருந்த சீடர்கள் சிதறிப்போன போதும், தன்னை அவர்கள் மறுதலித்தபோதும் அவர்களை குறித்த விரக்தியை வெளிப்படுத்தவில்லை, அவர்களை குறித்து கதறவில்லை, வருத்தபடவுமில்லை, அவர்களை அழைக்கவும் இல்லை. மாறாக, கடவுளை அழைத்தார். கைவிடப்பட்ட சூழலிலும் கை கொடுக்கும் இறைவனின் கருணையை எண்ணி நம்பிக்கையோடு இந்த நான்காம் திருவார்த்தையை மன்றாட்டாக மொழிந்தார். இந்த மன்றாட்டு இயேசுவின் உயிர்த்தெழுதலில் வெற்றியடைகிறது. நாத்திகர்கள் இவ்வார்த்தையை மேசியாவின் தோல்வி என்று கூறுகின்றார்கள். ஆனால் இது வெற்றியின் வார்த்தை. நாமும் நமது துன்ப வேளைகளில் இயேசுவை போல இறைவனில் நம்பிக்கை கொள்வோம். தானி. 3: 16-18 தானியேல் மற்றும் அவரது நண்பர்களின் செயல் ஆண்டவரில் தங்களது நம்பிக்கையை வெளிபடுத்தியது. துன்ப சூழலில் ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து வாழ்வை பெற்றனர். இயேசுவும் துன்ப சூழலில் கடவுளில் நம்பிக்கை கொண்டு உயிர்தெழுதல் மூலம் வெற்றி பெற்றார். பற்றுறுதி என்பது பற்று கொண்டு உறுதியுடன் இறுதி வரை நிலைத்திருப்பது. துன்ப சூழலில் பற்றுறுதியை பறிகொடுக்காமல் உரிமையோடு அவரை பற்றி கொள்வோம். உரிமை கொண்டாடுவோம் இறைவனை . . . பற்றுறுதி கொள்வோம் இறுதிவரை . . .!

திரு. K.S. நியுபின் ஜேம்ஸ்

தாகிப்பு

யோவா. 19: 28-29

"தாகமாய் இருக்கிறது" (யோவா. 19: 28).

*தாகம் எல்லா உயிர்களுக்குமான பொதுவான உணர்வு. தண்ணீர் இல்லையெனில் மரம், செடி, கொடிகள் முதற்கொண்டு மனிதர்கள் வரையிலும் வாடிப் போகின்ற நிலை உருவாகின்றது. பொதுவாக மனித உடலில் ஏற்படும் தாகத்தை இரண்டு வகைகளாக பிரித்துச் சொல்லுகிறார்கள் உடல் திரவ தாகம் (*Extra Cellular thirst*) உடலில் நீர்ச்சத்து குறையும் போது ஏற்படும் உணர்வு செல் திரவ தாகம் (*Intra Cellular thirst*) உடலில் உப்பின் அளவு அதிகரிக்கும் போது ஏற்படும் உணர்வு. இதனையும் தாண்டி மனதில் ஏற்படும் ஏக்கத்தின் வெளிப்பாடாக தாகத்தை வரையறுப்பதுமுண்டு. இயேசு கிறிஸ்துவினுடைய தாகம் அவருடைய மனித தன்மை மற்றும் கடவுள் தன்மையை உள்ளடக்கியது என்பதை புரிந்து கொள்வது சிறப்பானது.*

மனித வாழ்வுக்கும், மனிதனின் உடல் இயக்கத்திற்கும் தண்ணீர் மிகவும் முக்கியம் தண்ணீர் இல்லாத தவிப்பு மிகவும் கொடிதானது. உட#ல் நீர் இருப்பு குறைகின்ற போது மனிதன் இறப்பு நிலைக்கு சென்று விடுகிறான். எனவேதான் திருவள்ளுவர், "நீரின்றி அமையாது உலகு" என்பார். உலகம் சிலுவையில் தொங்கி மட்டுமல்ல; நீரின்றி நம் உடலும் இயங்காது கொண்டிருந்த நம் ஆண்டவர் இயேசு, தன்னுடைய உட#லே தளர்ச்சியை உணர்கிறார். இந்த தளர்ச்சி உடலையும் மனதையும் உள்ளடக்கியது. எனவே தான் யோவான் நற்செய்தியாளர், மறைநூ#ல் எழுதியுள்ளது நிறைவேறவே இயேசு தாகமாயிருக்கிறேன். இவ்வார்த்தை வெளிப்படுத்தும் என்றதாக குறிப்பிடுகின்றார். நாமும் சிந்தனையை பெற்று தாகத்தை தணித்துக் கொள்வோம்.

1. நெகிழ்ச்சியின் வெளிப்பாடு

நெகிழ்ச்சிக்கு ஆங்கிலத்திலே 'Elasticity' or 'Elastic' என்று அர்த்தம் கொள்ளப்படும் 'Elastic' மீளுறும் பண்பு கொண்டது. மீண்டும் முன்பிருந்த நிலைக்கே திரும்பிவிடும். கடுமையாக பணிசெய்கிற ஒருவர் தண்ணீர் பருகிய பின் மீண்டும் அதே பணியை இன்னும் சிறப்பாக செய்வதைப் போன்று இங்கு இயேசுவினுடைய முழு உடலும் பாதிப்படைந்ததுடன், தண்ணீர் என்பதல்ல. மாறாக மீண்டும் அவர் உடல் மீளுறும் என்பதை பற்றாக்குறையால் உடல் தளர்ச்சியடைகின்றது. எனினும் இனி மீட்சியில்லை வெளிப்படுத்துகின்றது. இயேசு கிறிஸ்து "தாகமாயிருக்கிறேன்" என்று சொன்னது தளர்ச்சியடைந்து விட்டேன் இனி என்னால் முடியாது என்பதல்ல எல்லாம் முடிந்தது என்பதுமல்ல,

தாகம் தணிந்த பின் இன்னும் இறைவாக்கினர் எலியா தளர்ச்சியின் மிகுதியால் இனி என்னால் முடியாது பயணிப்பேன் என்கின்ற நல் எதிர்நோக்கின் நிலைப்பாடு 1இராஜ. 19: 4-8 லே. வாழ்ந்தது போதும் என்று எண்ணி சூரைச் செடியின் அடியில் படுத்திருந்த போது, வானதூதர் கட்டி எழுப்பி உணவும் தண்ணீரும் கொடுத்ததால் ஏற்பட்ட புத்துணர்ச்சியால் பகல் இரவாக 40 நாட்கள் தளர்வின்றி நடந்து நீண்ட பயணம் செய்கின்றார்.

இயேசு கிறிஸ்துவின் தாகம் ஓய்வு எடுபதற்கானது அல்ல; மாறாக பழுவான இந்த பாடுகளின் பயணத்தில் மீண்டும் தன்னை முழுமையாய் ஈடுபடுத்தி எல்லாவற்றையும் வெற்றியாய் முடிப்பதற்கான விடயமாகும். எனவே தான் தண்ணீரின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துகின்ற யோவான் நற்செய்தியாளர் இயேசுவின் தாகத்தை அழகுபடுத்துகிறார்.

வாழ்கையில் பாடுகள் உண்டு, பாடங்களும் உண்டு பாடுகளில் பாடங்களை கற்றுக்கொள்தல் மிகவும் அவசியம். ஆகவே வாழ்கையில் அவ்வப்போது ஏற்படும் துன்ப துயரங்களில் துவண்டுவிடாது பயணிக்க அழைக்கப்படுகிறோம். தாகம் எல்லாருக்கும் வரும் தாகம் நிரந்திக்கப்படுகிறோம் என்பதையும், தாகத்தை தணித்தும் கொண்டு பயணித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்கின்ற நல்லப் பாடத்தையும் இவ்வார்த்தை நமக்கு கற்று தருகின்றது.

2. எழுச்சியின் வெளிப்பாடு

"தாகமாயிருக்கிறேன்" என்ற வார்த்தை "தாகத்தை தணிப்பேன்" என்கின்ற எழுச்சி உணர்வு. தீண்டாமை பெருகியிருந்த அந்நாட்களில், வகுப்பறையின் மூலையில் ஒரு சாக்குப் பையை விரித்து தான் மாணவர்கள் உட்கார்ந்துக்கொள்ளவேண்டும். பள்ளிக்குச் சென்ற அம்பேத்கரும் இந்த அவமானங்களையெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. தாகம் எடுக்கும்போது, குழாயைத் தொடவோ, தண்ணிரை எடுத்துச் செல்லும் பாத்திரத்தை தொடவோ அனுமதிக்கப்படாததால், மற்ற குழந்தைகளைப் போல தாகத்தைத் தணிக்க முடியவில்லை. தாகம் எடுக்கும்போது பள்ளி பியூன் தண்ணீரை ஊற்றுவார். தண்ணீர் பானை அவர்களின் உடல்களைத் தொடாமல் பார்த்துக் கொள்வார். பியூன் வரவில்லையெனில் தண்ணீர் இல்லாமல் இருக்க வேண்டியிருக்கும். அம்பேத்கர் இந்நிலையை பின்னர் விவரிக்கின்றபோது பியூன் இல்லை, தண்ணீர் இல்லை என்கிறார். இந்நிகழ்வு உடல் தாகத்தை மட்டுமல்ல நீதி, சமத்துவம், சீர்திருத்தம் பற்றிய அவரின் எழுச்சிமிகு தாகத்தின் வெளிப்பாடாக புரிந்துக்கொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்துவின் தாகமும் வெறும் உடல் தாகத்தை பற்றியது மட்டுமல்ல, நீதி, சமத்துவம், சீர்திருத்தம் பற்றிய எழுச்சியின் தாகம் யோவான் 4-ம் அதிகாரத்திலே தாகத்துக்கு தண்ணீர் எடுக்க வந்த

பெண்ணிடம் தாகத்துக்கு தா? என்ற ஆண்டவர் இயேசு, அவளின் தணியாத துயரத்தை தீர்க்கிறார். அங்கீகாரம் கிடைக்காத அந்த சமுகத்தில் அப்பெண்மணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்படி செய்கிறார். காலி குடத்துடன் வந்தவள், நிறைந்த மனதோடு செல்கிறார்.

இயேசுவின் தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தை இச்சமூகத்தின் மேலும், ஒடுக்கப்பட்டவர்கள மேலும் தாகமாய் இருக்கிறேன் என்ற உணர்வை நமக்கு வெளிப்படுத்துகிறது. இக்குரல் சமூக நீதிக்கான குரல். அதோடு இவ்வார்த்தை நம்மை எழுச்சி படுத்துகின்ற ஒரு வார்த்தை. தாகமாயிருக்கிறேன் என்று பாதிக்கப்பட்டவர்கள் சொல்லும்போது, தாகத்தை தீர்க்க வேண்டிய அழைப்பு நமக்கும் கொடுக்கப்படுகிறது.

நம் ஆண்டவர் இயேசு தாகமாயிருக்கிறேன் என்று ஒரு குறிப்பிட்ட நபரிடம் கேட்கவில்லை. புளித்த திராட்சைரசம் அங்கு இருந்ததால் கேட்கவில்லை. அங்கு நிற்பவர்களில் யாரேனும் தண்ணீர் தருவார்கள் என கேட்டிருக்க வாய்ப்பில்லை. அவரை கொடுமைபடுத்துகிறவர்கள் தண்ணீர் தருவார்கள் என என்ன நிச்சயம் இருக்கிறது? எனினும் கேட்கிறார் என்றால் முழு மானுடத்தை குறித்த தன் தாகத்தை வெளிப்படுத்துவதை புரிந்துகொள்ளமுடியும். தாகமாயிருக்கிறேன என்ற இயேசுவின் குரல், ஓர் எழுச்சியை ஏற்படுத்துகிறதாக இருந்தது. இதுவரையிலும் மனதிலே ஈரமில்லாமல் காயப்படுத்தினவர்கள், அவமானப்படுத்தியவர்கள் கூட எழுச்சியின் வெளிப்பாடை கண்டு, சிலுவையில் தொங்கிய இயேசுவின் தாகத்தை தணிக்க முன் வருகின்றார்கள். இன்று நாமும் இயேசுவின் தாகத்தை தணிக்க முன்வரவேண்டும் "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்ற மகாகவி பாரதியாரின் புகழ்பெற்ற வரிகள், இன்னும் தாகம் தீர்க்கப்படாமல் தான் நம் சமூகம் இயங்கி கொண்டிருக்கின்றது என்பதனை நினைவூட்டிகொண்டே இருக்கின்றது. ஆகவே நீதி, சமத்துவம், நேர்மை, உண்மை நம் மண்ணில் மலர, நம் சமூகம் எழுச்சி பெற நாள்தோறும் செயல்படுவோம். (மத்தேயு 25: 42) தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; என்ற சமூக நீதிகான இயேசுவின் தாகத்தை புரிந்துகொண்டு, இச்சமூகத்தை தாகத்தோடு அணுகி தாகம் தணிப்போம்.

திரு. R. அஸ்வின் ஷாத்

முடிப்பு

யோவா. 19: 30

"எல்லாம் நிறைவேறிற்று" (யோவா. 19: 30).

சிலுவைநாதர் இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த ஆறாம் பொன்மொழி "முடிந்தது" சிலுவையிலிருந்து உதித்த முடிந்தது என்கிற வார்த்தை இயேசுவை நேசித்தவர்களுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும், அதேசமயம் இயேசுவைப் பகைத்தவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. இயேசுவை எதிர்த்தவர்கள் முடிந்தது என்ற இந்த வார்த்தையை தோல்வியின் வார்த்தையாக கொண்டாடினர் தங்கள் முயற்சியில் தாங்கள் வெற்றி பெற்றவர்களாகவே கருதினர். ஆனால் உண்மையில் முடிந்தது என்கிற வார்த்தை எதை வெளிப்படுத்துகிறது? இயேசுவின் பகைவர்கள் கருதியது போன்று இது தோல்வியின் வார்த்தை தானா? அல்லது இயேசு இந்த உலகத்தில் வந்த நோக்கம் நிறைவேறியதையும் பிதாவின் சித்தத்தை செவ்வனே நிறைவேற்றிய மகிழ்ச்சியோடும் "முடிந்தது" என்று சொன்னாரா?

"முடிந்தது" என்கிற இந்த வார்த்தையை கிரேக்க மொழியில் Tetelestai என்கிற வார்த்தையை கொண்டு அடையாளப்படுத்துகின்றனர். இது "It has been finished" என்கிற பொருளைத் தருகிறது. கிரேக்கர்கள் இந்த வார்த்தையை வெற்றியை குறிப்பதற்காக மட்டுமே பயன்படுத்துவர் அவர்களைப் பொறுத்தவரை இந்த வார்த்தை வெற்றியின் வார்த்தை இதனடிப்படையில் சிந்திக்கும் போது இந்த வார்த்தை தோல்வியின் வார்த்தை அல்ல இது வெற்றியின் வார்த்தை என்கிற புரிதலை தருகிறது. அப்படியானால் இயேசு எதையெல்லாம் "முடிந்தது" என்கிறார் என்பதனை திருமறை பின்னணியோடு சிந்திப்போம்.

1. பலி முடிந்தது:

யூத மரபில் பலி செலுத்துவது என்பது அவர்களின் உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட ஒன்று பொதுவாக பஸ்கா பண்டிகையின் போது உலகெங்கிலும் இருக்கும் யூதர்கள் எருசலேமில் ஒன்று கூடுவார்கள். இப்படி பஸ்காவை ஆசரிக்க வரும் யூதர்கள், வெறும் கையோடு வருவது இல்லை, அவர்களின் பாவத்திற்கு பரிகாரமாக ஆட்டுக் சுடாக்கள் காட்டு புறாக்கள் போன்ற ஏதாவது ஒரு உயிர் பலியை காணிக்கையாகக் கொண்டு வருவார்கள். இவர்கள் கொண்டு வரும் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டு ஆசாரியர்களால் பலி செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படும். இயேசுவின் காலத்தில் வாழ்ந்து வந்த ஏழைகளாலும் எளியோராலும் எருசலேம் தேவாலயத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை கொடுத்து பலி பொருட்கள் வாங்க முடியவில்லை. இதற்கு காரணம், அநியாயமான விலைக்கு இந்த பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. யூத மரபின்படி பஸ்கா ஆசரிக்கும் நபர் தன் பாவம் போக்கப் பலி செலுத்தவில்லை என்றால் அவருடைய

பாவம் மன்னிக்கப்படாது என்கிற நம்பிக்கை அன்று இருந்தது. இந்த நிலையில் எருசலேமின் வியாபாரிகளின் அதியாயமான செயல்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழைகளுக்கு மிகுந்த மன உளைச்சலையும் வேதனையையும் தந்தது. எனவேதான் மத்தேயு 21: 12 "இயேசு எருசலேம் தேவாலயத்திற்குள் நுழைந்து அங்கு வணிகம் செய்து கொண்டிருந்தவர்களை வெளியேற்றினார். அவர் வாங்குபவர்களையும் விற்பவர்களையும் வெளியேற்றி பணம் மாற்றுபவர்களின் மேசைகளையும், புறா வியாபாரிகளின் இருக்கைகளையும் கவிழ்த்தார்" என்று திருமுறை சொல்கிறது. இயேசுகிறிஸ்து சிலுவையிலே உலகின் பாவம் போக்கும் ஜீவ பலியாய் தம்மை ஒப்புக்கொடுத்ததன் வாயிலாக இனி இவர்கள் பலி செலுத்த தேவையில்லை. அவர்களுக்கு பாவம் போக்கும் நித்திய பலியாக இயேசு சிலுவையில் பலியானார். இதைக் குறிக்கும் அடையாளமாக இயேசு "முடிந்தது" என்கிறார். இதனை 1 யோவான் 2: 2 "நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே; நம் பாவங்களுக்கு மட்டும் அல்ல, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே" என்று குறிப்பிடுகிறது.

2. சாபம் முடிந்தது:

சிலுவையில் அறைதல் என்பது மனிதன் கண்டுபிடித்த பழிவாங்கும் முறைகளில் மிகக் கொடியதும், ஈவு இரக்கமற்றதுமாகும். சிலுவையில் அறைதல் முதன்முதலில் பாரசீகத்தில் பயன்படுத்தப்பட்ட மரண தண்டனை முறையாகும். அவர்கள் சிலுவை மரணத்தை ஏன் தெரிந்து கொண்டார்கள் என்கிற வரலாற்றுத் தகவல் ஒன்று உண்டு. அதாவது பாரசீகர்கள் பூமியை கடவுளாக கருதினர். எனவே குற்றவாளியின் பாதம் தாங்கள் கடவுளாகிய கருதிய பூமியின் மீது பட்டுவிடக்கூடாது என்பதாக குற்றவாளியை மரத்தில் தொங்கவிட்டு கொலை செய்தனர். பிற்காலத்தில் இது ரோமர்களால் பின்பற்றப்பட்டது. துரோகிகள் தப்பியோடிய கைதிகள் மற்றும் அடிமைகள் கொடிய குற்றவாளிகளாக கருதப்பட்டனர். அத்தகையோருக்கு மட்டுமே சிலுவையில் அறைந்து கொல்லப்படுவது தண்டனையாக கொடுக்கப்பட்டது. ரோம குடிமக்கள் யாருக்கும் சிலுவை தண்டனை வழங்கப்படுவது கிடையாது. இயேசுவின் காலத்தில் சிலுவையில் அறைதல் என்பது சாபத்தின் அடையாளமாக பார்க்கப்பட்டது இயேசு கிறிஸ்துவும் இத்தகைய சாபம் தன்னோடு முடிந்து விட்டது. இது முடிந்து போயிற்று இனி சிலுவையை சுமக்க யாருக்கும் தயக்கம் வேண்டாம். சிலுவை என்பது கடவுளோடு ஒன்றிப்பதற்கான வழி அல்லது பாலம் என்பதை இயேசு சிலுவையில் "முடிந்தது" என்னும் இந்த வார்த்தையைக் கொண்டு வெளிப்படுத்தினார். சாபமாக பார்க்கப்பட்ட சிலுவை, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு புனிதச் சின்னமாக கருதப்பட்டது. 1 கொரி 16: 22 ஆண்டவரிடம் அன்பு செலுத்தாத எவரும் சபிக்கப்படுக" என தூய பவுலார் சாபத்திற்கான புதிய அர்த்தத்தை தருகிறார். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் சாபத்திற்குரியவர்கள் அல்ல என்னும் உறுதியை இந்த வார்த்தை ஏற்படுத்துகிறது. சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவை வாழ்வில்

ஏற்றுக்கொண்டவர்கள் இவ்வுலக ஓட்டத்தை நிறைவு செய்தாலும் அவர்களுக்கு நித்திய வாழ்வு உண்டு, இயேசு சாபத்தின் சின்னமான சிலுவையை சுமந்ததால் மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்கும் கடவுளின் திட்டம் நிறைவேறியதை குறிக்கவே "முடிந்தது" என்கிறார்.

3. பாடுகள் முடிந்தன:

இயேசு கிறிஸ்துவின் சிலுவை சுமத்தல் என்பது அவர் இவ்வுலகப் பாடுகளை சுமப்பார் என்கிற இறைவாக்கிற்கு ஏற்றதாய் அமைந்திருக்கிறது. சராசரி மனிதர்களைப் போன்று இயேசுவும் சரீரத்தாலும் மனதாலும் காயங்களையும் பாடுகளையும் ஏற்றுக்கொண்டார். மனிதன் அனுபவிக்கிற ஒவ்வொரு வேதனைகளையும் பாடுகளையும் இயேசு சிலுவையில் அனுபவித்தார். மகிமை பொருந்திய சரீரத்திற்கு உரிமை கொண்டவர். மானுட சுபாவத்தையும் உணர்வுகளையும் கொண்டிருந்தார் என்பதற்கு அடையாளமாகவே உடலில் பல காயங்களையும் அடையாளங்களையும் ஏற்றுக் கொண்டார். இத்தகைய வேதனைகளை அனுபவித்தவர் முந்தின தினம் பிதாவினிடத்தில் ஜெபிக்கிற போது லூக்கா 22: 42 "பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல. உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணி, பிதாவின் கைகளில் தன் பாடுகளை ஒப்புக்கொடுத்தார். ஆனாலும் பிதாவின் சித்தம் இந்தப் பாடுகளை தான் அனுபவிக்க வேண்டும் என்று இருந்தபடியால் கல்வாரி வரை இயேசுவின் ஒரே குறிக்கோள் பிதாவின் சித்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதாகவே இருந்தது. அதை சரியாக நிறைவேற்றினேன் என்கிற நிறைவோடு பெருத்த தொனியாய் "முடிந்தது" என்கிறார். சிலுவையில் தொங்கின இயேசுவின் மீதான மனிதர்களின் பார்வை பல கோணங்களில் இருந்தது. பரிசேயர் பார்வையில் சமூக சமய தேச துரோகி ரோம வீரர்கள் பார்வையில் குற்றவாளி, தீவிரவாதி பயங்கரவாதி. பிலாத்துவின் பார்வையில் அநீதி குற்றம் சாட்டப்பட்ட குற்றமில்லாத மனிதன். இப்படி இயேசுவின் மீதான பார்வை ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு வண்ணத்தில் அமைந்திருந்தது பொதுவாகவே, இயேசுவின் வாழ்வு குறித்த தீர்க்கதரிசனங்கள் திருமறையில் நிரம்பி உள்ளன. இத்தகைய தீர்க்கதரிசனங்கள் நிறைவேற இயேசு கிறிஸ்து சாபத்தின் சின்னமான சிலுவையை சுமக்க வேண்டியதாய் இருந்தது. அதை சுமந்து தன்னைக் குறித்த முன் அறிவிப்புகளை செய்து நிறைவேற்றினேன் என்கிற வெற்றியின் வார்த்தையாய் 'முடிந்தது' என்கிறார் யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடும் போது யோவான் 4: 34. இயேசு அவர்களை நோக்கி "என்னை அனுப்பியவருடைய சித்தத்தைச் செய்து, அவருடைய வேலையை முடிப்பதே எனது உணவாகும்" என்பதன் மூலம் பாடுகளின் போஜனம் முடிந்தது' என்பதை புரிந்து கொள்ள முடிகிறது

திரு. A. ஜெனில் தாஸ்

பூரிப்பு

லூக். 23: 44-47

"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" (லூக். 23: 46).

கடவுள் வேண்டாம் கனிபோதும் என்று தொடங்கிய பாவம் இயேசு வேண்டாம் பரபாஸ் போதும் என்று தொடர்ந்து தெய்வம் வேண்டாம் உலகம் போதும் என்று இன்றும் தொடர் ஓட்டமாய் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த தொடர் ஓட்டத்தின் மாற்றத்திற்கான பயணமே ஓர் தனி மனிதனின் போராட்டம். இந்த பயணம் நீண்டதாகவும், நெடியதாகவும் இருந்தது. இந்த கல்வாரிப் பயணத்தின் இறுதி நிமிடம் கயவர்களின் ஓலம் ஓய்ந்து கொண்டிருக்கின்ற நேரம், சூரியனே தன் இமைகளை மூட, பூமி கருநிற ஆடையை தனக்குத் தரிக்க, இயேசு உரத்த குரலில் தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்று ஒரு இறைவேண்டலோடு தன் சிலுவைப் பயணத்தை நிறைவு செய்கிறார். இது யூதர்களின் பொதுவான மன்றாட்டு. யூத பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கும் முக்கியமான மன்றாட்டுகளில் ஒன்று. இது இரவு தூங்க செல்லும்போது செய்யும் இறைவேண்டல். பாடலாசிரியர் தாவீது இந்த இறைவேண்டலை ஏறெடுக்கிறார் (திபா. 31: 5). இயேசுவும் இந்த இறைவேண்டலை தன் சிலுவை பயணத்தின் நிறைவில் ஏறெடுக்கிறார். காலமும், நேரமும் வகையறுக்க முடியாத வலிகளையும், வருத்தங்களையும், வேதனைகளையும், அவமானங்களையும் இயேசு தன் உள்ளத்திலும், உடலிலும் சுமந்தாலும் சிலுவையின் இறுதி நிமிடத்திலும் தன் உயிரை தந்தையிடம் ஒப்படைக்கும் இறைவேண்டலை மறக்கவில்லை. இயேசுவின் இந்த இறைவேண்டல் நமக்கு உணத்தும் வாழ்வியல் பாடங்கள் மூன்று.

1. அறுபடாத உறவு: *(லூக். 23: 46)*

"தந்தையே . . ."

வார்த்தையால் வர்ணிக்க முடியாத வேதனையின் உச்சத்திலும், வலிகளின் நடுவிலும் இயேசு "தந்தையே" என அழைக்கிறார். இது இயேசு தந்தையிடம் கொண்டிருந்த அறுபடாத இறை உறவின் வெளிப்பாடு. இயேசு தான் தந்தையிடம் கொண்டிருந்த உறவு யாராலும், எந்த காலகட்டத்தாலும் பிரிக்க முடியாத ஒன்று என்பதை இது காட்டுகிறது. மனுக்குலத்தின் பாவங்களுக்காக சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது. தந்தையால் தற்காலிகமாக நிராகரிக்கப்பட்ட போதிலும், தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி மரண வேதனையை அனுபவித்து முடித்த பின்பு மீண்டும் உரிமையோடு தந்தையே என அழைக்கிறார். இது இயேசுவுக்கும் தந்தைக்கும் இடையேயான அறுபடாத இறை உறவை காட்டுகிறது. இந்த உறவை தூய யோவான் நற்செய்தியாளர் அழகாக

பதிவிடுகிறார். நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார் (யோ. 14: 11). "தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் . . . நாம் ஒன்றாய் இருப்பதுபோல் . . ." (யோ. 17: 21, 22). நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன் (யோ. 16:28). இது இறை உறவின் உச்சம். இந்த உறவு வலிகளையும், காயங்களையும் தாண்டியது. வானம் இருண்டது, பூமி நடுங்கியது, திரை இரண்டானது ஆனால் இயேசு தன் தந்தையோடு கொண்டிருந்த உறவு அறுபடவில்லை.

இன்று நம் உறவுகளில் எத்தனை விரிசல்கள், பிளவுகள், பெற்றோரும், பிள்ளைகளும், சகோதரர்களும் சகோதரிகளும் அந்நியப்பட்டுப் போகிறார்கள். பணமே இன்று உறவை நிர்ணயம் செய்கிறது. இந்த காலசூழலில் இயேசு தன் தந்தையோடு கொண்டிருந்த அறுபடாத உறவு நமக்கு முன் இருக்கும் சவால். எந்த சூழலிலும் வலிகளும், வேதனைகளும் உறவில் விரிசல் ஏற்படுத்தகூடாது என்பதை வாழ்க்கை பாடமாக்குகிறார்.

2. அழியாத நம்பிக்கை: *(லூக். 23: 46)*

"உம் கையில் . . ."

அழியாத நம்பிக்கை என்பது உலகத்தின் எல்லா சோதனைகளையும் தாண்டி, கடவுளின் கரங்களில் நம்மை உறுதியாக வைத்துக் கொள்வது. காலம், நிலை, சூழல் எவ்வளவு கடுமையானாலும் நம்மை உறுதியாக நிலைநிறுத்தும் ஓர் அழகான ஆன்மிக நிலை. இயேசுவின் வாழ்க்கை முழுவதும் தந்தையின் மீதான அழியாத நம்பிக்கையால் நிறைந்திருந்தது. ஒவ்வொரு அடியிலும் நம்பிக்கையின் அடையாளம் திகழ்ந்தது. அதை தன் இறுதி நேரத்திலும் வெளிப்படுத்துகிறார். ஆகவே தான் தன் தந்தையை நோக்கி "உம் கையில்" என்கிறார். உம் கையில் என இயேசு கூறுவது தன் தந்தையின்மேல் உள்ள அழியாத மற்றும் அசைக்கமுடியாத நம்பிக்கையினால்தான். கயவர்களால் இயேசு பிலாத்துவின் கையில் ஒப்புகொடுக்கப்பட்டிருந்தாலும் தன் உயிரை தந்தையின் கையில் ஒப்புகொடுக்கிறார். தந்தையின் கை பாதுகாப்பையும், நம்பிக்கையையும் அளிக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறார். உடல் உழுகிறவனின் நிலம் போல் இருந்தது. உடனிருந்தவர்களும் தூரத்தில் நின்றே வேடிக்கைப் பார்த்தனர். சுற்றிலும் அவமதிப்பும், வேதனையும் நிறைந்திருந்தது. ஆனாலும் அவர் உள்ளத்தில் அழியாத நம்பிக்கை தன் தந்தையின் மீது இருந்தது.

கடவுள் மீது அழியாத நம்பிக்கை வாழ்வு இருந்தால் மட்டுமே அமைதி வாழ்வு பெற முடியும். ஏனெனில், மனித கரம் பலவீனமானது, நம்பகத்தன்மையற்றது. ஆனால், கடவுளின் கரம் ஆற்றல் வாய்ந்தது மற்றும் பாதுகாப்பானது. ஆகவே வாழ்க்கை எவ்வளவு கடுமையாக இருந்தாலும், இறைவனின் கையில் நம்பிக்கையுடன் வாழ்வை ஒப்படைக்கும் போது அமைதியும் நிறைவும் பெறுகிறோம்.

3. ஆழமான அர்ப்பணம்: *(லூக். 23: 46)*

"என் உயிரை ஒப்படைக்கிறேன்"

மனிதனின் இயல்பான இறுதிநேரம் பயம் நிறைந்ததாக இருக்கும். ஆனால் இயேசுவின் இறுதி நேரம் தன் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய நிறைவு தான் இருந்தது. இது தியாகத்தின் வெளிப்பாடு மட்டுமல்ல தந்தையோடு உள்ள அறுபடாத உறவுக்கும், அழியாத நம்பிக்கைக்கும் முழுமையை கொடுப்பதாக இருந்தது. இயேசுவின் இந்த அர்ப்பணம் கட்டாயத்தினால் நிகழவில்லை. தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி தானாக தலையை சாய்த்து கையளிக்கிறார். ரோம ஆட்சியோ, அதிகார வர்க்கமோ, சதிகார கூட்டமோ இயேசுவின் உயிரை பறிக்கவில்லை. தந்தை தனக்கு கொடுத்த பொறுப்பை நிறைவேற்றி தன் உயிரை தானாக கையளிக்கிறார். என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றதேவ . . . (யோ. 6: 38). என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு (யோ. 4: 34). என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை நானாகவே அதை கொடுக்கிறேன் (யோ. 10: 18). அப்படியெனில் ஆழமான அர்ப்பணம் என்பது மனப்பூர்வமாக கையளித்தலை குறிக்கிறது. கடவுளிடம் ஒப்புவித்தலின் மூலம் மனிதன் கடவுள் கையில் பாதுகாப்பாக இருக்கமுடியும் என்பதை இயேசு கற்று தருகிறார்.

மனிதன் தன் சுயத்தை விடும் போது தான் அர்ப்பணத்தின் உண்மை நிலையை அடைகிறான். இந்த அர்ப்பணத்தின் உண்மை உணர்வை நாம் புரிந்து கொள்ள நம் மனம் நம் எண்ணங்கள் இறைவனின் கையில் முழுமையாக ஒப்படைக்கப்பட வேண்டும். மனிதன் எவ்வளவு வலியில் இருந்தாலும் வாழ்வின் சிறந்த நிலை தன்னை முழுமையாக கடவுளின் கரங்களில் ஒப்படைக்கும் அந்த ஒரே நிமிடம் தான்.

இயேசு செய்தி இறுதி இறைவேண்டல் மனித வாழ்க்கையின் முழு அர்த்தத்தையும் ஒரே சிந்தனையாக வெளிப்படுத்துகிறது. மனிதன் தன்னுடைய போராட்டத்திலும், வலிகளிலும், அவமானங்களிலும், மரணத்தையே எதிர்கொள்ளும் நேரம் வந்தாலும் கடவுள் மீது அறுபடாத இறை உறவும், அழியாத நம்பிக்கையும், அசைக்க முடியாத ஆழமான அர்ப்பண வாழ்வும் வேண்டும் என்பதே வாழ்க்கைப் பாடம். இயேசு இந்த இறைவேண்டலை தன் இறுதி நேரத்தில் மட்டும் செய்யவில்லை. அவரின் வாழ்வோடு ஒவ்வொரு நாளும் இணைந்திருந்தது. ஆகவே நம் வாழ்வின் கடைசி இறைவேண்டலாக மட்டுமல்ல ஒவ்வொரு நாளின் மூச்சாகவும் இந்த சொல் நம் இதயங்களில் ஒலிக்கட்டும். ஆமென்.

"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்."

திரு. R. ராஜகுமார்

விழாக்கால அருளுரைகள்

இறைவனில் நிலைத்து வாழும் திருச்சபை

இச. 16: 11-16 *திப. 11: 19-26*
திபா. 118: 14-29 *மத். 16: 13-20*

". . . நான் உனக்குக் கூறுகிறேன்: உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" (மத். 16: 18).

கிறிஸ்தவ இறையியலில் கடவுளின் திருச்சபை நித்தியமானது. அதாவது, என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதாகும். இயேசு கிறிஸ்துவை நம்பும் அனைவரையும் உள்ளடக்கிய அனைத்துலகப் பற்றுறுதியாளர்களின் கூட்டமைப்பே திருச்சபை. இது கிறிஸ்துவினால் நிறுவப்பட்டதும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, எப்போதும் கடவுளின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். திருச்சபைப் பணிகளில் நற்செய்தி அறிவித்தல் மனிதநேய உதவிகள், ஏழைகளுக்கு உதவுதல், திருத்தொழுகைகள் முக்கியமானவை.

திருச்சபை இயேசு கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தால் சம்பாதித்துக் கொண்டதாகும் (திப. 20: 28). இது திருச்சபை உருவாவதற்கு இயேசு கிறிஸ்து செய்த தியாகத்தைக் குறிக்கிறது.

நீங்கள் என்னை யார் என்று கூறுகிறீர்கள் என்று இயேசு கிறிஸ்து கேட்ட கேள்விக்குப் பதிலாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உரைத்தார் (மத். 16: 16). இந்தப் பற்றுறுதி அறிக்கையே கிறிஸ்து விரும்பிய சபையை நிறுவிட வழிகோலியது.

பழைய ஏற்பாட்டில் "ஹாகால்" என்ற எபிரேய சொல்லும், புதிய ஏற்பாட்டில் "எக்ளேசியா" என்ற கிரேக்கச் சொல்லும் சபையைக் குறிக்கின்றன. தூய பேதுரு திருச்சபையை "கிறிஸ்துவின் மந்தை" (1 பேது. 5: 2) என்றும், தூய பவுல் திருச்சபையை "கிறிஸ்துவின் உடல்" (எபே. 4: 1) என்றும் அழைக்கிறார்கள்.

திருச்சபை என்பது மக்கள் கூட்டத்தையும், ஆலயம் என்பது ஆண்டவர் வாசம் செய்யும் இடத்தினையும் குறிப்பதாகும். இறைவனில் நிலைத்து வாழும் திருச்சபை எப்படி உலகிற்குச் சான்று பகர வேண்டும் என்பதைக் கற்போம்.

1. பிரியமான திருச்சபை: *(இச. 16: 11)*

கடவுளாகிய ஆண்டவர் தம் பெயர் விளங்குமாறு தெரிந்தெடுக்கும் இடத்தில், நீயும், உன் புதல்வர், புதல்வியரும், உன் ஆண் ஊழியர்களும், பெண் ஊழியர்களும், உன் நகரில் உள்ள லேவியனும், அன்னியனும், அனாதைகளும், கைம்பெண்களும் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்

திருமுன் மகிழ்வீர்களாக. "திருச்சபை அதன் உறுப்பினர்களல்லாதவர்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம்" (Church is an institution that is existing for its non-members) என்கிறார் வில்லியம் டெம்பிள்.

கடவுள் பலிகளில் அல்ல, பிரியமான மனங்களை விரும்புகிறார். இ.ச. 16: 11-இல் ஏழையர் - செல்வர்; பணியாளர் - தலைவர் போன்ற வேறுபாடு கடவுள் முன் இல்லை. எனவே, இறைச் சமுகத்தில் இறைவரின் படைப்பின் மகுடமான அனைவரும் ஒன்றாக விழாவைக் கொண்டாட வேண்டுமென்பதே இறைவரின் கட்டளை. திருச்சபை ஒரு குறுகிய வட்டத்திற்குள் குறுகிய உறவுக்குள் என் குடும்பம், என் பிள்ளைகள் என்று நின்றுவிடாமல் அடுத்திருப்போரிடம் அன்பு காட்டி அடைக்கலம் கொடுத்து அனைவருமாய் திருச்சபை நாள் விழாவினை கொண்டாடிட முயல்வோம். இதுவே இறைவர் விரும்பும் பிரியமான திருச்சபை.

திருச்சபை அதின் உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்காய் வாழும் நிறுவனம். இறைவரிடம் அன்பு காட்டுவதுபோல அனைத்துப் படைப்புகளோடும் அன்பு காட்ட வேண்டும். தூய பேதுரு குறிப்பிடும்போது திருச்சபை அழிந்து கொண்டிருக்கும் உலகில் மீட்கப்பட்டவர்களை அரவணைத்துச் செல்லும் நோவாவின் பேழை போன்றது. திருச்சபையில் கற்றோர் - கல்லாதோர், செல்வந்தர் - ஏழை, ஆண் - பெண் எனப் பாகுபாடின்றி அனைவரும் ஒன்றாக வேண்டும் (கலா. 3: 28).

2. பிரதிபலிக்கும் திருச்சபை: (தி.ப. 11: 26)

அவரைக் கண்டு, அந்தியோக்கியாவுக்கு அழைத்து வந்து அவர்கள் ஓராண்டு முழுவதும் அந்தச் சபையாரோடு கூடவே இருந்து பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்.

திருச்சபை என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிக் கிடப்பதன்று. எல்லைகளைத் தாண்டிச் செயல்பட வேண்டும். ஆதித் திருச்சபையில் ஸ்தேவானின் இரத்தசாட்சியால் சிதறிய கிறிஸ்தவர்கள் நற்செய்தி, யூதர்களுக்கே என்று வரைமுறைப்படுத்தினர். இதனைக் கேள்விப்பட்ட எருசலேம் தலைமைச் சபை, பர்னபாவை அந்தியோக்கியாவுக்கு அனுப்பியது. பர்னபாவின் ஊழியம் இறைமக்களை இறைப்பற்றில் வளரத் தூண்டியது. பவுல் மற்றும் பர்னபா இருவரின் இணைந்த ஊழியம் கிறிஸ்தவர்கள் என்ற பெயரினை பெற்றுத் தந்தது.

திருச்சபை இறைப்பணி சுமுகமாய் நிறைவேற்றப்படும்போது இறைச்சமுகம் நம்மில் நிலைத்திருக்கும். ஆதித் திருச்சபையில் சாட்சி வாழ்வு இருந்தது. எனவே, ஒவ்வொரு கூடுகையிலும் ஆயிரக்கணக்கான பேர் மனம் மாறினர். கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இறைமக்கள் அல்லது சீடர்கள் தங்களுக்காகச் சூட்டிக்கொண்ட பெயரல்ல. கிறிஸ்தவர்கள்

அல்லாதோர் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்த மக்களுக்கு "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரைக் கொடுத்தனர்.

இங்கிலாந்து நாட்டவரான Dr. டேவிட் லிவிங்ஸ்டன் இருண்ட கண்டமாம் ஆப்பிரிக்கக் கண்டத்தை இறைஒளி பெற்ற கண்டமாக மாற்றிய பெருமைக்குரியவர். ஒருமுறை அவர் மரித்துப்போனார் என்ற செய்தி இலண்டனில் பரவியது. அச்செய்தியைக் கேட்ட இறைமறுப்புக் கொள்கையுடைய பத்திரிக்கை ஆசிரியர் H.M. ஸ்டான்லி, செய்தியை உறுதிசெய்து பத்திரிக்கையில் வெளியிட ஆப்பிரிக்கா விரைந்தார். டேவிட்டின் உடலை தேடி அலைந்தார். ஆச்சரியம்! டேவிட் உயிருடன் இருப்பதைப் பார்த்து, அவருடன் தங்கினார். "டேவிட் என்னிடம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசவில்லை. ஆனால், அவரது வாழ்க்கை என்னை கிறிஸ்தவனாகும்படி கட்டாயப்படுத்துகிறது" என்று தனது பத்திரிகையில் குறிப்பிட்டார். நம்மில் நிலைத்து வாழும் கிறிஸ்துவை வாழ்வின் வழியே பரதிபலிப்போம்.

3. பிரிக்க முடியாத திருச்சபை: *(மத். 16: 18)*

உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா.

மலைக் கோயில்கள் இந்தியாவின் கட்டிடக் கலைக்குச் சிறந்த பெருமை சேர்க்கின்றன. கன்னியாகுமரி மாவட்டம் சிதறால் மலைக்கோயில் தொன்மையான ஜைன சமயக் கோயில் ஆகும். இதன் சிற்பங்கள் தனி பாறையைச் செதுக்கி தூண்கள், சிற்பங்கள் என அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை பல நூறு ஆண்டுகளைத் தாண்டியும் அழியாத, உறுதியான கட்டிட அமைப்பாக உள்ளது.

பேதுரு மீது ஆண்டவர் இயேசு எழுப்ஞ் விரும்பிய சபை வெளியரங்கமாக அலங்காரமாக கட்டப்பட வேண்டிய ஒன்றன்று. எத்தனை இடர்களையும் தாங்கி, தாண்டி கிறிஸ்துவின் தன்மையோடு உறுதியாக நிற்க வேண்டியது. இன்றைய கிறிஸ்தவம் கிறிஸ்து இல்லாத திருச்சபையாக, கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமாக (Christless Christianity Christless Church) மாறி வருகிறது. கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமும், கனியற்ற திருச்சபையும் வீணான வாழ்வே. கிறிஸ்துவுடனும், திருச்சபையுடனும் இறைமக்கள் பிரிக்கமுடியாதவாறு பிணைப்பாய் இருக்க வேண்டும். நமது திருச்சபை வேறுபாடுகளைக் களைந்து கிறிஸ்துவின் திருச்சபையாக இறைவருக்குப் பிரியமான திருச்சபையாய், சமூகத்தில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் திருச்சபையாய், பிரிக்க முடியாத திருச்சபையாய் இறைவரில் நிலைத்து வாழ்வோம்.

திரு. T. லிபின் ஜாஸ்பர்

இறைவனுக்கு ஏற்ற காணிக்கை

லேவி. 23: 1-14 *2 கொரி. 9: 1-11*

திபா. 112 *மத். 5: 21-26*

அவர்கள் வாரி வழங்கினர்; ஏழைகளுக்கு ஈந்தனர்; அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்; அவர்களது வலிமை மாட்சியுடன் மேலோங்கும் (திபா. 112: 9).

பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரயேல் மக்கள் பல்வேறு நிலைகளில் கடவுளுக்கு பண்டிகை கொண்டாடினார்கள். சீலோவா, தாண் பெத்தேல் மற்றும் எருசலேம் போன்ற இடங்களுக்கு மக்கள் புனிதப் பயணம் சென்று கர்த்தரை வழிபட்டனர் (1சாமு 1:1; 1அர. 12: 26-33; 2 அர 10: 18-24; ஆமோஸ் 5: 4,5). யோசுவா மக்களை சீகேமுக்கு வரவழைத்து கர்த்தரோடு ஒரு புது உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு போதித்தார் (யோசு 24) சாலொமோன் அரசர் மக்களை எருசலேமுக்குக் கூடிவரச் செய்தார். அங்கு மக்கள் விழாக்களைக் கொண்டாடியதோடு தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே மிருகம், தானியம், முதற்கனி போன்றவற்றை காணிக்கைகளாய் செலுத்தினர் (1 அர. 8: 1-13, 62-65). இயேசு கிறிஸ்துவின் காலத்தில் எருசலேமுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்வது யூத மக்களுக்கு வழக்கமாயிருந்தது. ஓர் ஆண்டிற்கு மூன்று முறை யூத மக்கள் உலகமெங்கிலுமிருந்து எருசலேமுக்குச் சென்றனர். அங்கு பஸ்கா, அறுவடைப் பண்டிகை மற்றும் கூடாரப் பண்டிகைகளை ஆசரித்தனர். இப்படியாக பண்டிகை கொண்டாட சங்கமித்த மக்கள் ஏன் காணிக்கை செலுத்தினார்கள்? எதை நினைத்து செலுத்தினார்கள்? எந்த நிலையில் செலுத்தினார்கள்? என்பதையும் சங்கப் பண்டிகை எவற்றின் அடையாளங்களாய் அமைய பெற்றிருக்கின்றன என்பதையும் திருமறை வெளிச்சத்தில் சிந்திப்போம்.

1. சங்கம்: கொடுக்கப்பட்டதின் அடையாளம்

லேவி. 23-ஆம் அதிகாரத்தில் இஸ்ரயேல் மக்கள் முன்னொரு காலத்தில் நாடோடிகளாகவும், திக்கற்றவர்களாகவும். அடிமைகளாகவும் அலைந்து திரிந்ததையும் இறைவன் அவர்களை உடன்படிக்கைகளால் மீட்டெடுத்து நிலையான வாழ்வையும் வளமிக்க நிலத்தையும் கொடுத்திருக்கிறார் என்பதையும் நினைவுபடுத்தும் அடையாளமாக சபையாக கூடி பஸ்கா பண்டிகை மற்றும் புளிப்பில்லா அப்பப் பண்டிகை ஆகிய இவ்விரு இளவேனிற் காலப் பண்டிகைகளை ஆசரித்தார்கள். இங்கே அவர்கள் கடந்த காலத்தில் ஆண்டவர் தங்களுக்கு என்ன செய்தார் என்பதை நன்றியுடன் நினைவுகூர்ந்தும் நிகழ்கால வாழ்வில்

தேவையான கர்த்தரின் நல்லாசிகளை மனதிற் கொண்டும் பண்டிகை கொண்டாடினர். இதனை தான் லேவியர் 23:10-இல் . . . நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீங்கள் வந்து அறுவடை செய்யும் போது . . . என்றும், இணைச்சட்டம் 26:3-இல் எங்களுக்குக் கொடுப்பதாக எங்கள் முதாதையருக்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் வந்து சேர்ந்துள்ளேன்... என்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஏழு நாட்கள் கொண்டாடப்படும் புளிப்பில்லாத அப்பப் பண்டிகை மக்கள் எகிப்தைவிட்டு எவ்வளவு வேகமாக வெளியேறினார்கள் என்பதை நினைப்பூட்டியது. இது யூதரின் முதல் மாதமாகிய நிசான் மாதம் பதினான்காம் நாளில் கொண்டாடப்பட்டது. தற்கால அட்டவணைப்படி இது மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் வருகிறது

தற்கால உலகில் வாழ்ந்துவரும் நாம் தற்போது நம்முடைய பெயரில் இருக்கும் நிலம், வீடு, சொத்துக்கள் எல்லாம் முந்தைய காலங்களில் யாரோ ஒருவருக்கு சொந்தமானவை அவற்றை இன்று இறைவன் நமக்கு ஆசீர்வாதமாக தந்திருக்கிறார் என்பதை உணர்ந்து நன்றியுடனும் அர்ப்பணிப்புடனும் இறைப்பணிகளுக்கு ஆதரவு கொடுப்பது அவசியம். இஸ்ரயேல் மக்களை போல நாமும் நமது கடந்த காலத்தின் அடிமைத்தனத்திலிருந்து கடவுள் மீட்டெடுத்ததை நினைத்து இந்த பண்டிகையை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடுவோம்.

2. சங்கம்: கொடுப்பதற்கான அடையாளம்

2கொரிந்தியர் 9:7-இல் ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும், மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர் என்பதின் வாயிலாக பவுல் இங்கு நன்கொடையைப் பற்றிப் பேசுகிறார். இது அவர் அக்காயியாவிலுள்ள கிறிஸ்தவச் சபைகளுக்கு எழுதிய கடிதம். கொரிந்து நகரம் அக்காயியா மாநிலத்தின் தலைநகரம். பவுல் இங்கு இயற்கை விதி ஒன்றைக் கூறுகிறார். விதையைக் குறைவாக விதைக்கும் ஒரு விவசாயி நிறைவான அறுவடையை எதிர்பார்க்க முடியாது அதைப்போலவே நம் செயல்கள் எப்படியோ அதன்படியே பிரதிபலன் நம்மிடம் திரும்பி வருகின்றது. இதனை தான் Mary Anne Ralmacher, "As we work to create light for others, we naturally light our own way" என்கிறார். திரும்பி நமக்கு நிறையக் கிடைக்கும் என்று விரும்பிச் செயல்படுவது அழகல்ல; அது ஏமாற்றத்தையே சம்பாதிக்கும் உண்மையான கைம்மாறு நம்மிடமிருக்கும் பொருள்கள் நேரம் நமக்குள்ள அனைத்துமே உண்மை அன்பில் பிறரின் கைக்கு மாறுவதே. இதனால் நாம் அனுபவிக்கும் பிரதிபலனை தான் 2கொரிந்தியர் 97-இல் விதைப்பவருக்கு விதையையும் உண்பதற்கு உணவையும் வழங்குபவர். விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி

அவை முளைத்து வளரச் செய்து அறச்செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார் என்கிறார் பவுல். இயேசுவும் நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும் (மத். 7: 21) என்கிறார்.

இந்தச் சங்கத் திருநாளில் நம் முன்னோர் இயலாமையில் ஏழ்மையில் ஒன்றுமில்லாமையில் தங்களால் இயன்றதை தாராளமாய் இறைப்பணிக்கு கொடுத்ததின் பலனை தான் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நம் முன்னோர்களோடு இருந்த கடவுள் இன்று நம்மோடும் இருக்கிறார். நம்மை தொடர்ந்து நமக்கு பின்வரும் சந்ததியோடும் இருப்பார் என்கிற நிச்சயத்தோடு நாம் கொடுக்க வேண்டிய காணிக்கையே சங்க காணிக்கை.

3. சங்கம்: கொடை மனத்தின் அடையாளம்

கொடை மனம் என்பது இல்லாதவர்களுக்கு உதவும் மனப்பான்மையைக் குறிப்பது மட்டுமின்றி பிறரின் குறைகளைக் கவனிக்காமல், பெரிய மனத்துடன் மன்னிக்கும் உயரிய குணமாகும் இதனைத் தான் இயேசு மத்தேயு 5: 23.24 நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்புவந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் என்பதின் வாயிலாக அன்பும் சமாதானமும் இல்லாமல் இறைவனுக்கு நாம் கொடுக்கும் காணிக்கை ஏற்கப்படாது என்பது தெளிவுப்பெறுகிறது. நம் செயல்கள் அன்பையும் தாராள குணத்தையும் தாங்கிச் செல்பவையாயிருந்தால் உலகை அவை அழகுபடுத்தும்.

பழைய ஏற்பாடு பலவகை சட்டநெறிகளை தருகிறது. ஆனால் இயேசு மத்தேயு 5-ஆம் அதிகாரத்தில் அதனைக் கண்டிக்கிறார். சட்டத்திற்கு மனித நேயம் என்ற குறிக்கோள் தேவை என்று வலியுறுத்துகிறார். சட்டம் மனிதருக்காக மனிதர் சட்டத்திற்காக அல்ல என்ற ஓர் அடிப்படை விதிமுறையை இயேசு அளிக்கிறார். அன்பு, நீதி, இரக்கம் போன்ற மனித நேயக் குணங்களைக் கொண்டிருந்தால்தான் சட்டம் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்ற புதிய பாணியில் சிந்திக்க இயேசு அழைக்கிறார். கொலை செய்வது மட்டும் குற்றமன்று, மனித உறவுகளை முறித்துப் பகைமையை உருவாக்கும் வன்சொற்கள்கூட குற்றங்களே இதனை தான் Albert Einstein says, Laws alone cannot secure freedom of expression... there must be spirit of tolerance in the entire population" என்கிறார், வாழ்க்கையில் நல்ல மனித உறவுகளை

ஏற்படுத்திக் கொண்ட பிறகுதான் கடவுளுடன் நாம் சரியான உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்

இவ்வருட சங்க திருநாளில் நாமும் பிறர் வாழ நம்மால் முடிந்ததை கொடுக்க வேண்டும் "கொடை" என்றவுடன் பணம், காசு, பொருள் என்று மட்டுமே நாம் எண்ணிவிடக் கூடாது. உடல் உழைப்பு, ஆக்கப்பூர்வமான வார்த்தைகள், ஆபத்து கால உதவிகள், தகுந்த ஆலோசனைகள். தனிமைச் சிறையில் வாடுவோர் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்பது. மருத்துவமனை போன்ற தேவையான இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், சண்டைகள், பிரச்சினைகள் தீர உதவுதல், மன்னிப்பு போன்ற எதையும் நாம் பிறருக்குக் கொடுக்கலாம். சாதி மதம். இனம் மொழி போன்ற வேறுபாடுகள் கடந்து, பிரதிபலன் எதையும் எதிர்பாராமல், தொடர்ந்து உதவிகளைச் செய்து கொண்டேயிருப்போம் தன்னையே சிலுவையில் கொடுத்த இயேசு கிறிஸ்துவின் தியாக வாழ்வை நினைவில் கொண்டு பிறர் வாழ நம்மையே அர்ப்பணிப்போம்.

திரு. A. ஜெனில் தாஸ்

தாராளமனத்துடன் அறுவடைசெய்வோம்

Harvesting with a Generous Heart

இச. 26: 1-19 *2 கொரி. 9: 6-11*

திபா. 126 *லூக். 12: 13-21*

நீர் உமது தூய உறைவிடமாகிய விண்ணிலிருந்து கண்ணோக்கி, நீர் எங்கள் மூதாதையருக்கு ஆணையிட்டுக் கூறியபடி உம் மக்களாகிய எங்களுக்கும் எங்களுக்குக் கொடுத்துள்ள பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டுக்கும் ஆசி வழங்குவீராக (இச. 26: 15).

திருமறை கூறும் முக்கிய பண்டிகைகளில் அறுவடைப் பண்டிகையும் ஒன்று. அதன் மறு வடிவமே நாம் ஆசரிக்கும் சங்கப் பண்டிகை அல்லது ஈகையின் பண்டிகை. திருமறையின் அறுவடைப் பண்டிகை நமக்கு தரும் செய்தி உழைப்பதும் உழைப்பின் பயனை ஆண்டவருக்கு படைத்து நன்றி சொல்வதும் அதன் பிரதானம். அதோடு நின்று விடுவதில்லை சமூகத்தில் வாழ வழி தெரியாமல் நிற்கும் மனிதர்களுக்கு வாழ வழிகொடுப்பதும் அதாவது நாம் உழைத்த உழைப்பின் ஒரு பகுதியை கொடுத்து உதவுவதும் ஆகும். அன்னை தெரச அம்மையார் ஈகையைப் பற்றி கூறும் போது, நாம் எவ்வளவு கொடுக்கின்றோம் என்பதல்ல முக்கியம் எவ்வளவு அன்புடன் கொடுக்கின்றோம் என்பதே முக்கியம். (It's not how much we give, but how much love we put into giving). *நாம் உழைப்பது நமது வாழ்வுக்காக என்ற குறுகிய மனம் நம்மில் இன்று சிலரின் எண்ணமாக மாறி போனது. திருமறையின் வெளிச்சத்தில் அதை நாம் எவ்வாறு நன்னைக் கேதுவாக மாற்றமுடியும் என்றும், திருமறை நமக்கு தந்துள்ள மாதிரிகள் என்ன என்றும் சிந்திப்போம்.*

1. ஆண்டவரின் கட்டளை *(இச. 26: 1-11)*

இச. 26: 2 அந்த நாட்டின் நிலத்துமுதற்பலன் அனைத்தையும் எடுத்துக் கூடையில் வைத்து, உன் கடவுளாகிய ஆண்டவர் தம் பெயர் விளங்குமாறுதே ஏந்துகொள்ளும் இடத்திற்குக் கொண்டுபோ. (26: 3) அன்றைய நாளில் அங்குப் பணியில் இருக்கும் குருவிடம் சென்று அவரை நோக்கி, "எங்களுக்குக் கொடுப்பதாக எங்கள் மூதாதையருக்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் வந்து சேர்ந்துள்ளேன் என எம் கடவுளாகிய ஆண்டவர் முன் இன்று அறிக்கையிடுகிறேன்" என்று சொல்.

திருமறையின் முற்பிதாக்கள் வாழ்ந்தகாலம் நாடோடிகள் வாழ்வாகும். அதில் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்து தாம் காண்பிக்கும்

நாட்டிற்கு போக பணித்தார். நாடோடி வாழ்வு மாற்றப்பட்டு வாக்குத்தத்த நாடும் கொடுக்கப்பட்டது. எகிப்திய அடிமை வாழ்வும் மாறியது. வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு செல்லும் பயணத்தில் ஆண்டவர் பேசிய வாக்கு இது. அதன்படி விடுதலப்பெற்ற உணர்வுடன் தங்கி வாழும் நாட்டில் நிலத்தின் கனி ஆண்டவருக்கு காணிக்கையாக அன்றைய குருவிடம் ஒப்படைத்து சாட்சியாய் கூறும்படி ஆண்டவர் கூறிய செய்தியாகும்.

இன்று நாம் வாழும் நிலையை இதனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது நம் ஆண்டவர் நமக்கு கொடுத்த மீட்பு, அருட்பணியாளர்களின் தியாக வாழ்வும், நாம் பெற்ற விடுதலை நம் சொந்த மண்ணில் அன்றைய வாழ்வுடன் ஒப்பிட்டு பார்ப்போமானால் எத்தனை மடங்கு முன்னேற்றம் இந்தனையாய் வாழ்வு கொடுத்த ஆண்டவரை சந்தித்து அவர் சந்நிதியில் நம்மை அர்ப்பணிக்கும் அடையாளமே நாம் இன்று கொண்டு வந்த காணிக்கை. நாம் மனபூர்வமாய் கொண்டு வந்த நிலத்தின் பலனையும் மிருக ஜீவன்களையும் கரங்களின் காணிக்கைகளையும் ஆண்வருக்காய் படைப்போம் இது ஆண்டவர் இஸ்ரவேலருக்கு தந்த மாறாத கட்டளை நாமும் இன்று கீழ்படிவது சிறப்பு இறையாசியையும் பெற்றுதரும்.

2. கிறிஸ்து இயேசுவின் போதனை *(லூக். 12: 13-21)*

லூக்கா பிரிவு *12* திருமொழி *13-21* இல் கிறிஸ்துவின் இப்போதனை கலிலேயா அல்லது எருசலேம் நோக்கிய பயணத்தின் போது ஆண்டவர் இயேசு கூறிய போதனையாய் இருக்கக்கூடும் என்பது இறையியலாளர்களின் கருத்து. இங்கு தங்கள் சகோதரர்களிடையே உரிமை பகிர்வின் போது சுமுகமான தீர்வு எடுக்க முடியாத ஓர் சகோதரன் ஆண்டவர் இயேசுவிம் உதவி கேட்கின்றார். ஆண்டவர் அதை நேரடியாகவே மறுக்கின்றார் .

லூக். *12: 13*-இல் கூட்டத்திலிருந்து ஒருவர் இயேசுவிடம், "போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்" என்றார். *12: 14* அவர் அந்த ஆளை நோக்கி, "என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?" என்று கேட்டார். ஆனால் இங்கு தமக்கு கிடைத்த தருணத்தை நம் ஆண்டவர் மிகவும் பெரிய உண்மையை உணர்த்த பயன்படுத்துகின்றார்.

லூக். *12:16*-இல் திருமொழியில் அவர் அவர்களுக்கு ஓர் உவமையை சொன்னார்; என்று திருமறை கூறுகின்றது. அவர்கள் என்பதால் ஆண்டவர் செய்தி பலருக்கு தேவை என்பதை உணர்ந்து அன்றைய சமூகத்தின் அவலநிலையை எடுத்து கூறுகின்றார்.

உவமையில் வரும் மனிதன் முன்பே செல்வம் படைத்த மனிதன், அவனுக்கு உணவுக்கு குறைவு என்பது இல்லை. அந்த குறிப்பிட்ட ஆண்டு அவன் நிலம் நன்றாய் விளைந்தது. இன்றைய உணவுக்காய் என்ன செய்வேன் என்று வாழும் சமூகத்தின் நடுவில் இன்னும் பல ஆண்டுகள் கவலையின்றி வாழ துடிக்கும் மனிதன். அவனுக்கு களஞ்சியம் உண்டு அதில் நிரம்ப தானியம் உண்டு புதிய அறுவடையில் அவனிடம் தானியம் வைக்க இடம் இல்லை எனவேஅவன் கவலைக் கொள்கின்றான் தானியம் பதுக்க இடமில்லை என்பதுவே அவரின் கவலைக்கு காரணம். நம் ஆண்டவரின் மதிப்பீடு அவனைப் பற்றி இப்படி தான் அமைந்தது அறிவிலியே, மதிகேடனே அவனிடம் தானியம் நிறம்ப இருக்கும் அளவு அவனிடம் அறிவு இல்லை என்கிறர் நம் ஆண்டவர்.

லூக். *12: 21* இத்திருமொழியின்படி நாம் ஆண்டவர் முன் சேர்த்தசெல்வம் எவ்வளவு? உண்மையில் வாழ வழித் தெரியாமல் திகைக்கும் மனிதர் வாழ வழிசெய்வது என்றால் அதுவே ஆண்டவர் முன் நாம் சேர்க்கும் செல்வம். இந்த பண்டிகை நாளில் ஆண்டவர் முன் நம்மை அர்பணிப்பது எவ்வளவு அழகு. நாளைய நமது சேமிப்பில் நம் அண்டவர் கூறிய வாக்கு நம் நினைவில் வந்தால் அது பிறரை வாழவைக்க உதவும்.சீர்திருத்த சபையின் தந்தை என போற்றப்படும் மார்ட்டின் லூதர் (Martin Luther) இப்படி கூறுவார். கடவுளுக்கு உங்கள் நல்ல செயல்கள் தேவையில்லை. ஆனால் உங்கள் அயலானுக்கு அது தேவைப்படுகின்றது. 'God does not need your good works, but your neighbor does'. சார்ல்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon) கூறும் போது, உலகம் கேட்கின்றது ஒருவரிடம் என்ன இருக்கிறது? கிறிஸ்து கேட்கிறார் அதை அவர் எவ்வாறு பயன்படுத்துகிறார்? ("The world asks, 'What does a man own?' Christ asks, 'How does he use it?' கடவுளிடம் நாம் பெற்ற செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்த விரும்புகின்றோம்.

3. பகிர்வதில் திருமறை தரும் மாதிரி

ஆண்டவர் தந்த ஆசிகளால் நாம் சிறப்பாய் வாழ்கின்றோம் அவர் தந்த ஆசீர்வாதத்தை நாம் எப்படி பயன்படுத்தவேண்டும் என்னும் அதை எவ்வாறு பிறருக்கு பகிரவேண்டும் பகிர்வால் ஏற்படும் நன்மை எவை என்பதையும் திருமறை தெளிவாகக் கூறுகிறது.

* ஆசாரியனின் பங்கு இச. *18: 1-5* தகனபலியில் பங்கும் மற்றும் முதற்பலனும் இவை தேவாலயத்தில் இறைப்பணி தடையின்றி செய்யப்படவும் அங்குள்ள ஆசாரியன் பராமரிக்கப்படவும்.

இச. *18: 4* உன் தானியம், திராட்ச ரசம், எண்ணெய், ஆட்டு ரோமம் என்னும் இவைகளின் முதற்பலனையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

* பெற்ற விடுதலைக்காக தசமபாகம் ஆண்டவரின் சந்நிதியில் பகிர்வு.

** வாழ வழி தெரியாதோர் வாழ்வுபெற என திருமறை கற்பிக்கிறது.*

** இச. 26: 12-15*

திருமறை கூறும் அளவில் கொடுத்துபின் ஆண்டவரைப் பார்த்து நாம் கேட்பது எவ்வளவு உண்மையான இறைவேண்டல் மட்டுமல்ல அது பதில் தரும் மன்றாட்டு. இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பது எவ்வளவு உண்மை.

இரத்தன் டாடா (Ratan Tata) இந்தியாவின் பெயரை உலக நாடுகள் சொல்ல காரணமானவர். நவம்பர் **26-29 2008** ஆம் ஆண்டு மும்பை தாஜ் ஹோட்டல் தீவிரவாதத் தாக்குதலில் **30** பேர் மரணமடைந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயப்பட்டனர். தனது விடுதியில் நடந்த தாக்குதல் என்பதால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிச்சென்று ஆறுதல் சொல்லி நிதி உதவியும் செய்தார். Covid-19 போது **1,500** கோடி பணத்தைக்கொண்டு மருத்துவமனைக்கும் மற்றும் புலம் பெயரும் தொழிலாளிகளுக்கும் உதவி செய்தார் எந்தவிதமான விளம்பரமோ அல்லது அரசியல் இலாபத்தையோ எண்ணாமல் தன் கண்முன் கடினப்படும் மனிதர் வாழ உதவினார்.

ஆண்டவரின் உதவியுடன் நல்ல அறுவடை செய்யவெண்டும் என்பது நமது ஆசை. தாராளமாய் கொடுத்து ஆண்டவர் முன் நம் நற்சாட்சியைக் காத்து கொள்ளத் திட்டம் செய்வோம் இறையாசி நம்மில் தங்கட்டும்.

அருள்திரு. Y. ஆமோஸ் ஆல்பர்ட்

அறுவடைத் திருவிழா

விப. 23: 14-17 *2 கொரி. 9: 6-15*
திபா. 126 *யோவா. 6: 26-35*

வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும்போது அறுவடை விழா... எடுக்க வேண்டும். (விப. 23: 16).

அறுவடைக் காலம் என்பது அனைவருக்கும் ஆனந்தம் அளிக்கக்கூடிய ஒரு அருமையான காலம். அநேக நாட்களாக பாடுபட்டு நிலத்தை பண்படுத்தி, விதை விதைத்து உரம் போட்டு, நீர் பாய்ச்சி களையெடுத்து பயிர் வளர்க்கும் ஒரு விவசாயி அமோக விளைச்சலை எதிர்நோக்கி காத்திருக்கும் காலம்தான் அறுவடைக் காலம். அறுவடைக் காலத்தை அனைத்து நாடுகளிலும் கோலாகலமாக கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு விதமாக அறுவடை விழா நடத்தப்படுகிறது. இஸ்ரவேலரின் முக்கியமான இரண்டாவது பண்டிகை அறுவடை பண்டிகையாகும். நிலத்தில் விளையும் முதற்பலன்களை நன்றியுணர்வுடன் கடவுளுக்கு படைப்பதே அறுவடைத் திருவிழாவாகும். பார்லி, கோதுமை இன்னும் பல விளைபொருட்களின் அறுவடைக் காலம் ஏழு வாரங்கள் அனுசரிக்கப்படுகிறது. அறுவடைத் திருவிழாவில் ஆண்டவர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியை குவியல், குவியலாக ஆண்டவரின் ஆலயத்திற்கு காணிக்கையாக கொண்டு வந்த விதமாக அனுசரித்தனர். அறுவடையைப் பற்றி புத்தர் குறிப்பிடும்போது நம்பிக்கைதான் என் விதை. சிந்தனைதான் எனக்கு வேண்டிய மழை. அறிவுதான் என் கலப்பை, மனம்தான் நுகம், உழைப்புதான் அதில் பூட்டப்பட்ட எருதுகள், இறைவனை சேர இதன்வழி அறுவடை செய்வேன் என்கிறார். இந்த நாளில் அறுவடை உணர்த்தும் உண்மைகளை இரண்டு சிறு தலைப்பின் வழியாக சிந்திப்போம்.

1. மறக்கப்படாத திருவிழா:

நீ வயலில் விதை, விதைத்து உன் உழைப்பின் முதற்பலனை கட்டும்போது அறுவடைத் திருவிழாவையும் ஆண்டு தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பலனை சேர்க்கையில் சேர்ப்பின் விழாவையும் எடுக்க வேண்டும் என்றார். அதன்படி ஆண்டவர் தங்களுக்கு கொடுத்த விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு திருவிழா கொண்டாடப்பட்டது. உலகிற்கு உணவளிக்கும், தானியங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள், பழவகைகள், பலன் தர ஆதாரமாக விளங்குகின்ற நிலம், மழை, சூரிய வெளிச்சம், காற்று ஆகியன கடவுளின் அருள்கொடைகள். இதனை மையமாக அவர்கள் வாழ்வோடு இணைத்து இவ்விழாவை ஆசரித்தனர். கடவுள் மழைக்கும், செழுமைக்கும் மட்டுமல்ல காரணர். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு சுதந்தர கானானை அருளினதை அறுப்பின் திருவிழாவிற்கு ஆதாரமாக கொண்டிருந்தனர். அதனை எண்ணிப்பார்த்து இஸ்ரவேலர்

முதற்பலனை கடவுளுக்கு காணிக்கையாக செலுத்தினர். அங்கிருந்து முதற்பலனாகிய காணிக்கையை தேவையுள்ளவர்களுக்கு கடவுளின் வார்த்தையின்படி பகிர்ந்தளித்தனர். இயேசுவும் காணிக்கையாக தன்னை மனுக்குலத்திற்கு பலியாக கொடுத்தார். தாம் சொன்னபடி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து முதற்பலனானார். எனவே, இஸ்ரவேலர் மறக்கக்கூடாத திருவிழாவாக ஆசரித்ததுபோல நாமும் ஆசரிப்போம்.

2. மறக்கப்பட்டுவரும் திருவிழா:

அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டே போகிறான். ஆனாலும், தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடு திரும்பி வருவான் என சங்கீதம் *126: 6*-இல் படிக்கிறோம். இஸ்ரவேல் *1500* வருடங்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். இதனை யூத சமய போதகர்கள், யூதர்கள் மிக மிக கவனத்தோடும் எச்சரிப்போடும் நிறைவேற்றினர். யூதர்கள் சிதறுண்டபோது, சிதறிச் சென்ற இடங்களில் அறுவடை விழாவை அழுகையோடும், எச்சரிப்போடும் ஆசரித்தனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிற்பாடு யூதர்கள் *49* நாட்கள் கொண்டாடும் விழாவை ஓர் நினைவு நாளாக ஆசரித்தனர். ஆனாலும், அவர்கள் இருந்த இடத்தில் எல்லாம் அதனை போதித்து வளர்ந்தனர். எனவே, பிற்காலத்தில் மறக்கப்பட்ட விழா கிறிஸ்தவ சமயத்தின் விழாவாக மாறினபோது புத்துயிர் பெற்றது. யூதர்கள், யூதர்கள் அல்லாதோர் இணைந்து ஒரே திருச்சபையாக கொண்டாடி மகிழ்ந்தனர். திருச்சபையின் பண்டகசாலை நிரம்பி வழிந்தது. ஏழை, எளிய மக்கள் முதற்பலனாகிய புத்தரிசியை உணவாக உண்டு மகிழ்ந்தனர். காலங்கள் செல்லச் செல்ல இவ்விழா நலிவடைந்து வருகின்றன. இந்தியாவில்கூட நெல், உளுந்து, பயிர் வகைகளின் அறுவடை திரளாக நடைபெற்றது. குறைந்தபட்சம் அறுவடைக் காலம் *30* நாட்கள் வரை நீடித்தன. *50,000* முதல் *3,00,000* வகையான நெல் விளைச்சல் செய்யப்பட்டன. இவற்றில் பெரும்பான்மையானவைகள் இப்போது அழிந்துள்ளன. விவசாய பணிகள் அனைத்தும் இயந்திரங்கள் செய்வதினால் நிலத்தை உழுதல், நாற்று நடுதல், களை பறித்தல், அறுவடை செய்தல் போன்ற வேலைவாய்ப்புக்களை இழந்து நிற்கின்றனர். அறுவடை செய்யப்படுகின்ற தானியங்கள் அனைத்தும் விளை நிலங்களிலிருந்து நேரடியாக தானிய குடோன்களுக்கும், அரவை ஆலைகளுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் கடவுளுக்கு செலுத்தும் முதற் பலன் அறுவடை காணிக்கைகள் முற்றிலும் நின்றுபோயின. இதன் விளைவாக கடவுள் ஆசி விலகுகிறது. கால மழை மாறுகிறது. நிலத்தின் தன்மை குறைகின்றது. அழிவுகளே பெருகி வருகின்றபடியினால் மறக்கப்பட்டு வரும் திருவிழாவாக மாறி வருகிறது. இதனை அறுவடைத் திருவிழா தினத்தில் எண்ணுவோம். மாற்றம் காண முனைவோம். கடவுள் ஆசி பெறுவோம்.

சுவி. T.S. ஏசையன்

இறைவார்த்தையை விதையுங்கள்

கலா. 6: 1-10

. . . ஆவிக்குரிய வாழ்வாகிய நிலத்தில் விதைப்போர் அந்த ஆவி அருளும் நிலைவாழ்வை அறுவடை செய்வர் (கலா. 6: 8).

ஒரு மிகப்பெரிய கிறிஸ்தவ வர்த்தக நிறுவனத்தின் தலைவர், தன்னிடைய வயது முதிர்ச்சியின் காரணமாக, தான் வகித்து வந்த C.E.O. *பதவியில் இருந்து ஓய்வுபெற விரும்பினார். தனக்குப் பிறகு தன்னுடைய நிறுவனத்தை வழி நடத்துவதற்கு அவர் தன்னுடைய நிறுவனத்தின் இயக்குனர்களையோ, தன்னுடைய மகன்களில் ஒருவரையோ* C.E.O.-*வாக நியமிக்க விரும்பவில்லை. மாறாக, ஒருநாள் அவர் தன்னுடைய நிறுவனத்தில் பணி செய்யும் எல்லா இளம் நிர்வாகிகளையும் அழைத்தார், நான் நிர்வாகப் பொறுப்பில் இருந்து ஓய்வுபெறும் காலம் வந்துவிட்டது. நான் உங்களில் ஒருவரைத் தலைமை நிர்வாக அலுவலராக* (C.E.O.) *தெரிந்தெடுக்கப் போகிறேன். நான் இப்போது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதையைத்* (seed) *தரப் போகிறேன். நீங்கள் அந்த விதையை வீட்டிற்கு கொண்டு போய் ஊன்றி, வளர்த்து, இன்றிலிருந்து சரியாக ஒரு ஆண்டு முடிந்தது. நீங்கள் வளர்த்த செடியை என்னிடம் கொண்டு வரவேணடும். நீங்கள் வளர்த்திருக்கும் செடியின் அடிப்படையில் உங்களில் யார் தலைமை நிர்வாக அதிகாரி என்பதைத் தீர்மானம் செய்வேன் என்று கூறினார். ஒவ்வொருவருக்கும் ஒரு விதையைக் கொடுத்தார். அப்படி வாங்கியவர்களில் ஜின் என்றொரு இளம் நிர்வாகியும் இருந்தார்.*

ஜிம் அந்த விதையுடன் வீட்டிற்குச் சென்றார். தன் மனைவியிடம் நடந்ததை எல்லாம் சொன்னார். பெரிய தொட்டியை வாங்கினார்கள். மண்ணையும், நல்ல உரத்தையும் கலந்து தொட்டியில் வைத்து, விதையை ஊன்றி தண்ணீர் ஊற்றினார்கள். ஒவ்வொரு நாளும் அதை பராமரித்தார்கள். முளை விட்டிருகிறதா? என்று உற்று நோக்குவார்கள் மூன்று வாரம் கழித்து, அலுவலகத்தில் மற்றவர்கள் தாங்கள் ஊன்றின விதை முளை விட்டிருப்பதகாவும், செழிப்பாக வளர்வதாகவும் பேசிக் கொண்டார்கள். ஆனால் ஜிம் வீட்டில் எந்த மாற்றமும் இல்லை. வாரங்களும், மாதங்களும் வேகமாக ஓடின. கடைசியாக ஓர் ஆண்டு நிறைவு பெறும் நாளும் வந்தது. எல்லா நிர்வாகிகளும் தாங்கள் வளர்த்த செடியை தொட்டியுடன் நிறுவனத் தலைவரின் பார்வைக்கு கொண்டு வந்தார்கள். ஜிம் தன் மனைவியிடம் மிகவும் சோர்வுடன் நான் ஒரு காலித் தொட்டியை கொண்டுப் போக விரும்பவில்லை. எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று சொன்னார். ஆனால் அவருடைய மனைவியோ, நடந்ததைக் குறித்து, நேர்மையோடும், உண்மையோடும்

நடந்து கொள்ளுங்கள் (Be Honest) வெறும் தொட்டியைக் கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்.

ஜிம் வெறும் தொட்டியோடு நிர்வாக அரங்கிற்குள் நுழைந்தார். எல்லாரும் இவரைப் பார்த்துச் சிரித்தார்கள். ஜிம் துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் தவித்தார். தலைவர் அரங்கிற்குள் நுழைந்தார். எல்லாரும் கொண்டு வந்திருந்த கண்கவர் பூக்கள் அடங்கிய செடிகளைப் பாராட்டினார். இன்று உங்களில் ஒருவர் தான் C.E.O.-வாக நியமிக்கப்பட போகிறார் என்று சொல்லிவிட்டு, காலித் தொட்டியுடன் எல்லாருக்கும் பின்பாக தன்னை மறைத்துக் கொண்டிருந்த ஜிம்மை பார்த்தார். அவரை முன்பாக அழைத்தார். ஜிம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட விதை என்னவாயிற்று? என்று கேட்டார். உடனே ஜிம் நடந்தவற்றைச் சொன்னார். உடனே தலைவர், ஜிம்மை தவிர மற்ற எல்லாரையும் உட்காரச் சொன்னார். ஜிம்மை நோக்கிப் பார்த்தவாறு, இதோ நம்முடைய நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியை நான் அறிவிக்கிறேன். அவர் பெயர் ஜிம் என்று அறிவித்தார். ஜிம்மால் அதை நம்பவே முடியவில்லை. மற்றவர்கள் எல்லாம் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். ஏனென்றால், ஜிம்காலி தொட்டியோடு நின்று கொண்டிருந்தார்.

இதைப் புரிந்துக்கொண்ட தலைவர் பேச ஆரம்பித்தார். சரியாக ஓர் ஆண்டுக்கு முன்பாக நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதையைக் கொடுத்தேன். அதை விதைத்து, உரமும், தண்ணீரும் விட்டுப் பராமரித்து இந்த நாளில் என்னிடம் கொண்டு வரச் சொன்னேன். ஆனால் அன்று நான் உங்களிடம் கொடுத்த விதை, கொதிநீரில் அவித்த விதை (boiled seed). அதாவது, அவைகள் செத்த விதைகள் அவைகள் முளைத்து, வளர்ந்து, செழிப்பது எப்படிச் சாத்தியமாகும்? என்று பேசினார். எல்லாரும் திகைத்துப் போய்விட்டார்கள். நான் கொடுத்த விதை முளைக்காததால், நீங்கள் அதற்குப் பதிலாக வேறு விதையைப் போட்டு, முளைக்க வைத்து செடியாக்கி கொண்டு வந்தவிட்டீர்கள். ஆனால், ஜிம் மாத்திரமே நான் கொடுத்த விதையை விதைத்து, முயற்சி செய்து, தைரியமாக, நேர்மையாக நான் கொடுத்த விதையோடு காலித் தொட்டியோடு வந்திருக்கிறார். அதனால், இந்த நேர்மையாளரே புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியானவர் என்று கூறி தன் உரையை முடித்தார்.

நீங்கள் நேர்மையை விதைத்தால், நம்பிக்கையை அறுப்பீர்கள்.

நீங்கள் நன்மையை விதைத்தால், நல்ல நண்பர்களைச் சேகரிப்பீர்கள்.

நீங்கள் தாழ்மையை விதைத்தால், மேன்மையை அறுப்பீர்கள்.

நீங்கள் விடாமுயற்சியை விதைத்தால், திருப்தியை அறுப்பீர்கள்.

நீங்கள் மன்னிப்பை விதைத்தால், ஒப்புரவாகுதலை அறுப்பீர்கள்.

நீங்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசத்தை விதைத்தால், பெரிய அறுவடையைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் விதைப்பதே, நாளை உங்களது அறுவடையை நிர்ணயிக்கும். அதனால் தான் தூய பவுலும் கூட கலாத்தியர் 6: 7-இல் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று எழுதினார். உங்கள் வாழ்விலும், உங்கள் குடும்பத்திலும் நீங்கள் வாழும் சமுதாயத்திலும் அழியாத வித்தாகிய ஆண்டவருடைய வார்த்தையை விதையுங்கள். அப்போது நிலைவாழ்வை அறுவடை செய்வீர்கள்.

ஆண்டவருடைய படைப்பில் அதிசயமான ஒன்று விதை ஆகும். இந்த உலகம் தொடர்ந்து வாழ்வதற்கு விதைகள் இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. விதைகளுக்கு ஏன் இந்த முக்கியத்துவம்? ஏனென்றால், ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு புதுமையைச் சுமந்து கொண்டிருக்கிறது. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விழும்போது, புதுப்படைப்பாக மாறுகிறது. அந்தப் புதுப்படைப்பே இன்றும் பல புதுப்படைப்புகளுக்குக் காரணமாக இருக்கின்றது. லூக்கா 8: 11-இல் விதை கடவுளின் வார்த்தை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது, இங்கே ஆண்டவருடைய வார்த்தை விதைக்கு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. ஆண்டவருடைய வார்த்தையாகிய விதை முளைத்து, பண்படுத்தப்பட்ட பக்குவமான இதயங்கள் வேண்டும். பண்படுத்தப்பட்ட பக்குவமான இதயங்களில் மட்டும்தான் ஆண்டவருடைய வார்த்தை முளைத்து, புது வடிவம் பெற்று பலன்தர முடியும். அந்த இருதயங்கள் பிள்ளைகளுக்குள் இருக்கின்றன. அதைப் பண்படுத்தி, பக்குவப்படுத்தி, அதில் ஆண்டவருடைய வார்த்தையாகிய விதையை விதைத்து, பலன் காணுகின்ற பணியைத்தான் திருமறைப்பள்ளி செய்கின்றது. இந்தப் பணி சிறப்பாகச் செய்யப்படும்போது, அதன் பலனை நாம் குடும்பத்திலும், திருச்சபையிலும், சமுதாயத்திலும் கண்டு கொள்ளமுடியும்.

ஆண்டவருடைய வார்த்தையாகிய வசனங்களை நாம் எப்படி நம்முடைய பிள்ளைகளுடைய இதயத்திலும், வாழ்விலும் ஆழமாக விதைத்திருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நாம் மேலோட்டமாக விதைத்துவிட்டுச் சென்றால், பலனும் கிடைக்காது, பிள்ளைகளுடைய எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும். அதனால் திருச்சபையாக, திருமறைப்பள்ளியாக ஆண்டவருடைய வார்த்தையாகிய விதையை, நம்முடைய பிள்ளைகளுடைய பக்குவப்பட்ட இதயத்தில் ஞானத்தோடும், விவேகத்தோடும் விதைப்போம். பிள்ளைகளுடைய ஆசீர்வாதமான எதிர்கால வாழ்வு என்றும் நல்ல அறுவடையைக் காண்போம்.

அருள்திரு. R. ரஞ்சித் சுதிர்

1. புத்தாக்கத்தின் மூலம் சவால்களைச் சந்திக்கலாம் *(தொநூ. 39: 1-4)*

சிறுவர் என்ற நிலைக்கும் முதியோர் என்ற நிலைக்கும் இடையேயுள்ள நிலைதான் இளைஞர். புதுமையினை விரும்புகிறவர்கள். வேகமானவர்கள் பொதுவாக இளைஞரை காட்டாறு என்பர். காட்டாறு தடுப்புகளையெல்லாம் தாண்டி திக்கு திசை தெரியாமல் பாய்ந்தோடும் அதன் வேகம் யாருக்கும் பயன்தராது. யோசேப்பு என்ற இளைஞர் கடவுளுக்கு அஞ்சி நடந்தபடியால் காட்டாறு போன்ற புரண்டு வரும் அவரது கட்டுக்கடங்காத உணர்வுகள், உணர்ச்சிகள், திறமைகள் அனைத்தையும் அவருக்கு எதிராக இருந்த சவால்களை சந்திக்க பயன்படுத்த இறைவன் அவருக்குத் துணைபுரிந்தார். எனவே தான் அவர் கையிட்டு செய்த எல்லா வேலைகளிலும் உண்மை வெளிப்பட்டது. யோசேப்பு என்று நாம் எண்ணும்போதே உத்தமர், வலிமையுள்ளவர், கடமை தவறாதவர், அழகுமிக்கவர் என்ற அவரது பண்புகள் நம் கண்கள் முன்னால் தெரிகின்றன. எனவே தான் ஆண்டவர் அவரை புத்தாக்கத்தின் கருவியாய் தெரிந்து கொண்டார்.

புதிய வாழ்வு பெறுதல், புதிய ஆற்றல் பெறுதல், புதிய உயிர்பெறுதல் என்பதை புத்தாக்கம் என்போம். நெருக்கடியான சூழலில் ஒருவர் புதிய, புதுமையான அனுபவத்தோடு வெற்றிபெற்றால் அதனை புத்தாக்கம் என்கிறோம். உலகமெங்கும் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஆனால் தனது நாட்டு மக்கள் பஞ்சத்தில் சாகாதபடி யோசேப்பின் புதுமையான, புத்தாக்கமான திட்டங்கள் பஞ்சத்தில் மக்களுக்கு உணவு வழங்கி அவர்களை உயிரோடே பாதுகாக்கச் செய்தது. ஓர் இளைஞர் புதுமையான சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ள அவருக்கு புதுப்பிக்கப்பட்ட மனப்பாங்கு (எபே. 4: 23) அவசியம். இறைவேண்டலில் நிலைத்திருந்தால் ஒருவர் மற்றவர்களுக்கு புத்தாக்கத்திற்கு அடையாளமாகத் திகழமுடியும். யோசேப்பின் தலைமைத்துவம் இறைவனின் விரிவான மீட்பை அனைவருக்கும் கொண்டு செல்ல உதவியது. இன்றைக்கும் ஆண்டவர் தம் மக்களின் புத்தாக்க செயல்களின் வழி சவால்களைச் சந்தித்து வாழ்வு கொடுக்க நம்மை இந்த உலகத்திற்கு அனுப்பி இருக்கிறார்.

2. தீமையை நன்மையால் வெல்வதன் மூலம் சாதிக்கலாம் *(தொநூ. 39: 5-6)*

பிளினி என்பவர் பித்தினியாவின் ஆளுநராக இருந்தார். அவர் "திரேஜன்" என்ற மன்னருக்கு ஆதித்திருச்சபை மக்களின் வாழ்வைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார். கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் ஒரு உறுதியான தீர்மானம் எடுத்துள்ளனர். களவு செய்வதில்லை; கொள்ளை யிடுவதில்லை; விபசாரம் செய்வதில்லை; வாக்குத் தவறுவதில்லை; அவ்வாறே வாழ்ந்தும் வருகின்றனர் என்கிறார். ஆண்டவர் ஆபிராகாமுக்கு கொடுத்த வாக்குறுதி (தொநூ. 12: 2-7) யோசேப்பிலே நிறைவேறியது. ஏனென்றால் பல்வேறு விதங்களில் அவரது அணுகுமுறை தீமைக்கு

தொநூ. 39: 1-6

1. புத்தாக்கத்தின் மூலம் சவால்களைச் சந்திக்கலாம் *(தொநூ. 39: 1-4)*

சிறுவர் என்ற நிலைக்கும் முதியோர் என்ற நிலைக்கும் இடையேயுள்ள நிலைதான் இளைஞர். புதுமையினை விரும்புகிறவர்கள். வேகமானவர்கள் பொதுவாக இளைஞரை காட்டாறு என்பர். காட்டாறு தடுப்புகளையெல்லாம் தாண்டி திக்கு திசை தெரியாமல் பாய்ந்தோடும் அதன் வேகம் யாருக்கும் பயன்தராது. யோசேப்பு என்ற இளைஞர் கடவுளுக்கு அஞ்சி நடந்தபடியால் காட்டாறு போன்ற புரண்டு வரும் அவரது கட்டுக்கடங்காத உணர்வுகள், உணர்ச்சிகள், திறமைகள் அனைத்தையும் அவருக்கு எதிராக இருந்த சவால்களை சந்திக்க பயன்படுத்த இறைவன் அவருக்குத் துணைபுரிந்தார். எனவே தான் அவர் கையிட்டு செய்த எல்லா வேலைகளிலும் உண்மை வெளிப்பட்டது. யோசேப்பு என்று நாம் எண்ணும்போதே உத்தமர், வலிமையுள்ளவர், கடமை தவறாதவர், அழகுமிக்கவர் என்ற அவரது பண்புகள் நம் கண்கள் முன்னால் தெரிகின்றன. எனவே தான் ஆண்டவர் அவரை புத்தாக்கத்தின் கருவியாய் தெரிந்து கொண்டார்.

புதிய வாழ்வு பெறுதல், புதிய ஆற்றல் பெறுதல், புதிய உயிர்பெறுதல் என்பதை புத்தாக்கம் என்போம். நெருக்கடியான சூழலில் ஒருவர் புதிய, புதுமையான அனுபவத்தோடு வெற்றிபெற்றால் அதனை புத்தாக்கம் என்கிறோம். உலகமெங்கும் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஆனால் தனது நாட்டு மக்கள் பஞ்சத்தில் சாகாதபடி யோசேப்பின் புதுமையான, புத்தாக்கமான திட்டங்கள் பஞ்சத்தில் மக்களுக்கு உணவு வழங்கி அவர்களை உயிரோடே பாதுகாக்கச் செய்தது. ஓர் இளைஞர் புதுமையான சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ள அவருக்கு புதுப்பிக்கப்பட்ட மனப்பாங்கு (எபே. 4: 23) அவசியம். இறைவேண்டலில் நிலைத்திருந்தால் ஒருவர் மற்றவர்களுக்கு புத்தாக்கத்திற்கு அடையாளமாகத் திகழமுடியும். யோசேப்பின் தலைமைத்துவம் இறைவனின் விரிவான மீட்பை அனைவருக்கும் கொண்டு செல்ல உதவியது. இன்றைக்கும் ஆண்டவர் தம் மக்களின் புத்தாக்க செயல்களின் வழி சவால்களைச் சந்தித்து வாழ்வு கொடுக்க நம்மை இந்த உலகத்திற்கு அனுப்பி இருக்கிறார்.

2. தீமையை நன்மையால் வெல்வதன் மூலம் சாதிக்கலாம் *(தொநூ. 39: 5-6)*

பிளினி என்பவர் பித்தினியாவின் ஆளுநராக இருந்தார். அவர் "திரேஜன்" என்ற மன்னருக்கு ஆதித்திருச்சபை மக்களின் வாழ்வைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார். கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் ஒரு உறுதியான தீர்மானம் எடுத்துள்ளனர். களவு செய்வதில்லை; கொள்ளை யிடுவதில்லை; விபசாரம் செய்வதில்லை; வாக்குத் தவறுவதில்லை; அவ்வாறே வாழ்ந்தும் வருகின்றனர் என்கிறார். ஆண்டவர் ஆபிராகாமுக்கு கொடுத்த வாக்குறுதி (தொநூ. 12: 2-7) யோசேப்பிலே நிறைவேறியது. ஏனென்றால் பல்வேறு விதங்களில் அவரது அணுகுமுறை தீமைக்கு

பதில் தீமை செய்யாமல் நன்மை செய்வதாய் இருந்தது. அவரது வாழ்வில் ஏற்பட்ட தீமைகளே சாதிக்க தூண்டுகோலாய் அமைந்தது. யோசேப்பை அவருடைய சகோதரர்கள் இஸ்மயேலருக்கு விற்றதினால் போத்திபாரின் அரண்மனைக்கு வந்தார். போத்திபாரின் மனைவியினால் அவருக்கு சோதனை ஏற்படவில்லையென்றால் அவர் எகிப்திற்கு ஆளுநராக ஆகியிருக்க முடியாது. அவருடைய மக்களும் எகிப்துக்கு வந்திருக்க முடியாது. தீமைகளை எதிர்த்து சாதனைகளாக மாற்ற இறைவன் அவரோடே இருந்தார்.

யோசேப்பு பதினேழு வயதில் தன் சகோதரர்களோடு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த காலத்தில் இருந்து எகிப்துக்கு ஆளுநர் என்று ஆகும் வரையிலும் அவருடைய வாழ்க்கையில் பல்வேறு தீமைகள் எதிரிட்டு வந்தன. அதேபோல் அத்தீமைகளை நன்மையால் மேற்கொள்ளும் புதிய மாறுதலும் அந்தந்த காலக்கட்டத்தில் அவருக்குள் ஏற்பட்டது. அவர் மனப்பாங்கும், ஆவியும், ஆற்றலும் பதிதாகிக் கொண்டே இருந்தன. தம்முடைய மக்களின் உயிர்களைக் காத்து அவர்களுக்கு புத்தாக்கம் அருளும்படி தம்மை ஆண்டவர் எகிப்துக்கு அனுப்பி வைத்தார் என்று உணர்ந்து செயல்பட்டார். வாழ்வில் வரும் சோதனைகளை மேற்கொண்டு தூய நெறியில் தங்களைக் காத்துக் கொள்ளும் இளைஞர்களே சாதிக்க முடியும்.

இளைஞர்கள் சாதிக்க வேண்டியவர்கள்; சவால்களை சந்திக்க பிறந்தவர்கள்; நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாக கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் விளங்கு *(1 தீமொ. 4: 12)* என்று பவுல் தீமோத்தேயு இளைஞனுக்குச் சொன்ன ஆலோசனை நமக்கும் பொருளுள்ள வாழ்வு வாழ வழிகோலுவதாக. ஆண்டவர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. G. சாம் ரிச்சர்ட் நெல்சன்

இறைப்பணியில் சிற்பிகளாம் பெண்கள்

விப. 35: 20-29

ஆண்டவருக்குக் காணிக்கை கொடுத்தார் (விப. 35: 21)

ஆண்டவர் ஆண்களையும் பெண்களையும் அவரது ஆலய கட்டுமான பணிக்காக பயன்படுத்துகின்றவர். இன்றைய ஆலயத் தொழுகையில் வெகுதிரள் கூட்டமாக பங்கு பெறுபவர்கள் பெண்களே. ஆலயம், தொழுகை கூடங்களை உருவாக்குவதில் பெண்களின் அர்ப்பணிப்பும், கொடைகளும், ஈடுபாடும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது. யாத்திராகம் புத்தகம் 35-ம் அதிகாரத்தில் ஆண்டவர் வாசம்பண்ணும் இடத்தை உருவாக்குவதிலும், அழகு படுத்துதலிலும் பெண்களின் பங்களிப்பை குறிதது தியானிப்போம்.

1. உற்சாகமாக காணிக்கை கொடுத்த பெண்கள்

மோசே இஸ்ரவேல் சபை எல்லாரையும் அழைத்து (விப. 35: 5) உங்களுக்கு உண்டானதிலே காணிக்கையை கொண்டுவந்து செலுத்துங்கள். மனமுள்ளவன் எவனோ அவன் அதை கொண்டு வரட்டும். ஆண்டவருக்கு செலுத்தும் காணிக்கையை மோசே பட்டியலிட்டு காட்டுகிறார். இந்த நற்செய்தியை கேட்ட அவர்களின் சொந்த இருதயம் அவர்களை எழுப்பிற்று. அவர்களுடைய ஆவி அவர்களை உற்சாகப்படுத்தினது (விப. 35:22) ஆண்களும், பெண்களுமாகத் தாராள மனமுடையோர் அனைவரும் காப்புகள், காதணிகள், மோதிரங்கள், அணிகலன்கள், ஆகிய பொன்கலன்கள் அனைத்தையும் கொண்டு வந்தனர். யாவரும் அப்பொன்னை ஆரத்திப்பலியாக ஆண்டவருக்கு உயர்த்தினர். அன்றும், இன்றும் ஆண்டவருடைய பணிவிடைக்காக பெண்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றனர். திருத்தூதுவர் பணிகள் 16; 15-ல் லீதியாள் ஆண்டவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல தன்வீட்டை அப்போஸ்தல ஊழியதிற்கு திறந்தான்.

யோவான் 12: 3 மரியாள் விலையுயர்ந்த பரிமள தைலத்தை இயேசுவுக்கு பூசி நற்செயல் புரிந்தாள். லூக்கா 8: 3-ல் நாம் பார்த்தோமென்றால் ஏரோதின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும், சூசன்னாவும் மேலும் பல பெண்களும், அவரோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

விப. 38: 8 பெண்கள் தங்களை அலங்கரிக்க பயன்படுத்திய வெண்கலத்தால் அடித்து பளப்பளப்பாக்கப்பட்ட கண்ணாடி போன்ற தர்ப்பணங்கள் (Platics) *அந்தத் தர்ப்பணத்தை அவர்கள் வாசஸ்தலம்*

கட்டுவதற்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். அதனால் ஆசாரியப் பணி செய்தோர் தங்களைக் கழுவிக் கொள்ளத்தக்கதான தண்ணீர் வைக்கும் வெண்கலத் தொட்டி உண்டாக்கப்பட்டது. இஸ்ரவேல் பெண்கள் தங்களுக்கு அருமையாயிருந்ததை எல்லாம் உற்சாகமாக கொடுத்தார்கள். இந்த சாதாரணமான பெண்கள் மோசே கூறிய மாத்திரத்தில் உற்சாகமடைந்து கொடுத்தார்கள். நாம் கடவுளுடைய பணிக்கு கொடுப்பதில் எப்படி இருக்கிறோம்? உற்சாகமாக கொடுக்கிறோமா?

தாவீது அரசர் ஆலயம் கட்டுவதற்காக அழைப்பு கொடுக்கிறார். மக்கள் தாரளமாக கொடுத்தனர். 1குறி. 29: 14-ல் தாவீதரசர் கூறும்போது இவ்வாறு இந்தத் தன் விருப்பக் காணிக்கையை அளிப்பதற்கான ஆற்றலை நாங்கள் பெறுவதற்கு நான் யார்? என் மக்கள் யார்? யாவும் உம்மிடத்திலிருந்து வந்தவை. உம் கையினின்று நாங்கள் பெற்றுக்கொண்டவற்றையே நாங்கள் உமக்குக் கொடுத்துள்ளோம் என்று கூறினார். கடவுளின் பணிக்காக காணிக்கைக் கொடுப்பது பாக்கியமான ஒன்று. ஆண்டவர் கொடுப்பதை திருப்பி கொடுப்பார்.

2. ஞான இதயமுள்ள பெண்கள் (திறன்மிக்க பெண்கள்) *(விப. 35: 25)*

இந்த திறன் மிக்க பெண்கள் தங்கள் கைகளினால்நூற்று தாங்கள் நூற்ற இளநீல நூலையும், இரத்தாம்பர நூலையும், சிவப்பு நூலையும் மெல்லியப் பஞ்சி நூலையும், கொண்டுவந்தார்கள். இந்த நூல்களின் பிரதான ஆசாரியன், பரிசுத்த சந்நிதானத்தில் இறைபணியாற்றும் போது உடுத்த வேண்டிய பரிசுத்த வஸ்திரங்கள் செய்யப்பட்டன (விப. 28:3-50 ஒவ்வொரு இறைப்பணியின் வெற்றிக்குப் பின்னால் பெண்களின் உழைப்பு ஏராளம் இருக்கும். பெண்கள் முதலாவது கடவுள் தங்களிடம் கொடுத்துள்ள திறமைகள், தாலந்துகளை இனம் கண்டுகொள்ள வேண்டும். பெண்களுடைய திறமைகள் ஆண்டவரின் அருட்பணிகளின் மகிமைக்காக பயன்படுத்தபடவேண்டும்.

3. ஞான எழுப்புதல் அடைந்த பெண்கள் (உள்ளார்வமும் திறனுமுடைய பெண்கள்) *(விப. 35: 26)*

உள்ளார்வமும், திறனுமுடைய பெண்கள் அனைவரும் வெள்ளாட்டு உரோமம் தான் நெய்தார்கள். ஏபோத்துக்கும், மார்பு பட்டைக்கும் வேண்டிய பன்னிற மணிக்கற்களையும் பதிகற்களை பதிக்கும் பணிகளையும் செய்தார்கள். இந்த பெண்களுக்கு உள்ளர்வு திறனுமிருந்தது. ஞான இருதயமுடைய பெண்கள் தங்களுக்கு ஆண்டவர் கொடுத்த வரங்களின் அற்புதமான பணிவிடைகளை செய்தார்கள. பழமொழி ஆகமம் நீதி. 29: 18 எங்கே இறைவெளிப்பாடு இல்லையோ அங்கே குடிமக்கள் கட்டுக்கடங்காமல் திரிவார். நீதி போதனையின்படி நடப்பவர் பேறு பெற்று மகிழ்வார். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் கடினபாடுகளை அனுபவித்தபோது அவர்களை வழி நடத்த ஞான இருதயமுள்ள பெண் இறைவாக்கினர்கள் இருந்தார்கள் நீதி. 4: 4, 5: 7-ல்

தீர்க்கதரிசியான தெபொராள் இஸ்ரவேலின் தாயாக எழும்பினார். இறைவாக்கினர் தெபோராளின் வாக்குபடி பாராக் பகைவருடன் போருக்குச சென்றான். இஸ்ரவேலுக்கு ஒரு பெரிய வெற்றியை கொண்டு வந்தார். புதிய ஏற்பாட்டின் காலத்திலும் தீர்க்க தரிசனமுடைய பெண்கள் இருந்தார்கள.

திருத்தூதர் பணிகள் 21: 9-இல் அவர்களுக்கு திருமணமாகா நான்கு பெண் மக்கள் இருந்தனர். அவர்கள் இறைவாக்குரைத்து வந்தார்கள். பெண்களின் சேவைகளை குறித்து நீதிமொழிகள் 31; 20 கூறும்போது எளியவர்களுக்கு உதவி செய்ய தன் கையை நீட்டுவாள். வறியவனுக்கு வயிராற உணவளிப்பாள். ஞான எழுப்புதல் அடைந்த பெண்களைப் போல நாம் கடவுளுடைய ஆலயப் பணிகளிலும், குடும்ப சமூக பணிகளை சிறப்பாக செய்து நிறைவேற்றும் பெண்களாக உழைக்க வேண்டும் வாழவேண்டும். நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்மை தேடிவந்த அருட்தொண்டர்களின் மனைவிமார், நம்முடைய பெண்களின் முன்னேற்றத்திற்காக கையால் (Lace) பூக்கள் ஆடைகளில் வரைதலைக் கற்று கொடுத்தனர். பெண்களின் கைவண்ணங்களை நம்முடைய ஆலய திருப்பீட மேஜைகளின் விரிப்புகள் அலங்கரிக்கின்றன. எழுப்புதல் நற்செய்தியாளர் பென்னி ஹின் கூறும்போது இயற்கையாகவே பெண்களுக்கு எது நன்மை? எது தீமை என்று பகுத்தறியும் ஒரு விசேஷித்த உள்ளுணர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷித்த உள்ளுணர்வை ஆண்டவரின் நாம மகிமைக்காக நாம் பயன்படுத்துவோம். இறையாசி என்றும் நம் அனைவரோடும் இருப்பதாக.

அருள்திருமதி. **சார்லெட் சௌந்தரராஜன்**

உத்தமத்தில் உறுதி

யோபு 2: 1-10 *திப. 7: 51-60*

திபா. 119: 161-168 *லூக். 4: 1-13*

"இன்னுமா மாசின்மையில் நிலைத்திருக்கிறீர்" (யோபு 2: 9).

யோபு ஞான ஆகமங்களில் ஒன்று. அக்காலத்தில் துன்மார்க்கன் வேதனைப்படுவான், நீதிமானுக்கு ஒரு துன்பமும் வராது என்ற எண்ணம் இருந்தது துன்மார்க்கன் செழிப்பது ஏன்? நீதிமான் கஷ்டப்படுவது ஏன்? அதனால் நீதிமானுக்கு குழப்பம். அதனால் நீதிமானும் துன்பப்படுவான் கஷ்டப்படுவான் என்பதை காட்டுவதே இந்த ஞான ஆகமத்தின் நோக்கம். யோபு என்ற பெயருக்கு பொருள் துக்கப்படுபவன், துன்பப்படுபவன். இங்கு கடவுள் யோபுவை குறித்து சாளறு பதிருகிறார். அவன் உத்தமன், அவன் சன்மார்க்கன், அவன் கடவுளுக்கு பயந்தவன். அவன் பொல்லாப்பிற்கு விலகினவன். அவனைப் போல பூமியில் ஒருவர் இல்லை. யோபு 2: 3 அப்படிப்பட்ட யோபுவை துன்பப்படுகிறவனாக தீயோன் மாற்றுகிறான். மனுஷன் சந்தோஷமாய் இருப்பதை தீயோன் விரும்புவதில்லை. அதே வேளையில் கடவுளின் பிள்ளைகள் துன்பப்படுவதை கடவுள் விரும்புவது இல்லை. இங்கு யோபு அனைத்தையும் இழக்கிறார் ஆஸ்தி. பிள்ளைகள் சரீர சுகம், எல்லாம் இழக்கிறார். சரீர பருக்களால் வேதனைப்படும் யோபுவை பார்த்து அவருடைய மனைவி சொன்ன வார்த்தைதான் இது. நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? (யோபு 2: 9) யோபு கடவுள் மேல் உத்தமத்தில் உறுதியாய் இருந்த ரசகியம் என்ன.

1. ஆற்றலான இறைவார்த்தையைச் சார்ந்திருந்த யோபு *(யோபு 23: 12)*

யோபு வேதனைப்படுகிறார். மன வேதனை. சரீர வேதனை. தன் வாழ்வை குறித்த பயம். இப்படிப்பட்ட வேதனையில் அவரது மனைவி அவருடைய வேதனையை அதிகப்படுத்தினார். அவரது நண்பர்கள் யோபுவின் வேதனையின் காயத்திற்கு மருந்து போடவில்லை. தீமை, துன்பம், நோய் எல்லா மனிதனுக்கும் வரும். சில தீமை தியோனால் உருவாக்கப்படும். சில தீமை கடவுளால் அனுமதிக்கப்படும். சில தீமை நாமே வருத்திக் கொள்வது. ஆனால் துன்பம், நோய், போராட்டம், உண்மையான மனிதனை உருவாக்கும் சக்தி ஊடகங்கள். வாழ்க்கையை அதிகமாய் கற்றுக் கொள்வது வசதிகளின் வழி அல்ல. செல்வத்தின் வழி அல்ல. ஆனால் துன்பங்களின் வழியாய். துன்பம் வரும்போது நாம் சோர்ந்து போகக்கூடாது. இறைமக்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது. "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத் தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப்

பெறுவான்". (யாக். 1: 12). இந்த துன்பம் சோதனைகளை மாற்ற ஒரே வழி வேத வசனம். வேதம் சொல்கிறது: நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். (யோவா. 14: 18) அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை ; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம். (இச. 31: 8) உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்திவிடுங்கள் (1 பேது. 5: 7). பக்தன் ஒருவன் பாடுகிறார் : "காரிருளில் என் நேச தீபமே நடத்துமே..." ஆகவே பஞ்சம், வேலையின்மை, பழிச்சொல், நோய். இவைகள் நம் வாழ்வின் தகவுகளை தகர்த்திடக்கூடாது. கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை வைத்த ஆதி திருச்சபையார் நம்பிக்கையில் பலன் கொண்டார்கள். (எபி. 11: 33, 34) ரோமர் 5: 4- "உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" என பவுல் சொல்லுகிறது போல் யோபு கடவுளின் வார்த்தையை நம்பினார். அது ஆகாரத்தை பார்க்கிலும் பெரியது என்கிறார். பவுலும் யோபுவும் தங்களுக்கு வந்த சோதனையில் உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நாசமோ, பட்டயமோ, இவைகள் கடவுளின் அன்பை விட்டு பிரிக்க முடியாது என்ற உறுதியோடு இருந்தார்கள். காரணம் யோபுவிற்கும் பவுலுக்கும் தெரியும் எவர்களை கடவுள் அடித்தாரோ, அவர்களை நீதிமானாக்குகிறார். எவர்கள் நீதிமான் ஆக்கப்படுகிறார்களோ, அவர்களை மகிமைப்படுத்தி இருக்கிறார். (ரோமர் 8: 30). இந்த வார்த்தைகளில் காத்திருந்த தாவீது இன்னொரு வடிவம் கொடுக்கிறார். அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங்கீதம் 119: 72) அவருடைய வசனத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறவில்லை. (சங்கீதம் 119: 165) இயேசு பிசாசு இடம் மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல கடவுளுடைய ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான் என்றார். யோபு இந்த நம்பிக்கையில் கடவுளுடைய வார்த்தையில் பின் வாங்கவில்லை. ஆண்டவர் வார்த்தை ஆகாரத்திலும் பெரியது என்று இறை வார்த்தையில் சார்ந்து இருந்தார்.

2. இறைப் பிரசன்னத்தைக் கண்ட யோபு: *(யோபு 42: 5)*

கேட்ட அனுபவம் அல்ல, தொட்டுப் பார்த்த அனுபவம். கற்பனை அனுபவம்அல்ல, நேருக்கு நேர் கண்ட அனுபவம். நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல. என் கண்களே அவரைக் காணும் (யோபு 19; 27) யோபு உலக இழப்புகளை நினைத்து துக்கப்பட்டு கடவுளை இகழவில்லை. ஆசீர்வாதங்களை விட ஆசீர்வதிப்பவரே முக்கியம். ஆசீர்வாதங்கள்இழந்தாலும் ஆசீர்வதிப்பவரை இழப்பு ஆகாது திரும்ப பெற முடியும். ஆனால் ஆசீர்வதிப்பவரை இழந்தால் எதை உருவாக்கினாலும், சம்பாதித்தாலும் பயன் இல்லை.இன்று அநேகருக்கு ஆசீர்வாதம் இருக்கிறது. அவர்களிடம் ஆசீர்வதிப்பவர் இல்லை. இதனால் பணம் இருக்கிறது. மணம் இல்லை. துன்பத்தின் அப்பத்தையும் உபத்திரவத்தின் தண்ணீரையும் ஆண்டவர் தரலாம். (எசா. 30: 20) எந்த

சூழலிலும் உறுதியாய் இருக்க வேண்டும் என்பதே யோபு கற்றுத்தரும் பாடம். சவுல் ராஜா துன்ப நேரத்தில் குறி சொல்பவரை தேடி போனது போல போகாமல், ஊழியக்காரர்களை தேடி ஓடாமல், கடவுளை பார்க்க வேண்டும். நேரடியாக கடவுளிடம் பேச வேண்டும். நமது முன்னோர்கள் கண்ணீரின் பள்ளத்தாக்கின் வழி தானே முத்தான, வித்தான சத்தியங்களை கண்டனரே தவிர இறை பிரசன்னத்தை விட்டு ஓடவில்லை. இப்பொழுது மக்கள் இறை பிரசன்னத்தை விட்டு ஓடுகிறார்கள். ஆவிக்குரிய கூட்டங்களுக்கு செல்ல வேண்டும். முழுக்க ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்பொழுது தான் வேதனைகள் நீங்கும். பாடுகள் மாறும் என்கிற ஒரு தவறான எண்ணம். கிறிஸ்துவுக்காக பாடு ஏற்கும் சமூகம் கிறிஸ்தவம். ஆதி திருச்சபை (எபி. 11: 35) வாது, நிந்தை, காவல், அடி, கல்லெறி, வாளால் அறுத்தல், பரிட்சை, பட்டயம், துன்பம் அனுபவித்தனர். நம் வாழ்வின் தோல்வி துன்பம். உபத்திரவம் இவைகளை எண்ணி சோர்ந்து இருக்க அல்ல, கடவுளை காண வேண்டும். அப்படி கடவுளைக்கண்டால் துக்கத்தின் நுகத்தை கடவுள் முறிப்பார். அத்தனை இழப்பிலும் யோபு பாவம் செய்யவில்லை கடவுளை குறை சொல்லவில்லை மாறாக கர்த்தர் தந்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தர் நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று நம்பிக்கை கொண்டார் (யோபு 1: 21, 21) கடவுளின் மக்கள் துன்பப்படுவதை கடவுள் விரும்புவது இல்லை. துன்புறும்போது தேவ தூதர்களை அருகில் எழும்ப செய்வார். 1ஸ்தேவான் கல்லெறியப்படும்போது இயேசுவானவர் தேவனுடைய வலதுபுறம் நிற்பதை கண்டார். (திப. 7: 55, 56) யோவு கடவுளை கண்டதுபோல் ஸ்தேவானும் கடவுளை காண்கிறார். . . . நீங்களோ என்னைக் காண்பீர்கள். (யோவா. 14: 19). அதனால் துன்பத்தின் மத்தியில் யோபுவை போல, ஸ்தேவானை போல இறை பிரசன்னத்தை உணர வேண்டும்.

3. கடவுளுடைய அதிகாரத்தை உணர்ந்த யோபு: *(யோபு 42: 2)*

யோபு உத்தமத்தில் உறுதியாய் இருக்க அ) கடவுளின் வார்த்தையில் உறுதியாய் இருந்தார். ஆ) இறை பிரசன்னத்தை உணர்ந்தார். இ) கடவுளின் அதிகாரத்தை தன்னை ஒப்புக் கொடுத்தார். யோபு சொன்னது "கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று ல்ல. "அறிந்திருக்கிறேன்" கேள்விப்பட்டிருக்கிறேன் என்பது உலக அனுபவம். அறிந்திருக்கிறேன் என்பது தன் வாழ்வில் உணர்ந்த அனுபவம். எபிரேயத்தில் அறிதல் என்பது மிக அழுத்தமான ஆழமான பொருள் தருகிறது. ஆபிரகாம் தன் மனைவியை அறிந்தான். எல்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிந்தான். இங்கு அறிந்திருக்கிறேன் என்றால் ஆண்டவரின் உள்ளத்தை அறிதல். கடவுள் நம் வாழ்விற்கு நல்ல திட்டம் வைத்திருக்கிறார். அந்த திட்டம் பெரியது, நல்லது. ஒப்புக் கொடுப்பது நம் கடமை. கடவுளின் எந்தத்திட்டத்திற்கும் முறுமுறுக்க கூடாது. இஸ்ரவேல் கடவுளின் அதிகாரத்தை அறிந்திருந்தும் இறைச்சிக்கு இச்சித்தனர். அப்பம், காடை ஆத்துமாவில் இளைப்பை உருவாக்காது.

துன்ப வேளையில் கடவுளின் சித்தத்திற்கு ஜெபிக்கலாம். துன்பம் கடவுளால் அனுமதிக்கப்பட்டால் அதை ஏற்கிறேன் என்ற உறுதி தேவை. கர்த்தரை நம்புகிறவர்களின் ஜெபமும் அப்படி இருக்க வேண்டும். கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள். (திபா. 125: 1) கடவுளை நம்பினால் நம்பினவர்களை கைவிடார். சர்வ வல்லவர் (யோபு 42: 2) என்றால் எதையும் செய்யக்கூடியவர் என்று அல்ல. உதாரணம், புவியீர்ப்பு விசையை மாற்றமாட்டார். சில காரியம் செய்ய முடியாது. சிலுவையில் இருந்து இறங்கி வர முடியாது. காரணம் அவரே அதற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். மனுமக்களை மீட்பதும், தம் சித்தபடி வரலாற்றை நடத்துவதும், இறுதியில் தீமையை அழிப்பதும் சர்வ வல்லவர். திருச்சபையை துன்புறுத்திய பவுலை மாற்றவதில் கடவுள் வல்லவர். சுரண்டல் பேர்வழி சகேயுவை மாற்றுவதில் வலலவர். விஞ்ஞானத்தில் கல்லை கண்ணாடியாகவும், கரியை வைரமாகவும், இரும்பை தங்கமாகவும் மாற்ற முடியும். நாட்டை வளப்படுத்த ஆற்றில் அணை கட்ட முடியும். கடல் நீர் ஊருக்குள் வராமல் தடுக்க முடியும். மருத்துவத்தால் நோயை சுகமாக்க முடியும். ஊனமுற்ற உடலை செயல்பட செய்யமுடியும். இருதயத்தை மாற்றி அமைக்க முடியும். ஆனால் பாவம் நிறைந்த, தீமை நிறைந்த உள்ளத்தை சர்வ வல்லவரான ஆண்டவரால் மட்டுமேம தூய்மைப்படுத்த முடியும். கொந்தளிக்கும் வாழ்க்கை படகில் புயுலை அடக்கு உடனிருக்கும் ஆண்டவர் அதிகாரத்தை உணர்வோம். யோபு அனைத்து சோதனையிலும் உத்தமனாக, உறுதியாக இருந்தது போல நாமும் ஆண்டவரது வார்த்தை. ஆண்டவரது பிரசன்னம், ஆண்டவரது ஆற்றல் இவற்றில் நிலைத்து இருப்போம். யோபுவை போல உத்தமனாக உறுதிப்படுவோம்.

அருள்திரு. M. ஜேக்கப் ராஜ்

இறைவேண்டல் வாயிலாக வெற்றிபெறுதல்

தானி. 6

தானியேல் தாரியுவின் ஆட்சிக் காலத்திலும், பாரசீகனான சைரசு மன்னனின் ஆட்சிக் காலத்திலும் சீரும் சிறப்புமாய் இருந்தார் (தானி. 6: 28).

ஒவ்வொருவரும் வாழ்வில் வெற்றி காண விரும்புகிறோம். ஆனால், பலர் தோல்வி, துக்கம், மனஅழுத்தம் ஆகியவற்றால் நிரம்பிய வாழ்க்கையை வாழ்கின்றனர். பணியில் உயர்வு இல்லை, குடும்பத்தில் அமைதி இல்லை, மனதில் நிம்மதி இல்லை எனத் துயரங்கள் நிறைந்திருக்கும். இந்த உலகில், ஒருவரின் வாழ்க்கை நமக்குச் சாட்சியாக ஒளிர்கிறது. அதுவே தானியேலின் வாழ்க்கை. அவரின் சூழ்நிலைகள் எளிதல்ல. தாய்நாடு சிதைந்தது, ஆலயம் அழிந்தது, அந்நியரின் நாட்டில் கைதியாக்கப்பட்டார். ஆனாலும், அவர் வாழ்ந்த இடத்திலே கடவுளின் அருளால் சீரும் சிறப்புமாய் இருந்தார். அதாவது, தானியேல் அனைத்திலும் வெற்றி கண்டார். தானியேலின் ஜெயத்தின் இரகசியம் என்ன என்பதை தானியேல் ஆறாம் அதிகாரத்தில் இருந்து மூன்று ஆழமான சிந்தனைகளில் காணலாம்.

1. உண்மையுள்ள வாழ்க்கை: *(தானி. 6: 4)*

தானியேல் அரசன் தாரியுவின் கீழ் முக்கிய அதிகாரியாக இருந்தபோதும், நேர்மையாய் நடந்து கொண்டார். அவரிடம் எவ்விதத் தவறும் ஊழலும் காணப்படவில்லை. அவர் பணியிலும் வாழ்க்கையிலும் நேர்மையாய் இருந்தார். அதிகாரிகள் அவரைக் குற்றப்படுத்த முயன்றாலும் தோல்வியடைந்தனர். ஏனெனில், அவரிடம் காணப்பட்ட உண்மைத்தன்மை.

இன்றைய உலகில் உண்மை குறைந்து, பொய்மை அதிகரித்திருக்கிறது. ஆனால், கர்த்தர் உண்மையுள்ளவர்களைத் தேடுகிறார். தாவீது, "மானிடருள் மெய்யடியார் மறைந்துபோயினர்" (தி.பா. 12: 1) என்று வருந்தினார். இன்றும் அதே சவால் நமக்குமுன் உள்ளது. நாம் உண்மையுள்ளவர்களா? தானியேலின் பணியிலும், கடமையிலும், கடவுளுக்கு முன்பாக அவர் உண்மையுள்ளவர்.

உண்மை என்பது வாழ்வின் அடிப்படை; நேர்மை என்பது இறையாசிக்கான திறவுகோல். அதனால் தான், தானியேலின் வாழ்வு வெற்றியாயிருந்தது. நம் பணியிலும், குடும்பத்திலும், சமூகத்திலும், ஆண்டவரோடும், மனிதரோடும் உண்மையாய் நடந்தால் நம் வாழ்வும் வெற்றியாய் அமையும்.

2. இறைவேண்டலின் அனுபவம்: *(தானி. 6: 10)*

தானியேலின் வாழ்வில் வெற்றிக்கான காரணம் என்பது இறைவேண்டலாகும். அரசர் உத்தரவிட்டார்,முப்பது நாட்களுக்கு அரசராகிய தன்னை அன்றி வேறெந்தத் தெய்வத்திடமோ மனிதனிடமோ யாதொரு விண்ணப்பமும் செய்கின்ற எந்த மனிதரும் சிங்கக் குகைக்குள் தள்ளப்படுவார். ஆனால், தானியேல் அதை அறிந்த பிற்பாடும் தமது வழக்கப்படி நாள்தோறும் மூன்று வேளையும் தம் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிட்டு மன்றாடி அவருக்கு நன்றி செலுத்தினார். அவருக்கு இறைவேண்டல் என்பது ஆபத்து அல்லது பிரச்சனை வரும்போது தொடங்குவதன்று; அது கடவுளோடுள்ள அன்றாட உறவு.

இறைவேண்டல் அவருக்குப் பழக்கமல்ல, அது அவருடைய சுவாசம். இறைவேண்டல் இல்லாத கிறிஸ்தவ வாழ்வு கூரையில்லா வீட்டைப் போன்றது. சிங்கக் கெபியில் தள்ளப்பட்டபோதும், தானியேல் பயப்படவில்லை. ஏனெனில், அவர் இறைவேண்டலின் வாயிலாக கடவுளோடு இணைந்திருந்தார். எனவே, கடவுள் தம்முடைய தூதரை அனுப்பி சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார் *(தானி. 6: 22)*. இறைவேண்டல் தீமையின், தீயோனின் வாயை மூடும் ஆற்றல் உடையது. இன்று பலர் நேரமில்லை என்று கூறி இறைவேண்டலிலிருந்து விலகுகின்றனர். ஆனால், உண்மையான வெற்றி இறைவேண்டலில்தான் தொடங்குகிறது. இறைவேண்டல் இல்லாமல் வெற்றி இல்லை. இறைவேண்டல் நம்மை கடவுளோடு இணைக்கும் பாலமாகும்.

3. இறைவேண்டலின்வழி இறையாசி: *(தானி. 6: 21)*

சிங்கக் கெபியிலிருந்து கடவுளால் விடுதலை பெற்ற தானியேல், தன்னை அங்கே தூக்கிப் போட்ட அரசரை நோக்கி, அரசரே! நீர் நீடூழி வாழ்க! என்று ஆசீர்வதித்தார். அது வெறும் மரியாதைச் சொல் அன்று; ஆண்டவரின் உந்துதலால் வரும் இறை இயல்பு. இயேசு சிலுவையில் தம்மைத் துன்பப்படுத்தியவர்களுக்காய், "தந்தையே, இவர்களை மன்னியும்" *(லூக். 23: 34)* என மன்றாடினார். தானியேலும் அவரை துன்பப்படுத்தியவரைச் சபிக்காமல் ஆசீர்வதித்தார். அதாவது, ஆண்டவரிடம் காணப்பட்ட அருள் நிறைந்த உள்ளம் தானியேலிடமும் காணப்பட்டது.

இதுதான் உண்மையான ஆன்மிக வளர்ச்சி. தமக்குத் தீங்கு செய்தவர்களுக்காக நன்மை செய்யும் மனம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து மலைப்பொழிவில் கற்றுத்தரும் உண்மை. யாரை அன்பு செய்ய வேண்டும்? உங்கள் பகைவரை. யாரை ஆசீர்வதிக்க வேண்டும்? சபிப்பவர்களை. யாருக்காக ஜெபிக்க வேண்டும்? உங்களைத் துன்புறுத்துவோர்களுக்காய். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் *(மத். 5: 44, 45)*.

தானியேல் இருந்த இடத்தில் கடவுளின் அருள் வெளிப்பட்டது. அவர் வாழ்வு இறையாசியின் ஊற்றாக இருந்தது. அவருடைய வாழ்வால் ஒரு நாடு முழுவதுமாக கடவுளை அறிந்தது. நாடே மாற்றம் கண்டது. அதுவே தானியேலின் வெற்றி. தாரியு அரசர் நாடெங்கும் உள்ள மக்களுக்கு சொன்னது. "தானியேலின் கடவுளுக்கு அஞ்சி நடுங்க வேண்டும். இது என் ஆணை. ஏனெனில், அவரே வாழும் கடவுள்; அவர் என்றென்றும் நிலைத்திருக்கின்றார்; அவரது ஆட்சி என்றும் அழிவற்றது; அவரது அரசுரிமைக்கு முடிவே இராது" (தானி. 6: 26).

தானியேலின் வாழ்வு வெற்றியாயிருந்தது. ஏனெனில், அவர் கடவுளுக்கு முன்பாக உண்மையாய் நடந்தார். அவர் நம்பிக்கை அசையவில்லை; அவர் இறைவேண்டலை நிறுத்தவில்லை; சோர்ந்து போகவில்லை; கடவுளின் மனப்பான்மையின்படி அனைவரையும் ஆசீர்வதித்தார். இன்று நம் வாழ்க்கையில் ஆண்டவர் அதே வெற்றியை வழங்க விரும்புகிறார். நாம் உண்மையாய் வாழ்ந்தால், இறைவேண்டலில் நிலைத்திருந்தால், ஆசீர்வாதத்தின் கருவியாய் நடந்தால் நம் வாழ்விலும் வெற்றி உண்டு! அவர் வெற்றியருளும் கடவுள்!

அருள்திரு. T. **லிபின் ராஜ்**

சிறப்பு நாள்களுக்கான அருளுரைகள்

H.M.S. ஞாயிறு

கிறிஸ்துவில் வாழ்வு

LIFE IN CHRIST

எசா. 65: 1-6 *1 தெச. 1: 1-10*
திபா. 52 *யோவா. 1: 45-51*

. . . நாங்கள் நற்செய்தியை . . . கொண்டு வந்தோம் (1 தெச. 1: 5).

நம் நாட்டின் வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அவர் அந்தமானில் சுனாமி காலத்தில் அனுப்பப்பட்டார். அந்நாட்களில் கடற்கரையில் சென்று இயேசு கிறிஸ்துவை அறிவித்தார். அப்போது தன் தலையில் கூட ஒன்றில் மீன்களை சுமந்து விற்க சென்று கொண்டிருந்த இளைஞனிடம் முக்கியமான விஷயம் ஒன்று பேசவேண்டும் நில் என்று கூறினார். மீன் விற்கும் இளைஞன் நான் துரிதமாகச் சென்று மீன் விற்க வேண்டும் எனக் கூறினான். தூதுவர் எவ்வளவு விலைக்குப் போகும் என்று கேட்டபோது ரூ. 500 என்று கூறினான். அந்த 500 ரூபாயை உனக்குத் தருகிறேன். அவசரமான செய்தியை கேட்க வேண்டும் என்று கூறி இயேசு கிறிஸ்துவைக் குறித்து பகிர்ந்து கொண்டார். பரிசுத்த ஆவியர் கிரியை செய்தார். அந்த இளைஞன் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். சில வருடங்களுக்குப் பின்பு இதே தூதுவர் இந்தோனேசியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்டபோது Special Office-ஆக அனுப்பப்பட்டார். தனது அலுவலகத்தில் பக்கம் நின்று கொண்டு இருந்தபோது, தான் அந்தமானில் சந்தித்த அதே இளைஞன் தன் கரத்தில் திருமறை வாங்கிக்கொண்டு செல்வதை கவனித்தார். தூதுவருக்கு ஆச்சரியம் அந்த இளைஞன், நான் இந்தோனேசியாவில் பெரிய சபையில் ஊழியனாக கடவுளுக்குப் பணியாற்றுகிறேன் என்றான். நற்செய்தி வல்லமையோடு செயல்பட ஆவியானவர் இன்றும் கிரியை செய்து கொண்டு இருக்கின்றார்.

நமதாண்டவர் இயேசு கிறிஸ்து ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த எல்லைப் புறங்களில் சென்று இறையரசின் செய்தியை சொன்னார். பிற இனத்தவர் வாழும் கலிலேயப் பகுதிகளில் சென்றார். சமூக அங்கீகாரங்களுக்கு வெளியே இருப்போர், பாவிகள் என்று ஒதுக்கப்பட்டோர், செல்வாக்கு அற்றோர் போன்றவர்கள் இறை அன்பை உணரச் செய்தார். தெசலோனிக்கேயா சபை பவுல் அடிகளாரின் இரண்டாம் மிஷனறிப் பயணத்தின்போது உருவானது. இங்கு ஒரு மாத காலம் மட்டுமே ஊழியம் செய்தார். அதிலும் மூன்று ஓய்வுநாட்கள் மாத்திரமே. குறுகிய காலப்பணி பெரும் அறுவடையைத் தந்தது. இந்நாட்களில் இந்த கனமான திருப்பணியை நம்மிடம் தந்து இருக்கின்றார்.

1. அறிவித்தல்:

ஒருவர் தன் ஊழியத்தின் வழியாக கிறிஸ்துவை முதன்முதலில் அறிந்து கொண்டேன் என்று சொல்லக்கேட்கும் போது, உண்மையான, முழுமையான சந்தோஷம் எனக்குள் வந்தது என திரு. சார்லஸ் ஸ்பர்ஜன் கூறுகின்றார். மனுக்குலத்திற்கு தரப்படுகின்ற அரிய செய்தி எதுவென்றால் அது நற்செய்தியே. அது சிலுவையின் வழியாக வரும் பாவமன்னிப்பு என்பதில் ஐயமில்லை. ஒருவேளை இன்று சிலுவையைப் பற்றிய செய்தி கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாகத் தோன்றலாம். இரட்சிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் இறை பெலனாக இருக்கிறது. திருச்சபையின் உததிரவாதம் பெரியது. பிலிப்புவிடம் கர்த்தருடைய தூதன் சொன்னவைகளை *(அப். 8: 26-39)* பார்க்கின்றோம். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் கட்டுகளில் இருந்து விடுதலை அடைந்தபோது, சிறைச்சாலைக் காரனிடம் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் *(அப். 16:31)* என்றார்கள். அகிரிப்பா ராஜாவிடம் பவுல் கூறிய நற்செய்தியினால் நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான். *(அப். 26:28)* இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழாமல் இருப்பது எவ்வளவு பெரிய இழப்பு என்பதனை உணர்த்துவது நம் கடமை.

மருத்துவ முறையில் சிகிட்சை அளிப்பதற்கும் மருத்துவர் நேரடியாக பரிசோதித்து சிகிட்சை அளிப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறதோ அதுபோல ஒரு செய்தியின் வழியாக சந்திப்பதற்கும் நேரடியாக நற்செய்தி அறிவிப்பதற்கும் வேறுபாடு உண்டு. பவுலடிகளார் தெசலோனிக்கேயாவில் வசனத்தோடு மாத்திரமல்ல வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் அறிவித்தார். *1886*-ம் ஆண்டு ரிங்கல்தெளபே ஐயர் நம் மாவட்டத்தில் வந்தார். *2026*-ம் ஆண்டு வரையிலும் சந்திக்கப்படாத மற்றும் ஆலயம் இல்லாத கிராமங்கள் சுமார் *200*. கிறிஸ்துவை அறிவிப்பதில் இணைந்து ஜெபிப்போம், செயல்படுவோம்.

2. சாட்சியாய் வாழ்தல்:

நாம் அறித்த, அனுபவித்த நற்செய்தியுடன் திருப்தியடைந்து நின்றுவிடாதபடி இயேசு கிறிஸ்துவோடு நமக்கு இருக்கும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். உண்மையான ஒரு நிகழ்வைக் கண்டு அனுபவித்து எடுத்துச் சொல்வது சாட்சி. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள் *(அப். 4: 33)* நம் சாட்சியான வாழ்வைக் காண்பவர் இந்த நற்செய்தி எனக்கு வேண்டும் என்று நினைக்க வேண்டும். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் இந்நிலையில் இருக்க காரணம், என்ன என்பதை கேள்விப்படும்போது மற்றவர்களும் மனமாற்றம் அடைந்து புது வாழ்வு பெற்றுக்கொள்ள வேண்டும். நமது மறுபிறப்பைக் குறித்த சாட்சிகள் பிரயோஜனமுள்ளது. பிலிப்பு நாத்தான்வேலிடம் சாட்சி

பகர்ந்தார் (யோவா. 1: 45-49) சமாரியப் பெண்மணி இயேசுவைக் குறித்து சாட்சி கூறினார்கள் (யோவா. 4: 28-39) கண் பார்வையற்றவன் கண் பார்வை பெற்ற பின் தன் அனுபவத்தை பரிசேயரிடம் சாட்சியாக (யோவா. 9: 13 . . .) பகர்ந்தான். நம் அனுதின வாழ்வில் மற்றவர்கள் நம்மில் இயேசுவைக் காண சாட்சியாவோம்.

3. கரிசனை:

ஆத்துமாக்களை கரிசனையுடன் நடத்த ஒவ்வொரு விசுவாசியும் கடமைப்பட்டு இருக்கிறான். பவுல் அடிகளார் தன் உள்ளத்தில் இறை மக்களை சுமந்து இடைவிடாமல் அவர்களுக்காக ஜெபித்தார். பவுல் அடிகளார் ஏற்படுத்திய திருச்சபைகளுக்கு போதுமான செய்தியை கடவுள் கொடுத்தார். ஒவ்வொருவரின் ஆவிக்குரிய வாழ்வு, மற்றும் கிறிஸ்துவின் அன்பில் தேறினவர்களாக காணப்பட வேண்டும். எந்த மனிதனும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக நிறுத்தும்படிக்கும் அவரையே அறிவித்து (கொலோ. 1: 28). உபதேசம் பண்ணுகிறோம். மக்கள் வீழ்ச்சி அடைகிறபோது திருச்சபையாக முன்வந்து ஆற்றுப்படுத்த கடமைப்பட்டு இருக்கின்றது. இளைப்படைந்தவனுக்கு கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு கல்விமானின் நாவைத் தந்தருளினார் . . . (ஏசா. 50: 4) கிறிஸ்துவின் அன்பை ருசித்த ஆரம்ப விசுவாசிகள் பின் வாங்கிப் போகாதபடி ஆவிக்குரிய வழியில் நடத்துவது அவசியம். வெளி நோயாளிகள் பிரிவில் வரும் வியாதியஸ்தர்களுக்கு மருத்துவர்கள் மருந்துகளை மாத்திரம் எழுதிக் கொடுப்பார்கள். அந்த வியாதியஸ்தர்கள் பிழைத்தார்களா? அல்லது நன்றாய் இருக்கிறார்களா? என்பதை அறிய அக்கறை கொள்ளமாட்டார்கள. ஒவ்வொரு விசுவாசிக்கும் மற்ற விசுவாசியைக் குறித்த கரிசனை தேவையானது. பக்தி உள்ள வாழ்வு இன்றியமையாதது. இரட்சிக்கப்பட வேறு வழி உலகில் இல்லை என்பதை உணர்ந்து புதுவாழ்வு பெற, சீரமைக்கப்பட்ட வாழ்வுபெற ஜீவனுக்கான வாழ்வு பெற, நித்தியத்திற்கான வாழ்வு பெற அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு வாழ கடமைப்பட்டு இருக்கின்றோம்.

நற்செய்தியாகிய இயேசு கிறிஸ்துவை அறிவிக்க தெரிந்து கொளளப்பட்ட ராஜரீக ஆசாரியக் கூட்டமாகிய நாம் சாட்சியாக வாழ்ந்து மற்றவர்கள் படிக்கின்ற நிருபங்களாக வெளிப்படும் போது இறையரசுக்கு சான்றார்களாவோம். பிறர் மீது கரிசனை கொண்டு ஆத்தும ஆதாயத்தில் விழித்து இருந்து செயல்பட எப்பொழுதும் ஆயத்தமாயிருப்போம்.

அருள்திரு. T. ஜாண் பீற்றர்

கிறிஸ்துவில் வேரூன்றி நற்செய்தியில் நிலைப்போம்

விப. 2: 11-19 *உரோ. 10: 1-15*
திபா. 96 *திவெ. 7: 21-29*

"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன (உரோ. 10: 15).

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தென் திருவிதாங்கூரில் அடக்குமுறைகளும், சாதியக் கொடுமைகளும், ஒடுக்குதல்களும் நிறைந்து காணப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில் பஞ்சம பிழைக்க தர்மபூமி என்கிற திருவிதங்கூரில் வந்தனர். மகாராசனின் குடும்பம். ஆன்மீகத்தில் சிறந்தவரான மகாராசன் ஆன்மீக அமைதியை பெற தன்னுடைய உறவினரான சிவக்குருநாதனோடு 300-மைல் பயணித்து சிதம்பரம் சென்றார். அங்கு இறையவரின் எச்சரிப்பை பெற்று தஞ்சாவூரிலுள்ள உறவினருடன் காவி உடையணிந்து ஆலயம் சென்றார். Rev. J.C. கோலாப் ஐயரின் "இயேசுவண்டைவா" என்ற நற்செய்தி மகாராசனின் உள்ளத்தை உடைத்தது. அந்தகணமே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். ஏற்றுக்கொண்டவர் திருவிதாங்கூரின் மைலாடியில் வந்து உறவினர்களிடம் நற்செய்தியை அறிவித்தார். எதிரப்புகள் வரவே ஒரு அருட்பணியாளர் நற்செய்தி அறிவிக்க வந்தால் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள் என்ற உறுதியோடு Rev. J.C. கோலாப் ஐயரின் உதவியோடு வில்லியம் தொபியாஸ் றிங்கல்தெளபே அவர்கள் அழைத்தார். றிங்கல்தெளபே ஐயர் பல இடர்பாடுகள் மத்தியில் 25.04.1806-ம் ஆண்டு மயிலாடிக்கு வருகைதந்து நற்செய்தியை விதைக்க ஆரம்பித்தார். இதனால் மக்களின் அடிமைத்தனங்கள் மாறினது. அறிவை பெருக்க கல்விக்கூடங்கள், ஆலயம் என்று வளர்ந்து இன்று தலைசிறந்த பேராயமாக உருவெடுத்துள்ளது. ஆகவே இந்த நாளை நாம் பேராயமாக நினைவுகூர்ந்து கொண்டாடுவோம்.

நீங்கள் போய் எல்லா மக்களினத்தரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக் கொடுங்கள் (மத். 28: 19) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடருக்கு கட்டளை கொடுத்து அனுப்பினார். நற்செய்தி விதைப்பது கிறிஸ்தவர்களின் தலையாகிய கடமை. ஏதோ நற்செய்தியை விதைப்பது அருட்பணியாளர்களின் பணி; மற்றவர்களின் பணி அல்ல என்று பல சூழலில் பலர் நற்செய்தி விதைக்க மறந்து நின்று விடுகிறோம். இறை மக்களாக அழைக்கப்பட்ட அனைவரும் குருக்கள் என்று (1 பேதுரு 2: 9)-ல் தூய பவுலார் கூறிப்படுகிறார். நற்செய்தியை விதைப்பது நம்மீது வருகின்ற பணி அல்ல, கடமை, கிறிஸ்துவில் வேரூன்றுவதும் நற்செய்தியில் நிலைப்பதும் அக்கடமையின் சரம்சமாகும். முழுமையாய்

நிறைவேற்றிட கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக என்ன செய்ய வேண்டும் என்பதை தியானிப்போம்.

1. நற்செய்திக்கான உந்துதலை ஏற்றுக்கொள்வோம் *(விப. 2: 11-19)*

உந்துதல் என்பது ஒருவரை குறிக்கோளை நோக்கி நடக்க தூண்டுகிற ஆற்றல். கடவுள் ஒவ்வொரு மனிதர்களை குறித்து ஒவ்வொரு திட்டம் வைத்துள்ளார். அத்திட்டத்திற்காக இறைமக்களுக்கு உந்துதலையும் கொடுததுக் கொண்டு இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் மோசேயின் வடிவில் விடுதலை திட்டத்திற்கான உந்துதலை கொடுத்தார் *(விப. 2: 11-19)* வரையுள்ள பகுதியில் அரண்மனையில் வாழ்ந்த மோசே, இறையவரின் உந்துதலால் விடுதலை திட்டத்திற்கு செயல்பட்டதை காண்கிறோம். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பல ஒடுக்குதல்களை சந்தித்தனர். கடுமையான வேலை, பிறக்கும் ஆண் குழந்தைகளை கொல்ல திட்டம் என அடிமைப்படுத்தப்பட்டனர். ஆனால் மோசே என்கிற எபிரேயன் பார்வோனின் மகளால் வளர்க்கப்பட்டு, அரண்மனையில் வாழ்ந்து வந்தார் *(விப. 2: 10)*. எந்த கவலையும் இல்லை. எந்த வேதனையும் இல்லாமல் இருந்த மோசேக்கு கடவுள் ஒரு உந்துதலை கொடுத்தார். *(விப. 2: 11, 12)*. மோசே தன் மக்களிடம் சென்றபோது எகிப்தியர் ஒருவன் எபிரேயன் ஒருவனை அடிப்பதை கண்டு, எபிரேயனின் பக்கமாய் துணை நின்றான்.

ஆனால் மோசேயை தவறாக புரிந்து கொண்ட எபிரேயர்கள் எகிப்தியனைக் கொன்றதுப்போல எங்களையும் கொல்லவா *(விப. 2: 14)* என்று மோசேயை கேள்வி எழுப்பினார். இதனால் மனதளர்ந்து மிதியான் தேசத்தில் ஓடினான். ஆனால் அங்கேயும் கடவுள் மோசேயை விடுதலை திட்டத்திற்கு முட்செடி நிகழ் வாயிலாக மீண்டும் உந்துதலை கொடுத்தார் *(விப. 3: 1-120.* மோசே உந்துதலை ஏற்றுக்கொள்ள மறுத்தான். ஆனால் கடவுள் அடையாளங்கள் வழி மோசேயை வழிநடத்தி தூண்டுதலை அளித்தார். கடவுளின் உந்துதலை ஏற்றுக்கொண்ட மோசே இஸ்ரயேல் மக்களை பார்வோனின் பிணையிலிருந்து மீட்டு, விடுதலை பெற உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை ஐடா ஸ்கடர் தனது விடுமுறை நாட்களை கழிக்க இந்தியாவிற்கு வந்தபோது, ஒரே இரவில் மூன்று ஆண்கள அவரிடம் வந்து பிரசவத்தில் வேதனைப்படும் தங்கள் மனைவிகளுக்கு உதவி கோரினர். ஆனால் ஐடா ஸ்கடருக்கு மருத்துவ பயிற்சி இல்லாததால் அவரால் உதவ முடியவில்லை. இதன் காரணமாக மூன்று பெண்களும் மரித்து போனார்கள். இதுவே மருத்துவ துறைக்கு ஐடா ஸ்கடர் வருவதற்கு உந்துதலாக அமைந்தது. மருத்துவம் படித்து வேலூர் C.M.C. மருத்துவக் கல்லூரியை நிறுவி அனைவரின் வாழ்வில் ஒளி ஏற்றினார்கள். இன்று பல நேரங்களில் கடவுள் நம்மீது வைத்திருக்கின்ற திட்டத்தை மறந்து போலியான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடவுள் நம் அனைவருக்கும் நற்செய்திக்கான உந்துதலை தந்து நடத்துகிறார்.

மீட்படைந்திருக்கின்ற நாம் நம்மிடையேள்ளவர்களும் மீட்படைய வேண்டும் என்கிற உணர்வோடு செயல்பட வேண்டும். இந்த உந்துதலை கடவுள் நமக்கு தருகிறபோது அதை ஏற்றுக்கொள்வோம்.

2. நற்செய்தியை அறிவிப்போம் *(உரோ. 10: 1-15)*

நற்செய்திக்கான உந்துதலை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்படுகிறோம். நற்செய்தி அறிவிப்பின் நோக்கம் எவரும் வாழ்வை இழந்துவிட கூடாது என்பதே. அதை தான் பவுலார் தன்னுடைய கடிதங்கள் பலவற்றில் கூறிப்பிடுகிறார் *(உரோ. 10: 1)* தன் மக்கள் மீட்படைய விரும்புவதை காணமுடியும். யூத மக்கள் திருச்சட்டத்தை நம்புகிறவர்கள். கிறிஸ்துவை நம்பாதவர்கள். அதனால்தான் பவுலார் தன் மக்களுக்கு கிறிஸ்துவை நம்புவதே மீட்பு என்பதை ஆணித்தரமாக அறிவித்ததை *(உரோ. 10: 1-15)* காணமுடியும். பவுலாரும் தொடக்கத்திலே திருச்சட்டத்தை மட்டுமே நம்பி, கிறிஸ்துவை அறியாமலிருந்தார். அந்த சூழலில் தான் ஸ்தேவான் தைரியமாய் திருச்சட்டத்தை விட கிறிஸ்துவை நம்ப வேண்டும் என்பதை பறைசாற்றினார். இதனால் ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றும் விட்டார்கள் *(திப.7: 59)*. இதை எல்லாம் பார்த்தும், கேட்டும் கொண்டிருந்த பவுலாரை கிறிஸ்து சந்தித்தார் *(திப. 9: 5)* நீ துன்புறுத்தும் இயேசு நானே, என்று கிறிஸ்துவின் வழியாய் உந்துதலை பெற்றவர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தொடங்கினார். அதனால் பவுலார், தான் கிறிஸ்துவை எப்படி ஏற்றுக்கொண்டரோ, அப்படியே தன் மக்களும் ஏற்று வாழ்வு பெற பல அறிவுரைகளை கூறினார். மேலும் *(உரோ. 10: 12)*-ல் யூதர் என்றோ கிரேக்கர் என்றோ வேறுபடில்லை. அனைவருக்கும் கடவுள் ஒருவரே என்பதை உணர்த்தினார். அனைவரையும் கிறிஸ்துவின் மந்தையில் கொண்டு வர நற்செய்தியை அறிவித்தார். இதனால் பவுலார் பல இன்னல்களை அடைந்தனர் *(2 கொரி. 11; 23-28)* கடினங்களிலும் நற்செய்தியை அறிவித்தார்.

அருட்திரு. றிங்கல்தெளபே ஐயர் பலமுறை நற்செயதி அறிவிக்க தடைசெய்ய நினைத்தனர். திருவிதாங்கூரின் சமஸ்தானம் தடைகளையும் தாண்டி நற்செய்தியை விதைத்தனர். அவருடைய நோக்கம் மக்கள் கிறிஸ்துவை அறியவேண்டும் என்பதாகவே இருந்தது. எனவே அடிமைத்தன இருளில் இருந்த நாம் வாழ்வு பெற்றிருக்கிறோம். நம்பிக்கையும் செயல்வடிம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் *(யாக். 2: 17)* என்பது நம் திருமறைக் கூறும் சத்தியம். நாம் கிறிஸ்துவின் உந்துதலைப் பெற்று அவரில் வேரூன்றி நின்றுவிடுவோமானால் நம் விசுவாசமும் உயிரற்றதாகாக மாறிவிடும். எனவே நாம் பெற்ற உந்துதலோடு பிறர் வாழ்வு வளம்றெ நற்செய்தி அறிவிப்போம்.

3. நற்செய்தியாய் வாழுவோம் *(மத். 7: 21-29)*

குரு தன்னுடைய சீடர்களுக்கு தன் வாழ்வியலை கற்றுக் கொடுப்பார் யவர் ஒருவர் உண்மையான சீடர் என்றால் குரு கற்றுக்கொடுத்ததை வாழ்வியலில் கட்டுக்கிறவர் தான். ஆனால் நாம் கிறிஸ்தவர்களாய்

உந்துதல் பெற்று மனம் மாறுங்கள். ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது (மத். 3; 2) என்று அறிவிக்கிறோம். அறிவிக்கிற நம்மிடம் விண்ணரசு வாழ்வியலுக்கான தகவுகள் இருக்கிறதா? கிறிஸ்துவை வார்த்தையில் அல்ல செயலில் காட்டவேண்டும். இன்று சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலை தவரவிடுகிறோம் (மத். 7: 21-23) வரையுள்ள பகுதியிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னை நோக்கி, ஆண்டவரே ஆண்டவரே என சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை, மாறாக, விண்ணுலுகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுவரே செல்வர் (மத். 7: 21) என்று தெளிவாக எடுத்துரைத்து சொல்லைவிட செயல்படுதல் தான் முக்கியம் என்பதனை விளக்குகிறார். நாம் செய்கிற செயல்கள் நற்செயல்களாக இருக்க வேண்டுமே தவிர நெறிகெட்ட செயல்களாக மாறிவிடகூடாது.

மேலும் இறைவார்த்தையை கேட்போர், அதின்படி வாழவேண்டும். அப்படி வாழ்வோரை பாறை மீது தம் வீட்டை கட்டிய அறிவாளிக்கு ஒப்புமைப்படுத்துகிறார் (மத். 7:24). ஆனால் இறைவார்த்தையை கேட்டு அதின்படி வாழதோர் மணல் மீது தம் வீட்டை கட்டிய அறிவிலிக்கு ஒப்புமைப்படுத்தினார் (மத். 7: 26). பாறை மீது கட்டிய விடு மழை பெய்தாலும் ஆறு பெருக்கெடுத்து ஓடினாலும் காற்று பலமாய் மோதினாலும் அசையாமல், நிலைத்து நின்றது (மத். 7: 5). ஆனால் மணல் மீது கட்டிய வீடு மழை பெய்ததும், ஆறு பெருக்கெடுத்தது ஓடினதும், காற்று பலமாய் மோதியதும் உடைந்து சுக்குநூறாக உடைந்தது (மத். 7: 27).

இன்று நம் நிலை என்ன? நம்மில் அநேகர் இன்னமும் மணலின் மேல் கட்டப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய பாதுகாப்பாற்ற சூழலில் திருமறையை அறிந்தும், அறிவித்தும் இருக்கிற நாம் அதன்படி வாழாவிடில் நாம் பெற்ற நற்செய்தி நலிவுற்று போகும் நிலை ஏற்படும் ஆனால் நற்செய்யதியாய் வாழுகிற போது கிறிஸ்துவில் வேரூன்றி இறைத்திட்ட உந்துதலைப் பெற்றும், நற்செய்தியை அறிவித்தும் நற்செய்தியில் நிலைபெறவும் முடியும். அதன்வழி இறையரசின் சொந்தமாகும் வாய்ப்பினையும் பெறமுடியும்.

200 ஆண்டுகளுக்கு முன்னதாக இதே நாளில் இருந்த மகாராசன் வேதமாணிக்கம் மற்றும் கனம் றிங்கல்தெளபே அவர்கள் செய்த நற்செய்தி பணியை நினைத்து, நாமும் அவர்களை போன்று நற்செய்திக்கான உந்துதலையும் பெற்று, நற்செயதியை அறிவித்து நற்செய்தி வாழ்வதே கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை அறுவடைச் செய்வோம். இவ்விதமாய் வாழ்ந்து இறைமகன் இயேசுவின் இறுதி கட்டளையான நீங்கள் போய் எல்லா மக்களினத்தரையும் சீடாரகுங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள் (மத். 28: 19) நிறைவேற்றுவோம். வளமான வாழ்வை பெறுவோம். ஆமென்

திரு. D. அஜின்

அறிவு & ஞானம்

நீமொ. 30: 24-28 *யாக். 1: 1-8*
திபா. 1 *லூக். 10: 21-24*

"நீதித் தீர்ப்பு வழங்குவதற்கெனக் கடவுள் அருளிய ஞானம் அவரிடம் உள்ளது என்று கண்டு அவருக்கு அஞ்சி நடந்தனர்." (1 அர. 3: 28)

அறிவியலும் விஞ்ஞானமும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் உலகில் வாழ்கின்றோம். அறிவு சார்ந்து மனிதன் தினமும் ஓடிக்கொண்டிருக்கிறான். இளைய சமூகம் அறிவை மட்டும் நம்பி பயணித்துக் கொண்டிருக்கிறது.

அறிவும் ஞானமும் இணைந்து பயணிக்கின்றது. இரண்டும் ஒரே பொருள் போல் தோன்றலாம். ஆனால் இரண்டும் வேறுபட்டது. அறிவு (knowledge) *உலகம் சார்ந்த கல்வி அறிவை குறிப்பது. ஞானம்* (Wisdom) *இயற்கையாக கடவுளிடம் இருந்து கிடைப்பது. இதை செயற்கை அறிவு மற்றும் இயற்கை ஞானம் என புரிந்து கொள்ளலாம். ஒரு மனிதன் இந்த உலகில் கற்றுக்கொள்பவை அனைத்தும் அறிவு ஆனால் இயற்கையாகவே கடவுளிடம் இருந்து பெற்று அதை உலகில் வெளிப்படுத்துவது ஞானம்.*

Francis Bacan *என்ற கல்வியாளர் கல்வியின் நோக்கம் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார்.* "Education do not teach people what they do not know; but it teacher them how to behave". *கல்வி என்பது தெரியாததை கற்றுக் கொடுப்பதல்ல மாறாக எப்படி பண்பாளர்களாக நடக்க வேண்டும் என்பதை கற்றுக் கொடுப்பதே கல்வி.*

இன்றைய கல்வி அதன் நோக்கத்தை மறந்து செயல்படுகிறது. (Utilitarian Values) *வாழ்வுக்கான மதிப்பீடுகளை கற்று கொடுப்பது தான் கல்வி. இன்று கல்வி நிறுவனங்கள் வியாபாரக் கூடங்களாக மாறிவிட்டன. மனிதன் நாகரீகம் அடைய கல்வி கொடுக்கப்பட்டது இன்று நாகரீகம் என்ற பெயரில் மனிதம் அழிகிறது.*

நீதிமொழிகள் இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கை மேம்பாடுக்காக எழுதப்பட்டது. பிரயோஜனமான வாழ்க்கை கூறுகளை நமக்கு கற்று கொடுக்கிறது. சாலமோன் கல்வியை மூன்று நிலைகளாக கூறுகிறார். 1. ஞானம், 2. போதகம், 3. புத்திமதி.

நம் வாழ்க்கை ஞானத்தை தேடுகிறதாக இருக்கவேண்டும். உலகில் நாம் கற்ற அறிவை ஞானத்தோடு பயன்படுத்தவில்லை என்றால் அது எந்த பயனையும் தராது. கடவுள் கொடுக்கும் ஞானத்தை கவனமாக பயன்படுத்தினால் அது நமக்கு வாழ்வு தரும்.

நீதிமொழிகள் 30-இல் உலகில் சிறியதாக இருந்தும் கடவுளின் ஞானத்தை பயன்படுத்தும் நான்கு உயிரினங்களை குறித்து கூறப்படுகிறது. கடவுள் அவை வழியாக நமக்கு ஞானத்தை கற்று தருகிறார். திருமறை வழியாக சிந்திப்போம்.

1. எறும்பின் ஞானம் *(நீதி. 30: 25)*

எறும்புகள் வலிமையற்ற இனம், எனினும் கோபைக்காலத்தில் உணவைச் சேமித்து வைத்துக் கொள்கின்றன.

வாழ்வு நிலை அறிந்து செயல்படும் உயிரினம் இது. எப்போதும் இணைந்து வாழக்கூடிய உயிரினம் கிடைக்கும் உணவை பகிர்ந்து இணைந்து செயல்படகூடியது எறும்புகள். உணவு பஞ்சம் என்பது இல்லாமல் சுறுசுறுப்பாக வாழ்பவை.

ஞானத்தின் வெளிப்பாடு இணைந்து வாழ்வது. எல்லா சூழலிலும் பிறரோடு இணைந்து வாழ்வது கடவுள் அருளும் ஞானத்தின் வெளிப்பாடு. பிறரோடு இணைந்து பகிர்ந்து வாழும் வாழ்க்கை நிறைவை தரும்.

கல்வி அறிவு இந்த ஞானத்தை செயல்படுத்த கூடியதாக இருக்க வேண்டும். மாணவர்களிடையே போட்டி, பொறாமை, பிரிவினை வளர்க்க கூடியதாக இருக்க கூடாது. எறும்பை போல இணைந்து ஒற்றுமையை நம் கல்வி வளர்க்கவேண்டும்.

2. குறு முயல்கள் *(நீதி. 30: 26)*

இவையும் வலிமையற்ற இனமே, எனினும் இவை கற்பாறைகளுக்கிடையே தம் வளைகளை அமைத்துக் கொள்கின்றன. குழிமுசல் பார்ப்பதற்கு குட்டியாக இருக்கும் இது உடல் அளவில் மிக வலிமையற்றது. தன் மூக்கில் சிறு காயம்பட்டாலும் அது உயிர்யிழந்து விடும். ஆனால் இது மிகவும் கரடு முரடான இடத்தில் வாழும். மலைகளில் தன் கூட்டை அமைக்கும். தன் பலவீனத்தை உணர்ந்து மிக ஞானமாக செயல்படும்.

மனிதர்களும் நம் சூழல் அறிந்து ஞானத்தோடு செயல்பட வேண்டும். நம் வாழ்க்கை நிலை உணர்ந்து நம் பலவீனங்களை உணர்ந்து, நம் தேவைகளை உணர்ந்து வாழவேண்டும் பொருளாதாரததை திட்டமிட்டு வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகள், வாலிபர்கள் இதை உணர்ந்து வாழும்போது மேன்மைபெற முடியும். நம் கல்வி இதை முன்னிலைபடுத்த வேண்டும்.

3. வெட்டுக்கிளி *(நீதி. 30: 27)*

வெட்டுக்கிளிகள், இவற்றிற்கு அரசன் இல்லை, எனினும் இவை அணி அணியாக புறப்பட்டுச் செல்லும்.

வெட்டுக்கிளிகளை சுயகட்டுப்பாடு உள்ள உயிரினம், இதற்கு தலைவன் என்று யாரும் இல்லை. ஆனால் தங்களுக்குள் ஒற்றுமையோடு இணைந்து செயல்படும் இன்று மனிதர்களுக்கும் சுய ஒழுக்கம் தேவை. சுய கட்டுப்பாடு இல்லாமல் நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம். எந்த செயலை செய்தாலும் அதை ஒழுங்காக சரியாக செய்ய வேண்டும். நம் கல்வியறிவு இதை கற்றுக் கொடுக்க வேண்டும். வெட்டுக்கிளிகள் போல ஞானத்தோடு சுய ஒழுக்கத்தோடு நாம் செயல்பட வேண்டும்.

4. பல்லி சிலந்தி ஞானம் *(நீதி. 30: 28)*

பல்வி சிலந்தி, இதைக் கைக்குள் அடக்கிவிடலாம், எனினும் இது அரசு மாளிகையிலும் காணப்படும்.

பல்வி மற்றும் சிலந்தி எல்லா வீட்டிலும் காணப்படும் இந்த இரண்டையும்க ஒழிப்பதற்காக நாம் பல முயற்சிகள் செய்கிறோம். ஆனால் இவை திரும்ப திரும்ப வந்துவிடும். எத்தகைய தடை வந்தாலும் அனைத்தையும் தாண்டி வந்துவிடும். நம் வாழ்விலும் எல்லா தடைகளையும் தாண்டி வாழவேண்டும். இறை ஞானத்தோடு வாழும்போது நாம் தடைகளை தாண்ட முடியும்.

Martin Luther ஞானத்தை குறித்து "Wisdom consists not in understanding all things but in fearing God" என கூறுகிறார். கடவுளுக்கு பயந்து கீழ்படிகிறபோது இறை ஞானத்தை பெற்று தொள்ளளா கல்வி நமக்கு அநேக காரியத்தை கற்றுத்தந்தாலும் அதை ஞானத்தோடு பயன்படுத்துவது மிக முக்கியம். புதிய கல்வி ஆண்டில் இறை ஞானத்தை பெற்று எறும்பை போல் சுறுசுறுப்பாக, குழிமுசல் போல் கவனத்தோடு, வெட்டுக்கிளியை போல் ஒற்றுமையாக, பல்லி/சிலந்தி போல் விடாமுயற்சியுடன் கடவுளுக்கு கீழ்படிந்து வாழ்வோம். இறை ஆசியை பெறுவோம்.

அருள்திரு. R. அனிஸ் ரூபன்

02.06.2026

கன்னியாகுமரிப் பேராய உருவாக்க நாள்

". . . நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம்" (யோசு. 24: 18)

பொதுவாக, பிரதான சாலைகள் சந்திக்கின்ற இடங்களில் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும் விதமாக போக்குவரத்து விளக்குகள் அமைக்கப்பட்டிருப்பதை காணலாம். இவை நில், கவனி, செல் என்ற அர்த்தம் நிறைந்த அறிவுரைத் தந்து ஆபத்துக்கு விலக்கி காக்கும். அதுபோல நாம் கொண்டாடும் அத்துனை விழாக்களும், நினைவூட்டப்படும் சிறப்பு நாட்களும், வேகமாக நகரும் உலகில் நம்மை நின்று, நிதானித்து (கடந்து வந்த பாதைகளை திரும்பி பார்த்து) , திடமாய் பயணிக்க அழைப்பு விடுக்கின்றன.

இந்த சிந்தனையோடு இவ்வருட நம் பேராய உருவாக்க நாளில் இறைவார்த்தையை சிந்திக்க ஆயத்தப்படுவோம்.

இஸ்ரவேலரை வழிநடத்திய யோசுவா தன் இறுதிநாட்களில் (யோசு. 23: 2) இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் ஏபால் மற்றும் கெரிசீம் என்ற இரு மலைகளுக்கு இடையிலுள்ள பிரயாணிகளின் வழித்தடம் கொண்ட சீகேம் என்னும் பள்ளத்தாக்கில் கூடிவரச்செய்து, பாதையில்(சீகேம்) நிறுத்தி மூன்று பாதைகளை விளக்க ஆரம்பித்தார்.

1. முற்காலப் பாதை
2. தற்காலப் பாதை
3. வருங்காலப் பாதை

1. முற்காலப் பாதை நினைப்பூட்டுகிறது:

ஓர் மக்களினமாக உருவாக்கம்பெற்ற இஸ்ரவேலருக்கு வரலாற்றை உணர்த்த விரும்பிய யோசுவா நதிக்கு அப்புறம் அறியாமையில் வாழ்ந்த ஆபிரகாமிடமிருந்து வரலாற்றை ஆரம்பிக்கிறார் (யோசு. 24: 2,3). ஆபிரகாம் மெசபெட்டோமிய நாகரீகத்தில், பலதெய்வ வழக்கம் நிறைந்த சமூகத்தில், சிற்பங்கள் செய்வதை தங்கள் குடும்ப தொழிலாக கொண்ட குடும்பத்தில் வளர்ந்தவர்.

ஒருமுறை (பாரம்பரிய கதை) ஆபிரகாமின் தந்தை தேராகு தன் விற்பனை கூடத்திலிருந்த சிற்பங்களை கவனிக்கச் சொல்லி வெளியே சென்றபோது, ஓர் பெரிய சிலையை நடுவாக நிறுத்தி மற்ற சிறிய சிற்பங்களை அதனை சுற்றி அடுக்கி பின் ஓர் சுத்தியலை எடுத்து அனைத்தையும் உடைத்து போட்டாராம். தந்தை வந்து ஏன் இப்படி சிறிய சிலைகளெல்லாம் உடைந்து கிடக்கின்றன என கேட்ட போது, இங்கு பெரியதாக நிற்கிற இந்த தெய்வம் தான் இந்த சிறிய

தெய்வங்களையெல்லாம் அழித்துப்போட்டது என பதில் கூறினாராம்.

இதை கேட்ட தந்தை இது எப்படி நடக்கும்? சிலை எப்படி செயல்படும்? சாதாரண சிலைக்கு இந்த சக்தி கிடையாதே? என பல கேள்விகளை முன்வைத்தபோது, ஆபிரகாம் மெதுவாக, ஆமாம் உயிரற்ற இந்த சிலைகளை உயிருள்ள மனிதர்களுக்கு மேலான தெய்வங்களாக விற்று ஏன் இவர்களை ஏமாற்றுகிறீர்கள்? என தன் கருத்தை முன்வைத்தாராம்.

இது ஓர் பேச்சுவடிவிலிருக்கும் நிகழ்வாயினும் அறியாமை இருளிலிருந்த அக்கால சமூக நிலையை காண்பிக்கிறது. இந்த நிகழ்வு ஆபிரகாம் இறைவனின் அழைப்பை ஏற்கும் மனநிலையை அவருக்கு கொடுத்திருக்கலாம். இப்படிப்பட்ட சூழலில் கர்த்தர் ஆபிரகாமை அழைத்து, அவன் சந்ததியை திரட்சியாக்கினார் (யோசு. 24: 3). நதிக்கு அப்புறத்தில் ஆபிரகாம் அறியாமையில் இருந்து போல 19 ம் நூற்றாண்டுக்கு முன் அதாவது, அருட்தொண்டர்கள் நம்மண்ணுக்கு வருமுன் நம் மூதாதையர்களும், நம் சமூகமும் அறியாமையில்தான் உழன்று கொண்டிருந்து. அன்று யோசுவா மக்களினத்தோரை முந்தைய வாழ்வை நினைத்துபார்க்க அழைத்து போல, நாமும் அறியாமை, இல்லாமை, இயலாமை, கல்லாமை, தீண்டாமை போன்றவற்றிற்குள் வாழ்ந்த நம் சமூகத்தை நினைத்து பார்த்து, நம் தாழ்வில் நம்மை நினைத்தவரை துதிப்போம்.

2. தற்காலப் பாதை நன்றி சொல்ல அழைக்கிறது:

யோசுவா தற்கால வாழ்க்கை முற்காலத்தில் வழிநடத்திய இறைவனால் மட்டுமே சாத்தியமானது என்பதை அவர்களும் மூதாதையர்களும் கடந்து வந்த வாழ்க்கை சூழல்களிலிருந்து எடுத்து காட்டினார்.

1. எகிப்தியர்- சமுத்திரம் மூடிப்போட்டது. யோசு. 24: 7

2. மோவாபியர்- பிலேயாமை கொண்டு ஆசீர்வதிக்கப்பண்ணினார். யோசு. 24:9,10

3. எமோரியர்- குளவிகளை அனுப்பி துரத்தினார் யோசு. 24: 12

இவைகளை பார்க்கும்போது நாம் தாண்டி வந்த சூழ்நிலைகள் மிககடினங்களை தாங்கியதாயிருப்பினும் இது நம் கரத்தால் நிகழ்ந்ததன்று இறைபெலத்தால் நிகழ்ந்தது என உறுதியாய் கூறினார் யோசுவா.

ஆம் இன்று கன்னியாகுமரி பேராய உருவாக்க நாளை கொண்டாடும் நாமும் நம் மண்ணும் இஸ்ரயேலரை போல பல கடினங்களை தாண்டிதான் தற்போதைய இறையருள் நிறைந்த வாழ்வைபெற்றோம். வரிகளில் சிக்கி சின்னாபின்னமாகியிருந்தோம். மீசைவரியென்றும், மார்பு வரியென்றும், தாலிவரியென்றும் எத்தனையாய் சிறைபட்டுக்கிடந்தோம். யோசு. 24: 13 நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும்,

கட்டாத பட்டணங்களையும் உங்களுக்கு கொடுத்தேன் என்று சொல்லப்பட்டது போல இன்று நாம் அனுபவிக்கும் அத்துனை வாய்ப்புகளும் இறைவனது அருளால் பெற்ற அளப்பறிய அருட்கொடைகள். வீட்டுக்கு கூரைவேயக் கூட கட்டுப்பாடுகள், கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்ட நிலை, உயர்தோர் தாழ்ந்தோர் என்ற எண்ணற்ற வேற்றுமைகள் என் பல தடைகளை தாண்டியிருக்கிறோம். இவையனைத்தும் இறைவனின் அருள். இவற்றையெண்ணி தற்கால வாழ்வின் மேன்மைகளுக்காக நன்றி சொல்லுவோம்.

3. வருங்காலப் பாதை சான்று பகர ஊக்குவிக்கிறது:

முற்கால வாழ்க்கையில் இறைவன் எப்படி தங்களை அழைத்தார் என்பதையும், தற்கால வாழ்க்கைக்கு எப்படியெல்லாம் வழிநடத்தினார் என்பதையும் வரிவாக விளக்கிய யோசுவா நிறைவாக இதற்கு பின் நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற அறைகூவலை விடுத்தார். யோசு. 24: 15 ல் க கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? என கேள்விகளை முன்வைத்து தன் நிலைப்பாட்டையும் எடுத்து காட்டினார். (நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்) இதைக்கேட்ட ஜனங்கள் ஒருமித்து யோசு 24:18 ல் ஆகையால் நாங்களும் கர்த்தரைச் சேவிப்போம் என்றார்கள். இதற்கு பின் யோசுவா நிறுத்திய சாட்சிகள் நம்மை யோசிக்க வைக்கிறது. இரண்டு சாட்சிகள்.

1. நீங்களே உங்களுக்கு சாட்சிகள். யோசு. 24: 22
2. இக்கல் உங்களுக்கு சாட்சி யோசு. 24: 27

ஆம் இன்று பேராய உருவாக்க நாளை ஆசரிக்கிற நம்முன்னும் இரண்டு முக்கியமான சான்றுகள் இருக்கின்றன.

1. நன்மை பெற்ற நாம்
2. நன்மையின் ஊற்றாய் திகழும் நம் பேராயம்

இவை இரண்டும் இன்றும் சான்று பகிர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்த பேராய உருவாக்க நாளிலும் அவரையே சேவிப்போம் என்ற அக்கால சமூகத்தைப்போல நம்மை அர்பணிக்கும் அர்த்தம் நிறைந்த நாளாக அமைவதாக. ஆமென்.

திரு. R. பிரீத்திவ்

ஆற்றல்படுத்தும் ஆண்டவர்

திபா. 145: 14 - 21

தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகின்றார் (திபா. 145: 14).

தேர்வு நாள் நெருங்கிவரும் காலத்தில் மாணவன் ஒருவன் சோர்வோடிருந்தான். அதைக் கண்ட ஆசிரியர் ஏன் என்று கேட்க மாணவன் மறுமொழியாக ஏன் படிக்க வேண்டும்? ஏன் தேர்வு எழுத வேண்டும்? என்றான். ஆசிரியர் தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். நானும் இந்தக் கேள்விகளோடு என் சிறு வயதில் பள்ளிக்கூடம் ஒழுங்காகச் செல்லாமல் என் தந்தை சாலையோரத்தில் காலணிக்கு பாலிஷ் போட்டுக்கொண்டிருந்தபோது நானும் அமர்ந்திருந்தேன். அப்போது என் பள்ளியின் தலைமை ஆசிரியர் என் அப்பாவிடம் தன் காலணியைக் கொடுத்துவிட்டு உன் மகனுடைய தலைமை ஆசிரியராகிய என் காலணிக்கு பாலிஷ் போடுவதற்கு நீ பெருமைப்பட வேண்டுமென்று கிண்டலாகக் கூறினார். அன்று ஒரு தீர்மானம் எடுத்து படிக்க ஆரம்பித்தேன். 12-ஆம் வகுப்பில் பள்ளியின் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றேன். அப்போது தலைமை ஆசிரியர் என் அப்பாவிடம் உங்கள் மகன் எங்கள் பள்ளியில் படித்தது பள்ளிக்கே பெருமை என்று கூறினார். ஆகவே, கல்வி என்பது நம்மையும் நம்மை சுற்றி இருப்பவர்களையும் மதிப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் நேராக நடத்தும்.

திருப்பாடல்கள் 145: 14-இன் அடிப்படையில் தேர்வுக்கு ஆயத்தப்படுகின்றவர்களை ஆண்டவர் எவ்வாறு ஆற்றல்படுத்துகிறார் என்பதைத் தியானிப்போம்.

1. தாங்குகிறார்: *(திபா. 145: 14)*

நிமிர்ந்து நிற்கும்போது இடறிவிட உலகில் பலர் உண்டு. ஆனால், விழும்போது படைகளின் ஆண்டவரைத் தவிர தாங்கிப்பிடிக்க யாரும் இல்லை. தேர்வுக் காலங்களில் பயம், ஞாபக மறதி, பதற்றம், மனஅழுத்தம் ஆகியவை அதிகரிப்பதால் வீழ்ந்து விடுவோமோ என்று சோர்ந்து போகின்றோம். தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார் என்று சிந்தனை வசனம் நமக்கு நம்பிக்கை தருகிறது. சுய பலத்தை நம்பிவிட்ட கூக்குரலுக்குமுன் இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரின் பெலத்தோடு பெற்ற தாவீதின் வெற்றி அனுபவமும், அவரது இறைவேண்டுதலின் ஆழமும் சிறப்புக்குரியவை. திபா. 145: 18-இல் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில்

இருக்கிறார். உண்மையாய் ஆண்டவரை நோக்கி நமது தடுமாற்றங்களைத் தெரிவிப்போம். அவர் நம்மைத் தாங்குவார்.

2. தூக்கிவிடுகிறார் : *(தி.பா. 145: 14)*

நீ ஒதுக்கப்படும் இடங்களில் நிமிர்ந்து நில், நீ புகழப்படும் இடங்களில் அடக்கமாய் நில், நீ விமர்சிக்கப்படும் இடங்களில் மௌனமாய் நில், நீ நேசிக்கப்படும் இடங்களில் அன்புடன் நில், நீ தாழ்த்தப்படும் இடங்களில் இயேசுவின் துணையோடு முன்னேறிச் செல். ஞானம், நினைவாற்றல், கல்வி கற்கும் ஆற்றல் எல்லோருக்கும் ஒன்றுபோல் இருப்பது இல்லை. இதனால் கல்விச்சாலைகளில் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஏற்படுவது உண்டு. நீ திறமையற்றவன், நீ தேர்ச்சி பெறமாட்டாய் என்று பிற மாணவரால் மடங்கடிக்கப்பட்ட சூழ்நிலைகள் காணப்படலாம். இந்நேரத்தில் தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கிவிடுவேன் என்று படைகளின் ஆண்டவர் சொல்கிறார். "நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்! ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை" என்ற காலத்தின் அருமையைப் புரிந்துகொண்டும், இறைவேண்டுதலோடும், இறைப்பெலத்தோடும் தேர்வில் பங்குபெறுங்கள். கடவுள் தாமே உங்களைத் தாங்கி, தூக்கி நிறுத்தி வெற்றி வாகை சூட அருள்புரிவாராக!

அருள்திரு. R. அனிஸ் ரூபன்

நற்செய்தியை எடுத்துரைப்போம்

2 அர. 7: 3-11 *உரோ. 15: 14-21*
திபா. 107: 1-16 *லூக். 4: 16-22*

கிறிஸ்துவின் பெயரைக் கேள்விப்படாத இடங்களில் மட்டுமே நற்செய்தி அறிவிப்பதே என் நோக்கமாய் இருந்தது (உரோ. 15: 20)

திரு. மோகன் நற்செய்தியால் தொடப்பட்ட கிறிஸ்தவர். அவர் பெற்ற மாற்றம் பலரை ஆச்சரியபடுத்தியது. நாட்கள் செல்ல செல்ல இரட்சிப்பை குறித்து பெருமை கொண்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதை அச்சிட்டு பிரதியாக பலருக்கு வழங்கினார். சபை சபையாக சென்று பிரதியை வழங்கினார். சில ஆண்டுகள் கடந்த நிலையில் உற்சாகம் குறைந்தது. பக்தி குறைந்தது. பரவசம் குறைந்தது. நற்செய்தி பணி குறைந்தது. உலக பற்று உலக ஆசை, ஆடம்பரம் இவைகளில் பேரார்வம் கொண்டார். ஒருநாள் அவரது சபைக்கு வந்த புதிய போதகர் அவர் இல்லத்தை சந்தித்தார். மோகன் தனது மனைவியிடம் தனது இரட்சிப்பின் நற்செய்தியை பெட்டியில் இருந்து எடுத்துவர (அச்சு பிரதியை) சொன்னார். மனைவி பிரதியை எடுக்க போய் பார்த்துவிட்டு அச்சு பிரதிகளை கரையான் அரித்திருப்பதைக் கண்டார். அறையிலிருந்து சத்தமிட்டு சொன்னார். உங்கள் இரட்சிப்பின் நற்செய்தியை கரையான் அரித்து போட்டது. இறைமக்கள் பலர் இதே நிலையில் தான் உள்ளார்கள். பக்தி, பரிசுத்தம், இரட்சிப்பு, நற்செய்தி பணி ஆர்வம் பல கிறிஸ்தவர்களிடம் காணாமல் போய்விட்டது.

இன்றைய திருச்சபைகளில் நற்செய்தி பணி பற்றிய பார்வை பல விதங்களில் உள்ளது. நற்செய்தி பணி பற்றிய தெளிவு, ஆர்வம் இன்றி பலர் உள்ளனர். இன்னும் பலர் நற்செய்தி பணி தேவையில்லை என்ற மனநிலையில் உள்ளனர். ஆனால் ஆண்டவர் நமக்கு ஒரு கட்டளையை தந்துள்ளார். மாற்கு 16: 15 நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்பதே அந்த கட்டளை. இந்த கட்டளைக்கு கீழ்படிய வேண்டும் என்பது நம்மேல் விழுந்த கடமை.

எது நற்செய்தி என சிந்தித்தால் பல தெளிவுகளை வேதம் நமக்கு கூறுகின்றது. போரில் வெற்றி பெறுவது நற்செய்தி என்பதும் கொடிய வியாதிபட்டோர் விடுதலை பெறுவது நற்செய்தி என்றும், பாவத்திலிருந்து விடுதலை பெறுவது நற்செய்தி என்றும், பஞ்சத்திலிருந்து விடுதலை பெறுவது நற்செய்தி என்றும், சிறையிருப்பலிருந்து விடுதலை பெறுவது நற்செய்தி என்றும் வேதம் வெளிப்படுத்துகின்றது. ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், அனாதைகள், திக்கற்றோர் வாழ்வு பெறுவது நற்செய்தி என்றும், கிறிஸ்துவே நற்செய்தி என்றும், கிறிஸ்துவின் வாழ்வு, பணிவிடை,

அற்புதம், விடுதலை பணி, பாடு, மரணம், உயிர்த்தெழுதல் யாவும் நற்செய்தி என்பதும் திருமறை வலியுறுத்தும் உண்மைகள். இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் அரசு, ஆளுகை இவ் உலகில் வந்துவிட்டது என்பதன் அடையாளங்கள் எனவும் இதை நற்செய்தியாக அறிவிக்க வேண்டியது இறைமக்களின் கடமையாக திருமறை உணர்த்துகிறது.

1. சூழல் சார்ந்த நற்செய்திப்பணி:

மாற்கு 2: 17 : பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டும், நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்ப அழைக்க வந்தேன்.

1 கொரி. 9: 22 : பலவீனரை ஆதாயப்படுத்தி கொள்ளும்படிக்கு பலவீனரைப் போலானேன். எப்படியாகிலிரும் இவரை இரட்சிக்கும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமுமானேன்.

இதன் வெளிச்சத்தில் கிறிஸ்து கலிலேயாவில் அதிகமான பணிகளை செய்தார். ஏழைகள், தரித்திரர், கைவிடப்பட்டோர், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டோர், சமய, சமூக அநீதிகளால் பாதிக்கப்பட்டோர் மத்தியில் அதிகமான விடுதலை பணிகளை நிறைவேற்றினார். மேலை நாட்டு அருட்பணியாளர்களும் இதே சிந்தையோடு தான் இந்தியா போன்ற நாடுகளில் நற்செய்தி பணியினை நிறைவேற்றினார்கள்.

இந்திய திருச்சபைகள் வெளிநாட்டு தொட்டி செடிகள் என குற்றம் சாட்டப்படுகிறது. நற்செய்தியின் உட்பொருளை மாற்றாது பணியாற்றும் சமூகங்களின் தேவைகளை அறிந்து, உணர்ந்து நற்செய்தி பணி செய்வது நம்மேல் விழுந்த கடமை. கிறிஸ்துவைப்போல சுகவீனருக்கு குணமளித்தல், பசியுற்றோருக்கு உணவு, பிசாசின் பிடியிலிருந்தோருக்கு விடுதலை அடிமை தனத்திலிந்து விடுதலை அளித்து இறைபணியாற்ற முற்படுவோம்.

2. சொல்வது மட்டுமல்ல செய்து நிறைவேற்றுகிற நற்செய்திப்பணி:

1 கொரிந்தியர் 4: 20 தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது.

லூக். 24: 19. செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ளவராயிருந்தார்.

மாற்கு 16; 20 கர்த்தர் கிரியையை நடப்பித்து . . . வசனத்தை உறுதிப்படுத்தினார்.

நற்செய்தி கூட்டங்களோ, பெரிய பிரசங்கங்களோ மட்டும் நற்செய்திப்பணி ஆகாது. பேசுவதை விட செயலாக்கத்தில் நற்செய்தி பணியை நிறைவேற்றுவதே சிறந்தது. மக்களின் தேவைகளில் உண்மையாக பங்கடைவதே நற்செய்திப்பணி. லூக். 4; 18 தரித்திரவருக்கு

நற்செய்தியை பிரசங்கித்தல், இருதயம் நறுங்குண்டல்களை குணமாக்குதல், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை, குருடருக்கு பார்வை, நொருங்குண்டவர்களை விடுதலையாக்குதல் இவை அனைத்தும் செயல்பாடு சார்ந்த நற்செய்திப்பணிகள்.

இன்று உலகமே, நோய், வறுமை, பசி, ஆரோக்கியயின்மை, இயற்கையை அழித்தல், காற்றுமாசு, போர், பஞ்சம், மனித உரிமை மீறல், ஆக்கிரமித்தல், ஆகிய தீமைகளால் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கு எதிராக கர்த்தருடைய வார்த்தைகளை கூறி அறிவிக்க வேண்டியதும், அதை வேளை போராட வேண்டியதும், சீர் செய்வதற்கான முயற்சிகளை, சபையாக, சமூகமாக நிறைவேற்ற வேண்டியதும் இறைவனின் எதிர்பார்ப்பாகும்.

காயங்கள் இல்லாமல், கனவு காணலாம். ஆனால் வேதனை இல்லாமல் சாதனைகள் செய்யமுடியாது. நற்செய்தி பணியில் பவுலைப்போல அயராத உழைப்பும் திருச்சபைக்கு தேவை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

3. மனிதரை மனிதராக்கும் நற்செய்திப்பணி:

மாற்கு 1: 17 உங்களை மனிதரை பிடிக்கிறவர்களாக்குவேன்.

மாற்கு 1: 41 தொழுநோயாளியை தொட்டு எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார்.

மாற்கு 2: திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கு போ என்றார்.

மேற்குறிப்பிட்ட பகுதிகள் கிறிஸ்து எப்படி சாதாரண பெலவீனப்பட்ட மனிதனாக மதிக்கபடாதவர்களை மனிதனாக, மதிக்க கூடியவனாக மாற்றினார் என்பதை தெளிவாக கூறும் பகுதிகள். மீன்பிடித்த, வரி வசூலித்த, சமூக அந்தஸ்து இழந்த சீடர்களை மனிதரை பிடிக்கிறவர்களாக்க, அதாவது மனிதனை மனிதனாக்குகின்ற பணியிலே அழைத்து உறுதிபடுத்தினார். தொழுநோயாளியான மனிதனை தொட்டு (சமூக இழுநிலையை உடைத்து) குணமாக்கி மனிதனாக மாற்றினார். திமிர்வாதத்தால் முடக்கப்பட்ட மனிதனை இயங்குகிற செயல்படுகிற மனிதனாக மாற்றினார்.

திருச்சபையின் மிக முக்கிய நற்செய்தி பணி ஒவ்வொரு மனிதரையும், மனித நேயமுடையவர்களாக, மனித மாண்புடையவர்களாக, இழந்த இறைசாயலை மீண்டும் மனிதன் பெறக்கூடியவனாக கமாற்றுவது ஆகும். மதுவுக்கு, போதைக்கு, தவறான வழிகளில் செல்வம் சேர்க்கும், பதவிப் பேய் பிடித்து அலையும் மனிதர்களை கொண்ட சமூகத்தில்

திருச்சபையின் நற்செய்திப் பணி மிக தேவையானதாக உள்ளது.

புண்பட்டவர்களால் தான் பண்பட்டவர்களாக வாழ முடியும். புண்பட்டுப்போன சமூகத்தில் நற்செய்தியால் கல்வி, பண்பாடு, கலாச்சாரம், செல்வம், நாகரிகம், பணிவிடை, உயர்வு ஆரோக்கியம் அமைதி, மேன்மை என்ற உயர்ந்த நிலைகளை பெற்றுள்ளோம். நற்செய்திப் பணியில் ஊழியக்காரர்களாக திருச்சபைகளை இறைமக்களை ஆண்டவர் நியமித்துள்ளார். சொல்கிறவர்களாய் மட்டுமல்ல நற்செய்தி பணி செய்கிறவர்களாக, நாடு, சமூக, திருச்சபை, சூழல்களை புரிந்து மனிதரை மனிதராக மதித்து நற்செய்தி பணியை செய்வோம். இறையருள் ஆசி நம்மோடு என்றும் தங்கியிருப்பதாக.

அருள்திரு. S. கிறிஸ்டோபர் ஏசுமணி

2026-ஆம் ஆண்டு பேராய கருப்பொருள்

விளிம்புநிலையினருக்கு தொண்டாற்றுதல்

Serving the Least

...'மிகச் சிறியோராகிய
என் சகோதரர் சகோதரிகளுள்
ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம்
எனக்கே செய்தீர்கள்'... மத் 25: 40

'Truly I tell you, just as you did it to
one of the least of these
brothers and sisters of mine,
you did it to me.' Matt 25: 40

வெளியீடு

தொடர்புத்துறை

கன்னியாகுமரிப் பேராயம்

DIOCESAN PRESS
Nagercoil, 04652 - 231643